பொதுவான நேரங்கள்

பொதுவான நிருபங்கள்

யாக்கோபு

பில் ஹீட்டன்

1. பழங்காலக் கடிதத்தில் இருந்து ஒரு நவீனகாலச் செய்தி (1:1)
2. கடினமான காலங்களில் வித்தியாகத்தை ஏற்படுத்தும் விசுவாசம் (1:2-2)
3. உங்களுக்கு ஏற்படும் தொல்லைகளை வெற்றிகொள்வது எப்படி? (1:5-11)
4. உங்கள் சோதனைகளில் பெரும்பான்மையானவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுதல் (1:12-15)
5. விசுவாசத்தின் தெரிவு (1:16-18)
6. நாம் விசுவாசிக்கிளபடியே நடத்தல் (1:19-27)
7. விசுவாசம் வற்புறுத்திக் கேட்கிற வகையில் மக்களை நடத்துதல் (2:1-13)
8. உயிருள்ள விசுவாசம் (2:14-26)
9. நாவை அடக்கதல் (3:1-12)
10. விசுவாசத்தின் ஞானம் (3:13-18)
11. கட்டுப்படுத்துதலுக்குப் போராட்டம் (4:1-10)
12. தேவனும் வம்புப்பேச்சும் (4:11,12)
13. ஓவ்வொரு நாளும் தேவனுக்கு இடம் அளித்தல் (4:13-17)
14. செல்வங்களினால் சிதைக்கப்படுதல் (5:1-6)
15. உங்களுக்குத் தவறு செய்யப்பட்டிருக்கும் போது சரியானதைச் செய்கல் (5:1-12)
16. ஜெபத்தின் மீது நடைமுறைச் சுட்டிக்காட்டிகள் (5:13-18)
17. விலகிச் சென்றுள்ள பரிசுத்தவான்களைக் கையாள்வது எவ்வாறு (5:19, 20)

1,2 பேதுரு மற்றும் யூதா

டியூவன் வார்டன்

1. ஒரு அறிமுகம் (1 பேதுரு)
2. ஜீவனுள்ள நம்பிக்கையில் சந்தோஷமாயிருத்தல் (1 பேதுரு 1:3-12)
3. "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (1பேதுரு 2:1-10)
4. சீயோனில் வைக்கப்பட்ட கல்லின் மீது நம்பிப்பையாயிருங்கள் (1பேதுரு 2:1-10)
5. கீழ்ப்படிதல் உள்ளவர்களாயிருந்து தேவபக்தியுள்ள வாழ்வை வாழுங்கள் (1பேதுரு 3:8-22)
6. தகுதியான வகையில் உங்களை அலங்கரித்துக் கொண்டு காருண்யமாயிருங்கள் (1பேதுரு 3:1-7)

7. கேட்கிற யாவருக்கும் தற்காப்பு உரையொன்றைக் கூறுங்கள் (1பேதுரு 3:8-22)
8. எல்லாவற்றிலேயும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (1பேதுரு 4:1-11)
9. கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்றிருங்கள் (1 பேதுரு 4:12-19)
10. மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள் (1பேதுரு 5:1-14)
11. ஒரு அறிமுகம் (2பேதுரு)
12. இதைச் செய்யுங்கள் அப்போது நீங்கள் ஒருக்காலும் இடறிவிழ மாட்டீர்கள் (2பேதுரு 1:3-21)

1

பழங்காலக் கடிதத்தில் இருந்து ஒரு நவீனகாலச் செய்தி (1:1)

உங்கள் இடைநிலைக் கல்வியில் பயன்படுத்தப்பட்ட பாடப்புத்தகங்கள் இன்றைய நாள் வரையிலும் புதுப்பிக்கப்பட்டதாக உள்ளனவா என்று எப்போதாவது நீங்கள் ஆராய்ந்து பார்த்து இருக்கிறீர்களா? அப்படிச் செய்திருந்தால், அவைகள் காலத்திற்கு ஏற்காத மிகவும் பழையதாக இருப்பதை நீங்கள் கண்டறிந்து இருப்பீர்கள், இல்லையா? ஆண்டுகள் கடந்து செல்லுதல் என்பது பௌதீகத்தில் புதிய விதிகளைக் கொண்டுவந்துள்ளது மற்றும் இரசாயன அட்டவணையில் புதிய மூலங்களைச் சேர்க்கிறது. "புதிய" கணிதம்கூட இப்போது மிகவும் பழையதாகியுள்ளது. பழைய பாடப்புத்தகங்களின் பயன் என்னவென்றால் நமது கடந்த காலத்தைப் பற்றிய துயரம் நிறைந்த மற்றும் சந்தோஷமானவைகளை ஞாபகப்படுத்துதல் மாத்திரமே.

நீங்கள் கடந்த தலைமுறைகளின் மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் ஆழ்ந்து சிந்தித்து, பின்பு பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு இயேசுவை விசுவாசித்தவர்களுக்கு எழுதப்பட்ட ஒரு நிருபத்தைப் படிக்கத் தொடங்கும்போது, பல கேள்விகள் இறைஞ்சிக் கேட்கப்படும் என்பது தெளிவு. காலம் கடந்த போது இந்த நிருபம் நடைமுறைக்கு உகந்ததாக இல்லாது போய்விட்டதா? இந்த நிருபம் வரலாற்று ரீதியான நோக்கங்களுக்காக மாத்திரமே வாசித்து படிக்கப்பட வேண்டியதாக உள்ளதா? இப்படிப்பட்ட ஒரு பழைய நிருபம் இருபதாம் நூற்றாண்டு மக்களுக்கு உதவியாக இருக்குமா?

யாக்கோபினால் எழுதப்பட்ட நிருபமானது நமது காலத்திற்கு ஏற்புடையதாக இருப்பதை நாம் எந்தக் கேள்விக்கும் அப்பால் கண்டறிவோம். இது பழயகாலத்தியதாக இருந்தாலும், இன்றைய நாட்களில் இருக்கும் எந்த விசுவாசிக்கும் இது பொருத்தமானதாகவே உள்ளது.

வேதாகமத்தில் உள்ள எல்லாப் புத்தகங்களுக்கும் உண்மையானதாக இருப்பது போலவே, யாக்கோபின் புத்தகமும், மாறுபட்ட இரு கால மண்டலங்களை எடுத்துரைக்கிறது. இதில் முதலாவது காலமண்டலம் இந்தப் பதிவேடு எழுதப்பட்ட தேதியாக உள்ளது. விசுவாசிகளின் விசுவாசமானது அவர்களின் வாழ்வில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த வேண்டும் என்று போதிப்பதற்காக, தெய்வீக ஏவுதல் பெற்ற எழுத்தாளரால் இந்த நிருபம் எழுதப்பட்டது. இந்த நிருபத்தை வாசித்து படித்த விசுவாசிகள், தங்களின் அன்றாட வாழ்வில் விசுவாசம் முக்கியமானதாக இருந்தது என்று கற்றுக் கொண்டனர். தற்போதய வேளையானது இரண்டாவது கால மண்டலமாக உள்ளது. இந்த நிருபத்தின் தோற்றக்கால வாழ்வுச் சூழ்நிலைகளை, இந்த நிருபத்தின் "அப்போதய" தன்மையை நாம் கற்றுக்கொள்கையில், அது விசுவாசிக்கு, இன்றைய நாட்களில் கிறிஸ்தவ வாழ்வின் "இப்போதய" தன்மையின் கருத்துக்களைக் கொண்டுவர உதவுகிறது. இந்த நிருபமானது,

நாம் இன்றைய உலகத்தில் பரீட்சைகள், சோதனைகள், நிதிநிலைச் சிக்கல்கள் மற்றும் சமூக உறவுகள் ஆகியவற்றை எதிர்கொள்ளுகையில், நமது கிறிஸ்தவ விசுவாசமா னது ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த அனுமதிப்பதில் நமக்கு உதவுகிறது.

இந்த நிருபம், எழுத்தாளர் பற்றிய அறிமுகம், அவரது வாசகர்கள் பற்றிய குறிப்பிடுதல் மற்றும் ஒரு வாழ்த்துதல் என்ற முதல் நூற்றாண்டின் நிருபத்திற்குரிய விசேஷித்த நடையுடன் தொடங்குகிறது: "தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது" (1:1). பழங்காலத்திய இந்த நிருபமானது நமது வாழ்வில் எவ்வாறு வேறுபாட்டை ஏற்படுத்த முடியும் என்பதைப் புரிந்து கொள்வதற்கான நமது முயற்சியில், இதன் பின்னணி பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது அவசியமாக உள்ளது. வரலாற்றுத் தொடக்கங்கள், உபதேச நோக்கங்கள் மற்றும் தனிப்பட்ட நடை ஆகியவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்.[1]

வரலாற்று அமைவு

வேதாகமத்தில் உள்ள புத்தகங்கள் வானத்தில் இருந்து தங்கத் தட்டுகளில் விழவில்லை என்ற காரணத்தால், அவை ஒவ்வொன்றும் தத்தமது சொந்தத் தொடக்கம் அல்லது வரலாற்றுத் தோற்றம் கொண்டிருப்பதை நாம் கண்டறிகிறோம். பரிசுத்த ஆவியானவர் என்ற முகவர் மூலமாகச் செயல்பட்ட தேவன், வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளில் இருந்த மக்களிடத்தில் பேசுவதற்கு எழுத்தாளர்களை ஏவினார். இதன் விளைவாக, வேதத்தில் உள்ள புத்தகங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவையாக உள்ளன; தேவனுடைய வசனம் மனிதரின் குறிப்பிட்ட தேவைகளுக்கு உரைக்கப்பட்டது. *"இப்போது"* நமக்கான தேவனுடைய செய்தியைப் புரிந்துகொள்வதற்கு, அந்தப் புத்தகம் எழுதப்பட்ட வரலாற்று அமைவை நாம் கண்ணோக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எழுத்தாளர் மற்றும் தொடக்ககால வாசகர்கள் ஆகியோரைப் பற்றிப் படித்தல் என்பது, அது எழுதப்பட்டபோது யாக்கோபு எழுதிய நிருபம் அர்த்தப்படுத்தியது என்ன என்பதைத் தீர்மானிக்க நமக்கு உதவலாம்.

எழுத்தாளர்

வேதாகமத்தில் உள்ள ஒரு புத்தகத்தை எழுதியது யார் என்று தீர்மானித்தல் கூடச் சிலவேளைகளில் கடினமான பணியாக உள்ளது. பவுலின் நிருபங்கள் போன்ற வேதாகமத்தின் சில புத்தகங்களை எழுதியவர் யார் என்று தீர் மானித்தல், அதன் எழுத்தாளர் யாராக இருக்கிறார் என்று கூறப்பட்டிருப்பதால், நமக்குச் சுலபமாகக் கண்டறியக் கூடியதாக உள்ளது. மற்ற புத்தகங்களை எழுதி யவர்கள் யார் என்று கண்டறிதல், எழுதப்பட்ட காலத்தில் இருந்து நாம் மிகவும் தொலைவில் இருப்பதாலும் எழுத்தாளரைப் பற்றிய பல யூகங்கள் செய்யப்பட்டு இருப்பதாலும், சிக்கலானதாகிறது.

யாக்கோபு எழுதிய நிருபத்தில், இதன் எழுத்தாளர் பெயர் குறிப்பிடுகிறார், ஆனால் அவரது உண்மையான அடையாளத்துவம் பற்றிக் குறிப்பிடுவதில்லை: "தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு ..." "யாக்கோபு" என்பது இன்றைய நாட்களில்

போலவே முதல் நூற்றாண்டிலும் ஒரு பொதுவான பெயராக இருந்தது என்பதே பிரச்சனையாகும். உண்மையில் புதிய ஏற்பாட்டில் யாக்கோபு என்ற பெயரில் குறைந்த பட்சம் நான்குபேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்: செபதேயுவின் மகனும் யோவானின் சகோதரனுமான யாக்கோபு; அல்பேயுவின் மகன் யாக்கோபு; சீஷனான யூதாவின் தகப்பனான யாக்கோபு; மற்றும் இயேசுவின் சகோதரரான (மிகச் சரியாகக் கூறுவதென்றால், அரைசகோதரரான) யாக்கோபு. இந்த நிருபத்தை எழுதியவர் யார் என்பது பற்றிக் கலந்துரையாட அதிகமான தாள்களும் மையும் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், கர்த்தருடைய அரைசகோதரரான யாக்கோபு தான் இதன் எழுத்தாளர் என்று தொடக்ககாலத்தில் கருதப்பட்டார் என்று கூறுதல் போதுமானதாக உள்ளது.

இதன் எழுத்தாளர் தம்மை ''தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரன்'' என்று விவரிக்கிறார். "ஊழியக்காரன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது *doulos* என்ற கிரேக்க வார்த்தையாகும், இது ஒரு எஜமானருக்கு உரிய நபர் என்ற அர்த்தம் தருவதாக உள்ளது. யாக்கோபு தம்மைத் தேவனுடைய உடமை என்று கருதினார், தேவன் கட்டளையிட்டது எதுவோ அதைத் தாம் கட்டாயம் செய்ய வேண்டும் என்று அவர் விசுவாசித்தார். கர்த்தருடன் அவருக்குள்ள உறவு பற்றி அவர் கூறியிருக்கக் கூடிய யாவற்றையும் பற்றி நினைத்துப் பாருங்கள்: "இயேசுவுக்குப் பிரியமான சகோதரனான யாக்கோபு"; பதினெட்டு ஆண்டுகளாகக் கர்த்தருடன் ஒரே அறையில் உறங்கியிருந்த யாக்கோபு; அல்லது "உயிருடன் உள்ள வேறு எவரைக் காட்டிலும் இயேசுவை மிகச்சிறப்பாக அறிந்துள்ள யாக்கோபு." இருப்பினும், தமது குடும்பப் பிணைப்புகளைக் கொண்டு மற்றவர்கள் மனதை ஈர்ப்பதற்குப் பதிலாக, அவர் தம்மைத் தேவனுக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரன் என்று மாத்திரம் குறிப்பிடுகிறார்.

நிருபம் யாருக்கு எழுதப்பட்டது

இதைத் தொடக்கத்தில் பெற்றுக்கொண்டவர்கள், ''சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்கள்'' என்று விவரிக்கப்படுகின்றனர். இந்தக் குறிப்பு யாரைக் குறிப்பதாக இருப்பினும், அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தனர் என்பதை இப்புத்தகத்தின் பொருளடக்கத்தில் இருந்து (2:1; 5:7) நாம் அறிகிறோம். இந்தத் தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், ஆதி சபைக்கு ஏற்பட்டிருந்த உபத்திரவம் நிமித்தமாக ''சிதறியிருந்தனர்.'' யாக்கோபு, பன்னிரெண்டு கோத்திரங்கள் என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியது, தேவனுடைய "ஆவிக்குரிய இஸ்ரவேலான" எல்லா மக்களுக்கான குறிப்பாகவும் இருக்கச் சாத்தியம் உள்ளது. இந்தக் காரணத்தினால், யாக்கோபு நிருபம் ஒரு "பொதுவான நிருபம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. இது, தொடக்கத்தில் யாக்கோபு, ஒரு சபைக்குழுமத்திற்காக எழுதவில்லை, ஆனால் உலகம் முழுவதிலும் உள்ள விசுவாசிகள் எல்லாரும் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்துடன் அவர்கள் வாழ்வில் ஏற்படுத்த வேண்டிய வேறுபாட்டை எதிர்கொள்ள மனவிருப்பம் கொண்டிருந்தார் என்று மறைமுகமாக உணர்த்துகிறது.

உபதேசப் பாடக்கருத்து

இருப்பினும் யாக்கோபு, ஒரு நாளில் உட்கார்ந்து, கிறிஸ்தவர்களுக்குப்

பொதுவான ஒரு நிருபத்தை எழுத முடிவு செய்துவிடவில்லை. இந்த நிருபத்தின் தோற்றமானது, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களின் இடர்ப்பாடான வாழ்வுச் சூழ்நிலைகள் சிலவற்றில் காணப்படுகிறது. இதன் விளைவாக, இந்த நிருபம் நிலவுவதற்கு ஒரு உபதேசரீதியான காரணம் கொண்டுள்ளது என்று நாம் கூற முடியும். மனித எழுத்தாளர் மூலமாகத் தேவன் தமது மக்களிடத்தில் பேச ஒரு செய்தியைக் கொண்டிருந்தார்.

யாக்கோபு, மாறிக்கொண்டிருந்த காலங்களில் இந்த நிருபத்தை எழுதினார். அவர் இதை எழுதிய தேதியானது, சலிப்பான எண்ணப்போக்குகள், நடைமுறைகள் மற்றும் பிரச்சனைகள் தோன்றியிருந்த சபையின் மிகத் தொடக்க நாட்களில் இருந்து போதுமான அளவு தொலைவில் இருந்தது. அவற்றில் சில பின்வருமாறு:

- கடினமான பரீட்சைகள்
- பாவம் செய்வதற்கான சோதனைகள்
- செல்வந்தர்களுடனான பல்வேறு பிரச்சனைகள்
- பலர், தாங்கள் நம்புவதாக அறிவித்தவற்றின்படி வாழத் தவறுதல்
- நாவைப் பயன்படுத்துதல், சபையில் பிரிவினைக்குக் காரணமாகும் படிகூட அதைப் பயன்படுத்துதல்
- சரீரரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் வியாதிப்பட்டிருந்த கிறிஸ்தவர்கள்

பிரச்சனைகளின் பட்டியலை நாம் மறுகண்ணோட்டம் இடுகையில், அதே பிரச்சனைகளில் சில, நமது நாட்களின் உள்ளூர் சபைக்குழுமங்களிலும் எதிர் கொள்ளப்படுவதாகத் தோன்றுகிறது. நமது சபைகளில் உள்ள மக்கள் உபத்திரவப்படுகின்றனரா? உறுப்பினர்கள் அடிக்கடி, பேசுவது ஒன்றாகவும் வாழ்வது அதற்கு முற்றிலும் மாறானதாகவும் வழிகொண்டுள்ளனரா? உலக எண்ணம் என்பது ஒரு தீவிரமான பிரச்சனையாக உள்ளதா? கிறிஸ்தவர்கள் தங்கள் நாவுகளை அடக்கத் தவறுகின்றனரா?

இந்த நிருபம் வெறுமையாக எழுதப்படவில்லை. அதற்குப் பதிலாக, நமது இருப்பின் எல்லாப் பகுதிகளிலும் நமது கிறிஸ்தவ விசுவாசம் செயல்படும்படிக்கான புத்திமதிகளை உள்ளடக்கி இருக்கிறது. யாக்கோபு, தேவனுடைய மக்கள் இயேசுவின் மீது ஒரு தொடக்க விசுவாசம் கொண்டிருத்தலை அனுமதிப்பதுடன் திருப்தியடைந்து விடவில்லை. அவர்கள் நம்பிக்கைக்குரிய கீழ்ப்படிதலில், தனிப்பட்ட ஒப்புவிப்பில் மற்றும் பிறமக்களுக்கான அர்ப்பணிப்பில் வளர வேண்டும் என்று அவர் விரும்பினார். “வேறுபாட்டை ஏற்படுத்துகிற விசுவாசம்” என்பது இந்த நிருபம் முழுவதற்கு மான சொல்விளக்கம் தரும் ஆய்வுக்கருத்தாக இருக்க முடியும்.

யாக்கோபு எழுதிய இந்த நிருபம் இக்காலத்தில் வழங்காததாக இருப்ப தில்லை. பொருளாதாரப் பல்நிலை, அரசியலில் நிலையற்ற தன்மை, பல்வேறு பரீட்சைகள், துன்மார்க்கம் மீதான உள்ளான மயக்கம், சுயத்தை மையமாகக் கொண்ட நிலை போன்ற சூழ்நிலைகளைக் கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளுகிற வரையிலும் மற்றும் மக்கள் கிறிஸ்தவத்தை அறிவித்தும் அதை நடைமுறைப் படுத்தாது இருக்கிற வரையிலும், யாக்கோபுவின் செய்திக்கான தேவை ஒன்று இருக்கும்.

தனிப்பட்ட நடை

"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" (2 தீமோத்தேயு 3:16), இருப்பினும், வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகமும் தனது தனிச்சிறப்பான நடையைக் கொண்டுள்ளது. வேதவாக்கியங்களின் ஏவுதலில், தேவன் மனித ஆளுமைத் தன்மையைப் பக்கவாட்டில் கடந்துவிடாது, அதற்கு மாறாக அதை [மனித ஆளுமைத் தன்மையை]த் தமது நோக்கங்களுக்காக முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார். வேதாகமத்தின் மற்ற எல்லா எழுத்துக்களையும் போலவே, இந்த நிருபமும் தனது சொந்த தனிச்சிறப்பான வடிவத்தையும் தனிப்பட்ட ஓட்டத்தையும் கொண்டுள்ளது.

யாக்கோபு எழுதிய நிருபமானது, முதல் நூற்றாண்டுக் கடித வகையின் வடிவத்திற்குப் பொருந்துகிறது, இது உலகம் முழுவதிலும் உள்ள தேவனுடைய மக்களுக்கு உரைக்கப்பட்டுள்ளது. முதல் நூற்றாண்டு சபைகள் கூடிவந்தபோது, மற்றும் இந்த நிருபம் அங்கு தொடக்கத்தில் இருந்து முடிவு வரையில் வாசிக்கப்பட்ட போது, இதை வாசிப்பதற்கு அனேகமாக முப்பது நிமிடங்கள் ஆகி இருக்கும். அந்த விசுவாசிகள் இதைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருக்கையில், விரிவான ஒப்புவமைகளையும், இறுக்கமான சாதுரிய வாசகங்களையும், தனிச்சிறப்பான மரபுச் சொற்றொடர்களையும், துளைக்கும் கேள்விகளையும் மற்றும் சித்தரிப்பான விளக்கங்களையும் யாக்கோபு பயன்படுத்தியதைக் கேட்டிருந்தனர், உண்மையில் யாக்கோபு, 570 மாறுபட்ட கிரேக்க வார்த்தைகளைப் பயன்படுத்தினார், அவற்றில் எழுபத்து மூன்று வார்த்தைகள், புதிய ஏற்பாட்டில் வேறு எவ்விடத்திலும் காணப்படுவதில்லை.

யாக்கோபு எழுதிய நிருபத்தில் நாம், ஒரு தனித்தன்மையை, அவரது எழுத்து நடையில் ஒரு விரிவான மேலோட்டத்தைக் காணுகிறோம். உண்மையில், நிருபத்தினூடே வாசிக்கையில் நாம், "இந்த மனிதர் ஒரு எழுத்தாளராக இருப்பதற்கு முன்னர் ஒரு பிரசங்கியாராக இருந்தார்" என்று கூற முடியும். இந்தத் தனிச்சிறப்பான நடையினால் மனம் ஈர்க்கப்பட்ட R. V. G. டஸ்கர் என்பவர், "யாக்கோபு எழுதிய நிருபம் பிரசங்கக் குறிப்புகளின் தொகுப்பாக உள்ளது" என்று கூறினார்.[2] இந்த ஆய்வுக்கட்டுரை முழுவதிலும் அவர் தமது வாசகர்களை, ஒரு பிரசங்கியார் தமது உரையைக் கேட்பவர்களைக் குறிப்பிடுவது போன்றே குறிப்பிடுகிறார் (1:16, 19; 2:20). "சகோதரரே," "என் சகோதரரே," மற்றும் "எனக்குப் பிரியமான சகோதரரே" என்ற வார்த்தைகளில், ஒரு பிரசங்கியாருக்கும் ஒரு சபைக் குழுமத்திற்கும் இடையிலான வலிவார்ந்த உறவின் இதம் பராமரிக்கப்படுகிறது, இது இருதயத்தில் இருந்து நேராக எழுதுகோலுக்கு வந்ததாக உள்ளது (உதாரணங்கள்: 1:2, 16, 19; 2:1, 5, 14; 5:7, 9, முதலியன).

முடிவுரை

யாக்கோபு எழுதிய நிருபத்தின் செய்தியானது முதல் நூற்றாண்டு மற்றும் அதைத் தொடர்ந்து வரும் எல்லா நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்குமானதாக உள்ளது. நமது விசுவாசமானது நாம் ஒவ்வொரு நாளையும் வாழும் வகையில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது என்று யாக்கோபு நிருபம் கிறிஸ்தவர்களுக்குப் போதிக்கிறது.

குறிப்புகள்

[1]Adapted from chapter 1 in Harold T. Bryson, *How Faith Works*, "Studies in the Letter of James" (Nashville: Broadman Press, 1984). [2]R. V. G. Tasker, *The General Epistle of James,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1980), 9.

2

கடினமான காலங்களில் வித்தியாசத்தை ஏற்படுத்தும் விசுவாசம் (1:2-4)

வாழ்க்கைக்கான தேவனுடைய பாடத்திட்டத்தில், அவர் "சோதனை 201" என்று தலைப்புக் கொண்ட ஒரு பாடத்தைக் கொண்டுள்ளார். வகுப்பின் கூக்குரல் "பச் ..." என்பதாக உள்ளது. வகுப்பின் நிறம் கறுப்பு மற்றும் நீலம் என்பவையாக உள்ளன. "இதுவும் கடந்துபோகும்" என்பது வகுப்பின் குறிக்கோளாக உள்ளது.

சோதனை என்பது நம் எல்லாருக்கும் ஒரு பொதுவான அனுபவமாகக் காணப்படுவது இல்லையா? நடைமுறைக் கிறிஸ்தவத்தின் இந்தக் கைப்புத்தகத்தில், வாழ்வில் எதிர்கொள்ளப்படும் சிரமங்கள் என்பதே யாக்கோபு கையாளுகிற முதல் பாடக்கருத்தாக உள்ளது. கிறிஸ்தவராகுதல் என்பது வாழ்வை மிகச்சுலபமானதாக்கி, எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்து வைக்கும் என்ற நவீனக் கருத்து யாக்கோபுக்கு அந்நியமானதாயிருக்கிறது.

ஹாரோல்டு குஷ்னெர் என்ற யூதத்துவ ரபீ ஒருவரால், இருதயத்தை மிகவும் அசைக்கக் கூடிய ஒரு புத்தகம் எழுதப்பட்டது. குஷ்னெர், "விரைவிலேயே வயதாகுதல்" என்ற நோயினால் துன்புற்ற தமது மகன் ஆரோனைப் பற்றிக் கூறுகிறார். குஷ்னெரும் அவரது மனைவியும், பதினோரு ஆண்டுகளாகத் தங்கள் மகன் துன்புற்றதைக் கவனித்தனர். ஆரோன் குஷ்னெர் என்ற அந்தப் பையனின் பதினான்காவது பிறந்த நாள் முடிந்து நான்கு நாட்களுக்குப் பின்னர், வயதான மனிதனாக அவன் இறந்துபோனான். இது "ஏன்" நடந்தது என்ற கேள்வியுடன் போராடிய குஷ்னெர், *நல்ல மனிதர்களுக்கு மோசமான விஷயங்கள் நடக்கும்போது* என்ற தமது புத்தகத்தை எழுதினார்.

இறையியல் ரீதியாகப் பேசுவதென்றால், குஷ்னெர் அடைகிற முடிவுகளை நான் ஒப்புக்கொள்ள முடியாது, ஆனால் நடைமுறையில் பேசுவதென்றால், அந்தக் கேள்விக்குப் பின்னால் உள்ள செயல் நோக்கத்தை நான் புரிந்து கொள்கிறேன். இதே சிந்தனையுடன் பலர் போராடி இருக்கின்றனர். நான் போராடி இருக்கிறேன் என்பதை நான் அறிந்துள்ளேன்! 1986ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், ஏழு நாட்களில் நான், எட்டு சவ அடக்கங்களை நடத்தி அல்லது அவற்றில் பங்கேற்று இருக்கிறேன். நேசிக்கப்பட்ட ஒரு மூப்பரைப் புற்றுநோய்க்கு இழந்துபோனதுடன், எங்கள் பெண்களில் ஐந்துபேர், மிகத்துன்பமான வாகனவிபத்தில் இறந்து போயினர். (அவர்களில் மூவர் அந்த இடத்திலேயே இறந்து போயினர், மற்ற இருவரும் ICUவில் இறந்து போயினர்.) அவ்வகையான வேளைகள், ஒரு நபரை, இரவு வேளைகளில் படுத்தவண்ணம் விழித்திருந்து "ஏன்?" என்று திகைப்பு அடையச் செய்கின்றன.

யாக்கோபு தமது நிருபத்தை, ''உண்மைநிலை சிகிச்சை'' என்று அழைக்கப்படக் கூடிய ஒரு பாடக்கருத்துடன் தொடங்குகிறார். முதலில் அவர், விசுவாசிகள் வாழ்வில் தவிர்க்க இயலாத இடர்ப்பாடுகளை எதிர்பார்க்க முடியும் என்று அறிய *வேண்டும் என விரும்புகிறார். இரண்டாவது அவர், தேவன்மீது நாம் கொண்டுள்ள விசுவாசம் கடினமான வேளைகளில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும் என்று நாம் அறிய வேண்டும் என்று விரும்புகிறார்.*

சோதனைகளின் உண்மை நிலை

2 மற்றும் 3ம் வசனங்கள், "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்று கூறுகின்றன. இவ்வசனங்களில் யாக்கோபு, சோதனைகள் பற்றிய முக்கியமான ஐந்து சத்தியங்களைத் தருகிறார்.

சோதனைகள் தவிர்க்க இயலாதவைகளாக உள்ளன

யாக்கோபு, "நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்பட்டால், *..." என்றல்ல ஆனால் "நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, ..." என்று கூறுகிறார் (1:2). தமது கிறிஸ்தவ வாழ்வு சுலபமாக இருக்கும் என்று எதிர்பார்க்கும் விசுவாசி அதிர்ச்சியடைகிறார். வாழ்வானது எப்போதுமே நாம் எதிர்கொள்ளச் சில இடர்ப்பாடுகளை, ஏற்படுத்தச் சில கடினமான முடிவுகளை, ஈர்த்துக்கொள்ளப்படச் சில புண்படுத்தப்படுதல்களை, அல்லது சில சுகவீனங்களை அல்லது மீளவேண்டிய சில விபத்துக்களை அளிக்கிறது. வாழ்வானது பிரச்சனைகளின் வரிசைத் தொடராக உள்ளது என்ற உணர்வை ஒருவர் பெறக்கூடும்.*

பிரச்சனைகள் பலவண்ணம் கொண்டுள்ளன

யாக்கோபு "பலவிதமான சோதனைகளில்" என்று கூறும்போது, அவர் "பலவண்ணமான" என்று மிகச்சரியாக மொழிபெயர்க்கப் பட்டிருக்கக்கூடிய ஒரு வார்த்தையைப் பயன்படுத்துகிறார். சோதனைகள் பல்வேறு வழிகளில் மற்றும் வடிவங்களில் வரக்கூடும் என்பதே யாக்கோபு அறிவிக்கும் கருத்தாக உள்ளது. வாழ்வில் நாம் கொண்டுள்ள பொறுப்புகள் ஒவ்வொன்றும், அத்துடன் இணைந்து இருக்கும் தனிப்பட்ட வகையிலான சோதனையைக் கொண்டுள்ளது. உதாரணமாக, பெற்றோராக இருத்தல் என்பது வாய்ப்பு வளத்தில் மகிமையுள்ளதாகவும் மன எழுச்சியூட்டுவதாகவும் உள்ளது, இருப்பினும் பெற்றோர் அறிந்துள்ளபடி, அது தனது சொந்த சிரமங்கள் மற்றும் சோதனைகள் என்ற அமைவைக் கொண்டுவருகிறது.

சோதனைகள் முன்னுரைக்க இயலாதவையாக உள்ளன

2ம் வசனத்தில், ''அகப்படும்போது'' என்ற வினைச்சொல்லானது, நல்ல சமாரியன் உவமையில் இயேசு, "ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்*" என்று கூறுகையில் பயன்படுத்திய அதே வார்த்தையாக உள்ளது (லூக்கா 10:30;* NIV*). (என்னால்*

வலியுறுத்தப்படுகிறது.) இது, எந்த நாளிலும், நாளின் எந்த வேளையிலும், சில சோதனைகள் காத்துக்கொண்டிருக்கின்றன, அவை நம்மீது பாயத் தயாராக உள்ளன என்று யாக்கோபு கூறுவதைப் போல் உள்ளது. நம் ஒவ்வொருவரின் வாழ்விலும், பேரழிவை ஏற்படுத்தும் சோதனைகளில் சில சீக்கிரமே வரக்கூடியதாக இருக்கலாம்.

சோதனைகள் விசுவாசத்தைப் பரீட்சை பார்க்கின்றன

இது, வாழ்வில் சிரமமான, வெறுக்கத்தக்க மற்றும் பேரழிவான நிகழ்ச்சிகள் நமக்கு நடக்கத் தேவன் காரணமாகிறார் என்று கூறுவதாக இருப்பதில்லை. இது, விஷயங்கள் மோசமாகிறபோது, தேவன்மீது நாம் கொண்டுள்ள நமது விசுவாசம், நமது நம்பிக்கை மற்றும் நமது தைரியம் ஆகியவை பரீட்சைக்கு உட்படுத்தப்படுகின்றன என்று கூறுகிறது. எல்லா விஷயங்களும் நன்கு செல்லும்போது, தேவனை விசுவாசிப்பதும் அவரது வாக்குத்தத்தங்களில் விசுவாசம் கொண்டிருப்பதும் சுலபமானதாக உள்ளது. ஆனால் நீங்கள் உங்கள் வேலையை இழக்கும்போது, உங்கள் வாழ்வின் சேமிப்புகள் மோசடி செய்யப்படும்போது, உயிருக்கு அச்சுறுத்தல் தரும் ஒரு வியாதி உங்களுக்கு இருப்பதாகக் கண்டறியப்படும்போது, உங்கள் துணை உங்களை விட்டுச் செல்லும்போது அல்லது உங்கள் பிள்ளை போதைப் பொருட்களைப் பயன்படுத்துதலில் சிக்கிக்கொள்ளும்போது உங்கள் விசுவாசத்திற்கு என்ன ஆகிறது? அப்போது நீங்கள் என்ன செய்கிறீர்கள்? வாழ்வின் சோதனைகள் விசுவாசத்தை அக்கினியில் வைக்கின்றன, மற்றும் தூய்மையான விசுவாசமானது எப்போதுமே அந்தச் சூளையில் இருந்து பிரகாசமானதாகவும் பலமானதாகவும் எழும்பி வெளிவருகிறது.

சோதனைகள் பொறுமையை உண்டாக்குகின்றன

''அது பொறுமையாக இருக்குமா?'' என்பதே ''விசுவாசத்தின் பரீட்சை''யினால் பதில் அளிக்கப்படுகிற கேள்வியாக உள்ளது. ஒரு புத்தகத்தை வாசிப்பதினாலேயோ, ஒரு பிரசங்கத்தைக் கவனிப்பதினாலேயோ அல்லது ஒரு ஜெபத்தை ஜெபிப்பதினாலேயோ சகிப்புத்தன்மை அடைய இயலாது. சோதனைகள் வருகிறபோது, நாம் செய்கிற நன்மைக்குப் பலன் அளிக்கப்படாது இருப்பதால் நாம் அறிந்துள்ள நல்லவிஷயங்களில் தொடர்ந்து நிலைத்திருக்கச் சிறிதளவே கருத்துள்ளது என்று நாம் நம்பிச் சாய்கிறோம். சோதனைகள் மூலமாக என்பது மாத்திரமே, நமது வாழ்வில் பொறுமையும் பண்பும் மேம்படுத்தப்படக்கூடிய ஒரே வழியாக உள்ளது என்று யாக்கோபு கூறுகிறார். நாம் வாழ்வின் சிரமங்களினூடாக, தேவன்மீது நம்பிக்கை வைத்தவர்களாக அவருக்குக் கீழ்ப்படிபவர்களாகக் கடந்து செல்ல வேண்டும்!

நமது சோதனைகளுக்குப் பதில்

ஆண்டுகளினூடே கிறிஸ்தவர்கள், யாக்கோபு 1:2ஐப் பற்றி இடர்ப்பாடு கொண்டிருந்தனர். வாழ்வின் இடர்ப்பாடுகளில் இருந்து நாம் ''சந்தோஷம்'' கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் நம்மிடத்தில் விரும்புகிறார் என்ற கருத்தைப்பற்றி நாம் இடர்ப்பாடு கொண்டிருக்கிறோம். அந்தக் கருத்து உண்மை யானது என்றால், நாம் வெளியே சென்று, நமக்கு நாமே எவ்வளவு மோசமான

விஷயங்களை உருவாக்கிக் கொள்ளமுடியும் என்று பார்க்க வேண்டாமா? அது தேவனுடைய பண்புடன் இசைவாக இராது என்பது தெளிவு.

இவ்வசனப் பகுதியில் இருந்து, இரு கருத்துக்கள் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டும். முதலாவது, வாழ்வின் சோதனைகள் சந்தோஷமானவைகளாக *உள்ளன* என்று யாக்கோபு கூறுவதில்லை. நமது குடும்பங்களுடன் இருத்தல், மற்ற பரிசுத்தவான்களுடன் ஐக்கியம் கொண்டும் இருத்தல், ஒரு நபர் தேவனுடைய பிள்ளையாவதைக் காணுதல் ஆகியவை "தூய்மையான சந்தோஷமாக" உள்ளன. வாழ்வின் சோதனைகள் சந்தோஷமானவைகளாக இருப்பதில்லை, ஆனால் அவற்றை நாம் சந்தோஷமானவைகளாக "கருத" ("எண்ண," KJV) வேண்டும். இரண்டாவது, "எண்ண" என்ற வார்த்தை, "சந்தோஷம்" என்பது சோதனைக்குப் பின்பு வருகிறது என்று அர்த்தப்படுகிற, ஆரிஸ்ட் வினைச் சொல்லில் உள்ளது என்று கல்வியாளர்கள் கூறுகின்றனர். ஒருவேளை நீங்கள், "வாழ்க்கை உங்களுக்கு எலும்பிச்சம்பழங்களைக் கொடுக்கும்போது, நீங்கள் எலுமிச்சம்பழச் சாற்றைச் செய்யுங்கள்" என்ற பழங்கூற்றைக் கேள்விப்பட்டிருக்கலாம். அந்த நகைச்சுவையான ஆயினும் நடைமுறைப்படுத்தக் கடினமான கூற்றானது, ஒருவகையில் யாக்கோபுவின் சிந்தனையை விளக்கப்படுத்துகிறது. வேதாகமம் முழுவதிலும், தோல்வியை வெற்றியாக்கிய மற்றும் சோதனையை வெற்றிக்கொண்டாட்டம் ஆக்கிய நபர்கள் குறித்து உதாரணத்திற்குப் பின் உதாரணமாகக் காணப்படுகிறது.

மூன்று காரணங்களுக்காக நாம், நமக்கு ஏற்படும் சோதனைகளைச் சந்தோஷமானவைகளாக "எண்ண" முடியும். அவற்றைக் கவனமாகப் படியுங்கள்:

நாம் தனிமையாக இல்லை என்று நாம் அறிந்திருக்கும் விசுவாசத்தின் காரணமாக நாம் சந்தோஷம் கொண்டிருக்க முடியும். நம்மோடு நமது வழிகள் யாவற்றிலும் இருக்கும் அன்பான மற்றும் வல்லமை நிறைந்த கர்த்தரை நாம் கொண்டிருக்கிறோம். இதைச் சங்கீதக்காரர் நன்கு விளக்கினார்: "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்" (சங்கீதம் 23:4). நமது கர்த்தர் நம்மோடு இருப்பது மட்டுமின்றி, அவருக்குள் இருக்கும் நமது ஆவிக்குரிய குடும்பமும், நமது மோசமான வேளைகளில் நமக்கு உதவியாக இருக்கும். ஒரு சபையின் மூப்பர் ஒருவருடைய அறையில் அமர்ந்து கொண்டு, அவரது மனைவியை அவர் இழந்து போனதினிமித்தம் அவரை ஆறுதல் படுத்திக்கொண்டிருந்த நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. அப்போது அவர், "கிறிஸ்தவரல்லாத மக்கள் எவ்வாறு ஆறுதலைப் பெற்றுக்கொள்கின்றனர் என்று எனக்குத் தெரியவில்லை" என்று கூறினார். பல சவ அடக்கங்களை நான் நிறைவேற்றியபோது, நான் நேசித்த மக்களுக்காகச் சவ அடக்கங்களை நான் நடத்தியபோது, மற்ற பிரசங்கியார்கள் எனக்காக ஜெபிப்பதை நான் அறிவதற்காக அவர்களிடத்தில் இருந்து பல தொலைபேசி அழைப்புகளை நான் பெற்றிருக்கிறேன்.

சோதனைகளால் பரீட்சிக்கப்படுதல் என்பது வளர்ச்சியின் காலமாகவும் இருக்க வேண்டும். இராபர்ட் பிரவுனிங் ஹாமில்ட்டன் என்பவர் ஒருமுறை பின்வருமாறு எழுதினார்:

நான் சந்தோஷத்தோடு ஒருமைல் தூரம் நடந்தேன்.

வழிநெடுகிலும் அவள் கதைத்தாள்;
ஆனால் அவள் கூறவிருந்த எல்லாவற்றினாலும்
என்னை ஞானியாக்கவில்லை.

நான் வருத்தத்தோடு ஒருமைல் தூரம் நடந்தேன்,
அவள் ஒரு வார்த்தையும் கூறவில்லை;
ஆனால், வருத்தம் என்னோடு நடந்தபோது
நான் அவளிடமிருந்து கற்றது எத்தனை விஷயங்கள்!

அந்தச் சிறு கவிதையின் உண்மையானது திரும்பத் திரும்ப அனுபவிக்கப்பட்டுள்ளது. ஒருவர் பழைய ஏற்பாட்டைப் படிக்கையில், அதிலும் குறிப்பாக, தாவீதின் வாழ்வைப் பற்றிப் படிக்கையில், தாவீது எழுதிய சங்கீதத்தினால் சாட்சியளிக்கப்படுகிறபடி, கர்த்தருடன் தாவீதுக்கு இருந்த உறவானது, அவர் [தாவீது] பெருவருத்தத்தில் இருந்த வேளைகளில் வளர்ந்தது என்று நம்பி இணங்குகிறார்.

யாக்கோபு, நமது விசுவாசமானது மிகவும் சீர்பொருத்தமாக இருக்கவேண்டும் மற்றும் நமது பற்றுறுதியானது குறைவான தவறுடையதாக இருக்க வேண்டும் என்ற நமது இருதயத்தின் கூப்பிடுதலுக்குப் பதில் அளிக்கிறார். வாழ்வின் சோதனைகள் தேவனுடைய பரீட்சைகளாக உள்ளன மற்றும் அந்த விசுவாசமானது பலமான நிலைத்த நடைமுறையாகும் வாழ்வின் பரீட்சைகளினால் சந்திக்கப்பட வேண்டும்.

வாழ்வின் சோதனைகள், அதிகமாய்க் கிறிஸ்துவைப் போல் இருப்பதற்கான வாய்ப்பை அளிக்கின்றன: எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் பின்வருமாறு கூறினார்,

> ஆகையால், ... விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த *சந்தோஷத்தின்* பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் (எபிரெயர் 12:1, 2).

வாழ்வில் சோதனைகளையும் சிரமங்களையும் கொண்டிருத்தல் என்பது, தேவன் நம்மீது அன்புகூராது இருக்கிறார் என்பதைக் குறிப்பதில்லை. அது, நாம் பாவத்தினால் சபிக்கப்பட்ட ஒரு உலகத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று அர்த்தப்படுகிறது. நாம் இயேசுவைப் போல் இன்னும் அதிகமாக இருக்கத் தீர்மானிக்க வேண்டும் மற்றும் நமது விசுவாசம் அந்த சோதனைகளில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த அனுமதிக்க வேண்டும். யாக்கோபு, "நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது" என்று கூறுகிறார் (1:4).

முடிவுரை

சோதனைகள், விசுவாசத்தின் மக்களுக்கு சேதம் விளைவிக்கக் கூடிய அனுபவமாக இருக்கத் தேவையில்லை. வாழ்வின் கடினமான சூழ்நிலைகளிலிருந்து கிறிஸ்தவர்கள் வளரமுடியும். வாழ்வின் சோதனைகள், ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த விசுவாசத்திற்கு உண்மையான வாய்ப்புகளை

அளிக்கின்றன. விசுவாசம் எவ்வளவு அதிகமாய்ச் செயல்படுகிறதோ, அவ்வளவு அதிகமாய்க் கிறிஸ்தவர் பக்குவமடைகிறார்.

ஜீன் கெட்ஸ் என்பவர், *நீங்கள் சந்தேகம் கொள்ளும்படி சோதிக்கப்படும்போது தேவனை விசுவாசித்தல்* என்ற தமது புத்தகத்தில், யாக்கோபு 1:2-4ன் தன்மயமாக்கப்பட்ட பொழிப்புரையை அளிக்கிறார்:

> நான் இந்தப் பிரச்சனையை, கிறிஸ்துவுக்குள் அதிகம் பக்குவமடைதல் மற்றும் நிறைவடைதல் என்பதற்கான ஒரு வாய்ப்பாகக் கண்ணோக்குவேன். நான் இதை, நான் என்ன செய்ய விரும்புகிறேன் என்பதற்கு மாறாக, தேவன் நான் என்ன செய்ய வேண்டும் என்பதாகக் கூறுகிறாரோ, அதைச் செய்வதில் உறுதியாயிருக்க எனது திறமையை மேம்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாகக் கண்ணோக்குவேன். நான் இந்தப் பிரச்சனையானது என்மீது மிதமிஞ்சிய அதிகாரம் செலுத்தவோ அல்லது என்னைத் தோல்வியடையச் செய்யவோ அல்லது எனது கிறிஸ்தவ வாழ்வை விட்டுவிடும்படி ஊக்குவிக்கவோ அனுமதிக்கமாட்டேன். நான் இந்தப் பிரச்சனையை, இயேசுவின் சீஷனாக நான் இருக்கிறேன் என்று எனக்கும் மற்றவர்களுக்கும் நிரூபிக்க ஒரு வாய்ப்பாகக் கண்ணோக்குவேன். நான் கிறிஸ்துவுடன் இருக்கப்போகும் நாளை நான் ஆவலுடன் முன்னெதிர் நோக்குவேன்; நான் அவருக்காக வாழ்ந்துள்ளதால், அந்த அனுபவத்தில் நிறைவான மகிழ்ச்சியுடன் பிரவேசிப்பேன். வேறு எதைக் காட்டிலும் மேலாக, நான் தேவனுக்குக் கீழ்ப்படிவேன், ஏனென்றால் நான் என்னை நேசிப்பதற்கு மேலாக அவரை நேசிக்கிறேன்.[1]

குறிப்புகள்

[1]Gene Getz, *Believing God When You Are Tempted to Doubt* (N.p.: Regal Books, 1983), 27-28.

3

உங்களுக்கு ஏற்படும் தொல்லைகளை வெற்றிகொள்வது எப்படி? (1:5-11)

பிள்ளைகளை வளர்த்தல், நாளை தினத்தை எதிர்கொள்ளுதல், அகப்பட்டுக் கொண்ட உணர்வின் பிரச்சனையை எதிர்கொள்ளுதல் மற்றும் நேரம் கொண்டிருந்து அதை எவ்வாறு நிரப்புவது என்று அறியாதிருக்கும் பிரச்சனை போன்ற பரவலாக உள்ள தேவையானது இன்றைய உலகத்தின் அச்சுறுத்தும் அம்சங்களில் ஒன்றாக உள்ளது. இலக்குகளை நிறைவேற்றுதலின் கடுமையான உழைப்பை, வியாதியின் கொடூரமான அடிகளை அல்லது நாம் நேசிப்பவர்களை இழந்துபோகும் அதிர்ச்சிகளை எதிர்கொள்ளக் கூடியவர்களாக இனியும் மக்கள் தங்களைக் காண்பதில்லை. குற்றம் காண்பவரின், “மரணத்திற்குப் பின் வாழ்வு உண்டா?” என்ற கேள்வியானது “மரணத்திற்கு முன்பு *வாழ்வு* உண்டா?” என்ற கேள்வியைக் கொண்டு இடம்மாற்றப்பட்டுவிட்டது என்று கூறலாம்.

வாழ்வின் தீங்குகளைக் கையாளுதல் என்பதை அடிக்கடி நாம் கடினமானதாகக் காணுகிறோம். இந்த நிலையை நாம், ஆதாமின் பாவத்தினால் உலகத்திற்குள் கொண்டுவரப்பட்ட துன்பங்கள், வியாதிகள், சோதனைகள் மற்றும் மரணம் ஆகியவற்றின் மூலமாக, வேதாகம ரீதியாக விளக்கப்படுத்த முடியும். விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் - ஆகிய எல்லா மக்களும் ஒரேவகையான சோதனைகள் மற்றும் உபத்திரவங்களை எதிர்கொள்கின்றனர். வாழ்வின் சோதனைகள் நமது விசுவாசத்தைப் பரீட்சை பார்க்கின்றன மற்றும் நாம் பக்குவமுள்ளவர்களாக நிறைவுள்ளவர்களாக ஆகும்படிக்கு இவைகள் நமக்குள் பொறுமையை மேம்படுத்துகின்றன என்று கூறியும் இந்த நிலையை நாம் விளக்க முடியும். ஆனால் அந்த அதிர்ச்சியான நிகழ்வுகளில் ஒன்றை நாம் எதிர்கொள்ளும்போது, வேதாகமரீதியான இந்த கருத்துநோக்கை நாம் இழந்துபோகத் தலைப்படுகிறோம்.

யாக்கோபு, மிகச்சிறப்பான தமது நடைமுறைப் பாணியில், தமது வாசகர்களுக்கும் நமக்கும் என்ன நடக்கும் என்று அறிந்திருப்பதாகக் காணப்படுகிறது. பரீட்சைகளின் நோக்கத்தையும் அந்தப் பரீட்சைகளின் முடிவு விளைவு என்னவாக இருக்க வேண்டும் என்பதையும் கூறியபின்பு, அவற்றை எவ்வாறு வெற்றிக்கொள்வது என்று அவர் கூறுகிறார். இதைச் செய்வதன்மூலம் யாக்கோபு, நமது கிறிஸ்தவ விசுவாசம் நமது அன்றாட வாழ்வில் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்று செயல்விளக்கப்படுத்துகிறார்.

ஞானம் வேண்டும் என்று கேளுங்கள் (1:5)

நாம் ஞானத்தில் குறையுள்ளவர்களாக இருப்பதால், நமக்கு ஏற்படும்

சோதனைகளைக் கையாளத் தவறுகிறோம். ஞானம் என்றால் என்ன? சந்தர்ப்பப்பொருளில் இவ்விடத்தில் ஞானம் என்பது, விஷயங்களைத் தேவனுடைய கருத்து நோக்கில் இருந்து காணும் திறமை என்பதாக உள்ளது. இது தேவன் தமது நித்திய கருத்து நோக்கில் இருந்து விஷயங்களை நமக்குக் காண்பித்தல் என்பதாக உள்ளது. இது நமக்கு, ஒவ்வொரு விஷயமும் எவ்வாறு பொருந்துகிறது என்பதைக் காண்பிக்கிறது: நாம் எவ்வாறு ஜெபிக்க வேண்டும், நாம் என்ன செய்ய வேண்டும், பிரச்சனையை நாம் வெற்றிகொள்வது எவ்வாறு, மற்றும் மிகமுக்கியமாக, அந்தப் பிரச்சனையானது நாம் வளருவதற்கு எவ்வாறு உதவ முடியும்.

நாம் பேசிக்கொண்டிருக்கும் ஞானம் என்பது, வேதாகமத்தைப் பற்றிய அறிவாக மாத்திரம் இருப்பதில்லை. வேதாகமத்தைப் பற்றிய அறிவானது ஒரு தனிநபரை அறிவுக்கூர்மையுள்ளவராக்கலாம், ஆனால் அது அவரை ஞானமுள்ளவராக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஆனால் ஒரு தனிநபர், வாழ்வைப் புரிந்துகொள்வதற்கும் வாழ்வின் பிரச்சனைகளின் வலையில் தமது நடக்கை மற்றும் பிறரின் நடக்கை ஆகியவற்றின் வழிகாட்டுவதற்கும், வேதாகமத்தை எவ்வாறு *பயன்படுத்துவது* என்று அறிந்திருப்பார் என்றால், *அப்போது* அறிவு என்பது ஞானம் என்பதாகக் கடந்து செல்கிறது எனலாம்.

இந்த வாழ்வின் நடைமுறைரீதியான அணுகுமுறை பற்றிய அவரது உறுதிப்பாட்டில், அழகிய நேரடித்தன்மையும் எளிமையும், யாக்கோபு நிருபத்தின் போதனையில் காணப்படுகின்றன. அவர், “நீங்கள் இந்த ஞானத்தில் குறைவுபடுகிறீர்களா? தேவனிடத்தில் கேளுங்கள், அவர் அதை மகிழ்ச்சியுடன் உங்களுக்குத் தருவார்.” அப்படிப்பட்ட எளிமையானது, ஒன்று முற்றிலும் மாயத்தோற்றமானதாக இருக்க வேண்டும் அல்லது தேவனைப் பற்றி அறியப்பட்டவற்றில் அது தனது நியாயப்படுத்துதலைக் கண்டறிவதாக இருக்க வேண்டும். யாக்கோபுவைப் பொறுத்த வரையில் இவ்விடத்தில் பிந்தியகருத்தே உண்மையானதாக உள்ளது. தேவனைப் பற்றி அவரது உபதேசமானது, இந்த ஆச்சரியமான வாக்குத்தத்தங்களை ஏற்படுத்தக் கூடியதாகவும் அந்த வாக்குத்தத்தங்களைத் தேவன் காத்துக்கொள்வார் என்று *அறிதலாகவும்* உள்ளது.

நாம் எல்லாரும், தேவனிடத்தில் ஞானத்தை நாம் கேட்கும்போது அதை அவர் நமக்குத் தருவதை விரும்புகிறார் என்பதை அறிய வேண்டும்! பழைய ஏற்பாட்டில் சாலொமோன் அனுபவித்த விஷயத்திற்கும், ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் தேவன் விரும்பும் விஷயத்திற்கும் இடையில் ஒரு நேரடித் தொடர்பு நிலவுகிறது. சாலொமோனுடைய வரலாற்றை நினைவுக்குக் கொண்டுவாருங்கள் (1 இராஜாக்கள் 3). அவர் இஸ்ரவேலின் அரசராகப் பணிசெய்யும்படி நியமிக்கப்பட்ட உடனே, அவருக்குக் கர்த்தர் ஒரு கனவில் தோன்றி, எதை வேண்டுமானாலும் கேட்கக் கூடிய வாய்ப்பை அவருக்குக் கொடுத்தார். சாலொமோன், “உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்” என்று சாலொமோன் கேட்டது பற்றிக் கர்த்தர் மகிழ்ச்சி அடைந்தார் (1 இராஜாக்கள் 3:9). தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு நாம் ஞானத்தைக் கேட்கும்போது தேவன் *எப்போதுமே* மகிழ்ச்சியடைகிறார் என்பது வேத வசனங்களிலிருந்து மிகவும் தெளிவாகி இருக்க வேண்டும். இவ்வகையான

ஜெபத்திற்குப் பதில் அளிக்க அவர் விரும்புகிறார்.

நாம் இவ்வகையான ஞானத்தைக் கேட்க வேண்டும் என்று தேவன் நம்மிடத்தில் விரும்புவது ஏன்? ஏனென்றால், ஜெபத்தைப் பற்றிய நமது கிறிஸ்தவப் புரிந்துகொள்ளுதலில், ஜெபம் என்பது நமது ஒழுக்கரீதியான போது மற்ற தன்மைகளின் அறிக்கையையும், நாம் இன்னும் அதிகமாகக் கிறிஸ்துவைப் போலாக வேண்டும் என்ற நமது ஆர்வமான விருப்பத்தையும் உள்ளடக்குகிறது. கிறிஸ்தவர் (மதுபானம் அருந்துதல், போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், ஒழுக்கவீனமான பாலுறவில் ஈடுபடுதல் முதலிய) தவறு செய்யும்படி தோழர்களின் அழுத்தத்தை எதிர்கொள்ளும்போது, அல்லது அவர் குடும்பப் பிரச்சனைகள் அல்லது அன்பிற்குரிய ஒருவரின் மரணம் என்பதை எதிர்கொள்ளும்போது, அவர் தமது சொந்த பலத்தைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாகத் தேவனிடத்தில் உதவி கேட்கிறார். அவரது ஜெபம் பின்வருமாறு இருக்கலாம்: "தேவனே, என்னால் இதைக் கையாள இயலாது! ஆனால் உமது உதவியுடன் நான் இதிலிருந்து முற்றிலும் கடந்து வருவேன் மற்றும் இதற்கு நான் ஒரு மிகச்சிறந்த நபராக இருப்பேன்." அந்த ஜெபமானது, நமது சொந்த பலத்தையல்ல ஆனால் தேவனுடைய பலத்தை நம்பியிருக்கும் கிறிஸ்தவ வாழ்வின் பண்பாக உள்ளது.

உங்கள் விசுவாசம் செயல்படட்டும் (1:6-8)

நாம், 6முதல் 8வரை உள்ள வசனங்களை வாசிக்கும்போது, அடிக்கடி நாம், "ஆனால் யாக்கோபுவே, நான் சந்தேகத்துடன் மிகவும் அதிகமாகப் போராடுகிறேனே" என்று கூறுபவர்களாக நம்மைக் காணலாம். நாம், கிறிஸ்தவத்திற்கு மையமாக உள்ள அந்த சத்தியத்தைக் குறித்து சந்தேகப்படுகிறோம் என்று நாம் அர்த்தப்படுத்தவில்லை. உதாரணமாக, நாம் தேவன் இருக்கிறார், இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய செயல்படும் சக்தியாக இருக்கிறார், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார், இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தினால் கிருபையினாலே இரட்சிப்பு உண்டு, இயேசு கட்டியெழுப்பிய சபையின் முதன்மை முக்கியத்துவம், மற்றும் தேவனுடைய சித்தத்திற்கு மனிதன் கீழ்ப்படிதல் உள்ளவனாக இருக்க வேண்டும் என்பதன் அவசியம் ஆகியவற்றைப் பற்றிச் சந்தேகப்படுவதில்லை. நாம் போராடுவது பின்வரும் விஷயமாக உள்ளது: "வாழ்வின் கடினமான வேளைகளில், நமக்கு உதவிசெய்யத் தேவன் தமது வல்லமையைப் பயன்படுத்துவாரா?" உண்மையில், நாம் பலவேளைகளில் நம்மை, மாற்கு 9ல் "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" (மாற்கு 9:24) என்று வியப்புற்ற சோகமிக்க தந்தையுடன் அதிகமாக அடையாளப்படுத்திக் கொள்கிறோம்.

யாக்கோபு, தேவனுக்குள் உள்ள ஏதொன்றும், அவர் நமது வேதனையின் வேளையில் ஞானத்தைக் கொடுப்பதில் இருந்து அவரைத் தடைசெய்வதில்லை, ஆனால் அந்தத் தடையானது நமக்குள்ளே இருக்கலாம். அதனால்தான் அவர், "ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்" என்று கூறுகிறார் (1:6). அவர் விசுவாசிகளுக்கு எழுதுகிறார் என்பதால், தேவன் மீது விசுவாசம் கொள்ளுமாறு மாத்திரம் அர்த்தப்படுத்துவதில்லை, ஆனால் தேவன் தமது பிள்ளைகள் கேட்கின்றவற்றைச் செய்யக்கூடும் மற்றும் செய்வார் என்று விசுவாசிக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துகிறார்.

இந்தப் போராட்டங்களில், நாம் குறைந்தபட்சம் இரண்டு பிரச்சனைகளால் எதிர்கொள்ளப்படலாம். முதலாவது நாம், *என்ன* கேட்பது என்று அறியாதிருக்கலாம். கடினமான வேளையில் நாம், அந்தக் கடினத்தை நீக்கிப்போடும்படி தேவனிடத்தில் கேட்கச் சாய்வதில்லையா? ஆனால் யாக்கோபு கூறுவது அதுவல்ல. நாம் வாழ்வின் சிரமங்களிலிருந்து பக்குவமடையக் கூடும்படிக்கு, "ஞானத்தை" கேட்க வேண்டும் என்று அவர் தெளிவாகக் கூறுகிறார். இரண்டாவது நாம், தேவனுடைய உதவி இருப்பினும்கூட, நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் இருந்து நன்மையான எதுவும் வரக்கூடுமா என்று உறுதிப்பாடு இல்லாதவர்களாக இருக்கலாம். இவ்வகையான சூழ்நிலையை விவரிக்க யாக்கோபு வண்ணமிகும் சொல்விளக்கங்கள் இரண்டைப் பயன்படுத்துகிறார். 6ம் வசனத்தில் அவர், "... சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்" என்று கூறுகிறார். கொந்தளிக்கும் கடலானது முற்றிலுமாகக் காற்றின் இரக்கத்தில் உள்ளது, அது அக்கடலைத் தான் வீசுகிற எல்லாத்திசைகளிலும் மாற்றிப்போடுகிறது. ஆனால் 8ம் வசனத்தில் இதைவிடச் சிறப்பான விவரிப்பு உள்ளது. அது, சந்தேகப்படுகிற மனிதன், "இருமனமுள்ளவனாக" இருக்கிறான் என்று கூறுகிறது. இவ்விடத்தில் பயன்படுத்தப்படுகிற கிரேக்க வார்த்தையானது, "இரு ஆத்துமா உள்ளவன்" என்று நேரடி அர்த்தப்படுகிறது. இது, ஒரு ஆத்துமா, "நான் விசுவாசிக்கிறேன்" என்று அறிவிக்க, இன்னொரு ஆத்துமா "நான் விசுவாசிக்கவில்லை" என்று பதிலுரைக்க உரத்துக் கூவுதல் போல் உள்ளது. அம்மனிதன் பிரிவுபட்ட கடப்பாடு கொண்டிருக்கிறான், சிலவேளைகளில் அவன், தனக்குத் தேவன் உதவலாம் என்று நினைக்கிறான், மற்றும் பிற வேளைகளில் அவன் அந்த நம்பிக்கையைக் கைவிட்டவனாக தீர்வு எதையும் கண்டறியாதிருக்கிறான். இவ்வகையான தனிநபர், ஜான் பனியன் என்பவரின் இலக்கியப் படைப்பான *மோட்சப் பிரயாணம்* என்ற கதையில் வரும், "இருபுறமும் கண்ணோக்கும் கணவன்" என்பவருக்கு இணையாக இருக்கிறான்.

நாம் தேவன்மீது நம்பிக்கை வைத்தால், அவரது வழி என்ன என்று நாம் அறிவதற்கு முன்னரே கூட, அவரது வழி மிகச்சிறந்தது என்று புரிந்துகொள்கிறோம். நமக்கு ஞானம் வேண்டும் என்று நாம், இவ்வகையான விசுவாசத்துடன் அவரிடத்தில் கேட்டால், நாம் அதைப் பெற்றுக்கொள்வோம். தேவனுடைய ஞானத்தால் நாம் நிச்சயத்தன்மையுடன் முன்செல்ல முடியும்.

தவறான விஷயங்களைச் சார்ந்திருக்க வேண்டாம் (1:9-11)

9 முதல் 11 வரையிலான வசனங்கள், ஒரு புதிய பாடக்கருத்தை அறிமுகப்படுத்துவதாகப் பல கல்வியாளர்களால் நினைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் சந்தர்ப்பப் பொருளில் உள்ள கருத்தானது, வாழ்வின் சோதனைகளில் பொறுமையுடன் இருத்தல் என்பதைப் பற்றியதாக இருப்பதால், இந்த வசனங்கள் அதே பொதுப்பாடக் கருத்துடன் தொடர்புடையவையாக உள்ளன என்று புரிந்து கொள்ளுதலே மிகச்சிறப்பானதாக உள்ளது.[1]

அடிக்கடி நாம் நமது நம்பிக்கையை உலகப்பிரகாரமான பொருட்களில் வைக்கிறோம் என்பதால் வாழ்வின் இடர்ப்பாடுகளினால் நாம்

மூழ்கடிக்கப்படுகிறோம். "ஐசுவரியவானான" சகோதரர் தமது செல்வத்தைத் தமது பாதுகாப்பாகக் கண்ணோக்குகிறார், "ஏழை" சகோதரர், செல்வத்தில் தாம் கொண்டுள்ள குறைவு, வாழ்வின் சிரமங்களைத் தம்மால் கையாள முடியாதிருப்பதற்கான காரணமாகக் கூறுகிறார். "சோதனைகள்" மே ம்போக்கான எந்த வித்தியாசங்களையும் அழித்துப் போடுகின்றன மற்றும் அவை செல்வத்தின் மீதும் புதிய கருத்து நோக்கைக் கொடுக்கின்றன என்று யாக்கோபு சுட்டிக் காண்பிப்பதாகக் காணப்படுகிறார்.

தாழ்ந்த சகோதரன், தான் "உயர்த்தப்பட்டதை" குறித்து மேன்மை பாராட்டுதல் என்பது, முதலாவது கிறிஸ்துவுக்குள் அவரது நிலைப்பாட்டிற்கான குறிப்பைக் கொண்டுள்ளது. அவரை இரட்சித்ததில் தேவன் அவரைத் தூக்கியெடுத்து அவருக்குப் புதிய கண்ணியத்தையும் தகுதியையும் கொடுக்கிறார். அவர் தம்மைத் தேவனுக்கும், சபைக்கும் மற்றும் உலகத்திற்கும் மதிப்புடையவராகக் காணுகிறார். இருப்பினும் இந்த சந்தர்ப்பப்பொருளில், "கிறிஸ்துவுக்காக உபத்திரவப்படுதலின் சிலாக்கியத்தையே" யாக்கோபு தமது சிந்தையில் கொண்டிருப்பதாகக் காணப்படுகிறது. வேதவசனங்கள், இவ்வகையான போதனைகளால் நிரம்பியுள்ளது (நடபடிகள் 5:41; 2 தீமோத்தேயு 3:12; 1 பேதுரு 4:16). இயேசுவினிமித்தமாக பாடுகளை அனுபவித்தல் என்பது கிறிஸ்தவரின் ஏழ்மைக்கான ஈடுகளைக் காட்டிலும் அதிகமாகக் கனத்திற்குரிய நிலைப்பாட்டிற்கு உயர்த்துகிறது.

ஏழை மனிதரை உயர்த்தி அவருக்குத் தகுதியின் ஒரு புதிய கருத்தைக் கொடுக்கிற அதே நடத்துதலானது, செல்வந்தரான மனிதரைத் தாழ்மைப்படுத்தவும் செய்கிறது. பாடுகளை அனுபவித்தல் என்பது அவருக்கு, தமது செல்வம் மற்றும் உடமை ஆகியவற்றின் காரணமாக வாழ்வின் மீது நிரந்தரமான ஒப்பந்தத்தைக் கொண்டிருத்தலுக்குப் பதிலாக, அவரது வாழ்வு ஒரு காட்டுப் பூவைக் காட்டிலும் அதிகம் நிரந்தரமாக இருப்பதில்லை என்பதை உணர்த்துகிறது. ஆகவே, யாக்கோபு பின்வருமாறு கூறுகிறார்,

> ஐசுவரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக்குறித்து மேன்மை பாராட்டக்கடவன்; ஏனெனில் அவன் புல்லின் பூவைப்போல் ஒழிந்துபோவான். சூரியன் கடும் வெய்யிலுடன் உதித்து, புல்லை உலர்த்தும்போது, அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்துபோம்; ஐசுவரியவானும் அப்படியே தன் வழிகளில் வாடிப்போவான் (1:10, 11).

முடிவுரை

நாம் நமது சோதனைகளை எவ்வாறு கையாளுகிறோம்? நமது சொந்த பலத்துடனா? நமது சொந்த உலகப்பிரகாரமான செல்வத்தின் மூலமாகவா? நாம் அவ்வாறு செய்தால், வாழ்வானது ஒன்றுக்குப் பின் இன்னொன்றாக நசுக்குதலாக இருக்கும்! நம்மை நாம் தாழ்த்தி தேவனிடத்தில் உதவி கேட்கவும் அவர் நமக்கு உதவுவார் என்று நம்பவும் கற்றுக்கொள்ளாத வரையில், நமது சோதனைகள் நம்மை மூழ்கடிக்கச் செய்வதாக இருக்கும்.

குறிப்பு

[1]Donald W. Burdick, "James," in *The Expositor's Bible Commentary: Hebrews-Revelation* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, n.d.).

4

உங்கள் சோதனைகளில் பெரும்பான்மையானவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுதல் [1:12-15]

சாமுவேல் டெய்லர் கூல்ரிட்ஜ் என்பவரால் எழுதப்பட்ட "பழங்காலக் கடற்பயணியின் பிளவு" என்ற கவிதையானது, முதிர் வயதான மாலுமி ஒருவர் கடல் பற்றிய தமது வரலாற்றை இன்னொரு பாத்திரத்திற்கு, அவர்கள் இருவரும் ஒரு திருமணத்திற்கு விருந்தாளிகளாகச் சென்றிருக்கையில், கூறுவது பற்றியதாகும். முதிர் வயதான மாலுமி, ஒரு கப்பல் தனது பயணத்தின் போது காற்றில் அலைக்கழிக்கப்பட்டு ஆனால் கடைசியாக அண்டார்க்டிக் கடல்களில் இருந்து தனது சொந்த நாட்டிற்குச் செல்லும்போது, அதில் உயிர்பிழைத்திருந்த ஒரே ஒரு நபராக இருந்தார். முதிய மாலுமி தாம் மிகப்பெரிய கடல்பறவையான அல்பர்ட்டாஸ் என்ற பறவையைக் கொன்றிருந்த காரணத்தினால், தனது துர திர்ஷ்டங்கள் யாவற்றையும், இயற்கைக்கு மேலான சக்தியுள்ள முகமையினால் ஏற்பட்டது என்று கூறினார்.

கூல்ரிட்ஜ் இந்தக் கவிதையை எழுதிய நாள் முதற்கொண்டு, மக்கள் ஒரு பிரச்சனை அல்லது ஒரு தொல்லையைக் குறிப்பதற்கு "ஒரு அல்பட்ராஸ்ஸின்" உருவ[க]த்தைக் கழுத்தைச் சுற்றிப் பயன்படுத்தி இருக்கின்றனர். வாழ்வின் சோதனைகள் தொடர்ந்து தொந்தரவு தரும் "அல்பட்ராஸாக" ஒவ்வொரு விசுவாசியின் கழுத்தைச் சுற்றிலும் உள்ளதாகக் குறிக்கப்படுகிறது என்பதில் சந்தேகம் இல்லை.

கிறிஸ்தவ வாழ்வு என்பது எப்போதுமே, அடிக்கடி சித்தரிக்கப்படுவது போன்று, அமைதியான அனுபவமாக இருப்பதில்லை. மற்ற மக்களைப் போலவே கிறிஸ்தவர்களும், இடர்ப்பாடு மற்றும் துன்பம் என்பவற்றை எதிர்கொள்ளுகின்றனர். அவர்களின் உடல்கள் அவர்களின் அயலகத்தவர் உடல் களைப் போலவே வியாதி, காயம் ஆகியவற்றினால் பாதிக்கப்படக்கூடியதாக உள்ளன. அவர்களின் வீடுகள் தீப்பற்றுகின்றன, அவர்களின் உடமைகள் திருடப்படுகின்றன, அவர்கள் வேலை இழந்து போகின்றனர், மற்றும் அவர்களின் குடும்பங்கள் மற்ற குடும்பங்களைப் போலவே அச்சுறுத்தப்படுகின்றன!

வெளியிலிருந்து வரும் வாழ்வின் சோதனைகளை, உள்ளே வரும் சோதித்தல்கள் ஆக அனுமதித்தல் என்பதே கிறிஸ்தவர்களுக்கு உண்மை யான அபாயமாக உள்ளது. நமது சூழ்நிலைகள் நம்மைச் சோதிக்கிற போது, நாம் தேவனுக்கு எதிராக முறையிடுபவர்களாக, அவரது அன்பைப் பற்றிக் கேள்வி கேட்பவர்களாக, மற்றும் அவரது சித்தத்தை எதிர்த்து நிற்கிறவர்களாக நம்மைக் காணலாம். 1:12-15ல் யாக்கோபு, இந்த வாழ்வின் சோதனைகளுக்குச் சாத்தியமாக உள்ள இரு எதிரெதிர்ப் பதில்செயல்கள் பற்றிக் கூறுகிறார். நிறைவு

விளைவு என்பது, வாழ்வின் சோதனைகளில் நமது விசுவாசம் ஏற்படுத்த நாம் அனுமதிக்கும் வேறுபாட்டைச் சார்ந்ததாக உள்ளது.

வெகுமதியைக் கொண்டுவரும் பதில்செயல் - சோதனைகளை உண்மையுடன் சகித்தல் (1:12)

ஏழ்மை, சமூக அநீதி அல்லது சுகவீனம் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இருந்தாலும், சோதனைகள் என்பவை எந்தக் காலத்திலும் சகித்துக் கொள்ளச் சுலபமானவைகளாக இருப்பதில்லை. எந்த சோதனையையும் எதிர்கொள்வதில் பொறுமை என்பதே கிறிஸ்தவரின் முதல் முன்னுரிமையாக இருக்கிறது என்று யாக்கோபு கூறியிருக்கிறார் (1:3, 4, 12). நாம் ஒரு சோதனையை அதன் நிறைவு வரையிலுமாகக் காணவும், என்ன நேர்ந்தாலும் உண்மையுள்ளவர்களாக நிலைத்திருக்கவும் வேண்டும். ஒவ்வொரு சோதனையிலும் நாம் எப்போதும் வெற்றிகொள்பவர்களாக இராதிருக்கலாம். ஆனால் நாம் ஒருக்காலும் விட்டுக்கொடுத்துவிடக் கூடாது அல்லது வாழ்வின் சோதனைகள் நம்மை வெற்றி கொள்ள அனுமதித்து விடக்கூடாது.

பொறுமையுள்ள மனிதரை யாக்கோபு "பாக்கியவான்" என்று கூறுகிறார். "பாக்கியவான்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "சந்தோஷமானவர்" என்று மாத்திரம் சுலபமாக மொழிபெயர்க்கப்பட முடியும். துரதிரஷ்டவசமாக, இவ்விரு வார்த்தைகளில் எதுவுமே கிரேக்க வார்த்தையின் முழுச் செயல்தாக்கத்தைத் தருவதில்லை. இவ்வார்த்தையைக் கிரேக்கர்கள், தங்கள் அழிவில்லாத "கடவுள்களின்" அகமகிழ்வான வாழ்வு பற்றி விவரிக்கப் பயன்படுத்தினர்.

சந்தர்ப்பப்பொருளில் யாக்கோபு, இந்த உலகத்தின் பிரச்சனைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு வாழ்வை விவரிப்பதாகக் காணப்படுகிறது. அவர் "பாக்கியம்" என்பது தேவனிடத்தில் இருந்து வரும் ஒரு வெகுமதி என்பதாகச் சித்தரிக்கிறார். தேவன் பலனளிப்பவர் என்று வேதாகமம் அடிக்கடி போதிக்கிறது (கொலோசெயர் 3:23, 24; எபிரெயர் 11:6). பொறுமையாக இருப்பவர்களுக்கு "ஜீவ கிரீடம்" ஒரு வெகுமதியாகத் தரப்படுகிறது. "கிரீடம்" என்பது ஒரு அரசகிரீடத்தைக் குறிப்பிடலாம் என்றாலும், அது குறிப்பாக இந்தச் சந்தர்ப்பப் பொருளில், வெற்றி பெற்ற ஒரு விளையாட்டு வீரனுக்குச் சூட்டப்பட்ட வெற்றிகிரீடத்தைக் குறிப்பதற்கே அதிக சாத்தியக்கூறு உள்ளது. கிறிஸ்தவர் சோதனைகளுக்கு எதிரான தமது போராட்டத்தில் வெற்றி பெறுகிறபோது, அவருக்கு ஒரு வெகுமதி அளிக்கப்படும் மற்றும் வாழ்வின் ஜீவ கிரீடம் (இந்த உலகத்தின் போராட்டத்தில் இருந்து விடுதலையான ஒரு வாழ்வு) என்பதே அந்த வெகுமதியாக உள்ளது என்று யாக்கோபு கூறுகிறார்.

பகுத்தறிவு வாதத்தின் பதில் செயல் - சோதனைகளின்போது சோதிக்கப்படுதலுக்குச் சாய்ந்து போகுதல் (1:13-15)

மனிதர்களாகிய நாம் "பிறர் மீது குற்றம் சுமத்துவதை" நேசிக்கிறோம். நமது பிள்ளைகள் பின்வருமாறு விவாதம் செய்வதை நாம் எவ்வளவு அடிக்கடி கேள்விப்படுகிறோம்: "அவன்தான் இதைத் தொடங்கினான்"; "அவன் என்னை

இவ்வாறு செய்யும்படி செய்துவிட்டான்"; "என்னை அப்படிப் பார்க்காதீர்கள், அது என் தவறல்ல." பிள்ளைகள் மாத்திரம் தங்கள் செயல்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதில் இருந்து தப்பிப்பதில்லை. ஃபிளிப் வில்சன் என்பவர், "சாத்தான்தான் நான் இதைச் செய்யும்படி ஆக்கிவிட்டான்" என்று கூறியதன் மூலம் பல இலட்சக் கணக்கான மக்களைச் சிரிக்கச் செய்தார். அவர்கள் ஏன் சிரித்தனர்? ஏனென்றால் அவரது வசைத்துணுக்கானது, நமது செயல்களுக்குப் பொறுப்பேற்பதைத் தவிர்ப்பதற்கான நமது சொந்த விருப்பத்தை எதிரொலித்தது. சிலர் தங்களுக்கு ஏற்படும் சோதனைகள், சோதிக்கப்படுதல்கள் மற்றும் அதன் விளைவான பாவங்கள் ஆகியவற்றிற்கும் பிசாசானவனையல்ல ஆனால் தேவனையே குற்றம் சுமத்தினர் என்பது பற்றி யாக்கோபு கவலை கொண்டுள்ளார்.

யூதர்கள், வாழ்வின் அனுபவங்கள் பற்றிய தங்களின் உற்றுநோக்கல்கள் மற்றும் தங்களின் விளக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், மனிதனை ஒரு நடமாடும் உள்நாட்டு யுத்தம் என்பதாகக் கருதுகின்றனர். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருவித விருப்பச் சாய்வுகள் அல்லது இரு இயல்புகள், அதாவது நன்மை மற்றும் தீமை ஆகியவை ஒன்றுடன் ஒன்று போராடுகின்றன என்ற கருத்தை அடைந்தனர். பவுலைப் போலவே (ரோமர் 7:15) நாமும் ஒப்புக்கொள்கிறோம், ஆனால் அப்படிப்பட்ட கருத்தானது, பொல்லாத விருப்பச்சாய்வு எங்கிருந்து வருகிறது என்று கூறுவதில்லை.

யூதர்கள், "தேவன் என்னை இவ்விதமாக உண்டாக்கியிருக்கிறபடியால், எனது பாவத்திற்கு *அவரே* பொறுப்பாவார்" என்று கூறுவார்கள். தேவனைக் குற்றம்சாட்டும் அந்தக் கருத்து ஆதாம் தொடங்கி இங்குள்ளது. அவர், "என்னுடனே இருக்கும்படி *தேவரீர்* தந்த ஸ்திரீயானவள் ..." என்று கூறினார் (ஆதியாகமம் 3:12; என்னால் வலியுறுத்தப்படுகிறது). ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த இராபர்ட் பர்ன்ஸ் என்ற கவிஞர் பின்வருமாறு கூறியபோது மேற்கண்ட சிந்தனையையே விளக்கப்படுத்தினார்:

நீர் அறிவீர் நீரே என்னை பாங்கற்ற மற்றும் பலத்த
இச்சைகளுடன் உருவாக்கினீர்;
அவற்றின் மாயக்கவர்ச்சியான குரலைக் கவனித்தல்
என்னைத் தவறு செய்யும்படி அடிக்கடி வழிநடத்திற்று.

மக்கள் தங்கள் பாவம் நிறைந்த செயல்களில் இருந்து பாதுகாப்புத் தேடி அடிக்கடி, "நான் மனிதன் தானே" என்று கூக்குரல் இடுவார்கள். இது, தேவன் நம்மை இவ்வாறு படைத்துள்ளதால், நாம் நமது செயல்களுக்குப் பொறுப்பாளிகள் ஆக்கப்படக்கூடாது என்று மறைமுகமாக உணர்த்துகிறது.[1]

இவ்வகையான சிந்தனையை மாற்றுவதற்கு யாக்கோபு முயற்சி செய்தார். நாம் பாவம் செய்தால், நாம் சோதிக்கப்படுவதற்கு இடம் கொடுத்தால், அதை நாம் அறிக்கையிட்டுக் கடந்துசெல்லக் கடவோமாக. தேவன் நம்மை இடறி விழச் செய்வதற்கான வழிகளைப் பற்றி நினைத்தார் என்பதுபோல் நாம் தேவன்மீது குற்றம் சாட்டாது இருப்போமாக. யாக்கோபு, "தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல" என்று கூறுகிறார் (1:13). பொல்லாங்கு செய்யும்படி சோதிக்கப்படுதலுக்குத் தேவனே

பொறுப்பாகிறார் என்று கூறுதலானது, தேவனுடைய இயல்பைப் பற்றிய நமது அறியாமையைக் காண்பிக்கிறது. தேவன் ஒருக்காலும் பொல்லாங்கை அனுபவித்திருப்பதில்லை அல்லது அவர் பொல்லாங்கினால் சோதிக்கப்பட்டிருப்பது இல்லை. எவரொருவரையும் சோதிப்பதற்கு அவர் எப்படிப் பொறுப்பாக முடியும்? அவரால் அது முடியாது!

சோதனைக்கு இணங்குதல் என்பது நமது ஆத்துமாக்களின் அழிவுக்குக் காரணமாகிறது. சோதிக்கப்படுதல் என்பது பாவமல்ல. அப்படியிருந்திருந்தால், இயேசு ஒரு பாவியாக இருந்திருப்பார், ஏனெனில் அவரைச் சாத்தான் சோதித்தான் (மத்தேயு 4). சோதிக்கப்படுதலுக்கு இணங்கிச் சாய்ந்து நீங்கள் மயங்கி வசீகரிக்கப்பட்ட தவறைச் செய்வதில்தான் பாவம் கிடக்கிறது. ஒரு பழைய பழமொழியானது, "பறவைகள் உங்கள் தலைக்கு மேல் பறப்பதைத் தடைசெய்ய உங்களால் கூடாது; ஆனால் அவைகள் உங்கள் தலைமுடியில் கூடுகட்டும்படி அவற்றை நீங்கள் அனுமதிக்கத் தேவையில்லை" என்று கூறுகிறது. நீங்கள் சோதிக்கப்பட்டிருத்தலில் இருந்து உங்களைத் தவிர்க்க முடியாது, ஆனால் நீங்கள் அதற்கு இணங்கிச் சாய வேண்டும் என்று அவசியம் இல்லை.

14 மற்றும் 15ம் வசனங்களில், பாவத்தின் கீழ்நோக்கிய வளர்ச்சி தரப்பட்டுள்ளது, இந்த வளர்ச்சி நான்கு வார்த்தைகளில் விவரிக்கப்படக் கூடும்.[2]

இச்சை (1:14)

"இச்சை" என்பது தன்னிலே ஒரு மிகச்சரியான விவரிப்பாக இருப்பதில்லை. இவ்வார்த்தை உண்மையில், "பொல்லாத இச்சை மற்றும் அதைக் கட்டுப்படுத்தத் தவறுதல்" என்று அர்த்தப்படுகிறது. இதைப் பற்றி நாம், "பொல்லாத இச்சை" என்று பேசுவதற்கான காரணம், தேவனால் தரப்பட்ட விருப்பத்தை அவர் நோக்கங்கொண்டிராத ஒரு வழியில் நிறைவேற்றுவதற்கான நமது வரம்பு கடந்த விருப்பமே ஆகும். உதாரணமாக, உண்ணுதல் என்பது சாதாரணமானதாக உள்ளது, ஆனால் பெருந்தீனி தின்னுதல் என்பது பாவமாக உள்ளது; உறக்கம் என்பது சாதாரணமானதாக உள்ளது, ஆனால் சோம்பேறித்தனம் என்பது பாவமாக உள்ளது. எபிரெயர் 13:4 கூறுகிறபடி, "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்."

வஞ்சனை (1:14)

எந்த "ஒரு பொல்லாத இச்சையும்" அது உண்மையில் இருப்பதைப் போன்று தோன்றுவது இல்லை! நாம் "இழுக்கப்பட்டு சோதிக்கப்படும்" வகையிலேயே சாத்தான் உடையணிந்து கொள்கிறான். RSV வேதாகமமானது மீன்பிடித்தலில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு ஒப்புவமையான "சிக்குண்டு" என்பதைப் பயன்படுத்துவதால், மிகவும் வரைவளைவானதாக இருக்கலாம். ஒரு மீன் நீந்திக் கொண்டு இருக்கிறது, அப்போது அது, தொங்கிய நிலையில் முன்னும் பின்னும் அசைந்தாடும் புழு ஒன்றைக் காணுகிறது. இன்னும் ஒன்றும் நடக்கவில்லை; அது சோதிக்கப்படுதல் மாத்திரம் நடக்கிறது. விரைவில் அது அந்தப் புழுவைச் சுற்றி நீந்திவருகிறது, மற்றும் இன்னும் பிரச்சனை எதுவும் இல்லை. ஆனால் அதன் உள்ளான இச்சையானது, தண்ணீரில் "முன்னும் பின்னும் அசைந்தாடும்"

புழுவைப் பற்றிய இயல்பான முன்னெச்சரிக்கையை வெற்றிகொள்ளும்போது, அது "சிக்கிவிடும்."

நமது பலங்கள் மற்றும் பலவீனங்கள் ஆகியவற்றைப் பற்றிச் சாத்தான் நன்கு அறிந்துள்ளான். நம்மைக் கவர்ந்து இழுப்பது எது, நம்மை மயக்குவது எது மற்றும் நம்மை வஞ்சிப்பது எது என்பதை அவன் அறிந்திருக்கிறான். சோதித்தல் என்பது நமக்குள் ஆழமாகத் தாக்கவில்லை என்றால், தொங்குகிற எந்த நூல் கயிறும் சோதனையாக இராது.

கீழ்ப்படியாமை (1:15)

பொல்லாத இச்சையானது கர்ப்பந்தரித்து கீழ்ப்படியாமையை (அல்லது கீழ்ப்படியாமையின் வாழ்வு நடையையாவது) பிறப்பித்தல் என்பதற்கு வேதாகமத்தில் பல உதாரணங்கள் உள்ளன. ஏவாள், விலக்கப்பட்ட கனிக்கான இச்சையுடன் போராடினாள், மற்றும் அவளது இச்சையானது கீழ்ப்படியாத தன்மையின் செயலுக்கு வழிவகுத்தது. அம்மோன் என்பவன், தாமார் என்பவள் மீது இச்சை கொண்டான், கட்டுப்படுத்தப்பட இயலாத அவனது இச்சையானது அவனை ஒரு மிருகத்தின் அளவுக்கு குறைத்துப் போட்டது. ஆகாப், பேரழிவான செயல்களைச் செய்யுமளவுக்கு, நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை விரும்பினான். பத்சேபாள் மீது தாவீது கொண்டிருந்த, கட்டுப்படுத்தமுடியாத இச்சையானது விபசாரம் மற்றும் கொலை என்ற செயல்களை விளைவித்தது.

நாம் நமது மன விருப்பத்தைப் பயிற்றுவிக்கக் கற்றுக்கொண்டு, சோதிக்கப்படுதலுக்குத் தீர்மானமான வகையில் "இல்லை!" என்று உரக்கக் கூவ வேண்டும்.

மரணம் (1:15ஆ)

15ம் வசனப்பகுதியை J. B. பிலிப்ஸ் என்பவர், "... மற்றும் பாவம் என்பது நீண்ட ஓட்டத்தில் மரணம் என்று அர்த்தப்படுகிறது" என்று மொழிபெயர்த்தார். அதுவே வேதவசனங்களின் வலியூட்டப்பட்ட போதனையாக உள்ளது: "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" (நீதிமொழிகள் 14:12); "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). பாவமானது நமது வாழ்விற்குத் தரம் எதையும் ஒருக்காலும் கூட்டுவதில்லை. பாவத்தைப் பொறுத்த மட்டில், நாம் பாவத்தில் திளைத்திருக்கும்போது, நாம் இழந்து போகிறவர்களாக இருக்கிறோம் மற்றும் நாம் ஒருக்காலும் நித்தியத்திற்கான நமது உறவுமுறைகளில் ஆதாயம் பெறுபவர்களாக இருப்பதில்லை.

முடிவுரை

சோதனை வேளையின்போது சோதிக்கப்படுதல் என்பது கனவீனமல்ல; அது கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமது வளர்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றின் பாகமாக உள்ளது. அபாயங்களைப் பற்றி நாம் அறிந்தவர்களாயிருக்கக் கற்றுக்கொண்டு, உதவிக்குத் தேவனிடத்தில் கேட்கத் தயாராக இருப்போமாக (1 கொரிந்தியர் 10:13).

குறிப்புகள்

[1]William Barclay, *The Letters of James and Peter* (Philadelphia, Pa.: Westminster Press, 1960), 58-61. [2]Warren W. Wiersbe, *Be Mature* (James) (Wheaton, Ill.: Victor Books, 1978), 37-38.

5

விசுவாசத்தின் தெரிவு (1:16-18)

ஜெர்மனி நாட்டு மக்களுக்கு 1983ம் ஆண்டு ஒரு வினோதமான ஆண்டாக இருந்திருக்க வேண்டும். அந்த ஆண்டின்போது, இரண்டு மனிதர்கள் வாழ்வு பற்றிய முற்றிலும் மாறுபட்ட இரு தத்துவங்களைக் கொண்டிருந்தபோதும், அவர்களின் பிறந்தநாட்கள் அங்கு கொண்டாடப்பட்டன. அந்த ஆண்டு, மார்ட்டின் லுத்தர் பிறப்பின் ஐந்நூறாவது ஆண்டுவிழாவையும் கார்ல் மார்க்ஸ் பிறப்பின் நூறாவது ஆண்டுவிழாவையும் குறித்தது. மார்க்ஸ் என்பவர் பொதுவுடமைத் தத்துவத்தின் தந்தையாக இருக்கிறார். அதன் முன்னேற்றமானது, பல மக்களின் மனித ஆவி (மற்றும் பெரும்பாலும் உடல்) என்பவற்றைச் சிறையிடுதலுக்கு வழிநடத்திற்று. லுத்தர் என்பவர் சீர்திருத்த இயக்கத்தின் தலைவராக இருந்து, மக்களை மத்தியகாலக் கத்தோலிக்கத்தில் இருந்து மதரீதியான சுதந்தரத்திற்கு வழிநடத்தினார்.

நமது உலகத்தில், மாறுபட்ட இரு கருத்துக்கள் இயக்கத்தில் இருப்பதை நாம் தெளிவாகக் காணுகிறோம். அந்தகாரப் பிரபுவின் அதிகாரமானது மக்களைப் பாவத்தின் அடிமைத்தனத்திற்குள் காட்டுத்தனமாக மயக்குகிறது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம், அவரது இரத்தத்தின் மூலமாக மனிதர்களை விடுதலையாக்குகிறது. ஒன்று மனிதனின் வீழ்ச்சிக்காகச் செயல்படுகிறது, அதே வேளையில் இன்னொன்று மனிதனை இரட்சிப்பதற்காகச் செயல்படுகிறது.

போட்டியிடும் இந்த வாழ்வு நடைகள் இரண்டில் ஒன்றை முடிவு செய்யும் செயலை நாம் எதிர்கொள்வோம் என்று யாக்கோபு அறிந்திருக்கிறார். ஏவுதலினால் அவர், எது மிகச்சிறப்பானது என்று அறிந்திருக்கிறார். அவர் சரியான முடிவை நம் மனதில் ஆழப்பதிய வைக்க முயற்சி செய்கிறார். அவர் நாம் விசுவாசத்தின் சரியான தேர்வை மேற்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்.

வஞ்சனையை எதிர்த்து நிற்கும் தெரிவு (1:16)

யாக்கோபு, வஞ்சிக்கப்படாதபடிக்கு நம்மை எச்சரிப்பதன் மூலம், முடிவெடுத்தலில் நமக்கு உதவுகிறார் (1:16). உடனடியாக நாம், "எதைக் குறித்து வஞ்சிக்கப்படுதல்?" என்று கேட்கிறோம். முந்திய வசனங்களில் இருந்து இரண்டு விஷயங்கள் பட்டியலிடப்பட முடியும்: புறம்பான சோதனைகளின் நோக்கங்கள் (1:2-4) மற்றும் உள்ளாகச் சோதிக்கப்படுதலின் ஆதாரமூலம் (1:13-15). ஆனால், யாக்கோபு தாம் கூறவிருப்பதை முன்னதாகச் சுட்டிக்காண்பிக்கிறார் என்பது காணப்பட முடியும். வஞ்சிக்கப்படுதல் பற்றிய இந்த எச்சரிக்கை, ஒரு குறிப்பிட்ட கருத்திற்கு முகவுரையாக வேதவசனத்தில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 6:9, 10; கலாத்தியர் 6:7, 8).

வஞ்சிக்கப்படுதல் பற்றி எச்சரிக்கப்பட்டுள்ள "பிரியமான சகோதரர்" என்பது இந்த வசனத்தில் புரிந்துணரப்பட வேண்டிய குறிப்பான கருத்துக்களில் ஒன்றாக உள்ளது. வேறு எவரைக் காட்டிலும் அதிகமாக ஒரு விசுவாசியை

வஞ்சிப்பதற்குச் சாத்தான் மிகவும் கடினமாக செயல்படுவான். கிறிஸ்தவர்கள் வஞ்சிக்கப்படக் கூடும்படிக்கு தவறான முடிவுகளை - மேற்கொள்ளக் கூடும்.

தேவனுடைய நற்தன்மையைப் புரிந்துணருதலுக்கான தெரிவு (1:17)

சோதிக்கப்படுதலுக்கு உட்படுதல், சாத்தானைப் பின்பற்றுதல் ஆகியவை நமக்கு நன்மையான சிலவிஷயங்களாகத் திரும்பும் என்று நம்புதலுக்குள் நாம் வஞ்சிக்கப்பட்டு விடக்கூடாது. "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (1:17) என்ற காரணத்தினால் நாம் இதை அறிய முடியும். இது யாக்கோபின் முந்திய கருத்தை வலியுறுத்துகிறது என்பதையும் நாம் உணர்ந்தறிய வேண்டியதாக உள்ளது. தேவன் நன்மையான விஷயங்களை மாத்திரமே கொடுக்கிறார் என்பதால், 13ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அழிவுக்கேதுவான சோதிக்கப்படுதலை அவர் தர இயலாது. தேவன் கொடுக்கிற விஷயங்கள் இரக்கம் மற்றும் உதவிநிறைந்த தன்மை ஆகியவற்றினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனிதர் பெரும்பாலும், தாம் செய்ய முடிபவற்றால் நிறைந்தவர்களாகி, தேவனை வாழ்க்கையில் இருந்து வெளியே விட்டு விட முயற்சி செய்கின்றனர். டெக்ஸாஸ் மாகாணத்தின் டைலர் என்ற இடத்தில் உள்ள ரோஜாத் தோட்டங்கள், டெக்ஸாஸ் மலை நாட்டின்; நீலவண்ணக் குல்லாய்கள், மலர்கள், ஆக்லஹாமா மாகாணத்திலுள்ள மஸ்கோஜீ நகரின் அசாலீக்கள் அல்லது ஓசார்க் மலைகளில் உள்ள பசுங்காடுகள் ஆகியவற்றைக் காண்பதற்குப் பலமைல்கள் கார் ஓட்டிச்செல்வார். ஆனால் தேவனின்றி ஒரு மலரோ, மலர்க்கொத்தோ அல்லது இலையோ இராது என்பதை அவர் [மனிதர்] புரிந்துணருவதாகக் காணப்படுவ தில்லை.

சிலர் இவ்வசனத்தை, "நன்மையான" ஈவுகளுக்கும் "பூரணமான" வரங்களுக்கும் இடையில் வித்தியாசப்படுத்துவதன் மூலம் இந்த வசனத்தை நீட்டியுரைப்பார்கள். எல்லா மக்களும் பகிர்ந்து கொள்ளக்கூடிய (உணவு, காற்று, தண்ணீர், முதலிய) ஈவுகள் "நன்மையான ஈவுகளாக" உள்ளன, மற்றும் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்குத் தரப்படுகிற ஆசீர்வாதங்கள் "பூரணமான" வரங்களாக உள்ளன என்பதாகக் காண்பார்கள். தேவன் தருகிற "வரங்களைப்" பற்றிய இந்த வித்தியாசப்படுத்துதல் உண்மையாக இருக்கலாம் என்று இருக்கையில், இது இங்கு யாக்கோபு ஏற்படுத்தும் கருத்துக்கு அப்பால் செல்லுவதாக உள்ளது. தேவனுடைய இயல்பானது அவரைச் சோதித்தலில் ஈடுபடுவதில் இருந்து தடைசெய்கிறது என்பதை நாம் காணவேண்டும் என்று யாக்கோபு விரும்புகிறார் (1:13, 17). மேலும், தேவன் ஒருவர் மாத்திரமே நன்மையான ஈவுகளையும் பூரணமான வரங்களையும் கொடுப்பவராக இருக்கிறார் (1:17). அவர் நமக்கு ஒரு வீழ்ச்சியை ஏற்பாடு செய்து, ஒருநாள் நம்மை ஆசீர்வதித்து மற்றும் அடுத்த நாளில் நம்மைச் சோதிக்க விரும்புகிறவர் அல்ல, அவரிடத்தில் "யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (1:17; NIV) ஆனால் அவர் நமக்கு நன்மையான மற்றும் பூரணமான வரங்களைத்

தொடர்ந்து அளிக்கிறார். நாம் தேவனைத் தெரிவு செய்துகொள்ளும்போது, நாம் மிகச்சிறந்தவரைத் தெரிவுசெய்திருக் கிறோம் என்பது நமது சிந்தைகளில் பதிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

தேவனுடைய கிருபையை நினைவுகூருவதற்கான தெரிவு (1:18)

மேற்சொல்லப்பட்ட கருத்தை மறுவலியூட்டுவதற்கு, தேவன் நமக்கு ஏற்கனவே செய்துள்ளவற்றை யாக்கோபு கூறுகிறார். தேவன் தங்களுக்குச் செய்துள்ளவற்றை மக்கள் நினைவுகூரும் போது, விசுவாச ஓட்டத்தைத் தெரிவு செய்வதற்கான அவர்களின் முடிவு சுலபமாக மேற்கொள்ளப்படும் என்பதே அவரது [யாக்கோபின்] வாதமாக இருக்க வேண்டும்.

கீழ்ப்படிதல் உள்ள விசுவாசிக்குத் தேவன் மேற்கொண்டுள்ள மூன்று செயல்களை யாக்கோபு பட்டியலிடுகிறார் (1:18).

முதலாவது, "அவர் தேர்ந்து கொள்கிறார்" - KJV வேதாகமமானது, "அவர் தமது சொந்த சித்தங்கொண்டு" என்று கூறுமிடத்தில் சற்று அதிகமாக விளக்கமளிப்பதாக உள்ளது. தேவன் தமது சித்தத்தில் [நம்மை] வைத்திருந்து, எல்லாம் தயாரானபோது, மனிதனை இரட்சிக்கும் செயல்முறையைத் தொடங்கினார் (கலாத்தியர் 4:4, 5). எல்லா மனிதர்களுக்கும் இரட்சிப்பை அளித்தல் என்பது, எப்போதுமே தேவனுடைய விருப்ப நோக்கமாக இருந்துள்ளது (எபேசியர் 1:4, 5; 1 யோவான் 2:2; மத்தேயு 11:28). தேவன் சித்தம் கொண்டு இரட்சிப்பை அளித்தார் என்பதைத் தவிர, மனிதரை இரட்சிப்பதற்கு, வற்புறுத்தும் எந்தக் காரணத்தையும் அவர் கொண்டிருக்கவில்லை.

இரண்டாவது, அவர் "நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்." யாக்கோபு இவ்விடத்தில் "புதிய பிறப்பு" பற்றிப் பேசுகிறார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை (யோவான் 3:5; தீத்து 3:5). இந்த வேளையில்தான், பாவத்தினால் சபிக்கப்பட்ட பழைய மனிதன், இயேசுவின் மரணத்திற்குள் அடக்கம் பண்ணப்பட்டு, ஒரு புதிய மனிதனாக (ரோமர் 6:4) உயிர்பிக்கப் (ஜநிப்பிக்கப்) படுகிறான். "சத்தியம் வசனம்" என்பதே, நம்மை இந்தப் புதியபிறப்பை நோக்கி நகர்த்துகிறது, அதைப் பற்றி நமக்குப் போதிக்கிறது. வில்லியம் பார்க்ளே என்பவர், "சுவிசேஷம்தான் இந்த 'சத்திய வசனமாக' உள்ளது; …" என்று மிகவும் எளிமையாகக் கூறினார்.[1] இந்தக் கூற்றானது, வேதவசனம் நமக்குக் கூறுவதுடன் ஒத்துப் போகிறது (ரோமர் 1:16; யாக்கோபு 1:21; 1 பேதுரு 1:23).

மூன்றாவது, "தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு" அவரே இவை எல்லாவற்றையும் செய்தார். முதல் இரண்டு சொற்றொடர்கள் இந்த மூன்றாவது சொற்றொடரைச் சுட்டிக்காண்பிக்கின்றன. கிறிஸ்தவர், தேவன் படைத்த யாவற்றிலும் "முதற்பலன்" வகையாக இருக்கிறார். "முதற் பலன்கள்" என்பவை பஸ்கா பண்டிகையின்போது காணிக்கையாக அளிக்கப்பட்டன (லேவியராகமம் 23:10; உபாகமம் 26:2), ஏனெனில் அவைகள் மிகவும் சிறந்தவைகளாக இருந்தன. பழைய ஏற்பாட்டின் இந்தக் கருத்தானது புதிய ஏற்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது, மற்றும் இந்தச் சொல்விளக்கம் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது

(1 கொரிந்தியர் 15:20; 16:15; வெளிப்படுத்தின விசேஷம் 14:4). யாக்கோபு நிருபத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளபடியாக இந்தச் சொல்விளக்கமானது, ஒரு இரட்டை அர்த்தத்தைக் கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது. முதலாவது இது, கிறிஸ்தவர் தேவன் படைத்த படைப்புகள் யாவற்றிலும் மிகவும் சிறந்தவராக இருக்கின்றார் என்பதாகும். இரண்டாவது, இது இன்னும் அதிகமான பலன்கள் தொடரும் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.

முடிவுரை

பிசாசானவனின் சோதிக்கப்படுதல்களினால் நாம் எதிர்கொள்ளப் படும்போது, தேவன் நமக்கு ஏற்கனவே செய்துள்ளவற்றை நாம் நினைவு கூருவோமாக. நாம் அவரது படைப்புகளில் முதன்மையானவர்களாக இருக்கும்படிக்கு "மறுபடி பிறந்தவர்களாக" இருப்பதற்காக, அவரால் நாம் "தெரிந்துகொள்ளப்பட்டோம்."

குறிப்பு

[1]William Barclay, *The Letters of James and Peter* (Philadelphia, Pa.: Westminster Press, 1960), 63.

6

நாம் விசுவாசிக்கிறபடியே நடத்தல் (1:19-27)

சாலொமோன், பிரசங்கி 6ம் அதிகாரத்தை, ஊடுருவும் வார்த்தைகளுடன் தொடங்குகிறார்: "சூரியனுக்குக் கீழே நான் கண்ட வேறொரு தீங்குமுண்டு; அது மனுஷருக்குள்ளே பெரும்பாலும் நடந்துவருகிறது" (பிரசங்கி 6:1). நமது படிப்பை இந்த வார்த்தைகளுடன் அறிமுகப்படுத்துதல் ஏற்புடையதாகக் காணப்படுகிறது, ஏனெனில் பாவம் என்பது தற்போது நிலவுகிறது, மற்றும் அது கிறிஸ்துவின் சரீரத்தினுள் சபையில் யாக்கோபின் காலத்தில் இருந்தே நிலவிவருகிறது. இந்தப் பொல்லாங்கானது நம்மைச் சுற்றிலும் உள்ள உலகத்தில் நமது செயல்திறனை முடக்கியுள்ளது. இது, நாம் அறிந்துள்ள மக்கள் மீது நமது செயல்தாக்கத்தை ஒன்றுமற்றதாக்குகிறது மற்றும் நமது செல்வாக்கைப் பயனற்றதாக்குகிறது. விவாக இரத்து என்பது கணவர்கள் மற்றும் மனைவியர்களுக்கு இடையிலான பிரச்சனையல்ல, ஆனால் நமது படிப்பு மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துல் ஆகியவற்றிற்கு இடையிலான பிரச்சனையாக, நமது கேள்விப்படுதல் மற்றும் நமது செயல்கள் ஆகியவற்றிற்கு இடையிலான பிரச்சனையாக, நாம் எதை விசுவாசிக்கிறோம் மற்றும் நாம் எவ்வாறு நடந்துகொள்கிறோம் என்பவற்றிற்கு இடையிலான பிரச்சனையாக உள்ளது. யாக்கோபு ஏற்கனவே, பரீட்சைகள் மற்றும் சோதிக்கப்படுதல்கள் ஆகியவற்றின் பிரச்சனைகளைக் கையாண்டிருக்கிறார், ஆனால் இப்போது அவர் தமது நிருபத்தின் பின்வரும் அடிப்படை ஆய்வுக்கருத்தை விரிவாக்கம் செய்கிறார்: *விசுவாசம் என்பது நாம் வாழும் மற்றும் செயல்படும் வழியில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது.*

ஒரு விஷயத்தை விசுவாசித்து ஆனால் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட இன்னொரு விஷயத்தை நடைமுறைப் படுத்துவதாகக் கூறுகிறவர்களை நாம் உற்றுக் கவனிக்கும்போது, அவர்களை மாய்மாலக்காரர்கள் என்று வழக்கமாக நாம் அழைக்கிறோம். நமது ஆங்கில வார்த்தையான "hypocrisy" ["மாய்மாலம்"] என்பது, மேடையில் ஒரு பாகத்தை அல்லது பாத்திரத்தை நடிப்பதைக் குறிப்பிடும் ஒரு கிரேக்க வார்த்தையில் இருந்து தேடிக்கண்டுபிடிக்கப்பட முடியும். மதத்தில் "மாய்மாலம்" என்பது மிகவும் அடிக்கடி கண்டறியப்படுவதாகக் காணப்படுவது ஏன் என்பதை எவரொருவரும் விளக்கியுரைக்க இயலாது. ஞாயிற்றுக்கிழமை யன்று சபை ஆராதனைக்குச் சென்று எல்லா வழியிலும் பங்கேற்றும், வாரத்தின் மற்ற ஆறு நாட்களிலும் பாவம் நிறைந்த வாழ்வை வாழுகிற யாராவது ஒருவரைப் பற்றி ஏறக்குறைய ஒவ்வொருவரும் அறிந்து இருக்கிறோம். தங்கள் வாழ்வில் எவ்வித கீழ்ப்படிதலும் இன்றி உதடுகளினால் மாத்திரம் உறுதிப்படுத்துகிற மக்கள் மாய்மாலக்காரர்கள் என்று இயேசு கூறினார் (லூக்கா 6:46).

உண்மையான விசுவாசமானது, ஒருவர் தமது சிந்தனை, நமது நிலைப்பாடு, தமது மொழி, தமது பழக்கவழக்கங்கள், தமது நண்பர்களைத் தெரிவு செய்துகொள்ளுதல் முதலியவற்றில் வேறுபாட்டை ஏற்படுத்துகிறது என்பதை

யாக்கோபு எழுதிய நிருபம் தெளிவாக்குகிறது. ஆவிக்குரிய தன்மையில் நமது உரிமைகோருதல்கள் பொருட்படுத்தப்படுவதில்லை, ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்படிக்கு நமது வாழ்வைக் கட்டுப்படுத்துதலே பொருட்படுத்தப் படக்கூடியதாக உள்ளது.

1:19-27ல், நமது விசுவாசம் நாம் வாழும் வழியில் வேறுபாட்டை ஏற்படுத்தும் மூன்று பகுதிகள் பற்றி யாக்கோபு மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடுகிறார்.

கோபமும் நாவும் (1:19, 20)

கோபத்தைக் கட்டுப்படுத்துவதில் ஒருவரின் திறனும் அவரது நாவும், அவரது விசுவாசம் மற்றும் அவரது வாழ்வு ஆகியவை இசைவாக உள்ளனவா என்பதற்கு மிகச்சிறந்த சோதனைகளில் ஒன்றாக உள்ளது. உங்களால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடிகிறதா? நீங்கள் உங்கள் நாவை எப்போது அடக்க வேண்டும் என்று அறிந்திருக்கிறீர்களா? உக்கிரமான கோபமும் கூர்மையான நாவும் கொண்டுள்ளதாக அறியப்பட்டுள்ள ஒரு நபர், கிறிஸ்தவர் என்ற வகையில் தமது புகழ்ச்சியை மேம்படுத்தமாட்டார். அதனால்தான் யாக்கோபு, "ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்; மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே" என்று கூறுகிறார் (1:19, 20).

யாக்கோபு, இந்தப் பண்புகள் யாவற்றையும் ஒரு சூழ்நிலைக்குள் ஒன்றாகக் கட்டுகிறார். ஒரு நபர் உற்றுக் கவனிக்க வேண்டியவேளையில், கோபம் கொள்ளுவதையும் பேசத் தொடங்குவதையும் நீங்கள் எவ்வளவு அடிக்கடி கண்டிருக்கிறீர்கள்? இந்தத் தோல்வியானது, மதரீதியான சந்தர்ப்பப்பொருளில் நடைபெறும்போது, விசேஷமான குறிப்பை மேற்கொள்ளுகிறது. நூற்றாண்டுகளினூடே, கிறிஸ்தவர்கள் ஏளனத்திற்கும் பழிப்புரைக்கும் ஆளாகியுள்ளனர் மற்றும் அவ்வேளைகளில் எப்போதும் அவர்கள் கிறிஸ்துவைப் போன்ற வகையில் பதில் செயல் செய்திருப்பதில்லை. நமது சொந்த, மறுகட்டுமான இயக்கம் பற்றியும் அதைக்குறித்து அடிக்கடி ஏற்படுத்தப்பட்ட விமர்சனத்தைப் பற்றியும் நினைத்துப் பாருங்கள். நாம் விமர்சனத்திற்கு உள்ளாகும்போது எவ்வாறு பதில் செயல் செய்கிறோம்? அது நம்மை கோபப்பட வைக்கிறதா? மற்றும் அவர்களை "பேசாது" இருக்க வேண்டும் என்று நாம் கூறும்படி நம்மை சோதிக்கிறதா? "கடுங்கோபத்தோடு கூச்சலிடுதல்" மற்றும் "கோபத்தை வெளியேற்றுதல்" என்பவை, இயல்பான மற்றும் செய்வதற்குச் சுலபமான விஷயமாக இருக்கலாம், ஆனால் செய்வதற்கு அவை சரியான விஷயங்கள் அல்ல. நமது விசுவாசம் உண்மையிலேயே ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தினால், நாம் "கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும்" இருப்போம் என்று யாக்கோபு கூறுகிறார் (1:19).

தலையும் இருதயமும் (1:21)

சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறபோது, பல்வேறு பதில் செயல்கள் வருகின்றன. அத்தேனே நகரத்தின் தத்துவவாதிகள் "ஏளனம்" செய்தனர் (நடபடிகள் 17), ஆனால் பெந்தெகோஸ்தே நாளன்று ஏறக்குறைய மூவாயிரம் பேர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிந்தனர் (நடபடிகள் 2). "நற்செய்தி" அறிவிக்கப்படும்போது ஏன் இப்படிப்பட்ட வேறுபாடு உள்ளது? வேறுபாடு என்பது சுவிசேஷத்தில் இருப்பதில்லை; ஆனால் மண்வகைகள் பற்றிய உவமையில் இயேசு போதித்தது போல (லூக்கா 8:4-15) வேறுபாடு என்பது வசனத்தைக் கேள்விப்படுபவர்களின் இருதயங்களில் உள்ளது.

"நடைமுறைக் கிறிஸ்தவம்" பற்றிய இந்த நிருபத்தில் யாக்கோபு, கிறிஸ்தவர்களின் அன்றாட வாழ்வில் வசனத்தினால் ஏற்படுத்தப்படும் வேறுபாட்டின் மீதான வலியுறுத்தத்துடன் இந்தப் பாடக்கருத்தைக் கையாளுகிறார். தேவனுடைய வசனத்தை ஏற்றுக்கொள்ளுதல் என்பதே 1:21ன் பாடக்கருத்தாக உள்ளது. அந்த வசனமானது "இரட்சிக்க" வல்லமையுள்ளதாக இருக்கிறது, ஆனால் கிறிஸ்தவரின் இருதயத்தில் அது "நாட்டப்பட" (ஆழமாக வேரூன்ற) அவர் அனுமதித்தால் மாத்திரமே, அது அந்த வல்லமையைக் கொண்டிருக்கும்.

வசனத்தை இவ்வாறு ஏற்றுக்கொள்ளக் கூடிய இருதயத்தை உருவாக்குதல் பற்றி நாம் எவ்வாறு நடந்துகொள்கிறோம்? இவ்வசனத்தில், வசனத்தைத் தக்கவகையிலும் நல்ல செயல்விளைவுடனும் ஏற்றுக்கொள்ளும் இருதய மானது, அத்தியாவசியமான இரண்டு பண்புகளைக் கொண்டுள்ளதாக அடையாளப்படுத்தப்படுகிறது. முதலாவது அது, "எல்லாவித அழுக்கையும், கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டதாக" இருக்க வேண்டும். சிலருடைய இருதயங்களில் இடம் இல்லாததால், அவர்கள், வசனம் "நடப்படுவதை" அனுமதிக்கத் தவறுகின்றனர். வாழ்வின் பழைய வழியில் இருந்து அவர்கள் மனந்திரும்பியது முழுமையானதாக இருப்பதில்லை. ஒரு நபர், பழைய வாழ்வில் எஞ்சியுள்ள பாவம் நிறைந்த தன்மை யாவற்றையும் ஒழித்துப் போடாத வரையில், கிறிஸ்தவப் பண்பையும் ஒப்புக்கொடுத்தலையும் உண்டாக்குவதில் சுவிசேஷமானது அதன் முழுச் செயல்விளைவைக் கொண்டிராது. இரண்டாவது, சுவிசேஷத்தின் கடிந்துகொள்ளுதலையும் ஆலோசனையையும் ஒருவர் "தாழ்மையாக" ஏற்றுக்கொள்ள வேண்டும். சில கிறிஸ்தவர்கள் செய்ய விரும்புகிற பாவத்தை வேதாகமம் கடிந்து கொள்ளும்போது, அவர்கள் கோபம் கொள்கின்றனர் மற்றும் அந்த விஷயத்தைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்த பிரசங்கியார் அல்லது போதகர் மீது அவர்கள் சீற்றம் கொள்கின்றனர். ஒரு கிறிஸ்தவர் அவ்விதமான வழியில் இருந்து வெளியேறி வசனத்தின் மூலமாகத் தேவன் தமது வாழ்வை நடத்திச் செல்ல அனுமதிக்காத வரையில், அவர் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்க முடியாது. தூய்மையும், தாழ்மையுமே நல்ல மற்றும் பலன் நிறைந்த இருதயத்தின் கூறுகளாக உள்ளன. அந்தப் பண்புகளைக் கொண்டுள்ள இருதயமுடைய எந்தத் தனிநபரும் ஆவிக்குரிய பலத்திலும் ஒழுக்கத்திலும் வளருவார்.

நடத்தலும் செயல்படுதலும்
(1:22-27)

சுவிசேஷத்தின் சத்தியங்கள் பயன் நிறைந்தவைகளாக இருப்பதற்கு, அவைகள் உறுதியான செயல்பாடுகளாக மாற்றப்பட வேண்டும். ஆராதனை ஊழியத்தில் கலந்து கொள்ளுதல், முக்கியமான சத்தியத்திற்குச் சுருக்கமான கவனத்தைக் கொடுத்தல் மூலம் ஒரு பிரசங்கத்தைக் கவனித்தல் ஆகியவற்றின் விளைவாக, அவை ஒருவருடைய உண்மையான நடக்கையில் வேறுபாட்டை ஏற்படுத்தவில்லை என்றால், அதினால் பயன் எதுவும் இல்லை. நான் ஒரு ஊழியக்காரனாகப் பணிசெய்த ஒரு சபைக்குழுமத்தில், உரத்த சப்தமான, நேரடியான, குதிங்கால்களால் தரையை மிதிக்கச் செய்கிற மற்றும் "நரக அக்கினி, கந்தகம்" போன்ற இயல்பும் கொண்ட பிரசங்கங்களை விரும்பிய ஒரு மனிதரைச் சந்தித்தேன். அவர் பின்வாசலுக்கு வந்து, அவ்வகையான பிரசங்கமானது தம்மை நேரடியாகத் தாக்கினாலும் அதைத் தாம் எவ்வளவாக விரும்பினார் என்பது பற்றிக் கூறுவார். "மாற்றத்திற்கான ஆதாரம் எதையும் அவர் ஒருக்காலும் காட்சிப்படுத்தாது இருக்கும்போது, அவர் ஏன் அவ்வகையான பிரசங்கத்தை விரும்புகிறார்?" என்ற கேள்வி அடிக்கடி என் மனதில் குறுக்கிட்டது. ஒரு நாள் நான் அதைக் கண்டுபிடித்தேன்; அவர் தமது கழுத்தை வளைத்துக் குனிந்து, அவ்வகையான பிரசங்கத்தை எடுத்துக்கொண்டால், தாம் சரியாகி விடுவதாக நினைத்தார். யாக்கோபு மிகச்சரியாக இதையே, "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" என்று கூறுகிறார் (1:22).

வசனத்திற்கு நாம் கீழ்ப்படிதலின் அவசியத்தை விளக்கியுரைப்பதில், யாக்கோபு மூன்று கருத்துக்களை ஏற்படுத்துகிறார். முதலாவது, 23 மற்றும் 24ம் வசனங்களில் அவர், கேள்விப்பட்டு மறந்துபோகிற மனிதரின் இயல்பை விவரிக்கிறார். கண்ணாடியில் தமது முகத்தைப் பார்த்துவிட்டு "அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுகிற" ஒரு தனிநபரைப் பற்றி நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? வசனத்தைக் கேள்விப்பட்டு உடனடியாக அதை மறந்து விடுகிற ஒருவரைப் பற்றிக் கற்பனை செய்வதில் யாக்கோபு சிரமம் கொண்டிருக்க வேண்டும். மாய்மாலக்காரர் கவனிக்கிறார், சம்மதித்துத் தலை அசைக்கிறார், மற்றும் சத்தியத்தைத் தாம் ஒப்புக்கொண்டதை அறிவிக்கவும் செய்கிறார், ஆனால் பின்பு அவர் தாம் விரும்பியபடியெல்லாம் மிகச்சரியாக வாழ்வதற்கு திரும்பிச் செல்லுகிறார், அவ்வாறு செய்வதில் அவர் அப்போதுதான் கேள்விப்பட்டிருந்த சத்தியத்தைப் புறக்கணிக்க வேண்டியிருந்தாலும் அவர் அதைச் செய்கிறார். இரண்டாவது, 25ம் வசனத்தில் யாக்கோபு, வசனத்திற்கு கீழ்ப்படிபவர்களுக்குத் தேவனால் ஒரு ஆசீர்வாதம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது என்று கூறுகிறார். 21ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரட்சிப்பு என்பதே இந்த ஆசீர்வாதமாக இருக்கும் என்பது தெளிவாகக் காணப்படும். கடைசியாக யாக்கோபு, கீழ்ப்படிதலின் இரு பகுதிகளுடன் - அவர்கள் கேள்விப்படுதல் மற்றும் செயல்படுதல் ஆகியவற்றிற்கான இரு அறைகூவல்களுடன் - முடிக்கிறார். முதலாவது 26ம் வசனத்தில் யாக்கோபு, "உங்கள் நாவின்மீது நீங்கள் இறுக்கமாக ஆட்சிசெலுத்துகிறீர்களா?" என்று கேட்கிறார். அவர்களுக்கு நாவு ஏற்படுத்திய

மற்றும் நமக்கு அது ஏற்படுத்துகிற பிரச்சனைகளைப் பற்றி யாக்கோபு அறிந்திருக்கிறார்; ஆகவே, நமது விசுவாசமானது நமது நாவுக்குச் சில விஷயங்களைச் செய்ய வேண்டும் என்று திரும்பத் திரும்பஅவர் வலியுறுத்துகிறார். இரண்டாவது அவர், 26ம் வசனத்தில், நாம் தேவையில் உள்ளவர்களைச் செயல்துடிப்புடன் கவனிக்கிறோமா என்று அறிய விரும்புகிறார். தேவையை நாம் மறந்து விடுமளவுக்கு, மற்றவர்களுக்கு "எவ்வாறு" மற்றும் "ஏன்" உதவ வேண்டும் என்பது பற்றி நமது சகோதர ஐக்கியத்துவமானது மிகவும் அதிகமாக விவாதித்து இருக்கிறது! தேவையில் உள்ளவர்களை நாம் புறக்கணித்தால், நாம் மிகவும் மோசமான மாய்மாலக்காரர்களாக இருப்போம், ஏனென்றால் அவர்களைக் குறித்து நமது தேவன் எப்போதும் அக்கறையுள்ளவராக இருந்துள்ளார். மக்களின் தேவைகளைச் சந்திப்பதில் நாம் இயேசுவின் உதாரணத்தைப் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். இயேசு மக்களை நேசித்து அவர்களின் தேவைகளைச் சந்திப்பதற்குத் தமது வழியிலிருந்து வெளியே சென்றார். செயல்படுதலில் அவரது அன்பானது, அவர் பிரசங்கித்த செய்தியைச் சாதகமாகக் கேள்விப்படுதலை ஆதாயப்படுத்தியது. அதைக்காட்டிலும் குறைவானவற்றை நாம் செய்ய இயலாது.

முடிவுரை

பழங்கால இஸ்ரவேல் மக்கள், தங்கள் மதத்தை சடங்கு மற்றும் சடங்காச்சாரமாகக் குறைத்துப் போட்டது என்பது அவர்களின் மாபெரும் பாவங்களில் ஒன்றாக இருந்தது. அவர்கள் நடைமுறை விஷயங்களைப் புறக்கணித்து அதன் [மதத்தின்] புறம்பான வடிவங்களினூடாக மாத்திரம் சென்றனர். தீர்க்கதரிசியான மீகா, அதைப் பற்றிய யெகோவாவின் மனப்பதிவைக் கொடுத்தார்:

> *என்னத்தைக்கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில், வந்து, உன்னதமான தேவனுக்கு முன்பாகப்பணிந்துகொள்வேன்? தகனபலிகளைக் கொண்டும், ஒரு வயது கன்றுக்குட்டிகளைக்கொண்டும் அவர் சந்நிதியில் வரவேண்டுமோ? ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின் பேரிலும் எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின்பேரிலும், கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? என் அக்கிரமத்தைப் போக்க என் முதற்பேறானவனையும், என் ஆத்துமாவின் பாவத்தைப் போக்க என் கர்ப்பக்கனியையும் கொடுக்க வேண்டுமோ? மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் (மீகா 6:6-8).*

தேவனுடைய எண்ணப்போக்கு மாறியிருப்பதில்லை; அவர் இன்னமும் மாய்மாலத்தை வெறுக்கிறார். நாம் நமது விசுவாசத்தை வாழ வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.

7

விசுவாசம் வற்புறுத்திக் கேட்கிற வகையில் மக்களை நடத்துதல் (2:1-13)

தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள், தாங்கள் விசுவாசிப்பதாகக் கூறுகின்றவற்றின்படியே வாழ வேண்டும். கிறிஸ்தவர்களின் வாழ்வு மற்றும் அவர்களின் விசுவாசம் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள உறவைக் காண்பிக்க, யாக்கோபு ஒரு பரீட்சையைக் கொடுக்கிறார். ஒரு செல்வந்தர் மற்றும் ஒரு ஏழை ஆகிய இரு பார்வையாளர்கள் ஆராதனைக்குச் செல்லுதலை அவர் சித்தரிக்கிறார். அவர்கள் ஒவ்வொருவரும் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என்று கவனிக்கும்படி வாசகர்களிடத்தில் அவர் கேட்டுக் கொள்கிறார். நாம் அறிந்திராத மற்ற மக்களிடத்திலும்கூட நாம் நடந்து கொள்ளும் வகையானது, நாம் தேவனைப் பற்றி விசுவாசிப்பது என்ன என்பதற்கான ஒரு குறிப்பைத் தருகிறது. நாம் நமது மனித உறவுகளை, நமது பிதாவினிடத்தில் உள்ள நமது ஐக்கியத்திலிருந்து பிரிக்க முடியாது. யோவான் "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" என்று பொருட்செறியுள்ள வகையில் கூறுகிறார் *(1 யோவான் 4:20).*

புத்திகூறுதல் (2:1)

யாக்கோபுவின் பாடம் பின்வரும் புத்திகூறுதலுடன் தொடங்குகிறது: *"என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக்கொள்ளாதிருப்பீர்களாக" (2:1).* இந்த நிருபத்தின் கட்டளை இயல்புக்கு வரிசைப் பொருத்தமாக, இந்தக் கூற்றானது ஒருகட்டளை என்ற வகையில் வாசிக்கப்பட வேண்டும். பிலிப்ஸ் என்பவர் இதை, "என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்துடன் பட்சபாதத்தை இணைக்க ஒருபோதும் முயற்சி செய்யாதிருங்கள்" என்று மொழிபெயர்க்கிறார். NEB வேதாகமத்தில், "என் சகோதரரே, மகிமையில் ஆளுகை செய்யும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் நீங்கள் விசுவாசம் கொண்டிருக்கையில், நீங்கள் ஒருக்காலும் பட்சபாதம் காண்பிக்கக் கூடாது" என்று வாசிக்கப்படுகிறது. இது அதிகம் இளக்கமான வசனமாக இருக்கலாம் என்றிருக்கையில், TEV வேதாகமம், யாக்கோபுவின் அர்த்தத்திற்கு மிகவும் நெருக்கமாக வரலாம்: "என் சகோதரரே! மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மீது விசுவாசம் கொண்டுள்ளவர்கள் என்ற வகையில், உங்கள் வாழ்வில் ஒருக்காலும்

நீங்கள், மக்களை அவர்களின் புறம்பான தோற்றத்தின் காரணமாக, மாறுபட்ட வகைகளில் நடத்தக் கூடாது.”

அடுத்த பல வசனங்களில் உள்ள ஒவ்வொரு விஷயமும் இந்தக் கட்டளையின் மீதே விரிவாக உரைக்கப்பட்டுள்ளது.

உதாரணம் (2:2-4)

2 முதல் 4 வரையிலான வசனங்கள், கிறிஸ்தவர்களின் சபை கூடுகைகளில் இருக்கைக்கு வழி நடத்துபவர்களுக்கு ஒழுக்க நெறிவகை ஒன்றை அளிக்கிறது. தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் சபைகூடுகைகளுக்கு பார்வையாளர்கள் வந்தனர் என்று யூகித்துக் கொள்ளுதல் பாதுகாப்பானதாக இருக்கும். யாக்கோபு இங்கு குறிப்பிடும் நடத்துதலைத் தாமே நேரில் கண்டிருக்கலாம். பார்வையாளர்கள் கிறிஸ்தவர்களா அல்லது கிறிஸ்தவரல்லாதவர்களா என்று யாக்கோபு கூறுவதில்லை மற்றும் அது ஒரு பொருட்டாக இருப்பதில்லை. இங்கு செயல்விளக்கப்படுத்தப்பட்டுள்ள எண்ணப்போக்குகள், இவ்விருவரின் விஷயத்திலுமே தவறானதாக இருந்தன.

ஆனால் செல்வந்தரான மனிதரைப் பற்றி யாக்கோபு சில விஷயங்களைக் கூறுகிறார். அந்த மனிதர் பொன்மோதிரமும் நேர்த்தியான உடைகளும் உடுத்தி யிருந்தார் (வசனம் 2), இது அவர் ஒரு பிரபுவாக அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலராக இருந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிப்பதாகக் காணப்படும். அவர் செல்வந்தராக இருந்ததோடு, அதிகாரம் நிறைந்தவராகவும் காணப்படுகிறார்.

தவறாக வழிநடத்தப்பட்டிருந்த இந்த சகோதரர்கள் என்ன நினைத்துக் கொண்டிருந்தனர்? நேர்த்தியான உடைகள் நேர்த்தியான மனிதரின் அடையாளம் என்றும், கந்தலான உடைகள் அவற்றை அணிந்திருப்பவரின் பண்பைப் பிரதிபலிக்கின்றன என்றும் அவர்கள் நினைத்தார்களா? செல்வம் என்பது ஒரு மனிதரின் மதிப்பிற்கு வழிகாட்டி என்று அவர்கள் நினைத்தார்களா? “ஜாதி முறைமை” என்பது இயேசுவுக்கு ஏற்புடையதாக இருக்கும் என்று எப்படி ஒருவர் நினைத்துப் பார்க்க முடியும்?

அந்த முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களிடத்தில் நாம் கடுமையாக இருப்பதற்கு முன்னால், நாம் எப்போதாவது அதே வகையான சிந்தனை மற்றும் செயல்பாடுகளினால் குற்றப்பட்டு இருக்கிறோமா என்று நம்மையே நாம் கேட்டுக்கொள்வோமாக. விரும்பத்தக்கவர்கள் என்ற நிலையிலிருந்து குறைவுபடுபவர்களாக நாம் யாரைக் கருதுகிறோமோ, அவர்களால் நமது சபை கூடுகைகள் நிரம்பி வழிகிறபோது நாம் எவ்வாறு பதில்செயல் செய்கிறோம்? நமது சபை கூடுகைகளுக்கு வரும் *எந்த ஒரு* பார்வையாளரையும் நாம் எவ்வாறு நடத்துகிறோம்? ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, டிக் மார்சியர் என்பவர், “நாம் எப்படி மதிப்பிடப்படுவோம் என்பது பற்றி நீங்கள் நினைப்பது என்ன?” என்ற தலைப்பில் சபை அறிக்கை இதழில் ஒருபாடத்தை எழுதினார். அந்தப் பாடத்தில் திகைக்க வைக்கும் சில தகவல்களும் முடிவுகளும் அடங்கியிருந்தன.

> சபைகள் உண்மையில் எதைப் போன்று இருந்தன என்று கண்டறிவதற்காக, ஒரு மனிதர், வரிசையாக வந்த ஞாயிற்றுக்கிழமைகளில் 18 வெவ்வேறு சபைகளுக்குப் பார்வையாளராகச் சென்றார். இந்த சம்பவத்தை அறிவித்த அந்த அறிக்கையின்படி, அம்மனிதர், நான் முன்வரிசைக்கு

அருகில் அமர்ந்தேன். ஆராதனைக்குப் பின்பு, நான் மெதுவாகப் பின்னால் நடந்து சென்றேன், பின்பு இன்னொரு இடைவெளியைப் பயன்படுத்திப் பெரிய அறைக்கு முன்னும் பின்னுமாகத் திரும்பினேன். நான் புன்னகை பூத்தேன். நான் நேர்த்தியாக உடை உடுத்தியிருந்தேன். ஒரு நபரிடத்தில் என்னை "ஐக்கிய அறை, பிரசங்கியாரின் படிப்பு இடம், முதலியவற்றிற்கு" செல்லுமிடத்தைக் காண்பிக்கும்படி கேட்டேன். காபி வழங்கப்பட்டால் நான் அதில் பங்கேற்றேன். நான் பெற்றுக்கொண்ட வரவேற்பை மதிப்பிட நான் ஒரு அளவியைப் பயன்படுத்தினேன்" என்று கூறினார்.

அவரது அளவி பின்வருமாறு இருந்தது:

10 - ஆராதிப்பவர் ஒருவரிடமிருந்து ஒரு புன்னகைக்கு.

10 - அருகில் அமர்ந்திருப்பவரிடமிருந்து ஒரு வாழ்த்துக்கு.

100 - பெயர்கள் பரிமாற்றம் ஒன்றுக்கு.

200 - திரும்ப வரும்படியான அழைப்பு ஒன்றுக்கு.

1000 - ஆராதிக்கும் இன்னொருவரை அறிமுகம் செய்வித்தல் ஒன்றுக்கு.

2000 - பிரசங்கியாரைச் சந்திக்கும்படியான அழைப்பு ஒன்றுக்கு.

அவர் கண்டறிந்தது என்ன என்று அறிய நீங்கள் ஆர்வமாக இருப்பீர்களா? அந்த 18ல் பதினொரு சபைகள் 100க்கும் சற்று அதிகமான மதிப்பெண்களைப் பெற்றன, மற்றும் 5 சபைகள் 20க்கும் குறைவான மதிப்பெண்களைப் பெற்றன. அவரது முடிவு: "உபதேசம் வேதாகமரீதி யானதாக இருக்கலாம், பாடுதல் தெய்வீக ஊக்கம் பெற்றதாக இருக்கலாம், பிரசங்கம் ஆவியை மேலே எழுப்பக் கூடியதாக இருக்கலாம்; ஆனால் ஒரு பார்வையாளர், தாம் அங்கிருக்கிறார் என்பது பற்றி எவரொருவரும் அக்கறை கொள்ள வில்லை என்று கண்டறிகிறபோது, அவர் திரும்பவும் அங்கு வரச் சாத்தியம் இல்லை,"

நாம் எவ்வாறு மதிப்பிடப்படுவோம் என்பது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நம்மில் ஒவ்வொருவரும், பார்வையாளர்கள் வரவேற்கப்படுவதாக, மதிக்கப்படுவதாக மற்றும் விரும்பப்படுவதாக உணரச் செய்யப் பிரயாசப் படவேண்டும். இந்த ஞாயிற்றுக்கிழமையில், நீங்கள் அறியாது இருப்பவர்களைச் சென்றடையும் விசேஷித்த முயற்சியை மேற்கொள்ளுங்கள்.

பட்சபாதத்தைக் காண்பித்த முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் மீது கொண்டிருந்தது போலவே நம்மீது யாக்கோபு நிலைகுலைந்து போவாரா?

பட்சபாதத்தின் செயல்விளக்கம், நாம் நமது விசுவாசத்தை நடைமுறைப் படுத்துவதில்லை என்பதற்குச் சாட்சியமாக உள்ளது. நாம் இயேசுவினுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம், அந்த இயேசு பட்சபாதம் காண்பிக்கவில்லை. பரிசேயர் தாங்கள் எவ்விதமான அறிக்கையைப் பெறத் தகுதியுள்ளவர்கள் என்று நினைத்தார்களோ, அந்த அறிக்கையை அவர்களுக்கு இயேசு கொடுத்திருந்தால், அவர்கள் அவரை ஏற்றுக்கொண்டிருப்பார்களோ என்று நீங்கள் வியப்படைந்தது உண்டா? இயேசு புறம்பான தோற்றத்தினால் மனம் ஈர்க்கப்படவில்லை, ஆனால் அவர் உள்ளாக இருக்கும் இருதயத்தில் கண்ணோக்கினார். இதைப்பற்றிப்

பரிசேயர்களும்கூட, "நீர் சத்தியமுள்ளவரென்றும், தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவரென்றும், நீர் முகதாட்சிணியம் இல்லாதவராகையால் எவனைக்குறித்தும் உமக்குக் கவலையில்லையென்றும் அறிந்திருக்கிறோம்" என்று கூறும்போது உணர்ந்தறிந்து இருந்தனர் (மத்தேயு 22:16). அவ்வாறே, இயேசு சமூக அந்தஸ்து அல்லது செல்வங்கள் ஆகியவற்றினாலும் மனம் ஈர்க்கப்படாது இருந்தார். அவர், செல்வந்தரான ஒரு பரிசேயரைக் காட்டிலும் ஒரு ஏழை விதவையின் மீதே அதிகம் மன ஈர்ப்பு உடையவராக இருந்தார். பாவிகளின் வாழ்வினுடைய புறம்பானவற்றை வெட்டிப் பிளந்து உள்ளாக இருக்கும் வலிவார்ந்தவற்றை இயேசு காண முடிந்தவராக இருந்தார். அவர் சீமோனிடத்தில் வேறு எவரும் கொண்டிராத பாறையைக் காண முடிந்தது. பழிப்புரைக்கு ஆளான வரிவசூலிப்பவரான மத்தேயுவிற்குள், உண்மைநிறைந்த சீஷர் ஒருவரை அவர் கண்டார். கிணற்றண்டையில் இருந்த, பாவம் நிறைந்த வாழ்வைக் கொண்டிருந்ததால் பொதுமக்களால் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு பெண்ணிற்குள் மாபெரும் அறுவடைக்கான கருவியை இயேசுவினால் காண முடிந்தது. நாம் இயேவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றப் போகிறோம் என்றால், ஒரு நபர் எவ்வாறாக இருக்கிறார் என்று காண்பதைக் கடந்து அவர் எவ்வாறு இருக்க முடியும் என்பதைக் காணவேண்டும்.

விரிவாக்கம் (2:5)

பட்சபாதம் என்பது தவறானதாக உள்ளது, ஏனெனில் அது தேவனுடைய எண்ணப்போக்கிற்கு, சிறப்பாக ஏழைகளிடத்தில் அவர் கொண்டுள்ள எண்ணப்போக்கிற்குச் சீர்பொருத்தம் அற்றதாக உள்ளது (2:5, 6அ). செல் வந்தர் ஏழை என்பவர்களிடத்தில் பட்சபாதம் காட்டுதல் பற்றி யாக்கோபுவின் போதனையானது அவரது நாட்களில் மிகவும் வலியுறுத்தப்பட வேண்டிய போதனையாக இருந்தாலும், அவர் அத்துடன் இந்தப் போதனையை மட்டுப்படுத்தவில்லை. அவரது வாசகர்கள், புறக்கணிப்புக்கு ஆளான ஏழை மனிதர் தேவனுடைய இருதயத்தில் விசேஷித்த இடத்தைக் கொண்டிருக்கிறார் என்பதைக் காண வேண்டும். ஏழை மனிதர் இந்த உலகத்தின் பொருட்களைச் சார்ந்திராதபடியால், அவரே சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளக் கூடியவராக இருக்கிறார் என்ற சாத்தியக்கூறு உள்ளது. நமது தவறான எண்ணப்போக்கானது, அம்மனிதரை, தேவன்மீது அன்புகூருகிறவர்களுக்கு இராஜ்யத்தில் உள்ள சுதந்தரம் பற்றி அறிதலில் இருந்து திருப்பிவிடலாம்.

இவை எல்லாவற்றிற்கும் அப்பால், செல்வந்தர்கள் கிறிஸ்தவர்களிடத்தில் எவ்வாறு செயல்பட்டிருந்தனர் என்பதைப் பற்றி மாத்திரம் நினைத்துப் பாருங்கள் (2:6ஆ, 7). எல்லாச் செல்வந்தர்களைப் பற்றியும், யாக்கோபு ஒரு கண்டனப் போர்வையையோ அல்லது ஒரு குற்றச்சாட்டையோகூட மாத்திரம் எடுத்துரைக்கவில்லை. யாரைக் கையாள வேண்டியதாக இருந்ததோ அவர்களை மாத்திரம் அவர் குறிப்பிட்டார். அவர்கள் குற்றம் சாட்டப்பட்டிருந்த, "கிறிஸ்தவர்களை ஒடுக்குதல், அவர்களை நியாயாசனங்களுக்கு முன்பாக இழுத்துச் செல்லுதல், இயேசுவின் நாமத்தைத் தூஷித்தல்" என்ற குறிப்பான மூன்று பொல்லாங்குகளை யாக்கோபு குறிப்பிடுகிறார். வரிகளுக்கு இடையில் யாக்கோபு, "இந்த உலகத்தில் நீங்கள் ஏன் அவர்களுக்குப் பட்சபாதம் காண்பிக்க வேண்டும்?" என்று கேட்கிறார்.

யாக்கோபு தமது கருத்தை ஆற்றல்மிக்க வகையில் மனதிற்குள் செலுத்துகிறார். அவர் ராஜரீகப் பிரமாணம் என்று அழைக்கும் ஒன்றை மேற்கோள் காண்பிக்கிறார்: "உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக." இராஜரீகப் பிரமாணத்தை இவ்விடத்தில் கொண்டு வருதலில் அவர், மற்றவர்களிடத்தில் நமது செயல்பாடு மற்றும் எண்ணப்போக்கு என்பதே கிறிஸ்தவப் பண்பிற்கான அடிப்படைப் பரீட்சையாக உள்ளது என்று மறைமுகமாகக் குறிப்பிடுகிறார்.

"மற்ற மக்களைச் சரியான வகையில் நடத்துங்கள்" என்று கூறுவது போதுமான அளவுக்கு எளிமையானதாக உள்ளது, ஆனால் அதை நடைமுறைப்படுத்துதல் என்பது எவ்வளவு கடினமானதாக உள்ளது! மற்ற மக்களைச் சரியான வகையில் நடத்துதல் என்பதன் நுணுக்கமான பகுதிகள் அடிக்கடி நமக்குப் பிரச்சனை ஏற்படக் காரணம் ஆகின்றன. நாம் ஒரு நபரை, அல்லது ஒரு குழுவை வெளிப்படையாக, பட்சபாதமான வகையில் நடத்தாமல் இருக்கலாம், ஆனால் நாம் கருத்து வேறுபடுகிற யாரேனும் ஒருவரைக் கடுமையாக விமர்சிக்கக் கூடும்.

அடுத்ததாக யாக்கோபு, கையாள்வதற்குக் கடினமான முட்டிப்பந்து ஒன்றை நம்மீது எறிகிறார்: "எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்" (2:10). யாக்கோபு பின்வரும் கேள்வியை முன்னெதிர் பார்த்திருப்பார் என்பதாகத் தோன்றுகிறது: "பட்சபாதம் காண்பித்தல் பற்றி ஏன் இவ்வளவு அதிகம் பேசுகிறீர்கள்?" யாக்கோபு, தேவனுடைய பிரமாணத்தை மீறுகிற எந்தப் பாவமும் தேவனுடனான ஐக்கியத்தை முறித்துப் போடுகிறது என்று காண்பிக்க விரும்பினார். நான் தேவனுடைய எல்லாப் பிரமாணங்களையும் கடைப்பிடித்திருந்தும், அவற்றில் *ஒன்றை* மனப்பூர்வமாகப் புறக்கணித்திருந்தால், நான் அவருடனான ஐக்கியத்தை முறித்துப்போட்டவனாக இருக்கிறேன். நமது சந்தர்ப்பப் பொருளில், அது நான் கறுப்பர்கள், வெள்ளையர்கள், மெக்சிகோ நாட்டவர்கள், ரஷ்யர்கள், ஏஜியர்கள், ஒக்கியர்கள் ஆகியோர்களை, அவர்கள் கறுப்பர்கள், வெள்ளையர்கள், மெக்சிகோ நாட்டவர்கள், ரஷ்யர்கள், ஏஜியர்கள், ஒக்கியர்கள் ஆக இருப்பதால் மாத்திரமே வெறுத்தால், நான் எனது ஆத்துமாவை இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்குகிறேன். கொலை மற்றும் விபச்சாரம் ஆகியவற்றைப் பற்றி யாக்கோபு ஏற்படுத்துகிற குறிப்புகள் (வசனம் 11), பட்சபாதத்தின் தீவிரமான இயல்பைக் காண்பிக்க நோக்கம் கொண்டுள்ளன. அவற்றை நாம் வழக்கமாக மாபெரும் பாவங்கள் என்று கருதுகிறோம், ஆனால் பட்சபாதம் காண்பித்தல் என்பது அதே மட்டத்தில் உள்ளது என்று நமக்குக் காண்பிக்க யாக்கோபு விரும்புவதாகக் காணப்படுகிறது.

"இராஜரீகப் பிரமாணத்தை" நாம் மீறினால், நாம் தேவனைப் பிரியப்படுத்த இயலாது என்பது தெளிவு. தேவன் நமது வார்த்தைகள், செயல்கள் மற்றும் எண்ணப்போக்குகள் ஆகியவற்றை நியாயம் தீர்ப்பார் என்பதால், தேவன் நம்மிடத்தில் பிரியமாக இருக்கும்படியான வழியில் நாம் வாழவேண்டியது அவசியமாக உள்ளது. 13ம் வசனத்தில் யாக்கோபு, மலைப்பிரசங்கத்தில் இயேசுவின் வார்த்தைகளில் இருந்து எதிரொலிக்கிறார்: இரக்கம் நிறைந்தவர்களே இரக்கம் பெறுவார்கள். நம்மில் சிலர் இரக்கம் நிறைந்தவர்களாக இருப்பதைத் தவிர வேறு எவ்வகைப்பட்டவர்களாகவும் இருக்கிறோம்! தேவன்

இரக்கத்திற்காகப் பார்த்துக்கொண்டிருப்பதால், நாம் மக்களைக் குறித்த நமது எண்ணப்போக்குகளை மாற்றுதல் அவசியமாக உள்ளது.

முடிவுரை

நமது விசுவாசமானது, மக்கள் எவ்வகையில் நடத்தப்படவேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அவ்வகையில் அவர்களை நாம் நடத்தக் காரணமாயிருக்க வேண்டும். இது தேவனுக்கு முக்கியமானதாக இருப்பதால், நமக்கும் முக்கியமானதாக இருக்க வேண்டும்.

8

உயிருள்ள விசுவாசம் [2:14-26]

கலோரி - உணர்வு உள்ள எவரையாவது நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? அமெரிக்கா உண்மையிலேயே கலோரி உணர்வுள்ள நாடாக இருக்கிறது! பலசரக்குக் கடைகள், "குறைந்த கலோரி" கொண்ட உணவுப் பொருள்கள் மற்றும் பானங்களுக்கென்று பெரிய பகுதிகளைக் கொண்டுள்ளன. மென்பானங்கள் உற்பத்தி செய்பவர்கள், உணவுக்கட்டுப்பாட்டுப் பானங்கள் மற்ற சாதாரண பானங்கள் பலவற்றைவிட அதிகம் விற்பனையாவதாகக் கூறுகின்றனர். ஆனால் கலோரி என்றால் என்ன? தொழில்நுட்ப ரீதியாகப் பேசுவதென்றால், ஒரு கலோரி என்பது உணவிலுள்ள சக்தியின் அளவு ஆகும். நடைமுறையில் பேசுவதென்றால், ஒரு கலோரி எனபது பவுண்டுகளையும் அங்குலங்களையும் கூட்டுகிறதான அச்சுறுத்தும் பொருட்கூறாக உணவு மற்றும் பானங்களில் உள்ளது. ஆனால் நீங்கள் எப்போதாவது ஒரு கலோரியைக் கண்டிருக்கிறீர்களா? கண்டிருக்க மாட்டீர்கள், ஏனென்றால் அதைச் சாதாரணக் கண்ணால் காண இயலாது. ஆனால் நாம் யாவருமே கலோரியின் விளைவைக் கண்டிருக்கிறோம்!

இவ்வாறாக, விசுவாசம் என்பது ஒரு கலோரியுடன் ஒப்பிடப்பட முடியும். விசுவாசம் என்பது கிறிஸ்தவருக்கு கிறிஸ்தவ வாழ்விற்குமான "திறவுகோல்" போதனையாக உள்ளது (எபேசியர் 2:8, 9; 2 கொரிந்தியர் 5:17; எபிரெயர் 11:6; ரோமர் 14:23). யாக்கோபு நிருபத்தின்படி, நாம் விசுவாசத்தைக் காண முடியாது, ஆனால் விசுவாசத்தின் விளைவானது சுலபமாக உற்றுநோக்கப்பட முடியும். பல மக்கள் விசுவாசம் கொண்டுள்ளதாக அறிக்கையிட்டதை யாக்கோபு கேள்விப்பட்டிருந்தும், அவர்களின் விசுவாசத்தினுடைய விளைவைக் காணுதல் என்பது கடினமாக இருந்தது என்பது தெளிவு. விசுவாசம் மற்றும் செயல்கள் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு உறவைக் காண யாக்கோபு விரும்புகிறார். விசுவாசம் என்பது செயல்விளக்கப்படுத்தப்படவேண்டும்.

யாக்கோபு 2:14-26 வசனப்பகுதியில் யாக்கோபு நமக்காகக் கொண்டிருந்த அர்த்தத்திற்காக அவ்வசனப் பகுதியை நாம் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்வதற்கு முன்னர் இவ்வசனப் பகுதியைப் பற்றி மொத்தத்தில் ஒரு விளக்கம் ஏற்படுத்தப்பட்டாக வேண்டும். இது, யாக்கோபுவும் பவுலும் ஒருவருக்கொருவர் எதிராக நின்றனர் என்று நிரூபிக்க, அடிக்கடி பயன்படுத்தும் வசனமாக உள்ளது. ரோமர் 3:28 மற்றும் கலாத்தியர் 2:16 ஆகியவை, "செயல்கள்" இரட்சிப்பின் பாகமாக இருந்தன என்று பவுல் நம்பவில்லை என்று காண்பிக்கப் பயன்படுத்தப்படும் வசனங்களாக உள்ளன; அதே வேளையில், யாக்கோபு 2:14-26ல் யாக்கோபு, செயல்கள் எவ்வளவு அத்தியாவசிய மானவைகளாக உள்ளன என்பது பற்றிப் பேசுகிறார். அவர்களிடையில் முரண்பாடாகக் காணப்படும் இவ்விஷயம்பற்றி விளக்கம் அளிக்கையில், அலெக்சாண்டர் ராஸ் என்பவர், "அவர்கள் தங்கள் பட்டயங்களுடன் ஒருவருக்கொருவர் எதிர் நின்ற, பகைவர்களாக இருக்கவில்லை; அவர்கள்

பின்னுக்குப் பின்னாக நின்றுகொண்டு, சுவிசேஷத்தின் விரோதிகளை எதிர்த்துக் கொண்டிருந்தனர்" என்று கூறியுள்ளார். பவுல், தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்படுவதற்கு கிரியைகள் அவசியமாயிருந்தன என்று வலியுறுத்திய யூதச் சட்டவியலாளர்களை எதிர்த்து நின்றார், அதேவேளையில் யாக்கோபு, இயேசுவுடனான உறவை அறிக்கையிட்டு, ஆனால் அன்றாட வாழ்வில் அந்த உறவின் செயல்விளைவைக் குறைத்துப் போட்டு இருந்தவர்களுடன் எதிர்த்து நின்றார். தொடக்கநிலையில் உள்ள வேறுபாடு என்பதே யாக்கோபு மற்றும் பவுல் ஆகியோருக்கு இடையிலான வேறுபாடாக உள்ளது. பவுல், தேவனுடைய மன்னிப்பு என்ற மாபெரும் அடிப்படை உண்மையுடன் தொடங்குகிறார், இதை எந்த ஒரு மனிதரும் ஈட்டவோ, வெற்றிகொள்ளவோ அல்லது இதைப் பெறத் தகுதியானவராகவோ இருக்க இயலாது. யாக்கோபு, தாம் கிறிஸ்தவர் என்று கூறிக்கொள்ளும் கிறிஸ்தவரைக் கொண்டு தொடங்குகிறார், மற்றும் அவர், ஒரு மனிதர் தமது செயல்களினால் தமது கிறிஸ்தவத்தை நிரூபிக்காது இருந்தால், அவர் கிறிஸ்தவரே அல்ல என்று வலியுறுத்துகிறார். ஆகவே, யாக்கோபுவும் பவுலும் ஒருவருக்கொருவர் நேர் மாறாக நிற்பதில்லை; அவர்கள் ஒருவர் கூறும் கருத்திற்கு இன்னொருவர் கூடுதலாகக் கருத்துக் கூறுதல் என்பதை மாத்திரமே செய்கின்றனர். இவ்விருவரின் செய்தியும், கிறிஸ்தவ விசுவாசத்தின் மிகமுழுமை யான வடிவத்திற்கு அத்தியாவசியமானவைகளாக உள்ளது.

விசுவாசம் விசுவாசமாக இராதபோது (2:14-17)

வேதவசனத்தின் இப்பகுதியானது, மிகவும் திடீரென்று ஒரு கேள்வியுடன் தொடங்குகிறது. அறிக்கையிடும் கிறிஸ்தவர்கள் தங்கள் அறிக்கையைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும் என்று யாக்கோபு விரும்புகிறார். அவர், "என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?" என்று கேட்கிறார் (2:14). விசுவாசிகள், செயல் களைக் காண்பிக்காத அறிக்கையிடும் விசுவாசத்தின் தனிப்பட்ட மதிப்பைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும் என்று அவர் அறைகூவல் விடுக்கிறார். "சொல்லியும்" என்ற வார்த்தையின்மீது யாக்கோபு வலியுறுத்தம் வைக்கிறார் என்பது தெளிவு. அர்ப்பணித்துள்ள கிறிஸ்தவரின் அறிக்கையைக் காட்டிலும் அதிக அழகு நிறைந்த அறிக்கையை இந்த உலகம் காண்பதில்லை. ஆனால் அவர்களின் விசுவாசத்தில் இருந்து உண்டாக்கப்பட்ட "செயல்கள்" இல்லாத நிலையில் அது எவ்வளவு அர்த்தம் நிறைந்ததாக உள்ளது? அவர்களின் விசுவாசம் என்பது, வார்த்தைகளைத் தவிர வேறு எதுவும் அதிகமானதாக இராததாக இருந்தால், அது இரட்சிக்க வல்லமை அற்றதாக உள்ளது என்று யாக்கோபு கூறுவார்.

யாக்கோபு தமது கருத்தைத் தெளிவாக்குவதற்காக, ஒரு உதாரணத்தைக் கொடுக்கிறார்:

> ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக்

கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? (2:15, 16).

நலமாயிருத்தலுக்கான வார்த்தைகளை அளித்து, ஆனால் உணவு அல்லது உடை ஆகியவை பற்றி ஏதொன்றும் செய்யாத நபர், உண்மையில் ஒன்றும் செய்தி ருப்பதில்லை. நாம் இவ்வகையில் எப்போதாவது குற்றப்பட்டிருக்கக் கூடுமா? நோய்கொண்டவர்கள், பசியாக இருப்பவர்கள் மற்றும் வீடு இல்லாதவர்கள் ஆகியோருக்காக நாம் ஜெபிக்கும்போது, அவர்களுக்கு சேவை செய்வதற்காக நாம் எதையாவது செய்கிறோமா? நாம் நமது விசுவாசத்தை அறிக்கையிட்டும், அதை நடைமுறைப்படுத்தாது இருப்பதால் குற்றப்பட்டு இருப்பதில்லையா? நாம் நமது ஏர் - கண்டிஷன் செய்யப்பட்ட வகுப்பறையில் உட்கார்ந்து கொண்டு மாத்திரம் நமது விசுவாசத்தை வெளிப்படுத்தினால், நமது விசுவாசத்தை அறிக்கையிட்டு அதை நடைமுறைப்படுத்தாத வகையில் நாம் குற்றப்பட்டு இருப்பதில்லையா?

அதனால்தான் யாக்கோபு, "அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லா திருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்" என்று கூறுகிறார் (2:17). ஒரு தனிநபரின் விசுவாசம் உண்மையானதா மற்றும் உயிருள்ளதா என்று மதிப்பிடுவதற்கு, செயல் மாத்திரமே ஒரே வழியாக உள்ளது. இந்தக் கருத்தை வலியுறுத்துவதில் யாக்கோபு, இந்தப் புத்தகம் முழுவதிலும் மேலோங்கியிருக்கும் செய்திகளில் ஒன்றை அடிக்கோடு இடுகிறார் - *கிறிஸ்தவமானது உண்மை யானதாக இருக்க நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.*

ஒரு மறுப்புக்குப் பதில் அளிக்கப்பட்டது (2:18-20)

இந்த இடத்தில் யாக்கோபு, தமது வாதத்தை மறுப்பவராக இருக்கும் கற்பனையான எதிராளியின் கண்ணோக்கை அறிமுகப்படுத்துகிறார். மறுப் பாளரின் விவாதம் பின்வருவது போன்று செல்வதாக இருக்கும்: "நாம் யாவருமே மாறுபட்டவர்களாக இருக்கிறோம் - மற்றும் நீங்கள் அந்த உண்மையை நிச்சய மாகவே மதிக்கிறீர்கள். மக்களில் சிலர், மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் செயல்விளக்கம் உடையவர்களாக இருந்து விடுதல் என்பது நடைபெறுகிறது. நம்மில் உள்ள மற்றவர்கள் அதிகம் கூச்சசுபாவம் உடையவர்களாக இருக்கிறோம். நீங்கள் வெளிப்படையாகக் காண்பிப்பவர்களாக இருக்கும் காரணத்தினால், உங்கள் விசுவாசத்தை நீங்கள், செயலில் அதிகமாகக் காண்பிக்க முடிகிறது. இதற்கு மறுபுறத்தில், நம்மில் உள்ள மற்றவர்கள் விசுவாசத்தை எங்களுக்குள்ளே அதிகமாக வைத்துக் கொள்கிறோம், ஆனால் அது இன்னும் விசுவாசமாகவே உள்ளது." யாக்கோபு, அந்த விவாதம் முழுவதுமே ஒரு தவறான கருத்தை ஆதாரமாகக் கொண்டு அமைந்துள்ளது என்று அந்த விவாதத்திற்குப் பதில் அளிப்பார். நமது வாழ்வைக் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் வாழுதல் பற்றிய விஷயத்தில், விசுவாசமும் செயல்களும் பிரிக்கப்பட இயலாதவைகளாக உள்ளன. தேவன் அவற்றை ஒன்றாக இணைத்துள்ளார். ஆகவே, இது மக்களில் சிலர் தங்கள் விசுவாசத்தில் மிகச்சிறந்தவர்களாக இருக்கின்றனர் மற்றும் பிறர் தங்கள் செயல்களில் மிகச்சிறந்தவர்களாக இருக்கின்றனர் என்பது பற்றிய விஷயமாக இருப்பதில்லை. விசுவாசமும் செயல்களும் கைகோர்த்துச் செல்கின்றன! 18ம் வசனத்தில் யாக்கோபு, "உண்மைநிலைக்கு" இறங்கிச் செல்கிறார் மற்றும், மறுப்பாளரின் விசுவாசம் காண்பிக்கப்பட வேண்டும் என்று கேட்கிறார்.

விசுவாசம் என்ன செய்கிறது என்பதைக் கொண்டு மாத்திரமே அந்த விசுவாசம் காண்பிக்கப்பட முடியும் என்பதை அவர் அறிந்திருந்த காரணத்தினால் அவர் இதைச் செய்கிறார்!

கடைசியாக யாக்கோபு, தமது கருத்தின் விவரிப்பாக பிசாசுகள் செய்வதைப் பயன்படுத்துதல் மூலம், மனநிறைவான தமது மறுப்பாளர்களை அதிர்ச்சியடையச் செய்கிறார் (2:19). மறுப்பாளர்கள் எதை விசுவாசிக்கின்றனர்? அவர்கள் ஒரே தேவன் இருப்பதையும் இயேசுவின் தெய்வீகத்துவத்தையும் விசுவாசிக்கின்றனர். *எனவே என்ன?* பிசாசுகளும் அதைச் செய்கின்றன! நம்புதல் மற்றும் நடுங்குதல் என்பதைக் காட்டிலும் அதிகமான விசுவாசத்தைத் தேவன் விரும்புகிறார் மற்றும் எதிர்பார்க்கிறார். ஒரு நபர் தமது சிந்தையில் ஒளியூட்டப்பட்டிருக்கக்கூடும், தமது இருதயத்தில் தூண்டுதல் பெற்றிருக்கவும் கூடும், மற்றும் அப்படிப்பட்ட நிலையிலும் நித்தியத்திற்கும் இழந்துபோகப் பட்டிருக்கக்கூடும். தேவன் விரும்புகிற விசுவாசமானது இன்னும் அதிகமான விஷயங்களைக் கொண்டதாக உள்ளது, அது - கீழ்ப்படிதல் உள்ள, மாற்றப்பட்ட வாழ்வு என்ற வகையில் - காணப்பட மற்றும் புரிந்துகொள்ளப்படக் கூடியதாக இருக்கிறது.

எபிரெய வரலாற்றில் இருந்து நிரூபணங்கள் (2:21-26)

யாக்கோபு இப்போது, தமது வாசகர்களுக்கு மாபெரும் எடையைச் சுமந்ததாக வேண்டிய நிரூபணங்களுக்கு, அதாவது பழைய ஏற்பாட்டில் தேவன் தமது மக்களிடத்தில் எதிர்பார்த்திருந்த விஷயங்களுக்குத் திரும்புகிறார். யாக்கோபு 2:20 வசனமானது, இந்தப் பாடக்கருத்தை, அவர் இன்னமும் தமது கற்பனையான எதிராளியிடத்தில் விவாதிக்கிறார் என்ற நோக்கிலேயே ஏறக்குறைய அறிமுகப்படுத்துகிறது. நிரூபணத்தின் இரு சாட்சியங்களிலும், தனிநபர்கள் இயல்பான மனித இரக்கத்தினால் மாத்திரமின்றி தேவன்மீது கொண்டுள்ள பலத்த விசுவாசத்தினால் செயல்படும்படி இயக்கப்படுகின்றனர்.

21 முதல் 24 வரையுள்ள வசனங்களில் யாக்கோபு, ஆபிரகாமின் வாழ்வில் இருந்து சாட்சியத்தை அளிக்கிறார். ஆபிரகாம், "யூத மக்களினத்தின் தகப்பன்" என்றும் "விசுவாசமுள்ளவர்களுக்குத் தகப்பன்" என்றும் அறியப்பட்டிருந்தார். ஆபிரகாம் தேவன்மீதான இந்த நம்பிக்கை வைத்தல், கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசித்தல் ஆகியவற்றின் மேம்பாட்டுடன் போராடினார். அவரது வாழ்வின் முந்திய காலத்தில் போராட்டத்தின் எல்லா சாட்சியங்களைப் பற்றியும் நினைத்துப் பாருங்கள்: அவர் அழைக்கப்பட்டதற்கு அரைவழியில் கீழ்ப்படிதல், பாலஸ்தீனத்தில் பஞ்சம் ஏற்பட்ட போது எகிப்துக்கு ஓடிப்போகுதல், எகிப்தில் இருந்த வேளையில், சாராளுடன் தமக்கிருந்த உறவுமுறைகளைப் பற்றிப் பொய் கூறுதல், மற்றும் அவரது மனைவி ஒரு குழந்தையைப் பெறுவாள் என்று தேவன் கூறியதைப் பற்றிச் சிரித்தல். ஆபிரகாம் விசுவாசத்தின் இந்த உதாரணத்திற்குள் வளர்ந்தார். யாரோ ஒருவர், யாக்கோபின் கருத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுவதன் மூலம் நன்கு விளக்கியிருக்கிறார்: "ஆபிரகாம், விசுவாசம் மற்றும் செயல்கள் ஆகியவற்றினால் இரட்சிக்கப்படவில்லை, ஆனால் செயல்படுகிற விசுவாசத்தின் மூலமாகவே இரட்சிக்கப்பட்டார்." ஆபிரகாம் தமது விசுவாசத்தைத் தமது வாழ்வில் செயல்விளக்கப்படுத்திய காரணத்தால், அவரது விசுவாசத்தைப் பற்றிச் சந்தேகம் எதுவும் நிலவுவதில்லை.

ராகாபின் செய்கைகளில் செயல்விளக்கப் படுத்தப்பட்ட விசுவாசமே, யாக்கோபு அளிக்கும் இரண்டாவது சாட்சியமாக உள்ளது. ராகாப், ஒரு "செத்த" விசுவாசத்தை, வெறும் அறிவுப்பூர்வமான அனுபவத்தை மாத்திரம் கொண்டிருந்து, வேவுகாரர்களுக்கு ஒன்றும் செய்யாதிருந்தாளா? அவர் தனது மனதை ஒளியூட்டி, உணர்வுகளைத் தூண்டிய விசுவாசத்தைக் கொண்டிருந்து, ஆனால் இன்னமும் வேவுகாரர்களுக்கு ஏதொன்றையும் நிறைவேற்றாமல் இருந்தாளா? ராகாப், "உயிருள்ள" விசுவாசத்தைக் கொண்டிருந்தாள் என்பதே இவ்வரலாற்றின் அழகாக உள்ளது. அவள் தான் செயல்புரிந்த வகையில், தான் விசுவாசித்தது என்ன என்பதை நிரூபித்தாள். அவள் இஸ்ரவேல் மக்களின் யெகோவா மீது விசுவாசம் கொண்டிருந்தாள்; அவள் வேவுகாரர்களைக் காப்பாற்றி அவர்களை வேறொரு வழியாக நகரத்தை விட்டு வெளியே அனுப்பி வைத்தாள்.

முடிவுரை

யாக்கோபு தமது கலந்துரையாடலைப் பின்வருமாறு கூறி முடிக்கிறார்: "அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில் லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது" (2:26). ஒரு ஜூரியின் முன்னால் நிற்கும் ஒரு வழக்கறிஞர், அல்லது மக்கள் கூட்டத்தின் முன்னால் நிற்கும் வாதம் செய்பவர் ஒருவரைப் போன்று, யாக்கோபு, தாம் முன்வைத்திருக்கும் விவாதத்தின் தொகுப்புரையைக் கொடுக்கிறார். உடலும் ஆவியும் பிரிக்கப்பட்டு இருக்கும்போது, மரணமும் அழிவும் விளைவாகிறது, அதைப்போன்றே, விசுவாசமும் அதைச் செயல்களினால் செயல்விளக்கப்படுத்துதலும் பிரிக்கப்பட்டு இருக்கும்போது, விசுவாசம் இறந்து அழிகிறது.

கிறிஸ்தவம் என்பது உண்மையானதாக இருக்க வேண்டுமானால், அது நடைமுறைக்கு உரியதாகவும் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் இருக்க வேண்டும் என்று யாக்கோபு கூறுகிறார்!

9

நாவை அடக்குதல் (3:1-12)

சராசரி நபர் ஒருவர் ஒரு நாளில், தட்டச்சு செய்யப்படும் இருபது பக்கங்களை நிரப்பப்போதுமான வார்த்தைகளைப் பேசுகிறார் என்று செய்தித்தொடர்பு நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளதை அறிதல் என்பது திகைக்கச் செய்வதாக உள்ளது. அது, ஒரு மாதத்தில், முன்னூறு பக்கங்கள் கொண்ட புத்தகங்களை நிரப்பப் போதுமானதாகவும், ஒரு ஆண்டில் அதுபோன்று இருபத்து நான்கு புத்தகங்களையும், ஐம்பது ஆண்டுகள் பேசுவதில் 1,200 தொகுப்புகளை நிரப்புவதாகவும் உள்ளது. பேசுதல் என்பது நமது வாழ்வில் மிகப்பெரும் பகுதியை எடுத்துக்கொள்கிறது என்பது தெளிவு. பெரும்பான்மை யான பள்ளிகள், பேசுவதற்கு ஒருவர் தமது திறனை மேம்படுத்திக் கொள்ள உதவும் வகையில் படிப்புகளை அளிக்கும் அளவுக்கு, அது வாழ்வின் பெரும்பகுதி யாக உள்ளது.

நமது விசுவாசமானது நமது அன்றாட உரையாடலில் செயல்படுவதாக இருக்க வேண்டும் என்று யாக்கோபு அறிந்திருக்கும் அளவுக்கு, பேச்சு என்பது வாழ்வின் பெரும்பகுதியாக உள்ளது. யாக்கோபுவின் நிருபத்தை "கிறிஸ்தவ உரையாடலை மேம்படுத்துதல்" மீதான ஒரு பாடப்புத்தகம் என்று சிலர் அழைக்கும் அளவுக்கு, அவர் இந்தப் பாடக்கருத்தின்மீது மிகவும் அக்கறை செலுத்துகிறார். ஏறக்குறைய இந்த நிருபத்தின் வசனங்களில் 20 சதவிகிதமானது நமது பேச்சின் சில அம்சங்களைக் கையாள்கிறது.

நமது பாடத்தின் வசனப்பகுதியான யாக்கோபு 3:1-12, நாம் பேசும் வகையைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற மிகவும் விரிவான கலந்துரையாடலாக உள்ளது. இவ்வசனப்பகுதியில் யாக்கோபு, பிரச்சனையின் மையப்பகுதியான நாவு என்ற உயிர்நாடிக்கு நேராகச் செல்கின்றார். இருபதாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர், இவ்வசனப் பகுதியின் பிரச்சனையும் அது தொடர்பான செய்தியும், பழங்காலத்திற்கு உரிய ஒன்றாக மாத்திரம் இருப்பதில்லை என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். நாம் யாவருமே ஒரு வேளையில் அல்லது இன்னொரு வேளையில், நமது நாவுடன் போராடுகிறோம்.

நாவின் முக்கியத்துவம் (3:1, 2)

அவர் கூறுகிற முதன் முதல் வார்த்தைகள், பல ஆண்டுகளாகப் பிரசங்கியார்கள் மற்றும் போதகர்கள் ஆகியோரால் தெளிவாக எண்ணப்படுதலுக்குக் காரணமாகி இருக்கின்றன: "என் சகோதரரே, ... உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (3:1). இது யாக்கோபு, வழக்கத்திற்கு மாறாகக் கூறுகிற ஒரு கூற்றாக உள்ளது. வேதவசனத்தின் மற்ற பகுதிகளில் இருந்து (எபிரெயர் 5:12; எபேசியர் 4:11), யாக்கோபு போதகர்களை ஊக்கம் இழக்கச் செய்வதை நோக்கங்கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகக் காணப்படும். பொறுப்பு என்பது கணக்கு ஒப்புவித்தலைக் கொண்டுவருகிறது என்பதையே அவர் கூறுகிறார். அதனால்தான் அவர், போதகர்கள் மிகவும்

கண்டிப்பான நியாயத்தீர்ப்பைப் பெறுவார்கள் என்பதை நாம் அறிய வேண்டும் என்று விரும்புகிறார். போதித்தல் என்பது எந்த மனிதருக்கும் ஒரு அபாயகரமான தொழிலாகக் கருதப்பட வேண்டும் என்பது தெளிவு. விலைமதிப்பற்ற பாரம்பரியம் ஒன்று கிறிஸ்தவ போதகருக்கு உரியதாக உள்ளது. அவர் யூதத்துவ ரபீயின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறார். நல்ல ரபீக்கள் பலர் மக்களுக்குப் போதிப்பதில் மிகச்சிறப்பான பணிகளைச் செய்தனர். ஆனால் ரபீக்கள், அவர்களின் தன்முனைப்பானது பெருக்கமடைந்து அவர்கள் அழிக்கப்படுமளவுக்கு, மரி யாதையின் வரம்பு மீறிய அளவினால் நடத்தப்பட்டனர். இளம் யூதர்கள் தங்கள் ரபீக்களைத் தங்கள் பெற்றோரைக் காட்டிலும் அதிகம் சிறப்பாக நடத்த வேண்டும் என்று போதிக்கப்படுமளவுக்கு, இந்த மரியாதை மிகப் பெரியதாக இருந்தது. எடுத்துக்காட்டாக, விரோதிகள் நகரத்தை முற்றுகையிட்டு இருந்து, பெற்றோர்களும் ரபீயும் பிடிக்கப்பட்டிருந்தால், முதலில் ரபீயே மீட்கப்பட வேண்டியவராக இருந்தார். மக்களிடமிருந்து அவ்வகையான உயர்மதிப்பைப் பெற்ற நிலையில், ரபீக்கள் இயேசு விவரித்தபடியாக (மத்தேயு 23:2-7) முடியக்கூடுவது எப்படி என்று புரிந்துகொள்ளுதல் கடினமாக இருப்பதில்லை. அதே அபாயம் இன்றைய நாட்களில் போதகர்களை, விசேஷமாக பிரசங்கியார்களை எதிர்கொள்கிறது. இளைஞர்கள் - மகிமை, கண்ணியம், நண்பர்கள் மற்றும் குடும்பத்திடம் இருந்து பாராட்டுதல் போன்ற - தவறான எல்லாக் காரணங்களுக்காகவும் பிரசங்கித்தலுக்குள் தலைதெறிக்க அவசரமாக நுழைகின்றனர் மற்றும் நெருக்கம், பணி மற்றும் வேதனை ஆகியவற்றைப் பற்றி அறிந்தபின் அதைவிட்டு வெளியேறுகின்றனர். அந்தக் காரணங்களுக்காகத் தொடர்ந்து பிரசங்கித்தலில் தரித்திருக்க சமாளித்துக் கொள்பவர்கள் பெரும்பாலும், ரபீயைப் போல் முரட்டுத் தனமானவர்களாகின்றனர்.

போதகர்களும் பிரசங்கியார்களும் மாத்திரம் தங்கள் நாவுகளினால் பாவம் செய்தல் என்ற விஷயத்தினால் சோதிக்கப்படுபவர்களாக இருப்பதில்லை. நாவு என்பது கட்டுப்படுத்தக் கடினமானதாக உள்ளது, ஒவ்வொரு கிறிஸ்தவரும் தமது நாவைத் தொடர்ந்து விழிப்புடன் காத்துக்கொள்ளுதல் என்பது அவசியமானதாக உள்ளது. யாக்கோபு, "ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்" என்று கூறும்போது (3:2), கட்டுப்படுத்தக் கடினமான விஷயங்களின் பட்டியலில், நாவைக் கட்டுப்படுத்துதல் என்பது மிகவும் கடினமானதாக இருப்பதாக அவர் கூறுகிறார். நீங்கள் உங்கள் நாவைக் கட்டுப்படுத்த முடியும் என்றால், உங்களால் மற்ற ஒவ்வொன்றையும் கட்டுப்படுத்த முடியும்.

நாவைக் கட்டுப்படுத்துதல் (3:3, 4)

நாவைக் கட்டுப்படுத்துவதில் அடங்கியுள்ள சிரமத்தின் காரணமாக, ஒவ்வொரு கிறிஸ்தவரும் இதில் தொடர்ந்து பணிசெய்தாக வேண்டும். யாக்கோபு பயன்படுத்துகிற "குதிரையின் வாயில் கடிவாளம் மற்றும் கப்பலில் உள்ள சுக்கான்" என்ற விவரிப்புகளை மாத்திரம் கண்ணோக்குங்கள். ஒரு கடிவாளமானது குதிரையின்மீது சவாரி செய்பவர், அந்தக் குதிரையைக் கட்டுப்படுத்த உதவுகிறது, மற்றும் சுக்கான் என்பது கப்பல் ஓட்டுபவர் ஒரு பெரிய கப்பலைக் கட்டுப்படுத்த அனுமதிக்கிறது. யாக்கோபைப் பொறுத்தமட்டில், நாவு உடலைக்

கட்டுப்படுத்துகிறது. 5ம்வசனத்தில் அவர், "அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும் ..." என்று கூறுகிறார். சுக்கான் கப்பலைக் கட்டுப்படுத்துவதற்கோ அல்லது கடிவாளம் குதிரையைக் கட்டுப்படுத்துவதற்கோ, நிலையான இறுக்கம் தேவைப்படுகிறது. அதே விஷயம் நாவைப் பொறுத்த மட்டிலும்கூட உண்மையானதாக உள்ளது, நாம் நாவின்மீது நிலையான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும், அல்லது நாவானது, உடல் காட்டுத்தனமாகச் செல்ல அனுமதித்துவிடும்.

யாக்கோபுவின் "விவரிப்பில்" இருந்து இன்னொரு கருத்தைக் கொண்டுவர முடியும். கடிவாளம், சுக்கான் மற்றும் நாவு ஆகியவை சிறியவைகளாக இருப்பது மாத்திரமின்றி, அவைகள் எதிர் ஆற்றல்களை வெற்றிகொள்பவையாக இருக்கவும் வேண்டும். கடிவாளமானது குதிரையின் முரட்டு சுபாவத்தை வெற்றிகொள்ள வேண்டும், மற்றும் சுக்கானானது கப்பலை அழித்துவிடக்கூடிய காற்றுகள் மற்றும் கடல் அலைகள் ஆகியவற்றை எதிர்த்துப் போராட வேண்டும். அவ்வாறே, மனித நாவும்கூட, கட்டுப்படுத்தப்பட்டிருக்கவும் உடலை வழிநடத்தவும் அது எதிர்சக்திகளை வெற்றிகொள்ள வேண்டும். உள்ளாக இருக்கும் பழைய இயல்பும் நம்மைச் சுற்றிலும் இருக்கும் பாவம் நிறைந்த உலகமும், நமது வழியில் ஒவ்வொரு அடிவைப்பிலும் நம்முடன் போராடுகின்றன. குதிரை ஓட்டுபவர் கடிவாளத்தைக் கட்டுப்படுத்துவது போலவும், கப்பல் ஓட்டுபவர் சுக்கானைக் கட்டுப்படுத்துவது போலவும், நாம் நமது நாவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு இயேசுவை வைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. நாம், நமது ஜீவனின் அதிபதியை நமது உதடுகளின் ஆண்டவராக இருக்க அனுமதிக்க வேண்டும். சங்கீதக்காரரின் ஜெபத்தை எதிரொலித்தல் நமக்கு அவசியமானதாக உள்ளது: "கர்த்தாவே, என் வாய்க்குக்காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்" (சங்கீதம் 141:3).

நாவின் அபாயங்கள் (3:5-12)

கட்டுப்படுத்தப்படாத நாவின் அபாயங்களை யாக்கோபு அறிந்திருக்கிறார் என்பதால் அவர், நாவைக் கட்டுப்படுத்துதல் பற்றி அவ்வளவு பலமாக வேண்டுகோள் விடுக்க வேண்டியவராக இருந்தார். நமக்கு அந்த அபாயங்களைப் பற்றித் தகவல் அறிவிப்பதில் அவர், கட்டுப்படுத்தப்படாத நாவின் எச்சரிக்கை செய்யும் மூன்று உண்மைகளைப் பட்டியலிடுகிறார்.

முதலாவதாக, இது உடல் முழுவதையும் கறைப்படுத்தக் கூடும். யாக்கோபு பின்வருமாறு கூறுகிறார்:

> ... பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது! (3:5, 6).

அவர், நாவு ஏற்படுத்தக் கூடிய சேதமானது, காட்டுத்தீயினால் ஏற்படுத்தப்படும் சேதத்தைப் போல் உள்ளது என்று கூறுகிறார். ஒரு காட்டுத்தீயானது, கட்டுப்படுத்தக் கூடாத வகையில் எரிந்து, கடைசியில் அது தொடங்கிய இடத்தில் இருந்து வெகுதூரத்தில் மதிப்புள்ள உடைமைகளை அழித்துவிட

முடியும். இதே விஷயம் நாவைப் பொறுத்தமட்டிலும் உண்மையாக உள்ளது. நாவில் இருந்து வருகிற ஒரு சிறு பொறியானது, கட்டுப்படுத்த இயலாத வகையில் தீவிரமாகக்கூடும் மற்றும் அதன் தொடக்கத்தில் இருந்து வெகுதூரத்தில் ஆயுள் சக்கரங்களை அழிக்கிறது. அது "நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!" என்று யாக்கோபு கூறுவதில் வியப்பெதுவும் இல்லை. நாம் இவ்வாறு ஒருவரையொருவர் அழித்துக்கொள்ளும்போது, பிசாசானவன் மகிழ்ச்சி அடைகிறான்.

இரண்டாவதாக, நாவு வசப்படுத்தப்படக் கூடாததாக உள்ளது. "சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷசுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம்நிறைந்தது மாயிருக்கிறது" (3:7, 8) என்பது அதைப் பற்றி யாக்கோபு, ஆவியானவரால் ஏவப்பட்டுக் கூறும் வழிமுறையாக உள்ளது. மனிதர்கள் தங்கள் சொந்த நாவுகளை அடக்க இயலாதவர்களாக உள்ளனர் என்பது தெளிவு. அந்த முரட்டுத்தனமான, ஒய்வற்ற பொல்லாங்கின்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு, யாரேனும் ஒருவர் அல்லது ஏதேனும் ஒரு விஷயம், அந்தக் கட்டுப்படுத்தும் செயலைச் செய்தாக வேண்டும். பெரிய கப்பலானது சுக்கானால் கட்டுப்படுத்தப்படுவதைப் போன்று, சுக்கானானது கப்பல் ஓட்டும் மனிதரால் கட்டுப்படுத்தப்படுகிறது. மீண்டுமாக நாம், நமது ஜீவனின் அதிபதியை நமது உதடுகளுக்குக் கர்த்தராக இருக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும். அவர் ஒருவரே அந்த தீவிரமான நெருப்பைக் கட்டுப்படுத்தவும் அதை சக்தியின் ஆதாரமூலமாக்கவும் போதிய வல்லமை நிறைந்தவராக இருக்கிறார்.

மூன்றாவதாக, கட்டுப்படுத்தப்படாத நாவானது, கிறிஸ்தவரின் விசுவாசத்திற்குச் சீர்பொருத்தம் இல்லாத வகையில் செயல்படுகிறது என்று யாக்கோபு கூறுகிறார். இதற்கு அவர் பயன்படுத்தும் விவரிப்பு மிகவும் கூர்மைப்படுத்தப்பட்டதாக உள்ளது: "ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?" (3:11). இந்த விவரிப்பின் கேள்விக்கும், "இல்லை" என்பதே எதிரொலிக்கும் பதிலாக உள்ளது, அது "ஆம்" என்று இருக்க வேண்டுமென்றால், அது நாம் அறிந்துள்ள ஒவ்வொரு விஷயத்திற்கும் எதிரானதாக இருப்பதாகும். "என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும் திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா?" என்று கேட்பதன் மூலம் (3:12) யாக்கோபு இந்த விவரிப்பை இன்னும் சற்றே தூரமாக எடுத்துச் செல்கிறார். ஒரு கிறிஸ்தவர் ஞாயிற்றுக்கிழமையன்று துதியைப் பாடத் தமது நாவைப் பயன்படுத்திவிட்டு, பின்பு சுற்றிலும் திரும்பி வாரத்தின் எஞ்சிய நாட்கள் யாவற்றிலும் தமது அயலகத்தவர்களைச் சபிப்பதற்குப் பயன்படுத்துதல் என்பதைக் காட்டிலும் அதிகம் சீர்பொருத்தமற்றது எதுவும் இல்லை என்ற கருத்தைக் கிறிஸ்தவர்கள் காண வேண்டும் என்று யாக்கோபு விரும்புகிறார். சபிக்கிற, ஆணையிடுகிற அல்லது புறங்கூறுகிற கிறிஸ்தவர், உண்மையான பிரச்சனை ஒன்றைக் கொண்டுள்ளார் (நீதிமொழிகள் 4:23; மத்தேயு 15:18). ஆபாசமான வாயுடையவர், அசுத்தமான நகைச்சுவைகளைக் கூறுபவர், கொடூரமான வார்த்தைகளை உடையவர் மற்றும் சமீபத்திய கிசுகிசுப் பேச்சைப் பேசுபவர் என்று அறியப்பட்டுள்ள நபர், தனிச்சிறப்பான

கிறிஸ்தவர்களின் பட்டியலில் இடம்பெறுவதில்லை. ஏன்? ஏனென்றால், இந்த உலகம்கூட கட்டுப்படுத்தப்படாத நாவின் இந்த சீரிபொருத்தமற்றதைக் கொண்டிருத்தலைக்காண முடியும்.

முடிவுரை

சங்கீதக்காரர், "என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன் என்றேன்" என்று கூறியுள்ளார் (சங்கீதம் 39:1). நமது விசுவாசம் நமது வாழ்வில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த நாம் எவ்வாறு அனுமதிக்கிறோம்? இயேசுவை நமது வாழ்வில் ஆண்டவராக ஏற்றுக்கொள்வதினாலேயே! இதைச் செய்ய, நாம் கூறுகின்றவற்றைக் கட்டுப்படுத்த அவரை அனுமதித்தல் என்பதைக் காட்டிலும் அதிகம் அறைகூவல் உள்ள கருத்து வேறு எதுவும் இல்லை!

10

விசுவாசத்தின் ஞானம் (3:13-18)

மனித அறிவு விரிவடைந்து கொண்டிருக்கும் புலன் உணர்வு வேகத்தைப் பற்றி நினைத்துப் பாருங்கள்! இதுவரையில் வாழ்ந்துள்ள அறிவியல் அறிஞர்களில் 90 சதவிகிதம் பேர் இன்றைய நாட்களில் வாழ்ந்துகொண்டுள்ளனர் என்றும் உலகத்தின் அறிவு அமைப்பானது ஒவ்வொரு பத்து ஆண்டுகளிலும் இருமடங்கு ஆவதாகவும் மதிப்பிடப் பட்டுள்ளது. நீங்கள் சற்றே நின்று உங்கள் வாழ்வில் கொண்டுள்ள முன்னேற்றங்களைப் பற்றி நினைத்துப் பார்த்தால் அறிவினுடைய முன்னேற்றத்தின் அதிவேக விகிதம் தெளிவாகத் தெரியும். உண்மையில், சில அறிவியல் அறிஞர்கள், ஆராய்ச்சி செய்து குவிக்கப்பட்டுள்ள அறிவைச் சேமித்து வைப்பதற்கு, அதிகம் மேன்மையான வழிகளை ஆராய்வதற்காகத் தங்கள் வாழ்நாளையே செலவிடுகின்றனர்.

இப்படிப்பட்ட அறிவுக் குவிப்பானது, மனிதன் மிகவும் ஞானமுள்ளவனாக இருப்பதாக நம்பும்படி அவனை வழிநடத்துகிறது. ஞானத்தின் இந்த உணர்வானது மனிதனை முரட்டுத்தனமும் மேட்டிமையும் கொண்டவனாக ஆக்குகிறது. ஞானத்தின் இந்த உணர்வில் இருந்து, உலகளாவிய அணு உட்கரு ஆயுதப் போட்டி, தொழில்ரீதியான பொறாமைகள், விரோதம் மற்றும் தனிப்பட்ட வகையிலான மனதிருப்தியின்மை ஆகியவை எல்லா இடங்களிலும் வந்துள்ளன. நாம், படைத்தவரைச் சேவிப்பதற்கு மாறாகப் படைக்கப்பட்ட உலகத்தைச் சேவிக்கும்படி தூண்டப்பட்டுள்ளோம், இது மனித அறிவித்தல் மற்றும் அவனது சொந்த அறிவைச் சேவித்தல் என்ற தவிர்க்க இயலாத முடிவாக இருப்பதாகக் காணப்படுகிறது (ரோமர் 1:21, 22).

"அறிவு" மற்றும் "ஞானம்" என்பவை ஒரே விஷயமல்ல என்பது உண்மை யாக உள்ளது. அறிவு என்பது உண்மைகளின் குவிப்பாக இருக்கும் வேளையில், ஞானம் என்பது நாம் கொண்டுள்ள அறிவைப் <u>பயன்படுத்தும்</u> *திறன் என்பதாக உள்ளது. நமது அறிவானது நமது ஞானத்தை விஞ்சியுள்ளது என்பது நாம் கொண்டுள்ள பிரதான பிரச்சனைகளில் ஒன்றாகக் காணப்படும். தகவல் தொடர்பு, ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றை நாம் வேறு எவ்வாறு விளக்கப்படுத்த முடியும்? பல ஆண்டுகளாக நாம் - ஒரு அறிவியல் மேதை தனது சொந்த வாழ்வை மேலாண்மை செய்யக்கூடாதவராக இருத்தல் என்ற - இந்தப் பிரச்சனையைப் பற்றித் தனிப்பட்ட மட்டத்தில் சிரித்துக் கொண்டு இருந்திருக்கிறோம்.*

ஆனால் இப்பொழுது யாக்கோபு, ஒரு புதிய சிந்தனையுடன் நம்மை எதிர் கொள்கிறார். ஞானம் மற்றும் அறிவு ஆகியவற்றிற்கு இடையில் ஒரு வேறுபாடு இருப்பது மாத்திரமல்ல, ஆனால் ஞானத்திலேயே இரு வகைகள் உள்ளன. யாக்கோபு, பரத்திலிருந்து வருகிற ஞானத்தை (விசுவாசத்தின் ஞானத்தை)ப் பற்றியும் கீழிருந்து வருகிற ஞானத்தைப் பற்றியும் பேசுகிறார். நமது வேதவசனப் பகுதியான யாக்கோபு 3:13-18ல் யாக்கோபு இவ்விரண்டிற்கும் இடையிலான வேறுபாட்டு ஒப்பீடு ஒன்றை அளிக்கிறார். வேறுபாட்டு ஒப்பீட்டை அளித்தல்

என்பது ஏவுதல் பெற்ற எழுத்தாளர்களின் பொதுவான வழக்கமாக உள்ளது: முதலாம் சங்கீதமானது தேவபக்தியுள்ள வாழ்வையும் தேவபக்தியற்ற வாழ்வையும் வேறுபடுத்தி ஒப்பிடுகிறது. மாம்சத்தின் செயல்களையும் ஆவியின் கனிகளையும் பவுல் வேறுபடுத்தி ஒப்பிட்டார். இயேசு, குறுகலான மற்றும் விசாலமான வாசல்களை, மணல்மீது அஸ்திபாரம் இடப்பட்டுக் கட்டப்பட்ட வீட்டையும் கன்மலையின் மீது கட்டப்பட்ட வீட்டையும் வேறுபடுத்தி ஒப்பிட்டார். இந்த வேறுபடுத்தி ஒப்பிடுதல் யாவையும் வாழ்விற்குள்ள இரு திசைகள் பற்றி அக்கறை கொள்கின்றன என்பது தெளிவு. ஆனால் யாக்கோபு, சரியான திசையைத் தேர்ந்து கொண்டிருந்து ஆனால் அந்த வாழ்வில் தவறான ஞானத்தைக் காட்சிப்படுத்திக் கொண்டுள்ள மக்களைப் பற்றிப் பேசுகிறார்.

ஞானமுள்ள மனிதர் (3:13)

"உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ? ..." என்று யாக்கோபு கேட்கும் கேள்வி, நாம் யாவரும் பதில் அளிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது (யாக்கோபு 3:13அ). தேவனுடைய சபைக்குழுமம் ஒவ்வொன்றிலும், தேவையின் வேளையில் மக்கள் சென்று ஆலோசனை கேட்கக்கூடிய ஒரு மனிதர் இருப்பதாகக் காணப்படுகிறது. அவர் அறிவுமிகுந்தவராக இருந்தாலும், அவரது மாபெரும் அறிவின் காரணமாக அல்ல ஆனால் அவரது ஞானம் மற்றும் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றின் காரணமாகவே, அவரிடத்தில் அவர்கள் ஆலோசனை கேட்க வருகின்றனர். இது பதிலளிக்கப்பட முடியும் என்று யாக்கோபு அறிந்துள்ளதால், அவர் இந்தக் கேள்வியைக் கேட்கிறார். அர்க்கன்ஸாஸில் ஸ்பிரிங்டேல் என்ற இடத்தில் நான் ஆராதித்து வந்த சபையானது, சுமார் பன்னிரெண்டு ஆண்டுகள் காலத்தில், ஆறு இளைஞர்களை முழு நேர ஊழியக்காரர்கள் ஆக்க உதவிற்று. எனது கருத்தின்படி, பொறாமைப் படக்கூடிய அந்த சாதனைக்கு - ஜேம்ஸ் L. நீல் என்ற - ஒரு தனி மனிதர் மிகவும் பொறுப்பாளியாக இருந்தார். சகோதரர் நீல், ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் அளவாக, இந்த சபைக்குழுமத்தில் மூப்பராகப் பணிசெய்தார். அவர், இளைஞர்கள் வேதவசனங்களை மனப்பாடம் செய்ய வைத்தார். ஜெபங்களில் வழிநடத்தவும், பக்தியூட்டும் பேச்சுகளைப் பேசவும் மற்றும் அவர், அவர்களை இன்னும் பலவழிகளில் ஊக்குவித்தார். மக்களின் தலைமுறையினர், ஞானம் மற்றும் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றிற்காக அவரைக் கண்ணோக்கினர்.

ஞானமும் புரிந்துகொள்ளுதலும் உள்ள மனிதரின் அடையாளக்குறியாக இருப்பது, "அவரது நல் நடத்தை" மற்றும் "ஞானத்திற்குரிய சாந்தம்" ஆகியவையே (3:13ஆ). வேறு வார்த்தைகளில் கூறுவது என்றால் பரத்தி லிருந்து வருகிற ஞானத்துடன் இருக்கும் மனிதர், தமது ஞானத்தைப் பற்றி உங்களிடம் கூறமாட்டார், ஆனால் அவர் பேசுகிற, உற்றுக்கவனிக்கிற மற்றும் புரிந்துகொள்ளுகிற வகையில் அந்த ஞானம் காண்பிக்கப்படும், ஜிம்மி ஸ்டீவர்ட் என்பவர் நடித்த, *அது ஒரு ஆச்சரியம் நிறைந்த வாழ்வு* என்பது எல்லாக்காலங்களிலும் மிகவும் விரும்பத்தக்கதான கிறிஸ்துமஸ் படங்களில் ஒன்றாக உள்ளது. அது, ஒன்றுமற்ற வகையிலான ஒரு மனிதர், ஒன்றுமற்ற வகையிலான ஒரு நகரத்தில், ஒன்றுமற்ற வகையிலான ஒரு வியாபாரத்தைச் செய்துகொண்டு *முக்கியமானவராகலாம்* என்று ஏங்குதல் பற்றிய கதையாக உள்ளது. விட்டுச்சென்று, முக்கியமான ஒருவராக இருக்க அவர் வாய்ப்புப்

பெற்ற ஒவ்வொருமுறையும், யாரேனும் ஒருவருக்கு அவர் தேவைப்படுகிறார். தேவைகள் ஒருக்காலும் பூமியை அசைப்பதாக இருப்பதில்லை, ஆனால் அவைகள் அவர் செய்யக்கூடிய வகையிலான விஷயங்களாக இருக்கின்றன. திரைப்படம் ஓடுகையில், ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள் ஆகின்றனர், ஆனால் அந்த மனிதர் அவ்வாறு ஆவதில்லை. அவர் தம்மால் செய்ய முடிந்த சிறிய விஷயங்களைச் செய்துகொண்டு பின்னாலேயே தங்கியிருக்கிறார், தமது வாழ்வு முற்றிலும் தகுதியற்றதாக உள்ளதென்று தனக்குத்தானே இணக்கமாகக் கூறிக்கொள்கிறார். அவர் தற்கொலைக்கு முயற்சி செய்கையில், அம்மனிதர் இல்லாத நிலையில் சமூகம் எதைப்போன்று இருக்கும் என்று அவருக்குக் காண்பிக்க, ஒரு தூதன் தோன்றுகிறார். கவனிக்கப்படாத அந்த அன்பின் செயல்கள், முழு சமூகத்தையும் உண்மையில் எவ்வாறு மாற்றி புரட்சி செய்திருந்தன என்பது வரைகலை விவரிப்புகள் மூலமாகத் தெளிவாக்கப்படுகிறது. கவனிக்கப்படாததாக இருப்பினும் ஒரு நபருடைய வாழ்வு, மற்ற பலருடைய வாழ்வில் எவ்வளவு நேர்மறையான செல்வாக்கைக் கொண்டிருக்க முடியும்! அதைப் போன்ற விஷயத்தைத்தான் யாக்கோபு இங்கு பேசுகிறார். யாக்கோபு தமது நடைமுறை வகையான வழியில், நாம் நமது அன்றாட வாழ்வில் விசுவாசத்தின் ஞானத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று பரிந்துரைக்கிறார்.

உலக ஞானம் (3:14-16)

யாக்கோபு, உலக ஞானத்தைக் காட்சிப்படுத்துகிற "சகோதரர்களைக்" குறித்துக் கவலையாக இருக்கிறார் என்று ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. யாரேனும் ஒருவர், "உலகஞானத்தை யாரேனும் ஒருவர் காட்சிப்படுத்துகிறார் என்று நீங்கள் எவ்வாறு கூறமுடியும்?" என்று கேட்கலாம். யாக்கோபு, "உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், ..." என்று கூறுகிறார் (3:14). சத்தியத்தின் அறுவைச் சிகிச்சைக் கத்தியினால் யாக்கோபு, விஷயத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியைச் சரியாகப் பிளக்கிறார். உலகஞானமானது தன்னையே காட்சிப்படுத்துகிறது. விரோதமும் பேராசையும், தேவனுக்கு அர்ப்பணித்த வாழ்வின் கனியாக இருப்பதில்லை. உண்மையில் அவைகள் பூமிக்குரியவைகள், வேதவசனத்தின் படியில்லாதவைகள் மற்றும் பிசாசுக்கடுத்தவைகள் என்று விவரிக்கப்படுகின்றன. மேலும் அவர், நொறுங்கிய இருதயமும் நறுங்கின ஆவியுமே, தேவபக்தியற்ற இந்த எண்ணப்போக்குகளைத் துரத்தக்கூடிய ஒரே வழியாக நமக்கு உள்ளது என்றும் கூறுகிறார். பழைய நொண்டிச் சாக்குகளைத் தேவன் ஏற்றுக்கொள்ள மாட்டார். நாம், "நான் இருக்கும் வகைமாத்திரமே இவ்வாறு உள்ளது; நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அதை விட்டு விடுங்கள்" என்றோ அல்லது "நான் உண்மையில் முரடனாகவோ அல்லது இடர்ப்பாடுள்ளவனாகவோ இருப்பதில்லை; நான் ஒளிவு மறைவற்றவனாக மற்றும் எளிமையாகப் பேசுபவனாக மாத்திரம் இருக்கிறேன்" என்றோ கூறினால், அவர் கவனிக்க மாட்டார். நமது வாழ்வில் உள்ள தவறுகளை நாம் அறிக்கையிடக் கற்றுக்கொள்ளாத வரையிலும், நாம் உலக ஞானத்தினால் தொடர்ந்து தவறாகக் கையாளப்படுபவர்களாகவே இருப்போம். தேவனுடைய ஞானம் கிரியை செய்யும்போது, தாழ்மை உணர்வும் தேவன் மகிமைப்படுத்தப் படுதலைக் காண்பதற்கான விருப்பமும் மேலோங்குகிறது.

உலகஞானமானது பரிதாபமான விளைவுகளுக்கு வழிநடத்துகிறது: "வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு" (3:16). உலகஞானமானது, மக்களை ஒன்றுகூட்டிக் கொண்டுவருவதற்குப் பதிலாக, மக்களைப் பிரித்து விரட்டுகிறது. பல ஆண்டுகளாக, மனித இனமானது, மனித மனதின் வலிவார்ந்த தன்மையை நிரூபித்துள்ளது. தொழில் நுட்பம், ஆராய்ச்சி முதலியவற்றின் மூலமாக, மனித இனம் அதிக அறிவுக் கூர்மையடையத் தொடர முடியும் என்று நம்புவது எவ்வளவு சுலபமாக உள்ளது! பூமிக்குரிய அறிவு மற்றும் ஞானம் ஆகியவற்றைக் காட்டிலும் அதிகமான விஷயங்கள் தேவைப்படுகின்றன என்று நாம் நம்பி இணங்க, உலகத்தின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைகளைத் தற்செயலாகப் பார்த்தலே போதுமானது. பூமிக்குரிய ஞானத்திற்கு ஒரு மாற்று நமக்கு கிடைக்கிறது என்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய விஷயமாக உள்ளது.

விசுவாசத்தின் ஞானம் (3:17, 18)

மேலான ஞானமானது தேவனிடத்தில் இருந்து வருகிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தேவன் ஞானத்தைக் கொடுக்கிறார் (யாக்கோபு 1:5), நாம் அதைத் தாழ்மையுடனும் நன்றி உணர்வுடனும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று யாக்கோபு ஏற்கனவே கூறியிருக்கிறார்.

பரத்தில் இருந்து வரும் ஞானத்தை நாம் உணர்ந்தறிவதற்காக, அதை யாக்கோபு ஏழு பண்புகளுடன் சித்தரிக்கிறார்.

தூய்மை. நாம் சேவிக்கிற தேவன் "தூய்மையான" தேவனாக இருக்கிறார், மற்றும் அவர் தருகிற ஞானமானது துன்மார்க்கத்துடன் கலக்கப்படாததாக உள்ளது. விசுவாசத்தின் ஞானத்துடன் இருக்கும் தனிநபர், சுய ஆர்வம் மற்றும் சுய பேராவல் ஆகியவற்றில் இருந்து விடுதலையானவராக இருக்கிறார். தூய்மை யான நபருடைய நடத்தைக்குப் பின்னால் அநீதியான எந்த நோக்கங்களும் பதுங்கி இருப்பதில்லை.

சமாதானத்தை நேசித்தல். விசுவாசத்தின் ஞானமானது, தனிநபர்களை ஒருவர் மற்றவருடன் நெருக்கமாக்குவதால், அது சரியான உறவுமுறைகளை உண்டாக்குகிற ஞானமாக உள்ளது. விசுவாசத்தின் ஞானமானது, ஒருவர் அன்புகூரும் இருதயத்தையும் சமாதானமான நிலைப்பாட்டையும் கொண்டிருக்கக் காரணமாகிறது. தேவனிடத்தில் இருந்து வருகிற ஞானமானது, தனிநபர்களை "சண்டை இட்டுக்கொள்ளவோ" அல்லது தேவையற்ற விவாதங்களில் மகிழ்ச்சியடையவோ அனுமதிக்காது.

சாந்தம். இவ்வார்த்தையானது கடினமானதாக உள்ளது, ஏனெனில் கிரேக்க மொழியில் உள்ள வார்த்தைக்கு இணையான ஆங்கில வார்த்தை இதற்கு இல்லை. கார்ல் சான்ட்பர்க் என்பவர் ஒருமுறை, ஆபிரகாம் லிங்கனை "வெல் வெட் இரும்பு" என்று விவரித்தார். அதுவே "சாந்தம்" என்ற சொற்றொடர் அர்த்தப்படுத்தும் விஷயத்திற்கு அனேகமாக ஒரு நல்ல விவரிப்பாக இருக்கலாம். விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசு கண்ணோக்கியபோது (யோவான் 8) மற்றும் அவளுக்கு மன்னிப்பை வழங்கியபோது, அவர் காட்சிப்படுத்தியது இந்தப் பண்பாகவே இருக்கிறது.

இணக்கம். ஒருவர் எல்லா வகையான இணக்கத்தையும் குறிப்பிட முடிந்திருந்தும் யாக்கோபு எதை அர்த்தப்படுத்துகிறார் என்று

குறிப்பிடாதிருக்க முடியும். நாம் இந்த வார்த்தையை, இது பயன்படுத்தப்பட்ட கருத்தில் எடுத்துக்கொண்டால், இது உண்மையில் ஞானமுள்ள மனிதர் தேவனுக்குக் கீழ்ப்படிய எப்போதும் தயாராக இருக்கிறார் மற்றும் மனவிருப்பமாக இருக்கிறார் என்று அர்த்தப்படுகிறது.

இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்திருத்தல். இவ்விரு சொற்றொடர்களும் ஒன்றாகச் செல்லுகின்றன மற்றும் இவைகள், 16ம் வசனத்தில் உள்ள "சகல துர்ச் செய்கைகளுக்கும்" நேர்மாறானது என்ற வகையில் கண்ணோக்கப்பட வேண்டும். "இரக்கம்" என்பதற்கான கிரேக்க வார்த்தை இடர்ப்பாட்டில் உள்ளவர்கள் மீது பரிவிரக்கம் என்று நேரடி அர்த்தப்படுகிறது மற்றும் இது "நற்கனி" என்ற வார்த்தையுடன் தொடர்புகொண்டுள்ளது, ஏனெனில் கிறிஸ்தவப் பரிவிரக்கம் என்பது ஒருக்காலும் வெறும் உணர்வாக மாத்திரம்இருப்பதில்லை. தேவையில் உள்ள நபருக்கு உதவி செய்யப்படும் வரையிலும், கிறிஸ்தவர் தேவையில் உள்ள அந்தத் தனிநபர்மீது பரிவிரக்கம் கொண்டுள்ளதாகக் கூற முடியாது.

பட்சபாதம் இல்லாமை. மீண்டுமாக இது மொழிபெயர்ப்பதற்கு ஒரு கடினமான வார்த்தையாக உள்ளது, ஏனென்றால் கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பான்மையான விளக்கவுரைகள், "தீர்மானமான தன்மை" என்பது மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாக இருக்கலாம் என்று உய்த்துணருகின்றன. விசுவாசத்தின் ஞானமானது தனது இயல்பில் உறுதியானதாக உள்ளது மற்றும் இது நம்பிக்கை மற்றும் செயல் ஆகியவற்றில் சீர்பொருத்தமாக இருப்பதாகக் காண்பிக்கிறது.

மாயமற்றது. உண்மையான ஞானமானது நேர்மையானதாக உள்ளது மற்றும் அது தான் இல்லாத நிலையொன்றைக் கொண்டிருப்பதாக நடிப்பதில்லை. மற்றவர்களுடனான நமது உறவில் நாம் நேர்மையானவர்களாக, நேர்மையின்மையின் சாயல் எதுவும் இல்லாதவர்களாக, மற்றும் உண்மைகளை மறைத்தல் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். விசுவாசத்தின் ஞானமானது, நீங்கள் உங்கள் சொந்த ஆதாயத்திற்காக ஒரு பாகம் நடித்தல் என்பது ஒருக்காலும் கொண்டிருக்கத் தேவையில்லை என்று கூறுகிறது.

முடிவுரை

நாம் சத்தியத்தை அறிவிக்கையில், நமது கிறிஸ்தவ வாழ்வின் ஆவியானது, இராஜ்யத்தின் வளர்ச்சிக்கு முக்கியமானதாக உள்ளது. அதுவே யாக்கோபு, "நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது" என்று கூறுவதற்குக் காரணமாக உள்ளது (3:18). நாம் வாழ்வது எப்படியோ, அப்படியே நாம் இருக்கிறோம், மற்றும் நாம் வாழ்வது எப்படியோ அதையே நாம் விதைக்கிறோம்.

எல்லாரும் ஒரு மேதையின் புத்திக்கூர்மையைக் கொண்டிருக்க இயலாது, ஆனால் யாக்கோபு விவரிக்கும் ஞானத்தை ஒவ்வொருவரும் கொண்டிருக்க முடியும். இவையாவையும் தேவனுடைய கொடைகளாக உள்ளன, இவை நாம் கேட்டுப் பெறவேண்டியவையாக உள்ளன.

11

கட்டுப்படுத்துதலுக்குப் போராட்டம் (4:1-10)

சர்வதேச வேதாகமக் கல்லூரியின் மாணவன் என்ற வகையில் நான், ஒருநாள் சபை ஆராதனையின் போது, நன்கு அறியப்பட்ட மற்றும் அதிகமாய்ப் பயணம் செய்கிற ஒரு பிரசங்கியார் "நாம் ஒருவர் மற்றவருடன் எவ்வாறு பழகுவது என்று தெரியவில்லை என்பதே சபையில் நாம் கொண்டுள்ள முதல் பிரச்சனையாக உள்ளது" என்று கூறியதைக் கேள்விப்பட்டேன். இளநிலைப்பட்டம் பயிலுபவர்களில் பெரும்பான்மையானவர்களை போலவே பலகாரணங்களினால் நான் அந்தக் கூற்றினால் மிகவும் மனம் ஈர்க்கப்பட்டேன், அந்தக்கூற்று என்னைத் தாக்கிற்று. பல காரணங்களுக்காக, நான் அந்தக் கூற்றினால் செல்வாக்கு செலுத்தப்பட்டேன். முதலாவது, அந்தக் கூற்றைக் கூறிய மனிதரின் பயணங்கள் மற்றும் அவர் ஏற்படுத்தியிருந்த தொடர்புகள் ஆகியவை என்மீது செல்வாக்குச் செலுத்தியிருந்தன. அடுத்தது நமது ஐக்கியத்திற் குள்ளாகப் பல பிரிவினைகள் நிலவின என்ற விஷயம் என் மனதில் ஆழப்பதிந் திருந்தது. பரிசுத்தவான்கள் எங்கு ஒன்று கூடுகின்றனர் என்ற வெளியீட்டின் 1987ம்ஆண்டுப் பதிப்பானது, கிறிஸ்துவின் சபைகளின், மாறுபட்ட 19 வகைப் பிரிவுகளைப் பட்டியல் இட்டுள்ளது. கடைசியாக, அதிர்ந்தெழுந்து வளருகிற சபைகள், தேவையற்ற கருத்து வேறுபாடு, முரண்பாடு அல்லது பிரிவினை ஆகியவற்றில் "நின்று தழைக்கின்றன" என்று நான் கேள்விப்பட்ட விஷயத்தை நினைவுகூர்ந்தேன். ஆனால் இது பிரச்சனையல்ல, பிரச்சனையின் அடையாளமாக மட்டும் உள்ளது என்பதை, நமது வேதவசனப்பகுதியான யாக்கோபு 4:1-10ல் இருந்து நாம் காணுவோம்.

யாக்கோபின் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்கள், இன்றைய நாட்களில் உள்ள கிறிஸ்தவர்களைக் காட்டிலும் அதிகமாக வேறுபட்டு இருப்பதில்லை என்பதை யாக்கோபின் எழுத்துக்களில் இருந்து நாம் கண்டறிகிறோம். அவர்கள் வாழ்வின் உள்ளாகவும் புறம்பாகவும் பிரச்சனைகள் தொற்றியிருந்தன. அவர்கள் பிறருடன், விசேஷமாக இன்னொரு பொருளாதாரப் பிரிவினருடன் தக்கவகையில் தொடர்பு கொள்வதில் சிரமம் கொண்டிருந்தனர். அவர்களில் பலர், தங்கள் நடக்கையின்மீது, தங்கள் விசுவாசம் செயல்தாக்கம் ஏற்படுத்துவதை அனுமதிக்காது இருந்தனர். சிலர் அதிகம் பேசிக்கொண்டு, விவாதித்துக்கொண்டு, விமர்சித்துக்கொண்டு அல்லது தங்களையே உயர்த்திக்கொண்டு இருந்தனர். இப்போது நாம், இந்த ஆதிகால கிறிஸ்தவர்கள் இன்னொரு வழியில் நம்மைப் போல் இருந்தனர் என்று காணுகிறோம்: நீதியின் விளைச்சலுக்கு அவசியமான சமாதான சூழ்நிலையைப் பராமரிப்பதற்குப்பதிலாக (3:18). நிலையான "சண்டைகள் மற்றும் முரண்பாடுகள்" (4:1). என்று சூழ்நிலையிலேயே அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் (மற்றும் நாம்) ஏன் ஒருவர் மற்றவருடன் நன்கு பழக முடியவில்லை

என்பதற்கான காரணத்துடன் யாக்கோபு அவர்களை (மற்றும் நம்மை) எதிர் கொள்கிறார்.

சண்டைகள் (4:1-3)

உடனடியாக (4:1) யாக்கோபு, அவர்களின் பிரச்சனைகளுடைய தோற்றத்தை அவர்களின் "யுத்தங்கள் மற்றும் சண்டைகள்" ஆகியவற்றின் ஆதாரமூலத்தை அவர்கள் அறியவேண்டும் என்று விரும்புகிறார். கிறிஸ்தவர்களென்று தங்களை அறிவித்துக்கொண்டவர்களிடத்தில் யாக்கோபு பேசினார். அவர், "உங்களுக்குள்ளே" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். கிறிஸ்துவின் பின்பற்றாளர்கள் என்ற வகையில் அவர்கள் நன்கு இசைந்திருக்கவில்லை. புதிய ஏற்பாட்டு சபைகள் சிலவற்றை ஆய்வு செய்கையில், அவைகள், கருத்து வேறுபாட்டில் தங்கள் பங்கைக் கொண்டிருந்தன எனபதைக் காணுகையில் நமக்குத் திகைப்பு ஏற்படுகிறது. கொரிந்து நகரில் இருந்த சபையின் உறுப்பினர்கள், ஒருவருக்கொருவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துகொண்டனர், மற்றும் சபைகூடிவருகையில் அவர்களில் ஒருவர் பிறருக்கு எதிராகப் போட்டியிட்டனர் (1 கொரிந்தியர் 6:1-8; 14:23-40). இருந்த விசுவாசிகள், ஒருவரையொருவர் "கடித்துப் பட்சித்துக்" கொண்டிருந்தனர் (கலாத்தியர் 5:15). பவுலுக்கு மிகவும் பிரியமான பிலிப்பி நகரத்து சபையிலும்கூட, கருத்து ஒருமைப்பட இயலாத இரு பெண்கள் இருந்தனர் (பிலிப்பியர் 4:2, 3). தொடக்ககால சபையில் இருந்ததும், 1980/2010களில் (அல்லது இன்றைய நாட்களில்) இருக்கத் தொடருவதுமான ஒரு பிரச்சனையைப் பற்றி யாக்கோபு எடுத்துரைக்கிறார்.

பிரச்சனையை விவரிக்க, யாக்கோபு பயன்படுத்துகிற வார்த்தைகளின் பலத்தைப்பற்றி நாம் ஆழ்ந்து சிந்தித்தல் என்பது நம்மை மூழ்கடிப்பதாக உள்ளது. NIV *வேதாகமம், இவ்விடத்தில் கொண்டுள்ள* "fights and quarrels" *என்ற தனது மொழிபெயர்ப்பில், அனேகமாகப் பலவீனமாக உள்ளதென்றே கூறலாம். பிரதானமான பிற மொழிபெயர்ப்புகளில்* (KJV, ASV, RSV), "wars and fightings" *("யுத்தங்களும் சண்டைகளும்") என்றுள்ளது. 4:1-3ல் யாக்கோபு, யுத்தத்தின் மொழிநடையை உருவகமாகப் பயன்படுத்துகிறார். ஆனால் யாக்கோபு உருவக நடையைப்பயன்படுத்துகிறார் என்பதால் மாத்திரம், அவரது வார்த்தைகளில் உள்ள வலிவையும், அவை நமது இருதயங்களில் அடித்துத்தாக்க விருப்பநோக்கம் கொண்டுள்ள பயங்கரத்தையும் நாம் புறம்பே எடுத்துப்போடாது இருப்போமாக. இருபதாம் நூற்றாண்டில், ஊடகத்தின் முன்னேற்றங்கள் மற்றும் உலகம் முழுவதிலும் இயல்பான யுத்தங்களின் அறிக்கைகள் ஆகியவற்றின் காரணமாக, நமது உணர்வுகள் கடினம் அடைந்துள்ளன. எல்லாத் தலைமுறைகளிலும் அனேகமாக நாம், யுத்தம் என்ற சொல் குறித்து, தனிப்பட்ட அல்லது ஒழுக்கரீதியான சினம் கொள்ளும் உணர்வைக் குறைந்த அளவே கொண்டுள்ளோம் எனலாம். யாக்கோபு கூறுகிற விஷயத்திற்கு நாம் நமது உணர்வைத் தட்டி எழுப்புவது அவசியமாகிறது. கிறிஸ்தவர்கள் மத்தியில் உள்ள முரண்பாடுகள் மற்றும் சண்டைகள், விரோதங்கள் மற்றும் மோசமான உணர்வுகள் ஆகியவற்றைப் பற்றிக் கூறுவதற்கு வேறு வழியில்லாததால் அல்ல, ஆனல் அவற்றின் பயங்கரத்தை விளக்குவதற்கு வேறு வழியில்லாத காரணத்தினாலேயே, அவற்றை விவரிப்பதற்கு யுத்தத்தின் வார்த்தைகளை யாக்கோபு பயன்படுத்துகிறார். உள்ளூர் சபைக்குள் இருக்கும் உறவுமுறைகளைத்*

தேவனுடைய கண் மூலமாக அவர் (யாக்கோபு) காணுகிறார், நாம் அவ்வாறே காண வேண்டும் என்று விரும்புகிறார்.

திறன்மிக்க அறுவைச் சிகிச்சை நிபுணரைப் போல் யாக்கோபு, சரீரத்தை (சபையை) அழித்துக் கொண்டிருக்கும் புற்றுநோயைத் திறந்து வெளிப்படுத்துகிறார். யாக்கோபுவின் காலத்தில் இருந்த கிறிஸ்தவர்கள் (மற்றும் இருபத்தியோராம் நூற்றாண்டில் உள்ள கிறிஸ்தவர்கள்) தங்கள் சுய இச்சைகளாலும் விருப்பங்களாலும் ஆளப்பட்டு மற்றும் கட்டுப்படுத்தப்பட்டு இருப்பதே, அவர்கள் ஒருவர் பிறருடன் இசைந்திருக்க இயலாமைக்குக் காரணமாகும் (4:1ஆ). கட்டுப்படுத்தலுக்கான நிலையானதொரு போராட்டம், கிறிஸ்தவர்களுக்குள்ளாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. விசுவாசிக்கு உள்ளாக நடக்கும் இந்தப் போராட்டத்தை விவரிக்க, வரைவளவான மொழியை யாக்கோபு பயன்படுத்துகிறார். இந்தப் போராட்டம், சுயநலமுள்ள வாழ்வு மற்றும் சுயநலமற்றவாழ்வு ஆகியவற்றிற்கு இடையில் நாம் மேற்கொள்ளும் தெரிவைப் பற்றியதாக உள்ளது.

தவறான முடிவு மேற்கொள்ளப்படும்போது, கட்டுப்படுத்தப்படாத அந்த சுய இச்சையானது, ஒரு கிறிஸ்தவர் இன்னொரு கிறிஸ்தவரைப்பற்றி தம் மனதில் கொண்டுள்ள எண்ணப்போக்கு மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றில் மேலாதிக்கம் செலுத்திற்று (4:2). உள்ளூர் சபையின் உறவுமுறைகள் அழிக்கப்பட்டிருந்தன என்பது தெளிவு. ஒரு கிறிஸ்தவர், வேறுயாருக்கோ சென்றுகொண்டிருந்த மதிப்பை தாம் பெற்றுக் கொள்ள விரும்பினார், அதைப்பெற அவர் எதைவேண்டும் என்றாலும் செய்வார். அவர்களின் சூழ்நிலைகள் சிதைந்திருந்தன; அவர்களின் ஜெபங்களும்கூட அவர்களின் இச்சைகளினால் மோசம் போக்கப்பட்டு இருந்தன (4:2, 3).

இன்றைய நாட்களில் நாம் இந்தப் பிரச்சனையைக் கொண்டுள்ளோமா? ஆம்! "பொறுப்பாளராக அல்லது கட்டுப்படுத்துபவராக இருக்கப் போவது யார்?" என்ற கேள்வியில் இருந்தே சபையின் பெரும்பான்மையான பிரச்சனைகள் வருகின்றன. பிரச்சனையின் இவ்வகைகள், முந்திய அதிகாரத்தில் யாக்கோபு, "கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும்" என்று விவரித்துள்ளதான, நமது சொந்த சுய இச்கைளினால் போஷிக்கப்படுகின்றன. நம்மிடத்தில் எல்லாப் பதில்களும் உள்ளன என்று நாம் நம்பி இருக்கிறோம் மற்றும் நடத்துவதற்கு மக்கள் நம்மை ஏன் நோக்குவதில்லை என்று நம்மால் புரிந்துகொள்ள முடிவதில்லை. அவர்கள் நம்மை நோக்காத போது, நாம் மக்களை மற்றும் சூழ்நிலைகளை நமது விருப்பத்திற்கேற்பக் கையாண்டு, அவர்கள் நமது வழியைக்கண்ணோக்கும்படி செய்கிறோம்.

யாக்கோபு பயன்படுத்துகிற மொழிநடையானது, நாம் நமது சிறுவேளை கருத்து வேறுபாடுகள் மற்றும் அவ்வப்போதைய சச்சரவுகள் ஆகியவை, அப்படிப்பட்ட விவரிப்புக்குப் பாத்திரமானவை என்ற வகையில் அவற்றைக் காண நேர்மறையாக மறுக்க வேண்டும் என்று உணரும்படிக்கு, மிகவும் வரம்பு மீறியதாக, மிகவும் மிகைப்படுத்தப் பட்டதாக ஒலிக்கிறது என்பது பிரச்சனையாக உள்ளது. விவாதத்தின் இந்த வரிசையை நாம் எடுத்துக்கொண்டால், நமது சிந்தனைகள் இயேசுவுக்குக் கீழ்ப்படிதலுக்கு அடிமையாக்கப்படுதல் என்ற நமது சிந்தனை, எவ்வளவு பூரணத்துவம் அற்றதாக எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது என்பதை மாத்திரம் நாம் காண்பிப்போம். தன் சகோதரனிடத்தில் கோபம்

கொள்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஆளாவான் என்று இயேசு கூறியபோது (மத்தேயு 5:21, 22), அவர் மிகையாகக் கூறுபவராக இருந்தாரா? தன் சகோதரனில் அன்புகூரத் தவறுபவன் காயீனைப் போல் இருக்கிறான் என்று யோவான் கூறியபோது (1 யோவான் 3:11, 12), அவர் மிகையாகக் கூறுபவராக இருந்தாரா? உள்ளூர் சபையின் உறவுமுறைகளின் முக்கியத்துவத்தை நாமே குறைத்துப் போட்டவர்களாக இருக்கிறோம். எவரொருவருடனும் நன்கு பழக இயலாத, முன்கோபமுள்ள ஒரு சகோதரர் அல்லது சகோதரிமீது நாம், சகிப்புத் தன்மையின் தவறான வகையுடன் புன்சிரிப்பை வகைப்படுத்துகிறோம். உறுப்பினர்களில் இருவர் தவறிப்போய், ஒருவர் மற்றவருடன் இணைக்கமாக முயற்சி செய்யா திருக்கும்போது, நாம் நமது தோள்களைக் குலுக்கிக் கொள்கிறோம். "யுத்தம்" பற்றி ஒருக்காலும் சகிப்புத் தன்மையற்றிருக்கவும் அல்லது "சண்டைகள்" பற்றி நமது தோள்களைக் குலுக்கிவிட்டு சும்மா இருந்துவிடாமலும் இருக்கக் கற்றுக்கொள்வோமாக.

சுயநலத்திற்குக் கண்டனம் (4:4-6)

நமது சொந்த சுயநலமானது, நீதியின் விளைச்சலை உண்டாக்கக் கூடிய சமாதானத்தை அழித்துப் போடுகிறது. ஆகவே யாக்கோபு, மேட்டிமையைத் தாழ்மைப் படுத்துகிறார் (4:4). நமது சுயநலம், பிறருடனான நமது உறவுமுறைகளை அழித்தது மட்டுமின்றி, அது நம்மைத் தேவனிடத்தில் இருந்து பிரித்துள்ளது. யாக்கோபு என்ன கூறுகிறார் என்பதைப் புரிந்துகொள்ள, புதிய ஏற்பாட்டில் தேவனுடைய மக்கள் அவரது மணவாட்டியாகச் சித்திரிக்கப்படுகின்றனர் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும். கர்த்தருக்குள் நாம் கொண்டுள்ள விசுவாசம், "நான் செய்கிறேன்" என்று கூறுதலை உள்ளடக்குகிறது. தேவனு டைய சித்தம் தவிர, வேறு எந்த விருப்பத்திற்காவது பற்றுறுதியுடன் இருத்தல் என்பது ஆவிக்குரிய வகையில் விபசாரம் செய்தல் என்பதற்குச் சமமான தாக உள்ளது. உலகத்தின் சுயநலமான எண்ணப்போக்கினால் கட்டுப்படுத்தப் பட்டிருத்தல் என்பது தேவனுடைய பற்றுறுதிக்கு முற்றிலும் ஒத்திசைவு அற்றதாக உள்ளது. ஒரு தெரிவு மேற்கொள்ளப்படவேண்டும்; அது தேவன் அல்லது சுயம் நம்மீது கட்டுப்பாடு செலுத்துதல் என்பதாக இருக்க வேண்டும்; இவ்விரண்டும் முதன்மை நிலையில் இருக்க இயலாது.

யாக்கோபு 4:5, "நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேத வாக்கியம் வீணாய் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா?" என்பது விளக்கி உரைப்பதற்கும் விளக்கவுரையாளருக்கும் கடினமான வசனப்பகுதியாக உள்ளது. இவ்வசனத்தில் ஒருசில பிரச்சனைகள் தோன்றுகின்றன. முதலாவது, "வேத வாக்கியம் ... சொல்லுகிறதென்று" என்ற வார்த்தைகள், சில வேதவசனப் பகுதிகள் மேற் கோள் காண்பிக்கப்பட வேண்டும் அல்லது குறைந்த பட்சம் மறைமுகமாக உணர்த்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பை உருவாக்குகின்றன, ஆனால் அந்த எதிர்பார்ப்பு நிறைவேற்றப் படுவதில்லை. இரண்டாவது, இவ்வசனத்தின் பிற்பாதி எவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பதில் கல்வியாளர்கள் உடன்படக்கூட முடிவதில்லை. மாறுபட்ட மொழிபெயர்ப்புகள் பின்வருவதைச் சுட்டிக்காண்பிக்கின்றன: "... நமக்குள் தங்கியுள்ள ஆவியானவர்மீது அவர், பொறாமைகொள்ள இச்சையாக இருக்கிறார்?" (KJV) அல்லது "... நமக்குள்

தங்கும்படி அவர் ஏற்படுத்திய ஆவியானவர்மீது அவர், பொறாமைகொள்ள ஏங்குகிறார்" (RSV). இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடிய நிலையில் இல்லாத போதும்கூட, நமது தேவன் வைராக்கியமுள்ள தேவனாக இருக்கிறார் மற்றும் அவர், போட்டியான எந்த ஆவியையும் பொறாமை தவிர வேறு எவ்வகையிலும் கண்ணோக்க இயலாது என்று நினைத்தல் தர்க்கரீதியாகச் சரியானதாகவே காணப்படும். ஒவ்வொரு இருதயத்தின் முற்றான தனிப்பட்ட அர்ப்பணித்தலைத் தேவன் விரும்புகிறார்.

ஆனால், வைராக்கியமுள்ள இந்த தேவன் கிருபையுள்ள தேவனாகவும் இருக்கிறார். யாக்கோபு *"அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது"* என்று கூறுகிறார் (4:6). முற்றிலுமான அர்ப்பணித்தல் என்பதே தேவனுடைய கொள்கையாக உள்ளது என்று நாம் ஏற்கனவே அறிந்திருக்கிறோம். ஆனால் நாம் விரும்பியவற்றிற்குப் பின் செல்வதற்காக நாம் கர்த்தரைக் கைவிட்டிருந்த வேளைகள் இருந்துள்ளன என்பதை நாம் யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். கர்த்தர் மாபெரும் வேண்டுகோள்களை ஏற்படுத்துகிறார் மற்றும் அவற்றை நிறைவேற்றுவதற்கு மாபெரும் கிருபையைக் கொடுக்கிறார். தெரிவு என்பது விசுவாசிகளுக்குத் தெளிவானதாக உள்ளது. அவர்கள் தங்களைத் தாழ்த்தி தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது தங்கள் சுய சேவித்தல் என்ற எண்ணப்போக்கில் தொடர்ந்து, தேவனுடைய எதிர்ப்பை அனுபவித்து உணர முடியும்.

தெரிவு (4:7-10)

சுயநலத்தை நமது வாழ்வில் இருந்து நீக்குவதற்காகவும் தேவனைக் கட்டுப்படுத்துபவராக இருக்கச் செய்வதற்காகவும், கிறிஸ்தவர்கள் நமது இச்சைகளுக்கு விட்டுக்கொடுத்துவிடாது "தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க" வேண்டும் என்று யாக்கோபு கூறுகிறார் (4:7). "கீழ்ப்படிதல்" என்ற வார்த்தை அடிப்படையில் ஒரு இராணுவ வார்த்தையாக உள்ளது மற்றும் இது "கீழான பதவிக்கு" என்று அர்த்தப்படுகிறது. சுயநலத்தில் இருந்து குணமடைவதற்கு, ஒரு கிறிஸ்தவர் தம்மை கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படுத்த வேண்டும்.

கீழ்ப்படுத்துதல் என்பது வேதாகமத்திலுள்ள கடினமான பாடக்கருத்துக்களில் ஒன்றாக உள்ளது. சிலவேளைகளில் நாம் இந்தச் சொற்றொடரைக் காணும்போது, நாம் நின்று, "அது அர்த்தப்படுத்துவது என்ன?" அல்லது "அதை நான் எவ்வாறு செய்யலாம்?" என்று கேட்கிறோம். ஆனால் யாக்கோபு நிருபத்தில் பிரச்சனை அதுவல்ல! கீழ்ப்படிதலின் ஐந்து படிநிலைகளைப் பட்டியலிடுவதன் மூலம் யாக்கோபு அந்தக் கீழ்ப்படிதல் பற்றிய சித்தரிப்பை விசுவாசிக்கு நிறைவாக்குகிறார்.

முதலாவது, *"ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்"* (4:7). பொல்லாங்கைக் கவர்ச்சிகரமானதாகக் காண்பிக்கும் திறமை தவிர, சாத்தான் கிறிஸ்தவர் மீது எந்த அதிகாரத்தையும் கொண்டிருப்பதில்லை. நீங்கள் அந்தப் பளபளப்பினால் பிடிக்கப்பட்டு பிசாசின் மாயங்களுக்கு எதிர்நின்ற உடன், அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் என்று யாக்கோபு வாக்குறுதி

அளிக்கிறார்.

இரண்டாவது, "தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார் ..." (4:8). நமது பாவமும் சுயநலமும் நம்மைத் தேவனிடத்தில் இருந்து பிரித்து வைத்துள்ளன. நமது சுயநலம் குணமாக்கப் படுவதற்கு, கர்த்தருடன் நெருக்கமான ஒரு உறவு முறைக்கு விசுவாசி திரும்ப வேண்டும்.

மூன்றாவது, "... பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்" (4:8). ஒருவர் கர்த்தரிடம் எவ்வளவுக்கு எவ்வளவு நெருங்குகிறாரோ அவ்வளவுக்கு அவரது சொந்த வாழ்வில் உள்ள பாவத்தின் மீது கடும் வெறுப்பு அதிகமாகிறது என்று யாக்கோபு அறிகிறார். சுயநலம் என்பது வாழ்வை மாசுபடுத்தியுள்ளது மற்றும் தூய்மைப்படுத்துதல் தேவைப்படுகிறது. "கைகள்" மற்றும் "இருதயங்கள்" என்ற வார்த்தைகளைக்கொண்டு அவர் (யாக்கோபு), நாம் உள்ளாகவும் புறம்பாகவும் சுத்திகரிக்கப்படவேண்டியது அவசியம் என்று கூறுகிறார்.

நான்காவது. "நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து அழுங்கள்; உங்கள் நகைப்பு துக்கிப்பாகவும், உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது" (4:9). (மத்தேயு 5:4ல்) இயேசுவின் வார்த்தைகளை எதிரொலித்து யாக்கோபு, நாம் உண்மையாகவே தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் நாம் உண்மையாகவே மனந்திரும்ப வேண்டும் என்று கூறுகிறார்.

ஐந்தாவது, "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (4:10). நாம் படைக்கப்பட்டவர்கள் என்பதையும் யெகோவா படைப்பவர் என்பதையும் நாம் உணர்ந்தறிய வேண்டும். நாம் இந்தப் புரிந்துகொள்ளுதலுக்கு வரும்போது இது, கீழ்ப்படிதலுக்கு உதவக்கூடிய மன அமைவை நாம் கொண்டிருக்க நமக்கு உதவுகிறது. இது நமது சித்தத்தை அல்ல ஆனால் பரலோகத்தில் உள்ள நமது பிதாவின் சித்தத்தைச் செயல்படுத்தும் ஊழியர்கள் என்ற வகையில் நமது பணிப்பொறுப்பை நாம் புரிந்துகொள்ளக் காரணமாகிறது. தேவனுக்குக் கீழ்ப்படிந்திருத்தல் என்பது மாபெரும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்குள் வழிநடத்துகிறது. யாக்கோபு இங்கு எழுதுகிற உயர்த்துதல் என்பது மேலான வாழ்வு பற்றியதாகும். கிழக்கத்திய முடியரசர் ஒருவருக்கு முன்பாக, இரக்கத்தை வேண்டி முகங்குப்புற விழும் ஒரு நபர் என்பதே இவ்விடத்தில் யாக்கோபு சித்தரித்த சித்திரமாக இருந்தது. அந்த முடியரசர் தமது அரியணையில் இருந்து முன்னோக்கிச் சாய்ந்து, வேண்டுகோள் விடுப்பவரின் முகத்தைத் தரையில் இருந்து தூக்குகிறார். அந்த நபர், தமது வேண்டுகோளை அரசர் நிறைவேற்றினார் என்று அறிந்து, மாபெரும் சந்தோஷத்துடன் எழுகிறார்.

முடிவுரை

இவ்வசனப்பகுதியில் யாக்கோபு கூறுவதன் முக்கியத்துவத்தை நாம் காண்கிறோமா? சகோதரருக்கு இடையிலான "யுத்தங்கள் மற்றும் சண்டைகள்" என்பவை தீவிரமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்களாக உள்ளன என்று நாம் உணர்ந்து அறிகிறோமா? அந்த "யுத்தங்களும் சண்டைகளும்" நமது சுயநலமான இச்சைகளினால் உண்டாகின்றன என்று நாம் காண்கிறோமா? இந்த சுயநல இச்சைகள், தேவனுடனான நமது உறவுமுறையில் நாம் ஒரு வேசியைப் போல்

செயல்படக் காரணமாகின்றன என்று நாம் காண்கிறோமா? தேவனுக்கு முழுமை யாகக் கீழ்ப்படிதல் என்பதே, இந்தச் சுயநல இச்சைகளில் இருந்து நாம் நம்மை விடுவித்துக்கொள்வதற்கான ஒரே வழியாக உள்ளது.

நீங்கள் உங்களைத் தேவனுக்குக் கீழ்ப்படிதலில் ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா?

12

தேவனும் வம்புப்பேச்சும் [4:11, 12]

கடந்த ஆண்டில் நாங்கள், ஜிம் பேக்கர் மற்றும் PTL கிளப் ஆகியவற்றின் வீழ்ச்சியை தொலைத் தொடர்பு நிகழ்ச்சியில் கவனித்திருக்கிறோம். அதன் செய்தி எல்லா இடங்களிலும் இருந்துள்ளது: செய்தி நிகழ்ச்சி வலைப்பணி, வாரந்திரச் செய்திப் பத்திரிக்கைகள் மற்றும் மளிகைக்கடை வம்புப் பேச்சுக்கள் ஆகியவற்றில் கூட இருந்தது. வழக்கறிஞர்கள் சட்டப்பூர்வமான செயலின் சாத்தி யமான விளைவுகள் பற்றிக் கலந்துரையாடுதலை நாங்கள் கவனித்திருக்கிறோம் மற்றும் நகைச்சுவை நடிகர்கள் (கிண்டலான அல்லது கிண்டல் இல்லாத) நகைச்சுவைகளைக் கூறுவதைக் கேள்விப்பட்டு இருக்கிறோம்.

தேவனுக்கு ஊழியம் செய்ய முயற்சிக்கும் மக்களுக்குச் சங்கடமாக இருக்கும் இப்படிப்பட்ட ஒரு வெறுப்பூட்டும் சூழ்நிலை பற்றிய இந்தப் பேச்சுக்கள் யாவற்றிற்கும் காரணம் என்ன? தேவனுடைய மனிதனாக இருக்க வேண்டும் என்று “யூகிக்கப்பட்டுள்ள” மனிதனின் வீழ்ச்சியில் பிசாசானவன் மகிழ்ச்சியடைகிறான் மற்றும் இந்த உலகமும் அவ்வாறே மகிழ்ச்சி அடைகிறது என்று நாம் அறிகிறோம். அதனால்தான், பேட் ராபர்ட்ஸ்ன் என்பவரின் மூத்த குழந்தையானது திருமணப் பந்தத்திற்குப் புறம்பே கர்ப்பந்தரிக்கப்பட்டது என்ற செய்தியைப் பதிப்பகம் வெளியிட்டது. அதனால்தான் உலகமானது, ஓரல் ராபர்ட்ஸ், தன்னைத் தேவன் பிணைக்கைதியாகக் கொண்டிருந்தார் என்று கூறியதில் மகிழ்ச்சி அடைந்தது. அதனால்தான், ஜிம்மி ஸ்வாக்கர்ட் என்பவரின் தப்பித்தல் பற்றிய கதையானது மக்கள் தொடர்பு ஊடகத்தில் முன்னணிக் கதையாக இருந்தது. உலகம் கதையை அறிவதற்கு விரும்புவதுடன் நிறுத்திக் கொள்வதில்லை; அது எல்லா அற்பத்தனமான விபரங்களை அறிய விரும்புகிறது.

ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலைகளைப் பற்றிப் பேசுவதற்கு உலகம் மட்டுமே விருப்பம் கொண்டிருக்கிறதா? நாம் யாவரும் கூட இவ்வாறே விரும்புகிறோம். பிரசங்கியார்கள் விசேஷமாக அவர்கள் ஒருவரைப்பற்றி ஒருவர் மிக மோசமாக வம்பு பேசுபவர்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதை ஒப்புக்கொள்வது எனக்கு எவ்வளவு வேதனையாக இருப்பினும், அது சரியானதாக உள்ளது என்றே நான் நம்புகிறேன். யார் ஊழியப்பணியை விட்டு வெளியே அனுப்பப்பட்டார் மற்றும் ஏன் அவ்வாறு அனுப்பப்பட்டார், ஒழுக்கரீதியாக அல்லது பணி ரீதி யாகத் தவறுகளைச் செய்துள்ளவர்கள் யார், என்ன ஊதியம் கிடைக்கிறது, முதலியன பற்றி வழக்கமாக நாம் அறிகிறோம். நாம் அதை எதிர்கொள்வோ மாக. எப்போதும் இல்லை என்றாலும், மிகவும் அடிக்கடி, கிறிஸ்தவர்கள் மற்ற கிறிஸ்தவர்களைப் பற்றிப் பேசுகின்றனர். நமது உறுப்பினர்களில் ஒருவர், பயங்கரமான தவறு செய்கிறார் என்றால், அந்தச் செய்தி, காட்டுத்தீயைப் போலப் பரவுகிறது. மக்கள் தங்களைப் பற்றிய கதை ஒன்று பரப்பப் பட்டதற்காக, ஆராதனைக்கு வருவதை முற்றிலும் புறக்கணித்தல் அல்லது ஒரு சபைக்குழுமத்தில்

இருந்து இன்னொரு சபைக்குழுமத்திற்குச் சென்றுவிடுகிறார்கள் என்பது பற்றி நாம் யாவரும் கேள்விப்பட்டு அறிந்திருக்கிறோம். நாம், ஒருவர் மற்றவரில் உள்ள மோசமானவற்றைப் பற்றி அறிதல் மற்றும் அதைப் பற்றிப் பிறருக்குக் கூறுதல் ஆகியவற்றில் மகிழ்ச்சியடைவது ஏன்?

யாக்கோபு தமது ஊழியத்தில், நாம் விசுவாசிக்கிறபடியே வாழவேண்டும் என்று நம்மை அழைக்கிறார், நாம் ஒருவர் மற்றவருக்கு எதிராகப் பேசக்கூடாது என்ற வேண்டுகோளை நமக்கு முன்பாக அவர் வைக்கிறார். மீண்டுமாக அவர், மிகவும் இடர்ப்பாடான ஒரு கருத்தின்மீது கவனம் குவிக்கிறார்: கிறிஸ்தவர் தாம் எதை விசுவாசிக்கிறாரோ, அதன்நிமித்தமாக, இந்த உலகத்தின் மக்களில் இருந்து வேறுபட்டவராக இருக்க வேண்டும். யாக்கோபு, வம்பு பேசவேண்டாம் என்று கட்டளையிடுவதுடன், ஏன் பேசக்கூடாது என்பதற்கு அவர் நான்கு காரணங்களைத் தருகிறார்.

ஒழுங்குமுறை (4:11)

யாக்கோபு ஒரு எளிய, மிகவும் நேரான வகையில் தொடங்குகிறார்: "சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்" (யாக்கோபு 4:11அ). ஒரு கிறிஸ்தவர் இன்னொரு கிறிஸ்தவரைப் பற்றி உரையாடுதலானது தெளிவான இந்தக் கட்டளையுடன் ஒழுங்குமுறைப் படுத்தப்படுகிறது. மூலமொழியானது, அவதூறான பேச்சு நடந்துகொண்டிருந்தது என்றும் சகோதரர்கள் அதை நிறுத்த வேண்டும் என்றும் மறைமுகக் கருத்தைத் தருகிறது. அந்த எளிய கட்டளை உண்மையில் சிறிது விளக்கம் தேவைப்படுவதாக உள்ளது.

மற்றவர்களைப் பற்றிப் பேசுபவர்கள் குறித்துத் தேவன் ஒருக்காலும் உயர்வான கருத்துக் கொண்டிருந்ததில்லை (நீதிமொழிகள் 20:19; 26:20; ரோமர் 1:29, 30; 1 கொரிந்தியர் 6:10). பின்பு ஏன் நாம், தேவனுடைய கண்களில் மிகவும் சுவையற்றதாக உள்ள விஷயத்தில் ஈடுபாடு கொள்வதற்கு இவ்வளவு விருப்பம் கொண்டவர்களாக இருக்கிறோம்? வில் ரோஜர்ஸ் என்பவர், "மக்கள் தங்களைப் பற்றி வம்பு பேசப்படும்போது மாத்திரமே வம்புப்பேச்சை வெறுக்கிறார்கள்" என்று கூறியபோது, வம்புப்பேச்சு பற்றிய தமது எண்ணப்போக்கை மிகச்சிறப்பாகத் தொகுத்துரைத்தார் என்று நாம் கூறலாம். மற்றவர்களைப் பற்றிய மோசமான சில விஷயங்களை நாம் அறியும்போது, நம்மைப் பற்றி நாம் உயர்வாக உணருகிறோம் என்றிருக்கலாம். அது ஒன்றுதான் வம்புப் பேச்சிற்குத் தர்க்கரீதியான காரணமாகக் காணப்படுகிறது.

நாம் ஒருவர் மற்றவருக்கு எதிராகப் பேசக்கூடாது என்பதற்கான காரணங்கள் என்ன என்பதுபற்றி அறிவதற்கு நாம் கடந்து செல்வதற்கு முன்னர், நாம் இன்னொரு கருத்தை நிலைநாட்டுவோம். சில வேளைகளில் நாம், ஒரு சகோதரரைப் பற்றி நாம் கூறுவது உண்மையானதாக இருந்தால், அவரைப் பற்றிப் பேசுவதை நியாயமானதாக நாம் உணருகிறோம். ஆனால் *யாக்கோபு கூறுவது இதுவல்ல! அந்தக் கட்டளைக்குத் தகுதிப்படுத்தும் விஷயங்கள் எதையும் அவர் அனுமதிப்பது இல்லை. நாம் ஒருவர் மற்றவருக்கு விரோதமாகப் பேசக்கூடாது என்று ஆவியானவரின் ஏவுதலினால் யாக்கோபு தெளிவாகக் கூறுகிறார்.*

கட்டளைக்கான பகுத்தறிவு விளக்கம் (4:11, 12)

அவர்கள்மீது மதிப்பு

நாம் ஒருவர் மற்றவர் மீது கொண்டிருக்க வேண்டிய மதிப்பின் காரணமாக நாம் ஒருவர் மற்றவருக்கு எதிராகப் பேசக்கூடாது என்பது முதல் காரணமாக உள்ளது. இந்த வசனத்திற்குள்ளாக "சகோதரத்துவம்" பற்றிய ஒரு வலியுறுத்தம் உள்ளது தெளிவாகிறது. 11ம் வசனம், "*சகோதரரே,* ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசி, தன் *சகோதரனைக்* குற்றப்படுத்துகிறவன்" என்று கூறுகிறது (என்னால் வலியுறுத்தப்படுகிறது). குடும்ப உறவினால் அடையாளப்படுத்தப் படுகிற ஒரு அன்பினால் சகோதரர்கள் ஒன்றாகக் கட்டப்பட்டு இருக்கின்றனர் (ரோமர் 12:10; கலாத்தியர் 6:10). நமது சகோதரரைப் பற்றி நாம் ஏதேனும் அறிந்தால், அதைப்பற்றி யாராவது ஒருவரிடத்தில் கூறுவதற்குப் பதிலாக நாம், அதைப்பற்றிக் கூறுவதற்கு, அந்த சகோதரரிடமே செல்ல வேண்டும் என்று வேதவசனம் கூறுகிறது. செய்வதற்கு இது, மிகவும் வசதியானதாக அல்லது மிகவும் சுலபமான விஷயமாக இருப்பதில்லை, ஆனால் அந்த சகோதரரின் ஆத்துமாவின் மீதான நமது அன்பு மற்றும் அக்கறை என்பவை நம்மைக் கட்டாயப்படுத்துகிறது. மற்ற ஒவ்வொருவரிடமும் அதைப் பற்றிப் பேசுதல் மற்றும் எனது சகோதரரிடத்தில் செல்லாதிருத்தல் என்பது, அவர்மீதான வேதாகமரீதியான மதிப்பைக் காண்பிப்பதில்லை.

நியாயப்பிரமாணத்தின்மீது மதிப்பு

சகோதரர் மீதான மதிப்பு மாத்திரமல்ல, ஆனால் *நியாயப்பிரமாணத்தின்மீதான எனது மதிப்பும்,* சகோதரனுக்கு எதிராகப் பேசுவதில் இருந்து என்னை விலக்கி வைக்க வேண்டும். "தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய்ப்பேசி நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல், அதற்கு நியாயாதிபதி யாயிருப்பாய்" என்று நாம் வாசிக்கும்போது, "எந்த நியாயப்பிரமாணம்?" என்று அறிவதற்கு உடனடியாக நாம் விரும்புகிறோம். பழைய நியாயப்பிரமாணத்தை யாக்கோபு குறிப்பிட்டிருக்க மாட்டார் என்பது தெளிவு. சந்தர்ப்பப் பொருளில் இது, "இராஜரீகப் பிரமாணத்தை" (2:8) மற்றும் "சுயாதீனப் பிரமாணத்தை" (2:12) குறிப்பதாகக் காணப்படுகிறது. நாம் செய்துகொண்டிருப்பதன் மறைவான கருத்துக்களை நாம் காணவேண்டும் என்று அவர் விரும்புகிறார். முதலாவது நாம், கீழ்ப்படிய வேண்டியதாக உள்ள பிரமாணத்தை முறித்துப் போடுகிறோம். இரண்டாவது நாம், நியாயப்பிரமாணத்திற்கு மேலானவர்களாக நம்மை அமைத்துக் கொள்கிறோம். நியாயப்பிரமாணம், "ஒருவர் மற்றவர்மீது அன்புகூருங்கள்" என்று கூறுகிறது, ஆனால் அது தவறானது, அது "ஒருவர்மற்றவரை விமர்சனம் செய்து புறங்கூறுங்கள்" என்று கூறியிருக்க வேண்டும் என்று நமது செயல்களின்மூலம் நாம் கூறுகிறோம். செயல்விளைவில் நாம், நியாயப்பிரமாணத்தை மனிதருக்கு அளித்த தேவனைக் காட்டிலும் அதி கம் அறிந்திருப்பதாக கூறுகிறோம்.

தேவன்மீது மதிப்பு

மூன்றாவது நாம், தேவன்மீது கொண்டுள்ள மதிப்பின் காரணமாக ஒருவர்

மற்றவரைக்குறித்துப் பேசக்கூடாது. யாக்கோபு, "நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே, அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர்" என்று கூறுகிறார் (2:12). தேவன் ஒருவரே நியாயப்பிரமாணத்தைக் கொடுக்கிறவர் மற்றும் அவர் ஒருவரே, தாம் கொடுத்துள்ள நியாயப்பிரமாணத்தை மாற்றவோ அல்லது ஒன்றுமற்றதாக்கவோ உரிமை கொண்டுள்ளார் என்று அவர் [யாக்கோபு] கூறுகிறார். நமது செயல்கள் நியாயப்பிரமாணத்தை மாற்றுவதில்லை: அவைகள் அதை முறிக்கமாத்திரமே செய்கின்றன. நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த தேவனைப் பார்க்கிலும் நாம் மேன்மையாக அறிந்திருக்கிறோம் என்று நினைத்தலானது தவறான முன் அனுமானமாக இருக்கும். தேவன் மாத்திரமே நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவராக இருப்பது மாத்திரமின்றி, அவர் மாத்திரமே நியாயாதிபதியாகவும் இருக்கிறார். அவர் ஒருவர் மாத்திரமே நியாயாதிபதிக்குரிய தகுதிகள் கொண்டவராக இருக்கிறார். அவர் எல்லா உண்மைகளையும் அறிந்திருக்கிறார், அவர் பாவத்தின் கறைகள் எதுவும் இல்லாதவராக இருக்கிறார், மற்றும் அவரே நம்மைப் படைத்திருப்பதால், அவர் நம்மை அறிந்திருக்கிறார். நமது சகோதரருக்கு விரோதமாக நாம் பேசும்போது, நாம் தீர்ப்பிடுகிறோம் என்பதே இவ்விடத்தில் நாம் கூறும் விஷயத்தின் மறைகருத்தாக உள்ளது. அப்படிப்பட்ட தீர்ப்புகளை ஏற்படுத்தக் கூடியவர் தேவன் ஒருவர் மாத்திரமே.

நம்மீதான மதிப்பு

நான்காவதாக நாம், நம்மைக் குறித்துக் கொண்டுள்ள மதிப்பின் காரணமாக நமது சகோதரருக்கு எதிராகப் பேசக்கூடாது. 11ம் வசனத்தில் NIV வேதாகமம் பலவீனமாக உள்ளது, ஆனால் அது உண்மையில் இங்கு முழு சக்தியுடன் தாக்குகிறது: "... ஆனால் நீ - உன் அயலானை நியாயந்தீர்க்க நீ யார்?" (4:12). கண்களுக்கு நடுவில் சரியாக இது தாக்குகிறது! எனது பலவீனங்கள், போராட்டங்கள், பிரச்சனைகள் மற்றும் பாவங்கள் ஆகிய யாவற்றுடனும், எனது சகோதரனைப் பற்றிப் பேசுவதற்கு நான் யார்? நான் செயல்படும் விதம் மற்றும் பிறரைப் பற்றி நான் பேசும் வகை ஆகியவற்றை இயேசு கண்ணோக்கி, என்னை "மாய்மாலக்காரனே!" என்று கூறுவாரோ என்று நான் அஞ்சுகிறேன்.

முடிவுரை

"புறங்கூறுதல்" என்பதை நாம் அனேகமாக ஒரு சிறிய பாவம் என்ற வகையில் மதிக்கலாம். "மற்ற சில பாவங்களுடன் ஒப்பிடப்படுகையில் இது அற்பமானதாக உள்ளது" என நாம் கூறுகிறோம். உண்மையில், உலகமானது இதை, கிசுகிசு பகுதிகள் மற்றும் தொலைக்காட்சியில் கிசு கிசு காட்சிகள் என்பவற்றைக்கொண்டு ஒரு கலைவடிவத்திற்கு உயர்த்தியுள்ளது. ஆனால் இந்த விதமாகவா தேவன் இதைக் காண்கிறார்? விசுவாசிகளின் குடும்ப உறவை நாம் மீறும்போது அது பாவமாக உள்ளது. நாம் இராஜரீகப் பிரமாணத்தை மீறுகிறோம். நாம் நம்மைத் தேவனுடைய இடத்தில் வைத்துக்கொண்டு, நமது சொந்தப் பாவம் நிறைந்த தன்மையை உணர்ந்தறியத் தவறுகிறோம். நாம் "ஒருவர் பிறருக்கு விரோதமாகப் பேசாது இருக்கும்படி" தீர்மானம் செய்வோமாக.

13

ஒவ்வொரு நாளும் தேவனுக்கு இடம் அளித்தல் (4:13-17)

1987ம் ஆண்டின் வசந்தகாலம், மன எழுச்சி மிக்க உலக நிகழ்ச்சிகள் சிலவற்றை அளித்தது. ஒவ்வொருவர் மனதிலும் நிலைத்து நிற்க வேண்டியதான குறிப்பான இரு விஷயங்ளை நான் மீண்டும் நினைவுக்குக் கொண்டுவர முடியும். முதலாவது, பங்குச் சந்தையானது அக்டோபர் மாதத்தின் ஒரு திங்கள் கிழமையன்று ஐநூரு புள்ளிகளுக்கு மேல் நொறுங்கி வீழ்ச்சியடைந்த நிகழ்வாகும். அதிர்ச்சியடைந்த மக்கள், இழந்துபோன தங்கள் செல்வம் மற்றும் முறிந்துபோன தங்கள் கனவுகள் பற்றி எல்லாப் பகுதிகளிலும் புலம்பினர். திகைப்படைந்த பங்குத் தரகர்கள், தங்கள் நிதிநிலை விளையாட்டுக் களங்கள் கீழ்நோக்கி இடறிச் செல்வதை கண்டனர். பல வாரங்களாக, தொலைத்தொடர்பு ஊடகங்கள், இந்த நஷ்டம் ஏன் ஏற்பட்டது என்று புரிந்து கொள்ள முயற்சிப்பதில் தங்கள் முயற்சிகளைக் கவனம் குவித்தன. இரண்டாவது முக்கிய நிகழ்வு, ரொனால்டு ரீகன் மற்றும் மிக்கயீல் கோர்பச்சேவ் ஆகியோருக்கு இடையில் நடந்த "உச்சி மாநாடு" ஆகும். இந்நச் சந்திப்பின்போது, சமாதானத்திற்கான சாலையில் ஒரு மைல் கல்லாக இருந்த அல்லது இருக்கும் என்று யூகிக்கப்பட்ட, அணு ஆயுத ஒப்பந்தம் ஒன்று அடையப்பட்டது. அந்த உடன்படிக்கையானது ரஷ்ய மற்றும் அமெரிக்க அரசுகளால் அதிகாரப் பூர்வமாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தாலும், அதில் உள்ள சில விஷயங்கள் தனித்து நிற்கின்றன. முதலாவது, "வல்லரசுகள்" கடந்த முப்பது ஆண்டுகளில் ஒரு உடன்படிக்கையில் கையெழுத் திட்ட ஒவ்வொரு வேளையிலும், அது ஆயுதங்களின் மீது செலவழித்தல் என்பது உயரத்தொடங்குதலே என்ற நிகழ்வைச் சமிக்கை செய்துள்ளது. இந்த உடன்படிக்கை எதை அர்த்தப்படுத்தி யது என்பது, ஒவ்வொரு பகுதியும் தனது படையை ஒரு நூறுபேர் மாத்திரம் என்ற அளவுக்குக் குறைத்த வேளையிலும், ஒப்புக்கொள்ளப்பட்ட ஆயுதங்கள் அழிப்பிற்குப் பின்னரும், அவர்கள் ஒவ்வொருவரும் மூன்று அல்லது நான்கு முறைகள் இந்த உலகத்தை அழிக்கப்போதுமான அளவு அணு ஆயுதப் போர்த்தலைகளைக் கொண்டிருப்பார்கள்.

இந்த பாடம், அணு ஆயுதங்கள் அல்லது பொருளாதாரம் பற்றிய பாடமாக இருக்க நோக்கங் கொண்டிருப்பதில்லை, ஆனால் இந்த நிகழ்ச்சிகள், ஒரு சில உண்மைகளைச் சுட்டிக் காண்பிக்கின்றன. முதலாவது, பொருளாதார உடைமைகள் இன்றிருந்து நாளை கடந்து சென்று விடக்கூடும் என்பதாகும். இரண்டாவது, நமது உடல்ரீதியான இருப்பு என்பது, அணுகுண்டின் நிழலில் வாழப்படுகிறது, மற்றும் உலக அரசியலின் இயல்பானது மிகவும் அச்சமுட்டுவதாக உள்ளது என்பதாகும். நாம் அந்த இரு பாடங்களை மனதில் கொண்ட நிலையில், வாழ்வு மற்றும் வாழ்வின் விஷயங்கள்மீது நமது நம்பிக்கையை வைக்க முடியாது

என்பதைக் காண முடியும். இந்த சத்தியத்தை நாம், வாழ்வின் மாபெரும் அளவியின்மீது காண முடியும், ஆனால் நமது தனிப்பட்ட வாழ்வு பற்றிய விஷயம் என்ன? "எதிர்காலத்திற்கான உங்கள் கனவுகள் யாவை?" என்பது உங்களிடம் கேட்கப்பட்டால், நீங்கள் எவ்வாறு பதில் அளிப்பீர்கள்? கல்வி? திருமணம்? குடும்பம்? தொலைதூர இடங்களுக்குப் பயணம்? ஒரு புதிய கார்? செல்வம்? இந்த கனவுகள் யாவற்றிலும், தேவன் மற்றும் ஆவிக்குரியவை பற்றிய ஆழ்ந்த சிந்தனைகள் எவ்விடத்தில் பொருந்துகின்றன? மக்களில் மிகப்பலர், எதிர்காலம் குறித்து ஒரே ஒரு வலியுறுத்தம் மாத்திரமே கொண்டுள்ளனர்: "பௌதீகரீதியான நிறைவேற்றம்!" நமது எதிர்காலத் திட்டத்தில் நாம் தேவனை வெளியேற்றும் அளவுக்கு பூமியுடன் அதிகம் பிணைக்கப்பட்டவர்களாக இருக்க வயப்பட்டுள்ளோம்.

4ம் அதிகாரத்தின் முடிவில், "தேவனுடைய சித்தம்" பற்றி யாக்கோபு கலந்துரையாடுகிறார். இந்த அதிகாரத்தில் ஏற்கனவே அவர், சபைப் பிரச்சனைகள் மற்றும் ஒருவர் பிறருக்கு எதிராகப் பேசுதல் ஆகியவற்றைப் பற்றிப் பேசியிருக்கிறார். இப்போது யாக்கோபு, அந்த ஆய்வுக்கருத்துகளை "தேவனுடைய சித்தம்" பற்றிய ஒரு கலந்துரையாடலில் ஒன்றாகக் குவிக்கிறார். தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பே உள்ள விசுவாசி கலகம் செய்பவராகிறார் என்பது தெளிவு. இந்த சத்தியம், வேதாகம வரலாற்றின் உதாரணங்களினால் விவரிக்கப்படுகிறது: லோத்து என்பவர் சோதோமுக்கு குடியேறி, தமது குடும்பத்தை ஏறக்குறைய சிதிலமடையச் செய்தார், தாவீதின் விபசாரம் அவரது குடும்பத்திற்கும் இராஜ்யத்திற்கும் பிரச்சனைகளைக் கொண்டுவந்தது, மற்றும் யோனா தேவனை விட்டு ஓடிய விஷயமானது, கப்பலையும் அதன் பயணிகளையும் ஏறக்குறைய அழித்தது. இந்த ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், தேவனுடைய சித்தத்திற்கு எதிரான ஒரு தவறான எண்ணப்போக்கு காட்சிப்படுத்தப்பட்டது.

நமது முரட்டுத்தனம் மற்றும் சுயநிறைவு ஆகியவை பற்றிக்கடிந்துகொள்ளும்படி, யாக்கோபுவை இப்போது பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துகிறார். நாம் தேவனைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும்படி வாழ்வு, தன்னில்தானே வற்புறுத்துகிறது என்பதை நாம் காண வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நாம் நமது அன்றாட வாழ்விலிருந்து தேவனை விலக்கி வைக்க இயலாது மற்றும் நாம் அவரது சித்தம்பற்றி அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்து வரையிலும் அவர் நம்மைத் தள்ளுகிறார்.

தேவனுடைய சித்தத்தைப் புறக்கணித்தல் அறிவற்றதாக உள்ளது (4:13-16)

தேவனுடைய சித்தத்தை நமது அன்றாட வாழ்வில் புறக்கணித்தல் என்பது எவ்வளவு மதியீனமாக உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்வதற்கு, நாம் ஏன் தேவன் கூறுவதைக் கவனிக்க வேண்டும் என்பதற்கான நான்கு காரணங்களை யாக்கோபு முன்வைக்கிறார். முதலாவது, *நாம் வாழும் வாழ்வு மிகவும் சிக்கலானதாக இருப்பதால்* தேவனுடைய சித்தத்தை நாம் கவனிக்க வேண்டும். 13ம் வசனத்தில் அவர், "மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒருவருஷம் தங்கி வியாபாரஞ்செய்து

சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே," என்று கூறும் போது, அவர் "நின்று உங்களை நீங்களே கவனியுங்கள்" என்று கூறுகிறார். நமது வாழ்வைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்போமாக: நாம் வாங்குகிறோம், விற்கிறோம், ஆதாயம் பெறுகிறோம், இழந்துபோகிறோம், இங்கு செல்கிறோம் அங்கு செல்கிறோம். ஒவ்வொருநாளிலும் நாம், முக்கியமான முடிவுகள் எத்தனை ஏற்படுத்துகிறோம்? யாக்கோபுவின் மூலமாகத் தேவன், வாழ்வின் வேலை எதையும் கண்டனம் பண்ணுவதில்லை, ஆனால் அவரை ஆலோசனை கேட்காமல் அவற்றைச் செய்தல் என்பது எவ்வளவு மதியீனமாக உள்ளதென்பதையே அவர் கூறுகிறார். தேவன் உடன் இருக்கையில் வாழ்வு கருத்தை ஏற்படுத்துகிறது; அவரின்றி அது மதியீனத்தையே ஏற்படுத்துகிறது.

இரண்டாவதாக யாக்கோபு, வாழ்வு என்பது சிக்கலானதாக மாத்திரமல்ல, *அது நிச்சயமற்றதாகவும் உள்ளது* என்று கூறுகிறார். அவர் "நாளைக்கு நடப்பது உங்களுக்கு தெரியாதே" என்று கூறுகிறார் (4:14). வாழ்வு நிச்சய மற்றது என்று நாம் அறிய வேண்டுமென்று வேதவசனம் விரும்புகிறது (எ.கா., நீதிமொழிகள் 27:1). இயேசு, தமது உவமைகள் ஒன்றில் அந்தக் கருத்தை விவரித்தார் (லூக்கா 12:16-21). உலகமானது வாழ்வைப் பற்றிய தனது நெறிபிறழ்வான கண்ணோட்டத்துடன்கூட, இந்த அடிப்படைக் கருத்தை புரிந்துகொண்டுள்ளது. ரோமாபுரியில் இருந்த தத்துவஞானியான செனெகா என்பவர், "நாளையதினம்கூட ஒரு மனிதனின் கட்டுப்பாட்டில் இல்லா திருக்கையில், அவன் தனது வாழ்விற்காகத் திட்டங்கள் தீட்டுதல் என்பது எவ்வளவு மதியீனமானதாக உள்ளது" என்று கூறியதில் புகழ் மிக்கவரானார். வாழ்வின் சூழ்நிலைகள், நாம் அறிகிற மற்றும் அறிந்திருக்கிற மக்கள், மற்றும் அன்றாட வாழ்வில் நாம் காணும் நிகழ்ச்சிகள் ஆகியவை யாவும் இந்த சத்தி யத்தைச் சுட்டிக்காண்பிக்கின்றன. நிச்சயமற்ற நமது எதிர்காலத்தின் காரண மாக, நாம் சும்மா உட்கார்ந்துகொண்டு ஒன்றும் செய்யாதிருக்க வேண்டும் என்று யாக்கோபு கூறுவதில்லை. நாம் நமது திட்டங்களையும் எதிர்காலத்தையும் தேவனுடைய கரங்களில் ஒப்புவிக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார். நாம் நமது எதிர்காலத்தைத் தேவனிடத்தில் ஒப்புவிக்கும்போது மாத்திரமே, எதிர் காலத்தைப் பற்றிய எவ்வித நிச்சயத்தையாவது நாம் கொண்டிருக்க முடியும்.

அடுத்தபடியாக யாக்கோபு, வாழ்வு *சுருக்கமானதாக இருப்பதால்* அது நிச்சயமற்றதாக உள்ளது என்று விளக்குகிறார். 14ம் வசனத்தின் பிற்பகுதியில் "கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே" என்று அவர் கூறும்போது, யோபுவின் எழுத்துகளில் இருந்து ஒரு உருவகத்தை அவர் கடனாகப் பெறுகிறார் (யோபு 7:9). சிலவேளைகளில், விசேஷமாக, வேதனையின் நாட்களின்போது, நாட்கள் யோபுவைப் பொறுத்தமட்டில் முடிவற்ற வகையில் இழுத்துக்கொண்டு சென்றன என்பதில் நான் நிச்சயமாயிருக்கிறேன். அவர் தமது கடும் வேதனையில், வாழ்வானது எவ்வளவு சுருக்கமாக இருக்க முடிந்திருக்கும் என்பது பற்றித் துரதிர்ஷ்டவசமாக அறியாதவராக இருந்தார் (யோபு 7:6; 8:9; 9:25; 14:1, 2). காலத்தைக் கணக்கிடுவதற்கான எல்லைக்குட்பட்ட நமது வழியில், வாழ்வானது இன்னமும் நீண்டதாக, தேவனுக்கு நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டி இருப்பதை நாம் மறந்துபோகப் போதிய அளவு நீண்டதாகக் காணப்படலாம். நாம் உடல் நலமற்று இருத்தலைப் போன்று உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும் என்று

நான் கருத்துத் தெரிவிப்பது இல்லை, ஆனால் நாம் நமது வாழ்வைப் பற்றிய சத்தியத்தை உணர்ந்தறிவது அவசியமாக உள்ளது. நமது வாழ்வைச் செலவழித்தல் அல்லது வீணாக்குதல் என்பதற்குப் பதிலாக, நாம் நமது வாழ்வை நித்தியத்திற்கு உரிய விஷயங்களில் *முதலீடு செய்தல்* அவசியமாக உள்ளது. நாம் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்திருத்தல் மூலமாக நமது வாழ்வை முதலீடு செய்கிறோம்.

நான்காவதாக, 16ம் வசனத்தில் யாக்கோபு, மனிதன் தமது அற்பமான தன்மையை மறைக்க எவ்வாறு முயற்சி செய்கிறான் என்று விவரிக்கிறார். அவர், "இப்பொழுது உங்கள் வீம்புகளில் மேன்மை பாராட்டுகிறீர்கள்; இப்படிப்பட்ட மேன்மைபாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது" என்று கூறுகிறார். நமது சுய பலவீனங்களையும் பாதுகாப்பின்மைகளையும் மூடுவதற்காக நாம் மேன்மை பாராட்டுகிறோம். எதிர்காலத்தைப் பற்றி நாம் என்ன செய்ய முடியும்? அதற்குள் கண்ணோக்க நாம் பலம் கொண்டிருப்பதில்லை அல்லது அதைக் கட்டுப்படுத்துவதற்கான ஞானத்தை நாம் கொண்டிருப்பதில்லை. இருப்பினும் நாம் முற்றிலும் கட்டுப்பாடு செலுத்துபவர்களாக இருப்பது போன்று நாம் பெருமையடித்து ஏளனம் செய்கிறோம். நாம் நம்மைத் தேவனுடைய இடத்தில் வைக்கிறோம் என்பதே நமது மேன்மைபாராட்டுதலின் பிரச்சனையாக உள்ளது. நாம் தேவனுடைய சித்தத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், எதிர் காலத்தில் இதை அல்லது அதைச் செய்வோம் என்று கூறுவதன் மூலமாக இதை நாம் செய்கிறோம். அப்படிப்பட்ட மேன்மை பாராட்டுதல் பாவம் நிறைந்ததாக உள்ளது என்று தெளிவாகவும் எளிதாகவும் யாக்கோபு கூறுகிறார்!

ஆண்டுகளினூடே மனிதன் கற்றுக்கொண்டுள்ள இந்தப் பாடங்கள் எல்லாவற்றுடனும், அவன் தேவனுடைய சித்தத்தைப் புறக்கணித்தல் எவ்வளவு மதியீனமானதாக உள்ளது என்று அறிந்திருப்பான் என்று ஒருவர் நினைக்கலாம். அது வரைபடமற்ற ஒரு வனத்தினூடே வழிகாட்டி இல்லாது செல்லுதல் அல்லது புயல்வீசும் கடலின்மீது திசைக்காட்டிக் கருவி இல்லாது பாய்ந்து ஓடுதலைப்போன்றதாக உள்ளது. யாக்கோபு, வாழ்க்கைக் குறித்த நமது எண்ணப்போக்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பின்வரும் குறுகிய, ஆற்றல் வாய்ந்த கூற்றில் நமக்குக் கூறுகிறார்: "ஆதலால்; ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதை செய்வோம் என்று சொல்ல வேண்டும்" (4:15). இந்தக் கூற்றை யாக்கோபு நாம் சிந்தனையின்றித் திரும்ப திரும்பக் கூறுகிறதான ஒரு சடங்காச்சாரமான, ஒரு எளிமைப்படுத்தப்பட்ட சூத்திரமாக தருவது இல்லை. இது இருதயத்தின் எண்ணப்போக்காக இருக்க வேண்டும், வெளிப்படையாக கூறப்பட்ட போதிலும் அல்லது மறைமுகமாக உணர்த்தப்பட்ட போதிலும் அது, நமது வாழ்வில் திட்டமிடும் மற்றும் ஒழுங்கமைத்தல் ஆகியவற்றில் தேவனுக்கு உரிமையுள்ள இடத்தை அவருக்குக் கொடுக்கிறது என்று அவர் கூறுகிறார்.

தேவனுடைய சித்தத்தைப் புறக்கணித்தல் பாவம் நிறைந்ததாக உள்ளது (4:17)

யாக்கோபு 4:17 வசனமானது, ஏறக்குறைய ஒவ்வொரு பிரசங்கியாராலும் பயன்படுத்தப்படும் சவைக்குச்சி ஆகியுள்ளது. யாக்கோபு, "ஆதலால்,

ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" என்று கூறும்போது, அவர் எந்த ஒரு பாடக்கருத்தைக் குறித்தும் சகோதரர்களை சாட்டையால் அடிப்பதற்கான ஒரு வசனத்தைப் பிரசங்கியாருக்குக் கொடுத்தார். இது அந்த வேளையில் பேச்சாளர் தூண்டக்கூடிய கருத்து எதுவாக இருப்பினும் அதைப்பற்றிய உண்மையாக மிகவும் குறிப்பாகக் காணப்படுகிறது: ஆராதனை ஊழியங்களில் கலந்து கொள்ளுதல், ஆத்தும ஆதாயம் முதலியன. அவ்வாறு இவ்வசனத்தைப் பயன்படுத்துதல் என்பது தர்க்கரீதியானதாக மற்றும் சரியானதாகக் கூட இருக்கலாம், ஆனால் யாக்கோபு அதை நோக்கங்கொண்டு இருக்கவில்லை என்பதில் நான் நிச்சயமாயிருக்கிறேன்.

13ம் வசனத்தில் இருந்து 16ம் வசனம் வரைக்கும் கூறப்பட்டவற்றிற்கு, 17ம் வசனம் ஒரு முடிவுரைப் புத்திமதியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். தங்கள் சிந்தனையற்ற தன்மையால் தவறிப்போயிருந்த சகோதரர்களுக்கு யாக்கோபு எழுதுகிறார்; அவர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் தேவனைப் புறம்பே ஒதுக்கி இருந்தனர். அவர்கள் செய்கிற விஷயம் தவறானதாக இருப்ப தில்லை, ஆனுல் அவர்கள் தேவனையும் அவரது சித்தத்தையும் புறக்கணித்ததே தவறானதாக உள்ளது. அதே வலையில் விழுதல் என்பது நமக்கு மிகவும் கடின மாக இருப்பதில்லை. வாழ்வானது துரிதமானதாக, இறுக்கிப் பிடிப்பதாக மற்றும் நெருக்குதல் நிறைந்ததாக ஆகியுள்ளது. அந்த ஓட்டத்தில் மேற்கொள்ள மற்றும் வெற்றிபெற, நாம் என்ன செய்வோம் என்பது பற்றி நாம் திட்டமிடத் தொடங்குகிறோம் மற்றும் நமது கவனக்குவிப்பானது அடிக்கடி, தேவனைச் சார்ந்திருத்தல் என்பதில் இருந்து சுயத்தை சார்ந்திருத்தல் என்பதற்கு மாறுகிறது. அவர்களின் புறக்கனிப்பை அவர்களுக்கும் மறைமுகமாக நமது புறக்கணிப்பை நமக்கும் யாக்கோபு காண்பித்திருக்கிறார். நமது வழிகளின் தவறை நாம் யாவரும் காணவேண்டுமென்று அவர் வலியுறுத்துகிறார். பிலிப்ஸ் என்பவரின் மொழி பெயர்ப்பு வேதாகமத்தில் இந்தக் கருத்தானது மற்ற எல்லா வேதாகம மொழி பெயர்ப்பைக்காட்டிலும் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கப்படுகிறது. அவரது மொழி பெயர்ப்பில், "மேற்கண்ட கோட்பாட்டை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஒரு மனிதன் சரியானது எது என்று அறிந்திருந்தும் அதைச் செய்யத் தவறினால், அவனது தோல்வியானது உண்மையான பாவமாக உள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" என்று வாசிக்க முடிகிறது.

முடிவுரை

வாழ்வு என்பது தேவனிடமிருந்து வருகிற ஒரு கொடையாக உள்ளது, அது அவரது மகிமைக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். சாலொமோன், "தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே" என்று கூறியபோது, இக்கருத்தை ஆணித்தர மாக உணர்த்தினார் (பிரசங்கி 12:13). தேவனுடைய உதவியின்றி எதிர்காலத்தை திட்டமிடுதல் என்ற தவறை நாம் ஏற்படுத்தத் துணிய முடியாது.

14

செல்வங்களினால் சிதைக்கப்படுதல் (5:1-6)

ஒஹியோ என்ற நகரிலிருந்து மாநில எல்லைப் பகுதியில் ஒருமனிதர் காரில் சென்றபோது, ஆயுதக் காவல் கொண்ட கார் ஒன்றின் கதவு அவருக்கு முன்பாகத் திறந்து, நெடுஞ்சாலையில் பணத்தை இறைத்ததை வாசித்தது பற்றி நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா? 2 மில்லியன் டாலர்களுக்கு மேலாக நெடுஞ்சாலையில் பெருக்கெடுத்தது என்று மதிப்பிடப்பட்டது, மற்றும் இந்த ஒரு மனிதர் நின்று 150,000 டாலர்களுக்கு அதிகமான நோட்டுகளைப் பொறுக்கினார். ஒருமணி நேரம் ஆச்சரியமான மட்டற்ற கனவுகளுக்குப் பின்பு, தமது மனச்சாட்சியுடன் போராடியபின்பு, அவர் அந்தப் பணத்தை ஆர்மர்டு கார் கம்பெனிக்குத் திரும்பக் கொடுத்துவிட்டார். அந்த பதில் செயல் நாட்டையேதி கைப்படையச் செய்தது மற்றும் அது பலரால் வினோதமான, மதியீனமான செயல் என்று கருதப்பட்டது. அது உண்மையிலே மிகவும் வினோதமானதாக இருந்தது, *நேஷனல் என்கொயர்* என்ற பத்திரிக்கையின் முகப்புப் பக்கத்தில் தலைப்புச் செய்தியானது, ஜான்னி கோர்ஸன் என்பவர் இம்மனிதரைத் தமது காட்சிக்கு அழைத்து அவரது செயல்களை விளக்கப்படுத்தும்படிக் கேட்டுக்கொண்டார்.

நமது சமூகமானது, செல்வத்தின்மீதான பேரார்வம் மற்றும் பணம் செய்யக்கூடிய எல்லா விஷயங்கள் ஆகியவற்றினால் பட்சிக்கப் பட்டுள்ளது என்பது எனது சொந்தக் கருத்தாக உள்ளது. அந்த அளவு பணத்தை, அதிகம் விரைவாக மற்றும் சுலபமாக வந்த பணத்தை விட்டுக்கொடுக்கும் தனிநபரால் நாம் மனம் கவரப்படுகிறோம். நமது புத்தகசாலைகள் விரைவில் செல்வந்தர் ஆகும் திட்டங்கள் பற்றிய புத்தகங்கள் வலிந்து திணிக்கப்பட்டதாகவும், தொலைக்காட்சியானது செல்வம் மற்றும் புகழ் ஆகியவை கொண்ட வாழ்வு நடையினால் நம்மை ஈர்ப்பதாகவும் உள்ள சமூகத்தில் நாம் வாழும் காரணத்தினால் இது உண்மையாக உள்ளது. இந்த மனநிலையானது நம் எல்லாரையும் பாதிக்கிறது ஏனென்றால் நம்மில் யார், “வெளியீட்டாளர் புத்தகங்களை விற்றுத்தீர்க்கும் பரிசுக்குலுக்கலில்” கோடிக்கணக்கான ரூபாய்கள் வெற்றிபெற்றால் நமது வாழ்வு எப்படியிருக்கும் என்று பகல்கனவு காணாதவர் யார் இருக்கின்றார்?

வேதவசனத்தைக் கவனமாக வாசித்தலானது, செல்வம் ஒரு பாவமல்ல என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. உதாரணமாக, ஆபிரகாம் மிகவும் செல் வந்தரான மனிதராக இருந்தார், மற்றும் அவர் தேவனுடன் நடந்தார், முழு உலகத்தையும் ஆசீர்வதிப்பதற்குத் தேவனால் அவர் பயன்படுத்தப்பட்டார். உலக உடமைகளை நாம் நமது வாழ்வில் ஞானமாக, தேவனுக்கான நமது ஊழியத்தி லும் நமது சக மனிதர்களுக்கான சேவையிலும் பயன்படுத்துவதற்காகவே நம்மிடத்தில் ஒப்புவிக்கப்படுகின்றன என்று வேதவசனம் போதிக்கிறது.

நமது வேதபாடப் பகுதியான யாக்கோபு 5:1-6ல், செல்வத்தின் அபாயகரமான பகுதியும் பணம் நமக்கு என்ன செய்யக்கூடும் என்பது நமக்குக் காண்பிக்கப் படுகின்றன. யாக்கோபு செல்வந்தர்களை நோக்கி இவற்றைக் கூறுகிறார், மற்றும் கூறுவதற்கு அவர், செல்வத்தின் பயன்பாடு மற்றும் தவறான பயன்பாடு ஆகியவற்றைப் பற்றி நேரடியான விஷயங்கள் சிலவற்றைக் கொண்டிருக்கிறார். இவர்கள் செல்வந்தரான விசுவாசிகளா இல்லையா என்பது மட்டுமே எழுகிற ஒரே ஒரு கேள்வியாக உள்ளது. இவ்வசனப்பகுதியானது யாக்கோபு பேசுவதை கேட்கிற மக்கள் கூட்டத்தை மாற்றும் இடமாக உள்ளதென்று, அவர் செல் வந்தரான புறதெய்வ வணக்கத்தாரிடம் பேசுகிறார் என்று பல எழுத்தாளர்கள் இதைக் கண்ணோக்குகின்றனர். யாக்கோபு இன்னும் விசுவாசிகளை நோக்கியே பேசிக்கொண்டிருக்கிறார் என்பது எனது உறுதியான நம்பிக்கையாக உள்ளது. நான் இவ்வாறு நம்புவது ஏன் என்பதற்குப் பலகாரணங்கள் நிலவுகின்றன. முதலாவது, செல்வந்தர் மற்றும் ஏழை பற்றிய பிரச்சனையானது யாக்கோபுவின் சிந்தனையில் பெரிதாக அச்சுறுத்தத் தோன்றியுள்ளது (1:9-11; 2:1-13; 4:13-17). அடுத்ததாக, யாக்கோபு தமது நிருபம் வாசிக்கப்படும்போது, செல்வந்தர்களான தனிநபர்கள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்பது அவர் எழுதும் வகையில் தெளிவாகிறது. கடைசியாக, செல்வந்தர்களான இந்த தனிநபர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தனரா என்பது பற்றி நாம் நிச்சயமாகக் கூற இயலாவிட்டால், இந்த வெளிப்படையான குற்றப்படுத்துதல்கள் நமக்கு எதையாகிலும் கூறுவதாக நாம் எவ்வாறு எடுத்துக்கொள்ள முடியும்?

செலவழிக்கச் செல்வங்களைக் கொண்டுள்ளவர்கள் மீது தெளிவான கண்டனத்துடன் நம்மை எதிர்கொள்வதன்மூலம் யாக்கோபு, தேவன் நம்மிடத்தில் ஒப்புவித்துள்ள ஆதார மூலங்கள் எதுவாக இருந்தாலும் நம் யாவருக்கும் போதிக்கிறார். பளிச்சிடும் இந்தத் தவறான பயன்பாடுகளை வெளிப்படுத்துவதினால் அவர், தேவனுடன் தாழ்மையாக நடப்பதற்கு நமது உலகப்பிரகாரமான உடைமைகளை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று நமக்குப் போதிக்கிறார்.

செல்வந்தர்களை மனந்திரும்பும்படி அழைத்தல் (5:1)

யாக்கோபு 5:1ல், "ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள்" என்று கூறும்போது, அவர் மனந்திரும்புதலுக்கான ஒரு அழைப்பை வெளியிடுகிறார். அவர், நிதிசார்ந்த வல்லமை மற்றும் உலக செல்வம் ஆகியவற்றைத் தங்கள் இருதயங்கள் மற்றும் தலைகள் ஆகியவற்றைத் திருப்பிப் போட அனுமதித்துள்ள கிறிஸ்தவர்களைக் கடிந்து கொள்கிறார்.

மனந்திரும்புதலுக்கான இந்த அழைப்பில், அவர்கள் தங்களுக்கு வரப்போகும் நிர்ப்பந்தம் பற்றி அறிந்திருந்தால் அவர்கள் "அலறி அழ" வேண்டும் என்று அவர்களுக்கு யாக்கோபு கூறுகிறார். அவர் பயன்படுத்தும் இரு வார்த்தைகள் ஆர்வத்திற்குரிய பின்னணிகளைக் கொண்டுள்ளன. "அழுதல்" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது, கிறிஸ்துவை மறுதலித்த பின்பு பேதுரு மனந்திரும்பி "அழுததை" விவரிக்கப் பயன்படுத்திய அதே கிரேக்க வார்த்தையாக உள்ளது (லூக்கா 22:62). "அலறுதல்" என்பதற்கான மூல வார்த்தையானது (தனது ஒலியிலேயே தனது அர்த்தத்தைக் கொண்டுள்ள) - ஒலிக்குறிப்பு வார்த்தையாக

உள்ளது. "அலறுதல்" என்பதற்கு பதிலாக "கிறீச்சிடுதல்" என்பது இவ்வசனப் பகுதியில் மிகச்சிறந்த பயன்பாடாக இருக்கலாம். இது, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளினால், தேவனுடைய நியாயத்தீர்ப்பு யார்மீது வந்துள்ளதோ, அவர்களின் கட்டுக்கடங்காத பயங்கரத்தை அடையாளப்படுத்தும் வகையைச் சேர்ந்ததாக உள்ளது (ஏசாயா 13:6; 14:31; 15:2, 3). "வரும் நிர்ப்பந்தங்கள்" என்பது நியாத்தீர்ப்பின் நாள் பற்றிய குறிப்பாக இருக்கும் என்பது எனக்கு தெளிவாகக் காணப்படுகிறது.

இந்த அழைப்பிற்குள்ளாக யாக்கோபு, ஒவ்வொரு செல்வந்தருக்குமோ அல்லது கிறிஸ்தவராக உள்ள ஒவ்வொரு செல்வந்தருக்குமோ புத்திகூறுவதில்லை. அவர் ஒரு விசேஷித்த வகையிலான மக்களைக் குறிப்பிடுகிறார். இவ்வகையான மக்களால் பண்புபடுத்தப்படும் பாவங்களை ஒவ்வொரு செல்வந்தரும் செய் திருப்பதில்லை. ஆனால் இந்தக் குழுவின் பண்புகள் முழுமையும், வேதாகம எழுத்தாளர்களைச் சிலவேளைகளில், செல்வத்தை துன்மார்க்கத்துடன் வறுமையை நற்தன்மையுடனும் வகைப்படுத்தும்படி வழிநடத்தியுள்ளது. இயேசு, "ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" என்று கூறியபோது, இதையே செய்தார் என்று காணப்படும் (மாற்கு 10:25).

செல்வந்தர்களின் குற்றங்களைக் கண்டனம் பண்ணுதல் (5:2-6)

வரலாற்றாளர்களின் கூற்றுப்படி, வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில், செல்வம் என்பது - உண்ணுதல், உடுத்துதல் மற்றும் செலவிடுதல் என்ற - மூன்று அடிப்படை வழிகளில் காட்சிப்படுத்தப்பட்டது. 2 மற்றும் 3ம் வசனங்களில் யாக்கோபு, இவை ஒவ்வொன்றின்மீதும் கவனம் குவிப்பதாகக் காணப்படுகிறது 2ம் வசனத்தில் அவர், "உங்கள் ஐசுவரியம் அழிந்து" என்று கூறுகிறார். "அழிந்து" என்ற வார்த்தை "அழுகி" என்று நேரடி அர்த்தப்படுகிறது மற்றும் இது உணவுப் பொருட்களுக்கு விசேஷமான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருக்கலாம். இங்கு மறைமுகமான கருத்து பின்வருமாறு இருப்பதாகக் காணப்படுகிறது: "நீங்கள், உங்களால் பயன்படுத்த முடிவதைக் காட்டிலும் அதிகமானவற்றைக் கொண்டிருக்கிறீர்கள், அது பயன்படுத்தப்பட முடிவதற்கு முன்னால் உண்மையிலேயே அழுகிப்போய் விடுகிறது."

யாக்கோபு, "உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின" என்று கூறுகிறார் (5:2). அவர்களின் உடைகள் சேர்த்து வைக்கப்பட்டு அந்துப் பூச்சிகளால் உண்ணப்படும் அளவுக்கு மிக ஏராளமாக இருந்தன. இது யாக்கோபு "அந்துப்பூச்சிகளுக்கு உணவு அளிப்பதால் பயன் என்ன?" என்று கேட்பது போன்று உள்ளது.

அவர் "உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது" என்று குற்றம்சாட்டுகிறார் (5:3). பொன்னும் வெள்ளியும் துருப்பிடிப்பது அல்லது அரிமானமாவது இல்லை என்று நாம் அறிந்து இருக்கிறோம்; எனவே இதன் அர்த்தம் உருவகநடையில் இருக்கிறது என்ற வகையில் நாம் இதைக் கண்ணோக்க வேண்டும். இந்தக் கடிந்துகொள்ளுதல், பொன்னும் வெள்ளியும் கையாளப்பட்ட வகையானது, அது துருப்பிடித்தது போன்று பயனற்றதாகக்

காணப்படும்.

அவர்கள் செல்வத்தைக் குவித்து வைத்துப் பயன்படுத்திய விதம் பற்றி யாக்கோபு சந்தோஷம் அடையாதிருக்கிறார் என்ற தனிப்பட்ட மனப்பதிவை நீங்கள் பெறுகிறீர்கள். அவர் ''கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்'' என்று கூறும்போது (5:3) இந்தக் கருத்து மறுவலிவூட்டப்படுகிறது. அவர்கள் தங்கள் உடைமைகளை "பதுக்கி" வைத்தனர் மற்றும் இந்த "பதுக்குதல்" என்பது அழுகுதல், வீண்விரயமாகுதல் மற்றும் துருப்பிடித்தல் என்பவற்றைத் தவிர வேறு எதையும் உண்டாக்கியிருக்கவில்லை என்பதில் யாக்கோபு கலவரம் அடைந்தார். அவர்கள் தங்கள் செல்வத்தைக்கொண்டு சாதித்திருக்கக் கூடிய நல்ல விஷயங்கள் எல்லாவற்றையும் நீங்கள் கண்ணோக்கும்போது, இது மதியீன மானதாக மாத்திரமல்ல, ஆனால் பாவம் நிறைந்ததாகவும் உள்ளது!

யாக்கோபு மிகவும் திட்டவட்டமாகக் குறிப்பிடுபவராகிறார். அவர், 4ம் வசனத்தில் அவர்கள் தங்கள் செல்வத்தைப் பதுக்கி வைத்தது மாத்திரமின்றி, குறைந்த பட்சம் அந்த செல்வத்தின் ஒரு பகுதியாவது, அவர்களின் வேலையாட்களுக்குத் தராமல் பிடித்து வைத்திருந்த கூலிப்பணமாக இருந்தது என்று கூறுகிறார். யாக்கோபு விரைவிலேயே, பூமிக்குரிய உண்மைகளில் இருந்து அவர்களின் ஆவிக்குரிய தனிச்சிறப்பிற்கு நகர்ந்து செல்கிறார். அவர் - உணவளிக்கப்படாமல் விடப்பட்டிருந்த குடும்பங்கள் முதலியவற்றிடம் பிடிக்கப்பட்டிருந்த கூலியில் இருந்த உணர்வுப்பூர்வம் மீது தாமதிக்கச் சற்று நேரம் எடுத்து இருக்கலாம். ஆனால் யாக்கோபுக்கு, ஒரு விஷயம் மாத்திரமே கூற முக்கியமானதாக உள்ளது. என்ன நடந்துள்ளது என்பதைக் கர்த்தர் அறிந்தி ருக்கிறார்; மோசடி செயல் அவரது கவனத்தில் இருந்து தப்பித்திருக்கவில்லை. அறுவடை செய்தவர்களின் வேதனைக் குரல், சர்வவல்ல தேவனுடைய செவிகளில் சென்று சேர்ந்துள்ளது.

5ம் வசனத்தில், யாக்கோபு தமது மூன்றாவது குற்றச்சாட்டை வைக்கிறார்: ''பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறது போல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள்.'' செல்வந்தவர்களான இந்தக் கிறிஸ்தவர்கள், ஆடம்பரத்திற்கும் சுயசீராட்டுதலுக்கும் தங்களைக் கொடுத்திருந்ததில் குற்றப்பட்டிருந்தனர். "வாழ்ந்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வினைச்சொல், "இலகுவான வாழ்வை வாழுதல்,'' ''களியாட்டு,'' அல்லது "ஆரவாரமாயிருத்தல்'' என்று அர்த்தப்படுகிறது. துன்மார்க்கத்தின் அர்த்தம் இந்த வார்த்தையின் உள்ளாக இருக்கிறது. "சம்பிரமம்" மற்றும் "சுகபோகம்" ஆகியவை ஒன்று போன்றவையாக உள்ளன என்று இவ்வசனத்தில் காணப்படுகையில், அவற்றின் அர்த்தத்தில் வேறுபாட்டின் நிழல் ஒன்று தெளிவாக உள்ளது. ''சம்பிரமம்'' என்பது ஒருவரை ஒழுக்கவீனத்திற்கு வழிநடத்தக்கூடியதான, மென்மையும் தளர்ச்சியு மான வாழ்வுப்பாணியைக் குறிக்கிறது. இதற்கு மறுபுறம், இரண்டாவது வார்த்தையானது ஊதாரித்தனமான மற்றும் வீணான சுயசீராட்டுதலை விவரிக்கிறது. இவ்வகையான வாழ்வுப்பாணி, அடிப்பதற்கென்று கொழுக்கத் செய்கிறது என்பதை நாம் அறிய வேண்டும் என்று யாக்கோபு விரும்புகிறார். அந்தச் சிந்தனை எரேமியா 12:3ன் கருத்தை நினைவூட்டுவதாக உள்ளது, அங்கு துன்மார்க்கர் ஆடுகளைப்போல் பிடுங்கிப்போடப்பட்டுக் கர்த்தரால் கொலைநாளுக்கு நியமிக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. மிருகங்கள்

தங்கள் சொந்த உணவைத் தாங்களே தேடிக்கொண்டு, கடைசியில் கொலை செய்யப் படுவதற்கென்று தங்களை ஆயத்தப்படுத்துவது போன்று, விதிவச மான அந்த நாளுக்கு என்று செல்வந்தவர்கள் தங்களைத் தாங்களே கொழுக்கச் செய்கின்றனர் என்பது இவ்விடத்தில் உள்ள வேறுபாடாகும்.

6ம் வசனத்தில் யாக்கோபு, எல்லாவற்றிலும் மிகவும் தீவிரமான குற்றச்சாட்டை முன்வைக்கிறார்: “நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலைசெய்தீர்கள்; அவன் உங்களோடே எதிர்த்து நிற்கவில்லை.” எனது கருத்தில் NIV வேதாகமம், யாககோபுவின் குற்றச்சாட்டினுடைய வெளிப்படையான தன்மையைத் தவறவிடுகிறது. அவர்கள், குற்றம் அறியாத நீதிமான்களைத் தாக்கியதால் குற்றப்பட்டது மட்டுமின்றி, அவர்கள் பாதுகாப்பு இல்லாத மற்றும் திரும்பிப் போராட மறுத்தவர்களைத் தாக்கியதால் குற்றப்பட்டிருந்தனர். அவர்களின் நடக்கையில், இரக்க உணர்வு, அன்பு அல்லது தேவபக்தி ஆகியன இல்லாது போகுமளவுக்கு, பணத்திற்கான அவர்களின் பெருவிருப்பம் மூழ்கடிப்பதாக இருந்தது. அவர்களின் பேராசையானது, எஸ்ரயேலனான நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை அபகரித்துக்கொள்ளும்படி அவரைக் கொலை செய்த ஆகாப் மற்றும் யேசபேல் ஆகியோரின் பேராசையின் எல்லை மீறல்களை அடைந்திருந்தது (1 இராஜாக்கள் 21).

தேவனுடைய அக்கறையைக் கைப்பற்றுதல்

உண்மையில் செல்வத்தைப் பற்றியல்ல ஆனால் செல்வத்தைக் குறித்துத் தேவனுடைய மக்களின் எண்ணப்போக்கு குறித்தே தேவனுடைய அக்கறை உள்ளது. பணம் மற்றும் உடைமைகளை மற்றவர்களின் வாழ்வை ஆசீர்வதிக்கப் பயன்படுத்தும் விருப்பம் இன்றி, அவற்றைச் சேர்த்துக்குவிப்பதில் நமது அக்கறை உள்ளது என்றால், நாம் படகைத் தவற விட்டிருக்கிறோம் என்று யாக்கோபு கூறுகிறார். 2 மற்றும் 3ம் வசனங்களில் “சேர்த்துவைத்தல்” என்ற விஷயத்தைப் பற்றிய கடிந்து கொள்ளுதலுக்குப் பின்னால் இந்த அக்கறை உள்ளது. கிறிஸ்தவர்களுக்கு தேவன் கொடுத்துள்ளவற்றை, மற்றவர்கள் வாழ்வை ஆசீர்வதிப்பதற்காக அவர்கள் பயன்படுத்த வேண்டும். அதனால்தான் ரோமர் 12ன் “ஊழியக் கொடைகளில்” நமக்கு, “பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்” என்று கூறப்படுகிறது.

தேவனுடைய போதனை, செல்வந்தவர்களாக இருப்பவர்களுக்கு எதிராக அல்ல, ஆனால் செல்வத்துடன் அடிக்கடி வருகிற தவறான முன்னுரிமைக்கு எதிராகவே உள்ளது. இந்த முன்னுரிமைகள் மற்றும் இவை எவ்வாறு தவறாக ஒன்று கலக்கப்படுகின்றன என்பவை இவ்வசனப் பகுதியில் மிகவும் கவனிக்கத் தக்கவைகளாக நிற்கின்றன. இந்தக் கிறிஸ்தவர்கள், செல்வம் சேகரிப்பதற்காக மோசடியும் கொலையும் செய்ய மனவிருப்பமாக இருந்தனர். சேர்த்துக் குவிக்கப்பட்ட தங்கள் செல்வத்தைப் பயன்படுத்துவதில், அவர்கள் ஒழுக்கவீன மாக இருக்கும் இடம் வரைக்கும் தங்களையே சீராட்டிக் கொண்டிருந்தனர்.

முடிவுரை

நாம் செல்வந்தவராகவோ அல்லது ஏழையாகவோ, எப்படியிருப்பினும் நாம் கொண்டுள்ள ஒவ்வொன்றையும் நமக்குத் தருகிறவர்மீது நமது நம்பிக்கையை நிலைநிறுத்துவது அவசியம். செல்வமும் மற்றும் சகல ஆடம்பரங்களும், தேவன்

நமது வாழ்வில் செய்யக்கூடிய செயல்களுக்குப் பதிலியாக இருப்பதில்லை. இயேசுவின் வார்த்தைகள் இன்னமும் உண்மையானவைகளாகவே ஒலிக்கின்றன: "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன்ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மத்தேயு 16:26).

15

உங்களுக்குத் தவறு செய்யப்பட்டிருக்கும் போது சரியானதைச் செய்தல் (5:7-12)

என்னைச் சுற்றிலும் உள்ளவர்கள் அனேகமாக என்னைப் பற்றிய சில விஷயங்களை உற்றுக் கவனித்திருக்கலாம்: நான் விமர்சிக்கப்பட விரும்புவதில்லை! நான் தவறாயிருக்கிறேன், அதாவது நான் சில விஷயங்களில் தவறியிருக்கிறேன் அல்லது எனது முயற்சிகள் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளன என்று கூறப்படுவதை நான் விரும்புவதில்லை. மக்கள் எனக்கு அருகாகச் சாய்ந்து, "கட்டியெழுப்பும் விமர்சனம் ஒருசிறிதை நீங்கள் மதிப்பீர்கள் என்று நான் நம்பிக்கையாக இருக்கிறேன்" என்று இரகசியக் குரலில் கூறுவார்கள். நான் அதை மதிக்கலாம், ஆனால் நான் அதை விரும்புவதில்லை! அது கட்டியெழுப்புகிறதோ அல்லது இல்லையோ, இன்னமும் அது விமர்சனமாகவே உள்ளது. நான் நிலைகுலைவு அடைவதை நீங்கள் பார்க்க விரும்பினால், விமர்சனத்திற்கு நான் பாத்திரனாக இருக்கிறேன் என்று நம்பச்செய்யுங்கள். ஓ! அது உண்மையிலேயே உள்ளாகக் கொதிக்கச் செய்கிறது.

பிரச்சனை என்பது நம் யாவருக்கும் பொதுவான விஷயமாக உள்ளது. அது வலுவற்ற மனிதத் தன்முனைப்பாக உள்ளது. பழைய கூற்று ஒன்றின் பொழிப்புரையைப் பயன்படுத்துவது என்றால், "நான் சூதாடும் மனிதனாக இருந்தால், நான் ஒருவன் மாத்திரமே அவ்வாறு உணர்ந்து இருப்பவனல்ல என்று நான் பந்தயம் கட்டுவேன்." அந்த உணர்வுகளும் உணர்ச்சிப் பூர்வமான நிலைகளும், நூற்றுக்கணக்கான பாடல்கள், திரைப்படங்கள், தொலக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் புத்தகங்கள் ஆகியவற்றின் அடிப்படையாக இருந்துள்ளன.

நமது புண்படுதல்கள் எல்லாமும் விமர்சனத்தில் இருந்து வருவதில்லை என்பதை நாம் யாவரும் உணர்ந்து அறிகிறோம்; அவைகள், சகிப்புத்தன்மை யற்ற பணிச்சூழ்நிலை, வீடுசார்ந்த (திருமணம் சார்ந்த அல்லது பெற்றோர் சார்ந்த) போராட்டங்கள், அல்லது ஒரு நண்பரால் செய்யப்பட்ட தவறு போன்ற பல்வேறு இடங்களில் இருந்து வரக்கூடும். யாக்கோபு 5ன் சந்தர்ப்பப் பொருளில், இந்தக் கிறிஸ்தவர்கள் சகித்துக் கொண்டிருந்த வேதனை தவறாக நடத்தப்படுதலும், அவர்கள் செல்வந்தர்களின் கைகளில் தவறாக பயன்படுத்தப்படுதலாக இருந்தன என்பது தெளிவாகக் காணப்படும். செல்வந்தர்களின் (ஆஸ்திகளைக் குவித்து வைத்தல், கூலிகளைக் கொடுக்கத் தவறுதல் மற்றும் நீதிமானை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலைசெய்தல், 5:1-6 என்ற) பாவங்களை நீங்கள் ஆழ்ந்து சிந்திக்கும்போது, அவர்கள் (அந்த ஏழைகள்) எவ்வாறு கசப்பினாலும் பழிவாங்குதலின் உணர்வினாலும் நிறைந்திருக்கக்கூடும் என்று காண்பது கடினமாக இருப்பதில்லை. அவர்களின்

ஜெபங்கள், வெளிப்படுத்தின விசேஷம் 6:10ல் பலிபீடத்தின் கீழிருந்து பரிசுத்தவான்கள் கதறியதைப் போன்று ஒலித்திருக்கலாம்: "பரிசுத்தமும் சத்தி யமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்?"

ஆனால் தேவன், கசப்புணர்வு மற்றும் எதிர்த்துத் தாக்குதல் என்பவற்றைக் காட்டிலும் அதிகம் சிறந்த கருத்து ஒன்றைக் கொண்டிருக்கிறார், மற்றும் அந்த மாற்றுக்கருத்தை யாக்கோபு வெளிப்படுத்த இருக்கிறார். உலகம் தவறு செய்திருக்கும்போது, விசுவாசமானது உலகத்தில் இருந்து வேறுபட்ட வகையில் செயல்படுவது எவ்வாறு என்று யாக்கோபு காண்பிப்பார். யாக்கோபு முன்வைக்கும் அறிவுரை, நான்கு கட்டளைகளின் வடிவத்தில் தரப்பட்டுள்ளது. முதல் இரண்டு கட்டளைகள் நேர்மறையானவைகளும் எஞ்சிய இரண்டும் எதிர் மறையானவைகளுமாக உள்ளன.

"பொறுமையாயிருங்கள்" (5:7)

முதல் கட்டளை 7ம் வசனத்தில் காணப்படுகிறது: "இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்." இந்தத் தனிநபர்களை "பொறுமையாயிருக்க வேண்டும்" என்று கூறுவதில், யாக்கோபு இரண்டு கிரேக்க வார்த்தைகளின் ஒன்றிணைவில் இருந்து வருகிற ஒரு வார்த்தையைப் பயன்படுத்துகிறார். முதல் வார்த்தை "தூரமான, தொலைவான, நீண்ட" என்று அர்த்தப்படுகிறது மற்றும் இரண்டாவது வார்த்தை "மன எழுச்சி, தகிப்பு, சீற்றம், கோபம்" என்று அர்த்தப்படுகிறது. இவ்விரு வார்த்தைகள் ஒன்றாக இணைந்து "நீண்டகாலம்-உணர்வைக்கட்டுப்படுத்தி இருத்தல்" என்ற சிந்தனையை உண்டாக்குகின்றன.

இது யாக்கோபுவின் நாட்களில் பல கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கக் குறைவுபட்டிருந்த ஒரு பண்பாக இருந்ததோ என்ற இரகசியமான சந்தேகம் எனக்கு உள்ளது. அனேகமாக, வேதனை நிறைந்த வகையில் நாம் உண்மை நிறைந்தவர்களாக இருக்க வேண்டுமென்றால், நம்மில் பலர் அதே பண்புடன் போராடுகிறோம். பல கிறிஸ்தவர்கள், "ஓ கர்த்தாவே, எனக்குப்பொறுமையைத் தாரும், மற்றும் அதை எனக்கு இப்போதே தாரும்!" என்று ஜெபித்த மனிதரைப் போல் உள்ளனர். இது, நம்மை யாரேனும் ஒருவர் நிந்திக்கும்போது அல்லது நம்மைப் பற்றிச் சில பொய்களைப் பரப்பும்போது விசேஷித்த வகையில் உண்மையாக உள்ளது. "கலக்கம் கொள்ளாதே. பழிவாங்கு" என்ற பழைய கூற்றை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கலக்கம் கொள்ளுதல் *மற்றும்* பழிவாங்குதல் என்பதே வழக்க மாக நாம் விரும்புவதாக உள்ளது. நாம் இவ்வாறு இருக்கும்போது, நமது உணர்வுகள் நேராக்கப்படும் வரையிலும், முழு உலகமும் ஒரு நிறுத்தத்திற்கு வருகிறது. இவைகளே மிகச்சரியாக, யாக்கோபு நீக்கிப்போட முயற்சி செய்கிற உணர்வுகள் மற்றும் செயல்பாடுகளாக உள்ளன.

இந்தக் கருத்து, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும் பொறுமை யாகக் காத்திருக்கும் விவசாயி பற்றிய விவரித்தலைக் கொண்டு மறுவலியூட்டப்பட்டுள்ளது. மேற்கு டெக்ஸாஸில் ஐந்தரை ஆண்டுகாலம்

நான் ஊழியம் செய்ததில், பருத்தி விவசாயிகளின் பொறுமையை நான் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு, மண்ணை ஆயத்தப்படுத்த முன்மாரியும் பயிர் பக்குவம் அடையப் பின்மாரியும் தேவையாயிருந்தன. மிக அதிகமான முன்மாரி பயிரிடுதலைத் தாமதப்படுத்தும் அல்லது மிக அதிகமான பின்மாரி அறுவடைக்குத் தடையாயிருக்கும் என்ற அபாயமும் உள்ளது. பருத்தி விவசாயிகளுக்கு பொறுமை (மற்றும் விசுவாசம்) இல்லையென்றால் அவர்கள் உயிர்வாழ இயலாதிருந்தது.

"கர்த்தரின் வருகை" வருமளவும் நாம் பொறுமையாயிருக்க வேண்டும் என்று யாக்கோபு கூறுகிறார். *Parousia* என்பதே கர்த்தரின் "வருகை" என்ற வார்த்தைக்குப் பின்னால் உள்ள கருத்தாகும். ரோம மாகாணங்களில், மிகவும் அடிக்கடி, அரச அதிகாரியொருவர் நகரங்களுக்கும் புறக்காவல் எல்லைகளுக்கும் வருவார். அவர் வந்து சேரும்போது, பணம், சொத்து, முதலியன சம்பந்தமாகப் பிறருக்கெதிராக முறையீடுகள் கொண்டுள்ள யாவரும், அவருக்கு முன்பாக வருவார்கள். அந்த வேளையில், எல்லாத் தவறுகளும் நேராக்கப்படும். இது *parousia* என்று அழைக்கப்பட்டது. இயேசு தமது *parousia*ல் திரும்புகிறபோது, ஆவிக்குரிய தவறுகள் யாவும் நேராக்கப்படும் (2 தெசலோனிக்கேயர் 1:6, 7). தவறாக நடத்தப்பட்டுக்கொண்டுள்ள கிறிஸ்தவர்கள் அதுவரையில் "பொறுமையாயிருக்க" வேண்டும்.

"ஸ்திரப்படுத்துங்கள்" (5:8)

சகோதரர்களுக்கு யாக்கோபு புத்திகூறுகிறபோது, "ஸ்திரப்படுத்துங்கள்" என்பது 8ம் வசனத்தில் காணப்படுகிற இரண்டாவது கட்டளையாக உள்ளது. விஷயங்கள் தவறாகச் செல்கிறபோது, நம்பிக்கையிழந்து போகுதல் என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது. சில வேளைகளில் நமது விசுவாசம், நம்மைச் சுற்றி நடப்பவைகளாக, நம்மிடத்தில் மக்கள் கூறுபவைகள் அல்லது நம்மை மக்கள் எவ்வாறு நடத்துகின்றனர் என்பவற்றைச் சார்ந்துள்ளது. நாம் நியாயமற்ற வகையில் நடத்தப்படும்போது, நமது விசுவாசத்தின் பலம் அடிக்கடி பலவீனம் அடைகிறது. ஆனால் நமது விசுவாசம் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது என்று யாக்கோபு கூறுகிறார். உண்மையில், "ஸ்திரப்படுத்துங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகள், "உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துங்கள்" என்று நேரடியாக அர்த்தப்படுகின்றன. நமது விசுவாசமானது, தவறாக நடத்தப்படுதலை நாம் சகித்துக்கொள்ளக் கூடியவர்களாக இருக்கும்படிக்கு நமது இருதயங்களை ஸ்திரப்படுத்தும், பெலத்தப்படுத்தும்.

நாம் "ஸ்திரப்படும்படிக்கும்" யாக்கோபு, "கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" என்ற ஒரு தகுதிக் கூற்றைக் கூடுதலாகக் கூறுகிறார். இதைப்போன்ற கூற்றுக்களைப் புதிய ஏற்பாட்டில் நாம் வாசிக்கும்போது, அடிக்கடி நமது தோள்ளைக் குலுக்கிக் கொண்டு, "ஓ, நல்லது, கால உருவகத்திற்கான கர்த்தரின் வழியில் அது இன்னமும் சமீபமாக உள்ளது" என்று கூறுகிறோம். ஆனால் புதிய ஏற்பாட்டின் கிறிஸ்தவர்கள், இயேசுவின் உடனடி வருகையைப் பற்றிப் பிரசங்கித்தனர் மற்றும் அவர் எந்த வேளையிலும் திரும்பிவரக் கூடும் என்பது போன்று வாழ்ந்தனர். இன்றைய நாட்களில் உள்ள கிறிஸ்தவர்கள் அதே வகையில் வாழ வேண்டியவர்களாக இருக்கிறோம். இயேசு எந்த வேளையிலும் திரும்பிவரக்கூடும் என்ற வகையில் நாம் வாழ்ந்தால்,

எதிர்ப்பின் வேளையின்போது "ஸ்திரப்பட்டு நிற்குதல்" என்பது கடினமானதாக இருக்காது.

"முறையிடாதிருங்கள்" (5:9)

9ம் வசனத்தில் மூன்றாவது புத்திமதியும் எதிர்க்கூற்றுகளில் முதலாவது ஆனதும் உள்ளது: "சகோதரரே, ... ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடா திருங்கள்." அந்த ஒன்றுடன் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இடத்தில் யாக்கோபு நம்மை இடித்துரைக்கிறார்! நமது வழியில் எதிர்ப்பு வருகிறபோது, குறிப்பாக, நம்மைச் சுற்றிலும் உள்ளவர்களிடமிருந்து, அதிலும் குறிப்பாக நமது கிறிஸ்தவ சகோதரர்களிடமிருந்து தவறாக நடத்தப்படுதல் வரும்போது, முறுமுறுத்தல் என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது. அவர்கள் எவ்வாறு நம்மை நடத்த வேண்டும் என்று நாம் நினைக்கிறோமோ, அவ்வாறு அவர்கள் நடத்தாது இருப்பதன் பொல்லாத குணங்கள் யாவற்றையம் பட்டியலிட்டு, நமது வேதனை நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களிடத்தில் குரலாக்கப்படுகிறது.

நாம், முறுமுறுக்கிற, முணுமுணுக்கிற மற்றும் முறையிடுகிற சபை உறுப்பினரை மன்னித்துவிடும் மனப்பாங்கைக் கொண்டிருக்கிறோம். நாம், "அவர் அவ்வாறுதான் இருக்கிறார்" அல்லது "அவர் ஒரு எதிர்மறை ஆளுமைத்தன்மை கொண்டிருக்கிறார்" என்பது போன்ற அற்பமான குறிப்புகளை அளிக்கிறோம். முறுமுறுக்கிற அல்லது தனக்குச் சலுகை எடுத்துக்கொள்ளும் ஒருவரை, அவரது முறுமுறுத்தல் ஒரு பொருட்டல்ல என்பது போல நாம் மன்னித்து விடுகிறோம் என்பதே பிரச்சனையாக உள்ளது. இந்தக் குற்றங்கள் குறிப்பிடத்தக்கவையல்ல என்பது போலத் தேவன் இவற்றைக் கண்ணோக்குவதில்லை. நீங்கள் தவறாக நடத்தப்படும்போது கூட, உங்கள் விசுவாசமானது, நீங்கள் உங்கள் சகோதரருக்கு எதிராக முறுமுறுத்தலில் இருந்து உங்களைப் பாதுகாக்கும் என்று தேவன் கூறுகிறார். பொல்லாத வகையில் பேசும் இச்செயலைத் தேவன் செய்கிறது போலத் தீவிரமாக நாம் எடுத்துக் கொள்ளாத வரையில், சபைகள் பாவம் நிறைந்த வகையில் பேசும் உறுப்பினர்களால் அழிக்கப்படும்.

முறுமுறுக்காது இருத்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காகப் பரிசுத்த ஆவியானவர், அதைச் செய்பவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்று யாக்கோபு மூலமாக எச்சரிக்கிறார். "நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்" என்பதால், முறுமுறுப்பவர்களுக்கு எதிரான நியாயத்தீர்ப்பு உடனடியாக உள்ளது. நாம் ஒருவர் மற்றவருக்கு எதிராக முறுமுறுத்தல் காரணமாக இயேசுவை நாம் நியாயாதிபதியாகக் கொண்டிருத்தல் என்பது எவ்வளவு பயங்கரமாக இருக்கும்!

"ஆணையிடாதீர்கள்" (5:12)

நமது விசுவாசமானது, நாம் பேசும் வகைமுறையில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த வேண்டும் என்று யாக்கோபு கூறுகிறார். நாம் ஆணையிடக்கூடாது என்று அவர் கூறுகிறார் (5:12). மக்கள் நம்மைத் தவறாகத் தூண்டும்போது நமது நாவுகள் கட்டுக்கடங்காமல் ஓட அனுமதித்தல் மிகவும் சுலபமாக இருக்கும். நமது உலகம் எவ்வளவு ஆபாசமானதாக உள்ளது என்று உணர்ந்து அறிவதற்கு நீங்கள் உலகத்தின் மக்களுடன் நேரம் மாத்திரமே செலவிட வேண்டியுள்ளது.

நமது விசுவாசம் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தும் போது மிகமோசமான சூழ்நிலைகளில் நாம் நமது நாவுகளைக் கட்டுப்படுத்த முடியும்.

நமது சமூகத்தில் அவ்வளவு பொல்லாங்கானதும் அவ்வளவு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுமான விஷயமான ஆயாசம் என்பது கிறிஸ்தவர்களுக்குக் கண்ணியாகவும் வலையாகவும் உள்ளது. ஆனால் நமது பேச்சானது எளிமையாகவும் தெளிவாகவும் இருக்கவேண்டும், அது உலகத்தின் உவர்ப்பான பேச்சினால் அடைமொழிப் படுத்தப்பட்டதாக இருக்கக் கூடாது என்று யாக்கோபு கூறுகிறார். கிறிஸ்தவர்கள் தாங்கள் விசுவாசிக்கும் விஷயத்தை மறுதலிப்பதற்குத் தங்கள் மொழிநடையைப் பயன்படுத்துகிற போது, அது பரிதாபகரமானதாக உள்ளது. விஷயங்கள் கடினமானவைகளாக இருக்கும்போதும் கூட, நாம் என்ன கூறுகிறோம் என்பதில் நமது விசுவாசம் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தும்.

முடிவுரை

நாம் கர்த்தரால் அழைக்கப்பட்டுள்ளபோது, நாம் ரோஜாக்களின் படுக்கையில் படுத்துக்கொள்வதற்காக அவர் நம்மை அழைப்பதில்லை. கிறிஸ்தவ வாழ்வை வாழுதல் என்பது கடினமாக உள்ளது. குறிப்பாக இது, நம்மைச் சரியாக நடத்த வேண்டியவர்களால் நாம் தவறாக நடத்தப்படும்போது மிகவும் கடினமாக உள்ளது. நம்மை அன்புகூர வேண்டியவர்களால் நாம் தவறாக நடத்தப்படும் போது, நாம் (1) பொறுமையாயிருத்தல், (2) ஸ்திரப்பட்டு நிற்குதல், (3) முறையிடாதிருத்தல் மற்றும் (4) ஆணையிடாதிருத்தல் ஆகியவற்றை நினைவுகூருதல் அவசியமாக உள்ளது.

நமக்கு நம்பிக்கை தரப்படுவதற்காக, பாடுகளின் முகத்தில் பொறுமையாக இருந்துள்ள மக்களின் உதாரணங்கள் நமக்கு தரப்பட்டுள்ளன. முதலாவது, தீர்க்கதரிசிகளைப் பற்றி ஆழந்து சிந்திக்கும்படி நமக்கும் கூறப்பட்டுள்ளது. எலியா, ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் மற்றும் ஓசியா ஆகியோர் எதிர்கொண்ட எதிர்ப்பான சூழ்நிலைகள் மற்றும் அவர்கள் காட்சிப்படுத்திய பொறுமை ஆகியவற்றைப் பற்றி நினைத்துப் பாருங்கள். யோபுவின் பொறுமையைப் பற்றி ஆழந்து சிந்திக்கும்படியும் யாக்கோபு கூறுகிறார். எனது கருத்தில், இவ்விடத்தில் மற்ற வேதாகமங்கள் "பொறுமை" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகையில், அவற்றைவிடச் சிறப்பாக NIV வேதாகமம், "நீடியபொறுமை" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது, ஏனென்றால் சில வேளைகளில் யோபு பொறுமையின் வடிவமாகவே இருந்தார். எது நடந்தபோதிலும் யோபு நீடிய பொறுமையாக இருந்தார். இந்த உதாரணங்கள் நமக்கு நம்பிக்கை நிறைந்தவையாக உள்ளன, ஏனென்றால் இவைகள் அது செய்யப்பட முடியும் என்று நமக்குக் காண்பிக்கின்றன.

விஷயங்கள் தவறாகச் செல்லும்போது நமது விசுவாசம் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த அனுமதிப்பதற்குத் தேவன் நமக்குப் பெலன் கொடுப்பாராக.

16

ஜெபத்தின் மீது நடைமுறைச் சுட்டிக்காட்டிகள் (5:13-18)

அது அங்கே - 17ம் வசனத்தில் - சரியாக உள்ளது, "எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும் ..." உங்களைப்பற்றி எனக்கு தெரியாது, ஆனால் அது எனக்கு ஒரு பிரச்சனையை முன்வைக்கிறது. நான் இயன்ற அளவு முயற்சி செய்தும், எலியா என்னைப்போல இருக்கிறார் என்று நினைப்பதில் கடினமான வேளையைக் கொண்டுள்ளேன். அவர் அவ்வாறு இருக்கிறார் என்று யாக்கோபு கூறுவதால் அது பிரச்சனையாக உள்ளது!

எலியாவை உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவர், ஆகாப் அரசருக்கு முன்பாக சரிக்குச் சரியாக நின்று, அவரது இராஜ்யத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மழைபெய்யாது என்று அவருக்குக்கூறிய, மிகவும் தைரியம் வாய்ந்த பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசியாய் இருந்தார். அவர் விசுவாசத்தில் நெஞ்சுரம் மிக்கவராக, இறந்துபோயிருந்த ஒரு பையனுக்காகத் தேவனிடத்தில் ஜெபித்து, அந்தப் பையனை உயிரோடு எழுப்பியவராக இருந்தார். அவர் தேவனுடைய சத்தியத்தை தற்காக்க பயமற்றவராக இருந்து, கர்மேல் மலையின் உச்சியில் நடந்த போட்டியில், வானத்தில் இருந்து அக்கினியை வரவழைக்கும்படி, பாகாலின் தீர்க்கதரிசிகள் 450 பேர்களுக்கும், ஆசேராவின் தீர்க்கதரிசிகள் 400 பேர்களுக்கும் அறைகூவல் விடுத்தார், பின்பு வெற்றிக்கொண்டாட்டத்தில் அவர்களின் தலைகளை வெட்டுவித்தார். இருபதாம் நூற்றாண்டில் வாழும் எந்த ஒரு தனிநபரும் இதைப்போன்ற மனிதருடன் தன்னை எவ்வாறு அடையாளப்படுத்த முடியும்?

தேவனுடைய மாபெரும் மனிதர்கள் ஜெபிக்கிற மனிதர்களாக இருந்தனர் என்று யாக்கோபு கூறுகிறார் என்பதையே நாம் காணவேண்டும்! அவர்கள் ஜெபத்தைப் பற்றிப் பேசுகிற, ஜெபத்தில் தாங்கள் கண்டுள்ள நம்பிக்கையை விளம்பரப்படுத்துகிற அல்லது ஜெபத்தைப் பற்றிய ஒவ்வொரு விஷயத்தையும் விளக்க முயற்சி செய்கிற மனிதர்களாகக் கூட இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. தேவனுடைய உண்மையான மக்கள் தாழ்மையும், அர்ப்பணிப்பும் உள்ளவர்களாக, ஜெபிப்பதற்கு உண்மையிலேயே நேரம் எடுத்துக்கொள்பவர்களாக இருக்கின்றனர். இந்த மக்கள் நம்மைக் காட்டிலும் அதிகம் நேரம் கொண்டிருப்பதில்லை; நம்மில் பெரும்பான்மையானவர்கள், நமது வாழ்வில் நிரப்பி இருக்கும் விஷயங்களைக் காட்டிலும் ஜெபத்தை அவர்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகின்றனர். வல்லமையின் தேவனும், தமது பிள்ளைகளின் வேண்டுதல்களைக் கேட்டுப் பதில் அளிக்கிறவருமானவர் மீது விசுவாசித்து எலியா போன்ற நபர்கள் ஜெபத்தின்மூலமாக அவரது வல்லமையை உரிமைகோரியுள்ளனர்.

யாக்கோபு நிருபம் தனது இயல்பில் மிகவும் நடைமுறைத்துவம்

உடையதாகையால், அது ஜெபத்தைப் பற்றி உரைப்பதை நீங்கள் இயல்பாகவே எதிர்பார்ப்பீர்கள். அது அவ்வாறே செய்கிறது! நமது ஜெப வாழ்வில் விசுவாசம் எவ்வாறு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது என்பதை யாக்கோபு காண்பிக்கப்போகிறார். நமது பாடத்திற்கான வேதவசனப் பகுதியான யாக்கோபு 5:13-18ல், கவனத்துடன் படித்தாக வேண்டிய, ஜெபத்தின்மீதான வழிகாட்டும் குறிப்புகள் சில உள்ளன.

ஜெபம் செய்ய அழைக்கும் கடினமான சூழ்நிலைகள்

யாக்கோபு, இந்த நிருபம் முழுவதிலும் உள்ள தமது வழக்கத்தின்படியே, இந்த புத்திமதியை நடைமுறைக்குரியதாகச் செய்கிறார். ஜெபத்தை வற்புறுத்தும் நேரங்கள் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றைச் சுட்டிக்காண்பிக்கிறார். குறிப்பாக அவர், ஜெபத்தில் நம்மையே நாம் தேவனிடத்தில் தாழ்த்த வேண்டும் என்று மூன்று முறை குறிப்பிடுகிறார், அதாவது “துன்பப்படும்போது, வியாதிப்படும்போது மற்றும் பாவத்தினால் மேற்கொள்ளப்படும்போது.” இந்தச் சூழ்நிலைகள் ஒவ்வொன்றையும் நாம் தனித்தனியே ஆழ்ந்து சிந்திப்போம்.

முதலாவது, நாம் துன்பத்தினால் எதிர்கொள்ளப்படும்போது, ஜெபம் அவசியமாக உள்ளது. 13ம் வசனத்தில், “உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்'' என்று யாக்கோபு கூறுகிறார். மற்ற மொழி பெயர்ப்புகளில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள், NIV மொழிபெயர்ப்பில் உள்ள “துன்பம்” [“trouble”] என்ற வார்த்தையின் அர்த்தத்தை அளவிட நமக்கு உதவுகின்றன. KJV வேதாகமம் “afflicted” என்று கூறுகிறது. ASV, RSV மற்றும் NASB ஆகியவை “suffering” என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன. கிரேக்க வார்த்தையானது இந்த வார்த்தைகள் எல்லாவற்றைக் காட்டிலும் விசாலமானதாக உள்ளது. மறைந்த J. W. இராபர்ட்ஸ் என்பவர் இவ்வார்த்தையைப் பின்வருமாறு விவரித்தார்:

> இவ்விடத்தில் துன்புறுதல் என்பது வியாதி சுகவீனம் ஆகியவற்றைக் காட்டிலும் அதிகம் பொதுவான விஷயமாக உள்ளது. வேறிடத்தில் இதன் பயன்பாட்டில், இது உபத்திரவத்தை சிரமத்துடன் அனுபவித்தல் (2 தீமோத்தேயு 2:9) மற்றும் சுவிசேஷ ஊழிய வாழ்வின் துன்பம் (2 தீமோத்தேயு 2:3; 4:5) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். யாக்கோபு 5:10ல், யாக்கோபு தீர்க்கதரிசிகளின் பாடுகள் மற்றும் துன்பம் ஆகியவற்றைக் குறிப்பிடும்போது, யாக்கோபு இதே வார்த்தையைத் திரும்பவும் பயன்படுத்துகிறார்.[1]

இவ்வார்த்தையின் இந்தக் கருத்துடன் நீங்கள், உங்கள் வேதனை, துக்கம், இழப்பு, சோர்வு அல்லது வருத்தம் எதுவாக இருந்தாலும் ஜெபத்திற்குத் திரும்புங்கள் என்று யாக்கோபு கூறுகிறார். அந்த ஜெபத்தைத் தேவன் கேட்டு, தேவையான உதவி மற்றும் பலப்படுத்துதலைக் கொண்டு பதில் அளிக்கும்போது, அவரது அன்பு மற்றும் உதவி ஆகியவற்றிற்காக நாம் தேவனைத் துதிக்க மறவாது இருப்போமாக.

அடுத்ததாக யாக்கோபு, வியாதியின்வேளையின்போது நாம் ஜெபத்தில் தேவனிடமாய்ச் சாயவேண்டும் என்று சுட்டிக்காண்பிக்கிறார்.

இதை அவர் "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் ..." என்று கூறுவதன்மூலம் செய்கிறார் (5:14, 15அ). நாம் அந்த வசனங்களை வாசிக்கும்போது, யாக்கோபு கூறுவதின் பிரதான வலியுறுத்தமான, *வியாதிப்பட்டவர்ளுக்காக ஜெபம்* என்பதைப்பற்றி மறந்துபோகும் அளவுக்கு, நாம் இவ்வசனப்பகுதியின் மறைவான கருத்துக்கள் பற்றிய கலந்துரையாடலில் மிகவும் அடிக்கடி அதிகமாக மூடப்படுகிறோம். இது உடல்ரீதியான நலிவுகள் எல்லாவற்றிலும் மிகவும் பொதுவானதாக உள்ளது, மற்றும் யாக்கோபு இதைத் தேவனிடத்தில்திருப்பும்படி கூறுகிறார் (1 பேதுரு 5:6). வியாதிப்பட்ட மனிதரைக் குணமாக்குவது எது? "விசுவாசமுள்ள ஜெபமேயாகும்" என்று யக்கோபு கூறுகிறார். விசுவாசமுள்ள ஜெபம் என்பது, நாம் எதைக் கேட்கிறோமோ அதைத் தேவன் செய்ய முடியும் என்று விசுவாசத்துடன் ஏறெடுக்கப்படும் ஜெபமாகும் (1:6; 1 யோவான் 5:14).

ஆனால் நாம் விசுவாசத்தில் கேட்கிறோம், [ஆயினும்] வியாதிப்பட்டவர்களில் சிலர் நலம் அடைவது இல்லை! வியாதிப்பட்டவர்கள் எப்போதுமே குணம் அடைகின்றனரா? இல்லை. தவறாக புரிந்துகொள்ள வேண்டாம். நமது ஜெபங்கள், தேவன் நமது உலகத்தில் செயல்பட்டு விஷயங்களை மாற்றக் காரணமாகக்கூடும். எசேக்கியாவின் ஜெபத்திற்குப் பதில்செயலாக, அவரது வாழ்நாளில் பதினைந்து ஆண்டுகள் கூட்டித் தந்த தேவனுடைய உதாரணம் (2 இராஜாக்கள் 20), இதைச் செயல்விளக்கப்படுத்துகிறது. யோவான், "*நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி* கேட்டால், ..." என்று கூறுமிடமான 1 யோவான் 5:14ம் வசனம் நமது புரிந்துகொள்ளுதலுக்கான திறவுகோலாக இருக்கலாம் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). சிலவேளைளில், தேவனுடைய சித்தம் என்னவாக இருக்கலாம் என்பதை ஆழ்ந்து சிந்திக்க மறந்து போகும் அளவுக்கு *நாம்* சில விஷயங்களை விரும்பலாம். நாம் பின் திரும்பிச் சென்று, தோட்டத்தில் இயேசுவின் ஜெபத்தை ஆராய்வு செய்து அந்த ஜெபத்தின் ஆவியை அறிதல் அவசியமாக உள்ளது. நாம் விரும்புவது என்ன என்பதைத் தேவன் அறிய அனுமதித்தல் தவறல்ல, ஆனால் அவரது சித்தம் எதுவாக இருந்தாலும், அதை ஏற்றுக்கொள்ள பலமும் தைரியமும் வேண்டும் என்று கேட்பதும் நமக்கு அவசியமாக உள்ளது.

மூன்றாவதாக, பாவத்தின் குற்றத்தினால் நாம் கீழாக்கப்பட்டிருக்கும்போது, நாம் தேவனை நோக்கிச் சாய்தல் அவசியம் என்று யாக்கோபு கூறுகிறார். 15ஆ மற்றும் 16ம் வசனங்களில் அவர், "அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்" என்று கூறுகிறார். 15ம் வசனத்தின் பிற்பகுதி, 14ம்வசனம் மற்றும் 15ம் வசனத்தின் முற்பகுதி ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அதே மனிதரைப் பற்றியே பேசுகிறது என்பது சந்தர்ப்பப்பொருளில் இருந்து தெளிவாகிறது. மனிதர்களின் தனிப்பட்ட பாவங்களின் நேரடி விளைவாக மாத்திரமே உடல் நலக்குறைவு வருகிறது என்று இது போதிப்பதில்லை. இருப்பினும் இது, ஒருவர் வியாதிப்பட்டவேளைகளில், தமது ஆரோக்கியமான காலங்களிலே தாம்

தேவனைப் புறக்கணித்து இருந்ததின் உண்மையை நினைத்துப்பார்க்கும்படி வழிநடத்தி அந்தப் பாவங்களைத் தமது வியாதிப்பட்ட நிலையில் அறிக்கையிட்டு மன்னிப்பை நாடி வழிநடத்தலாம் என்று போதிப்பதாகக் காணப்படுகிறது. தேவனுடைய பிள்ளையாக இருந்தும் பாவம் நிறைந்துள்ள நிலையில் இருப்பவருக்கு, மன்னிப்பிற்குத் தேவன் ஒரு "நிபந்தனையை" கொண்டுள்ளார். இதற்கு மிகவும் ஒத்துப்போகும் வழியில்தான் யோவான், "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" என்று கூறுகிறார் (1 யோவான் 1:9). யாக்கோபுவும் யோவானும் ஆகிய இருவருமே, ஒருவர் தமது பாவங்களை ஒப்புக்கொள்ளப் போதிய அளவுக்குத் தேவனிடத்திலும் தமது சகோதரரிடத்திலும் தாழ்மை யாக இருக்க வேண்டும், மற்றும் சுத்திகரிக்கும்படி தேவனிடத்தில் கேட்க வேண்டும் என்று கூறுகின்றனர். இவ்வசனம், சபையின் முன்பாக ஒரு முறைப்படியான மன்னிப்பு என்று நாம் கருதுகிற விஷயத்தைத் தனிப்பட்ட முறையில் கையாளுவதில்லை, ஆனல் அப்படிப்பட்டதை நிச்சயமாகவே உள்ளடக்கியிருக்கும். அதுபோலவே, இது அறிக்கையிடுதல் ஏற்படுத்தப்பட வேண்டிய நடக்கையின் வகையைப் பரிந்துரைப்பதும் இல்லை. பலவித மான வழிகள் பயன்படுத்தப்பட முடியும் என்பது தெளிவு - 15 மற்றும் 16ம் வசனங்களில் போதிக்கப்பட்டுள்ளபடி அது சபைகூடுகையில் செய்யப்பட முடியும், மூப்பர்களின்முன்னிலையில் அது செய்யப்பட முடியும், ஒரு சகோதரர் மற்றொருவரிடத்தில் என்ற வகையினால் அது செய்யப்பட முடியும் அல்லது தனிநபரின் மனம்வருந்துதல் பற்றி பாதிக்கப்பட்ட குழுவினிடம் தகவல் அறிவிக்கக்கூடுமான மற்ற ஏதாவது வசதியான வழிமுறைகளில் அது செய்யப்பட முடியும். ஆனால் யாக்கோபு, அறிக்கையிடுதலின் ஜெபத்தினுடைய *அவசியம்பற்றி* அக்கறையாக இருப்பது போன்று, அவர் *எவ்வாறு* என்பது பற்றி அக்கறையாக இருப்பதில்லை.

செயல்விளைவுள்ள ஜெபத்தின் அசைவாற்றல்

ஜெபம் தேவைப்படும் நேரங்கள் பற்றி நமக்கு தகவல் அறிவித்துள்ள யாக்கோபு "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ள தாயிருக்கிறது" என்று கூறுகிறார் (5:16ஆ). தனது பாவங்கள் அறிக்கையிடப்பட்டு மன்னிக்கப்பட்ட மனிதரே "நீதிமானாக" இருக்கிறார் என்று காணப்படும். அம்மனிதரின் ஜெபம், விளைவுகளைத் தருவிக்கக் கூடியதாக உள்ளது. அது அர்த்தப்படுத்துவது என்ன என்பதை நாம் புரிந்து கொள்வதற்காக, யாக்கோபு ஒரு உதாரணம் தருகிறார். அவர், "எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான். அப்பொழுது மூன்று வருஷமும் ஆறுமாத மும் பூமியின்மேல் மழைபெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது. பூமி தன் பலனைத் தந்தது" (5:17, 18). அங்கு அந்த வரி மீண்டும் உள்ளது: "எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும்." ஜெபம் மற்றும் அதன் வல்லமை ஆகியவை பற்றி நாம் கற்றுள்ள யாவற்றுடனும் நாம் மீண்டும், *எவ்வாறு?* என்று கேட்கிறோம். நமக்குக் கிடைக்கும் பலத்தின் அதே ஆதாரமூலத்தை எலியா தட்டினார் என்று நாம்

கற்றுள்ளோம். வாழ்வை வெற்றியாக்கும் பலமும் வல்லமையும் தேவனிடத்தில் இருந்து மாத்திரமே கிடைக்கின்றன என்பது நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாக உள்ளது. ஜெபம் என்பது நம்மைத் தேவனைச் சார்ந்தவர்களாக ஆக்குவதன் மூலமாக மாத்திரம் மாற்றுவதில்லை ஆனால் அதன்மூலமாக, தேவன் நமக்காக விஷயங்களை மாற்ற முடியும்.

முடிவுரை

நாம் ஜெபிக்கக் கற்றுக்கொள்ளாத வரையிலும், நாம் கொண்டிருக்கவும் தேவனுடைய மகிமைக்காகவும் நமது சொந்த ஆவிக்குரிய முன்னேற்றத்திற் காகவும் நாம் பயன்படுத்தக் கூடியவையுமான பல ஆசீர்வாதங்களை நாமே நம்மைவிட்டு நீக்கிப்போடுவோம். பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள காப்பீட்டுப் பாலிசி ஒன்றை ஹென்றி ஃபோர்டு என்பவர் வாங்கியதைப் பற்றிய கதையொன்று கூறப்பட்டுள்ளது. காப்பீட்டு வர்த்தகத்தில் இருந்த, அவரது நல்ல நண்பர்களில் ஒருவர், தம்மிடத்தில் அவர் பாலிசி எடுக்காதது ஏன் என்று கேட்டார். "நீங்கள் என்னிடம் கேட்கவில்லையே" என்ற பதில் உடனே வந்தது.

நாம் ஜெபத்தின்மூலமாக கேட்காதபடியினால் தேவனிடத்தில் இருந்து எவ்வளவு நல்ல விஷயங்களை தவறவிடுகிறோம் என்று இந்த வசனப்பகுதி உங்களை வியப்படையச் செய்கிறதா? விசுவாசம் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது என்று யாக்கோபு காட்டுகிறார், அதில் உள்ள வேறுபாடானது நமக்குப் பின்வரும் விஷயங்களைப் போதிக்கிறது:

1. தேவனுடன் நிலையான ஒரு தொடர்பில் வாழுங்கள்.
2. நமது தேவைகள் தாராளமாக அளிக்கப்படும் என்ற தைரியத்துடன் தேவனைத் தொழுது கொள்ளுங்கள்.
3. நமது பலவீனங்கள் மற்றும் பாவம் நிறைந்த தன்மை ஆகியவற்றை அறிக்கையிட்டு, தேவனை நாம் சார்ந்திருத்தலை ஒப்புக்கொண்டு அவரது வழிக்கு நம்மை ஒப்புவித்தல்.

குறிப்பு

[1]J. W. Roberts, *The Living Word Commentary,* "The Letter of James" (Austin, Tex.: Sweet Publishing Co., 1977), 162.

17

விலகிச் சென்றுள்ள பரிசுத்தவான்களைக் கையாள்வது எவ்வாறு [5:19, 20]

பல ஆண்டுகளுக்கு முன்பு எனது மனைவி மாலியாவும் நானும், ஃபார்மிங்ட்டன் சபைக்குச் செய்யவேண்டிய முக்கியமான சில பணிகளைக் கொண்டிருந்தோம். செய்யத் தேவையானவற்றை நிறைவேற்ற, நாங்கள் சுதந்தரத்தைக் கொண்டிருக்க எங்களை அனுமதிப்பதற்கு, சபைக்குழுமத்தில் இருந்த பெண்களில் ஒருவரான டோரிஸ் லூயிஸ் என்பவர், சற்றுக்காலம் எங்கள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்குத் தானே முன்வந்தார். எங்கள் குழந்தைகளை அழைத்து வருவதற்காக நாங்கள் லூயிஸின் இல்லத்திற்குச் சென்றபோது, அவர்களின் இல்லத்தை உடனடியாக நாங்கள் நேசிக்கலானோம். அவர்கள், 150 ஆண்டுகளுக்கும் மேல் பழையதான ஒரு வீட்டை வாங்கி இருந்தனர், அதை மீள்க்கட்டுவித்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணியில் ஈடுபட்டிருந்தனர். அந்த வீட்டினூடே நடத்தல் மற்றும் அவர்கள் செய்து முடித்தி ருந்தவற்றைப் பார்த்தல் மற்றும் அவர்களின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் கவனித்துக் கேட்டல் ஆகியவற்றை நாங்கள் மகிழ்வுடன் அனுபவித்தோம். டோரிஸ் கூறியதை நாங்கள் கவனிக்கையில், புதுப்பித்தல் என்பது, உண்மையில் அன்பின் உழைப்பாக இருந்தது என்று எங்களால் கூற முடிந்தது. அது உழைப்பு மற்றும் அன்பு என்பவற்றின் முழுமையாக இருந்துள்ளது என்பது எனது யூகமாக இருக்கும். இதுவே மீளக்கட்டுவித்தல் திட்டத்தினுடைய எந்த வகையிலான பணியிலும் விஷயமாயிருப்பதாகக் காணப்படும்.

யாக்கோபு நிருபத்தின் மீதான நமது படிப்பை நாம் நிறைவு செய்கையில், அலைந்து திரிகிற ஒருவரை மீளக்கட்டுவித்தல் மீதான ஒரு குறிப்புடன், இந்த நிருபத்தை யாக்கோபு முடிக்கிறதை நாம் காண்கிறோம். யாக்கோபு, நமது அன்றாட வாழ்வில் விசுவாசம் எவ்வாறு வேறுபாட்டை ஏற்படுத்த முடியும் என்பது பற்றிப் பேசியிருக்கிறார் (சோதனைகளைப் பற்றிய சத்தியம், நாவைப் பயன்படுத்துதல், தேவனுடைய சித்தத்தை அறிந்து அதைச் செய்தல், நமது அயலாரை நேசித்தல் முதலியன பற்றி அறிவுறுத்தியிருக்கிறார்). அவர் தமது நிருபத்தின் முடிவில், தாம் ஒரு கல்விசார் ஆய்வை மாத்திரம் கொடுக்க வில்லை, ஆனால் செயல்படுவதற்கான அழைப்பையும் கொடுத்ததை அவர் நமக்குக் காண்பிக்கிறார். சுவிசேஷத்தின் சத்தியத்தில் இருந்து விலகிப்போய் இருப்பவர்கள் மற்றும் சபை கூடுதலின் கடமையிலிருந்து தவறியவர்கள் ஆகியோரை சரியான நடக்கைக்குத் திரும்பிக் கொண்டுவருதல் அவசியமாக உள்ளது.

கிறிஸ்தவர்கள் விலகிச் செல்லக்கூடும் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. ஒரு தனிநபர் கிறிஸ்தவராகிறார் என்பதால் சாத்தான் அவரை

விட்டுக்கொடுத்து விடுவான் என்று அர்த்தப்படுவதில்லை. ஏதேனும் இருந்தால் அவன் சாத்தான் அவரை அழிப்பதில் இன்னும் தீவிரமாகிறான் (1 பேதுரு 5:8). தங்கள் விசுவாசத்தைத் துறந்து சுவிசேஷத்தின் கிருபையில் இருந்து புறம்பே நடக்கிறவர்களுக்கு, ஒரு பயங்கரமான முடிவு காத்திருக்கிறது (2 பேதுரு 2:20, 21; எபிரெயர் 10:26, 27).

இந்தக் குறிப்பிட்ட பிரச்சனையின் மீது போதிய கவனம் செலுத்தப்படுவது இல்லை. நமது பிரசங்க மேடைகள் எச்சரிக்கைகளை எதிரொலிக்க வேண்டும் மற்றும் புதிய கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் விசுவாசத்தில் அறிவுறுத்தப்பட்டு புத்திகூறப்பட வேண்டும். பலவீனமான, உலகப் பிரகாரமான அல்லது புறம்பே அலைகிற சகோதரர்களுக்காக ஊக்கமான ஜெபங்கள் ஏறெடுக்கப்படுவது மாத்திரம் அல்ல, ஆனால் விலகிச் சென்றுள்ள சகோதரர்களிடம் சென்று அவர்களை மீளத் திருப்புவதற்கான முயற்சிகள் ஒவ்வொன்றும் செய்யப்பட வேண்டும்.

லூரயிஸின் இல்லத்தை மீளக்கட்டுவித்தலில் உள்ள விஷயம் போலவே, ஒரு சகோதரரை மீளக்கட்டுவித்தல் என்பது அன்பின் உழைப்பாக இருக்கும். அது அதிகமான உழைப்பு *மற்றும்* அன்பு ஆகியவற்றையும் எடுத்துக் கொள்ளும். நாம், யாக்கோபு நிருபத்தின் கடைசி இரண்டு வசனங்களைக் கண்ணோக்கி, விலகிப்போன பரித்தவான்களுக்கு நாம் செய்ய வேண்டியதாக அவர் கூறுகிறது என்ன என்று கண்ணோக்குவோமாக.

சாத்தியக்கூறு: "உங்களில் ஒருவன் ..." (5:19)

சத்தியம் என்பது வாழும் விஷயமாக உள்ளது. அது நமது சிந்தைகளைப் பிடிக்கும் போது, அது நமது வாழ்வை மாற்றுகிறது. சத்தியத்தைப் பற்றிய நமது அறிவானது, உண்மைகளை வெறுமனே மனப்பாடமாகக் கூறுதலைக் காட்டிலும் அதிகமானதாக இருக்க வேண்டும் என்று யாக்கோபு கூறியிருக்கிறார்; அது நாம் வாழும் வகையினால் ஆதாரப்படுத்தப் படவேண்டும். உதாரணமாக, நீங்கள் விசுவாசம் கொண்டிருந்தால், சோதனை வேளையில் நீங்கள் சந்தேகப்பட மாட்டீர்கள், தேவைகள் கொண்டிருப்பவர்களை நீங்கள் பராமரிப்பீர்கள், உபத்திரவத்தின் வேளைகளின்போது நீங்கள் பொறுமையாக இருப்பீர்கள். "அலைந்து திரிகிற" அல்லது "புறம்பே திரிகிற" பரிசுத்தவான்களின் வாழ்வானது அவர்கள் விசுவாசிப்பதாகக் கூறும் விஷயத்துடன் இசைவாயிராததால் அவர்களை நீங்கள் அடையாளம் காண்பீர்கள். தேவனிடத்தில் இருந்து புறம்பே செல்லுகிற கிறிஸ்தவரின் இயல்பை, "விலகி" என்ற ஆர்வமுள்ள ஒரு வார்த்தையைக் கொண்டு யாக்கோபு விவரித்தார். அந்த வார்த்தை, "தவறுக்குள் விழுதல்" அல்லது "புறம்பே செல்லுதல்" என்று அர்த்தப்படுகிறது. ஒரு ஆடு தனது மேய்ப்பன் மற்றும் மந்தையில் இருந்து விலகிச் செல்வதை விவரிக்க, இந்த வார்த்தையை மத்தேயு பயன்படுத்துகிறார் (மத்தேயு 18:12). ஒரு கிறிஸ்தவர், தேவன் நியமித்துள்ள விசுவாசத்தின் வழியை மேற்கொள்வதற்கு மாறாகத் தமது சொந்த வழியை மேற்கொள்ளுதல் என்பதே இங்கு யாக்கோபு சித்தரிக்கும் விஷயமாக உள்ளது.

தேவனுடைய பிள்ளையாக இருப்பவர் விலகிச் செல்லுதலின் சாத்தியக் கூற்றை நிரூபிக்க, வேதவாக்கியங்களின் படிப்பில் ஒருவர் வெகுதூரம் செல்லத் தேவையிராது. மாபெரும் விசுவாசத்தின் மனிதரான ஆபிரகாம், எகிப்தியரிடம்,

சாராள் தனது சகோதரி என்று பொய்கூறியபோது, அவர் தமது உறுதிப்பாட்டில் இருந்து விலகிச் சென்றிருந்தார் (ஆதியாகமம் 12:9). தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதரான தாவீது, ஒரு பெண்ணுக்காக ஒருவனுக்கு ஒருத்தி என்ற தேவனுடைய உயர்ந்த கொள்கைகளில் இருந்து விலகிச் சென்று, இன்னொரு மனிதரின் மனைவியுடன் விபசாரம் செய்தார் (2 சாமுவேல் 11:2-5). கர்த்தருக்கு மிகவும் நெருக்கமான சீஷர்களில் ஒருவரான பேதுரு, இடர்ப்பாடான ஒரு தருணத்தில் கர்த்தரை மறுதலித்தார் (மத்தேயு 26:69-74).

பொறுப்பு: "பாவியைத் திருப்புகிறவன்" (5:20)

நம்மில் பலர், கிறிஸ்தவம் என்பது, பிசாசுக்கு எதிரான நமது போராட்டத்தில் நமக்கு ஒருவர் மற்றவர் (உதவி) தேவையில்லை என்பது போல், "தனிமையாகத் திரிபவர்" என்ற வகையிலான விஷயம் என்பதாக நினைப்பதாகக் காணப்படுகிறது. இது உண்மையல்ல. நமக்கு ஒருவருக்கொருவர் தேவை! நான் என்று அல்ல. நீங்கள் என்று அல்ல. அது நாம் *என்று இருக்கிறது! நாம் ஒவ்வொருவரும் மற்றவருக்கு ஆவிக்குரிய வகையில் பொறுப்பைக் கொண்டுள்ளோம், மற்றும் இவ்வசனமும் பிற வசனங்களும் (கலாத்தியர் 6:1; எபிரெயர் 10:24) இந்தப் பொறுப்பைச் சுட்டிக்காண்பிக்கின்றன.*

நமது கிறிஸ்தவத்தைத் தவிர, ஏறக்குறைய மற்ற எல்லாவற்றைக் குறித்தும் நாம் ஒருவர் மற்றவருடன் பேசுவதில் சௌகரியமாக உணருகிறோம். கால்பந்து, வேட்டையாடுதல், மீன்பிடித்தல், கார்கள் மற்றும் மாடுகள் ஆகியவற்றைப் பற்றி நம்மால் பேச முடியும், ஆனால் உண்மையிலேயே முக்கியமான விஷயங்கள் பற்றி ஒருவர் மற்றவருடன் பேசுவதில் நாம் தைரியக் குறைவுபடுகிறோம். இது ஏன் உண்மையாக உள்ளது என்பதற்கு இரு காரணங்கள் நிலவுகின்றன. முதலாவது, வேறு யாரேனும் ஒருவருடன் அவரது ஆவிக்குரிய விஷயங்கள் பற்றிப் பேசுவதில் சௌகரியமாக உணராத அளவுக்கு, நாம் நமது சொந்தக் கிறிஸ்தவத்துடன் போராடிக் கொண்டு இருக்கலாம். அல்லது, நாம் அவரைவிட மிகச்சிறந்தவராக இருக்கிறோம் என்று அவர் நினைத்து விடுவாரோ என்று நாம் பயந்திருக்கலாம். அனேகமாக, பெரும்பான்மையான வேளைகளில், இது நமது பணியல்ல என்பது போல் மாத்திரம் நாம் உணருகிறோம். இதன் விளைவாக, சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் "சத்தியத்தைவிட்டு விலகிப்" போகின்றனர், மற்றும் நாம், அவர்களின் ஆவிக்குரிய வாழ்வு மற்றும் நிலை ஆகியவற்றைப் பற்றி அவர்களிடத்தில் ஒருக்காலும் பேசுவதில்லை.

நாம் அவரை, அவரது வழியின் தவறில் இருந்து "திரும்பக் கொண்டுவரும் மற்றும் அவரைத் திருப்பும்" பொறுப்பைக் கொண்டுள்ளோம். விலகிப்போயிருக்கிறவரை சூழ்ச்சியாலோ அல்லது "இழுத்து" வருதலினாலோ திருப்பிக்கொண்டு வர முடியாது என்பதால் அது சிரமமாக உள்ளது. ஒரு நபர் செய்வதற்குத் தேர்ந்துகொள்ளாத ஒரு செயலைச் செய்வதற்கு, அந்த நபரைத் தேவன்கூட வற்புறுத்த மாட்டார் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். இந்தப் பணியை எவ்வாறு செய்வது என்பது பற்றி முழுமையும் யாக்கோபு கூறுவதில்லை, ஆனால் இதை நாம் செய்யவேண்டும் என்று அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். இதற்கான அறிவுறுத்துதலின் மிகப்பலமான வார்த்தைகள் பவுலிடமிருந்து வருகின்றன; "நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்" (கலாத்தியர் 6:1).

இது முட்டாள்தனமாக அவசரப்படும் நேரம் அல்ல. இது கோபம் அல்லது பொறுமையற்ற ஆவியைக் கொண்டிருக்கும் நேரமல்ல. “விலகி” இருப்பவர் அடங்காதவராக அல்லது கலகம் செய்பவராகக் காணப்படலாம், ஆனால் அவர் அனேகமாக, உள்ளாகக் காயப்பட்டு அல்லது முறிந்து இருக்கலாம்.

இயேசு மக்களிடம் நடந்து கொண்டது போல, நாம் மக்களிடம் நடந்துகொள்ள வேண்டியதான வேளை என்று ஒன்று இருக்குமென்றால், அது இந்த வேளைதான். நமக்கு சுவிசேஷம் தேவைப்படுகிறது, மற்றும் நாம், பவுல் பேதுருவிடம் எவ்வாறு நடந்துகொண்டார் என்பதைக் கற்றுக்கொள்வது அவசியமாக உள்ளது: அன்புடன், மென்மையாக, மற்றும் அறைகூவல் விடுக்கும் வகையில். விலகிப் போயிருப்பவருக்கு நாம் அவ்வாறே பதில்செயல் செய்ய வேண்டும்: இயேசுவின் அன்புடன், அன்பாக, மென்மையாக மற்றும் அறைகூவல் விடுக்கும் வகையில். அடிக்கடி நாம், கடுமையாகவும் நியாயந்தீர்க்கும் வகையிலும் நடந்துகொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம், ஆனால் அது இயேசுவின் ஆவியாக இருப்பதில்லை.

உள்ளாற்றல் “... ஒரு ஆத்துமாவை இரட்சிக்கும்” (5:20)

விலகிப் போயிருக்கும் ஒருவரின் ஆத்துமா, மரணத்தில் இருந்து இரட்சிக்கப்படும். புதிய ஏற்பாட்டில் “மரணம்” என்பது, வாழ்விற்கு பாவம் என்ன செய்கிறது என்பதை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாவமானது கர்த்தருடனான ஐக்கியத்தைத் துண்டிக்கிறது. தேவனுடைய பிள்ளையாக இருந்துகொண்டு தவறு செய்கிறவர், மரண தண்டனையின் கீழ் தமது பாவத்தில் நிலைத்திருக்கிறார் (ரோமர் 6:23; எபிரெயர் 10:26, 27). அந்த நபர், மீளக் கட்டப்படுவதற்கு, தேவனிடம் இருந்து தூர இருத்தலில் இருந்து காக்கப்பட வேண்டும்.

விலகிப் போயிருக்கும் கிறிஸ்தவர் பயம் கொள்ளத் தேவையில்லை: அவரைத் தேவன் தமது ஐக்கியத்திற்குள் திரும்பவும் வரவேற்பார் மற்றும் அவரது பாவங்களை மன்னிப்பார். அந்த மன்னிப்பின் விளைவானது இரண்டு ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறது. முதலாவது, திரளான பாவங்கள் மூடப்படும். இரண்டாவது, மனந்திரும்புதலுக்கு திரும்பும் இந்த நிகழ்வு (அல்லது விலகிச் சென்றுள்ளவர் திரும்பவும் கொண்டுவரப்படுதல் என்ற நிகழ்வு), இரட்சிப்பு அல்லது மன்னிப்பை ஏற்படுத்தும் மற்றும் திருப்புதலைச் செய்ய முயற்சி செய்கிறவருக்கு ஒரு வெகுமதி தரப்படும் (எசேக்கியேல் 33:9ஐக் காண்க).

முடிவுரை

டான் மற்றும் டோரி லூயிஸ் ஆகியோரின் இல்லத்திற்கும் 150 ஆண்டுகளாக எவ்விதப் பராமரிப்பும் இல்லாது கிடந்த பழைய வீட்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன? ஏராளமான வேலை மற்றும் ஏராளமான அன்பு என்பதே வேறுபாடாகும். அந்த வீடு, ஒரு மாறுதலை அனுபவித்துள்ளது.

சத்தியத்தை விட்டு விலகி, மறுபடியும் அதில் வராது விலகித்திரியும் கிறிஸ்தவருக்கும் யாரேனும் ஒருவரால் திரும்பக் கொண்டுவரப்பட்ட

கிறிஸ்தவருக்கும் இடையில் அதுவே வேறுபாடாக உள்ளது. யாரோ ஒருவர் ஒரு ஆத்துமாவுக்காக அக்கறை எடுத்துக் கொண்டதால், ஒரு மாற்றம் நடந்திருக்கிறது.

1

ஒரு அறிமுகம் [1 பேதுரு]

1 பேதுரு நிருபத்தில் உள்ளாக அமைந்துள்ள இரு ஆய்வுக் கருத்துக்கள் காணப்படுகின்றன. முதலாவது, தங்கள் விசுவாசத்திற்கு விலைசெலுத்திக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களைப் பேதுரு உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்; அவர்கள் பாடு அனுபவித்துக் கொண்டிருந்தனர். இந்த நிலையானது பாடக்கருத்தின் முக்கியத்துவத்தில் இருந்து ஒருக்காலும் தொலைவில் இருப்பதில்லை, ஆனால் அது 1:6-9, 3:13-17, 4:12-19 மற்றும் 5:9, 10 ஆகிய வசனங்களில் தெளிவாகக் காணப்பட முடியும். இரண்டாவது ஆய்வுக்கருத்து தவறு காண இயலாததாக உள்ளது: "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்" (4:7). 1:7ல் பேதுரு, "உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" என்று கூறுகையில் இவ்விரு ஆய்வுக் கருத்துக்களும் ஒன்றுகலக்கின்றன. சிரமங்களையும் பின்னடைவுகளையும் எவ்வாறு கையாள்வது என்று கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு போதித்தார், மேலும் கர்த்தர் மறுபடியும் வருவார் மற்றும் அவரது மக்கள் வெற்றிகொள்வார்கள் என்பதை அவர்களுக்கு இடைவிடாது நினைவூட்டினார்.

சுவிசேஷங்கள் மற்றும் நடபடிகள் ஆகிய புத்தகங்களில் இருந்து நாம், பேதுருவை நன்கு தெரிந்து கொண்டிருக்கிறோம். அவரது அழைப்பையோ அல்லது சீஷத்துவத்தில் அவரது இடறுதலுக்கான முதல் முயற்சிகளைத் திரும்பவும் நினைவுக்குக் கொண்டுவருதலோ தேவையற்றது (காண்க மத்தேயு 4:18-22; 14:22-33; 16:13-23; 17:1-8; 26:31-46, 69-75). பெந்தெகொஸ்தே நாளன்று சபை தொடங்கியபோது, மற்றும் அதற்குப் பின்பு, பேதுருவின் நடத்துவத்துவப் பண்புகள் வெளிப்படையாகத் தெரிய வந்தன. நிச்சயமற்ற தன்மைகள் சீஷர்களை வாரிக்கொண்டு சென்றபோது, கடினமான கேள்விகள் அவர்களைக் கிழித்துப் பிரித்துப் போடுவதாக அச்சுறுத்தியபோது, கிறிஸ்தவர்கள் வாதிக்கப்பட்டுக் கொல்லப்பட்டபோது, பேதுரு ஒரு தூணாக, பலத்தின் கோபுரமாக இருந்தார். (காண்க: நடபடிகள் 1:15, 16; 2:14:39; 3:1-26; 4:1-22; 9:32-43; 10:1-48.) அப்போஸ்தலர்களிடையே பேதுருவின் நடத்துவத்துவப் பணிப்பொறுப்பு தரப்பட்ட நிலையில் நாம், அவர் செய்துள்ளதைக் காட்டிலும் அதிகமாகப் புதிய ஏற்பாட்டில் மாபெரும் பகுதியை எழுதியிருக்கும்படி எதிர்பார்ப்போம். பேதுருவின் எழுத்துப் பணியின் அளவானது, பவுல் அல்லது யோவான் ஆகியோரின் எழுத்துப் பணிக்குச் சமமாக இருப்பது இல்லை, ஆனால் அவரது இரண்டு சிறிய நிருபங்களிலும் அவர், கிறிஸ்துவுக்கும் அவரது மக்களுக்கும் இடையில் உள்ள உறவிற்குள்ளான உட்கண்ணோக்குகளை அளித்தார், இவை வேறு எவ்விடத்திலும் காணப்படுவதில்லை.

பேதுரு ஏன் இந்த நிருபத்தை எழுதினார்? அவர் குறிப்பிட்டுள்ள கிறிஸ்தவர்கள் யார்? அவர்கள் எங்கே வாழ்ந்தனர்? அவர்களின் சோதனைகளைப்

பற்றிப் பேதுரு எவ்வாறு அறிந்தார்? அவர்களுக்கு இந்த நிருபத்தை எழுதும்போது அவர் எங்கே இருந்தார்? மற்றும் அவர் எந்த சூழ்நிலைகளின்கீழ் வாழ்ந்து கொண்டிருந்தார்? நிருபமானது அதன் செய்தியை நமக்குத் திறக்கும், மற்றும் நாம், பேதுரு மற்றும் அவர் இந்த நிருபத்தை யாருக்கு எழுதினாரோ, அந்தக் கிறிஸ்தவர்கள் ஆகியோரின் இடத்தில் நம்மை வைக்கும்போது, இந்த நிருபத்தின் தைரியம், நம்பிக்கை மற்றும் சந்தோஷம் ஆகியவற்றில் இணைந்துகொள்வோம்.

எழுதிய வேளை

அப்போஸ்தலருடைய நடபடிகளின் தொடக்க அதிகாரங்களுக்குப் பின்பு, பேதுருவின் பிரசங்கம் மற்றும் ஊழியம் ஆகியவற்றைப் பற்றிச் சிறிதளவே அறியப்படுகிறது. அவரைப் பற்றி அவ்வப்போதான குறிப்புகளை மாத்திரமே நாம் கண்டறிகிறோம். கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் அவர் அந்தியோகியாவில் இருந்ததாகப் பவுலினால் குறிப்பிடப்பட்டுள்ளது (கலாத்தியர் 2:11), மற்றும் அவர் கொரிந்து நகரில் இருந்ததாகவும் தோன்றுகிறது (1 கொரிந்தியர் 1:12). நேரடியான தகவல் சிறிதளவே நமக்கு உள்ளது, ஆனால் பேதுரு சும்மா இருக்கவில்லை என்பது தெளிவாக உள்ளது. அவரது ஊழியப்பயணங்கள் பவுலின் ஊழியப்பயணங்களுடன் ஒன்றாகவே வளர்ந்திருக்கச் சாத்தியம் உண்டு, அவ்வாறே நடந்தும் இருக்கலாம். 1 பேதுரு 1:1ல் உள்ள தொடக்க உரையின் பரப்புக்குப் பின்னால் விரிவான ஊழிய முயற்சிகள் இருக்கலாம்.

கி.பி. 60களின் மத்திய காலத்தில், பேதுருவும் பவுலும் ரோமாபுரிக்குக் கட்டாயமாகக் கூட்டிச் செல்லப்பட்டிருக்கவேண்டும். இவ்விருவருமே ரோமாபுரியில் இறந்தனர் என்று, 90களின் மையக்கால கட்டத்தில், ரோமா புரி சபையில் இருந்து கொரிந்து சபைக்கு அனுப்பப்பட்ட, 1 கிளெமென்ட் என்று அறியப்பட்ட ஒரு நிருபம் கருத்துத் தெரிவித்தது. பவுல், தமது கடைசி நிருபமான 2 தீமோத்தேயு நிருபத்தை, ரோமாபுரியில் இருந்து எழுதினார் என்று தோன்றுகிறது. மற்றும், 1 பேதுரு 5:13ல் பாபிலோன் என்பதற்கான உள்ளார்ந்த கருத்தானது, [ரோமாபுரி] நகரத்தைப் பற்றி, எழுத்தாளரின் கருத்தாக இருக்க வாய்ப்புள்ளது. எவ்வகையிலும், ரோமாபுரியானது வெளிப்படுத்தின விசேஷத்தில், பாபிலோன் என்று அழைக்கப்பட்டுள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 17:5, 18), இந்தப் புத்தகமானது, 1 பேதுரு நிருபம் எந்த சபைகளுக்கு எழுதப்பட்டதோ அதே சபைகளில் சிலவற்றிற்கு எழுதப்பட்டதாகும். பாபிலோன் பற்றிய குறிப்பானது, பேதுரு ரோமாபுரியில் இருந்தார் என்ற பாரம்பரியத்திற்கு ஆதரவைக் கூட்டுகிறது. அவர் கி.பி. சுமார்67ல் வேதசாட்சியாக மரித்தார்; அவரது முதல் நிருபம், அவரது மரணத்திற்கு இரு ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. உலகத் தின் எல்லாப் பகுதிகளிலும் இருந்தும் ரோமாபுரிக்குப் பயணிகள் நித்தமும் வந்து சேர்ந்தனர். அவர்களில் சிலர் கிறிஸ்தவர்களாக இருந்தனர், அவர்களிடமிருந்து பேதுரு, ஆசியா மைனர் பகுதியில் இருந்த சபைகளின் தேவைகள் மற்றும் சோதனைகள் ஆகியவற்றை அறிந்தார். இது இந்த நிருபத்தை எழுதுவதற்கான சந்தர்ப்பத்தை அவருக்கு அளித்ததாகக் காணப்படுகிறது.

வாசகர்களும் அவர்களுக்கு நேர்ந்த சோதனைகளும்

பேதுருவின் முதல் நிருபம், ஒரு விசாலமான எல்லைப் பகுதிக்கு, தோராயமாக நவீன காலத் துருக்கியான, ஆசியா மைனரின் எல்லாப் பகுதிக்கு அத்தியாவசியமாக எழுதப்பட்டது. முதல் நூற்றாண்டின் மையக்காலகட்டத்தில், 1 பேதுரு நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள - பொந்து, கலாத்தியா, கப்பதோக்கியா, ஆசியா மற்றும் பித்தினியா என்ற - ஐந்து பகுதிகள், நான்கு மாபெரும் ரோமமாகாணங்களில் அடங்கியிருந்தன. பொந்துவின் அதிகமான பகுதி, பாம்ப்பே என்ற ரோம அதிகாரியால் பித்தினியாவுடன் இணைக்கப்பட்டது. கலாத்தியா மற்றும் கப்பதோக்கியா ஆகிய மாகாணங்களுக்குச் சிறு நிலப்பகுதிகளே ஒதுக்கப்பட்டிருந்தது, பொந்து - பித்தினியா என்பவை, கருங்கடல் கரையின்மீது ஆசியா மைனரின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதியின் குறுக்கே நீண்டு விரிந்திருந்த ஒரு மாகாணமாக இருந்தது. கப்பதோக்கியா கிழக்கு எல்லைக் கோடியில் இருந்த மாகாணமாகும், இது சார்பளவில் தொலைதூரத்திலும் தொடர்புகொள்ள இயலாத வகையிலும் இருந்தது. கலாத்தியா, அந்தத் துணைக்கண்டத்தின் மத்தியில் மாபெரும் நிலப்பகுதியைக் கொண்டிருந்தது. ஆசியா மாகாணம் அந்தப் பகுதியின் வைரமாக இருந்தது, இது ஏஜியன் கடல்மீது மேற்கில் அமைந்து, வளமையான கிரேக்க நகரங்களால் நிறைந்திருந்தது. பொந்து மற்றும் கப்பதோக்கியா போன்ற தொலைதூரப் பகுதிகளில் கி.பி. 60களின் மையக் காலகட்டத்தில் சபையானது எவ்வளவு பலம் வாய்ந்ததாக இருந்தது என்று அறிவது கடினமாகும், ஆனால் இவ்விரு பகுதிகளிலும் இருந்து பார்வையாளர்கள், பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு பிரசங்கித்த வேளையில் எருசலேமில் இருந்தனர் (நடபடிகள் 2:9).

கிறிஸ்தவர்களுக்கும் அவர்கள் வாழ்ந்த இடங்களில் இருந்த பெரும் சமூகங்களுக்கும் இடையில் போராட்டங்கள் வளர்ந்திருந்தன. அவர்களின் விசுவாசம் அக்கினியால் சோதிக்கப்படுவதாகப் பேதுரு குறிப்பிட்டார் (1:7) மற்றும் அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த "பற்றியெரிகிற அக்கினியை"ப் பற்றிக்குறிப்பிட்டார் (4:12). அவர்களின் பாடுகளினுடைய ஆதாரமூலத்தைப் பற்றிக் கூறுவதற்கு அவர் சிறிதளவே விஷயம் கொண்டிருந்தார். அவற்றில் சில, அவர்களைப் பழித்துரைத்து வாழ்வைப் பொதுவாகக் கடினமாக்கிய அவர்களின் அயலகத்தவர்களிடம் இருந்து முறையற்ற வகையில் வந்திருக்கலாம். அனேகமாக, புதிய தத்துவங்களைப் பற்றி அடிக்கடி எழும், தவறான முன் அனுமானம் மற்றும் கசப்புணர்வு ஆகியவை, கிறிஸ்தவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் நகர அலுவலர்கள் முன்பாகக் கட்டி இழுத்துச் செல்லப்படக் காரணமாக இருந்திருக்கலாம். சிலர் அடிக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளது; மற்றவர்கள் கொல்லப்பட்டனர். கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவித்த இரட்சிப்பின் மாபெரும் தன்மை பற்றிப் பேதுரு அவர்களுக்கு நினைவூட்டினார் (1:2, 9). அவர்கள் மீட்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டிருந்தனர் (1:15, 16, 18, 23). இயேசு மறுபடியும் வரவேண்டி இருந்தது (1:7, 13; 4:7). வேதனையின் மத்தியில், சந்தோஷம் மற்றும் மகிழ்ச்சி ஆகியவற்றிற்குக் காரணம் இருந்தது (1:8). எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் தங்களை அவிசுவாசிகள் வெறுப்பதற்கு உண்மையான காரணம் எதையும் தரக்கூடாதிருந்தது (2:12).

அவர்கள் பரிசுத்தர்களாக நல்லவர்களாக இருக்க வேண்டியிருந்தது (2:1, 2), தங்களுக்குச் செய்யப்பட்ட பொல்லாப்புகளுக்கு மாற்றாக இரக்கம் செய்ய வேண்டியிருந்தது (3:9). அவர்களின் உபத்திரவமும்கூட, விசுவாசத்தை மறு உறுதிப்படுத்தவும் இயேசுவே மனிதகுலம் முழுமைக்கும் மீட்பராக இருந்தார் என்பதற்குச் சாட்சியம் அளிக்கவும் ஒரு சந்தர்ப்பமாக இருக்க வேண்டியதாயிற்று (1:7).

---

1 பேதுரு நிருபத்திற்கான ஒரு வரைகுறிப்பு

இந்த வரைகுறிப்பை நீங்கள் ஆய்வு செய்கையில், ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளவையான, இந்த நிருபத்தின் இரு ஆய்வுக்கருத்துக்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: (1) பாடு அனுபவித்தல் என்பது கிறிஸ்தவ வாழ்வில் எதிர்பார்க்கப்படும் பகுதியாக உள்ளது, மற்றும் (2) கர்த்தர் தமக்குச் சொந்த மானவர்களை உரிமைகோரத் திரும்பவும் வருகிறார்.

*வாழ்த்து**:** தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களுக்குப் பேதுரு (1:1, 2).*

I. *ஜீவனுள்ள நம்பிக்கையில் சந்தோஷமாயிருத்தல் (1:3-12).*

- A. *இயேசு ஜீவிக்கிறார் என்பதால் நம்பிக்கை ஜீவிக்கிறது (1:3-5).*
- B. *துன்பம் இருந்தபோதிலும் சந்தோஷம் ஜீவிக்கிறது (1:6-9).*
- C. *தீர்க்கதரிசிகளின் ஊழியத்தின் மூலமாக ஊக்கப்படுத்துதல் ஜீவிக்கிறது (1:10-12).*

II. *"நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (1:13-25).*

- A. *பரிசுத்த பிள்ளைகளைப் போலக் கீழ்ப்படிந்திருத்தல் (1:13-17).*
- B. *கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்படுதல் (1:18-21).*
- C. *அழியாத வித்தினாலே பிறத்தல் (1:22-25).*

III. *சீயோனில் வைக்கப்பட்ட கல்லின்மீது நம்பிக்கையாயிருங்கள் (2:1-10).*

- A. *புதிதாய்ப் பிறந்த பிள்ளைகளுக்குக் களங்கமில்லாத பால் (2:1-3).*
- B. *மனிதரால் தள்ளப்பட்டதாயினும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கல் (2:4-8).*
- C. *ராஜரீகமான ஆசாரியக்கூட்டம், பரிசுத்த ஜாதி (2:9, 10).*

IV. *கீழ்ப்படிதல் உள்ளவர்களாயிருந்து தேவபக்தியுள்ள வாழ்வை வாழுங்கள் (2:11-25).*

- A. *எவரொருவரும் குற்றஞ்சாட்டக் கூடாத அளவுக்கு தேவபக்தியுள்ளவர்களாக வாழுங்கள் (2:11, 12).*
- B. *நன்மை செய்து புத்தியீன மனிதருடைய அறியாமையை அடக்குங்கள் (2:13-17).*
- C. *கர்த்தருடைய உதாரணத்தைக் கண்ணோக்குங்கள் (2:18-25).*

V. *தகுதியான வகையில் உங்களை அலங்கரித்துக் கொண்டு காருண்யமாயிருங்கள் (3:1-7).*

- A. *சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாக உள்ளான அழகு (3:1-4).*
- B. *கடந்த காலத்தில் இருந்த தேவபக்தியுள்ள பெண்களில் இருந்து உதாரணங்கள் (3:5. 6).*
- C. *கரிசனம் மற்றும் மதித்தல் ஆகியவற்றின் புருஷத்தன்மை (3:7).*

VI. *கேட்கிற யாவருக்கும் தற்காப்பு உரையொன்றைக் கூறுங்கள் (3:8-22).*

- A. *அவமானப் படுத்துதல்களுக்கு ஆசீர்வாதத்தினால் பதில் அளித்தல்*

(3:8-12).

B. *பழிதூற்றுதலுக்கு நியாயமானதன்மீது வைராக்கியத்தைக் கொண்டு பதில் அளித்தல் (3:13-17).*

C. *குற்றச்சாட்டுகளுக்குச் சிலுவையின் செய்தியைக் கொண்டு பதில் அளித்தல் (3:18-22).*

VII. *எல்லாவற்றிலேயும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (4:1-11).*

A. *கிறிஸ்துவின் சிந்தையை ஆயுதமாகத் தரித்துக் கொள்ளுங்கள் (4:1-3).*

B. *பயனின்றி வீணாகக் கழியும் வாழ்வை மறுத்தல் (4:4-6).*

C. *எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று என்று புரிந்து கொள்ளுதல் (4:7-11).*

VIII. *கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்றிருங்கள் (4:12-19).*

A. *பாடுகளைக் கண்டு திகைப்படைய வேண்டாம் (4:12-15).*

B. *அவரது நாமத்தைத் தரித்துக்கொள்ள வெட்கப்படாதிருங்கள் (4:16-18).*

C. *உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவுக்கு உங்கள் ஆத்துமாக்களை ஒப்புக்கொடுக்க அஞ்சாதிருங்கள் (4:19).*

IX. *மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள் (5:1-11).*

A. *சகமூப்பர்களுக்கு ஒரு வேண்டுகோள் (5:1-4).*

B. *கர்த்தர் மீது கவலையை வைத்துவிடும்படி வேண்டுகோள் (5:5-7).*

C. *சகோதரத்துவத்துடன் நிற்பதற்கு ஒரு வேண்டுகோள் (5:8-11).*

முடிவுரை: தனிப்பட்ட வாழ்த்து (5:12-14).

2

ஜீவனுள்ள நம்பிக்கையில் சந்தோஷமாயிருத்தல் (1 பேதுரு 1:3–12)

பகுத்தறிவு வாதம் நம்பிக்கையாயிருக்கும்படி கூறுவதால் ஞானமுள்ள ஒரு மனிதர் நம்பிக்கையாயிருக்கிறார். எதிர்காலம் மிகச்சிறந்ததாக இருக்கும் என்று நம்புவதற்குக் காரணங்களை நாம் கொண்டுள்ளபோது, நம்மால் சிரமங்களைச் சகித்துக்கொள்ள முடியும். ஞானமுள்ள ஒரு மனிதரின் நம்பிக்கையையே பேதுரு தமது வாசகர்களுக்கு முன்பாக நிறுத்திக்காண்பித்தார்.

இயேசு ஜீவிக்கிறார் என்பதால் நம்பிக்கை ஜீவிக்கிறது *(1:3-5)*

சமீபத்தில் கிறிஸ்துவுக்குள் இணைந்து அவரது நாமத்திற்காக ஏற்கனவே ஒரு சுமையைச் சுமக்க அழைக்கப்பட்டுள்ளவர்களுக்கு, ஆவிக்குரிய ஒரு நடத்துனர் கூற வேண்டியிருந்தது என்ன? அவர்கள் ஒரு புதிய வாழ்வைத் தொடங்கியிருந்தனர், ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கையை சந்தோஷத்துடன் கண்ணோக்கிக் கொண்டிருந்தனர், ஆனால் அவர்கள் அயலகத்தவர்களால் புறக்கணிக்கப்படுதல், அலுவர்களால் வேட்டையாடப்படுதல், மற்றும் வாழ்வின் தேவைகள் மறுக்கப்படுதல் ஆகியவற்றை எண்ணியிருக்கவில்லை. பேதுரு நம்பிக்கை வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அவர் இந்த வார்த்தையை இவ்வதிகாரத்தில் மூன்று முறை (வசனங்கள் *3, 13, 21*) மற்றும் 3ம் அதிகாரத்தில் இன்னும் இரண்டு முறை (வசனங்கள் *5, 15*) பயன்படுத்தினார். பேதுரு எழுதிய முதல் நிருபம் "நம்பிக்கையின் நிருபம்" என்று அழைக்கப்பட்டுள்ளது மற்றும் பேதுரு "நம்பிக்கையின் அப்போஸ்தலர்" என்று அழைக்கப்பட்டுள்ளார். புதிய ஏற்பாட்டின் மற்ற எழுத்தாளர்களைக் காட்டிலும், பேதுரு மிகவும் அடிக்கடி நம்பிக்கைக்காக வேண்டுகோள் விடுத்தார் என்று கருத்துக் கொள்வது கடினமாயிருக்கும். உதாரணமாக, ரோமருக்கு எழுதிய நிருபத்தின் மூன்று அதிகாரங்களில் *(5, 8* மற்றும் *12)* பவுல் இவ்வார்த்தையைப் பதினைந்து முறை பயன்படுத்தினார். *1* பேதுரு நிருபத்தை "நம்பிக்கையின் நிருபம்" என்று அழைத்தல் ஒரு மிகைக்கூற்றாக இருந்தாலும், *1*ம் அதிகாரத்தின் செய்தியின் கீழே நம்பிக்கை உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. கிறிஸ்தவ நம்பிக்கையானது முடிவுக் காலம், கர்த்தரின் தரிசனம் மற்றும் எல்லாப் பொருள்களும் பட்சிக்கப்படுதல் ஆகியவற்றுடன் வலுவாகக் கட்டப்பட்டுள்ளது *(1:5, 7, 9, 13).*

இயேசு கிறிஸ்து மரித்தோரில் இருந்து உயிர்த்திருந்தார் என்பதைப் பேதுருவின் வாசகர்கள் அறிந்திருந்தனர். அவர்கள் ஒரு ஜீவனுள்ள

நம்பிக்கையினுள் புதிதாகப் பிறந்திருந்தனர் - ஜீவனுள்ள கர்த்தர் என்ற வகையில் கிறிஸ்து ஆளுகை செய்வதால் இந்த நம்பிக்கை ஜீவனுள்ளதாக இருக்கிறது (1:3, 21).

இந்த ஜீவனுள்ள நம்பிக்கையில் யாரெல்லாம் பங்கேற்கலாம்? "மறுபடியும் ஜெநிப்பிக்கப்" பட்டவர்கள் இதில் பங்கேற்கலாம் என்று பேதுரு கூறினார் (1:4). தேவன் "நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" என்று (KJV) *வேதாகமம் கூறுகையில்,* NIV *வேதாகமம், "அவர் நமக்குப் புதுப்பிறப்பைக் கொடுத்திருக்கிறார்" என்று கூறுகிறது. ஏறக்குறைய முப்பத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இயேசு, நிக்கொதேமுவிடம் கூறியிருந்ததைக் காட்டிலும் அதிகமாக எதுவும் பேதுரு கூறவில்லை. ஜீவனுள்ள நம்பிக்கையானது, தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்திருத்தல் மூலமாக வருகிறது (யோவான் 3:5). "தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்திருத்தல்" என்ற சொற்றொடர், ஞானஸ்நானத்தைக் குறிப்பதாக உள்ளது. ஞானஸ்நானத்தில் ஒருவர் கர்த்தருடன் இணைதலில் இருந்து எழுகிறபோது, ஜீவனுள்ள நம்பிக்கையில் பங்கேற்பதற்காகப் புதிதாகப் பிறக்கிறார். ஞானஸ்நானத் தண்ணீரில், கிறிஸ்துவின் இரத்தத்தை அவர் சந்திக்கிறபோது, அவர் "என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசன"த்தினாலே மறுபடியும் பிறக்கிறார் (1:23).*

கிறிஸ்தவர்கள் தங்கள் கண்களை நிலையாக வைத்திருக்கும் இந்த ஜீவனுள்ள நம்பிக்கை எதுவாக உள்ளது? இது, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய ஒரு பரலோக சுதந்தரமாக உள்ளது என்று பேதுரு கூறினார் (1:4). "சுதந்தரம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, ஒருவரின் பங்கு அல்லது பாகத்தை ஏற்றுக்கொள்ளுதல் பற்றியதாக உள்ளது. கிறிஸ்தவருக்கான பங்கு என்பது ஒரு சுதந்தரவாளியாக உள்ளது. கலாத்தியர் 4:1-7ல் பவுல், ஒரு வேலைக்காரரின் பாகத்தை ஒரு மகனின் பாகத்துடன் வேறுபடுத்தி ஒப்பிட்டார். தேவன் மாத்திரமே தமது மகன்கள் மற்றும் மகள்களுக்கு நியமிக்கக்கூடிய சுதந்தரத்தின் முழுப்பங்கை, கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒருவர், மகிழ்வுடன் அனுபவிக்கிறார்.

பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ள பங்கு பற்றிய சிந்தனையானது, இன்றைய நாட்களில் நம்மில் பலருக்கு அர்த்தப்படுவதைக் காட்டிலும் அதிகமாக, பேதுருவின் முதல் வாசகர்களுக்கு அர்த்தப்பட்டு இருக்கலாம். உடல்நலப் பராமரிப்புச் செலவு உயர்வு அல்லது அயலகத்தவர்களை ஈர்க்கக்கூடிய ஒலிபரப்பு அமைப்பை நிறுவுதலின் வாய்ப்புக்கான செலவு உயர்வு ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது, கர்த்தருடைய மறுவருகையும் பரலோகத்தின் சுதந்தரமும் சிறிதளவே ஆர்வத்தைத் தரவழைக்கின்றன. இன்றைய நாட்களில், ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ, பரலோக வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றத்திற்காகத் தன்னை ஏங்கச் செய்யும் கருத்துநோக்கை ஆதாயப்படுத்த முடியுமா? பேதுரு ஒரு பதிலைக் கொடுத்தார்: "கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்த மாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவான" கருத்துநோக்குகள் (1:5), "இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது ... புகழ்ச்சியும் கனமும் மகிமை"யும் (1:7), மற்றும் "இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபை" (1:13) ஆகியவை. இவை வாழ்வின் ஒவ்வொரு வெற்றி, தோல்வி, இலக்கு, சந்தோஷம் மற்றும் துக்கம் ஆகியவற்றிற்கு வண்ணம் தீட்டும். காலத்தின் முடிவு பற்றிய சிந்தனையானது, உலகத்தில் ஊன்றியுள்ள ஒரு இருதயத்தையும்

குணமாக்க முடியும்.

துன்பம் இருந்தபோதிலும் சந்தோஷம் ஜீவிக்கிறது (1:6-9)

தங்கள் விசுவாசத்திற்காகப் பாடநுபவித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு என்ன கூற முடிந்தது? நம்பிக்கைக்கான வேண்டுகோள் இயல்பானதாகக் காணப்படுகையில், சந்தோஷம் என்பது மிக அரிதாகவே அவர்களுக்கு உரியதாக இருந்தது. இருந்தபோதிலும் பேதுரு, கிறிஸ்துவுக்குள் அவர்களின் சந்தோஷம் பற்றி, கட்டுப்படுத்த இயலாத ஒரு நினைவூட்டுதலைக் கொடுத்தார். KJV வேதாகமம் மிகை இயல்புடையதாகக் காணப்படுகிறது, இருப்பினும் இது கிரேக்க மொழிநடையை நன்கு வெளிப்படுத்துகிறது: "நீங்கள் சொல்லிமுடியாத சந்தோஷத்தினால் அகம்மகிழ்ந்து மகிமை நிரம்பப் பெற்றிருக்கிறீர்கள்" (1:6). கிரேக்க மொழியில் இந்தச் சொற்றொடரானது மொழிபெயர்ப்பைக் காட்டிலும் அதிகமானதாக, உயர்வுக்கூற்றுக்ள் மிகுதியும் கொண்டதாக உள்ளது. இந்த அகம்மகிழ்வு யாவும் எதைப்பற்றியது? சாராம்சத்தில் பேதுரு, "தேவனுடைய குமாரன் உங்களை நேசிக்கிறார், நீங்களும் அவரை நேசிக்க வந்திருக்கிறீர்கள். அவர் உங்களை உங்கள் பாவத்திலிருந்து மீட்பதற்காகத் தமது உயிரையே கையளித்திருக்கிறார். இப்போதும்கூட, நீங்கள் பாடுகளை அனுபவிக்கையில், உங்கள் விசுவாசத்தின் இலக்கான உங்கள் ஆத்துமாக்களின் இரட்சிப்பைப் பெறுகிறீர்கள். நீங்கள் சொல்லி முடியாத சந்தோஷத்தினால் அகமகிழலாமே" என்று கூறினார்.

கிறிஸ்து நமக்கு, இந்த உலகத்தில் வாழ்வதற்குச் சாத்தியப்பட்ட அளவில் மிகச்சிறந்த வாழ்வை நமக்குக் கொடுக்கிறார் என்பதில் சந்தேகம் இல்லை, ஆனால் நமது சிந்தைகளை நித்தியத்தை நோக்கி இயக்குதல் மூலமாக அவர் இதைச் செய்கிறார் என்பது ஒரு வழியாக உள்ளது. 1 பேதுரு நிருபத்தை நாம் வாசிக்கையில், அப்போஸ்தலர் நித்தியத்தைத் தமது கண்ணோக்கில் எப்போதுமே கொண்டிருந்தார் என்ற சிந்தனையில் இருந்து நாம் தப்ப முடியாது. பேதுரு, "உங்கள் கண்களால் நீங்கள் அவரைக் காணாதிருக்கலாம், ஆனால் நீங்கள் அவரை விசுவாசித்திருக்கிறீர்கள், மற்றும் விசுவாசத்தினால் நீங்கள் உங்கள் ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பைக் கொண்டிருக்கிறீர்கள்" என்று கூறினுர். பல விஷயங்கள் நமக்கு முன்பாக நித்தியத்தைக் காத்துக்கொள்ளக்கூடும்: சந்திப்பின் நாள் (2:12), இயேசு தேவனுடைய வலது பாரிசத்தில் இருத்தல் (3:22), ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கத் தேவன் ஆயத்தமாயிருத்தல் (4:5), எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருத்தல் (4:7), அவரது மகிமை வெளிப்படுதல் (4:13), பிரதான மேய்ப்பர் தோன்றுதல் (5:4) ஆகியவை. நாம் நித்தியத்தின்மீது நமது கண்களைக் கொண்டிருக்கும்போது, இந்த உலகம் தனது சிறு தோல்விகள் மற்றும் வெற்றிகள் ஆகியவற்றுடன் மங்கலாகிறது. கிறிஸ்துவை அறிதல் என்பது மறுபடியும் நடப்புக்கு வருதலாக உள்ளது. கிறிஸ்து, வாழ்வின் மீது ஒரு புதிய கருத்துநோக்கை அளிக்கிறார், அந்தக் கருத்துநோக்கு இல்லாத நிலையில் வறண்ட நிலமாக இருக்கக்கூடிய இருதயத்தில் அது பெருக்கெடுத்து ஓடுகிறது.

தீர்க்கதரிசிகளின் ஊழியத்தின் மூலமாக ஊக்கப்படுத்துதல் ஜீவிக்கிறது (1:10-12)

இயேசுவின் பிறப்பு, வாழ்வு மற்றும் போதனை ஆகியவற்றைப் பற்றி எழுதிய தீர்க்கதரிசிகளைப் பற்றிப் பேதுரு தமது வாசகர்களுக்கு நினைவூட்டினார். அவர்களின் ஊழியம் புதிய ஏற்பாட்டிற்கு உலகளாவிய சாட்சியமாக உள்ளது. பழைய ஏற்பாட்டின் சாட்சியம் பற்றி லூக்கா 24:27ல் இயேசு பேசிய அதே கருத்தில் பேதுரு அதைப்பற்றிக் குறிப்பிட்டு இருக்கலாம், ஆனால் இன்னொரு சாத்தியக்கூறு நிலவுகிறது. புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் உள்ளடக்கப்பட்டிருக்கலாம். பேதுருவின் சிந்தையில் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளோ அல்லது புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளோ, யார் இருந்தாலும், தேவன், சிறப்புக்குழுவாகத் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களை, ஒரு சுதந்திரத்திற்கு ஆயத்தப்படுத்தும்படியாகத் தமது செய்தியாளர்களை அனுப்பியிருந்தார். பேதுருவின் வாசகர்களுக்குத் தீர்க்கதரிசிகள் பணிசெய்து, தேவபக்தியற்றவர்களின் பரிகாசத்தை அவர்கள் சகிக்கும்படியாக்கினர். புதிதாய்ப் பிறந்துள்ள நிலையில் அவர்கள், தேவனுடைய தீர்மானம் நிறைந்த ஆசீர்வாதத்தை - பரலோகத்தில் இருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவரினால் பிரசங்கிக்கப்பட்ட ஒரு ஆசீர்வாதத்தை, மகிமை நிறைவை - பெற்றுக்கொள்பவர்களாக இருந்தனர்.

முடிவுரை

பேதுருவின் வார்த்தைகள் ஒரு அஸ்திபாரத்தை இட்டு, கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தின் மாபெரும் அடிப்படைகளை நினைவுகூரும்படி அவர்களைத் தூண்டின. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலமாக அவர்கள் அழைக்கப்பட்டிருந்ததான ஜீவனுள்ள நம்பிக்கையானது உபத்திரவங்கள் யாவற்றையும் அமர்த்தப் போதுமானதாக இருந்தது. நம்பிக்கையும் வாக்குத்தத்தமும், உலகத்தின் தடைகளால் அழித்துப்போட இயலாததாக இருந்த சந்தோஷத்திற்குக் காரணத்தைக் கொடுத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் தீர்க்கதரிசிகளால் ஊழியம்கொண்டவர்களாக இருந்தனர் என்பதைப் பேதுரு அவர்களுக்கு நினைவூட்டினார். அவர்கள், தேவனுடைய நித்திய தீர்மானத்திற்குச் சுதந்தரவாளிகளாக இருந்தனர். பேதுருவின் நிருபம் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது, ஆனால் அதன் செய்தியானது தேவனுடைய மக்களை இன்னமும் தூண்டுகிறது. கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளுகிற எதிர்ப்பானது, நம்பிக்கை மற்றும் மகிமையின் வாக்குத்தத்தம் ஆகியவற்றின் வெளிச்சத்தில் காண்கையில், சிறிதளவே விளைவுள்ளதாக இருக்கிறது. பேதுரு தமது நிருபத்தில் கூற அதிகமானவற்றைக் கொண்டிருந்தார், ஆனால் கிறிஸ்துவுக்குள் இருத்தலின் சந்தோஷத்தினுடைய வெளிச்சத்திலேயே எல்லாம் புரிந்துகொள்ளப்பட வேண்டியதாக இருந்தது.

3

"நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (1 பேதுரு 1:13–25)

வேதாகமத்தைப் படிக்கும் மாணவருக்கு, விரிவான கற்பனையொன்று மதிப்புமிக்க ஆதார மூலமாக உள்ளது. இதனுடன் அவர், வேறுவகையில் தாம் இழந்தவராக இருக்கக் கூடிய உலகங்களில் பிரவேசித்து அவற்றைப் புரிந்துகொள்ள முடியும். முதல் நூற்றாண்டு ஆசிய மைனர் பகுதியில் சிமிர்னா, எபேசு அல்லது பெர்கமு போன்ற மாபெரும் நகரங்கள் ஒன்றில், 1 பேதுரு நிருபத்தின் முதல் வாசகர்களாக இருத்தல் பற்றிக் கற்பனை செய்து பாருங்கள். முதல் நூற்றாண்டின் ஆசியா மைனர் பகுதியில் மாத்திரமே, 1 பேதுரு நிருபத்தில் உள்ள வார்த்தைகளின் வலிவை நாம் புரிந்து கொள்ள முடியும்.

நீங்கள் பிரவேசித்துள்ள உலகத்தில் சபை புதியதாக உள்ளது. கிறிஸ்துவின் சிலுவை மரணம், நினைவுகூரக்கூடிய காலத்திற்குள் நடைபெற்றுள்ளது. உங்கள் நகருக்கு வந்த முதல் பிரசங்கியாரை நீங்கள் நினைவில் வைத்திருக் கிறீர்கள். முதலில் அவர் ஆர்வத்தைத் தூண்டுபவராக மாத்திரமே இருந்தார், ஆனால் நீங்கள் திகைப்படையும்படி, அவரது சற்குணமும் செய்தியும் மனதை ஈர்ப்பவையாக உள்ளன. அவர், ஒரே தேவன்தாம் இருக்கிறார் என்றும் எல்லா மனிதர்களும் அவருக்கு எதிராகப் பாவம் செய்து அவருக்கு விரோதிகள் ஆனோம் என்றும் கூறினார். மேலும் அவர், ஆண்டவராகிய கிறிஸ்து என்ற மீட்பரைத் தேவன் அனுப்பினார் என்றும் கூறினார். நம்பிக்கை, அன்பு, ஆகியவற்றின் அந்தச் செய்தியைக் கேட்டு, நீங்கள் கிறிஸ்தவரானீர்கள்.

பத்து அல்லது பதினைந்து ஆண்டுகள் கடந்துள்ளன. நீங்களும் மற்றவர்களும் உங்கள் சமூகத்தின் மதப் பாரம்பரியங்களைக் கைவிட்டுள்ளதால், உங்கள் நண்பர்களில் சிலர் உங்கள்மீது கசப்புணர்வு கொண்டவர்கள் ஆகியுள்ளனர். உறவினர்களும் அயலகத்தவர்களும் உங்களை ஒரு மதி யீனர் என்று அழைக்கின்றனர்; நீங்கள் சேவிக்கும் தேவனைப் பற்றி நகர அலுவலர்கள் உங்களைக் கேள்விக் கேட்கின்றனர். உங்கள் சக கிறிஸ்தவர்களில் சிலர், கிறிஸ்துவைத் துறந்துவிட்டு, விசுவாசம் உள்ளவர்களின் வாழ்வைப் பரிதவிப்பிற்கு உள்ளாக்குவது காண்பதற்கு வேதனை நிறைந்ததாக உள்ளது.

இந்த உலகத்தில் கிறிஸ்தவர்கள் ஊக்குவிக்கப்படுதலுக்குப் பெரும் விருப்பம் கொண்டுள்ளனர்; 1 பேதுரு போன்ற நிருபம் ஆவிக்குரிய வகையிலான வாழ்வு மற்றும் மரணம் ஆகியவற்றிற்கு இடையில் வேறுபாட்டை அர்த்தப்படுத்த முடிந்தது. பேதுருவின் செய்தி எளிமையாக உள்ளது. நீங்களும் உங்கள் சக கிறிஸ்தவர்களும் வைராக்கியத்தில் இளைப்படைந்து விடக்கூடாது. "நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த

புத்தியுள்ளவர்களாயிருந்து" என்று நிருபம் கூறுகிறது (1:13). தேவன் தமது மக்களிடத்தில் இருந்து பரிசுத்தத்தைக் காட்டிலும் குறைவற்றதை விரும்புகிறார் மற்றும் எதிர்பார்க்கிறார். இதற்குப் பேதுரு 1:16ல் லேவியராகமத்தைச் சுட்டிக்காண்பித்தல் மூலம் மறுவலிவூட்டுகிறார்: "நான் பரிசுத்தர்; ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (லேவியராகமம் 11:44; 19:2; 20:7).

பரிசுத்த தன்மை! நேர்மையாகக் கூறுவதென்றால் இது, இந்தக் கிறிஸ்தவர்கள் தங்களுடன் தொடர்புபடுத்தக் கடினமான வார்த்தையாக உள்ளது. அவர்கள் எவ்வாறு பரிசுத்தமாயிருக்க வேண்டி உள்ளது? இந்தக் கேள்விக்குப் பேதுருவின் பதில், அவரது வாசகர்களின் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட்டு இருக்கும் மூன்று அனுபவங்களைக் கவனத்தில் ஈர்ப்பதாக உள்ளது: கீழ்ப்படிதல், மீட்பு மற்றும் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல்.

பரிசுத்த பிள்ளைகளைப் போலக் கீழ்ப்படிந்திருத்தல் (1:13-17)

நம்மில் பெரும்பான்மையானவர்களுக்கு, துன்புறுதலும் கிறிஸ்தவமும் உண்மையில் உள்ளதைக் காட்டிலும் கோட்பாட்டளவில் மிக அதிகமாக உறவுபடுத்தப்பட்டுள்ளன. இது பேதுரு எழுதிய இந்த நிருபத்தின் முதல் வாசகர்களுக்கு வேறுபட்டதாக இருந்தது. ஒரு சகோதரர், நகரின் மையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டு, அவரது பின்புறத்தில் இருந்து அவரது உடை உரியப்பட்டு, ஒரு தூண்மீது அவர் வளைத்துக் கட்டப்பட்டு அடிக்கப்படும்போது, துன்புறுதல் என்பது உண்மை நிலையாக இருந்தது. ஒரு சகோதரி, தனது பெற்றோர்களால் தவிர்க்கப்படுவதாக, தனது குடும்ப உறுப்பினர்கள் தன்னுடன் பேசாதிருப்பதாக, தனது பிள்ளைகளுக்கு நண்பர்கள் யாரும் இல்லாதிருப்பதாகக் கூறிய போது, துன்புறுதலே வாழ்வாக இருந்தது. பேதுரு எழுதிய இந்த நிருபத்தின் முதல் வாசகர்கள் தங்கள் காலத்தைப் பின்னோக்கித் திரும்பிப்பார்த்து கடந்த காலத்தில் சகித்திருந்த கிறிஸ்தவர்களின் துன்பத்தைக் கண்டு தங்கள் தலைகளைக் குலுக்கக் கூடாதிருந்தது. அவர்கள் தங்கள் முதுகுகளின் மீதிருந்த தழும்புகளை மாத்திரம் காண்பிக்க முடிந்தது.

தழும்புகள் மற்றும் வேதனை ஆகியவற்றிற்குப் பேதுரு எவ்வாறு பதில்செயல் செய்தார்? கிறிஸ்தவர்கள் தேவனிடத்தில் கீழ்ப்படிதலாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார் (1:14). அவர்கள் புதுப்பிக்கப்பட்ட வைராக்கியத்துடன் தங்கள் வாழ்வில் இருந்து பாவத்தை வெளியேற்றி முத்திரையிட்டு பரிசுத்தத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்று அவர் வேண்டிக்கொண்டார். அக்கினி பொன்னைப் புடமிடுவது போல், துன்புறுதல் அவர்களைச் சுத்தி கரித்துப் புடமிடும் என்று அவர் கூறினார் (1:7). 1 பேதுரு நிருபத்தில் நாம், உணர்விழந்த நிலை எதையும் எதிர்கொள்வதில்லை. பேதுரு, "விரோதியானவன் ஒரு சண்டையை விரும்பினால், அவனுக்கு நாம் அதைக் கொடுப்போம். பரிசுத்தத்தைக் கொண்டு நாம் துன்மார்க்கத்துடன் போரிடுவோம்" என்று கூறுவதாகக் காணப்பட்டார்.

பேதுரு கீழ்ப்படிதல் மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றை அவற்றுக்கு எதிரானவற்றிற்கு அடுத்ததாக வைத்தது மிக அரிதாகவே தற்செயலானதாக இருக்க முடியும் (1:14, 15). பரிசுத்த தன்மை என்பது மனதின் ஒரு நிலையல்ல;

அது வாழ்க்கையின் ஒரு வழியாகவே இருக்கிறது. பரிசுத்தத்திற்கு, குறைந்தது இரு விஷயங்களாவது தேவைப்படுகிறது. முதலாவது, அதற்குத் தாழ்மை தேவைப்படுகிறது. நம்மை நாமே இயக்கிக் கொள்வதற்கு ஆதாரவளங்களோ அல்லது ஞானமோ நம்மிடத்தில் இல்லை என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும். இரண்டாவது, அது [பரிசுத்தம்] நம்பிக்கை வைத்தல் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது. நாம் அச்சமின்றி நம்மையே இன்னொருவரின் வழிகாட்டுதலுக்கு ஒப்புக்கொடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். "... கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து" (1:14) என்று பேதுரு கூறுகையில், அவர் ஒரு பிள்ளையின் உருவகத்தை நினைவூட்டியதில் வியப்பெதுவும் இல்லை.

துரதிர்ஷ்டவசமாகச், சில கிறிஸ்தவர்கள் சீஷத்துவம் என்பது, நமது பரிசுத்தத்திற்குப் பொறுப்பெடுத்துக் கொண்டுள்ள இன்னொருவருக்கு, நாம் கேள்வியெதுவும் கேட்காமல் நம்மையே இணங்கச் செய்தல் என்று அர்த்த மாகிறதென்று தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். பேதுரு கட்டளை இட்ட, பிள்ளையிடம் உள்ளது போன்ற விசுவாசம், தேவனுடன் கிறிஸ்தவரின் உறவில் தாழ்மை மற்றும் நம்பிக்கை வைத்தல் ஆகியவற்றைக் கேட்டுக்கொள்கிறது. நமது வாழ்வை வழிநடத்துவதில் தேவனுடைய உரிமைகளை வேறொரு நபர் எடுத்துக்கொள்ள அனுமதித்தல் என்பது விக்கிரகாராதனையுடன் விளையாடுவதாக உள்ளது. அது பரிசுத்த தன்மையுடன் இருப்பதற்கான போராட்டத்தை விட்டுவிடுதலாக உள்ளது. நம்பிக்கை வைத்தல், தாழ்மை மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவை செயலற்ற தன்மைக்கு எதிரானவைகளாக உள்ளன. கிறிஸ்துவின் சீஷர் தேவனுடைய சித்தத்தைத் தேடிப்பிடித்து அதன்படி வாழ்கிறார்.

நற்தன்மையுடன் இருந்த இந்த கிறிஸ்தவர்களின் நிகழ்கால வாழ்வானது அவர்கள் அறிந்திருந்த பழைய வாழ்வின் குணங்களுடன் மிகவும் நேரெதிரானதாக இருந்தது. அவர்களின் மேன்மையான தற்போதைய வாழ்வு சுய சாட்சி உடையதாக இருந்தது. அதனால் தான் பேதுருவின் வாசகர்கள், தங்களை இந்த உலகம் ஏளனம் செய்து, விடாது துரத்தியது ஏன் என்பதைப் புரிந்துகொள்ள முடியாதிருந்தனர். அதைத் தேவன் ஏன் அனுமதித்தார்? அவர்கள் ஏன் துன்புற வேண்டியிருந்தது? இந்தக் கேள்விகள் மிகப்பழையனவாக இருக்கின்றன. அவசர மாகப் பிறந்த பெரும் ஏக்கத்தில், யோபு"சர்வ வல்லவர் நியாயத்தீர்ப்புக்கென்று காலங்களை ஏன் நியமிக்கவில்லை? அவரை அறிந்தவர்கள் அந்த நாட்களுக்காக ஏன் வீணாக எதிர்நோக்க வேண்டியதிருக்கிறது? என்று கேட்டார் (யோபு 24:1; NIV*). துன்மார்க்கரின் வாழ்வை சங்கீதக்காரர் கண்ணோக்கியபின்பு, அவர் "என் கால்கள் தள்ளாடுதலுக்கும், என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று" என்று அறிக்கையிட்டார் (சங்கீதம் 73:2, 3;* NIV*).*

துன்புறுதல் பற்றிய பேதுருவின் புரிந்துகொள்ளுதல், யோபுவின் நண்பர்களுடைய புரிந்து கொள்ளுதலுக்கு ஒப்பானதாக இருக்கிறது. எலிப்பாஸ் (யோபு 5:17) மற்றும் எலிகூ (யோபு 33:19) ஆகியோர், துன்புறுதலானது தேவனு டைய ஊழியக்காரர்களைப் பரிசுத்தமாக்கி அவர்களுக்குச் சகிப்புத் தன்மையை அளிப்பதற்கானதாக இருந்தது என்று வாதிட்டிருந்தனர். அக்கினியானது பொன்னைப் புடமிடுவது போல, துன்புறுதலானது கிறிஸ்தவர்களின் விசுவாசத்தைப் புடமிடுகிறது என்ற பேதுருவின் கருத்து, இதைப்போன்ற பதிலாக உள்ளது. எல்லா உபத்திரவமுமே தேவனிடத்தில் இருந்து வரும் சிட்சித்தலாக

இருப்பதில்லை, ஆயினும் அது கிறிஸ்தவர்களுக்குப் பயன்நிறைந்ததாக இருக்கலாம். துன்புறுதலுக்குப் பேதுருவின் பதிலானது, தேவன் பட்சபாத மற்ற வகையில் நியாயந் தீர்ப்பார் என்பதற்கான நிறைவான நினைவூட்டுதலாக உள்ளது (1:17). இந்த இடத்தில் அவரது பதில் சங்கீதம் 73க்கு இணையானதாக உள்ளது. சங்கீதக்காரர், துன்மார்க்கரின் வளமை தற்காலிகமானது என்று முடிவுசெய்தார். செயல்விளைவில் பேதுருவும் இதையே செய்தார்.

தேவபக்தியுள்ளவர்கள் தங்கள் பலனைப் பெற்றுக்கொள்வார்கள், மற்றும் துன்மார்க்கர்கள் கடைசி நாளில் எல்லாத் தவறுகளும் நேராக்கப்படும்போது, தேவனுடைய கோபத்தை ருசிபார்ப்பார்கள். நிகழ்காலத்தில், பரிசுத்த மாயிருக்க துன்புறுதல் பற்றிய விஷயத்தைத் தீர்மானித்தல் என்பது அவசிய மற்றதாக உள்ளது. "இந்த பூமியில் நீங்கள் பரதேசிகளாக இருக்கிறீர்கள்" என்று பேதுரு தமது வாசகர்களுக்குக் கூறினார். தாழ்மை, நம்பிக்கை வைத்தல் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவை யாவும் "இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும்" மற்றும் "பயத்துடனே" என்ற வார்த்தைகளில் காணப்படுகின்றன. செயல் விளைவில் பேதுரு, "வாழ்வின் சிக்கலான விஷயங்கள் எல்லாவற்றிற்கும் நீங்கள் பதில்களைக் கொண்டிராதிருக்கலாம், ஆனால் நீங்கள் பின்வரும் பதிலைக் கொண்டுள்ளீர்கள்: சிருஷ்டிப்பின் தேவன் உங்களை அறிகிறார், உங்கள்மீது அன்புகூருகிறார் மற்றும் உங்களை மீட்டு இருக்கிறார்."

கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்படுதல் (1:18-21)

1:14 மற்றும் 1:18 ஆகிய இரு வசனங்களிலும் பேதுரு, தமது வாசகர்களுக்கு அவர்கள் வாழ்வின் முந்திய வழிகளைப் பற்றிக் குறிப்பிட்டார். 14ம் வசனம் அவர்களின் முந்திய விருப்பங்களினுடைய அறியாமையைப் பற்றிப் பேசிற்று மற்றும் 18ம் வசனம் அவர்கள் தங்கள் முன்னோர்களிடமிருந்து பாரம்பரிய மாகப் பெற்றிருந்த வீணான வாழ்வு நடத்தையைப் பற்றிப் பேசியது. தேவனின்றி மக்களின் வாழ்வு அறியாமை மற்றும் இலக்கில்லாத வகை ஆகியவற்றிற்குச் சாய்கிறது, ஒருக்காலும் ஒழிந்து போகாத பசிகளை அன்றாடம் தீர்க்கும் ஒரு வெறுமையான வகையான நாளைக் கழிக்க அது சாய்கிறது.

நமது தற்கால உலகத்தினால் கற்பனை செய்யப்படும், புத்திசாலித்தன மான, நவீனமான மற்றும் தைரியமானவையாக உள்ள பல விஷயங்கள், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்வை நசுக்கி அதில் இருந்து சந்தோஷத்தை எடுத்துப் போட்டுள்ளவற்றின் வெறும் விரிவாக்கங்களாகவே உள்ளன. சிந்தை இன்றிப் பெருவிருப்பங்களைப் பின்பற்றுதல், அடிமைப்படுத்தி அழிக்கிறது. பிற்பாடு பேதுரு, கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் செய்கிறவர்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்: "எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே" (2 பேதுரு 2:19; NIV*).*

இந்தக் கிறிஸ்தவர்கள் அறிந்திருந்த அடிமைப்படுத்தும், சிறுமைப்படுத்தும் முந்திய வாழ்விற்கும் கிறிஸ்துவுக்குள் இவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கும் சுயாதீனத்திற்கும் இடையில் ஒரு கூர்மையான வேறுபாட்டைப் பேதுரு வரைவளவில் காண்பித்தார். அவர்கள் மீட்கப்பட்டு இருந்ததைப்

பேதுரு அவர்களுக்கு நினைவூட்டினார். "மீட்கப்படுதல்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, மீட்புத்தொகை செலுத்தப்படுதல் என்பதற்குக் கிரேக்க நாட்டின் உலகப்பிரகாரமான எழுத்தாளர்கள் பயன்படுத்திய வார்த்தையாக இருந்தது. செல்வமிக்க அல்லது அதிகாரம் நிறைந்த ஒரு மனிதர், கடற் கொள்ளையர்களின் குழுவிற்கோ அல்லது வழிப்பறித் திருடர்களின் கூட்டத்திற்கோ, ஒரு பெரிய தொகையைக் கொண்டு வரலாம். ரோம வரலாற்றாளரான சுயூட்டோனியஸ் என்பவர், கி.மு. 74ல் ஜூலியஸ் சீஸரின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை எடுத்துரைத்தார். இளைஞனாயிருந்த சீஸர், சொல்லாடல் கலையைக் கற்பதற்காக, ஏஜியன் கடலில் உள்ள ரோட்ஸ் என்ற தீவுக்குச் செல்லும் வழியில் இருந்தார். அவரது கப்பல் கடற்கொள்ளையர்களின் கைகளில் விழுந்தபோது, சீஸர் தம்மை மீட்கும் பொருளாக ஐம்பது தாலந்து தங்கம் வேண்டி மிலேத்து நகருக்கு ஆள் அனுப்பினார். மிலேத்து நகரில் இருந்தவர்கள் அந்தப் பெருந்தொகையைச் செலுத்தினர், பின்பு கடற்கொள்ளையர்கள் சீஸரை விடுவித்தனர்.

வெள்ளியும் பொன்னும், செல்வந்தர்கள் மற்றும் அதிகாரம் நிறைந்தவர்கள் ஆகியோரை மீட்கும் பொருளாக இருந்தது, ஆனால் பேதுரு, தமது வாசகர்களின் மாம்சப்பிரகாரமான இச்சைகளின் அடிமைத் தளையிலிருந்து அவர்களை மீட்கச் செலுத்தப்பட்ட பொருள் மிகவும் விலையேறப்பெற்றது என்று அவர்களுக்கு நினைவூட்டினார் - அது தேவகுமாரனுடைய இரத்தமாகும் (1:18, 19). இதைப் பவுல் பின்வருமாறு சொற்றொடராக்கினார்: "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரிந்தியர் 5:21).

பேதுரு கிறிஸ்துவைக் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி என்று குறிப்பிட்டார் (1:19). வெளிப்படுத்தின விசேஷம் 5:8ல் "ஆட்டுக்குட்டி" என்ற இதே வார்த்தை கிறிஸ்துவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் கிரேக்க மொழியில் இவ்வார்த்தை சற்றே மாற்றப்பட்டுள்ளது, அது "சிறு ஆட்டுக்குட்டி" என்று அர்த்தப்படுகிறது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கிறிஸ்துவைக் குறிப்பிடும்போது, மிகவும் அன்பார்ந்த சொற்றொடர்களைப் பயன்படுத்தினர். நடபடிகள் புத்தகத்தில் பலமுறைகள் (3:13, 26; 4:27, 30) அவர் "ஊழியர்" என்று அழைக்கப்பட்டுள்ளார் (KJV வேதாகமம் நடபடிகள் 3:13, 26ல் "குமாரன்" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது மற்றும் 4:27, 30ல் அது இவ்வார்த்தையை "பிள்ளை" என்று மொழிபெயர்த்துள்ளது). முதல் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் இரண்டாம் நூற்றண்டின் முற்பகுதி ஆகிய காலகட்டங்களில் இருந்த கிறிஸ்தவர்கள், கர்த்தரைப் பற்றி எழுதியபோது, அவர்கள் அவரை "பிள்ளை" என்று அடிக்கடி அழைத்தனர். "ஆட்டுக்குட்டி" மற்றும் "பிள்ளை" என்பது போன்ற வார்த்தைகள், கிறிஸ்துவை விலைமதிப்பற்றவர் மற்றும் குற்றமற்றவர் என்று நினைக்கும்படி நம்மைக் கட்டாயப்படுத்துகின்றன.

பவுல், கிறிஸ்துவை நமது பஸ்கா என்று குறிப்பிட்டார் (1 கொரிந்தியர் 5:7). கிறிஸ்துவுக்கும் பஸ்கா பலிக்கும் உள்ள அதே தொடர்பு, அவரது எலும்புகளில் ஒன்றும் முறிபடவில்லை என்று யோவான் தமது சுவிசேஷத்தின் 19:36ல் எழுதும்போது, அங்கு காணப்படுகிறது. 1:18-21ல் பஸ்கா பற்றிய வெளிப்படையான குறிப்பு எதுவும் இல்லாதிருக்கையில், "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி" என்ற பேதுருவின் குறிப்பு, நம்மை இயல்பாகவே, யாத்திராகமம்

12ல் ஆட்டுக்குட்டி அடிக்கப்படுதல் மற்றும் ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்பட்ட வீடுகளின்மீது தேவன் கடந்து செல்லுதல் ஆகியவற்றிற்குப் பின்னோக்கி அழைத்துச் செல்கிறது. ஆட்டுக்குட்டியின் இரத்தம், பாவியை மீட்டுள்ளது, அவரை முழுமையாக்கி, சாத்தான் என்ற அழிப்பவரின் வல்லமையில் இருந்து அவரை [பாவியை] விடுவித்துள்ளது.

கிறிஸ்துவில் தேவனுடைய மாபெரும் மீட்புச் செயலானது உலகத்தோற்றத்தில் இருந்தே திட்டமிடப்பட்டு இருந்தது, ஆனால் கடைசிநாட்களாகிய, முடிவுக்காலமான இப்போது அது முழுமையாக்கப்பட்டது (1:20). பழைய ஏற்பாடு முழுவதும் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றத்திற்கான முன்னெதிர்பார்ப்பின் ஆவியொன்றைக் கொண்டுள்ளது. தாவீதின் சந்ததியும் கிளையுமானவர், அரியணையில் மீண்டும் அமருவார், தேவன் தமது மக்கள்மீது ஆட்சிசெலுத்துவார். மனிதர்களின் இருதயங்களில் ஒரு புதிய உடன்படிக்கை எழுதப்படும் (எரேமியா 31:33). புலியும் வெள்ளாட்டுக்குட்டியும் ஒன்றாகப் படுத்துப் புரளும் (ஏசாயா 11:6). தேவனுடைய வாக்குத்தத்தங்கள் யாவும் கடைசிக் காலங்களில் அவர்கள் மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்று பேதுரு தமது வாசகர்களுக்குக் கூறினார். அவர்கள் எல்லாவற்றிற்கும் சுதந்தரவாளிகளாக இருப்பார்கள் என்று அவர்களுக்கு அவர் உறுதியளித்தார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மூலமாகக் கிறிஸ்தவர்களுக்குத் தரப்பட்டுள்ள விசுவாசமும் நம்பிக்கையும் இயல்பாகவே பரிசுத்தத்தை உண்டாக்குகிறது.

அழிவில்லாத வித்தினாலே பிறத்தல் (1:22-25)

“ஞானஸ்நானம்” என்ற வார்த்தை 1 பேதுரு நிருபத்தில் ஒரே ஒருமுறை (3:21) மட்டுமே உள்ளது என்றாலும், வேதாகமத்தைக் கவனமாகப் படிக்கும் மாணவர்கள், ஞானஸ்நானம் என்பதே இந்த நிருபத்தில் மேலாதிக்கம்பெற்ற ஆய்வுக்கருத்தாக உள்ளது என்பதை நீண்டகாலமாக உணர்ந்து அறிந்து இருக்கின்றனர். இந்த நிருபமானது, புதிதாக மனமாறிய ஒருவர் ஞானஸ்நானம் பெறுகையில் தொடக்க கால சபை நடத்துனர்கள் கூறிய வார்த்தைகளின் தழுவலாக உள்ளது என்ற கருத்தைக் கொண்டிருக்கும் அளவுக்குத் தொலைவில் செல்கின்றனர். ஒருவர் ஞானஸ்நானம் பெற்றபோது, அவர் புதிதாகப் பிறந்தார். ஞானஸ்நானம் பெற்று எழுந்து வரும் கிறிஸ்தவர் “புதிய ஜீவனுள்ளவராக” நடந்து கொள்ள வேண்டியவராக இருக்கிறார் என்று பவுல் கூறியபோது (ரோமர் 6:4), அவர் இந்த பேச்சுருவத்தை இன்னும் சற்றுத் தூரம் எடுத்துச் சென்றார். பேதுரு (1:3ல் செய்திருந்தது போலவே) “அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே” (1:23) என்ற வார்த்தைகளில் கிறிஸ்தவ ஞானஸ்நானத்தைக் குறிப்பிட்டார் என்பதில் சந்தேகம் இல்லை.

பேதுரு “நீங்கள் ... சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக் களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால் ...” (1:22) என்று கூறியபோது, கிறிஸ்தவர்கள் தங்கள் தகுதியினால் இரட்சிப்பை ஈட்டுகின்றனர் என்று கருத்துத் தெரிவிக்க நோக்கம் கொண்டிருக்கவில்லை. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று, பேதுரு “மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை

இரட்சித்துக்கொள்ளுங்கள்!" என்று புத்திகூறியிருந்தார் (நடபடிகள் 2:40). தேவனுடைய கிருபையால் மன்னிப்பும் நித்தியஜீவனும் வழங்கப்பட்டுள்ளது. இது, கேள்விப்படும் நபர், அளிக்கப்படும் கொடையை நெருங்கி அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருத்துரைத்து, கிருபையின் உபதேசத்தை சமரசம் செய்வதில்லை. இதையே, பேதுரு அவர்களுக்கு "உங்கள் ஆத்துமாக் களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால்" என்று கூறிய போது அர்த்தப்படுத்தினார். அவர்கள் நம்பிக்கை மற்றும் கிருபையின் செய்தியை விசுவாசித்திருந்தனர் மற்றும் கர்த்தர் கட்டளையிட்டவற்றைச் செய்திருந்தனர்.

பரிசுத்தம் என்பது புதிய பிறப்பின் சிந்தனையில் இருந்து ஒருக்காலும் தொலைவில் இருப்பது இல்லை. விதையானது அழிவற்றதாக உள்ளது, மற்றும் விசுவாசி சுத்திகரிக்கப் பட்டிருக்கிறார். பரிசுத்தமாக வாழவேண்டும் என்ற வேண்டுகோளின் மூலம் பேதுரு எதை அர்த்தப்படுத்தினார் என்று ஆசியா மைனர் பகுதியில் வாழ்ந்திருந்த மக்கள் புரிந்துகொண்டனரா? அவர்கள் தங்கள் உலகத்தின் மதிப்பீடுகள் மற்றும் நடக்கைகள் ஆகியவற்றிற்கு அறைகூவல் விடக்கூடிய ஏவுதல் மற்றும் தைரியம் ஆகியவற்றைக் கண்டறிந்தனரா? நாம் அவற்றைக் கண்டறிகிறோமா? ராக் இசை அல்லது நாட்டுப்புற இசை அல்லது மேற்கத்திய இசைப் பாடல்கள் இசைக்கப்படுவதைக் கவனித்துக் கேட்டல் என்பது ஒரு கல்வித்துவ அனுபவமாக உள்ளது. உடனடி நிறைவு என்பது நேரத்தின் அழைப்பாக உள்ளது. ஏதொன்றிற்கும் காத்திருக்க வேண்டாம் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. பிரபலமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், உடனடி மனநிறைவிற்கான அழைப்பை மறுவலிவூட்டுகின்றன. பல இலட்சக்கணக்கான மக்கள், எது நல்லதென்று உணர்கின்றனரோ அதை இப்போதே செய்தல் என்பதைக் காட்டிலும் உயர்வான அழைப்பு எதையும் கொண்டிராது வாழ்கின்றனர்.

கிறிஸ்தவர்கள் - பரிசுத்தமாக இருக்க வேண்டிய கிறிஸ்தவர்கள் - இப்படிப்பட்ட உலகத்தில் வாழ்கின்றனர். பேதுருவின் வாசகர்களுக்கு, கிறிஸ்தவர்கள் என்ற வகையில் அவர்கள் அறிந்திருந்த பரிசுத்தமான வாழ்விற்கும், அவர்களின் அவிசுவாசத்தின் பழைய ஒழுக்கவீனமான வாழ்விற்கும் இடையிலான எல்லைக்கோடு மங்கலாக இருக்கவில்லை. ஒருவேளை நமது உலகம் மாறுபட்டு இருக்கலாம். பரிசுத்தம் மற்றும் பரிசுத்தமின்மை ஆகியவற்றிற்கு இடையிலான கோடு அடிக்கடி மங்கலாகி விடுகிறது. சிலவேளைகளில் கிறிஸ்தவர்கள் இந்த எல்லைக்கோடு மங்கலாவதற்குப் பங்களிக்கின்றனர். உலகம் அழைக்கிறபோது சிலர், "எல்லா வேடிக்கையில் இருந்தும் நம்மை நாம் நிச்சயமாகத் துண்டித்துக் கொள்ளவேண்டியதில்லை, அல்லவா? பரிசுத்தத்தின் இவ்விஷயத்தை நாம் மிகவும் அதிகமாகக் கருதாது இருப்போமாக" என்று கூறுகின்றனர். சில கிறிஸ்தவர்கள், "வெறி" என்ற மிகவும் அஞ்சத்தக்க நவீன அடைமொழியை உலகம் தங்கள்மீது வைத்துவிடுமோ என்று அஞ்சுவதாகக் காணப்படுகிறது. அவர்கள் அரசரின் பிள்ளையாக இருத்தல் பற்றித் தீவிரமாக இருப்பதாக யாரேனும் நினைத்து விடுவார்களோ என்று பயப்படுவதாகக் காணப்படுகிறது.

பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள், இன்றைய நாட்களின் இச்சை உணர்விற்கு நெடிய விருப்பம் கொண்டுள்ளதைக் காணுதல் என்பது கவலைக்குரியதாகவும் ஊக்கம் இழக்கச் செய்வதாகவும் உள்ளது. பழங்கால இஸ்ரவேல் மக்களுக்கு யோசுவாவின் வார்த்தைகள், நவீனகால சபைக்குப்

பொருத்தமானவையாக இருக்கலாம்: "நீங்கள் கர்த்தரைச் சேவிக்கமாட்டீர்கள்; அவர் பரிசுத்தமுள்ள தேவன், அவர் எரிச்சலுள்ள தேவன்" (யோசுவா 24:19). பரிசுத்தத்தின் அறைகூவலுக்கு நாம் தயாராக இருக்கிறோமா? அந்தக் கேள்விக்கு நாம் எவ்வாறு பதில் அளிப்போம் என்று நான் உறுதியாகக் கூற இயலாது. மோசே இவ்வாறு பதில் அளித்தார்: "நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல ... நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது" (உபாகமம் 30:11, 14).

பரிசுத்தமற்ற உலகத்தில் பரிசுத்தமாயிருப்பதற்காகப் போராடுகையில், கிறிஸ்தவர்கள் புத்துணர்வைத் தரவழைத்துக் கொள்ளக்கூடிய இரு ஆதாரமூலங்களைப் பேதுரு அளித்தார். முதலாவது, பரிசுத்தமானது பரிசுத்த நகரத்திற்குச் செல்லும் புனிதப்பயணத்தில் சகபயணிகளிடத்தில் சகோதர அன்பைக் கொடுத்துப் பெறுவதில் ஆதரவைக் காண்கிறது. பேதுரு, தமது வாசகர்களின் சுத்தமும் கீழ்ப்படிதலும் உண்மையான அன்பை விளைவித் திருந்தது என்று அறிந்தார் மற்றும் அவர் "சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்" என்று அவர்களுக்குப் புத்திகூறினார் (1:22).

இரண்டாவதாக, உலகத்தின் கனங்களும் பெருவிருப்பங்களும் தற்காலிக மானவையாக இருக்கையில், பரிசுத்தம் நித்தியமானதாக உள்ளது. "அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" என்று பேதுரு கூறினார் (1:23). பின்பு அவர், ஏசாயா 40:6-8ல் இருந்து ஒரு அழகிய வசனப்பகுதியை மேற்கோள் காண்பித்தார், இது சங்கீதம் 103:15, 16ல் எதிரொலிக்கும் வேதவசனப் பகுதியாக உள்ளது "மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்" (1:24, 25அ).

முடிவுரை

1:13-25ல் பேதுரு தமது வாசகர்களை, பரிசுத்தமான மக்களாக இருக்கும்படி வேண்டுகோள் விடுவித்தார் மற்றும் பரிசுத்தத்திற்கான மூன்று பாதைகளையும் அவர்களுக்கு அளித்தார்: கீழ்ப்படிதல், மீட்பு மற்றும் மறு பிறப்பு. பேதுரு நிருபத்தின் முதல் வாசகர்கள் வாழ்ந்திருந்த உலகமானது சில வகைகளில் இன்றைய நாட்களின் உலகம் போன்றதாகவும் மற்றவற்றில் கணிசமான அளவு மாறுபட்டதாகவும் இருந்தது. ஆசியா மைனர் பகுதியில் முதல் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில், கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவரல்லா தவர்கள் ஆகியோருக்கிடையிலான எல்லைக்கோடு மிகக்கூர்மையாக வரையப்பட்டிருந்தது. கிறிஸ்தவர்கள், "கிறிஸ்துவே ஆண்டவராக இருக்கிறார்" என்று கூறியதால், அவர்கள் ஏளனம் செய்யப்பட்டு சிலவேளைகளில் உடல்ரீதி யாக துன்புறுத்தப்பட்டனர். கிறிஸ்தவர்களின் உடல்ரீதியான மற்றும் உணர்வுரீதி யான துன்பம் ஆகியவற்றில் இருந்து விடுதலை எதையும் பேதுரு அளிக்கவில்லை. இதற்கு நேர்மாறாக அவர், விஷயங்கள் இன்னும் மோசமாகலாம் என்று கூறினார். எது வந்தாலும், அவர்கள் தேவனுடைய மக்களாக இருந்தனர் என்று அவர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார் மற்றும் தேவனுடைய அந்த மக்கள் பரிசுத்தமானவர்களாக இருந்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் உலகமானது, கர்த்தருடைய நாமத்தைத் தரித்துக் கொண்டுள்ளவர்களின் பகுதியில் பரிசுத்த வாழ்விற்கு இதைவிட மாபெரும் தேவை எதையும் கொண்டிருப்பதில்லை. உடன்பாடுகள் அல்லது சாக்குப்போக்குகள் ஆகியவற்றிற்கு இடமில்லை. ஒருசில நவீன கிறிஸ்தவர்கள் (குறைந்தபட்சம் அமெரிக்காவில்), கிறிஸ்தவர்களாக இருப்பதற்காக உடல்ரீதி யான எதிர்த்தாக்குதலுக்கு பயப்பட்டாக வேண்டும். இன்றைய நாட்களில், பாவம் என்பது தனது கரங்களில் நம்மைப் பற்றிக் கொண்டு, நாம் மனிதர்களாகத் தானே இருக்கிறோம், எனவே நாம் நம்மிடத்தில் இருந்து அதிகமானவற்றை எதிர் பார்க்க இயலாது என்று நமக்குக் கூறுகிறது.

கிறிஸ்தவர்கள் ஒருவர் பிறருக்குத் தேவைப்படுகின்றனர். நாம் உண்மை யான இருதயத்தோடு ஒருவர் மற்றவர்மீது அன்புகூர வேண்டும். உண்மையில், கிறிஸ்து தமது மக்கள் ஒருவர் பிறரிடம் இருந்து ஆதரவையும் பெலனையும் கண்டறியக்கூடிய வகையில் அவர்களை ஒரு பரிசுத்தமான கட்டிட மாகவே வடிவமைத்திருக்கிறார். அவர் ஏற்படுத்தியுள்ள கட்டிடமானது நிலைத்திருக்கிறது, அது உலர்ந்து விழுகிற புல்லின் மகிமையைப் போன்றது அல்ல. 2ம் அதிகாரத்தில் பேதுரு, கைகளால் வடிவமைக்கப் பட்டிராததும் ஜீவனுள்ள கற்களால் ஏற்படுத்தப்பட்டதுமான கட்டிடத்தைப் பற்றி அதி கமாக எழுதினார். இப்போதைக்கு நாம், தங்களின் முந்திய அறியாமையைத் தள்ளிவிட்டு ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களால் இந்தப் பரிசுத்த ஆலயம் வடிவமைக்கப் பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்வோமாக.

4

சீயோனில் வைக்கப்பட்ட கல்லின்மீது நம்பிக்கையாயிருங்கள் (1 பேதுரு 2:1-10)

தானாகவே அழிந்து கொள்ளும் தன்மை மற்றும் தீவிரவாத தனிநபர்த்துவம் என்பது அடிக்கடி மக்களை ஒருவர் மற்றவரிடத்தில் இருந்து தனிமைப் படுத்துகிறது. மக்கள் பலர், சார்ந்திருப்பதின் மதிப்பைப் பற்றிச் சிறிதளவே மதிப்புக் கொண்டுள்ளனர். நாம் எவரொருவருக்கும் கணக்கு ஒப்புவிக்க வேண்டாதிருக்கும்படி அல்லது நமக்குத் தேவை, தனிமை அல்லது பயம் ஏற்படும் வரையிலும் நாம் விரும்புகிற வழியில் வாழும்படி நாம் விரும்புவோம்.

பேதுரு தமது முதல் நிருபத்தை யாருக்கு எழுதினாரோ, அந்தக் கிறிஸ்தவர்கள், தங்களுக்கு ஆதரவு அளித்திருந்த மற்றும் உலகத்தில் தங்களுக்கு ஒரு இடத்தைக் கொடுத்திருந்த வாழ்வின் வழி எல்லாவற்றிலும் இருந்து துண்டிக்கப் பட்டிருந்தனர். 2:1-10ற்கு மையமாக உள்ள, சார்ந்திருத்தல், ஐக்கியம், பரஸ்பர ஆதரவு மற்றும் ஒருவருக்கொருவர் கணக்கு ஒப்புவிக்க வேண்டியிருத்தல் ஆகியவற்றின் செய்தி அவர்களுக்குத் தேவைப்பட்டது. அவர்கள் என்னவாக இருந்திருந்தனர் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர், ஆனால் இப்போது அவர்கள் என்னவாக இருந்தனர், இப்போது அவர்கள் கிறிஸ்துவை அணிந்து கொண்டிருந்தனர் மற்றும் தங்களின் கடந்த காலத்துடன் தங்களை இணைத்திருந்த கயிறுகளை வெட்டியிருந்தனரா? பேதுரு, “நீங்கள் வளருவதற்கு ஆவிக்குரிய பால் தேவைப்படுகிற புதிதாய்ப் பிறந்த குழந்தைகளாக இருக்கிறீர்கள். நீங்கள் பிரதான மூலைக்கல்லாகிய இயேசு கிறிஸ்துவின்மீது கட்டப்படும் பரிசுத்த ஆலயமாக இருக்கிறீர்கள். நீங்கள் தேவனால் விசேஷித்த வகையில் தயவு பெற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களினமாக இருக்கிறீர்கள்” என்று கூறினார். சார்ந்திருத்தல் மற்றும் ஒன்றிணைந்திருத்தல் ஆகியவை இவ்வசனங்களின் மையக் கருத்துக்களாக உள்ளன.

புதிதாய்ப் பிறந்த குழந்தைகளுக்குக் களங்கமில்லாத பால் (2:1-3)

பேதுருவின் வாசகர்களில் சிலர், பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாகக் கிறிஸ்தவர்களாக இருந்திருந்தனர். பெரும்பான்மையானவர்கள், விசுவாசத்தில் அதைவிட கணிசமான அளவுக்கு இளையவர்களாகக் கருதப்பட்டனர். பழைய வாழ்வைப் புதிய வாழ்வில் இருந்து பிரித்த எல் லையைக் குறிப்பிடுதலின் தெளிவான கோட்டை மறுவலியூட்டுதல் அவசியமாக இருந்தது. அவர்களின் வாழ்வு கிறிஸ்துவின் நற்தன்மைகளால் நிரப்பப்படுவதற்கு முன்பு, முதலில் அவர்கள் தங்கள் உலகப் பொதியை அகற்ற வேண்டியிருந்தது.

பழைய மனுஷனைக் களைந்துபோடுதல்

அவர்கள் தங்கள் வாழ்வின் பழைய வழிகளைப் புறம்பே போட வேண்டும் என்று, அவர்களிடம் பேதுரு வேண்டுகோள் விடுத்தார். அவர், "இப்படியிருக்க, ... சகல துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு" என்று கூறினார் (2:1, 2). "ஒழித்துவிட்டு" ("புறம்பே போட்டுவிட்டு"; "உங்களை விலக்கிக்கொண்டு") என்ற சொற்றொடர், கிறிஸ்தவர்களை, வாழ்வின் பழைய வழிகளை "களைந்துபோட்டு" விடும்படி எபேசியர் 4:22லும், "புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளும்படி" எபேசியர் 4:24லும் வேண்டிக்கொண்ட பவுலினால் இதைபோன்ற வகையில் பயன்படுத்தப்பட்டது. கொலோசெயர் 3:8-11 இதே போன்றதாக உள்ளது. இதே வார்த்தையைப் பயன்படுத்திப் பவுல், அந்தகாரத்தின் கிரியைகளைத் "தள்ளிவிடும்படி" வேண்டுகோள் விடுத்தார் (ரோமர் 13:12). ஒருவர், தமது வாழ்வில் கிறிஸ்துவை உள்ளே *அணிந்துகொள்வதற்கு முன்பு, மற்ற விஷயங்கள்* வெளியே *தள்ளப்பட வேண்டும் என்பது தெளிவாக உள்ளது.*

துர்க்குணம், கபடம், வஞ்சகம், பொறாமை, புறங்கூறுதல் - ஆகிய இந்தக் குற்றங்கள், வாழ்வின் பழைய வழியைக் குறிப்பிடுவதாகப் பேதுரு கூறினார். அவைகள் ஒழிக்கப்பட வேண்டும்.

பெரும்பாலும், பேதுருவின் வார்த்தைகள், கிறிஸ்தவர் ஒழித்துப்போட வேண்டிய பொதுவான நடைமுறைகளைக் குறிப்பிடுவதற்கு மாறாக, அவர்கள் ஒழித்துப்போட வேண்டிய பொதுவான பண்புகளையே குறித்தன. "துர்க்குணம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, மோசமான சிந்தைக்குரிய பொதுவான வார்த்தையாக உள்ளது. அடுத்த வார்த்தை NASB மற்றும் KJV ஆகியவற்றில் "guile" ["கபடம்"] என்று தரவழைக்கப்பட்டுள்ளது, ஆனால் இது NIVயில், "deceit" ["கபடம்"] என்று தரவழைக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டைத் தவிர, மற்ற கிரேக்க எழுத்துக்களில், இவ்வார்த்தை சிலவேளைகளில், மீன்பிடிக்கும் மனிதர் ஒருவர் பயன்படுத்தும் இழுக்கும் பொருள் அல்லது தூண்டில் இரை என்பதைச் சிலவேளைகளில் குறிப்பிடுகிறது. "Guile" என்பது ஒருவரை, பொதுவாக தீமைக்குள் அவரை வழிநடத்துதல் என்று அர்த்தப்படுகிறது. மூன்றாவது வார்த்தையான "வஞ்சகம்" என்பதற்குச் சிறிது விளக்கம் தேவைப்படுகிறது. இது தவறான அல்லது மறைவான வழியில் ஒருவர் தம்மை இடுதலின் பண்பாக, ஒருவர் தம்மிடத்தில் இல்லாத ஒரு குணத்தை இருப்பதாக காட்டும் பண்பாக உள்ளது.

பேதுரு பயன்படுத்திய, "பொறாமை" ["envy"] என்ற நான்காவது வார்த்தை, மறைவான பொல்லாங்காக உள்ளது. இதுவும், பொறாமையின் ["jealousy"] என்ற வார்த்தையும் ஒன்றுடன் இன்னொன்று கவிந்திருந்தாலும், இது பொறாமையைப் போன்றதாக இருப்பதில்லை. குரோதம் என்பது, திருப்தியற்ற நிலையின் முறுமுறுக்கும் உணர்வாகவும், விரும்பத்தக்க சில விஷயங்கள் ஒருவருக்கு நடந்து, அவர் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதால் அவரிடத்தில் காண்பிக்கப்படும் மோசமான சிந்தையும் ஆகும். பொறாமை என்பது நாம் யாவரும் நமக்குள் அடையாளம் காணக்கூடிய மோசமான ஒரு குற்றமாக உள்ளது.

"புறங்கூறுதல்" ("பொல்லாங்காய்ப் பேசுதல்;" KJV) என்ற கடைசி வார்த்தை இந்த வசனத்திலும் 2 கொரிந்தியர் 12:20லும் மாத்திரமே காணப்படுகிறது. இது, ஒருவரின் பண்பை அல்லது நற்பெயரைக் கெடுத்தல் என்பதை

அர்த்தப்படுத்துகிறது. கூறப்பட்டது உண்மையா அல்லது தவறா என்பது சிறிது வேறுபாட்டையே ஏற்படுத்துகிறது. ஒருவர், இன்னொருவரின் நற்பெயரைத் துன்மார்க்கமாக அழித்தால், அவர் புறங்கூறுதலின் குற்றமுள்ளவராக இருக்கிறார்.

இந்த வார்த்தைகள் பொதுவில் கொண்டிருக்கக் கூடிய விஷயம் என்ன? இவை யாவையும், இசைவிணக்கம் மற்றும் நற்சிந்தை ஆகியவற்றை அழிக்கக்கூடிய குற்றங்களைக் குறிக்கின்றன. இவைகள் "மாயமற்ற சகோதர சிநேகம்" என்பதற்கு முற்றிலும் நேர்மாறானவையாக உள்ளன (1:22). கர்த்தருடைய சபையானது இயல்பிலேயே, அன்பினால் ஒன்றாக நெருக்கிப்பிணைக்கப்பட்டுள்ள மக்கள் கூட்டமாக உள்ளது (யோவான் 13:35). இந்தத் துன்மார்க்கங்கள் சரீரத்தைக் கிழித்துப்பிரிக்கின்றன. இவைகள் உலகத்தில் பொதுவான காட்சியாக உள்ளன, ஆனால் கிறிஸ்தவர்கள் இவற்றை ஒழித்துப்போட வேண்டும். இந்த நிருபத்தை முதன்முதலாக வாசித்தவர்கள் ஒன்றிணைப்பு மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் கருத்துணர்வுக்கு வரவேண்டுமென்றால், அவர்கள் இப்படிப்பட்ட குற்றங்களை நடைமுறைப்படுத்தக் கூடாதிருந்தது. அவர்கள் தங்கள் வாழ்வின் பழைய வழிகளை விட்டு ஒதுங்கிய நிலையில், ஒன்றிணைந்த மற்றும் அக்கறையுள்ள மக்கள் அளிக்கக்கூடிய ஆதரவும் பலமும் தேவைப்பட்ட நிலையில் இருந்தனர்.

திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருத்தல்

1ம் அதிகாரத்தில் பேதுரு இருமுறை (வசனங்கள் 3, 23) பேதுரு, தமது வாசகர்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருத்தல் பற்றிக் குறிப்பிட்டார். ஆவிக்குரிய வகையில் பேசுவதென்றால், அவர்கள் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல இருந்தனர். அவர்கள் தங்கள் வாழ்வின் பழைய வழிகளை ஒழித்துப்போட வேண்டியதாக இருந்தது, புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் என்ற வகையில், அவர்கள் "திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல்" (2:3) வாஞ்சையாயிருக்க வேண்டியதாயிற்று. மொழிபெயர்ப்புகளில் உள்ள வேறுபாடு ("sincere milk of the word," KJV; "pure spiritual milk," NIV), மொழிபெயர்ப்பதற்குக் கடினமாக உள்ள கிரேக்க வார்த்தையைப் பிரதிபலிக்கிறது. KJV மொழிபெயர்ப்பு, *logikon* என்பதை "of the word" என்று மொழிபெயர்க்கையில் NIV வேதாகமம் அதை "spiritual" என்று தரவழைக்கிறது. அதிர்ஷ்டவசமாக, ஒரு முக்கியமான முடிவைத் தரவழைப்பதற்கு இவ்விடத்தில் மொழிபெயர்ப்புக் கேள்விகளைத் தீர்க்க வேண்டிய அவசியம் இருப்பதில்லை. ஆவிக்குரிய தன்மையானது தேவன் தமது வசனத்தில் தம்மை வெளிப்படுத்தி இருக்கும் விஷயத்துடன் உறவுபடுதல் அத்தியாவசியமானதாக உள்ளது. வசனமே ஆவிக்குரிய பெலம் பாய்ந்தோடுவதற்கான ஆதார மூலமாக உள்ளது.

தேவனுடைய மனிதர்கள், தேவன், அவருடைய வழிகள் மற்றும் தேவனுடைய வசனத்தின் மீது கொள்ள வேண்டிய விருப்பத்திற்கு அடையாளத்துவ மாக உணவு மற்றும் பானம் ஆகியவற்றிற்கான விருப்பத்தை, எவ்வளவு அடிக்கடி பயன்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கதாக உள்ளது. பாக்கியங்களில் ஒன்று, "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்" என்று கூறுகிறது (மத்தேயு 5:6). சங்கீதக்காரர், "தேவனே,

நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயி ருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது" என்று எழுதினார் (சங்கீதம் 63:1). பேதுரு, புதிதாய்ப்பிறந்த ஒரு குழந்தை, தனது வளர்ச்சிக்குப் பாலின்மீது ஏக்கமாயிருக்கும் சித்திரத்தை வரைந்தார். "திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.'' ''அப்போது நீங்கள் கர்த்தருடைய குடும்பத்தில் உங்களைப் பலமுள்ளவர்களாகவும் பாதுகாப்புள்ளவர்களாகவும் கண்டறிவீர்கள். நீங்கள், கிறிஸ்து தமது மக்களுக்கு ஆயத்தம் செய்து வைத்துள்ள செல்வத்தன்மை பற்றி அறிவதற்கு வளருவீர்கள்" என்று பேதுரு ஆலோசனை கொடுத்தார்.

மனிதரால் தள்ளப்பட்டதாயினும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கல் *(2:4-8)*

கிறிஸ்தவர்கள், ''மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்" ஒன்றுடன் தங்களுக்குள்ள பொதுவான உறவின் மூலம், சார்ந்திருத்தலை அனுபவிக்கின்றனர். சபையின் இயல்பைக் கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள உதவுவதற்குப் புதிய ஏற்பாடு, மனதில் பதியும் பல சித்தரிப்புகளைப் பயன்படுத்துகிறது. அது [சபை] ஒரு சரீரமாக உள்ளது, அதன் பல்வேறு பாகங்கள், முழுமையின் நல் இருப்பிற்காக ஒன்றாகச் செயல்படுகின்றன (1 கொரிந்தியர் 12); அது தனது குடிமக்கள் ஒவ்வொருவரும் எல்லாருடைய நலத்திற்காகவும் பணிசெய்யும் ஒரு இராஜ்யமாக உள்ளது; மற்றும் அது பல்வேறு பாகங்கள் முழுமையைத் தாங்கி நிற்கும் ஒரு கட்டிடமாக உள்ளது. பேச்சின் எல்லா உருவங்களும் பின்வரும் விஷயங்களைப் பொதுவில் கொண்டுள்ளன: இவைகள், தேவனுடைய மக்கள் ஒருவருக்கொருவர் சார்ந்திருத்தலை வலியுறுத்துகின்றன (''அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிறபடியால்,'' எபேசியர் 4:25), மற்றும் இவைகள், கிறிஸ்தவர்கள் யாவரும் கிறிஸ்துவுடன் பகிர்ந்துகொள்ளும் உறவின் காரணமாக, ஒருவர் மற்றவருடன் இவ்வாறான உறவு கொண்டுள்ளனர் என்பதைத் தெளிவாக்குகின்றனர்.

ஜீவனுள்ள கற்கள்

சபையானது தேவனால் கட்டப்பட்ட மாபெரும் கட்டிடமாக உள்ளது என்ற கருத்தைப் பேதுரு பிறப்பித்தார் (2:4). கிறிஸ்து மூலைக்கல்லாக இருக்கிறார். கட்டிடத்தின் வடிவமைப்பும் வனப்புகளும் மாத்திரமல்ல, ஆனால் அதன் ஆதாரமும் இந்த மாபெரும் மூலைக்கல்லின்மீது அமர்ந்துள்ளது. பவுலும்கூட, கிறிஸ்துவைப் பற்றிப் பிரதான மூலைக்கல் என்று எழுதி, "அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது" என்றும் கூடுதலாகக் கூறினார் (எபேசியர் 2:21).

சபையானது, கிறிஸ்துவுக்குள் ஒன்றுகூட்டி இணைக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய வீடாக உள்ளது, ஆனால் அது ஆவிக்குரிய பலிகளைச் செலுத்தும் ஆசாரியக்கூட்டமாகவும் உள்ளது. "பலி" என்ற வார்த்தை ஒருவர் தம்மையே மறுத்தல் என்ற விஷயத்தை அர்த்தப்படுத்த வந்துள்ளது. யாரேனும் ஒருவர், "நான் எனது வீட்டிற்கு வண்ணம் தீட்டுவதற்காக எனது இரண்டு வார

விடுமுறையைத் தியாகம் செய்தேன்" என்று கூறலாம். 2:5ல், பலி என்பது தியாகம் என்ற கருத்து எதையும் கொண்டிருப்பதில்லை. இது சுயாதீன மாகச் செலுத்தப்படும் அளிப்பு ஒன்றை - பிதாவின் புகழ்ச்சிக்கும் மகிமைக்கும் செலுத்தப்படும் சந்தோஷத்தின் பலியை - குறிக்கிறது. மோசேயின் நியாயப்பிர மாணத்தின்கீழ், பலிகளைச் செலுத்த ஆசாரியர்கள் மாத்திரமே உரிமை கொண்டிருந்தனர். ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஆசாரியராக இருக்கிறார். கட்டிடம் என்பதே ஒரு பரிசுத்த ஆசாரியத்துவமாக உள்ளது. இந்த ஆசாரியர்கள் அளிக்கும் பலியானது அவர்கள் வாழ்வின் முழுமையான அளிப்பாக உள்ளது - அது கிறிஸ்துவின் சாயலில் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்ட வாழ்வாக உள்ளது.

சீயோனில் ஒரு கல்

பேதுரு தமது வாசகர்கள், கடந்த காலங்களில் இருந்த தேவனுடைய மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் தொடர்ச்சியைப் பற்றி அவர்களுக்கு நினைவூட்டினார். சீயோனில் தேவன் ஒரு கல்லை, பரீட்சிக்கப்பட்டதும் விலையேறப் பெற்றதுமான ஒரு கல்லை வைப்பது பற்றியும் (ஏசாயா 28:16), தேவன் தமது மக்களாயிருந்து கீழ்ப்படியாமற்போனவர்கள் இடறுதலுக்கு ஏதுவான கன்மலையாவது பற்றியும் (ஏசாயா 8:14) ஏசாயா தீர்க்கதரிசி உரைத்திருந்தார். யூதர்களால் கிறிஸ்து புறக்கணிக்கப்படுதல் பற்றிப் பவுல் கலந்துரையாடினார் மற்றும் அவர், பேதுரு 2:6-8ல் செய்தது போன்றே, ரோமர் 9:33ல் மேற்கூறப்பட்ட இரு வசனங்களையும் ஒன்றாக இணைத்தார். கிறிஸ்து, சீயோனில் தேவன் வைத்த மூலைக்கல் என்பதையும் கீழ்ப்படியாதவர்களுக்கு அவர் இடறுதலின் கல் என்பதையும் அப்போஸ்தலர்கள் புரிந்திருந்தனர்.

பின்வருவது முக்கியமான சத்தியமாக இருந்தது: புறக்கணிக்கப்பட்ட கல்லாகிய கிறிஸ்துவைத் தேவன் தமது கட்டிடத்திற்கு அஸ்திபாரக் கல்லாக ஏற்படுத்தியிருந்தார். சங்கீதம் 118:22 இந்தச் சிந்தனையை உண்டாக்கியது. கிறிஸ்து மத்தேயு 21:42ல் இவ்வசனத்தைக் குறிப்பிட்டார் (இ.வ. லூக்கா 20:17), மற்றும் பேதுரு தாமே எருசலேமின் ஆலோசனைச் சங்கத்தின் முன்பாக நிற்கையில் இதைக் குறிப்பிட்டிருந்தார் (நடபடிகள் 4:11).

இவையாவும், கிறிஸ்தவர் யாராக இருக்கிறார் என்பதை அவருக்கு [கிறிஸ்தவருக்கு] கூறுகின்றன. அவர் எல்லா யுகங்களிலும் தேவனுடைய உண்மையான மக்களுடன் ஒன்றாக இருக்கிறார். அவர் ஆபிரகாமின் பிள்ளையாக இருக்கிறார், ஏசாயாவின் நண்பராக இருக்கிறார், சங்கீதக்காரரின் மாணவராக இருக்கிறார். அவரது பாரம்பரியமானது ஐசுவரியமும் கண்ணியமும் கொண்டுள்ளது. "யூதனாயிருத்தல்" (அதாவது, தேவனால் தேர்ந்துகொள்ளப் பட்டவராயிருத்தல்) என்பது மாம்சப் பிரகாரமான பிறப்பில் அடங்கியிருப்ப தில்லை, ஆனால் அது ஆவிக்குரிய பாரம்பரியத்தில் ஒன்றிணைக்கப்பட்டிருத்தலில் அடங்கியுள்ளது. ரோமர் 2:28, 29ல் பவுல் பின்வருமாறு கூறியது மிகவும் நன்றாகவே உள்ளது: "ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது." தங்கள் பழைய வாழ்வின் வழி மற்றும் தங்களை விளக்கப்படுத்தியிருந்த பாரம்பரியங்கள்

ஆகியவற்றில் இருந்து தங்களைத் துண்டித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு, "இப்போது நீங்கள் ஒரு புதிய மக்களைச் சார்ந்திருக்கிறீர்கள். நீங்கள் புதிய பாரம்பரியங்கள் மற்றும் ஒரு புதிய ஆவிக்குரிய வம்ச வரலாறு ஆகியவற்றை அறிந்து மதிக்க வருவீர்கள்" என்று கூறினார்.

கிறிஸ்தவர்களுக்கு, இயேசு விலையேறப்பெற்ற மூலைக்கல்லாக, சத்தியத்தின் அஸ்திபாரமாக, இரட்சிப்பு மற்றும் வாழ்வு ஆகியவற்றின் ஆதாரமூலமாக இருந்தார். இருப்பினும் இதே கல்லானது, கீழ்ப்படியாதவர்களுக்கு இடறுதலின் கல்லாக இருந்தது. சிலர் கீழ்ப்படியாதவர்களாக இருந்தனர் என்பதில் நாம் திகைப்படைவதில்லை, ஆனால் 2:8ன் கடைசிப் பகுதி, சில கேள்விகளை எழுப்புகிறது. ''அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்'' என்று கூறியபோது பேதுரு எதை அர்த்தப்படுத்தினார்? KJV வேதாகமத்தின் வார்த்தையமைப்பு இதேபோன்றுள்ளது மற்றும் NIVயின் தரவமைப்பு சிறிது உதவி அளிக்கிறது. இந்த வார்த்தைகள், கீழ்ப்படியாதவர்கள் தங்கள் செயல்களில் தெரிவு எதையும் கொண்டிருக்கவில்லை, அதாவது அவர்கள் உள்ளாக என்னவாக இருந்தார்களோ, அந்தக் காரணத்தினாலும் அவர்கள் நித்தியத்திற்கும் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நியமிக்கப்பட்டு இருந்தார்களோ அந்தக் காரணத்தினாலும், அவர்கள் கிறிஸ்துவின் செய்தியைப் புறக்கணித்தனர் என்று அர்த்தப்படுத்துவதாக, நாம் எடுத்துக்கொள்ளலாம். இதற்கு மறுபுறத்தில் பேதுரு, உலகத்தின் தேவபக்தியற்ற தன்மை தரப்பட்டநிலையில் கலகம் என்பது மனிதகுலத்தைப் பண்புபடுத்துவதாக இருக்கையில், சிலர் கிறிஸ்துவைப் புறக்கணிக்கும் நிலையில் கட்டப்பட்டிருந்தனர் என்று கூறியிருக்கலாம். மனிதர்கள் தங்கள் சொந்தக் கீழ்ப்படிதலுக்கு பொறுப்பு ஏதேனும் கொண்டிருந்தால் (அப்படி இல்லையென்றால் பேதுரு இந்த நிருபத்தை ஏன் எழுதியிருக்க வேண்டும்?), நாம் பிந்திய விளக்கத்தையே தேர்ந்துகொண்டாக வேண்டும்.

ராஜரீகமான ஆசாரியக்கூட்டம், பரிசுத்த ஜாதி (2:9, 10)

''நீங்களோ, ... தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும். அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்'' என்று பேதுரு கூறினார் (2:9). ஒவ்வொரு சொற்றொடரும்,தேவன் தமது மக்களை வழிநடத்துதல், போஷித்தல் மற்றும் உருவாக்குதல் ஆகியவற்றை எதிரொலிக்கிறது. கிறிஸ்தவர்கள், பாரம்பரியம் மற்றும் வாக்குத்தத்தம் ஆகியவற்றின் நூற்றாண்டுகளினுடைய வாரிசுகளாக இருக்கின்றனர்.

தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி

தேவன் தமது நாமத்தைத் தரித்துக் கொள்ளும்படிக்கு உலகத்தின் எல்லாப் பழங்கால மக்களிலும் இருந்து இஸ்ரவேல் மக்களைத் தேர்ந்துகொண்டார். மோசே, ''வேறு எந்த மக்கள் உங்களைப் போன்று உள்ளனர்?'' என்று கேட்டிருந்தார் (உபாகமம் 4:32-34). இஸ்ரவேல் மக்கள் தங்களுக்குக் கிடைத்திருந்த ஆசீர்வாதங்களை மிகவும் அரிதாகவே புரிந்துகொள்ள முடிந்தது.

இந்த அண்டத்தின் ஒரே தேவன், தனிச்சிறப்பற்ற அடிமை மக்களைத் தமது சொந்தஜனமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டது எவ்வாறு முடிந்தது? அவர்களுக்கு இந்தப் பதில் மாத்திரம் தரப்பட்டது: "தேவன் உங்கள் மீது அன்புகூர்ந்ததால் மற்றும் உங்கள் பிதாக்களுக்கு அவர் வாக்குத்தத்தம் ஏற்படுத்தியிருந்ததால், அவர் உங்களைத் தேர்ந்துகொண்டார்'' (உபாகமம் 7:6-9). தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்டிருத்தல் என்ற கருத்தானது, இஸ்ரவேல் மக்கள் மனதில் பலமாகப் பதிய வைக்கப்பட்டிருந்தது. பழங்காலத்தில் இருந்த மற்ற எல்லா மக்களைக் காட்டிலும் அவர்கள் மாத்திரமே தங்கள் மார்க்கத்தை மற்றும் மக்கள் என்ற வகையில் தங்கள் அடையாளத்தை இன்றைய நாள்வரையிலும் பராமரித்துள்ளனர்.

தேவன் இன்றும் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களைக் கொண்டுள்ளார். அவர்கள் உலகத்தின் பல்வேறு நாடுகளில் வாழ்கின்றனர், மாறுபட்ட மொழிகளைப் பேசுகின்றனர் மற்றும் வித்தியாசப்பட்ட பாரம்பரியங்களைக் கைக்கொள்கின்றனர்; ஆனால் அவர்கள், கிறிஸ்து என்ற ஒரே மூலைக்கல்லின்மீது கட்டப்பட்டிருப்பதால், ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றனர். ஞானஸ்நானத்தில் மக்கள், தண்ணீர் மற்றும் ஆவியினால் மறுபடியும் பிறக்கும்போது, அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆகின்றனர். நாம் அவருக்கு என்று தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாகின்றோம்.

நாம், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாக இருக்கிறோம் என்பதை ஒருக்காலும் மறவாதிருப்போமாக. நாம் ஆசீர்வதிக்கப்பட்ட அந்தப் பெயரை ஒருக்காலும் கனவீனப்படுத்தாது இருப்போமாக. நாம், ஜீவனுள்ள கற்களாக நம்மை அவர் வைத்திருக்கிற பரிசுத்த ஆலயத்தின்மீது எப்போதும் அன்புகூர்ந்து அதை வளமூட்டுவோமாக.

ராஜரீகமான ஆசாரியக் கூட்டம்

2:9ல் ''ஆசாரியக்கூட்டம்'' என்பதற்கு முன்னால் உள்ள பெயர் உரிச்சொல், 2:5ல் உள்ள பெயர் உரிச்சொல்லில் இருந்து மாறுபட்டிருந்தாலும், சிந்தனை ஒன்றாகவே உள்ளது. முன்னதாகப் பேதுரு, கிறிஸ்தவர்களின் ஆசாரியத்துவத்தை விவரிக்க, "பரிசுத்த" என்ற வார்த்தையைப் பயன்படுத்தி யிருந்தார்; 2:9ல் அவர் "இராஜரீக" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், தேவனுடைய உள்வட்டார ஆலோசனைக்கு ஆசாரியர்கள் என்ற வகையில் வழியைப் பெற்றுள்ளனர். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ், ஆரோனின் சந்ததியார் மாத்திரம் ஆசாரியர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் பலிசெலுத்துதல் மற்றும் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்குதல் என்ற கனத்தைக் கொண்டிருந்தனர். ஆசாரியராக ஊழியம் செய்தல் என்பது உயர்ந்த சிலாக்கியமாக இருந்தது. கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு உறுதிப்படுத்திய ஆசீர்வாதம் மதிப்பிட இயலாததாக இருந்தது. கிறிஸ்துவுக்குள், ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஆசாரியராக இருக்கிறார், ஒவ்வொரு கிறிஸ்தவரும் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கவும் தேவனுக்குப் பிரியமான ஆவிக்குரிய பலிகளைச் செலுத்தவும் உரிமை கொண்டிருக்கிறார் என்று பேதுரு கூறினார்.

பரிசுத்த ஜாதி

பழங்கால உலகத்தின் ஆசியா மைனர் பகுதியில், குடிமக்கள் தங்கள்

நகரங்கள் மீது உணர்ந்த வலிவான பெருமைக்குச் சாட்சியளிக்க, பொதுக் கட்டிடங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் கல்வெட்டுகள் தப்பித்திருக் கின்றன. தங்கள் நகரங்கள் மீது வலிவான பற்றுறுதியுடன் இருந்தவர்கள் மேலான எருசலேம் மீது தேர்வுசெய்த அர்ப்பணிப்பை முன்னுரிமை செய்த கிறிஸ்தவர்கள்மீது கசப்புணர்வு கொண்டவர்கள் ஆனதில் வியப்பெதுவும் இல்லை. கிறிஸ்தவர்கள், இந்த உலகத்தில் தாங்கள் அந்நியரும் பரதேசிகளு மாக இருந்ததை ஒப்புக்கொண்டனர்; மனிதர்களின் நகரங்களில் குடி உரிமை என்பது மாறக்கூடியதாக உள்ளது. உலகக் காட்சியில், அரசுகள், நகரங்கள் மற்றும் அவற்றின் குடிமக்கள் வருகின்றனர் மற்றும் செல்கின்றனர். பேதுரு நிருபம் எழுதப்படுவதற்கு ஒருசில ஆண்டுகள் முன்னதாக எழுதப்பட்ட ஒரு புத்தகத்தில், வரலாற்றாளரான லிவி என்பவர், ரோமக்குடியரசைப் பற்றி, "நாம் நமது குற்றங்களையோ அல்லது அவற்றிற்கான சிகிச்சையையோ பொறுத்துக் கொள்ள இயலாத இடத்தை அடைந்திருக்கிறோம்'' என்று கூறியிருந்தார். நாடுகள் அந்த இடத்திற்கு வரும் வழியைக் கொண்டுள்ளன.

பேதுருவின் வாசகர்கள் தங்கள் பற்றுறுதியை எந்த நகரத்திற்கு அளித்திருந்தாலும், அவர்களிடம் பேதுரு, "முன்னே நீங்கள் தேவனு டைய ஜனங்களாயிருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்'' என்று கூறினார். எபேசியருக்குப் பவுல், "ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளு மாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,'' என்று எழுதினார் (எபேசியர் 2:19). கிறிஸ்துவை அறிய வந்துள்ளவருக்கு, தேவனுடைய இராஜ்யத்தில் குடியுரிமை என்பது மற்ற எல்லாப் பற்றுறுதியைக்காட்டிலும் மேலானதாக இருந்தது. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டிருத்தல் மற்றும் அவருடைய, குமாரனின் மரணத்தினால் அவருடைய ஜனங்களுடன் சேர்க்கப்படுதல் என்பதிலிருந்து சார்ந்திருத்தல் மற்றும் அடையாளப்படுத்துதல் ஆகியவை வருகின்றன.

முடிவுரை

நாம் இந்த உலகத்திற்குள் சென்று, இழந்துபோகப்பட்டுள்ளவர்களுக்குப் போதித்து, உலகத்திற்கு உப்பாகவும் புளித்த மாவாகவும் இருக்க வேண்டும். விரிவாக்கம் மற்றும் வெற்றி ஆகியவற்றிற்கு ஒரு நேரம் உள்ளது, மற்றும் எழுச் சியடைதல், நாம் யாராக இருக்கிறோம் என்று விளக்குதல் மற்றும் மக்களினத் திற்குத் தேவனுடைய மாபெரும் வடிவமைப்பில் ஒரு பாகம் என்ற வகையில் நம்மைக் கண்ணோக்குதல் ஆகியவற்றிற்கு ஒரு நேரம் உள்ளது. 2:1-10ல் பேதுரு, தமது வாசகர்கள் யாராக இருந்தனர் என்று அவர்கள் அறிந்திருப்பதை நிச்சயப்படுத்தினார். மீட்கப்பட்ட சமூகத்திடம் அவர்கள் சார்ந்திருத்தல் என்ற கருத்தை அவர்கள் இருதயங்களில் பதித்தார்.

கிறிஸ்தவர்கள் தங்களைத் தனிமையான தனிநபர்களாக இருப்பதாகப் புரிந்துகொள்வதை குறைத்து, பரிசுத்த ஆலயத்தைத் தாங்குகிற தூண்களாக இருப்பதாகப் புரிந்துகொள்வதை அதிகமாக்காத வரையில், சபையானது சுவிசேஷத்தின் செய்தியுடன் இந்த உலகத் திற்கு அணிவகுத்துச் செல்ல முடியாது. தேவனுடைய மக்கள் மத்தியில் சமூதாயக்

கருத்துணர்வும் பரஸ்பர பொறுப்பும் நிலவ வேண்டும் என்றால், சுவிசேஷ செய்தியானது, ஆசியா மைனர் பகுதியில் முதல் நூற்றாண்டின் கலாச்சாரத்தில் எதிர்த்து நின்று மாற்றியதைப் போலவே அது நமது கலாச்சாரத்திலும் செயல்பட வேண்டும்.

கிறிஸ்டோபர் லாஸ்க் என்பவர், மேற்கத்தியக் கலாச்சாரம் என்பது, "அந்த நேரத்திற்காக வாழுதல் என்பது மேலோங்கியுள்ள பெரும் இச்சையாக உள்ளது - இது உங்கள் முன்னோர்களுக்காக அல்லது பின்னோர்களுக்காக வாழுதல் என்றில்லாது, உங்களுக்காக வாழுதல் என்பதாகவே உள்ளது" என்று கவனித் திருக்கிறார்.[1] நமது காலத்தின் அடையாளக் குறியாக உள்ள, சுயத்தை மைய மாகக் கொண்ட தனிநபர்த்துவம், தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாகவும் பரிசுத்த ஜாதியாகவும் இருப்பதை உறுதிசெய்பவர்களால் வெற்றிகொள்ளப்பட முடியும். பின்வரும் கூற்றானது தேவனுடைய மக்களின் மனங்களிலும் அவர்களிலும் ஆழமாகப் பதியவைக்கப்பட்டிருக்கும்போது அவர்கள் வெற்றி கொள்வார்கள்: "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (2:5).

குறிப்பு

[1]Christopher Lasch, *The Culture of Narcissism* (New York: Warner Books, 1979), 30.

5

கீழ்ப்படிதல் உள்ளவர்களாயிருந்து தேவபக்தியுள்ள வாழ்வை வாழுங்கள் (1 பேதுரு 2:11–25)

கீழ்ப்படிந்திருத்தல் என்பது கிறிஸ்தவ வாழ்வின் அத்தியாவசியமான கூறாக உள்ளது.

கீழ்ப்படிந்திருத்தல் பற்றிப் பேதுரு தமது புத்திமதிகளைத் தொடங்கும் முன்னர், கீழ்ப்படிந்திருத்தலைத் தக்க கருத்துநோக்கில் இட உதவுவதற்கான மற்ற அறிவுறுத்துதல்களை அவர் கொடுத்தார்.

எவரொருவரும் குற்றம்சாட்டக் கூடாத அளவுக்குத் தேவபக்தியுள்ளவர்களாக வாழுங்கள் (2:11, 12)

பேதுரு ஏற்கனவே இருமுறை, மனிதரின் அழிந்து போகும் இயல்பு பற்றி மறைமுகமாய்க் குறிப்பிட்டிருந்தார். அவர் தமது வாசகர்களை, உண்மையான இளைப்பாறும் இடமின்றி, உண்மையான உடைமைத்துவம் எதுவுமின்றி இருக்கும் அந்நியர்கள் என்று விவரித்தார். திறவு வார்த்தைகள், "தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு" என்று உள்ளன (1:1). 1:17ல் அவர், "இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்" என்று கூடுதலாகக் கூறினார், மற்றும் 2:11ல், "பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி" என்று தொடர்ந்தார்.

முற்பிதாக்களின் பழைய ஏற்பாட்டு உலகம் பேதுருவின் சிந்தனைகளுக்குப் பங்களித்தது. அந்தக் காலத்தில் அந்நியர்கள் அஞ்சினர், மற்றும் மக்கள் அச்சமுற்றிருக்க ஒவ்வொரு காரணத்தையும் கொண்டிருந்தனர். அவர்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்படலாம் அல்லது அவர்கள் கொல்லப்படலாம், மற்றும் எவரொருவரும் எதிர்க்கமாட்டார்கள். பஞ்சம் ஆபிரகாமை எகிப்து செல்லும்படி கட்டாயப்படுத்தியபோது அவர், சாராளைத் தனது அந்தப்புரத்திற்குக் கொண்டு செல்ல விரும்பிய வல்லமையுள்ள அதிகாரி தம்மைக் கொன்றுபோடுவான் என்று பயந்திருந்தார். எகிப்தில் அவர் அந்நியராக இருந்தார், ஆனால் எகிப்தில் மட்டுமல்ல. அவரது மனைவி கானானில் இறந்தபோது, அவர் அந்த நாட்டில் நிரந்தரமாகத் தங்கியிருந்தவர்களின் அனுமதியின்றி அவளது உடலைப் புதைக்கக்கூட இயலாதிருந்தார். அவர், "நான் உங்களிடத்தில் அந்நியனும் பரதேசியுமாய் இருக்கிறேன். என்னிடத்திலிருக்கிற பிரேதம் என் கண்முன் இராதபடிக்கு நான் அதை அடக்கம்பண்ணுவதற்கு உங்களிடத்தில் எனக்குச் சொந்தமாக ஒரு கல்லறைப் பூமியைத் தரவேண்டும்" என்று விளக்கப்படுத்தினார் (ஆதியாகமம் 23:4).

இஸ்ரவேலின் தேசீய உணர்வானது, எகிப்தில் அந்நியர்களாக இருந்த அவர்களின் அனுபவத்தை நினைவுகூருதலை உள்ளடக்கியது. இந்த நினைவுகூருதல், அந்நியர்களை இரக்கத்துடன் நடத்த அவர்களுக்கு ஒரு ஊக்குவித்தலாக இருந்தது (லேவியராகமம் 19:34). உண்மையில் தேவன், தமது மக்கள் இந்த பூமியின்மீது இல்லத்தில் இருப்பது போன்று அமைதியாக ஒருக்காலும் இருக்க இயலாது என்பதை இஸ்ரவேல் மறக்க அனுமதிக்காதிருந்தார். லேவியராகமம் 25:23ல் தேவன், நிலமானது ஏன் அறுதியாக விற்கப்படக் கூடாது என்பதைப் பின்வருமாறு விளக்கினார்: "தேசம் என்னுடையதாயிருக்கிறபடியால், நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்கவேண்டாம்; நீங்கள் பரதேசிகளும் என்னிடத்தில் புறக்குடிகளுமாயிருக்கிறீர்கள்."

பேதுரு மற்றும் அவரது வாசகர்கள் வாழ்ந்த காலத்து உலகத்தைப் பற்றிய அறிவானது இந்த வார்த்தைகளுக்கு உயிரைக் கூட்டியது. கிரேக்க - ரோம உலகத்தில் ஒரு முக்கியமான நகரில் குடியுரிமை பெற்றிருத்தல் என்பது கணிச மான பெருமைக்குரிய விஷயமாயிருந்தது. கிலவுதியு லீசியாவிடம் பவுல், "நான் சிலிசியா நாட்டிலுள்ள கீர்த்திபெற்ற தர்சுபட்டணத்து யூதன்" என்று நினைவூட்டினார் (நடபடிகள் 21:39). கிரேக்க இலட்சியக் கொள்கையானது, ஒவ்வொரு குடிமகனும் பொது விஷயங்களில் தனது குரல் ஒலிக்கக் கொண்டிருத்தலை ஊக்குவித்தது. ஒருவருடைய நகரத்தில் உள்ள பெருமை யானது, அந்த நகரத்தில் வாழ்ந்த எல்லாருமோ அல்லது அதன் அண்மைச் சுற்றுப் புறங்களில் வாழ்ந்த எல்லாருமோ குடியுரிமை சிலாக்கியத்தைக் கொண்டிருந்தது இல்லை என்ற உண்மையினால் உயர்த்தப்படுகிறது. வந்துசெல்பவர்களும் குடியேறுபவர்களும் அந்த நகரில் வசிப்பவர்கள் என்று அழைக்கப்படுவ தில்லை அதன் எதிர்காலம்பற்றிய விஷயத்தில் குரல் கொடுக்க முடிவதும் இல்லை. அவர்கள் அந்நியர்களாகவும் அங்கே தங்கியிருக்கும் பரதேசிகளாகவும் இருந்தனர்.

ஒரு நபர், தமக்கு நிரந்தரமான பெயரைக் கொண்டிருக்க இயலாத வாழ்வின் வழிக்குத் தன்னை முதலீடாகச் செலுத்துதல் என்பது சிறிதளவே கருத்துணர்வை ஏற்படுத்துகிறது என்று பேதுரு வாதிட்டார். மற்றும் அவர், மாம்சத்தின் இச்சைகள் ஆவிக்குரியதும் நித்தியமானதுமான ஆத்துமாவுக்கு எதிராக "போர் செய்கின்றன" என்றும் சுட்டிக்காண்பித்தார் (2:11). தற்காலிகம் மற்றும் நித்தியம், தேய்ந்து போகும் விஷயம் மற்றும் மாற்றம் இல்லாத விஷயம் என்பவற்றிற்கு இடையில் வேறுபாடு உள்ளது. பேதுரு தமது வாசகர்களிடம், "உங்கள் உழைப்பை நித்தியத்திற்கு என்று பயன்படுத்துங்கள். உங்களுக்கு அழிவைத் தரக்கூடியவற்றில் இருந்து விலகியிருங்கள்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

இந்த உலகத்தின் சந்தோஷமே வாழ்வின் எல்லாமுமாக உள்ளது என்பது போன்று வாழுதல் மதியீனமானதாக உள்ளது. தேவபக்தியுள்ள வாழ்வை நாம் வாழ்வதற்கு மற்ற காரணங்களும் உள்ளன. கிறிஸ்தவர்கள் நல்ல வாழ்வை வாழும்போது தேவன் மகிமைப்படுத்தப்படுகிறார், மற்றும் அவரது நாமம் மகிமைப்படுத்தப் படவேண்டியதாக உள்ளது (2:12). மேலும், நற்தன்மை என்பது தேவபக்தியற்றவர்களின் வெறுப்பையும் எதிர்ப்பையும் வெளியாக்கும். அது புளித்த மாவு போன்று செயல்பட்டு மற்றவர்களைத் தனது வட்டாரத்திற்குள் இழுக்கும். கிறிஸ்தவர்கள் அந்நியர்களாக இருப்பதால் மாத்திரம் மாம்சத்தில்

இருந்து விடுதலையான வாழ்வை வாழும்படி பேதுரு அவர்களை வற்புறுத்த வில்லை. அந்தகாரமான உலகத்தில் இருந்து சத்தியம் நற்பண்பு என்ற ஆச்சரிய மான ஒளியினிடத்தில் வரவழைத்த தேவனுடனான அவர்களது உறவுமுறை மற்றும் பங்கு ஆகியவற்றின் நிமித்தமாகவும் அவர் அவ்வாறு வேண்டிக்கொண்டார்.

கிறிஸ்தவர்களின் நல்வாழ்வானது, இழந்து போகப்பட்டு இருப்பவர்களை இந்த வாழ்வில் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தும் என்ற கருத்து, 12ம் வசனத்தில் "சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி" என்ற சொற்றொடரின் சாத்தியமான இரு அர்த்தங்களில் ஒன்றாக உள்ளது. இழந்துபோகப்பட்டு இருப்பவர்கள் கிறிஸ்துவுக்குள் கொண்டுவரப்பட்டால், அவர்கள் இரட்சிக்கப்பட்டிருத்தலானது தேவனை மகிமைப்படுத்தும். துன்மார்க் கராயிருந்து, நம்பிக்கையின்றி பாவத்தில் இழந்துபோகப்பட்டு இருப்பவர்கள், காலங்களின் முடிவின்போது அவர்கள், தேவனுடைய நீதியையும் நல்ல வழிகளையும் அறிக்கையிடுவார்கள் என்பது சாத்தியமான இன்னொரு அர்த்த மாக உள்ளது. அவர்கள் இழந்துபோகப்பட்டு இருக்கும் நிலையேகூட தேவனு டைய மகிமைக்கு ஒரு சாட்சியமாக இருக்கும் என்று பேதுரு அர்த்தப்படுத்தி இருக்கலாம். எந்த வகையிலும், முடிவுக்காலம் ஒன்று வருகிறது என்றும் அவர்கள் கர்த்தருடைய வருகையைக் கண்ணெதிர்நோக்கி வாழவேண்டும் என்றும் பேதுரு தமது வாசகர்களுக்கு நினைவூட்டினார்.

நன்மை செய்து புத்தியீன மனிதருடைய அறியாமையை அடக்குங்கள் (2:13-17)

உலகத்திற்குப் பரிந்துரைப்பதற்குக் கிறிஸ்தவர்கள் ஒரு செய்தியையும் வாழ்வின் வழியையும் கொண்டுள்ளனர். உண்மையில் இவ்விரண்டும் பிரிக்க இயலாதவைகளாக உள்ளன, ஆனால் உலகம், கிறிஸ்தவர்களின் வாழ்வின் வழியைக் காட்டிலும் கிறிஸ்தவரின் செய்தியைப் புறக்கணித்தலைச் சுலப மான விஷயமாகக் காண்கிறது. பேதுரு தமது வாசகர்கள், கிறிஸ்தவ வாழ்வை வாழ்தலின் மூலம் புத்தியீன மனிதரின் பழிதூற்றுதலை அடக்குவதைக் கண்டார். இந்தப் பின்னணியை நாம் புரிந்து கொள்ளும்போது, "நீங்கள் மனுஷனுடைய கட்டளைகள் யாவற்றிற்கும்" கீழ்ப்படிய வேண்டும் (2:13) என்று பேதுரு வேண்டிக்கொண்டபோது பாடக்கருத்தில் சிறிது மாறுதல் ஏற்படுவதைக் காண்கிறோம். அதிகாரம் உள்ளவர்களுக்குக் கீழ்ப்படிதல் என்பதில் தேவபக்தியுள்ள வாழ்வு உள்ளடங்கியது. அரசாங்கங்கள் தங்கள் இயல்பிலேயே பற்றுறுதியை வற்புறுத்துகின்றன. நாம், கீழ்ப்படியச் சட்டங்கள், செய்வதற்குச் சடங்குகள், செலுத்துவதற்கு வரிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளோம். கிறிஸ்தவர்கள் அரசாங்கத்திற்குத் தங்கள் ஆதரவைத் தரவேண்டும் என்பது புதிய ஏற்பாட்டின் பொதுவான சாட்சியமாக உள்ளது. தேவனையா அல்லது மனி தரையா யாரைப் பின்பற்றுவது என்பதில் ஒன்றைத் தேர்ந்து கொள்ளும்படி சூழ்நிலையானது மிகவும் கடுமையாக வற்புறுத்தினால் மாத்திரம், நாம் தக்க வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியாது போகலாம். அதைப் போன்ற வேளை நடபடிகள் 5:29ல் பேதுருவுக்கும் யோவானுக்கும் வந்தது போன்றே நமக்கு வரலாம், ஆனால் அது அடிக்கடி வராது.

ரோமர் 13:1-7; 1 தீமோத்தேயு 2:1, 2 மற்றும் தீத்து 3:1 ஆகிய வசனங்கள், அதிகாரத்தில் உள்ளவர்களுக்காக ஜெபங்களையும் அவர்களிடத்தில் நற்சிந்தை கொண்டிருத்தலையும் பரிந்து உரைக்கின்றன. அதிகாரிகள், தவறாகப் பயன்படுத்துவதற்கான தங்கள் சாத்தியத்தைக் கொண்டிருந்த போதிலும் அவர்கள் “தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி”யாகவே நியமிக்கப்பட்டுள்ளனர் (2:14). அந்த இறுதிநிலைக்கு அவர்கள் கிறிஸ்தவர்களின் ஆதரவு, நற்சிந்தை மற்றும் ஜெபங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளனர்.

ரோமாபுரியின் ஆசியா மைனரில் இருந்த கிறிஸ்தவர்கள், அரசாங்கங்களுக்கு எதிராக இருத்தல் என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகியிருந்தனர். ஒரு இராஜாவைப் பற்றிக் குறிப்பிடுதல் என்பது கண்ணின் புருவங்களைத் தூக்கச் செய்யப் போது மானதாக இருந்தது. மெக்கதோனியாவில் ரோம அரசாங்கத்தின் இருக்கையான தெசலோனிக்கேயில், கிறிஸ்தவர்கள் பின்வரும் குற்றச்சாட்டை எதிர் கொண்டனர்: “இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி, இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்கள்” (நடபடிகள் 17:7). ஒருவேளை சில கிறிஸ்தவர்கள் உலகத்தின் வல்லமைகளுக்கு ஒரு வெறுப்பைச் செயல்விளக்கப்படுத்தியதன் மூலமாக சூழ்நிலையை உக்கிர மாக்கி இருந்திருக்கலாம்.

விஷயங்கள் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்கும்போது, கிறிஸ்தவர்கள் பெரிய மற்றும் சிறிய விஷயங்களில், தக்கவகையில் ஏற்படுத்தப்பட்ட சட்டத் திற்குக் கீழ்ப்படிகின்றனர். அவர்கள் அதன்மீது நியாயத் தீர்ப்பைக் கூறுவதில்லை; நல்ல குடிமகன்கள் என்ற வகையில், அவர்கள் அதற்குக் கீழ்ப்படிகின்றனர். வேறுவிதமாகச் செய்தல் என்பது கர்த்தருக்கும் அவரது மக்களுக்கும் தேவையற்ற பழித்துரை மற்றும் விமர்சனங்களைத் திறந்து விடுகிறது. 2:13ல் பேதுரு “கர்த்தர்நிமித்தம் கீழ்ப்படியுங்கள்” என்று கூறினார்.

கீழ்ப்படிதலின் சந்தர்ப்பப் பொருளில் 2:16ல் பேதுரு சுயாதீனத்தைக் குறிப்பிட்டது முதல் பார்வையில் வினோதமானதாக உள்ளது: “சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் ... இருங்கள்.” இந்த வார்த்தைகள், கீழ்ப்படிதல் என்பது ஏற்புடைய தனது வட்டாரத்திற்குள், சுயாதீனத்தைத் தாக்குவதில்லை என்ற கருத்தைத் தெரிவிக்கின்றன. உண்மையில், அப்போதைய நேரத்தில் திருப்தி யடைதலுக்கு அப்பால் கண்ணோக்க மறுக்கும் பொறுப்பற்ற சுய இச்சையின் வகையொன்றே சுயாதீனத்தின் மாபெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

புதிய ஏற்பாட்டில், சுயாதீனம் என்பது எப்போதுமே, சட்டம் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின் சந்தர்ப்பப் பொருளுக்குள் ஒரு உயரிய கொள்கையாக அமைக்கப்பட்டுள்ளது.யாக்கோபு, “சுயாதீனப் பிரமாணம்” என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார் (யாக்கோபு 1:25; 2:12; இங்கு “சுயாதீனம்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையே 1 பேதுரு 2:16லும் உள்ளது). சட்டத்தின் சந்தர்ப்பப் பொருளிலேயே ஒரு நபர் சுயாதீனமாக இருக்கமுடியம் என்று கூறுதல் மிகையானதல்ல. தேவனு டைய மக்கள் தங்கள் சுயாதீனத்தைக் கட்டுப்பாட்டுடனும் ஆரோக்கியமான நியாயத்தீர்ப்புடனும் பயன்படுத்தும்படி அழைக்கப்பட்டுள்ளனர். ஒழுக்கவீனம் மற்றும் சுயநலம் ஆகியவை கிறிஸ்தவ சுயாதீனத்தின் பெயரில் ஒருக்காலும் நியாயப்படுத்தப்படக் கூடாது. உண்மையில் கிறிஸ்தவர் தேவனுக்கு அடிமை

யாக இருக்கிறார் (2:16).

தேவனுக்கு அடிமையாக இருத்தல் என்பது சுயாதீனமாக இருத்தலாகிறது! மற்ற சேவித்தல்கள் இணையான ஆசீர்வாதத்தை அளிப்பதில்லை. இரக்கமற்ற வகையில் பாவத்திற்கு அடிமையாக இருத்தல் என்பது நம்ப இயலாத சக்தியுடன் நம்மை அடிமைத்தனத்தின் இல்லத்திற்குக் கொண்டுவர முடியும். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு நான், வெற்றிகொள்ளும் புன்னகையுடனிருந்த அகமகிழ்வான இளம் பெண் ஒருத்தியைப் பற்றி அறிந்தேன். சில காலமாக நான் அவளைக் காணாதிருந்தேன், பின்பு அவள் எனது வீட்டின் அருகே இருந்த நடைபாதையில் நடந்து சென்றபோது அவளைக் கவனித்தேன். அவள் முகம் சுருக்கங்கள் விழுந்தவளாக முதியவளாகக் காணப்பட்டாள். அவளது அடிவைப்பில் புத்துணர்வு இல்லாதிருந்தது; அவளது முகத்தில் இருந்த புன்னகை மறைந்து போயிருந்தது. வாழ்வானது அவளது இளமைப்பிராய முரட்டுத்தனத்தை மன்னியாதிருந்தது. அவள் போதைப்பொருட்களைப் பயன்படுத்துதல் என்பதையும் அவற்றுடன் சென்ற எல்லாவற்றையும் முயற்சிசெய்திருந்தாள். அந்த வாழ்வின் அடிமைத்தளையானது வாழ்வதற்கான அவளது உற்சாகத்தை அவளிடமிருந்து களவு செய்து அவளை உற்சாகம் வடிந்தவளாகவும் கசப்பானவளாகவும் விட்டுவைத்திருந்தது. பாவத்தின் அடிமைத்தனம் என்பது ஈடுசெய்யக் கூடாததாக உள்ளது.

சுயாதீனமான வாழ்வும் மகிழ்ச்சியும், 2:17ல் பட்டியலிடப்பட்டுள்ள நான்கு கட்டளைகளின் சந்தர்ப்பப் பொருளில் வருகின்றன: "எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்." NIV *வேதாகமம், கிரேக்க வேதவசனத்தில் உள்ள மறைவான வேறுபாடு ஒன்றைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறது: "ஒவ்வொருவருக்கும் உரிய மரியாதையைக் காண்பியுங்கள்: விசுவாசிகளின் சகோதரத்துவத்தின்மீது அன்புகூருங்கள், தேவனுக்குப் பயந்திருங்கள், இராஜாவைக் கனம்பண்ணுங்கள்."* NIV*வேதாகமத்தில் அரைப்புள்ளிக்கு முன்னால் உள்ள சொற்றொடர்,* KJV*யின் "எல்லாரையும் கனம்பண்ணுங்கள்" என்பதற்குச் சமமானதாக உள்ளது.* NIV*வேதாகமம், கடைசி மூன்று கட்டளைகளை, முதல் சொற்றொடரின் விளக்கமாகவும் விரிவாக்கமாகவும் முன்னிறுத்துகிறது. வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், நாம் சகோதரத்துவத்தில் அன்புகூருதல், தேவனுக்குப் பயந்திருத்தல் மற்றும் இராஜாவைக் கனம்பண்ணுதல் ஆகியவற்றின் மூலமாக எல்லா மனிதர்களையும் கனம்பண்ணுகிறோம். கிறிஸ்தவக் குடும்பத்தின்மீது அன்புகூருதல், தேவனுக்குப் பயந்திருத்தல் மற்றும் அரசாங்கத்தைக் கனம்பண்ணுதல் ஆகியவை நமக்குத் தகுதியானதும் தேவபக்தியுடையதுமாக உள்ளது.*

கர்த்தருடைய உதாரணத்தைக் கண்ணோக்குங்கள் (2:18-25)

பேதுரு, கீழ்ப்படிதல் பற்றிய தமது போதனையை இன்னும் முழுமையாக முடிக்கவில்லை. ஒவ்வொரு கிறிஸ்தவரும் தேவனுக்கு அடிமையாக இருக்கிறோம், ஆனால் பேதுருவின் வாசகர்களில் சிலர், சரீரப்பிரகாரமான கருத்தின்படி அடிமைகளாக இருந்தனர் (2:18). அவர்களில் சிலர், கால்நடைகள்

சொந்தமாக்கப்படுவது போன்று உண்மையில் [யாரோ ஒருவருக்கு] சொந்தமாக்கப்பட்டு இருந்தனர். அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிந்திருத்தல் என்பது ஒரு விஷயமாக உள்ளது; உங்களைத் தனது உடைமையாக்கிக் கொண்டுள்ள உணர்வற்ற எஜமானர் ஒருவருக்குக் கீழ்ப்படிந்திருத்தல் என்பது இன்னொரு விஷயமாக உள்ளது. நல்ல மற்றும் இரக்கம் நிறைந்த தேவன், தமது சுயாதீனமான மக்கள், இன்னொருவரின் உடைமையாக இருத்தலினால் மனிதத்தன்மையற்ற வகையில் நடத்தப்படுவதை எவ்வாறு ஒப்புக்கொள்ள இயலும்?

பேதுருவின் செய்தி பின்வருமாறு உள்ளது: சுயாதீனமும் கண்ணியமும் புறம்பான சூழ்நிலைகளின்மீது அடிப்படை கொண்டிருப்பதில்லை. செல்வந்தரும் அதிகாரம் நிறைந்தவருமான ஒரு மனிதர், மிகவும் பரிதாபத்திற்குரிய அடிமையாக இருக்கலாம்; அதிகாரம் அல்லது செல்வம் இல்லாத அடிமை, வாழ்வின் மிகவும் மகிழ்பொங்கும் மற்றும் [பிறர் கண்டு பொறாமைப்படக்கூடிய] ஆசீர்வாதங்களை அனுபவிக்கலாம். அடிமையானவர் தமது கீழ்ப்படிதலினால், தேவனை மகிமைப்படுத்தி அவர் அளிக்கிற ஆசீர்வாதங்களை உய்த்துணரக்கூடும்.

ஒருசில மக்கள், தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று பிறர் விரும்புகின்றனரோ, அது அவர்களின் சொந்த மனச்சாய்வுக்கு ஒத்திருக்கும் வரையில் அதைச் செய்வதில் சிரமம் கொண்டுள்ளனர். ஒரு அடிமை, ஒரு நல்ல எஜமானருக்குக் கீழ்ப்படிவதில் சிறிதளவே பிரச்சனை கொண்டிருப்பார். ஒரு நபர் கொண்டிருக்கக்கூடிய எவ்விதமான பாராட்டும் எவ்விதமான ஆசீர்வதிக்கப்பட்ட நிலையும், கீழ்ப்படிதலுக்கு வேதனை நிறைந்த மற்றும் சிறுமைப்படுத்தப்பட்ட நிலையில் கீழ்ப்படிவதன் மூலமாக வரும் என்று பேதுரு கூறினார் (2:19). கிறிஸ்தவரின் இயல்பான மனச்சாய்வுகள் அவரை ஒரு திசையில் வழிநடத்தும்போது, கிறிஸ்துவில் அவர் கொண்டுள்ள விசுவாசம் அவரை இன்னொரு திசையில் வழிநடத்துவதில்தான், கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் மன உறுதி ஆகியவற்றிற்கு உண்மையான சோதனை வருகிறது. கிறிஸ்தவ அடிமைகள், முரட்டுகுணமுள்ள எஜமானர்களுக்கும் கூட கீழ்ப்படிந்திருக்க வேண்டும், உபத்திரவம் வரவேண்டும் என்றால், தவறானதைச் செய்வதற்காக அல்ல, ஆனால் சரியானதைச் செய்ததற்காக வரவேண்டும் என்று பேதுரு வருந்திக் கேட்டுக்கொண்டார்.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், தேவனுக்கு எதிரான அவமதிப்பு என்ற வகையில் அடிமைத் தனத்தைக் கண்டனம் பண்ணவில்லை என்பதை வினோதமானதாகக் கண்டுள்ளனர். அடிமைகளுக்குப் பவுலின் அறிவுறுத்துதல் பேதுருவின் அறிவுறுத்துதலைப் போன்றதாகவே இருந்தது (எபேசியர் 6:5-8; கொலோசெயர் 3:22-25; 1 தீமோத்தேயு 6:1, 2). பேதுருவோ அல்லது பவுலோ, அடிமைத்தனத்தைக் கண்டனம் பண்ணவில்லை என்பது, சுவிசேஷம் மனிதரின் புறம்பான சூழ்நிலைகளை அல்ல, ஆனால் உள்ளான வாழ்வை மாற்றுதலையே நோக்கங்கொண்டிருந்தது என்பதற்குச் சான்றாக உள்ளது. புத்தம்புதிய கருவி, நவீன வாகனம், மிகவும் ஆடம்பரமான வீடு மற்றும் மிகநேர்த்தியான உடைகள் ஆகியவற்றிற்காக மாத்திரம் வாழும் நபர், பரிதாபத்திற்கு உரியவராக இருக்கிறார். தமது துன்பத்தை, அவரது வேலை, அவரது திருமணம் அல்லது அவரது நன்பர்களின்மேல் பழிசுமத்தும் ஒருவர் பரிதாபத்திற்கு உரியவராக இருக்கிறார். அப்படிப்பட்டவர், புறம்பானவைகள் சந்தோஷத்திற்குத்

திறவுகோலாக உள்ளது என்ற பொய்யை விசுவாசித்திருக்கிறார்.

அடிமைத்தனத்தின் உபத்திரவம் அடிமையின் சகிப்புத் தன்மையைச் சோதித்தபோது, அடிமையானவர் கிறிஸ்துவுக்கு நேர்ந்த உபத்திரவத்தை நினைவுகூர்ந்தார் (2:21). கர்த்தர் கனமான சுமைகளினால் தோல்வியடைந்து இருந்ததில்லை. அடிமையும் அவ்வாறு தோல்வியடையமாட்டார். உண்மையில் கிறிஸ்து, அடிமைகள் உட்பட எல்லா மனிதர்களின் பாவங்களுக்காகவும் உபத்திரவம் அடைந்தார். தேவனுக்கு மகிமையைச் செலுத்துகையில் உபத்திரவத்தை எவ்வாறு சகிப்பது என்பதற்குக் கர்த்தர் உதாரணத்தை முன்வைத்திருந்தார். அவர் வையப்பட்டபோது, சாபத்திற்குப் பதில் சாபம்கூற அவர் தமது வாயைத் திறக்கவில்லை. அவர் மனிதர்களின் அநீதியை, எல்லாரையும் நியாயந்தீர்க்கப்போகிற ஒருவரின் கரத்தில் ஒப்புவித்திருந்தார் (2:22, 23).

அடிமைத்தனத்தின் சந்தர்ப்பப் பொருளில், பேதுரு முதலில் கிறிஸ்துவின் உபத்திரவத்தைக் குறிப்பிட்டார், ஆனால் சிலுவையில் அவரது மரணம், அடிமையானவர் இயேசுவின் அடிச்சுவடுகளில் பின்பற்றக்கூடிய உதாரணத்திற்கு மிகவும் அப்பால் விரிவான மறைகருத்துக்களைக் கொண்டுள்ளது. இயேசு, ஏசாயா 53:9ன், உபத்திரவப்படும், பாவமற்ற ஊழியக்காரராக இருந்தார். அவர் பாவம் எதுவும் செய்யவில்லை. அவரது வாயில் வஞ்சனை எதுவும் காணப்படவில்லை. ஏசாயா 53ன் ஆவி 2:11-25ல் சுவாசிக்கிறது. எத்தியோப்பிய மந்திரிக்குப் பிலிப்பு போதித்தபோது, அந்த மந்திரி, பழைய ஏற்பாட்டின் அந்த மாபெரும் வசனப்பகுதியையே வாசித்துக் கொண்டிருந்தார் (நடபடிகள் 8:32, 33).

தேவனுக்குச் சொந்தமல்லாத மக்களின் பாவங்களுக்காகத் தேவனுடைய குமாரன் சிலுவையில் மரித்தார் என்பதே, கிறிஸ்தவர்களின் ஒவ்வொரு சந்ததியும் தங்கள் காலத்தின் உலகங்களுக்குக் கொண்டு வரும்படி, கர்த்தர் ஒப்புவித்திருக்கும் சுவிசேஷமாக உள்ளது. நமது பாவங்களுக்காகக் கிரயம் செலுத்தவே அவருக்கு உபத்திரவம் நேரிட்டது. தேவ ஆட்டுக்குட்டியானவரில் கொள்ளும் விசுவாசத்தினால், ஒவ்வொரு மனிதரின் பாவங்களும் துடைத்துச் சுத்தமாக்கப்பட முடியும்: "இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" (எபிரெயர் 10:10); "அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசாயா 53:5).

நமது பாவங்களை, இயேசு "சிலுவையின்மேல்" சுமந்தார் என்று பேதுரு கூறினார் (2:24). கிறிஸ்துவின் சிலுவை NIV வேதாகமத்தில் "மரம்" என்று குறிப்பிடப்பட வேண்டியிருந்தது என்பது ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. வேறு இரு சந்தர்ப்பங்களில் அப்போஸ்தலருடைய நடபடிகளில் முதலில் நடபடிகள் 5:30லும் பின்பு நடபடிகள் 10:39லும் இதே சொற்றொடரைப் பேதுரு, பயன்படுத்தினார். பிசீதியாவில் இருந்த அந்தியோக்கியாவின் ஜெப ஆலயக்கூடுகைக்கு முன்னர் பவுல் தமது பிரசங்கத்தில் இதே சொற்றொடரைப் பயன்படுத்தினார் (நடபடிகள் 13:29). இந்தச் சொல்விளக்கத்திற்கான திறவுகோல், பவுல் உபாகமம் 21:23ஐச் சுட்டிக்காண்பித்த இடமான கலாத்தியர் 3:13ல் காணப்படுகிறது என்பது சாத்தியமானதாக உள்ளது: "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்." கிறிஸ்து நமக்காகச் சாபமானதன் மூலமாக, நியாயப்பிரமாணத்தின் சாபத்தில் இருந்து நம்மை விடுவித்தார் என்று பவுல் அறிவித்தார்.

முடிவுரை

கிறிஸ்தவர்கள், தேவபக்தியும் கீழ்ப்படிதலும் உள்ள வாழ்வை வாழவேண்டும் என்ற பேதுருவின் வேண்டுகோள், பல தலைப்புகளை உள்ளடக்கிற்று. அவர்கள் உலகத்தில் முன்பு, வாழ்ந்திருந்த தேவனைவிட்டு பிரிந்திருந்த நிலையை அவர்களுக்கு அவர் நினைவூட்டினார். சுமைகளைக் காட்டிலும், எதிர்ப்புக்களும் பழிகூறுதல்களும் அதிகம் அறைகூவல்களாகக் காணப்பட வேண்டியவைகளாக இருந்தன. சிலுவையின் விரோதிகள் திகைப்படையும் வகையிலான நல்ல வாழ்வைக் கிறிஸ்தவர்கள் வாழவேண்டியிருந்தது. ரோமர் 12:19ன் வார்த்தைகள் இல்லாவிட்டாலும், அதன் உணர்வானது எபிரெயர் 10:30ல் காணப்படுகிறது: "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லு கிறார்."

கீழ்ப்படிதலுடன் இருத்தல் என்பது, மனிதர்களின் அரசாங்கங்கள் மற்றும் அதிகாரங்கள் ஆகியவற்றிற்கு இணக்கமாயிருத்தல் என்று அர்த்தப்படுகிறது. கிறிஸ்தவர் ஒருவர், ஒரு தனிநபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ பணிசெய்தால், அவர் மிகச்சிறந்த முயற்சிகளைத் தரவேண்டும் என்று கூறுவதற்கு நாம் இந்த ஒப்பீட்டை மிகவும் விரிவாக்க அவசியமில்லை. மனிதரின் அதிகாரத்திற்குக் கிறிஸ்தவரின் கீழ்ப்படிதலானது, தேவனுக்கு அவர் கீழ்ப்படிதல் என்ற விஷயத் தின் ஒன்றிணைந்த அம்சமாக உள்ளது. அவரது உள்ளார்ந்த அன்புடனான முயற்சிகள் மற்றும் அவரது தாழ்மையுள்ள ஆவி ஆகியவற்றின் மூலமாகத் தேவனுடைய நாமம் பெரிதாக்கப்படுகிறது.

துன்புறுதல் என்பது 1 பேதுரு நிருபத்தின் பின்னணியில் இருந்து ஒருக்காலும் தொலைவில் இருந்ததில்லை, மற்றும் அது 2:18-25ல் திரும்பவும் உதிக்கிறது, இந்தவேளையில் அது அடிமைத் தளையின் சந்தர்ப்பப் பொருளில் வருகிறது. எல்லா விஷயங்களிலும் போலவே, உபத்திரவத்தை வெற்றிகொள்வதிலும் கிறிஸ்து உதாரணமாக இருக்கிறார். அவரது உபத்திரவம் அவரது சொந்த பாவத்திற்காக அல்ல ஆனால், எல்லா மனிதர்களின் பாவங்களுக்குமானதாக இருந்தது.

அதிக கண்ணியமான மற்றும் பரிசுத்தமான வாழ்விற்கான ஏவுதலைக் கண்டறியாமல் 2:11-25ஐ யாரால் வாசிக்க முடியும்?

6

தகுதியான வகையில் உங்களை அலங்கரித்துக்கொண்டு காருண்யமாயிருங்கள் (1 பேதுரு 3:1–7)

இந்தத் தலைமுறையின் பாலினங்களுக்கு இடையில் சமத்துவத்திற்கான தீவிரமான செயல் முனைப்புடன் கூடிய மேம்பாட்டுச் செயலில், பெண்கள் வெற்றி கொண்டவர்களாக இருக்கையில் அவர்கள் இழப்பவர்களாகின்றனர் என்பது எவ்வளவு வினோதமான முரண்பாடாக உள்ளது! பாலினங்கள் "சமான மாக" இருப்பதில்லை. பெண்கள் குழந்தைகளைப் பெற்றுக்கொள்கின்றனர் மற்றும் ஆண்கள் யுத்தத்திற்குச் செல்கின்றனர் என்பது எப்போதுமே உண்மை யாக இருந்துள்ளது. சமத்துவம் என்ற பெயரில் நாம் பெண்களை யுத்தத் திற்கு அனுப்பலாம், ஆனால் ஆண்கள் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். இயல்பான மற்றும் சமூகரீதியான வேறுபாடுகள் எப்போதுமே ஆண்கள் அல்லது பெண்களுக்குச் சாதகமாகச் செயல்படுவதில்லை. உதாரண மாக, ஆண்கள், பெண்களைக் காட்டிலும் இளம் வயதிலேயே இறங்கின்றனர் என்பது உளவியல் ரீதியான அழுத்தமாக அல்லது உளவியல் ரீதியான பலவீன மாக உள்ளது. ஆண்கள் மற்றும் பெண்கள் மீது சமூகமும் இயற்கையும் மாறுபட்ட மற்றும் சமானமற்ற வகையில் சுமைகளைச் சுமத்துகிறது. இந்த சமானமற்ற தன்மைகளை, "பாலினங்களுக்கு இடையிலான யுத்தத்திற்கு" அடிப்படையாக்குதல் என்பது மதியீனமானதாகும்.

ஆண்கள் என்ற வகையில் ஆண்கள் சுமக்க வேண்டிய பாரங்களையோ அல்லது பெண்கள் என்ற வகையில் பெண்கள் சுமக்க வேண்டிய பாரங்களையோ, சட்டப்பூர்வமான அல்லது பொதுவான விழிப்புணர்வு எதுவும் குறைத்து விடாது. ஒவ்வொருவரும் மற்றவருடனான உறவின் முறை மற்றும் சுற்றிலுமுள்ள உலகத்துடனான உறவுமுறை ஆகியவற்றின் தொடர்பாகச் செய்ய வேண்டிய அவரவருக்குரிய பணிப்பங்கு உள்ளது. உணர்வுரீதியான மற்றும் உளவியல் ரீதியான வேறுபாடுகளை, பரஸ்பரம் மதித்தல் என்ற சந்தர்ப்பப் பொருளில் ஏற்றுக்கொள்ளுதல் என்பதே, பேதுரு தமது வாசகர்கள் பின்பற்ற வேண்டிய வழியென்று வற்புறுத்தும் விஷயமாக உள்ளது.

சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாக உள்ளான அழகு (3:1-4)

முதலில் பேதுரு 3:1-6ல் பெண்களிடம் பேசினார், மற்றும் பின்பு 3:7ல்

அவர் ஆண்களிடம் பேசினார். அளவில் சமானமின்மை என்பது தெளிவாகத் தெரிகிறது, ஆனால் சமானமின்மையால் சாதகமான விளைவுகளைப் பெற்றது யார் என்பதைத் தீர்மானித்தல் அவ்வளவு சுலபமானதல்ல. தேவனுடைய கட்டளைகள் கண்டிப்பானதும் சுமையானதுமானவை என்று நாம் கருதச் சாய்ந்தால், பேதுருவின் குறிப்புகள் ஆண்களுக்குச் சாதமானவையாக உள்ளன என்று தப்பெண்ணம் கொள்வதையே நாம் அனேகமாக முடிவுசெய்வோம். இன்னொரு புறத்தில் நாம், வேதவாக்கியங்கள் யாருக்கு உரைக்கப்பட்டனவோ அவர்களின் பிரயோஜனத்திற்காகப் பரிசுத்த ஆவியானவரால் அளிக்கப்பட்ட தெய்வீக ஆலோசனை என்று நாம் ஒப்புக்கொண்டால், பேதுரு பெண்களுக்கு ஆதரவாகப் பேசினார் என்று நாம் முடிவு செய்யலாம். பெண்களுக்கான அவரது அறிவுறுத்துதல் நான்கு தலைப்புகளைக் குறிப்பதாகத் தொகுத்துரைக்கப்படலாம்.

கீழ்ப்படிதல்

பேதுரு, “அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்” என்று தொடங்கினார் (3:1). முன்னதாகப் பேதுரு, இந்தக் கிறிஸ்தவர்கள் மனித அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டிருந்தார் (2:13), மற்றும் ஊழியக்காரர்கள் தங்கள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்றும் அவர் வேண்டிக் கேட்டுக்கொண்டிருந்தார் (2:18). “அந்தப்படி” என்ற சொற்றொடர், முந்திய வசனங்களுக்கும் மனைவியர்களுக்கான இந்தப் புத்திமதிக்கும் இடையில் உள்ள சிந்தனை வளர்வை நோக்கி நமது கவனத்தை ஈர்க்கிறது. கீழ்ப்படிதல் என்பது வாழ்வின் பாகமாக உள்ளது. எந்த ஒரு செயலாவது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களின் முயற்சிகளை ஈடுபடுத்துகிறது என்றால், அதற்கு யாரேனும் ஒருவர் பொறுப்பாளியாக இருக்க வேண்டும். அதிகாரத்தில் உள்ளவர் மிகச்சிறந்த மனிதராக இருக்கலாம் அல்லது அவ்வாறு இல்லாதிருக்கலாம், ஆனால் இயக்கமின்றிச் செயல்படுவதைக் காட்டிலும் இரண்டாவது அல்லது மூன்றாவது மிகச்சிறந்த நபர் பொறுப்பில் இருத்தல் என்பது மிகவும் சிறந்ததாக உள்ளது.

கீழ்ப்படிதல் இல்லாத நிலையில், அதிகாரம் நிலவாது. பேதுருவின் வார்த்தைகள், மனைவி கீழ்ப்படிதலுடன் இருப்பதா இல்லையா என்பதைத் தேர்ந்து கொள்ளும் சில வாய்ப்பைக் கொண்டிருந்தார் என்று யூகிக்கிறது. மனைவிக்கு இவ்விதமான விருப்பத் தேர்வு இல்லாத ஒருசில இல்லங்களை நான் அறிந்திருக்கிறேன். அவள், ஒன்று தனது கணவருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும், அல்லது அவரை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்ற நிலை உள்ளது. கீழ்ப்படிதல் என்பதைத் தேர்வுசெய்துகொள்ளும் மனைவியை உடைய கணவர் ஆசீர்வதிக்கப்பட்டவராக இருக்கிறார். “கீழ்ப்படிதலுடன் இருங்கள்” என்று மனைவியரிடத்தில் பேதுரு கூறியபோது, அவர் “உங்கள் குடும்பத்தில் உங்கள் கணவர் தலைவராக இருக்க அனுமதியுங்கள்” என்றே கூறினார். கிறிஸ்தவ ஆணின் மனைவி, அவர் அந்தக் குடும்பத்திற்குத் தலையாக இருக்கக் கூடாது என்று தீர்மானித்தால், அவர் தமது குடும்பத்தின் தலைவராக இருத்தலைச் சிரமமானதாகக் காண்பார்.

அரசாங்கங்களுக்கோ, எஜமானர்களுக்கோ அல்லது கணவர்களுக்கோ, யாருக்குக் கீழ்ப்படிதல் என்றாலும், அது விஷயங்களின் ஒருங்கமைவில்

தரப்பட்ட ஒரு பணிப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல் என்பதாக உள்ளது. இது, ஒருவரின் தகுதி, புத்திகூர்மை அல்லது திறன் ஆகியவற்றின் மதிப்பிடுதலாக இருப்பதற்குத் தொலைவில் உள்ளது. ஒரு மனைவி தனது கணவருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று பேதுரு கூறினார். கணவர் கிறிஸ்தவராக இருக்கவில்லை என்பது இவ்விடத்தில் யூகமாக இருந்தது. கிறிஸ்தவர்களின் நற்செயல்களும் கீழ்ப்படிதல் உள்ள நடத்தையும், புறஜாதியார் தேவனை மகிமைப்படுத்தக் காரணமாகவும் (2:12) புத்தியீன மனிதர்களின் அறியாமையை அடக்கவும் (2:15) காரணமாக இருக்கும், எனவே மனைவிகளின் கீழ்ப்படிதல் உள்ள நடத்தையானது அவர்கள் தங்கள் கணவர்களைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்துவதில் மாபெரும் செல்வாக்கைக் கொண்டிருக்கும். தேவனுடைய அன்பு மற்றும் கிருபை ஆகியவற்றின் செய்திக்கு ஆண்களைக் காட்டிலும் பெண்கள் தங்கள் சிந்தைகளை அதிகமாய்த் திறக்கின்றனர் என்பது, இன்றைய நாட்களில் உள்ளது போன்றே பேதுரு நிருபத்தை முதன்முதலாக வாசித்தவர்களின் நாட்களிலும் உண்மையாக இருந்தது என்பது தெளிவு. பல ஆண்கள் தங்கள் மனைவியர்களின் கீழ்ப்படிதல் உள்ள நடக்கையில் கிறிஸ்தவ வாழ்வின் கனிகளைக் கண்ட காரணத்தினால், பரலோகத்தில் நித்தியத்தை மகிழ்வுடன் அனுபவிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

தூய்மை

மனைவியர் தங்கள் கணவர்கள் மீது கொண்டுள்ள செல்வாக்கு 3:1ல் விவரிக்கப்படுகிறது: “பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து.” இந்த மனைவியர்கள் வாழவேண்டியிருந்த வழியைப் பேதுரு விவரித்தார். NIV வேதாகமத்தில், “உங்கள் வாழ்வின் ... தூய்மையை அவர்கள் பார்க்கும்போது” என்றுள்ளது. தூய்மையான வாழ்வு என்பது, அடக்கமின்மை அல்லது தகுதியற்ற நடக்கை என்பதெதுவும் அற்றதாக உள்ளது. ஒருவேளை இது நியாயமற்றதாக இருக்கலாம், ஆனால் ஆண்கள் தாங்கள் விரும்புகிற பெண்களை, நற்தன்மையின் சாத்தியமற்ற தரஅளவைகளுக்கு உயர்த்த விரும்புகின்றனர். அவர்கள் தங்கள் மனைவியர்கள், தாய்மார்கள் மற்றும் சகோதரிகளில் உண்மை நெறியும் தூய்மையும் முழுமையாயிருப்பதைக் காணவிரும்புகின்றனர். நீங்கள் விரும்பினால் இதை ஆண் ஆதிக்கப்போக்கு என்று அழைத்துக் கொள்ளுங்கள், ஆனால் தனது பாசத்தையும் தனது நெருங்கிய தொடர்பையும், தனது வாழ்வைப் பகிர்ந்து கொள்ளும் ஒரே ஆணுக்கென்று ஒதுக்கி வைக்கும் பெண்ணை, ஆண்கள் மதிக்கின்றனர் என்பது உண்மையாக உள்ளது.

சிகாகோ பல்கலைக் கழகத்தில் மானிடவியல் விரிவுரையாளராகப் பணி யாற்றும் ஆலென் புளூம் என்பவர், ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, மிகச்சிறப்பாக விற்பனையான தமது புத்தகத்தில் பின்வரும் ஊடுருவும் விமர்சனத்தை எழுதி யிருந்தார்:

> மிகவும் களைப்படைந்த மற்றும் மிகவும் மதியீனமான பழங்காலத் தாய்மார் களும் தகப்பன்மார்களும் தங்கள் மகள்களுக்கு - “அவர் விரும்புவதை அவருக்கு நீ மிக எளிதில் கொடுத்துவிட்டால் அவர் உன்னை மதிக்கவோ அல்லது திருமணம் செய்துகொள்ளவோமாட்டார்” என்று - போதித்தனர்

என்பது வினோதமானதாக உள்ளது, இது தற்போதைய சூழ்நிலையில் மிகவும் உண்மையாகவும் மிகவும் ஊடுருவும் ஆய்வாகவும் உள்ளது.[1]

இது எப்போதாவது "களைப்பானதாக மற்றும் மதியீனமானதாக" இருந்ததா அல்லவா என்பது கேள்விகேட்கப் படலாம். பெண்கள் தூய்மையான வாழ்வை வாழத்தவறுகிறபோது இழந்து போகின்றனர் என்பதை உணர்ந்தறிதல் ஆர்வத் திற்கு உரியதாக உள்ளது. ஒரு மனைவி தனது வாழ்வின் தூய்மையினால் தனது கணவரின் மதிப்பையும் பாராட்டையும் ஆதாயப்படுத்துவாள்.

பயபக்தி

ஒரு மனைவியின் பயபக்தியும்கூட, அவிசுவாசியான ஒரு கணவரை கிறிஸ்துவிடத்திற்கு வழிநடத்தக்கூடும். 1ம் வசனத்தில் உள்ள "பயபக்தி" என்பதற்குரிய கிரேக்க வார்த்தையானது, நேரடியாக "பயம்" என்று அர்த்தப்படுகிறது, ஆனால் இது தேவனுக்கு முன்னால் பயத்தோடும் கீழ்ப்படிதலோடும் நிற்குதலின் கருத்துணர்வில் ஏற்படும் பயமாக உள்ளது. பயபக்தி என்பது ஒரு மனைவி விரும்பினால் காண்பிக்கவும் விரும்பாவிட்டால் காண்பியாதிருக்கவுமான ஒரு பண்பு அல்ல. அவள் இரக்கம், சுறுசுறுப்பு மற்றும் விவேகம் ஆகியவற்றை அவள் ஞாயிற்றுக்கிழமை அணியும் உடைகளுடன் அல மாரியில் தொங்கவிட்டுவிடும்போது பயபக்தியில் அவளுக்குள்ள குறைபாடு ஒரு பிரச்சனையாகிவிடும். ஒரு கிறிஸ்தவ மனைவி தனது தனிப்பட்ட மற்றும் பொது வாழ்வில் செயல்விளக்கப்படுத்துகிற மொழிநடை, இரக்கம், ஜெபம் மற்றும் கிறிஸ்தவ ஈவு என்பவை தேவனுக்குப் பயப்படுதல் என்பதில் தானே பாராட்டுவதாக இருக்கும்.

உள்ளான அலங்கரிப்பு

பேதுரு, "மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல்," என்று எழுதியபோது (3:3), பெண்கள் தங்கள் தலைமுடியை ஒருக்காலும் சீவக்கூடாது என்றோ அல்லது ஆபரணங்களை அணியக்கூடாது என்றோ அவர் பரிந்துரைக்கவில்லை. பெண்கள் தக்கவகையிலான சமானநிலை மற்றும் கருத்துநோக்கு ஆகியவற்றுடன் இருக்க வேண்டும் என்றே அவர் வேண்டிக் கொண்டார். நேர்த்தியாக இருக்கவும் மற்றும் ஈர்க்கும் வகையில் இருத்தல் என்பதும் எதிர்பார்க்கப் படுகிறது, ஆனால் உடை மற்றும் ஆபரணங்களை அணிந்துகொள்ளுதலுக்குச் சாதகமாக இருக்கும் வகையில், "அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி"யைப் புறக்கணித்தல் என்பது ஆவிக்குரிய வகையில் தற்கொலையாக இருக்கும். மனைவியானவள் அலங்கரிப்பின்மூலம் தான் ஏற்படுத்தும், பிறரை ஈர்க்கும் வகையினால் தனது கணவனுக்குப் பெரிய அளவில் பலவற்றைக் கூறுகிறாள். அவளது தோற்றம் வெறும் உடல்ரீதியானதாக மாத்திரம் இருக்கும் என்றால், அவள் தனது கணவரின் இருதயத்தைக் கர்த்தரை நோக்கித் திருப்ப இயலாதவளாக இருக்கச் சாத்தியக்கூறுள்ளது. கிறிஸ்துவைப் போன்றிருக்கும் அவளது பண்பு, அவளது சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி, பயபக்தி மற்றும் தூய்மை ஆகியவையே நிலைத்திருக்கும் செயல்விளைவைக் கொண்டிருக்கும்.

கிறிஸ்துவுக்குக் கணவர் கீழ்ப்படிதலுக்கான பொறுப்பை, அவரது மனைவியின் தோள்களில் பேதுரு சுமத்தவில்லை என்பதைப் புரிந்து கொள்வதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். சில ஆண்கள் தங்களுக்குள், தங்கள் மனைவியர் ஏதேனும் வேறுபாட்டை ஏற்படுத்த இயலாத அளவுக்கு, மிகவும் பொல்லாதவர்களாக இருக்கின்றனர், மற்றவர்கள் பாராமுகமாக இருக்கின்றனர். மனைவியர் மீது பேதுரு பொறுப்பைச் சுமத்தவில்லை. உணர்வுடன் முயற்சிக்கும் மற்றும் தேவபக்தி கொண்ட பெண்ணானவள், தனது விசுவாசத்தையும் தனது நம்பிக்கையையும் தனது கணவர் தன்னுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று விரும்புவாள் என்றே அவர் கூறினார். அந்த முடிவிற்கு அவர் தமது அறிவுறுத்துதலை அளித்தார்.

பெண்கள் நல்ல விவேகம், பொறுமையான சகிப்புத்தன்மை மற்றும் நற்பண்பு ஆகியவற்றை மிகவும் கூடுதலான அளவிற்குக் கொண்டிருக்க வேண்டும் என்று பேதுரு கூறினார். ஞானமும் ஆதரவான திறனும் உடைய மனைவியின் பகுத்தறிதல், நல்ல நிதானிப்பு மற்றும் நுனுக்கம் ஆகியவற்றைப் பாராட்டுவதில் பேதுரு தனிமையாக இருக்கவில்லை. அலெக்சாண்டர் போப் என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> கணவர் சாந்தம் அடையும் வரையில் ஒருக்காலும் பதில் அளிக்காதவள், அல்லது அவரை அவள் ஆளுகை செய்தால், ஒருக்காலும் தான் ஆளுகை செய்வதைக் காண்பியாதவள்; ஏற்றுக்கொள்ளுதலினால், கீழ்ப்படிதலினால், ஈர்க்கின்றவள், ஒட்டி நின்று வட்டமிடுபவள், இருப்பினும் அவள் கீழ்ப்படிகிறபோது தனது சந்தோஷ உணர்வை அதிக மாகக் கொண்டுள்ளவள்.

இவரது கருத்துணர்வு ஒருவேளை, பேதுருவின் கருத்துணர்வில் இருந்து அதிக தொலைவுக்கு அகற்றப்படாததாக இருந்தது என்று கூறலாம்.

கடந்த காலத்தில் இருந்த தேவபக்தியுள்ள பெண்களில் இருந்து உதாரணங்கள் (3:5, 6)

உதாரணத்தின் வல்லமையைப் பேதுரு அறிந்திருந்தார். முன்கோபிகளான எஜமானர்களிடம் இருந்து தவறாக நடத்தப்படுதலைப் பெற்றுக்கொண்ட அடிமைகள், தங்கள் மோசமான சூழ்நிலை பற்றிக் கவலைப்பட்டு முறுமுறுக்கும்படி சோதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்கு அறிவுரை கொடுத்தபோது, அவர் கிறிஸ்துவின் உதாரணத்தை அவர்களுக்குக் காண்பித்தார். கர்த்தர் அநீதியாகப் பாடுபட்டார். கர்த்தருடைய உதாரணம் பேதுருவின் மூலமாக அடிமைகளுக்கு அறிவுறுத்தியது போலவே, பழங்காலத்துப் பரிசுத்த பெண்கள், மனைவியர்களுக்கு அறிவுறுத்தினர். அவர்கள் சாந்தமும் மன அமைதலுமுள்ள ஆவிகளினால் தங்களை அலங்கரித்துக் கொண்டனர், தேவன் மீது தங்கள் நம்பிக்கையை வைத்திருந்தனர், மற்றும் இவ்வாறு அவர்கள் தங்களை அலங்கரித்துக் கொண்டனர் என்று அவர்களைப் பற்றிப் பேதுரு கூறினார். எதிர் மறையாக உரைக்கையில், அவர்கள் ஆபரணங்கள், உடைகள் மற்றும் சிகை அலங்காரம் ஆகியவற்றில் தங்கள் அழகைக் கண்டிருந்ததில்லை எனலாம்.

உண்மையில் வேதாகமம், தேவபக்தியுள்ள பெண்களைப் பற்றிக்

கூறுவதற்கு, ஏராளமான விஷயங்களைக் கொண்டுள்ளது. சாராள், ரெபேக்காள், லேயாள் மற்றும் ராகேல் ஆகியோர், தங்கள் கணவர்களின் நாடோடி வாழ்வைப் பகிர்ந்து கொண்டனர் மற்றும் அவர்களுடன் சேர்ந்து தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது சாய்ந்திருந்தனர். ஒருசிலர், மற்ற மொழி பெயர்ப்புகளில் சந்தர்ப்பப்பொருளின் சிரமங்கள் பல்வேறு வகையில் வாசிக்கும்படி வழிநடத்தியிருந்தாலும், KJV வேதாகமத்தில் எபிரெயர் 11:11ன் உணர்வுக்கருத்துடன் விவாதிப்பார்கள்: "வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்று அவள் தீர்மானம் பண்ணினதினால் விசுவாசத்தின் மூலம் சாராளும் கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள்." சாராளுக்குப் பின்பு ரெபேக்காள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியான யாக்கோபுக்கு ஆதரவாக இருந்தாள். பிற்பாடு யாக்கோபுவின் மனைவிகள், அவர்கள் பிறந்த நாட்டை விட்டுக் கானானுக்குப் பயணம் செய்ய, அந்த முற்பிதா முடிவுசெய்தபோது, தங்கள் தகப்பனுக்கு ஆதரவாயிராமல் தங்கள் கணவருக்கு ஆதரவாயிருந்தனர் (ஆதியாகமம் 31:14-17).

இஸ்ரவேல் மக்கள் எகிப்தை விட்டுப் புறப்பட்டபோது, ஆரோனுடன் மோசேயின் சகோதரியான மிரியாம் என்பவளும் ஒரு நடத்துனளாக இருந்தாள். எரிகோவில் விலைமகளாக இருந்த ராகாப் என்பவள், ஒற்றர்கள் கானானுக்குள் பிரவேசித்தபோது, இஸ்ரவேல் மக்களுக்கு உதவினாள். அவளது பெயர் விசுவாசம் நிறைந்தவர்களின் பெயர் அட்டவணையில் காணப்படுவது மட்டுமின்றி (எபிரெயர் 11:31), கர்த்தருடைய வம்சாவழியிலும் காணப்படுகிறது (மத்தேயு 1:5). நியாயாதிபதிகளில் தெபோராள் மிகவும் தனிச்சிறப்பானவளாக இருந்தாள். நியாயாதிபதிகள் 5ல் அவளது பாடல், பழைய ஏற்பாட்டு இலக்கியத்தில் மிகவும் அழகிய இலக்கியப் படைப்புகளில் ஒன்றாக உள்ளது. ரூத் மற்றும் நகோமி ஆகியோரின் அன்பு மற்றும் அர்ப்பணிப்பு, அபிகாயிலின் விவேகம் மற்றும் ஞானம் (1 சாமுவேல் 25), எஸ்தரின் தைரியம் மற்றும் விசுவாசம் ஆகிய யாவும், பழைய ஏற்பாட்டில் தேவன் தமது மக்களிடம் கொண்டிருந்த தொடர்பில் தங்கள் பாகங்களைக் கொண்டுள்ளன.

விசுவாசம் நிறைந்த மற்றும் அர்ப்பணிப்புள்ள பெண்களின் வரலாறுகள் பழைய ஏற்பாட்டுடன் நின்றுவிடுவதில்லை. மரியாள் மற்றும் எலிசபெத் ஆகியோரில் இருந்து தொற்காள் மற்றும் பிரிஸ்கில்லாள் ஆகியோர் வரையில், தேவபக்தியுள்ள பெண்களின் விசுவாசமும் கிரியைகளும் புதிய ஏற்பாட்டில் தொடர்கின்றன. பேதுரு, "இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்" என்று கூறியபோது (3:5) கிறிஸ்தவ மனைவிகளுக்கு முன்னதாக அவர், விசுவாசத்தில் பலம் வாய்ந்த ஒரு படைத் துருப்பையே உயர்த்தினார்.

இந்தப் பரிசுத்த பெண்கள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்த விஷயம், விசுவாசம்நிறைவு பற்றிய அவர்களின் பதிவேட்டில் ஒரு பாகமாக இருந்தது. கீழ்ப்படிதல் என்பது சுயாதீனமாக அளிக்கப்படும்போது, அது அவமரியாதையாய் இருப்பதில்லை. சாராள் தனது கணவரை மரியாதை நிறைந்த வகையில் அழைக்கும் அளவிற்குச் சென்றாள். கிறிஸ்தவப் பெண்கள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருக்கும்போது, அவர்கள் சாராள்

போன்ற விசுவாசம் உள்ள பெண்களின் ஆவிக்குரிய மகள்கள் ஆகின்றனர்.

கரிசனம் மற்றும் மதித்தல் ஆகியவற்றின் புருஷத்தன்மை (3:7)

சரியான வகையில் பயன்படுத்தப்படும்போது, வேதாகம அறிவுறுத்துதலானது, வாசகரின் இருதயத்தை ஆராய்ந்து அவரது வாழ்வை உருப்படுத்தும். ஒருவர், ஒரு விரலால் சுட்டிக்காண்பிக்க, சிறுமைப்படுத்த மற்றும் கண்டனம் பண்ண வேதவசனத்தைப் பயன்படுத்தும்போது, ஏதோ சில விஷயங்கள் பயங்கரமான வகையில் நெறிபிழ்ந்து போயிருக்கின்றன. சமீபத்தில் நான், யாக்கோபு 2 மற்றும் விசுவாசம் கிரியைகள் ஆகியவற்றின் உறவுமுறை ஆகியவற்றை மையங்கொண்ட கலந்துரையாடல் நடைபெற்ற வேதாகம வகுப்பு ஒன்றில் இருந்தேன். வகுப்பில் இருந்த ஒரு உறுப்பினர், தமது உறவினர் ஒருவருக்கு அளித்திருக்கப்பட வேண்டியதாக அவர் நினைத்த உதவியின் வகையை அளிப்பதற்கு சபை தவறிவிட்டதற்காக, அதை [சபையை]க் கடுமையாக விமர்சிப்பதற்குப் பலநிமிடங்களை எடுத்துக்கொண்டார். அந்தச் சூழ்நிலை பற்றிய சில விஷயங்களை நான் அறிய நேர்ந்தது. இரக்கமுள்ள மக்கள் உண்மையில், முயற்சி மற்றும் உதவி ஆகியவற்றைப் பெரிய அளவில் கொடுத்திருந்தனர், ஆனால் அவற்றிற்குப் பாராட்டுதலின் வார்த்தை எதுவும் பெறாமல் திட்டுதலையே பெற்றிருந்தனர். (மனிதர்கள் அடங்கிய ஒரு குழுமம் என்ற வகையில் சிலவேளைகளில் நடப்பதுபோல) சபையானது தவறியிருந்தாலும், வேதாகமரீதியான போதனை என்பது விரல்சுட்டிக்காட்டுவதற்கானது அல்ல. நம்மில் ஒவ்வொருவரும், தனக்குத்தானே அதை நடைமுறைப்படுத்த வேண்டும். “யார் என்னைத் தவறச் செய்தது?” என்பதல்ல ஆனால் “எங்கு நான் தவறியிருக்கிறேன்? மற்றும் கர்த்தருடைய ஊழியத்தில் நான் அதிகம் பயன்நிறைந்த ஊழியக்காரனாக இருக்க, இவ்வசனத்தில் உள்ள அறிவுறுத்துதல் எனக்கு எவ்வாறு உதவும்?” என்பதே கேள்வியாக உள்ளது.

3:1-7வசனப்பகுதியை, கணவர்களும் மனைவியர்களும், சுயபரிசோதனையின் ஆவியுடன் வாசிக்க வேண்டியதாக உள்ளது. மனைவியாக இருப்பவர் 3:1-6ஐ வாசித்து, தான் எவ்வாறு அப்போஸ்தலரின் அறிவுறுத்துதலைப் பின்பற்றுவதன் மூலம் தனது வாழ்வை இன்னும் அதிகமாகத் தேவபக்தியுள்ளதாக ஆக்கலாம் என்று தன்னைத் தானே கேட்டுக்கொள்ள வேண்டியது மனைவியின் பாகமாக உள்ளது. கணவராக இருப்பவர் 3:7ஐ வாசித்து, கணவர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறாரோ, அந்த விஷயத்திற்குத் தனது செயல்கள் சீர்பொருத்தமானவைகளாக இருக்கின்றனவா என்று தன்னைத் தானே கேட்டுக்கொள்ள வேண்டியது கணவரின் பாகமாக உள்ளது. அவர் தமது மனைவியைச் சிட்சிக்க முதல் வசனங்களை பயன்படுத்தினாலோ அல்லது அவரது மனைவி, உண்மையில் கணவரே பிரச்சனையாக இருக்கிறார் என்று நிரூபிக்க 7ம் வசனத்தைப் பயன்படுத்தினாலோ, இவ்வசனப்பகுதியானது ஏற்கனவே தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகிறது. கையாளக் கடினமான மனைவியுடன் அவர் எவ்வாறு ஒரு நல்ல கணவராக இருக்க முடியும்? மற்றும் மனைவியானவள் அப்படிப்பட்ட ஒரு முரட்டுத்தனம் உள்ள மனிதருடன்

வாழவேண்டியிருக்கும்போது, எவ்வாறு ஒரு நல்ல மனைவியாக இருக்க முடியும்? இப்படிப்பட்ட தந்திரங்களைப் பயன்படுத்துதல் என்பது இருவரும் இழந்துபோவதை உறுதிப்படுத்துகிறது.

ஒரு கணவர் தமது மனைவியை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதற்கு அப்போஸ்தலர் தரும் அறிவுறுத்துதல், மூன்று எண்ணப்போக்குகளில் தொகுத்துரைக்கப் படலாம். கணவரின் கடமைகளுக்குப் பேதுரு ஒரு சிறியபகுதி யையே ஒப்புக்கொடுத்தார் என்பது உண்மையே, ஆனால் அங்கு காணப்படுகிற குணங்களை அளவிடக்கூடிய அமைதியான கணவராக அவர் இருக்கிறார்.

கரிசனை

நான், உள்ளூர்ப் புத்தகக் கடையில் புத்தகங்களைத் தேடுவதை மகிழ்வுடன் அனுபவிப்பது உண்டு. சிலவேளைகளில் நான், திருமணம் மற்றும் குடும்ப உறவுகளை ஆராயும் "மனோதத்துவம்" என்ற தலைப்பின் கீழான பிரிவினிடத்தில் செல்லுவேன். அவ்வகையான புத்தகங்கள் எவ்வளவு ஏராள மாக அச்சிடப்பட்டுள்ளன என்பது திகைப்புக்கு உரியதாக உள்ளது. அவை ஒவ்வொன்றும் வெற்றிக்கென்று தனக்கே உரிய சூத்திரத்தைக் கொண்டுள்ளன. பாலுறவு பற்றிய கைப்புத்தகங்கள் டஜன் கணக்கில் வெளியிடப்படுகின்றன மற்றும் அனேகமாக அவை மிகச்சிறப்பாக விற்பனையாகும் புத்தகங்களாக இருக்கலாம். இந்தப் புத்தகங்கள், கருத்தரங்குகள், விழிப்புணர்வு மாநாடுகள் முதலிய எல்லாவற்றுடனும், ஒருசில மக்கள் மாத்திரமே, நிலைத்த, பரஸ்பரம் நிறைவளிக்கும் திருமணத்தைக் கட்டியெழுப்பும் பக்குவமும் நல்ல உணர்வறிவும் கொண்டிருப்பது ஏன்? தோல்வியடைகிற திருமணங்கள் பெரும்பாலானவற்றில் சேர்க்கத் தவறிய குணமாக நான் சந்தேகப்படுவதை உங்களுக்குக் கூற என்னை அனுமதியுங்கள்: அது கரிசனை என்பதாகும்! கரிசனையை வேண்டிக் கொள்ளக்கூடிய சாத்திய மான எல்லா யூகங்களையும் உள்ளடக்கும் சூத்திரம் எதுவும் இல்லை.

சுருக்கமாகக் கூறினால், ஒரு கணவர் தமது மனைவிக்காகக் கொண்டிருக்க வேண்டிய கரிசனை பின்வருமாறு உள்ளது: "அவள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அவற்றையே நீங்கள் அவளுக்குச் செய்யுங்கள்." ஒரு பிறந்தநாளை நினைவு கூருதல், மலர்களை அனுப்புதல், குப்பையை வெளியே எடுத்துச் சென்று கொட்டுதல், ஒரு முறையிடுதலைக் கவனித்தல், தவறைக் கண்டுகொள்ளாது விடுதல், கடைசியாகத் தோல்வியை ஒப்புக்கொண்ட வேளையில் விட்டுக்கொடுத்து விடுதல், வீட்டு வேலையில் உதவுதல், மற்றும் ஆயிரக்கணக்கான பிற விஷயங்களைச் செய்தல் ஆகியவை கரிசனையாக உள்ளது. கரிசனை என்பது சிலவேளைகளில் அவளது விருப்பத் திற்குக் கீழ்ப்படிதல் என்று கூட அர்த்தப்பட முடியும்.

மதித்தல்

ஐரா நார்த் என்பவர், பலத்த இல்லங்களைக் கட்டியெழுப்பும் நடைமுறைகள் மீது பேசியதை நான் பல சந்தர்ப்பங்களில் கேள்விப்பட்டு இருக்கிறேன். அவர் பின்வருவது போன்று சிலவற்றைக் கூறுவார்: "தந்தையர்களே, உங்கள் சிறு பையன்களுக்கும் பெண்களுக்கும் உங்களால் கொடுக்கக் கூடிய மிகவும் விலைமதிப்பற்ற பரிசு என்ன என்று நீங்கள் அறிவீர்களா? அவர்களின் தாயை

நேசியுங்கள், அவளை உங்கள் முழுமனதுடன் நேசியுங்கள்!" அவர் கூறியது சரியானதே என்று நான் நம்புகிறேன். நீங்கள் நேசிக்கும் ஒருவர் மற்றும் உடல்ரீதியாக மாத்திரம் விரும்பும் ஒருவர் ஆகியோருக்கிடையில் ஒரு விஷயம் வித்தியாசப்பட முடியும்: நீங்கள் நேசிக்கும் ஒருவரை நீங்கள் மதிக்கவும் செய்வீர்கள். மனைவியை நேசித்தல் என்பது அவளது கருத்துக்களை மதித்தல் மற்றும் அவளிடத்தில் ஆலோசனையை நாடுதல் என்பதாக உள்ளது. அது அவளது பணிக்காக அவளைப் பாராட்டுதல் மற்றும் அவள் நல்லவளாக, நேர்த்தியானவளாக மற்றும் இரக்கமுள்ள மனிதப்பிறவியாக இருக்கிறாள் என்ற கூறப்படுதல் அவசியமாகும்போது ஆதரவளித்தல் என்பதாக உள்ளது. மனைவியை நேசித்தல் என்பது நிதிநிலைத் திட்டங்களை அவளுடன் இணைந்து செய்தலாக, நீங்கள் நேரப்பட வேலை செய்ய வேண்டியிருக்கும்போது அதை அவள் அறிய அனுமதிப்பதாக மற்றும் உங்கள் தனிப்பட்ட பிரச்சனைகளை அந்தரங்கமாக அவளிடத்தில் பேசுதல் என்பதாக உள்ளது. மதிப்பளித்தல் என்பது சிந்தனை நிறைவுடனும் இரக்கத்துடனும் இருப்பதாக உள்ளது.

பங்காளித்துவம்

கணவர் தமது மனைவியை ஒரு கூட்டாளி ("பாண்டம்," வசனம் 7) போலவும், "நித்திய ஜீவனாகிய கிருபையை" பெறுவதில் தமது உடன் சுதந்தரரைப் போலவும் நடத்த வேண்டும். நான் தவறாகக் கூறாதவரையில், இந்த சந்தர்ப்பப் பொருளில் "கூட்டாளி" (NIV) என்ற வார்த்தையானது நட்புறவின் கருத்தை உள்ளடக்குகிறது. கூட்டாளிகள் நண்பர்களாக இருக்கின்றனர். கூட்டாளிகள் பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டு ஒருவர் மற்றவரை ஆதரிக்கின்றனர் என்பது உண்மையாக உள்ளது. அவர்களின் வளமும் அவர்களின் கடின மான வேளைகளும் ஒன்றாக வந்து போகின்றன என்பது உண்மையாக உள்ளது. இருப்பினும் நீடித்து நிலைத்திருக்கும் ஒரு நட்புறவு, ஒரு நெருக்க மான மற்றும் நீடித்த நட்புறவைக் கட்டியெழுப்பும் வழியைக் காட்டிலும் நீடித் திருக்கும் நட்புறவைப் பற்றிய அதிகதெளிவான விஷயம் வேறு எதுவும் இல்லை. கணவர்கள் தங்கள் மனைவிகளை கூட்டாளிகளாக நடத்த வேண்டும்.

பலத்த மற்றும் நிலையான திருமணங்களையும் இல்லங்களையும் கட்டியெழுப்பும்படி பேதுரு நமக்குக் கொடுக்கும் ஆலோசனையில் அவர் ஒருமுறைகூட "பாலுறவு" என்ற வார்த்தையைக் குறிப்பிடாது இருப்பது மிகவும் வியப்பிற்குரியதாக உள்ளது. கணவர் மற்றும் மனைவிக்கு இடையில் பாலுறவு முக்கியமானதாக உள்ளது, ஆனால் பேதுரு அதை, கிறிஸ்தவக் கணவர்கள் மற்றும் மனைவிகள் ஆகியோருக்குத் தாம் உரைத்த மிகவும் முக்கியமான புத்திமதிகளுக்கு அவ்வளவாக முக்கியத்துவம் அற்றதாகக் கண்டார் என்பது உறுதி.

முடிவுரை

அமெரிக்க சமூகத்தில் ஒவ்வொருவரும் தத்தமது சொந்த விருப்பங்களை நிறைவேற்றப் பேராசையுடன் [கிடைப்பதை] பற்றிக்கொள்ளுகையில், அது [அமெரிக்க சமூகம்] நொறுங்கிப் போய்விடாதிருக்க வேண்டுமென்றால், தேவனு டைய மக்கள் வழிகாட்ட வேண்டும். கரிசனை மற்றும் மதிப்பு ஆகியவற்றின் மீது அஸ்திபாரம் போடப்பட்ட பாதுகாப்பான இல்லங்களைக் கட்டி எழுப்புதலே,

நிலையான மற்றும் தொடர்வளர்ச்சி உள்ள சமூகத்தின் தொடக்க முனையாக உள்ளது. சமீபத்திய ஆண்டுகளில் நாம், குடும்பத்தை ஆதரித்தல் பற்றிய அதிகமான பேச்சைக் கேள்விப்பட்டு இருக்கிறோம், இருப்பினும் ஒரு தெளிவுள்ள சமூகம் சகித்துக் கொள்ளக் கூடியதைக் காட்டிலும் அதிகமாக அதைப் பலவீனப் படுத்தத் திட்டமிட்ட முயற்சியை நாம் கண்டிருக்கிறோம். உண்மையில் விவாகரத்து விகிதம் குறையவில்லை, இரு பெற்றோரில் ஒருவரை மாத்திரமே கொண்டு வாழும் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவடையவில்லை, மற்றும் திருமண உறவுகள் குறித்த ஆலோசனை மையங்கள், தங்களுக்கு வாடிக்கையாளர்கள் இல்லையென்று குறைப்படுவதில்லை. இருபதாம் நூற்றாண்டில், இல்லமானது பயங்கரமான அழுத்தத்தின்கீழ் உள்ளது. அதன் பாதுகாப்பு மற்றும் நெருக்கத்தன்மை ஆகியவை இன்பத்தை நுகரும் தனிநபர்த்துவத்திற்காக பாதுகாக்கப்பட்டு இருக்கும்போது, நாளையதினம் எதைக்கொண்டுவரும் என்று ஒருவர் வியப்படைய மாத்திரமே முடியும். கிறிஸ்தவர்கள் பின்பற்றும்படி பேதுரு வேண்டிக்கொள்ளும் விஷயங்கள், ஒருவருக்கு ஒருவர் உதவியாயிருக்கும் அடிப்படைக் கொள்கைகளாக உள்ளன.

குறிப்பு

[1]Allan Bloom, *The Closing of the American Mind* (New York: Simon and Schuster, 1987), 132.

7

கேட்கிற யாவருக்கும் தற்காப்பு உரையொன்றைக் கூறுங்கள் (1 பேதுரு 3:8–22)

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, மேற்கு ஐரோப்பாவில் ஒரு உரைவரிசை நிகழ்ச்சியின்போது, கனடா, அமெரிக்கா, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து மற்றும் மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளில் இருந்து வந்திருந்த ஊழியர்களின் குழுவுடன் சற்று நேரம் செலவிடும் சிலாக்கியத்தை நான் பெற்றிருந்தேன். மேற்கு ஜெர்மனியின் ஜெம்யூன்டென் கிராமத்தின் அருகில் ஒரு இளைஞர் முகாமில் நாங்கள் சந்தித்துக் கொண்டோம். பல நாட்டினங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்தன; மக்களில் பலர் இந்த உரைவரிசையில் கலந்துகொள்ள நீண்ட தூரங்களைக் கடந்து வந்திருந்தனர். அவர்கள் எனது உரைகளைக் கேட்க வந்திருந்தனர் என்று என்னை நானே மெச்சிக்கொள்ள விரும்பினேன், ஆனால் நான் கவனித்து உற்றுக்கேட்டபோது, அவர்கள் ஒருவர் மற்றவரின் நட்புறவில் மிதமாக உள்ளக்கிளர்ச்சி அடைந்தனர் என்பது தெளிவாயிற்று. அவர்கள், கிறிஸ்துவின்மீது கொண்டிருந்த அபிமானமும் ஒருவர் மற்றவர் மீது கொண்டிருந்த அன்பும் தெளிவாயின; இந்த உணர்வுகள் போராட்டத்தினால் பிறந்தனவோ என்று நான் சந்தேகம் அடைந்தேன். நான் மற்ற இடங்களில் இவ்வகையான வடிவமைப்பைக் கண்டிருக்கிறேன்: எண்ணிக்கை குறைவாகவும் தடைகள் பெரிதாகவும் இருக்கும்போது, பலத்திற்காகக் கிறிஸ்தவர்கள் கர்த்தரைச் சார்ந்திருக்க வேண்டும் மற்றும் ஒருவர் மற்றவர்மீது சாய்ந்திருக்க வேண்டும்.

மேற்கு ஐரோப்பாவில் எனது நண்பர்களுடன் ஒருவாரப் படிப்பையும் ஊழியத்தையும் பகிர்ந்து கொண்டது, ஒரு சமூகத்துடன் இணைப்பின் கருத்துணர்வை நான் அனுபவிக்க முடிந்தவன் ஆக்கியது. இந்த சமூகம் ஆசியா மைனர் பகுதியில் இருந்த தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் சமூகத்தில் இருந்து அவ்வளவாக வேறுபட்டிருக்கவில்லை. பேதுரு தமது முதல் நிருபத்தில், எண்ணிக்கையில் குறைவும் மாபெரும் தடைகளை எதிர்கொண்டிருந்ததுமான சபைக்குழுமங்களைக் குறிப்பிட்டார். பெரிய, வசதியான சபைக்குழுங்கள், கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் உலகத்தின் வாழ்வு ஆகியவற்றிற்கு இடையிலான எல்லைகளைக் குழப்பச் சாயலாம், ஆனால் பேதுருவின் நிருபத்தை முதன்முதலாக வாசித்தவர்கள், அப்படிப்பட்ட சோதனை எதையும் கொண்டிருக்கவில்லை. விரோதிகள் அவர்களுக்கு அறைகூவல் விடுத்தனர், அவர்களை நோக்கிக் கேள்விகளைச் சுழற்றி எரிந்தனர், மற்றும் அவர்களுக்கு எதிராக அற்பமான குற்றச்சாட்டுகளைக் குவித்தனர். அவர்கள் தங்கள் விசுவாசம் குறித்துப் பதில்களுடன் ஆயத்தமாக இருக்க வேண்டியதாயிற்று. அவமானப்

படுத்துதலுக்கு ஆசீர்வாதத்தினால் பதில் அளித்தல் (3:9), பழிதூற்றுதலுக்கு நியாயமானதன் மீது வைராக்கியத்தைக் கொண்டு பதில் அளித்தல் (3:13) மற்றும் குற்றச்சாட்டுகளுக்குச் சிலுவையின் செய்தியைக் கொண்டு பதில் அளித்தல் (3:18) என்பதே கிறிஸ்தவ வழியாக இருந்தது என்று அவர்களுக்குப் பேதுரு அறிவுரை கூறினார்.

அவமானப்படுத்துதல்களுக்கு ஆசீர்வாதத்தினால் பதில் அளித்தல் (3:8-12)

சில பதில்களுக்கு வார்த்தைகள் தேவைப்படுவதில்லை. அவைகள் கிறிஸ்தவர்களின் நடக்கையில் மறைமுகமான கருத்துக்களை அளித்தன. பேதுரு தமது வாசகர்களுக்கு வார்த்தைகள் மற்றும் விவாதங்களை அளிப்பதற்குப் பதி லாக, வாழ்வின் வழியொன்றை வேண்டிக் கொள்வதின் மூலம் தொடங்கினார். இதில் தர்க்கரீதியான வரிசைமுறை ஒன்றுள்ளது. கர்த்தருடைய போதனைகள் வெறும் கோட்பாடு என்பதற்கு மேலானவைகளாக உள்ளன என்பதைச் செயல்விளக்கப்படுத்தாத வரையில், கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தின்மீது சிறிதளவே செயல்தாக்கம் கொண்டிருப்பார்கள். பேதுருவின் வாசகர்கள் மூலமாகக் கிறிஸ்து இந்த உலகத்தைச் சீர்ப்படுத்துவதற்கு முன்னர், அவர்கள் கிறிஸ்துவினால் சீர்ப்படுத்தப்பட வேண்டியவர்களாக இருந்தனர். 3:8ல் நடக்கைக்கான புத்திமதி கள் வரிசையானது சபைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட விமர்சனங்களுக்கு மறைமுகமாகப் பதில் அளித்தது. ஒவ்வொரு வார்த்தையும், கிறிஸ்தவ சமூகத் திற்கான அறிவுறுத்துதலின் தனது சொந்த வைரத்தைக் கொண்டிருந்தது: "மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதரசிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து" (3:8).

முதலில் பேதுரு, தமது வாசகர்கள் "ஒருமனப்பட்டவர்களாக" இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். இந்தச் சொற்றொடருக்கான கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே காணப்படுகிறது. கிறிஸ்தவர்கள் தங்களுக்கு முன்னால் வருகிற ஒவ்வொரு கேள்விக்கும் முழுமை யான கருத்தொருமைப்பாடு கொண்டிருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் மிக அரிதாகவே அர்த்தப்படுத்தியிருக்க வேண்டும். இதற்கு மாறாக, நாம் ஒரு பொதுவான சிந்திக்கும் வழி, ஒரு பொதுவான குறிப்புக்கருத்து ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். பிலிப்பியருக்குப் பவுல், "ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து," அவர் சந்தோஷத்தை நிறைவாக்க வேண்டும் (பிலிப்பியர் 2:2) என்று கூறிய புத்திமதிகள், மேற் கூறியதில் இருந்து வேறுபட்டிருப்பதில்லை.

"இரக்கம்" என்ற வார்த்தை பேதுருவின் பட்டியலில் இரண்டாவது வார்த்தையில் இருந்து தரவழைக்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தை இங்கும் ரோமர் 12:15லும் இன்னொரு நபர் உணரும் அதே வேதனை மற்றும் துன்பத்தை உணருதல், மற்றும் இவ்வாறாக, அவரது வேதனை மற்றும் துன்பத்தைக் குறைக்கச் சாத்தியமான ஒவ்வொன்றையும் செய்தல் என்று அர்த்தப்படுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ரோமப்பொழுதுபோக்கில் இருந்து - மரணம் அடையும்வரையில் போரிட்ட கிளாடியேட்டர்கள் மற்றும் பாதுகாப்பற்ற

குற்றவாளிகள் காட்டு மிருகங்களினால் கிழித்துப்போடப்படுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய பொழுதுபோக்கில் இருந்து - ஒரு சுவையை மேம்படுத்திக் கொண்டு இருந்த கிரேக்க உலகத்திற்குப் பேதுரு எழுதினார். அது இரக்கமும் பரிவிரிக்கமும் அதிகம் தேவைப்பட்ட உலகமாக இருந்தது.

சகோதர அன்பு என்பது சபையின் வாழ்விற்கு அடிப்படையாக உள்ளது. கிறிஸ்தவர்கள், இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனிடத்தில் தங்களுக்கு உண்டாகியுள்ள சுதந்தரத்தின் பொதுப் பிணைப்பு என்ற உறவின் மூலம் ஏற்பட்டுள்ள ஒரு பொதுவான பிணைப்பைக் கொண்டுள்ளதால், அவர்கள் ஒருவர் மற்றவர் மீது அன்புகூர வேண்டியவர்களாக இருந்தனர். இவ்வகையான அன்பிற்கான *பிலெடெல்பியா* என்ற கிரேக்கப் பெயர்ச்சொல் வடிவமானது, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இயேசு குறிப்பிட்ட, ஏழுசபைகளில் ஒன்று இருந்த ஆசியாவின் நகரத்திற்குப் பெயராகக் கொடுக்கப்பட்டது. இது அமெரிக்காவில் உள்ள மாபெரும் நகரம் ஒன்றிற்கும் பெயராகத் தரப்பட்டது.

கிரேக்கர்கள், வலிவார்ந்த உணர்வுகளை குடல்களில் இருந்தும் இருதயங்களில் இருந்தும் எழுகிறதாக நினைத்தனர். பேதுருவின் பட்டியலில் உள்ள "மன உருக்கம்" என்ற நான்காவது வார்த்தை, "நல்ல குடலுடைய" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. NIV வேதாகமத்தில் "be compassionate" என்றுள்ளது. இரண்டாம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில், சிமிர்னாவில் இருந்த போலிகார்ப்பு என்பவரால், பிலிப்பி சபைக்கு எழுதப்பட்ட கடிதம் ஒன்றில், மூப்பர்கள் "மன உருக்கம் உள்ளவர்களாக [பேதுரு பயன்படுத்திய அதே வார்த்தை], எல்லாரிடத்திலும் இரக்கம் நிறைந்தவர்களாக, விலகித்திரிபவர்களைத் திரும்பக் கொண்டுவந்து சேர்த்து, பலவீனமான எல்லார் மீதும் அக்கறை காண்பித்து, விதவை அல்லது அனாதை அல்லது ஏழையைப் புறக்கணியாது இருக்க வேண்டும்" என்று கூறுகிறார்.

பேதுருவின் பட்டியலில் உள்ள இணக்கமுள்ளவர்கள் என்ற கடைசி வார்த்தையை, KJV வேதாகமம் "be courteous" என்று மொழிபெயர்த்திருக்கையில், இதை NASB மற்றும் பிற மொழிபெயர்ப்புகள், "be humble" (அல்லது இதைப்போன்ற வார்த்தைகள்) என்று மொழிபெயர்த்துள்ளன, இது வசனரீதியான வேறுபாட்டினால் இவ்வாறு உள்ளது. இது மரியாதை மற்றும் தாழ்மை ஆகியவற்றிற்கு இடையில் அர்த்தம் எதுவும் ஒன்றின் மீது இன்னொன்று கவிதலினால் ஏற்படுவதில்லை. தாழ்மையான ஒரு நபர், தாம் நிறைவேற்றியுள்ளவை, தாம் அறிந்திருப்பவை அல்லது தாம் சொந்தமாக்கியுள்ளவை ஆகியவற்றின் மீது, சிந்திக்கச் சிறிதளவே மனச்சாய்வுள்ளவராக, மற்றவர்களைக் குறித்து அவ்வளவு அதிகம் சிந்திப்பவராக இருக்கிறார். அவர் தமக்கு அப்பால் இருக்கும் ஆர்வங்களைக் கொண்டுள்ளார். இந்த வார்த்தையை இதன் எதிர்வார்த்தைகளான மேட்டிமை நிறைந்து இருத்தல் அல்லது சுயமையம் கொண்டிருத்தல் போன்ற வார்த்தைகளுடன் நேரெதிராக ஒப்பிடுதல் என்பதே இவ்வார்த்தையைப் புரிந்து கொள்வதற்கு மிகச்சிறந்த வழியாக உள்ளது எனலாம். நாம் தவறாயிருக்கலாம் என்ற சாத்தியக்கூறைக் கணக்கிட நம்மை அனுமதிக்கும் உட்கண்ணோட்டத்துடன் தாழ்மை வருகிறது. இது, நாம் நமது பாவங்களை அறிக்கையிடவும் நமது தவறுகளை ஒப்புக்கொள்ளவும் நம்மை அனுமதிக்கும் பண்பின் பலமாக உள்ளது.

நாகரிகம் அடைந்த மனிதர்களின் பழமையான சட்டங்களில் ஒன்று,

திருப்பிச் செலுத்துகை என்பது அதே வகையானதாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. இது *lex talionis* அல்லது தக்க தண்டனையின் சட்டம் என்று அழைக்கப்படுகிறது. இதை, யாத்திராகமம் 21:23, 24 வசனப்பகுதி மிகச்சிறந்த வடிவில் முன்வைக்கிறது: "வேறே சேதமுண்டானால், ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு பழி கொடுக்கவேண்டும்." பேதுருவுக்கு முன்பு கிறிஸ்து செய்திருந்தது போல் (மத்தேயு 5:38-42), பேதுரு மிகவும் உயர்வான ஒரு பிரமாணத்திற்காக *லெக்ஸ் டேலியனிஸ்* என்ற சட்டத்தை நீக்கிப்போட்டார்: "தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்" (3:9).

கிறிஸ்தவர்கள் தீமைக்குப் பதில் நன்மை செய்தும், சபித்தலுக்குப் பதில் ஆசீர்வதித்தும் சரிக்கட்ட வேண்டும் என்று அழைக்கப்பட்டுள்ள வேளையைக் காட்டிலும் வேறு எவ்விடத்திலும் கிறிஸ்தவ மார்க்கமானது மிகவும் கூர்மை யாக சோதிக்கப்பட்டிருப்பது இல்லை. பேதுரு, சங்கீதம் 34:12-16ஐச் சுட்டிக் காண்பித்தார். "நீ நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி நீடித்த நாட்களை அபேட்சித்தால், உன் வார்த்தைகளைக் கவனமாய் அளந்துபார்" என்று சங்கீதக்காரர் கூறினார். இது நம்மில் பெரும்பான்மையானவர்கள் கற்றுக்கொள்ளக்கூடிய பாடமாக உள்ளது. ஒரு கருத்தில், தேவபக்தியுள்ள வாழ்வானது சுயத்தை நாடுதலை ஒளியூட்டுகிறது. யோவான் 12:24, 25லும் வேறொரு இடத்திலும் இயேசு, இந்த மாபெரும் முரண்பாடு போலத் தோன்றும் மெய்யுரையைக் குறிப்பிட்டார். தீமையைவிட்டு விலகி, சமாதானத்தைத் தேடி, சத்தியம் மற்றும் நீதி ஆகியவற்றின் வழியைப் பின்பற்றுபவர்களுக்கு, வாழ்வின் பலபக்கங்கள் கொண்ட முகப்புகளும் வளமான ஆழங்களும் வெகுமதிகளாக உள்ளன. "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, ... தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது" (3:12).

ஒருவேளை நாம், பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடையில், தொடர்பற்ற நிலையை அதிகமாக ஏற்படுத்தலாம். இஸ்ரவேல் மக்களுக்குப் பேசிய அதே தேவன் தமது சபைக்கும் பேசினார். முதலில் தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு விரித்துரைத்த வாழ்வின் கொள்கையை வேண்டி உரைப்பதில் பேதுரு தயக்கம் கொண்டிருக்கவில்லை.

பழிதூற்றுதலுக்கு நியாயமானதன்மீது வைராக்கியத்தைக் கொண்டு பதில் அளித்தல் (3:13-17)

பேதுரு தமது நிருபத்தில் இரண்டாம் முறையாக, இந்தக் கிறிஸ்தவர்களின் உபத்திரவத்தைப் பற்றி நேரடியாகக் குறிப்பிட்டார் (3:13-17; முதலாவது 1:6-9ல் உள்ளது). இது நன்மையையும் மாண்புள்ளவற்றையும் செய்தமைக்காகத் துன்புறும் மக்களுக்கு எழுதப்படாத சட்டமாக இருப்பது இல்லை (3:13). இருப்பினும், இது பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது என்று அப்போஸ்தலர் ஒப்புக்கொண்டார். இப்படிப்பட்ட ஒரு நிறைவுத்தன்மைக்குப் பேதுரு, பல

பகுதிகளில் அறிவுரை அளித்தார்.

நன்மை செய்வதற்காக மாத்திரமே துன்புறுங்கள்

கிறிஸ்துவை அறிவிப்பவர்களின் பகுதியில் ஏற்படும் எல்லாத் துன்பங்களும் நன்மை செய்ததால் ஏற்படுபவையாக இருப்பதில்லை. சிலவகையான நடத்தைகள், கிறிஸ்தவராக இருந்தாலும் இல்லாவிட்டாலும், எவரொருவருக்கும் பலத்த விமர்சனத்தை கொண்டுவருகின்றன. தவறு செய்திருந்தால், கிறிஸ்தவர் சபைக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு, தமது விசுவாசத்தின் நிமித்தம் தாம் தனிப்படுத்தப்பட்டதாக உரிமைகோருகிறபோது, அவர் தமது பொல்லாங்கைக் கூட்டுபவராக மாத்திரம் இருக்கிறார். நேர்மையற்றதன்மை, பொய்யுரைத்தல், களவு அல்லது இவைபோன்ற வேறு எந்தச் செயலுக்காகவும் துன்புறுதலில் இருந்து எந்த ஆசீர்வாதமும் வருவதில்லை.

பேதுருவின் வாசகர்கள் நன்மை செய்வதற்காகத் துன்புறுவார்கள் என்ற ஏற்பற்ற முடிவுத் தன்மையில், ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தைகளில் பேதுரு அறிவுரை (3:14) அளித்தார்: "அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து" (ஏசாயா 8:12). மனிதர்கள் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தலாம் அல்லது கொலையும் செய்யலாம், ஆனால் அதைச் செய்த நிலையில் அவர்களால், அதற்கு மேல் ஒன்றும் செய்ய இயலாது. இவ்விடத்தில் பேதுரு அனேகமாக, இயேசு தமது அப்போஸ்தலர்களை வரையறைக்கு உட்பட்ட கட்டளை கொடுத்து அனுப்பிய போது பேசியிருந்த வார்த்தைகளை நினைவுகூர்ந்திருக்கலாம்: "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" (மத்தேயு 10:28). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான்?" என்று கூடுதலாகக் கூறினார் (எபிரெயர் 13:6).

கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்

பல விஷயங்களில் கிறிஸ்தவர், தமக்குப் புறம்பாக உள்ள இந்த உலகத்தில் நடப்பவை மீது சிறிதளவே கட்டுப்பாடு செலுத்தக் கூடியவராக இருக்கிறார். விபத்துகள் அல்லது தேவபக்தியற்ற மக்களின் நோக்கம் நிறைந்த நடவடிக்கைகள் ஆகியவற்றினால், மக்களில் மிகநேர்த்தியானவர்கள் கூட பயங்கரமாக உபத்திரவப்படுகின்றனர். நமக்கு நடைபெறும் எல்லாவற்றையும் நம்மால் கட்டுப்படுத்த இயலாதிருக்கையில், நமது இருதயங்களுக்குள் இருப்பவற்றை நாம் கட்டுப்படுத்த முடியும் (3:15). கர்த்தரைப் பரிசுத்தம் பண்ணுதல் என்பது, அன்பு, அர்ப்பணிப்பு மற்றும் பயபக்தி ஆகியவை கொண்ட ஒரு தனி இடத்தை அவருக்காக ஒதுக்குதலாக உள்ளது. இது அவருக்குக் கீழ்ப்படிதலை நமது முதல் முன்னுரிமை ஆக்குகிறது.

பதில் அளிக்கத் தயாராக இருங்கள்

அடுத்ததாகப் பேதுரு, "உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் ... உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" என்று கூறினார் (3:15). இவ்வசனத்தில்

“உத்தரவு” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையில் இருந்துதான், “apology” என்ற ஆங்கில வார்த்தை வருகிறது, ஆனால் அந்த கிரேக்க வார்த்தை, “to apologize” என்பதை நாம் பயன்படுத்தும் வகையிலான அர்த்தம் கொண்டிருப்பதில்லை. அப்பாலஜெட்டிக்ஸ் என்பது, கிறிஸ்தவ விசுவாசத் திற்குப் பகுத்தறிவு சார்ந்த வகையில் நியாயப்படுத்துதலை முன்வைக்கும் இறையியல் பிரிவாக உள்ளது. தொடக்க நூற்றாண்டுகளில், சபையின் விரோதிகள், சபைகூடுகைகளில் கிறிஸ்தவர்கள் முற்றான ஒழுக்கக் கேடுகளை நடைமுறைப் படுத்துவதாக, குடும்பங்களில் பிரிவினை ஏற்படுத்துவதாக, அரசாங்கத்தைக் கீழாக மதிப்பதாக, மற்றும் அறியாமையான மூடநம்பிக்கையில் பங்கேற்பதாகக் குற்றம் சாட்டினர். இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்க, கற்றறிந்த மனிதர்கள், “உத்தரவுகள்” என்று அழைக்கப்பட்ட பதில்களை எழுதி அவற்றைப் பேரரசர் மற்றும் முக்கியமான பிற அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைத்தனர். உத்தரவு சொல்லுதல் என்பது இந்தக் கருத்தில், கிறிஸ்தவ போதனை மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றிற்கு, நியாயமான, பகுத்தறிவான தற்காப்பை முன்வைத்தல் என்று அர்த்தப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டில், கிறிஸ்தவ விசுவாசத்தின் மதிநுட்ப மான நேர்மைத்தன்மையின் மீதான தாக்குதல்கள் மிக அரிதாகவே தளர்த்தப்பட்டுள்ளன. மனிதனுடைய வரலாற்றில் தேவன் செயல்படுதலுக்கான வேதாகமத்தின் சாட்சியத்திற்கு எல்லா இடங்களிலும் அறைகூவல் விடப்படுகிறது. சபைக்கு இன்னமும் தனது உத்தரவுகள் [தற்காப்புகள்] தேவை என்பதில் சந்தேகமே இல்லை.

இந்தக் கிறிஸ்தவர்கள், உத்தரவு சொல்லக் கூடியவர்கள் ஆகும்படிக்கு படிக்க வேண்டியிருந்தது, ஆனால் பதில் ஒன்றை அளித்தல் என்பது போது மானதாக இருக்கவில்லை. பதிலானது “சாந்தத்தோடும் வணக்கத்தோடும்” தரப்பட வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறினார் (3:15). உணர்வுடன் சத்தியத்தை தேடும் பலர் கிறிஸ்துவைவிட்டுப் புறம்பே திரும்பியுள்ளனர் - இது செய்தியால் அல்ல ஆனால் அதை முன்வைப்பவரது முரட்டுத்தன மான, இரக்கமற்ற நடக்கையினாலேயே நடந்துள்ளது. செய்திக்கும் செய்தியை மாதிரிப்படுத்தும் போதகருக்கும் இடையில் எந்த ஒரு தொடர்பும் இல்லாத காரணத்தினால் சிலர் தங்கள் தலைகளைத் துலுக்கிச் செல்லுகின்றனர். ஒரு அளவுக்கு, சுவிசேஷத்தைப் போதிக்கும் ஒவ்வொருவரும், அதை முதலில் தமக்குத் தாமே போதித்துக் கொள்கிறார். கிறிஸ்துவின் செய்தியானது சாந்தம் மற்றும் மதிப்பு நிறைந்த நிலைப்பாடு ஆகியவற்றுடன் முன்வைக்கப்பட வேண்டும் என்று பேதுரு கூறினார்.

நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள்

பேதுரு தமது முதல் நிருபத்தில், “மனச்சாட்சி” என்ற வார்த்தையை மூன்று முறை பயன்படுத்தினார் (2:19; 3:16, 21). இதைப் பவுல் தமது நிருபங்களில் இதைவிட அதிகமாக அடிக்கடி பயன்படுத்தினார். நல்மனச்சாட்சிக்கான வேண்டுகோள், தனிப்பட்ட வகையிலான நேர்மைக்கான வேண்டுகோளாக உள்ளது. முடிவெடுப்பதில் தவறுகள் செய்தல் என்பது ஒரு விஷயமாக உள்ளது, ஆனால் தொடக்கத்தில் இருந்தே தவறாக இருப்பதாக அறிந்துள்ள செயல் ஒன்றைச் செய்தலில் நிலைநிற்குதல் என்பது வேறொரு விஷய

மாக உள்ளது. தான் கொண்டிருப்பதாக அறிவிக்கும் விசுவாசத்திற்கு மாதிரியாக இருக்கும், நேர்மையுள்ள கிறிஸ்தவ ஆண் அல்லது பெண், தேவனுடைய மக்களைப் பழித்துரைத்து வன்மையாகத் தாக்குகிறவர்களை கடைசியில் வெட்கம் அடையும்படி செய்வார் என்று பேதுரு கூறினார். கிறிஸ்தவர்களின் விரோதிகள், கிறிஸ்தவ விசுவாசத்தின் கருத்துப்பொருளை ஆராய்ந்து பார்க்கும்படி கட்டாயப்படுத்தப் படுமளவுக்குக் கிறிஸ்தவர்கள் அவ்வளவு நல்ல மற்றும் மனச்சாட்சிக்கு உகந்த வாழ்க்கையினால், தங்கள் விரோதிகளைத் தோற்கடிக்கின்றனர்.

குற்றச்சாட்டுகளுக்குச் சிலுவையின் செய்தியைக் கொண்டு பதில் அளித்தல் (3:18-22)

தீமைக்கு நன்மையைத் திருப்பிச் செய்தலோ அல்லது வேறு விஷயமோ, எதுவாக இருப்பினும், கர்த்தர் தமது மக்களுக்கு மாதிரியாக இருக்கிறார். முன்னதாகப் பேதுரு வேலையாட்களுக்கு இயேசுவை மாதிரியாக உயர்த்திப் பிடித்திருந்தார் (2:18-21); பின்பு அவரைத் தீமைக்கு நன்மையைப் பதில் அளித்த பூரணமான உதாரணமாக உயர்த்திப் பிடித்தார். அநீதியுள்ளவர்களின் பாவங்களுக்காக இயேசு மரித்தார் (3:18). மனிதகுலத்திற்காக மாம்சத்தில் அவர் அடைந்த மரணத்தின் மூலமாக, நம்மைத் தேவனிடத்திற்குக் கொண்டுவர அவரால் முடிந்தது; ஆனால் அவரது மரணம் மாத்திரமே முழுமையான வரலாறு அல்ல. ஆவியில் அவர் உயிர்ப்பிக்கவும் செய்யப்பட்டார். மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்பதே அவிசுவாசிகளுக்குக் கிறிஸ்தவரின் நிறைவான பதிலாயிருந்தது.

அடுத்ததாக, நாம் புதிய ஏற்பாட்டில் மிகவும் கடினமான வசனங்களில் இரண்டைக் காண்கிறோம்: 3:19, 20. நோவாவின் நாட்களின்போது, கீழ்ப்படியாமல் "காவலிலுள்ள ஆவிகளுக்கு" இயேசு "பிரசங்கித்தார்" என்பது பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன? இவ்வசனங்களின் வசனரீதியான மற்றும் இலக்கணரீதியான பிரச்சனைகளைக் கணிசமான அளவுக்கு ஆராய்ந்த பின்பும், இதன் அர்த்தமானது தெளிவற்றதாக உள்ளது. இதன் சிரமங்களைப் பற்றிய விரிவான ஆய்வை நாம் மேற்கொள்ளப் போவதில்லை என்றிருக்கையில், இவைகள் புரிந்துகொள்ளப்பட்டுள்ள பொதுவான இரு வழிகளைக் கண்ணோக்குதல் முறையானதாக உள்ளது.

இவ்வசனத்தின் "அந்த" என்ற தொடக்க வார்த்தையின் விளக்கம் பற்றி முதன்மையான கேள்வி உள்ளது. இது "in which," "through whom" (NIV) அல்லது "by which" (KJV) என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பதில் பெயர்ச்சொல்லின் முதல்சொல்லானது 18ம் வசனத்தின் கடைசி வார்த்தையான "ஆவி" என்பது உறுதி. இந்தச் சொற்றொடரைப் பலர், வினை உரிச்சொல்லாக எடுத்துக் கொண்டுள்ளனர். அவ்வாறான விஷயத்தில், நோவாவின் நாட்களில் கீழ்ப்படியாது இருந்தவர்களுக்கு இயேசு, நேர்முகமாக அல்ல ஆனால் ஆவிக்குரிய வகையில் பிரசங்கித்தார் என்று அப்போஸ்தலர் கூறினார். நோவா அல்லது ஏவுதல் பெற்ற வேறு எந்த மனிதர் ஆகியோரின் பிரசங்கித்தல், ஒரு கருத்தில் இயேசுவின் பிரசங்கித்தலாக உள்ளதென்று நினைக்கப்படலாம். பேதுரு இந்த நிருபத்தை எழுதியபோது, கீழ்ப்படியாமையுள்ள ஆவிகள் "காவலில்" அதாவது

கல்லறையில் இருந்தன; ஆனால் நோவாவின் வார்த்தைகளின் மூலமாக இயேசு பிரசங்கித்திருந்த வேளையில் அந்த ஆவிகள் உயிரோடு இருந்தன.

மற்றவர்கள், KJVயில் "which" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள இவ்வார்த்தையை இயேசு மாம்சத்தில் மரணத்திற்கு உள்ளாக்கப்பட்டது மற்றும் ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டது ஆகிய முழுவதற்கும் ஒரு குறிப்பு என்ற வகையில் புரிந்து கொண்டுள்ளனர். இவ்வசனப் பகுதியானது, சிலுவையில் அறையப்பட்ட வேளை மற்றும் உயிர்த்தெழுந்த வேளை ஆகியவற்றிற்கு இடைப்பட்ட வேளையில், கர்த்தர் ஆவியாகப் பாதாள வட்டாரத்திற்குச் சென்று, பாவம் மரணம் ஆகியவற்றின்மீது தேவனுடைய வெற்றியை, அங்கு "காவலில்" இருந்த ஆவிகளுக்கு அறிவித்தார் என்று கூறுவதாக இருக்கலாம். அவரது செய்தியானது மனந்திரும்புதலை வேண்டிக்கொண்டிருக்காது, ஆனால் அது பாவத்தின் மீதான வெற்றிக்காகத் தேவனைத் துதித்து மகிமைப்படுத்துவதாக இருந்திருக்கும். நடபடிகள் 2:25-28ல் பேதுரு சங்கீதம் 16:8-11ஐக் குறிப்பிட்டது, இந்த விளக்கத்தை ஆதரிப்பதாகக் காணப்படுகிறது. இயேசுவின் ஆத்துமா பாதாளத்தில் (இது KJVயில் உள்ளது போன்று நரகமாக இராமல், மரித்தோரின் உலகமாக உள்ளது) விடப்பட வில்லை என்ற உண்மையானது, அவர் அங்கிருந்தார் என்ற உண்மையை மறைமுகமாக உணர்த்துகிறது.

முன்கூறப்பட்டுள்ள விளக்கங்கள் ஒவ்வொன்றும், தத்தனது பலங்களையும் பலவீனங்களையும் கொண்டுள்ளது, ஆனால் முதலாவது விளக்கமானது, புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியிலிருந்து இயேசுவின் ஊழியம் பற்றி நாம் அறிந்துள்ளவற்றுடன் மிகச்சிறப்பாகப் பொருந்துகிறது. இயேசு, சிலுவையில் தமது மரணத்திற்குப் பின்பு பாதாளத்திற்கு இறங்கிச் சென்றபோது அங்கு போதித்தார் என்ற கருத்தை 3:18-22 வசனப்பகுதி உறுதிப்படுத்துகிறது என்று நாம் எடுத்துக்கொண்டால் அன்றி, அதற்குப் புதிய ஏற்பாட்டில் மிகச்சிறிதளவே ஆதரவு உள்ளது. இந்தக் காரணத்தினால், இயேசு, தீர்க்கதரிசிகளின் பிரசங்கித்தலில் இருந்தார் (1:10, 11) என்ற அதே கருத்திலேயே, நோவா மக்களுக்குப் பிரசங்கித்த வேளையில் அவருடைய பிரசங்கித்தலில் இயேசு இருந்தார் என்று புரிந்து கொள்ளுதலே மிகச்சிறப்பானதாக இருக்கும்.

நோவாவும் அவரது குடும்பத்தாரும் வெள்ளப் பெருக்கில் காப்பாற்றப்பட்டது போன்றே கிறிஸ்தவர்களும் இரட்சிக்கப்படுகின்றனர் (3:21) என்பதால் பேதுரு, நோவாவையும் அவரது குடும்பத்தினரையும் குறிப்பிட்டார். நோவா தண்ணீரினால் காக்கப்பட்டார், கிறிஸ்தவர்களும் அதே போன்று தண்ணீரினால் இரட்சிக்கப்படுகின்றனர். பாவம் நிறைந்த மனிதகுலத்தை அழித்துப் பூமி கழுவி சுத்திகரிக்கப்பட்ட வேளையில், நோவாவும் அவரது குடும்பத்தினரும் காப்பாற்றப்பட்டனர், மற்றும் கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானத்தின் கழுவுதலினால் இரட்சிக்கப்படுகின்றனர். மற்ற விஷயங்கள் மத்தியில், பாவங்களை எடுத்துப்போடுவதில் அநீதியுள்ளவர்களுக்காக இயேசு அடைந்த மரணம் செயல்விளைவுள்ளதாக வேண்டும் என்றால், ஞானஸ்நானம் அத்தியாவசியமானது என்று பேதுரு தெளிவாக்கினார். ஞானஸ்நானம் என்பது இரட்சிக்கப்பட்டவர்களை இரட்சிக்கப்படாதவர்களில் இருந்து மிகச்சரியாகப் பிரிக்கும் கோடாக உள்ளது. இந்த ஞானஸ்நானம் என்பது மாம்சப்பிரகாரமான கழுவுதல் அல்ல, ஆனால் கீழ்ப்படிதலுக்கான ஆவிக்குரிய

செயல்பாடாக உள்ளது, இது நல்மனச்சாட்சியின் பதிலாக உள்ளது என்று பேதுரு கூறினார். ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தின் செயல்பாடு என்ற வகையில் செயல்விளைவுள்ளதாக இருக்கிறது. 3:22ல் அவர் தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார் என்பதான குறிப்பு சங்கீதம் 110:1க்குத் திரும்பிச் செல்கிறது. புதிய ஏற்பாடு இவ்வசனப் பகுதியை, கிறிஸ்துவின் தெய்வீகத்துவம் மற்றும் கர்த்தத்துவம் ஆகியவற்றிற்குச் சாட்சியாகத் திரும்பத் திரும்பக் குறிப்பிடுகிறது.

முடிவுரை

தேவனுடைய குடும்பத்தில், சகோதர சகோதரிகள் மத்தியில், உண்மையான அல்லது கற்பனை செய்துகொள்ளப்பட்ட தவறுகளுக்காக, ஒரு கிறிஸ்தவர் இன்னொருவர் மீது பழிதீர்த்துக் கொள்ளுதல் என்பதற்கு எந்த ஒரு நியாயப்படுத்துதலும் ஒருக்காலும் இருக்க முடியாது. ஒரு கிறிஸ்தவர் அவமானப்படுத்தப்படும்போது, அவர் ஆசீர்வாதத்தைப் பதிலாக அளிக்க வேண்டும். அவர் பொல்லாப்புக்குத் தமது நாவை விலக்கிக் காத்துக்கொள்வதன் மூலம், ஜீவனின் நன்மை மற்றும் ஆசீர்வாதங்களைத் தமக்குப் பாதுகாத்துக் கொள்வார்.

நன்மை செய்வதற்காகப் பாடநுபவித்தல் என்பது நமக்கு வருகிறதென்றால், நாம் நமது பாடுகள் ஆசீர்வாதங்களைக் கொண்டுள்ளன என்று கருத வேண்டும். மனிதர்கள் வாடிக்கையாகப் பயப்படும் விஷயங்களுக்கு, கிறிஸ்துவுக்குள் இருக்கும் நாம் பயப்படுவதில்லை. அதற்குப் பதிலாக, நமக்குள் இருக்கும் நம்பிக்கைக்கான காரணத்தைக் கேட்கும் எவரொருவருக்கும் பதில் அளிக்க நாம் தயாராக இருக்க வேண்டும். தீமைக்கு நன்மையைத் திருப்பிச் செய்வதில், கர்த்தர் தாமே மிகமேன்மையான உதாரணம் ஒன்றை நமக்கு முன்வைத்திருக்கிறார். அவர் தம்மை ஏற்றுக்கொண்டு தமக்குக் கீழ்ப்படிகிற எல்லாரையும் இரட்சிக்கும்படிக்கு, அநீதியுள்ளவர்களுக்காக மரித்தார். நோவாவும் அவரது குடும்பத்தாரும் தண்ணீரினால் காப்பாற்றப்பட்டது போலவே, நாமும் ஞானஸ்நானத் தண்ணீரில் கிறிஸ்துவின் இரத்தத்தினால் நமது பாவங்களில் இருந்து இரட்சிக்கப்படுகிறோம்.

8

எல்லாவற்றிலேயும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (1 பேதுரு 4:1–11)

ஒரு இளம் வயதுத் தந்தை ஒருமுறை என்னிடத்தில், "நான் மட்டும் வாழ்வில் ஒரு கருத்துக் கண்ணோக்கைப் பெற்றுக்கொள்ள முடிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!" என்று கூறினார். இந்த மனிதர் அக்கறை உள்ளவராக இருந்தார். இவர் தமது மனைவி மற்றும் பிள்ளைகள் ஆகியோருடன் ஓய்வெடுக்க ஒருக்காலும் நேரம் கொண்டிருந்தவராகக் காணப்படவில்லை. வியாபார வேலைகள் மும்முரமாக இராத வேளையிலும்கூட, அவர் வேலை மும்முரமாக இருக்கக் கட்டாயப் படுத்துவதை உணர்ந்தார். வாழ்வானது அவரது வேலையைச் சுற்றி அதிகம் அதிகமாகவும், அவரது குடும்பத்தைச் சுற்றி குறைவு குறைவாகவும் சுழன்றது. அவர் வாழ்வின் குறைவான முக்கியத்துவம் உள்ள விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் உணர்வைக் கொண்டிருந்தார். எவ்வாறு மாறுவது என்பதை அவர் அறியாதிருந்தார் என்பதே பிரச்சனையாக இருந்தது. அவர் செய்தவற்றை, வடிவமைப்பினால் செய்தார் என்பதற்கு மாறாக கட்டாயப் படுத்துதலினால் செய்தார் என்பதாகக் காணப்பட்டது. அவர் தம்மைப் பற்றிச் சரியாக மதிப்பிட்டிருந்தார் என்பதே அவரது நற்பெயராக இருந்தது. வாழ்வின்மீது அவருக்கு மிகச்சிறந்த கருத்துநோக்கு தேவைப்பட்டிருந்தது.

எவரொருவரும் அவர் தமது வாழ்வில் தவறான சில விஷயங்கள் இருப்பதை உணர்ந்தறியாத வரையில் அவர் தமது வாழ்வை மாற்றிக்கொள்ளப்போவதில்லை. நாம் பாவத்தில் பிடிக்கப்பட்டாலோ அல்லது வாழ்வின் மிக முக்கியமான விஷயங்களில் இருந்து பாதை விலகிமாத்திரம் போயிருந்தாலோ, மோசமான வழக்கங்களை முறித்துப் போட நமக்கு ஆதார மூலங்கள் தேவைப்படுகின்றன. இங்கு, பேதுரு தமது வாசகர்களுக்கு, அவர்கள் ஒருகாலத்தில் தங்கள் வாழ்வில் கொண்டிருந்த, பாவங்களின் பற்றுதலையும் நஷ்டத்தையும் முறித்துப் போட, அவர் எவ்வாறு உதவினார் என்பது தரப்பட்டுள்ளது. அவர், "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" என்று அவர்களுக்கு ஞாபகப்படுத்தினார் (4:7). அது வாழ்வில் ஒரு புதிய கருத்துக் கண்ணோக்கை இடுகிறது. கர்த்தர் சீக்கிரம் வருகிறார் என்பதை விசுவாசித்து, புதிய ஏற்பாட்டு சபையார் அவர் வருகையை எதிர்நோக்கியிருந்தனர்.

கிறிஸ்துவின் சிந்தையை ஆயுதமாகத் தரித்துக் கொள்ளுங்கள் (4:1-3)

ஆயுதப் போரின் மரணம் மற்றும் துன்பம் ஆகியவற்றைக் கண்டிருக்கும் எவரும் கடும்சோதனையை இலேசானதாக நினைப்பதில்லை. பேதுரு தமது

வாசகர்கள், ஒழுக்க நற்பண்பு மற்றும் தனிப்பட்ட நேர்மை ஆகியவற்றிற்கு மாதிரியாக இருக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்வதற்கு, யுத்தகளத்தின் வார்த்தையைப் பயன்படுத்துவதைத் தேர்ந்து கொண்ட போது, கிறிஸ்தவப் போராட்டத்தின் தீவிரத் தன்மையை அவர் அடிக்கோடிட்டார். அவர்கள் கிறிஸ்துவின் சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ள வேண்டியிருந்தது (4:1). இந்தச் சிந்தனை பிலிப்பியர் 2:5ல் உள்ள பின்வரும் சிந்தனையைப் போன்றதாகவே உள்ளது: "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது."

4:1ல் பேதுருவின் சிந்தனையினுடைய வளர்ச்சியினுடைய வளர்ச்சியானது (1) கிறிஸ்துவின் பாடுகளில் இருந்து (2) அவருடைய சிந்தையைக் கிறிஸ்தவர்கள் ஆயுதமாகத் தரித்துக் கொள்ளுதலுக்கு (3) பாடுபடுதல் மற்றும் பாவத்தில் இருந்து வெளியேறுதல் ஆகியவற்றிற்குச் செல்லுகிறது. 1ம் வசனத்தைப் புரிந்து கொள்ளுதல் என்பது இந்தச் சிந்தனைகளுடன் உள்ள தொடர்பைப் பகுத்தறிதலாக உள்ளது, ஆனால் அது சிறிய வகையிலான எடுத்தாளுதல் அல்ல. முதல் இரு சிந்தனைகள் பின்வருவது போன்று தொடர்புபடுத்தப்படலாம்: பாடுபடுதலைக் கிறிஸ்து கையாண்ட வகைமுறை, அவரது மக்கள் பாடுபட்டாக வேண்டியபோது கொண்டிருக்க வேண்டிய பண்பிற்கு மாதிரியாகி உள்ளது. கிறிஸ்தவர்கள் பாடுபடும்போது, அவர்கள் சகித்திருப்பதற்காக மாத்திரமல்ல, ஆனால் பாடுகளின் மத்தியில் அவர்கள் தங்கள் கருத்து நோக்கைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அவருடைய சிந்தையைத் தரித்துக் கொள்ளவேண்டியவர்களாய் இருந்தனர். பேதுரு இந்த நிருபத்தில் வேறொரு பகுதியில் செய்திருப்பது போன்றே, கிறிஸ்துவின் மக்கள் பின்பற்றுவதற்குக் கிறிஸ்துவையே உதாரணமாகச் சுட்டிக் காண்பித்தார்.

2ம் வசனத்தின் பின்வரும் பகுதி, மிகவும் கடினமானதாக உள்ளது: "மாம் சத்தில் பாடுபடுகிறவன் ... பாவங்களை விட்டோய்ந்திருப்பான்." வசனத்தின் இப்பகுதி குறைந்தபட்சம் இரண்டு விளக்கங்களுக்குக் கீழ்ப்பட்டுள்ளது. (1) ஒருவேளை, பாடுபடுதல் என்பது கிறிஸ்தவர்மீது நேர்மறைச் செயல்விளைவைக் கொண்டுள்ளது என்பது இதன் அர்த்தமாக இருக்கலாம். கிறிஸ்துவுக்காகப் பாடுபட்டிருப்பவர், தாம் வேறுவகையில் கொண்டிருக்க இயலாத விஷயமான, பாவத்தை எதிர்த்து நிற்குதல் என்பதில் பலமும் தீர்மானமும் கொண்டிருக்கலாம். ஒருகாலத்தில் இருந்தது போன்று, உலகம் மற்றும் மாம்சம் ஆகியவை இனியும் அவர்மீது பிடிப்புக் கொண்டிருப்பதில்லை என்ற கருத்தில் அவர் பாவத்தை விட்டு ஓய்ந்திருக்கிறார்.

(2) "மாம்சத்தில் பாடுபடுதல்" என்ற சொற்றொடர், பழைய பாவ மனிதனின் மரணத்திற்கு அதாவது ஆவிக்குரிய மரணத்திற்கு ஒப்புவமையாக இருத்தல் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. அவ்விஷயத்தில் பேதுரு, கிறிஸ்தவர் பாவத்திற்கு மரிப்பதை, அவர் கர்த்தருக்குள் ஆதாய மாக பெறுகிற ஜீவனுடன் நேரெதிராக ஒப்பிட்டார். அடுத்த வசனத்தில் (4:2) அவர் கிறிஸ்தவ வாழ்வை விவரித்தார். மேலும் உடனடி சந்தர்ப்பப் பொருளில் (3:21) பேதுரு, ஞானஸ்நானத்தைக் குறிப்பிட்டார். ரோமர் 6ல் பவுல், ஞானஸ்நானத்தைப் பழைய பாவமனிதனை மரிக்கச் செய்து புதிய ஜீவன் உள்ளவர்களாக உயிர்ப்பிக்கப்படுதல் என்று விவரித்தார். ரோமர் 6:7ம் வசனமானது, நமக்கு முன்பாக உள்ள வசனப்பகுதியைப் போன்றதாக

உள்ளது: "மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறானே." இவ்வசனத்தின் வார்த்தை அமைப்பும் 1 பேதுரு 4:1ன் வார்த்தை அமைப்பும் பல கருத்துக்களில் ஒன்றாக உள்ளன. பவுல் பல ஆண்டுகளுக்கு முன்பு தமது கடிதத்தை ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதியிருந்தார். பேதுரு அதை வாசித்திருக்க சாத்தியமுண்டு. இந்தக் காரணங்களினால், இரண்டாவது விளக்கமானது அதிகம் சரியாக இருக்க வாய்ப்பு உள்ளது.

முந்திய பாவத்தின் வாழ்வானது ஒரு கிறிஸ்தவருக்கு, கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வைக் குறித்த மதித்தலைக் கொடுக்க முடியும் என்பதில் சந்தேகம் இல்லை, ஆனால் பழைய பழக்கங்கள் விட்டுவிடக் கடினமானவைகளாக உள்ளன. பேதுரு, தமது வாசகர்கள் இச்சை, மோசம்போக்குதல் மற்றும் களியாட்டு ஆகியவற்றிற்குத் தங்களைப் போதுமான அளவுக்கு ஒப்புக்கொடுத்திருந்தனர் என்று அவர்களுக்கு நினைவூட்டினார் (4:3). அவர்களின் பழைய வாழ்வின் கவர்ச்சிமிக்க தன்மையானது அவர்கள் வேட்டையாடத் தொடர்ந்தது மற்றும் அது அவர்களுக்கு ஒரு பாரமாக இருந்தது. கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வானது பழைய வாழ்விற்கு மரித்தலை வேண்டிக்கேட்டது. அவர்கள் அந்த வாழ்வின் வழியில் சோதனை திரும்ப வர - அல்லது அதனுடன் உடன்பாடு செய்துகொள்ளக்கூட - எதிர்த்து நிற்க வேண்டியிருந்தது.

பயனின்றி வீணாகக் கழியும் வாழ்வை மறுத்தல் (4:4-6)

ஆசியா மைனரின் கிரேக்க நகரங்களில், சமூக மற்றும் சமுதாய வாழ்வானது, விக்கிரகாராதனை மற்றும் மதுபானம் பண்ணுதல் மற்றும் அந்த ஆராதனையுடன் அடிக்கடி இணைவுகொண்டிருந்த காமக்களியாட்டம் ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தது. கிறிஸ்தவர்கள் இந்தப் பொதுக் கொண்டாட்டங்கள் மற்றும் களியாட்டுகளில் பங்கேற்க மறுத்ததை, சுய மேன்மையின் உணர்வு என்றும் சமூக உணர்வில் குறைபாடு என்றும் சிலை வழிபாட்டுக்காரர்கள் முடிவுசெய்தனர்.

மத்திய இரண்டாம் நூற்றாண்டு காலத்தில் இருந்த பேச்சுக்கலையில் வல்லவரான ஏலியுஸ் அரிஸ்டைட்ஸ் என்பவர், தமது காலத்து உலகத்தின் பாவசிந்தனை கொண்ட தத்துவஞானிகள் மற்றும் புதிய கிறிஸ்தவர்களை விமர் சனம் செய்தார். அவர் பின்வருமாறு கூறினார்,

> *அவர்களின் நடக்கை, பலஸ்தீனத்தில் உள்ள தேவதூஷணம் உரைக்கும் மக்களின் நடத்தையைப் போலவே இருக்கிறது. அவர்களும் [அதாவது கிறிஸ்தவர்களும்] கூட, தங்களுக்கு மேல் இருப்பவர்களை உணர்ந்தறியாது இருக்கும் நிலைக்குத் தெளிவான அடையாளங்களினால் தங்கள் [தேச] பக்தியற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றனர், மற்றும் அவர்கள் கிரேக்கர்களிடத்தில் இருந்தும் எந்த ஒரு நல்ல விஷயத்திலிருந்தும் தங்களைப் பிரித்து வைத்துக் கொள்கின்றனர்.*[1]

"அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக் கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள்" (4:4) என்று அப்போஸ்தலர் கருத்துத் தெரிவித்த அதே காரணத்திற்காகவே,

பேதுருவுக்கு நெருங்கிய சமகாலத்தவரான அரிஸ்டைட்ஸ், மேற்கூறப்பட்ட வார்த்தைகளுடன், கிறிஸ்தவர்கள் மீது குற்றச்சாட்டுகளைக் குவித்தார்.

அரிஸ்டைட்ஸினால் தரப்பட்டது போன்ற வாய்மொழிக் குற்றச்சாட்டு என்பது ஒரு விஷயமாக இருந்தது, ஆனால் வாய்மொழிக் குற்றச்சாட்டுடன் அடிக்கடி, சரீரத்தைத் துன்புறுத்துதலும் இணைந்து இருந்தது. கிறிஸ்தவர்கள் பெரும்பாலும், கிரேக்க நகரங்களில் இருந்த ஏழை மக்கள் மற்றும் எவ்வித உரிமையும் அற்றவர்கள் ஆகியோரிடத்தில் இருந்தே தங்கள் உறுப்பினர்களை பெற்றிருந்தனர். மேல் வர்க்கத்தினர், செல்வம் அல்லது அதிகாரம் இல்லாத வர்களை நிந்திக்கச் சாய்ந்தனர். பேதுரு தமது நிருபத்தை எழுதியபின்பு பதினைந்து ஆண்டுகளுக்குள்ளாகவே, வெசூவியஸ் மலையினால் புதையுண்ட பாம்ப்பே நகரின் சுவர் ஒன்றில் யாரோ ஒருவர், “நான் ஏழை மக்களை வெறுக்கிறேன். யாரேனும் ஒருவர் ஒன்றுமில்லாமலேயே சிலவற்றை பெற விரும்பினால், அவர் ஒரு முட்டாளாக இருக்கிறார். அவர் வேண்டியதைச் செலுத்தட்டும் அப்போது அவர் அதைப் பெறுவார்” என்று எழுதியிருந்தார். கிறிஸ்தவர்கள், ஏழைகளாக இருத்தல் என்ற கூடுதலான இழுக்கைக் கொண்டிருந்தனர். கிறிஸ்தவர்களைப் பழித்துரைப்பவர்கள் “உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள்” என்று கூறி (4:5) பேதுரு கிறிஸ்தவர்களுக்கு இந்த ஆறுதலை வழங்கினார்.

இவையாவும் இருபத்தியோராவது நூற்றாண்டில் வாழும் கிறிஸ்தவர்களுக்குக் கூறுவது என்ன? உலகத்தின் களியாட்டு மற்றும் மோசம்போகுதல் ஆகியவற்றில் பங்கேற்கும்படி, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களைக் காட்டிலும் நவீன கிறிஸ்தவர்கள் குறைவாகவே வற்புறுத்தப்படுகிறார்கள் என்பதை நான் சந்தேகப்படுகிறேன். கிறிஸ்தவர்கள், மதுபானத்தை மறுக்கும், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் [ஏற்புடையவற்றை மாத்திரம்] தெரிவு செய்யும், தங்கள் இல்லங்களில் மாலைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வன்முறை மற்றும் பாலுறவுக் காட்சிகளை அனுமதிக்க மறுக்கும், பொதுச்சூதாட்டம் அல்லது வற்புறுத்தப்படும் கருக்கலைப்பு போன்றவற்றிற்கு எதிராக அரசாங்கத்தை ஆதரித்துக் குரல் கொடுக்கும், தங்கள் கொள்கைகள் போன்றவற்றிற்கு எதிராக, தாங்கள் ஆதரிக்கும் அல்லது எதிர்க்கும் விஷயங்கள் ஆகியவை வினோத மானதாக எண்ணப்படும் என்பதை அறிந்துள்ள மக்களாக உள்ளனர். அவர்கள் உலகத்துடன் ஒட்டியிருக்கும்படி வற்புறுத்தப்படுவார்கள். எந்தக் காலத்திலும் போன்றே, இருபத்தியோராம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கும் 4:1-6ல் உள்ள பேதுருவின் புத்திகூறுதல் தேவைப்படுகிறது.

4:6ல் நாம், “இதற்காக மரித்தோரானவர்கள், மனுஷர்முன்பாக மாம் சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தும், தேவன்முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக, அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது” என்று வாசிக்கிறோம். இவ்வசனத்தை நாம் எவ்வாறு புரிந்துகொள்கிறோம் என்பது 3:19, 20ஐப் பற்றிய நமது விளக்கத்தினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டிருத்தல் அவசியமாக உள்ளது. அந்த வசனங்கள், கிறிஸ்து தமது வெற்றியை அறிவிக்கப் பாதாளத்திற்கு இறங்கினார் என்று அர்த்தப்படும் என்றால், 4:6ம் வசன மானது, அவர் அங்கு சென்றது, மரித்தோர் “தேவன்முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக” என்ற விளைவை ஏற்படுத்தியது என்று கூறுவதாகிறது. நாம்

கிறிஸ்துவுக்குப் புறம்பே மரித்து, பாவத்தில் இழந்துபோகப்பட்டு, மரணத்திற்குப் பின்பு மனந்திரும்பி இரட்சிக்கப்பட இன்னொரு வாய்ப்பைப் பெறுவோம் என்று முடிவுசெய்வோமா? இது முடியாது! இவ்வசனத்தை மிக நெருக்க மாகக் கண்ணோக்குதல், வினைசொற்கள் மாறியிருப்பதை வெளிப்படுத்துகிறது. "மரித்தோரானவர்களுக்கு" சுவிசேஷம் "பிரசங்கிக்கப்பட்டது." பேதுரு தமது நிருபத்தை எழுதியபோது அவர்கள் மரித்தவர்களாக இருந்தனர். அவர்களுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டபோது அவர்கள் மரித்திருந்தனர் என்று எந்த ஒரு கருத்தும் இவ்வசனத்தில் இல்லை.

4:6ம் வசனம், மனிதர்கள் மரித்த பின்பு மனந்திரும்பி இரட்சிக்கப்படலாம் என்று போதிக்கிறது என்பதாகக் கொண்டால், அது புதிய ஏற்பாட்டின் வேறிடங்களில் உள்ள போதனைக்கு முரண்படுவதாக உள்ளது. எபிரெயர் 9:27, 28ம் வசனப்பகுதி, "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" என்று கூறுகிறது. யோவான் 5:28, 29ல் இயேசு, தமது சத்தத்தைப் பிரேதக்குழிகளில் உள்ளவர்கள் கேட்கும் காலம் வரும் என்று உரைத்தார், அப்போது சிலர் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் மற்றவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் இருப்பார்கள் என்று அவர் கூறினார். அவருடைய வசனங்கள், மரணத்திற்குப் பின்பு மனம் மாறுதல் என்ற எதையும் அனுமதிப்பதில்லை. மற்ற வசனங்களும் (1 தெசலோனிக்கேயர் 4:13-18; ரோமர் 2:3; 14:10; 1 கொரிந்தியர் 4:5; 2 கொரிந்தியர் 5:10; 2 பேதுரு 3:7) இதையே போதிக்கின்றன. மரித்திருந்த மனிதர்களுக்கு (அவர்கள் மரிப்பதற்கு முன்னதாக) சுவிசேஷம் போதிக்கப்பட்டது என்று பேதுரு கூறியதாக நாம் முடிவு செய்தாக வேண்டும். இந்த மனிதர்கள் தங்களின் மாம்சப்பிரகாரமான கிரியைகளின்படி கண்டிப்பாக நியாயம் தீர்க்கப்பட்டால், அவர்கள் தங்கள் பாவத்தில் இழந்துபோகப்படுவார்கள், ஆனால் அவர்கள் சுவிசேஷத்தை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிந்ததால், அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். அவர்கள் "தேவன்முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக" என்று பேதுரு கூறினார்.

எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று என்று புரிந்துகொள்ளுதல் (4:7-11)

கிறிஸ்தவர்கள் கர்த்தரின் வருகையை மாத்திரம் எதிர்நோக்கியிருப்பதில்லை; அவர்கள் அவரது உடனடி வருகையை எதிர்நோக்கி இருக்கின்றனர். இது எப்போதும் இப்படியாகவே இருந்துள்ளது. 1 கொரிந்தியர் நிருபத்தைப் பவுல், "கர்த்தரே, வாரும்" என்று மாத்திரம் அர்த்தப்படுகிற மாரநா தா *என்ற இரு அரமாயிக்மொழி வார்த்தைகளைக் கொண்டு முடித்தார். வேதாகமத்தின் கடைசிப் புத்தகமான வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி வார்த்தைகளில் பின்வருபவை உள்ளன: "ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்" (வெளிப்படுத்தின விசேஷம் 22:20). பவுல், "இனிவரும் காலம் குறுகினதானபடியால்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 7:29). யாக்கோபு,*

“கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே” என்று கூடுதலாகக் கூறினார் (யாக்கோபு 5:8). தொடக்ககால சபையார் கர்த்தரின் உடனடி வருகையை எதிர்நோக்கியிருந்தபோது, அவர்கள் செய்யும்படி இயேசு அவர்களிடத்தில் கூறியிருந்ததை மாத்திரம் செய்துகொண்டிருந்தனர். அவர், “உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்” என்று கூறியிருந்தார் (மத்தேயு 24:42).

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்துள்ளன, மற்றும் அவரது சபையானது, “இயேசு சீக்கிரம் வருகிறார்” என்று தொடர்ந்து பாடுகிறது. சபை என்பது எப்போதுமே முடிவு காலத்தில் வாழ்கிற என்று அர்த்தப்படும் “பரவசநிலை சமூகமாக” உள்ளது. கர்த்தர் ஒருநாளில் வருவார் என்பது கிறிஸ்தவ வாழ்விற்கு அதன் கருத்து நோக்கத்தையும் இயக்கும் சக்தியையும் தருகிற கற்பனைக்கருத்தாக இருப்பதில்லை. அது பின்வருவதாக உள்ளது: “எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று” (4:7). கட்டளைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசரமானது அந்த உய்த்துணருதலில் இருந்து தனது வல்லமையைத் தரவழைக்கிறது.

ஆரோக்கியமான முடிவெடுப்பவர்களாக இருங்கள்

அசுத்த ஆவி பிடித்திருந்த மனிதனை இயேசு குணமாக்கிய பின்பு, அந்த நகரின் மக்கள் நடந்திருந்தது என்ன என்பதைக் காணும்படி வந்தனர் என்று மாற்கு பதிவுசெய்தார். அவர்கள் வந்தபோது, அசுத்த ஆவிகளின் படையைக் கொண்டிருந்த அம்மனிதன் “வஸ்திரந்தரித்து, உட்கார்ந்து, புத்தி தெளிந்திருக்கிறதைக்” கண்டனர் (மாற்கு 5:15). “புத்தி தெளிந்திருக்கிறதை” என்று மொழிபெயர்க்கபட்டுள்ள வார்த்தையானது, 4:7ல் “தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து” அல்லது “தெளிவான சிந்தை உடையவர்களாயிருந்து” (NIV) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையாக உள்ளது. பேதுரு தமது வாசகர்களை, அவர்களின் சரியான சிந்தைகளில், கருத்துணர்வு, நிதானம் நம்பகத்தன்மை ஆகியவற்றைக் கொண்டிருக்கும்படி வேண்டிக்கொண்டார்.

எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று என்று நாம் உணர்ந்தறியும்போது, நாம் “ஆரோக்கியமான முடிவும் தெளிந்த ஆவியும்” உடைவர்களாக இருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. இவ்வார்த்தைகள், கிறிஸ்தவர் என்ற வகையில் வாழ்க்கையை முனைப்புடன், பகுத்தறிவுடன் அணுகுதல் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. வில்லியம் ஜேம்ஸ் என்பவர், *மத அனுபவத்தின் பல்வேறு வகைகள்* என்ற தமது மாபெரும் நூலில், தேவபக்தியாயிருத்தல் என்பது அர்த்தப்படுத்துவது என்ன என்று ஆராய்ந்தார். பல கூறுகளைத் தனிப்படுத்திப் பரிசோதித்த பின்பு அவர், தேவபக்தியின் இன்றியமையாத பண்பு என்பது அது தன்னைத் தானே மும்முரமானதாக எடுத்துக்கொள்கிறது என்று அவர் கூறினார். கிறிஸ்தவம் என்பது ஒரு கவலையான மார்க்கம் அல்ல, ஆனால் அது தமது செய்தியை, அதன் எதிர்பார்ப்புகளை, அதன் நம்பிக்கைகளை மற்றும் அதன் பயங்களை மும்முரமாக எடுத்துக் கொள்கிறது. இப்படிப்பட்ட ஒரு கருத்து நிலைப்பாடு இதை இயல்பாகவே, ஜெபத்திற்குத் தரவழைக்கிறது, ஏனெனில் ஜெபம் என்பது தேவபக்தியின் முக்கிய சாராம்சமாக உள்ளது.

ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்

அன்பு விளக்கத்தை எதிர்த்து நிற்கிறது. அது இன்னொருவரின் நலத்தை நாட உறுதிப்பாடு கொண்டுள்ள நபரின் உணர்வுப் பூர்வமான பிணைப்பை உள்ளடக்குகிறது, மற்றும் அது சுயத்தைத் தியாகம் செய்யும் ஆவியின் பெருந்தன்மையை உள்ளடக்குகிறது. இதைக் காட்டிலும் அதிகமாகக் கூறுதல் கடினமானதாக உள்ளது. ஆசியா மைனர் பகுதியில் இருந்த சபைகள் அனுபவித்த இடர்ப்பாடு மற்றும் துன்புறுத்தப்படுதலின்போது, அன்பானது வேறு எந்த வேளையைக் காட்டிலும் அதிகமாகக் கிறிஸ்தவர்கள் ஒருவர் பிறரையும் கர்த்தரையும் அதிகமாய்ப் பிணைத்தது. சிறு எரிச்சல்களும் மனித ரீதியான வினோதங்களும் சரீரத்தின் சபையின் ஒருமைப்பாட்டைப் பரீட்சித்தபோது, "அன்பு திரளான பாவங்களை மூடும்" என்று பேதுரு கூறினார் (4:8).

உபசரிப்புத் தன்மை உடையவர்களாக இருங்கள்

இல்லத்தின் முழு உபசரிப்பையும் மற்றும் உடைமைகளையும், அந்நியர்களுக்கு அல்லது விருந்தினர்களுக்கு அளித்தல் என்பது நினைவுக்கு அப்பாற்பட்ட காலத்தில் இருந்தே, அண்மைக் கிழக்கு நாடுகளில் ஏறக்குறை ஒரு புனித நடைமுறையாக இருந்துள்ளது. ஆதியாகமம் 18:1-8ல் ஆபிரகாமின் கூடாரத்தின் கதவருகில் இரண்டு அந்நியர்கள் வந்த நிகழ்ச்சியானது இந்த பழக்கத்தை நன்கு விவரிக்கிறது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதி யவர், "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு" (எபிரெயர் 13:2). என்று எழுதியபோது இந்த நிகழ்ச்சியையே குறிப்பிட்டார் என்பது உறுதி.

ஊழியத்தின் நிமித்தம் பயணம் செய்யும் போதகர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் தொடக்ககால சபையில் இருந்தனர் என்பது 4:9ல் பேதுருவினால் தரப்பட்ட இந்தப் புத்திமதிக்குப் பின்னணியாக இருந்திருக்கலாம். பயணம் செய்யும் போதகர்களிடத்தில் உபசரிப்புத்தன்மையுடன் இருக்க வேண்டும் என்ற கிறிஸ்தவப் பொறுப்பானது, யோவானுடைய நிருபங்கள் எழுதப்பட்ட காலத்தில் இருந்தே சபையில் ஒரு முக்கிய விஷயமாகி இருந்தது. உலகத்தில் அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றி இருந்ததாக யோவான் எச்சரிக்கை செய் திருந்தார் (1 யோவான் 4:1). யோவான் எழுதிய இரண்டாம் மற்றும் மூன்றாம் நிருபங்கள், பயணம் செய்யும் இந்தத் தீர்க்கதரிசிகளுக்குக் கிறிஸ்தவர்கள் எப்போது உபசரிப்பு அளிக்க வேண்டும் மற்றும் எப்போது உபசரிப்பு அளிக்கக் கூடாது என்பது பற்றி, அவர்கள் [கிறிஸ்தவர்கள்] பகுதியில் இருந்த சில குழப்பங்களைப் பிரதிபலிக்கின்றன.

தேவன் உங்களுக்குக் கொடுத்துள்ள வரத்தைப் பயன்படுத்துங்கள்

பேதுரு, கிறிஸ்தவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய இரண்டு வரங்களை (அதாவது, போதித்தல் மற்றும் உதவிசெய்தல் என்பவற்றை) மாத்திரம் விவரித்து உரைத்திருப்பினும், இன்னும் பல வரங்கள் உள்ளன என்பதை அவர் உணர்ந்து அறிந்திருந்தார் என்பது பற்றிச் சந்தேகம் எதுவும் இல்லை. கிறிஸ்தவர்களின் தாலந்துகள் வேறுபடுகின்றன என்பது புதிய ஏற்பாட்டிலேயே விட்டுவிடமுடியாத போதனைகளில் ஒன்றாக இருக்கிறது, ஆனால் நமது

தாலந்து எதுவாக இருந்தாலும் அதைக் கர்த்தருக்கென்று இலவசமாய்க் கொடுக்க வேண்டியது நமது பொறுப்பாகும். இவ்வசனப் பகுதிகளில் மிகவும் குறிப்பிடத்தக்கவற்றைப் பற்றிய சுருக்கமான ஆய்வில் இருந்து நாம் பயனடைய முடியும்.

லூக்கா 12:48ல் இயேசுவின் எச்சரிக்கை நமது கவனத்தை ஈர்க்கிறது: "எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்." லூக்கா சுவிசேஷத்தில் ராத்தல்களின் உவமை (லூக்கா 19:11-27) இந்த எச்சரிக்கையைப் பின்பற்றுகிறது; மத்தேயு சுவிசேஷத்தில் நாம் தாலந்துகளின் உவமையைக் காணுகிறோம் (மத்தேயு 25:14-30). இந்த உவமைகளின் விபரங்கள் வேறுபட்டு இருந்தாலும், செய்தியானது ஒன்றாகவே உள்ளது: தேவன் நமக்குத் தந்துள்ள தாலந்துகளை, எஜமானருக்கான ஊழியத்தில் பயன்படுத்தத் தவறுதல் என்பது தேவனுடனான நமது உறவை இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்குகிறது.

ரோமர் 12:6ல் பவுல், "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே" என்று எழுதினார். பின்பு அவர் தமது வாசகர்கள் கொண்டிருந்து இருக்கக் கூடிய வரங்களின் சில வகைகளையும், அவற்றைப் பயன்படுத்துதலில் அவர்களின் பொறுப்புகளையும் பட்டியலிட்டார். 1 கொரிந்தியர் 12:4ல் அவர், "வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே" என்று கூறினார். 12:7ல் அவர் "ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது" என்று கூடுதலாகக் கூறினார்.

4;10, 11ல் பேதுரு தமது வாசகர்களுக்கான அறிவுறுத்துதலில், தேவன் கொடுத்துள்ள தாலந்துகளைப் பயன்படுத்துதலில் கிறிஸ்தவப் பொறுப்பின் அதே பாடங்களைப் போதித்தார். இந்தத் தாலந்துகள் எல்லாவற்றின் தொகுப்பாகக் கருதப்படக்கூடிய இரண்டு வரங்களின்மீது பேதுரு கவனம் குவித்தார் என்பதே அவரது அறிவுறுத்துலில் காணப்படும் வேறுபாடாக உள்ளது: போதித்தல் மற்றும் உதவிசெய்தல். போதிக்கும் வரம் கொண்டிருந்த கிறிஸ்தவரின் பொறுப்பினுடைய தீவிரத் தன்மை பற்றிப் பேதுரு வலியுறுத்தினார்: "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்" (4:11). KJV வேதாகமத்தில் "Let him speak as the oracles of God" என்றுள்ளது மற்றும் NIV வேதாகமத்தில் "He should do it as one speaking the very words of God" என்றுள்ளது. தேவன் வெளிப்படுத்தியுள்ளதைத் தவிர வேறு எந்தச் செய்தியையா வது சார்ந்திருக்கும் பிரசங்கியார் அல்லது போதகர், அப்போஸ்தலரின் இந்த அறிவுறுத்துதலைப் புறக்கணிக்கிறார்.

எல்லாக் கிறிஸ்தவர்களும், போதிப்பதற்கோ அல்லது மக்கள் முன்பாக எடுத்துரைப்பதற்கோ திறன் கொண்டிருப்பதில்லை, ஆனால் ஒவ்வொருவரும், தேவனுடைய ஊழியத்திலும் அவரது மக்களுக்கான சேவையிலும் பயன்படுத்தக் கூடிய தாலந்துகள் சிலவற்றைக் கொண்டுள்ளனர். பேதுரு, "ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்" என்று கூறினார் (4:11). "உதவி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது "உதவிக்காரர்" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் வினை வடிவமாக உள்ளது, ஆனால் பேதுரு, உதவிக்காரர்களின் பொறுப்புடன் தமது குறிப்புரைகளை மட்டுப்படுத்தி விடவில்லை. உதவிசெய்தல் என்பது தேவனுடைய இராஜ்யத்தில் பெரியவனாகுதலை அடைதலாக உள்ளது (மத்தேயு 20:25, 26). நாம் தேவனைப்

பிரியப்படுத்த வேண்டும் என்றால், நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையைப் பற்றிப் பிறரிடம் தற்காப்பை ஏற்படுத்த, நாம் கொண்டிருக்கும் எந்தத் தாலந்துகளையும் நாம் பயன்படுத்த வேண்டும்.

முடிவுரை

1 பேதுரு நிருபத்தில் மேலாதிக்கம் செலுத்தும் இரண்டு ஆய்வுக்கருத்துகள் - கிறிஸ்தவர்கள் துன்புறுதல் மற்றும் கர்த்தரின் மறுவருகை - ஆகியவை 4:1-11ன் செய்திக்கு அடிப்படையாக உள்ளன. கிறிஸ்துவின் பாடுகளை மறைமுகமாய்க் குறிப்பிட்டிருந்த பேதுரு, கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வில் மேலாதிக்கம் செலுத்தியிருந்த பழைய பாவங்களுக்கு மரிக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டார். தேவனுடைய மக்கள் பேதுரு கூறுவதைக் கவனிப்பார்கள் என்றால், அவர்கள் பரிசுத்த வாழ்வை வாழ்வதற்கான புதுப்பிக்கப்பட்ட தீர்மானத்துடன், எதிர்ப்பிற்கும் துன்புறுத்தப்படுதலுக்கும் பதில் அளிப்பார்கள்.

பேதுருவும் முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்களும், கர்த்தர் விரைவில் திரும்ப வருவார் என்று விசுவாசித்திருந்ததால், அப்போஸ்தலரின் புத்திமதிகளுக்கு அவசரத் தேவை ஒன்றிருந்தது. அவர்கள் சிறிது காலமே கொண்டிருந்தனர். செய்ய வேண்டியது எதுவோ, அது விரைவில் செய்யப்பட வேண்டியிருந்தது. இரட்சிக்கப்பட வேண்டியவர்கள் போதிக்கப்பட வேண்டியிருந்தனர். அவர்கள் கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாக வேண்டியிருந்தனர். அவர்களின் வாழ்வில் கிறிஸ்து கொண்டு வந்திருந்த மாபெரும் சந்தோஷத்தை அவர்களுக்குப் பேதுரு, 1:6ல் நினைவுபடுத்தினார், ஆனால் பின்பு அவர், "என்றாலும், ... இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்" என்று கூடுதலாகக் கூறினார். துன்புறுதல் என்பது கொஞ்சக் காலம் மாத்திரமே இருந்தது. எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. கர்த்தருடைய மறுவருகை சமீபமாக உள்ளது என்பதே அன்றும் இன்றும் உள்ள சபைக்கு விடையாக உள்ளது. நாம் கடைசி காலத்தில் வாழ்கிறோம். அந்த உணர்ந்தறிதலானது கிறிஸ்தவருக்கு, அவர் உரிமை கொண்டுள்ளவை மீது, அவர் கற்றறிந்துள்ளவை மீது மற்றும் இந்த வாழ்வில் அவர் என்ன செய்கிறார் என்பதன்மீது, தகுதியான கருத்து நோக்கைத் தருகிறது. "ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்."

குறிப்பு

[1]Aelius Aristides *Orations* 46.

9

கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்றிருங்கள் (1 பேதுரு 4:12–19)

பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள மார்க்கக் குழு ஒன்று, நீங்கள் செய்தித் தாளில் படித்திருக்கக் கூடிய, ஆர்வத்திற்குரிய ஒரு பழக்கத்தைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் ஈஸ்டர் தினத்திற்கு அண்மையில், அவர்களில் சிலர் தங்கள் முதுகுகளில் சிலுவையைக் கட்டிக்கொண்டும், மற்றவர்கள் அவர்களுக்குப் பின்னாலும் ஊர்வலமாகச் செல்வார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்த உடன், சிலுவையைச் சுமந்து செல்லும் மனிதர்கள் தங்களை உண்மையிலேயே அந்தச் சிலுவைகளில் அறையச் செய்து சற்றுநேரம் உயர்த் தியிருக்கச் செய்வார்கள். இதைச் செய்கின்ற மக்கள் உண்மை உள்ளவர்கள் என்பது தெளிவு, ஆனால் "கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகள் ஆகுதல்" என்பது முற்றிலும் வேறுபட்ட ஒன்று என்பதில் நான் உறுதியாயிருக்கிறேன். அவரது பாடுகளில் கிறிஸ்தவர்கள் பங்கேற்கும்போது, 4:13ல் கிறிஸ்தவர்கள் அவற்றிற்குப் பங்காளிகள் ஆனார்கள் என்ற கருத்தில், அது அவர்கள் கர்த்தர் வாழ்ந்தது மற்றும் போதித்தது போன்று தாங்களும் வாழ்ந்து போதித்ததால் ஆனதாக உள்ளது.

பாடுகளைக் கண்டு திகைப்படைய வேண்டாம் *(4:12-15)*

பாடுகளைப் பற்றிப் பேதுரு, தமது வாசகர்களுக்குக் கொடுத்த வெளிப்படையான நான்கு குறிப்புகளில் *(1:6, 7; 3:13-17; 4:12-19; 5:9, 10)*, *4:12-19*ன் விவரிப்பு மிகவும் விரிவானதாக உள்ளது. 12ம் வசனத்தில் தொனியும் பாடக்கருத்தும் திடீரென்று மாறுவதைக் கணக்கிடச் சிலர், *4:11* வரையிலும் பேதுரு தமது நிருபத்தை எழுதிவிட்டுப் பின்பு அதை அப்படியே வைத்துவிட்டார் என்றும், துன்புறுத்தப்படுதல் வலிவான வகையில் தொடங்கிற்று என்ற செய்தி கிடைக்கப்பெற்ற பின்புதான் அவர் மீண்டும் அந்த நிருபத்தைத் தொடர்ந்து எழுதி முடித்தார் என்றும் கூறும் அளவிற்குச் சென்றுள்ளனர். அது உண்மையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், 11ம் வசனத்தில் உள்ள இறைபுகழ்ச்சியானது, 11 மற்றும் 12ம் வசனங்களுக்கு இடையில் அவரது சிந்தனையில் உள்ள முறிவின் கருத்தை ஆதரிக்கிறது.

முறைமைகளும் வழிகளும் மாறும், ஆனால் இயேசு போதித்து வாழ்ந்த படியே போதிக்கவும் வாழவும் மக்கள் எங்கெல்லாம் மும்முரமாக முயற்சி செய்கின்றனரோ, அங்கெல்லாம் துன்புறுத்தப்படுதல் தொடரும். *2 தீமோத் தேயு 3:12*ல் பவுல் வெளிப்படையாகப் பின்வருமாறு கூறினார்:

“அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.” சமாதானப் பிரபுவானவர் “நான் பூமியிலே சாமாதனத்தை உண்டாக்கவந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்கவந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று கூறினார் என்பது எவ்வளவு முரண்பாடான மெய்யுரையாக உள்ளது? (லூக்கா 12:51). இயேசுவைக் கிறிஸ்து என்று அறிக்கையிடுவதால் பாடுபட வேண்டியுள்ள எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் மதிப்புமிக்க ஆதாரவளமாகப் பயன்படக்கூடிய நடைமுறை அறிவுரைகள் சிலவற்றைப் பேதுரு தமது வாசகர்களுக்கு கொடுத்தார்.

பாடுகள் எதிர்பார்க்கப்பட வேண்டியவைகளே

கிறிஸ்தவர்கள் ஏன் வதைக்கப்படவும் சிறுமைப்படுத்தப்படவும் வேண்டும் என்பதற்கு உறுதியான காரணம் எதுவும் இருப்பதில்லை. முதல் நூற்றாண்டு உலகத்தின் ஆசியா மைனர் பகுதியில், ஆண்களும் பெண்களும் நல் விசுவாசத்தில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருந்தனர். அவர் தேவனுடைய குமாரன் என்று அவர்கள் விசுவாசித்தனர்; அவர்கள் தங்கள் விசுவாசத்தில் தங்களை ஆதரித்த மற்றும் ஊக்குவித்த மக்களைக் கண்டறிந்தனர். அவர்கள் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாக நடத்த, சுயத்தை அழித்துப் பாழாக்கும் பாவங்களில் இருந்து விலகியிருக்க, தங்கள் குடும்பங்களை நன்கு நடத்த, மற்றும் கடினமாக உழைப்பதால் நேர்மையாகப் பொருளீட்ட நோக்கம் கொண்டிருந்தனர். அவர்கள் துன்புறுத்தப்படுதலை எதிர்பார்ப்பதற்குக் காரணம் எதையும் கொண்டிருக்கவில்லை. அது ஏன் நடக்கிறது என்று அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. பேதுரு உண்மையான விளக்கம் எதையும் அளிக்கவில்லை; அது தவிர்க்க முடியாத ஒரு உண்மை நிலை என்று மாத்திரம் அவர் உறுதிப்படுத்தினார் (4:12).

ரோமப் பேரரசின் தொடக்க நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டது ஏன்? இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும் முயற்சியாக, கற்றறிந்த மனிதர்கள், கடந்த நூறு அல்லது அதற்குச் சற்றேறக் குறையலான ஆண்டுகளில், பழங்காலப் பதிவேடுகளை ஆராய்வு செய்து பல தொகுதியாக புத்தகங்களை எழுதியிருக்கின்றனர். அவர்கள் ஒரு பகுதி மாத்திரமே வெற்றி நிறைந்தவர்களாக உள்ளனர். கிறிஸ்தவர்கள் மனமாற்றங்களை ஆதாயப்படுத்த முயற்சி செய்ததால் அவர்களைச் சிலர் எதிர்த்தனர். ஓரிகென் என்ற பெயர்கொண்ட மூன்றாம் நூற்றாண்டு எழுத்தாளர் ஒருவர், கிறிஸ்தவர்களுக்குக் கசப்பான விரோதியாக இருந்த செல்ஸஸ் என்பவருக்குப் பதில் அளிக்க ஒரு புத்தகத்தை எழுதினார். ஓரிகெனின் புத்தகம் இன்றும் உள்ளது, ஆனால் செல்ஸஸ் எழுதியது என்ன என்பதை நாம், ஓரிகென் பதிவுசெய்துள்ள நீண்ட மேற்கோள்களில் இருந்து மட்டுமே அறிகிறோம். கிறிஸ்தவர்கள் “கம்பளி வேலை செய்பவர்கள், செருப்புத் தைப்பவர்கள், சலவைத் தொழிலாளர்கள், மற்றும் மிகவும் கல்வியறிவற்றவர்களும் நயப்பாங்கற்ற நாட்டுப்புறத்தவர்களுமாக இருந்தனர்” என்று செல்ஸஸ் விவரித்தார். அவர்கள், வாழ்வதற்கான வழி என்று தாங்கள் அறிந்திருந்ததை “தனிமையில் இருந்த சிறு பிள்ளைகளும் அவர்களுடன் இருந்த மதியற்ற பெண்களும்” நம்பி இணங்குபடி அவர்களை வஞ்சித்தனர் என்று அவர் கூறினார். மற்றவர்களும், கிறிஸ்தவர்கள் குடும்ப வாழ்விற்கு

இடையூறாக இருப்பதாகவும் ஒன்றுமறியாத தங்கள் பிள்ளைகளையும் பேதையர்களான தங்கள் மனைவியர்களையும் கிறிஸ்துவை அறிக்கையிடும்படி வசப்படுத்த முயற்சி செய்ததால், அவர்களை விமர்சிப்பதிலும் துன்புறுத்துவ திலும் செல்ஸஸுடன் இணைந்திருந்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

அவிசுவாசிகள் கிறிஸ்தவர்களை வெறுப்பதற்குப் பிற காரணங்களைக் கண்டறிந்து இருக்கலாம், ஆனால் அவர்கள் [கிறிஸ்தவர்கள்] நல்லவர்களாக இருந்தனர் என்பது ஒரு முக்கியமான காரணமாக இருந்தது என்பது நிச்சயம். பொய்யுரைத்தல், திருடுதல் மற்றும் வேறுவகையில் தங்கள் சக மனிதரைத் தவறாகப் பயன்படுத்துதல் என்பவற்றைச் செய்பவரின் பாவங்கள் ஒழுக்க நேர்மையுடனும் தூய்மையுடனும் உள்ளவர்களின் வாழ்வுடன் நேரெதிராக ஒப்பிட்டுப் பார்க்கையில் அதிகம் மன்னிக்கப்பட முடியாதவைகளாக உள்ளன. காலத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் உள்ள கிறிஸ்தவர்கள், தேவபக்தி இல்லா தவர்களின் கோபாக்கினையை உணர்ந்தனர் என்பதற்கான ஒரு முக்கியமான காரணத்தை யோவான் தொட்டார்: “பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்கவேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே. என் சகோதரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்” (1 யோவான் 3:12, 13). கிறிஸ்தவர்கள் வாழ்விற்கான தங்கள் நிலைப்பாட்டை இயேசு வாழ்ந்த வாழ்வினுடையது போன்றதாக்கும் போது, தங்கள்மீது பற்றியெரியும் அக்கினிபோன்ற சோதனைகள் வரும்போது அதைப் புதுமை யானவையாக நினைக்கக் கூடாது.

அவருடைய பாடுகளுக்குப் பங்காளிகளாகுதல் மகிழ்ச்சிக்குக் காரணமாகிறது

பேதுருவைப் பொறுத்த மட்டில், கிறிஸ்தவர்கள் துன்புறுதலுக்கான காரணம் அந்தத் துன்பத்தின் விளைவைப்போல் குறிப்பிடத் தக்கதாக இருக்கவில்லை. அவர்கள் நசுக்கப்பட்டு, சோதிக்கப்பட்டபோது, அவர்கள் கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகளாகும் சிலாக்கியம் அருளப்பட்டவர்களாக இருந்தனர் (4:13). அதுவே மகிழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது. இவ்வுலகத்தில் கிறிஸ்துவுடன் பாடுகளை அனுபவிக்கும் மகிழ்ச்சியானது, அவரது மகிமையின் வெளிப்படுதலுக்கு ஆயத்தமாக இருந்தது. அந்த மகிமை வந்தபின்பு, இப்போதைய சந்தோஷமானது எடுத்துரைக்க இயலாத சந்தோஷமாக மாற்றப்படும்.

கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்தப் பாடுகளினால், தேவனுடைய குமாரனின் ஜீவன் மற்றும் ஊழியம் ஆகியவற்றுடன் பிணைக்கப்படுகின்றனர் என்ற சிந்தனையானது தேவவசனங்களில் வேறு இடங்களிலும் காணப்படுகிறது. பவுல், “இப்பொழுது நான் உங்கள்நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்” என்று எழுதினார் (கொலோசெயர் 1:24). ஒருவேளை பவுல், இயேசுவுக்குப் பாடுகளைக் கொண்டு வந்ததான, தேவனுக்குக் கீழ்ப்படிதல் உள்ள அதே வாழ்வு அவரது சீஷர்களுக்கும் பாடுகளைக் கொண்டுவரும் என்று கூறியிருக்கலாம்.

கிறிஸ்துவுக்குள் செய்யப்பட வேண்டிய ஊழியம் உள்ளது. தேவனுடைய மக்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து தேவபக்தியுடன் வாழும்போது, ஒருகருத்தில் அவர்கள் கிறிஸ்து செய்த ஊழியத்தை நிறைவேற்றுகின்றனர். அதுபோல, அதற்காக அவர்கள் துன்புறுத்தப்படுகிறபோது, அவர்கள் அவரது பாடுகளை நிறைவேற்றுகின்றனர். தேவனுடைய குமாரனின் ஊழியம் மற்றும் பாடுகளில் பங்கேற்றல் என்பது சந்தோஷத்திற்குக் காரணம் ஆகிறது.

தேவனுடைய மகிமையின் ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்

புதிய ஏற்பாடானது, மத்தேயு 5:1-12ல் உள்ளவற்றைத் தவிர மற்ற பாக்கியங்களையும் கொண்டுள்ளது. மலைப்பிரசங்கத்தில் இயேசு, "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்று கூறினார் (வசனம் 11). கர்த்தர் கூறியதைக் கேள்விப்பட்டதன் நினைவுகூருதலில் இவ்வார்த்தைகளைப் பேதுரு மேற்கோள் காண்பித்திருக்கலாம். எவ்வகையிலும், 4:14ல் "நிந்திக்கப்பட்டால்" என்றும் "பாக்கியவான்கள்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தைகள் மத்தேயு சுவிசேஷத்திலும் 5:11ல் காணப்படுகின்றன என்பது ஆர்வத்திற்குரியதாகும்.

கிறிஸ்தவர்கள் அநீதியாகத் துன்புறுத்தப்படும்போது, "தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்" என்று பேதுரு கூறினார் (4:14). இருப்பினும் கிரேக்க மொழியானது, மகிமை என்பதன் மீது மாபெரும் வலியுறுத்தத்தை அனுமதிக்கிறது. அப்போஸ்தலர் பின்வருவது போன்று சிலவற்றைக் கூறியிருக்கலாம்: "தேவனுடைய மகிமையுள்ள பிரசன்னத்தின் ஒளிவட்டமும் தேவனுடைய ஆவியானவரும் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்." பழைய ஏற்பாட்டில் "கர்த்தருடைய மகிமை" என்ற சொற்றொடர், தேவனுடைய பிரசன்னத்தின் இந்த பரிசுத்த ஒளிவட்டம் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. எடுத்துக்காட்டாக, யாத்திராகமம் 24:15, 16ல் "மோசே மலையின்மேல் ஏறினபோது, ஒரு மேகம் மலையை மூடிற்று. *கர்த்தருடைய மகிமை* சீனாய்மலையின்மேல் தங்கியிருந்தது" என்று கூறப்படுகிறது. (என்னால் வலியுறுத்தப்படுகிறது.) பிந்திய யூதத்துவ எழுத்துகளில், தேவனுடைய மகிமையுள்ள பிரசன்னத்தைக் குறிப்பதற்கு *ஷேக்கினா* என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. ஒருவேளை பேதுரு, இந்தக் கிறிஸ்தவர்கள் அவருடைய நாமத்தின் நிமித்தம் சிறுமைப்படுத்தப்பட்டபோது அல்லது அவமானப்படுத்தப்பட்டபோது, தேவனுடைய பிரசன்னத்தின் மகிமையுள்ள ஒளிவட்டம் அவர்களைச் சுற்றிச் சூழ்ந்திருந்தது என்று ஆவிக்குரிய கருத்தமைவில் கூறியிருக்கலாம்.

மேன்மையானதற்காகப் பாடநுபவியுங்கள், கீழானவற்றிற்காக ஒருபோதும் பாடநுபவியாதீர்கள்

பரிசுத்தமாக வாழ்வதற்கான அழைப்பு 1 பேதுரு நிருபத்தில் திரும்பத் திரும்ப வரும் ஒரு பல்லவியாக உள்ளது. கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் மறுவருகை ஆகியவற்றின் ஆய்வுக்கருத்துகள் என்ற வகையில் இது ஏறக்குறைய இந்தப் புத்தகத்தின் தொனிக்கு அடிப்படையாக உள்ளது. 1:14ல் இருந்து,

அப்போஸ்தலர், பரிசுத்தமாயிருக்க வேண்டுகோள் விடுத்தார். 2:12ன் கருத்தானது 4:15ன் கருத்திற்கு ஒப்பானதாக உள்ளது. பரிசுத்த நடக்கைக்கு விசேஷித்த கட்டளையொன்று, 2:20ல் வேலைக்காரர்களுக்கும் 3:1, 2ல் மனைவியர்களுக்கும் உரைக்கப்பட்டது. இந்தச் சிந்தனை 3:8-17ல் மீண்டும் மேலாதிக்கம் பெறுகிறது.

"ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, ... பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது" என்று 4:15ல் பேதுரு கூறினார். கிறிஸ்தவர், துன்மார்க்கம் செய்பவராயிருந்து பாடநுபவிக்கக்கூடாது என்பதற்கு அவர் அதிகம் பொதுப்படையான சொற்றொடர்களைக் கூடுதலாகக் கூறினார். இந்தச் சொற்றொடர்கள் யாவும் ஓரளவு நேர்நோக்குடையவைகளாகும், ஆனால் இந்தப் பட்டியலில் உள்ள நான்காவது விஷயமானது கணிசமான அளவுக்கு, அதிகக் கடினமானதாக உள்ளது. NASB வேதாகமத்தில் "இடர்ப்பாட்டில் தலையிட்டுக்கொள்பவர்" என்றுள்ளது. இதை "தலையிட்டுக்கொள்பவர்" என்று மொழிபெயர்த்ததால் NIV வேதாகமம், "மற்ற மனிதர்களின் விஷயங்களில் தலையிட்டுக்கொண்டவர்" என்ற KJV வேதாகமத்தினால் முன்வைக்கப்பட்ட பாரம்பரியமான கருத்தைப் பின்பற்றுகிறது. இந்த மொழிபெயர்ப்புக்குப் பின்னால் உள்ள கிரேக்க வார்த்தை, இவ்விடத்தில் காணப்படுவதற்கு முன்பு, புதிய ஏற்பாட்டிலோ அல்லது உலகப்பிரகாரமான எழுத்துக்களிலோ பயன்படுத்தப்படவில்லை. இவ்வார்த்தையைப் பேதுரு உருவாக்கினார் என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். கருத்தாகத் தெரிவிக்கப்பட்ட அர்த்தங்களின் மத்தியில், "குறும்பு செய்பவர்" (RSV) திருட்டுப் பொருள்களை மறைக்கிற ஒரு "மாய வித்தைக்காரர்," ஒரு பேராசைகொண்ட மனிதர் மற்றும் ஒரு புரட்சியாளர் என்பவை உள்ளன. உண்மையில், கிரேக்க மொழியின் மிகச்சிறந்த மாணவர்களும்கூட இந்தச் சொற்றொடர் எதை அர்த்தப்படுத்துகிறது என்று நிச்சயமாகக் கூறுவதில்லை.

அவரது நாமத்தைத் தரித்துக்கொள்ள வெட்கப்படாதிருங்கள் (4:16-18)

தேவனுடைய பிள்ளையாக இருப்பவர், துன்மார்க்கம் செய்வதால் பாடநுபவித்தல் என்பது வெட்கக்கேடானது, ஆனால் கிறிஸ்தவர் என்ற வகையில் பாடநுபவித்தல் என்பது தேவனை மகிமைப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாக உள்ளது என்று பேதுரு கூறினார் (4:16). புதிய ஏற்பாட்டில் "கிறிஸ்தவர்" என்ற வார்த்தை மூன்று முறைகள் மாத்திரமே வருகிறது. பேதுரு இதை ஒருமுறை பயன்படுத்தினார் மற்றும் லூக்கா இதை இருமுறை (நடபடிகள் 11:26; 26:28) பயன்படுத்தினார். கிறிஸ்தவர் என்ற வார்த்தை அவிசுவாசிகளால் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்ட போது, அது ஏளனத்திற்கும் இகழ்ச்சிக்குமான ஒரு சொற்றொடராக இருந்திருக்க முற்றிலும் சாத்தியக்கூறு உள்ளது, ஆனால் மக்கள் தங்கள் விரோதிகளின் அடைமொழிகளை எடுத்துக்கொண்டு அதைத் தனிச்சிறப்புடன் அணிதல் என்பது அடிக்கடி நடைபெறுகிறது. ஒரு நபரைக் கீழாக்கும் நோக்கத்துடன் பயன்படுத்த நோக்கங்கொண்டுள்ள அதே சொற்றொடரை அவர் தமக்குத் தாமே சூட்டிக்கொள்ளும்போது, அதைக் கொண்டு அவரை இகழுதல் என்பது கடினமாக உள்ளது. இயேசுவே கிறிஸ்து

என்று விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படியப் பிரியமாக இருப்பவர்களை விவரிப்பதற்கு, கிறிஸ்தவர் என்பதைத் தவிர வேறு எந்தச் சொல்லும் தகுதியாக இருப்பதில்லை.

தொடக்ககாலத்தில் மனம் மாறியவர்கள், கிறிஸ்தவர் என்ற பெயரை உற்சாகமாய் தழுவிக் கொண்டிருந்தனர், ஆனால் தாங்கள் பாடநுபவிக்கத் தேவன் ஏன் அனுமதித்தார் என்பதைப் புரிந்து கொள்வதில் சிரமம் கொண்டிருந்தனர். நீதியானது தனது மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு இந்த உலகத்தை விட்டே சென்று விட்டது போலத் தோன்றியிருக்க வேண்டும். சிலவேளைகளில் இது நமக்கும் அவ்வாறே தோன்றுகிறது. ஒன்றுமறியாதவர்கள் பாடநுபவிக்கின்றனர், மற்றும் அதிகாரம், செல்வம், செல்வாக்கு உடையவர்களால் நல்லவர்கள் நசுக்கப் படுகின்றனர். "உலகத்தில் நீதியே இல்லை" என்ற முறையிடுதல், யோபுவில் இருந்து சங்கீதங்கள் வரையிலும் எரேமியா வரையிலும் எதிரொலிக்கிறது. (காண்க யோபு 24:1; சங்கீதம் 10; எரேமியா 12:1, 2.) ஆசியா மைனர் பகுதியில் இருந்த கிறிஸ்தவர்கள், தங்களை ஒடுக்குகிறவர்களுக்கு எதிராகத் தேவன் தமது நியாயத்தீர்ப்பை இன்னும் நிறைவேற்றாமல் இருந்தது ஏன் என்று திகைத்திருந்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. தேவன் நியாயந்தீர்ப்பார் என்பதே பேதுருவின் பதிலாக இருந்தது. அது அவருக்கு ஏற்புடைய காலத்தில் அவரது வழிமுறையில் இருக்கும், ஆனால் அவர் நியாயந்தீர்ப்பார், மற்றும் இன்னமும் அவர் அவ்வாறு நியாயந்தீர்ப்பார் (4:17).

பேதுருவின் முதல் வாசகர்கள் பாடநுபவித்தார்கள் என்ற உண்மையினால், துன்மார்க்கருக்குத் தேவனின் நியாயத்தீர்ப்பு வருவதற்கான ஆதாரத்தைப் பேதுரு கண்டார் என்பது வினோதமாகக் காணப்படலாம். தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஏற்கனவே தொடங்கி இருந்தது; அது தேவனுடைய வீட்டிலே தொடங்கி இருந்தது. ஆபகூக் தீர்க்கதரிசியின் நாட்களில் போன்று, கர்த்தர் என்ற வகையில் தேவன் தமக்குச் சொந்தமாகக் கொண்டிருந்த மக்களைச் சிட்சிக்கவும் கடிந்துகொள்ளவும் அவர்களைக் காட்டிலும் அதிகம் துன்மார்க்கமான மக்களைப் பயன்படுத்தினார். தேவன் ஏற்றவேளையில் கல்தேயர்களை நியாயந்தீர்ப்பார் என்பதை ஆபகூக் மிகவும் தெளிவாக்கியது போலவே, பேதுரு தமது வாசகர்களை ஒடுக்குபவர்களைத் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று உறுதிப்படுத்தினார். பேதுருவுக்கும் அவரது வாசகர்களுக்கும், எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று என்று நமக்குத் திரும்பவும் நினைவூட்டப்படுகிறது (4:7). அப்படி இருந்தும்கூட, பொன்னானது அக்கினியால் பரீட்சிக்கப்படுவது போன்று, அவரது பலத்த புயமானது அவரது மக்களைச் சிட்சித்து, உருவாக்கி மற்றும் ஆயத்தப்படுத்தியதற்கான ஆதாரங்களை அவர்கள் கண்டனர் (1:6, 7). அவரது நியாயத்தீர்ப்பு தொடங்கி இருந்தது. அது கிறிஸ்தவர்களிடத்தில் தொடங்கி இருந்தது என்றால், தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் முடிவு என்னவாகும்? என்று பேதுரு சொல்திறனுடன் கேட்டார். அந்த ஒரு தைரியமான எதிர்பார்ப்பானது அவர்களை ஆறுதல் படுத்தியது மற்றும் அவர்கள் தங்கள் போராட்டத்தைத் தொடரவும் தங்கள் உலகத்தை மாற்றவும் அவர்களுக்கு வல்லமை அளித்தது. முடிவு காலத்தில் வாழுதல் என்ற கருத்தறிவு கொண்டுள்ளவர்கள், வாழ்வின் ஒவ்வொரு தீர்மானத்தையும், மாறுபட்ட கருத்துநோக்கில் இருந்து ஏற்படுத்துகின்றனர்.

நான் சரியாகக் கூறுகிறேன் என்றால், கர்த்தருடைய சபைக்கு, கர்த்தருடைய

மறுவருகை பற்றிய அதன் எதிர்பார்ப்பு - அல்லது எதிர்பார்ப்பில் குறைவு - பற்றிய ஆன்ம - ஆராய்வுத்தேடல் செய்வது அவசியமாக உள்ளது. உண்மையான கிறிஸ்தவர்கள் தற்கால உலகத்தில் எதிர்ப்பை முகமுகமாய் எதிர்கொள்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம், ஆனால் பேதுருவின் நிருபத்தை முதன்முதலாக வாசித்தவர்கள் அனுபவித்த சோதனைகளுடன் நமக்கு ஏற்படும் சோதனைகளை ஒப்பிட்டால், நமக்கு ஏற்படும் சோதனைகள் மிகவும் இலகுவானவைகளாக உள்ளன. ஒருவேளை இது, முதல் நூற்றாண்டு உலகத்தைக் காட்டிலும், நவீன உலகம் அதிக இரக்கமும் சகிப்புத் தன்மையும் உடையது என்பதால் இவ்வாறு இருக்கலாம். அது ஒரு சாத்தியக்கூறாக உள்ளது, ஆனால் நவீன காலத்து சபையானது தனது பணிப்பொறுப்பின் அவசரத்தன்மை பற்றிச் சிறிதளவே கூருணர்வு கொண்டுள்ளது என்பதால், இந்த உலகமானது நவீன காலத்து சபையை மிகக் கொஞ்சமாக எதிர்க்கிறது மற்றும் மிகக் கொஞ்சமாகத் துன்புறுத்துகிறது என்பதே மிகவும் ஏற்புடைய கருத்தாக உள்ளது.

நீதிமான்களுக்கு இரட்சிப்பின் சிரமம் அல்லது தேவபக்தியவற்றவர்கள் மற்றும் பாவிகள் ஆகியோரின் நியாயத்தீர்ப்பு பற்றிய கருத்தறிவு கொண்டிரா திருந்தால், "நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?" என்று 4:18ல் பேதுரு கூறிய நீதிமொழிகள் 11:31ன் மேற்கோளானது நமக்குக் கொஞ்சமாகவே செய்திகூறுவதாக இருக்கும். சபையானது புதுப்பிக்கப்பட வேண்டும் என்றால், முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களைப் போன்றே நாமும் கர்த்தருடைய மறு வருகைக்காக எதிர் பார்ப்புடனும் ஏக்கத்துடனும் இருந்தால்தான் அது நடைபெறும். "எல்லா வற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று." "ஆமென். கர்த்தராகிய இயேசுவே வாரும்."

உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவுக்கு உங்கள் ஆத்துமாக்களை ஒப்புக்கொடுக்க அஞ்சாதிருங்கள் (4:19)

அடுத்ததாகப் பேதுரு, தமது வாசகர்கள், அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆகியிருந்ததால் அவர்களின் வாழ்வின்மீது மேலாதிக்கம் செலுத்தியிருந்த பாடுகளைக் கையாள்வது எவ்வாறு என்பதற்குரிய அடிப்படைக் கொள்கைக்கு வந்தார். இது தனிச்சிறப்பான இரண்டு கட்டளைகளை உள்ளடக்கியது.

உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்

அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை, உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று பேதுரு கூறினார் (4:19). சிலவற்றைச் சிலரிடத்தில் ஒப்புவித்தல் என்பது அதை அவரிடத்தில் அர்ப்பணித்து விடுதல் என்றாகிறது. இவ்வசனத்தில் "ஒப்புக்கொடுத்தல்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தையானது 2 தீமோத்தேயு 2:2ல் பவுலினால் பயன்படுத்தப்பட்டுள்ளது: "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி."

நாம் இளம் பிராயத்தினர் ஆகிறவேளையில், நம்மில் பெரும்பான்மை யானவர்கள் நம்மைப் பிறரிடத்தில் ஒப்புவிப்பதில் சில மோசமான

அனுபவங்களைப் பெற்றிருக்கிறோம். நாம் ஒருசில வேளைகளில் காட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறோம். யாருக்கேனும் அல்லது எதற்கேனும் நம்மை ஒப்புக்கொடுத்தல் என்பது அதிகம் அதிகமாகக் கடினமாகிறது. வேறுயாரேனும் ஒருவரைச் சார்ந்திருத்தல் பற்றி நாம் மிகக் குறைவாகச் சிந்திக்கிறபோது நாம் மிக அதிகமாக, மிக மேன்மையாக சுயசார்பு உடையவர்களாக முடிகிறது. இவ்விடத்தில் ஒரு பிரச்சனை எழுகிறது என்பது உண்மையே: முடிவான ஆய்வில் நாம் சுய நிறைவுடையவர்களாக இருப்ப தில்லை. "மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப்போலவும் இருக்கிறது" (ஏசாயா 40:6). இவ்வசனத்தைப் பேதுரு 1:24ல் மேற்கோள் காண்பித்தார். அவர் தமது வாசகர்கள் தங்களின் உபத்திரவம் பற்றிக் கொண்டிருந்த எல்லாக் கேள்விகளுக்கும், யோபு தாம் கொண்டிருந்த கேள்விக்குப் பதில் அளித்ததைக் காட்டிலும் அதிகம் பதில் அளிக்க முடியாதவராக இருந்தார், ஆனால் நாம் ஒரே ஒருவரிடம் மாத்திரம் நம்மை ஒப்புவிக்க முடியும் என்று அவர் அறிந்திருந்தார். உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவுக்குக் கிறிஸ்தவர்கள் தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று பேதுரு வேண்டிக் கேட்டுக்கொண்டபோது, அவர் யோபுவின் முடிவை பிரதானமாய் அவர்களுக்குக் கொடுத்தார்: "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்" (யோபு 42:2).

நன்மைசெய்கிறவர்களாய் நிலைத்திருங்கள்

4:19ன் கடைசிச் சொற்றொடரை, NASB வேதாகமம், NIV வேதாமத்தைக் காட்டிலும் சற்று வேறுபட்ட வகையில் மொழிபெயர்க்கிறது. NASB வேதாகமத்தில், "சரியானவற்றைச் செய்வதில் தங்கள் ஆத்துமாக்களை சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக் கடவர்கள்" என்றிருக்கையில் NIV வேதாகமத்தில், "தங்கள் உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுத்து நன்மை செய்யத் தொடருபவர்களாக இருக்கக் கடவர்கள்" என்றுள்ளது. ஒருவர், நன்மை செய்வதன் வழியாகத் தம்மைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறார் என்பதே இங்கு கருத்தாக உள்ளது. இரு செயல்கள் ஒரேவேளையில் நடப்பவையாக உள்ளன. NIV வேதாகமத்தில் இது இரண்டு தனிச்சிறப்பான விஷயங்கள் உள்ளன என்பது போன்று ஒலிக்கிறது: ஒன்று, உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவுக்கு ஒருவர் தம்மை ஒப்புக்கொடுத்தல்; அத்துடன் கூடுதலாக, ஒருவர் நன்மை செய்யத் தொடருதல். ஒருவர் தம்மைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தல் என்பது காண இயலாத நுட்பக்கருத்தாக இருப்பதில்லை. ஒருவர் நன்மை செய்வதன் மூலமாகத் தம்மைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறார். நன்மை செய்வதன் மூலமாக ஒருவர் தம்மைத் தேவ னுக்கு ஒப்புக்கொடுக்கக் கற்றுக்கொள்கிறார் என்பதே கூடுதலானதாக இருக்கிறது. மிக உயர்வான நுட்பக் கருத்துக்களினால் நான் ஒருக்காலும் மனம் ஈர்க்கப்பட்ட தில்லை. நண்பர்களின் கூட்டுறவில் நமது வேதாகமத்தைத் திறந்து வைத்துக்கொண்டு வட்டமாக அமர்ந்திருக்கையில் நாம் தேவனை எவ்வளவு ஊக்கமாக அன்புகூர முடிகிறது என்பதும், இருப்பினும் நாம் உலகத்தில் வீசியெறியப்படுகையில் எவ்வளவு அசுத்த ஆவி உடையவர்களாக இருக்க முடிகிறது என்பதும் மிகவும் திகைப்பானதாக உள்ளது.

யூதத்துவ எழுத்துப் பணிகளில் தல்மூத் என்று அழைக்கப்படும் மாபெரும்

பணியானது நம்மில் பலருக்கு அது மிகவும் அற்பமானதாகக் காணப்பட்டாலும் அது மாபெரும் உட்கண்ணோக்கம் கொண்டிருக்கிறது. ஒரு சீஷர் ஒருமுறை, “நான், கர்த்தரை அன்புகூருதலை எவ்வாறு கற்றுக்கொள்ள முடியும்?” என்ற கேள்வியுடன் ரபீயை அணுகினார். ஞானமுள்ள ரபீ, “நீங்கள் விரும்பிய வண்ணம் கர்த்தரை அன்புகூர்ந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். அதைச் செய்யுங்கள், அப்போது நீங்கள் அவரை அன்புகூருவீர்கள்” என்று பதில் அளித்தார். பேதுரு தமது வாசகர்களுக்குக் கூறிய புத்திமதியானது மிகவும் வேறுபட்டதாகக் காணப்படுவதில்லை. “உங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்” என்று அவர் கூறினார். நாம் நம்மைத் தேவனுக்கு எவ்வாறு ஒப்புக்கொடுக்க முடியும்? உறுதிப்பாடு உள்ளவர்களாகச் செயல்படுவதன் மூலம் நாம் நம்மை ஒப்புக்கொடுக்கிறோம். நமது செயல்பாடுகள் நமது எண்ணப்போக்குகளைத் தீர்மானிக்கின்றன என்பது நமது எண்ணப்போக்குகள் நமது செயல்பாடுகளைத் தீர்மானிக்கின்றன என்பது போன்றே குறைந்த பட்சமாவது உண்மையாக உள்ளது.

முடிவுரை

“அக்கினிபோலப் பற்றி எரிகிற சோதனைகள்” என்பவை, 1 பேதுரு நிருபத்தில் 4:12-19ம் வசனப் பகுதியில் நமக்கு முன் வைக்கப்பட்டிருப்பது போன்று இந்த நிருபத்தில் வேறு எவ்விடத்திலும் காணப்படாததாக உள்ளன. இந்த நிருபம் முழுவதிலும் பேதுரு, மற்ற இடங்களில் செய்திருப்பது போலவே, இந்த கிறிஸ்தவர்கள் பாடநுபவித்தலுக்கு இரு வழிகளில் பதில் செயல் செய்ய வேண்டும் என்று கூறினார்: (1) பரிசுத்தமாக வாழ்வதினால் தங்கள் ஒப்புக்கொடுத்தலைப் புதுப்பித்தல், மற்றும் (2) கர்த்தருடைய மறுவருகையை எதிர்பார்த்திருத்தல். இவ்வசனங்களின் கருத்துப்பொருளானது இந்த நிருபத்தின் எஞ்சிய பகுதியில் இருந்து வேறுபடுதல் என்பதல்ல, ஆனால் இவ்விடத்தில் அந்தச் செய்தி மிகவும் அவசரமானதாக உள்ளது என்பதே இங்கு கருத்தாகும். பேதுருவின் வாசகர்களுக்கு நேர்ந்திருந்த சோதனைகளின் கடுமையானது, அவர்களுக்கு அவர், நியாயத்தீர்ப்பை, தொடக்கத்தை அவர்கள் காணக் கூடியதாக இருந்த நியாயத்தீர்ப்பை நினைவூட்டக் காரணமாயிற்று. ஒரு கேள்வியைக் கேட்டல் மூலம் பேதுரு, குறைவானதில் இருந்து அதிகமானதற்கு வாதிட்டார். கிறிஸ்தவர்கள் மீதான புடமிடும் நியாயத்தீர்ப்பே கடினமானதாக இருக்கும் என்றால், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் முடிவு என்னவாக இருக்கும்?

இவ்வசனப் பகுதியானது இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சபைக்கு மாபெரும் செய்தியொன்றைக் கொண்டுள்ளது. அந்தச் செய்தி பின்வருமாறு: நாம் கடைசிக் காலங்களில் வாழ்கிறோம். கர்த்தர் சீக்கிரம் வருகிறார். அவரது மகிமை வெளிப்படும்போது நாம் அதிகம் சந்தோஷம் அடையும்படிக்கு, இப்போது நாம் அவருடன் பாடநுபவிக்க அனுமதிக்கப்பட்டால், நாம் பாக்கியமான மக்களாக இருப்போம்.

10

மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள் (1 பேதுரு 5:1–14)

சரியான வார்த்தையைப் பயன்படுத்துதலுக்கும், ஏறக்குறைய சரியான வார்த்தையைப் பயன்படுத்துதலுக்கும் இடையில் உள்ள வேறுபாடு, இடியுடன் கூடிய ஒரு மின்னலுக்கும் மின்மினி பூச்சிக்கும் இடையில் உள்ள ஒரு வேறுபாட்டைப் போன்றதாக உள்ளது. பேதுருவின் முதல் நிருபம் இடியுடன் கூடிய மின்னல்களின் சக்தியுடன் விரிகிறது. 5ம் அதிகாரத்தில் கட்டளைக்குப்பின் கட்டளை ஸ்டாக்கெட்டோ நடையில் பின்தொடருகிறது: "மந்தையை நீங்கள் மேயுங்கள்!"; "ஊழியம் செய்யுங்கள்!"; "கீழ்ப்படியுங்கள்!"; மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்!"; "உங்கள் கவலைகளையெல்லாம் கர்த்தர்மேல் வைத்துவிடுங்கள்!"; "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்!"; "விழித்திருங்கள்!"; "எதிர்த்து நில்லுங்கள்!"; "நிலைகொண்டு இருங்கள்!" இந்தக் கட்டளைகளுக்கு இடைப்பிணைப்பாக துதி மற்றும் ஆறுதலின் வார்த்தைகள் உள்ளன.

பேதுரு தமது வாசகர்கள், பன்னிருவரில் ஒருவரிடத்தில் இருந்து - சொல்லப் போனால் கர்த்தரைச் சுற்றி உள்வட்டத்தை ஏற்படுத்தியிருந்த மூவரில் ஒருவரிடத்தில் இருந்து - பெற விரும்பிய அறிவுரை மற்றும் திசைகாட்டுதல் ஆகியவற்றின் வகையை அவர்களுக்கு அளித்தார். பேதுரு நிருபத்தின் கடைசி அதிகாரம், அவரது சக சீஷர்களை, விழிப்புடனும் நீடிய பொறுமையுடனும் இருக்கும்படி அழைத்தது மற்றும் மூப்பர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஆற்றுப்படுத்துதலின் சிறப்பு வார்த்தைகள் சிலவற்றை அளித்தது.

சகமூப்பர்களுக்கு ஒரு வேண்டுகோள் (5:1-4)

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும், தேவனுக்கு உண்மையாயிருத்தல் என்பது ஒரு சமூகத்துடன் ஈடுபட்டிருத்தல் என்பதை உள்ளடக்கினது. பழைய ஏற்பாட்டில் சமூகம் என்பது இஸ்ரவேல் நாடாக இருந்தது; புதிய ஏற்பாட்டில் அது கிறிஸ்துவின் சபையாக உள்ளது. கிரேக்க - ரோம உலகில், ஒரு நகரத்தில் முதன்முதலாக மனம் மாறியவர்களை, ஒரு பிரசங்கியார் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தியபோது, செய்யத் தேவையான பணியில் அவர் ஒருபகுதியை மாத்திரமே செய்திருந்தார். தீத்துவுக்குப் பவுல், "நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும்" என்று கூறினார் (தீத்து 1:5).

ஒரு சபைக்குழுமம் ஆராதிக்கவும் ஊழியம் செய்யவும் ஒன்றுகூடத் தொடங்கிய சற்றுக்காலத்தில், அந்த சபைக்குழுமத்தைக் கண்காணிக்கவும் வழிநடத்தவும். பக்குவமடைந்த கிறிஸ்தவ ஆண்கள், மூப்பர்களாகத்

தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருந்தது. பவுலும் பர்னபாவும் தங்கள் முதல் சுவிசேஷப் பயணத்தில் நிலைநாட்டிய சபைகளில் மூப்பர்களை நியமித்தனர் என்று கூறப்படுகிறது (நடபடிகள் 14:23), மற்றும் மூப்பர்களாக ஊழியம் செய்யும் மனிதர்களின் வகையைப் பற்றித் தீமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும் பவுல் நெறிமுறைகள் கொடுத்தார்.

"மூப்பர்" என்ற சொற்றொடர், இஸ்ரவேல் நாட்டில் வளமான கலாச்சாரப் பாரம்பரியத்தைக் கொண்டிருந்தது. நியாயப்பிரமாணப் புத்தகங்களில், மோசே ஆலோசனை மற்றும் ஆதரவுக்காக "இஸ்ரவேலின் மூப்பர்களை" திரும்பத் திரும்ப அழைத்தார். "நகரத்தின் மூப்பர்கள்" என்பது கானான் நாட்டில் மக்கள் குடியமர்ந்த பின்பு அடிக்கடி கூறப்பட்ட ஒரு சொற்றொடராக உள்ளது. மூப்பர்கள் என்பவர்கள் தங்களை நல்லவர்கள் என்று நிரூபித்திருந்த வயது முதிர்ந்த மனிதர்களாக இருந்தனர். அவர்கள் நல்ல குடும்பங்களைப் பேணியவர்களாகவும் நயப்பாங்கு மற்றும் தேவபக்தி ஆகியவற்றின் மாதிரிகளாகத் தங்களைக் காண்பித்தவர்களாகவும் இருந்தனர். சபையிலும் இதைப் போலவே இருந்தது. ஒரு மூப்பராக இருத்தல் என்பது, கனம், மதிப்பு மற்றும் பொறுப்பு ஆகியவற்றின் நிலைப்பாட்டில் ஊழியம் செய்வதாக இருந்தது.

உண்மையில், "மூப்பர்" என்பது, சபைகளில், சபையார்களின் ஆவிக்குரிய நடத்துனர்களாக ஊழியம் செய்யும் அலுவலர்களுக்குப் புதிய ஏற்பாடு பயன்படுத்துகிற மூன்று பணிப்பெயர்களில் ஒன்றாக மாத்திரமே உள்ளது. KJV வேதாகமம் சிலவேளைகளில் மொழிபெயர்த்துள்ள வகையில், "கண்காணிகள்" அல்லது "ஆயர்கள்" என்பது மூப்பர்களாக ஊழியம் செய்பவர்களுக்கான வேறொரு பணிப்பெயராக உள்ளது. சபையின் ஆவிக்குரிய தலைவர்களுக்குப் புதிய ஏற்பாடு பயன்படுத்தும் மிகவும் வண்ணமயமான வார்த்தை "பாஸ்டர்கள்" என்பதாகும், இதற்குரிய கிரேக்க வார்த்தை "மேய்ப்பர்கள்" என்று இன்னும் சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பேதுரு 5:1, 2ல் இந்த மூன்று வார்த்தைகளையும் பயன்படுத்தினார். மூப்பர்கள் மந்தையை மேய்த்து கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். கடந்து செல்லுகையில் நாம், எப்போதெல்லாம் புதிய ஏற்பாடு மூப்பர்களைக் குறிப்பிடுகிறதோ, அப்போதெல்லாம் அவர்கள் பன்மையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதைக் கவனிக்க வேண்டும்.

மூப்பர்கள் - சபையின் கண்காணிகள் அல்லது மேய்ப்பர்கள் - என்பவர்களை சுவிசேஷ ஊழியர்களாக நினைத்துக் குழப்பிக்கொள்ளக் கூடாது. சுவிசேஷ ஊழியர் என்பவர் சுவிசேஷத்திற்குக் கட்டியம் கூறுபவராக, அதை அறிவிப்பவராக இருக்கிறார். ஒரு நீண்ட அல்லது ஒரு குறுகிய காலத்திற்கு இடமளிக்கப்பட்டவராக இருக்கலாம், ஆனால் சபையைக் கண்காணித்தல் அல்ல, வார்த்தையை அறிவித்தலே அவரது ஊழியமாக உள்ளது. அவர் சுவிசேஷ ஊழியர் என்ற வகையிலான தமது பொறுப்புகளின் நெறிமுறையில் ஒரு பாஸ்டராக இருப்பதில்லை. ஆசியா மைனர் பகுதியில் இருந்த சபைகளின் ஆவிக்குரிய நடத்துனர்களான பாஸ்டர்களுக்குப் பேதுரு 5:1-4ல் உரையாற்றினார். சபையானது, குறிப்பாக இடர்ப்பாடு கொண்டிருந்த காலங்களில், திறன்வாய்ந்த, நல்ல வகையில் தகுதிபெற்ற மூப்பர்களைக் கொண்டிருத்தலின் அவசியத்தை அந்த அப்போஸ்தலர் அறிந்திருந்தார்.

பேதுரு தம்மை, மூப்பர்களின் அலுவலிலும் அதன் பொறுப்புகளிலும்

பங்கு பெற்றிருந்த ஒருவராக மூப்பர்களிடத்தில் குறிப்பிட்டுக் கொண்டார். அப்போஸ்தலர் எருசலேமில் இருந்த சபையின் மூப்பர்களில் ஒருவராக இருந் திருக்கச் சாத்தியக் கூறு உள்ளது. அவர் ரோமாபுரி அல்லது வேறு சில இடங்களில் இருந்த சபையின் மூப்பர்களில் ஒருவராக ஊழியம் செய்திருக்கலாம். பெரிய இடப்பரப்பின் மூப்பர்கள் என்று புதிய ஏற்பாட்டில் யாரும் குறிப்பிடப்பட வில்லை. எந்த இடத்தில் இருந்த சபையென்று அடையாளப்படுத்தாவிட்டாலும், ஒரு குறிப்பிட்ட சபைக் குழுமத்தின் மூப்பர் என்றே பேதுரு தம்மைக் குறிப்பிட்டார் என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பேதுரு ஒரு உடன்மூப்பராக இருந்தார், ஆனால் அவர் இங்கு குறிப்பிட்ட மூப்பர்களைப் போல் இன்றி, அவர் கர்த்தருடைய பாடுகளுக்குச் சாட்சியாகவும் இருந்தார். அவர்களின் சமகூட்டாளிகளில் அவர் ஒருவராக இருந்தார், ஆனாலும் அவர் இன்னும் சற்று அதிகமான தகுதிகொண்டிருந்தார். கிறிஸ்துவின் பாடுகளுக்கான அவரது சாட்சியமானது, அவர் ஒரு மூப்பராக இருந்ததோடு, கிறிஸ்துவின் அப்போஸ்தலராகவும் இருந்தார் என்பதை நினைவூட்டப் பயன்பட்டது (நடபடிகள் 1:21, 22). கர்த்தருடைய மறுவருகை என்ற கருத்து பேதுருவின் சிந்தையில் இருந்து ஒருபோதும் தொலைவில் இருந்ததில்லை. "இனி வெளிப்படும் மகிமை"யை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் என்பது அவரது மாபெரும் நம்பிக்கையாக இருந்தது (5:1). அந்த முடிவிற்கு அவர் புத்திமதிகளின் வரிசை ஒன்றை அளித்தார்.

மந்தையை மேயுங்கள்

5:2ல் "மந்தையை மேய்த்து" என்பதற்கான KJV மொழிபெயர்ப்பு மிகவும் கட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. ஒரு மேய்ப்பர் தமது மந்தையை மேய்த்தலைக் காட்டிலும் அதிகமானவற்றைச் செய்தார். அவைகளுக்கு அவர் தோழராக, பாதுகாப்பாளராக மற்றும் வழிகாட்டியாக இருந்தார். இஸ்ரவேல் மக்கள் மத்தியில் மேய்ப்பர் என்பவர், நவீன அமெரிக்கர்களுக்கு கௌபாய்கள் எனப்படுபவர்கள் எப்படி உள்ளனரோ அதைப்போன்று முற்றான உதாரண மாக இருந்தனர். அவர் தமது மந்தைக்குத் தம்மையே கொடுப்பவராக, தயவுள்ள நடத்துனராக மற்றும் வழிகாட்டியாக இருந்தார். தீர்க்கதரிசிகள், இஸ்ரவேலுடன் தேவனுக்குள்ள உறவை விவரிக்க விரும்பியபோது, அவர்கள் மேய்ப்பர் என்ற ஒப்புவமையைக் காட்டிலும் அதிகம் சிறப்பான வேறொன்றையும் காண வில்லை, ஒருமூப்பரின் ஊழியத்தினுடைய நடைமுறைப் பயன்பாட்டின் சில கருத்துக்களை, ஏசாயாவின் பின்வரும் வார்த்தைகளில் கண்டறிய முடியும்: "மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்" (ஏசாயா 40:11). இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் பேதுரு, சபையின் மூப்பர்களை உற்சாகப்படுத்தினார்.

கண்காணிப்புச் செய்யுங்கள்

"பாஸ்டர்" அல்லது "மேய்ப்பர்" என்ற வார்த்தை தனது விளக்கத்தை, இஸ்ரவேலின் தேசிய அனுபவத்தில் கண்டறிகையில், "கண்காணி" என்ற வார்த்தையானது தனது அர்த்தத்தை, கிரேக்க மொழிபேசும் உலகத்தில் இருந்து தரவழைக்கிறது. கிரேக்கர்களின் மத்தியில் *episkopos* (இது "கண்காணி" என்று

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) என்ற வார்த்தை, மத இயல்பு கொண்டவை உட்படப் பலவகையான நிறுவனங்களில் நிலைத்த பொறுப்புகளுடன் இருந்த அலுவலர்களைக் குறிப்பதாக இருந்தது. மேற்பார்வை பார்க்கும் விஷயங்கள் அல்லது ஒரு காப்பாளாராகச் செயல்படுதல் என்பது கண்காணியின் ஊழியமாக இருந்தது. ரோமாபுரியின் கிளமென்ட் என்பவர் முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில், கொரிந்து நகரில் இருந்த சபைக்கு எழுதிய கடிதம், தேவனைப் "படைத்தவர் மற்றும் ஆத்துமாக்களின் காப்பாளர் [*episkopos*]" என்று குறிப்பிட்டது. பேதுரு இயேசுவை, "உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவர் [*episkopos*]" என்று அழைத்தார் (2:25). கண்காணிகள் என்ற வகையில், மூப்பர்கள் தங்கள் பராமரிப்பில் ஒப்புவிக்கப்பட்ட ஆத்துமாக்களை விழித்திருந்து கவனிக்கின்றனர். அதை அவர்கள், சபையில் கூறப்படுகிற மற்றும் செய்யப்படுகிற யாவும் தேவனுடைய மகிமைக்கென்றே செய்யப்படத் தக்கதாக, சபைக்குப் போதனை மற்றும் சபையின் நடைமுறை ஆகியவற்றைக் கண்காணித்தலின் மூலம் செய்கின்றனர்.

மாதிரியாக இருங்கள்

5:3ல் பேதுரு, மந்தைக்கு மாதிரியாக இருக்க வேண்டும் என்ற தமது புத்திமதிக்கு முன்பாக, மூன்று எதிர்மறைகளை வைத்தார். எவரொருவரும், (1) அவர் வற்புறுத்தப் பட்டதற்காக அல்லது (2) மூப்பராயிருத்தல் தனிப்பட்ட ஆதாயத்தைக் கொடுக்கும் என்பதற்காக அல்லது (3) அவர் தமது சக கிறிஸ்தவர்கள் மீது அதிகாரம் செய்வதை விரும்புகிறார் என்பதற்காக மூப்பராக ஊழியம் செய்யக் கூடாது. மூப்பர் என்பவர், தமது தாலந்துகள் எல்லாவற்றையும் கர்த்தருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். ஒரு மூப்பர் தமது நடத்துவத்துவ நிலைப்பாட்டின் காரணமாக, தமது வார்த்தைகள் மற்றும் செயல்கள் ஆகியவற்றில் தாம் முன்வைக்கும் மாதிரியில் சிறப்பாக ஜாக்கிரதை உள்ளவராக இருக்க வேண்டும்.

கர்த்தருடைய சபையின் மூப்பராக இருக்க வேண்டும் என்று ஒரு மனிதர் நாட வேண்டியது ஏன்? கூடுதல் சுமைகளை மேற்கொள்ளாமலேயே செய்வதற்குப் போதிய பணியும் பொறுப்பும் ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் இருப்பதில்லையா? பேதுரு பின்வரும் பதிலைக் கொடுத்தார். முதலாவது, ஒருவர் மூப்பராகப் பணியாற்றும் திறன் கொண்டிருந்தால், அவ்வாறு செய்தல் 4:10ன் வேண்டுகோளுக்குள் அமைகிறது: "அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்." இரண்டாவது, உண்மையாக ஊழியம் செய்பவர்களுக்கு "மகிமையுள்ள வாடாத கிரீடம்" ஒன்று காத்துள்ளது (5:4).

சில வேளைகளில் "கிரீடம்" என்ற வார்த்தைக்குப் பின்னால், இரண்டு கிரேக்க வார்த்தைகள் உள்ளன. ஒன்று ஆட்சி செய்பவரின் கிரீடத்தைக் குறிக்கும் "diadem" என்பதை அர்த்தப்படுத்துகிறது. இன்னொன்று, விளையாட்டுகளில் ஒரு விளையாட்டு வீரர் வெற்றிகொள்வது போன்ற, வெற்றியின் கிரீடத்தை அர்த்தப்படுத்துகிறது. இந்த இரண்டாவது வார்த்தையே இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு விளையாட்டு வீரர் ஒரு கிரீடத்தைப் பெற்றபோது, அது மாபெரும் கனத்திற்கு உரியதாக இருந்தது, ஆனால் அது

இலைகளால் மாத்திரமே செய்யப்பட்டதாக இருந்தது. அது விரைவிலேயே மங்கிப் பழுத்துப் போய்விடும். ஆனால் பிரதான மேய்ப்பர் தோன்றும்போது, அவர் தமது உண்மையுள்ள ஊழியக்காரர்களுக்குச் சூட்டுவிக்கும் கிரீடம் அவ்வாறு இராது. மேய்ப்பராக ஊழியம் செய்தல் என்பது நல்ல மேய்ப்பரின் நோக்கத்தின் விசேஷ ஒருமைப்பாடு மற்றும் அடைவிடம் ஆகியவற்றில் பங்கேற்றலாக உள்ளது.

கர்த்தர்மீது கவலையை வைத்துவிடும்படி வேண்டுகோள் (5:5-7)

செய்விளைவு நடத்துனர்கள் நல்ல பின்பற்றாளர்களைக் கொண்டிருக்க வேண்டும். மூப்பர்கள் தங்கள் நடத்துவத்தை, தாங்கள் யாருக்கு ஊழியம் செய்கின்றனரோ, அவர்களின் நல் விருப்பத்தின்படி மாத்திரம் செயல்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றனர். அவர்கள், சந்தையிடத்தில் பணம்செலுத்துக் காசோலையைக் கட்டுப்படுத்தும் காரணத்தினால் தனது தலைமைத்துவத்தைச் செயல்படுத்தும் மேலாண்மையாளர் போன்ற அல்லது படையைச் செயல்படுத்துவிக்கும் படைத்தலைவர் போன்ற பதவிநிலையில் இருப்ப தில்லை. கிறிஸ்தவர்கள் தங்களின் ஆவிக்குரிய நடத்துனர்களாகத் தாங்கள் தேர்ந்தெடுத்தவர்களின் வழிநடத்துதலை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனால் தான் பேதுரு, மூப்பர்களுக்கான தமது புத்திமதிகளுடன் அதே சந்தர்ப்பப் பொருளில் இளம் கிறிஸ்தவர்களுக்கும் ஆலோசனை வழங்கினார்.

இளம் கிறிஸ்தவர்கள், சபையின் ஆவிக்குரிய கண்காணிகளுக்கு மனப்பூர்வ மாகக் கீழ்ப்படிய வேண்டும் என்று பேதுரு கூறினார். பெரும்பான்மையான சூழ்நிலைகளில், கீழ்ப்படிதல் என்பது அனுகூலமற்றநிலை அல்லது பலவீனம் என்ற அதே பதவிநிலையை மறைமுகமாக உணர்த்துகிறது, ஆனால் அது மனப்பூர்வமாக அளிக்கப்படும் போது விஷயம் அவ்வாறு இருப்பதில்லை. இளைஞர்கள் மூப்பர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமே என்பதினால் இனியும் கீழ்ப்படியாமல், மூப்பர்கள் அவசியத்தின் காரணமாகத் தங்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகின்றனர். எல்லாரும் தங்களின் பலவகைப்பட்ட வரங்களை, “தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல” முன்வைக்க வேண்டியவர்களாக உள்ளனர் (4:10).

நல்ல பின்பற்றாளராக இருத்தலுக்குக் குறிப்பிட்ட அளவில் தாழ்மை தேவைப்படுகிறது. பேதுரு தமது காலத்தில் இருந்த இளைஞர்களுக்கு, தாழ்மையை அணிந்துகொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தார். “அணிந்துகொள்ளுங்கள்” என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது, புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமும் உலகப்பிரகாரமான எழுத்துக்களில் மிகச்சில இடங்களில் மாத்திரமும் வருகிறது. இது, உடலைச் சுற்றிக் கட்டுப்படுகிற குறிப்பிட்ட வகையிலான உடையை மறைமுகமாக உணர்த்துகிறது. இது அற்ப மான அடிமை ஒரு உடையினால் தனது உடலைச் சுற்றிக் கொள்ளுதலாகும் என்றும், எனவே பேதுரு தமது வாசகர்களிடத்தில், சபைக்கு பயனுள்ளதான எந்த ஒரு தாழ்மையான பணிநிலையிலும் இருந்து ஊழியம் செய்யும்படி வேண்டிக் கொண்டார் என்றும் சிலர் யூகிக்கின்றனர். மற்றவர்கள், நேர்த்தியான

உடைகள் செல்வமிக்க மக்களால் மாத்திரமே அணியப்பட்டன, அவை உடலைச் சுற்றி நேர்த்தியாக ஒன்றுகூட்டப்பட்டு ஒரு முடிச்சினால் இறுக்கப்பட்டன. அவ்விஷயத்தில் அப்போஸ்தலர், தமது வாசகர்களிடத்தில், அவர்கள் தாழ்மையை அணிந்து கொண்டால் தேவனுடைய கண்களில் எவ்வளவு மகிமையாக உடையணிந்தவர்களாக இருப்பார்கள் என்று கூறினார் எனலாம்.

பேதுரு இவ்விரு கருத்துக்களையும் எடுத்துரைக்கும் நோக்கத்துடன் இருந்திருக்க மாட்டார் என்பது நிச்சயம், ஆனால் அவரது வார்த்தைகளில் இருந்து நாம் பயன் அடைவதற்கு இவற்றிற்கு இடையில் ஒன்றைத் தேர்ந்து கொள்ள வேண்டும் என்ற கட்டளை எதுவும் இங்கே காண்பது அரிது. உண்மையில், தாழ்மையான நபர் கர்த்தருக்கும் அவரது மக்களுக்கும், ஊழியம் செய்பவராகக் கண்டு பாராட்டப்படாதபடிக்கு அதைச் செய்வதற்கான வழிகளைக் கண்ணோக்கும் பண்பைக் கொண்டுள்ளார். அந்தப் பண்பு "தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது" (3:4). இந்தக் காரணங்கள் யாவற்றினாலும், நீதிமொழிகள் 3:34ன் வார்த்தைகள் இவ்விடத்தில் நடைமுறைப்படுகின்றன: "இகழ்வோரை அவர் இகழுகிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்."

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும், தேவன் பலவான்களைத் தாழ்த்தி, தாழ்ந்தவர்களை உயர்த்துகிறார் என்பது மிகவும் தொடர்ந்துவரும் கருத்துக்களில் ஒன்றாக உள்ளது. அன்னாள் பாடிய துதியின் அழகு-மிகுந்த பாடல், "கர்த்தர் தரித்திரம் அடையச்செய்கிறவரும், ஐசுவரியம் அடையப்பண்ணுகிறவருமாயிருக்கிறார்; அவர் தாழ்த்துகிறவரும் உயர்த்துகிறவருமானவர். அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்" என்ற வார்த்தைகளை உள்ளடக்கிற்று (1 சாமுவேல் 2:7, 8). மரியாளின் வார்த்தைகளும் இதைப்போன்றவையாக இருந்தன: "பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார். பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்" (லூக்கா 1:52, 53). இயேசு, "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று மூன்றுமுறை கூறினார் (மத்தேயு 23:12; லூக்கா 14:11; 18:14). கிறிஸ்தவர்கள் தங்களைத் தேவனுடைய பலத்த கரத்திற்குள் தாழ்த்த வேண்டும், அப்போது அவர்களை உயர்த்துவதாகத் தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார் என்று பேதுரு மற்றும் யாக்கோபு ஆகிய இருவருமே, கிறிஸ்தவர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டனர் (யாக்கோபு 4:10). தேவனுக்கு முன்பாக உங்களைத் தாழ்த்தி உங்கள் கவலைகள் யாவற்றையும் அவர்மீது வைத்துவிடுதல் பாதுகாப்பானது, ஏனெனில் அவர் எப்போதும் உங்களைப் பராமரிக்கிறார்.

சகோதரத்துவத்துடன் நிற்பதற்கு ஒரு வேண்டுகோள் (5:8-11)

மூன்றாம் முறையாகப் பேதுரு, ஆவியில் தெளிவாயிருக்கும்படி தமது வாசகர்களிடத்தில் வேண்டிக்கேட்டுக்கொண்டார் (காண்க 1:13; 4:7). சுயகட்டுப்பாடும் விழிப்புணர்வும் மிகவும் அவசியமானவையாக

உள்ளன, ஏனென்றால் கிறிஸ்தவர்கள், பிசாசு என்ற மாபெரு விரோதியைக் கொண்டுள்ளனர், அவன் இந்த உலகத்தில் யாரைப் பட்சிக்கலாம் என்று கெர்ச்சிக்கிற சிங்கம்போல் சுற்றித் திரிகிறான். ரோம அரசாங்கத்தைப் பிசாசின் நபர்த்துவமாகப் பேதுரு புரிந்து கொண்டிருந்தார் என்பது சாத்தியமானதாக, நிகழக்கூடியதாகக் கூட உள்ளது. பேதுரு முன்பு மறைமுகமாக உரைத்திருந்த "பற்றியெரிகிற அக்கினி" போன்ற சோதனைகளுக்குப் பின்னால், ரோமப் பேரரசின் அதிகாரம் நின்றிருந்தது (காண்க 1:6, 7; 4:12); அந்த அதிகாரமே கிறிஸ்தவர்களைப் பட்சிப்பதாக அச்சுறுத்திற்று.

யாக்கோபு 4:7ல் கர்த்தருடைய சகோதரர், "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" என்று கூறினார். பேதுருவும் தமது வாசகர்களைப் பிசாசுக்கு எதிர்த்து நிற்கும்படி வேண்டிக்கேட்டுக்கொண்டார், ஆனால் அவர் இந்த எதிர்த்து நிற்குதலை இந்த நிருபம் முழுவதிலும் எப்போதும் பிரசன்னமாயிருக்கும் துன்புறுத்தப்படுதல்களுடன் பிணைத்தார். மற்றவர்களை எதிர்த்து நிற்குதலில், தேவனுடைய மக்களின் ஐக்கியம் பலத்தைக் கண்டடைகிறது. மற்றவர்கள் நம்மைச் சார்ந்துள்ளனர் என்று அறிதலானது, சரியானதைச் செய்வதற்கு மாபெரும் ஊக்குவித்தலாக அடிக்கடி அமைகிறது. சமீபத்தில் நான், ஒரு சகோதரர் "பலமுறை நான், தவறானதைச் செய்யும்படியான சோதனையை, சபையின் நல்லமக்கள் என்னிடத்தில் இருந்து மேன்மையான விஷயங்களை எதிர் பார்க்கின்றனர் என்ற எளிய சிந்தனையினாலேயே வெற்றிகொண்டுள்ளேன்" என்று கூறியதைக் கேள்விப்பட்டேன். சககிறிஸ்தவர்களின் ஐக்கியமும் ஆதரவும், நன்மை செய்வதற்கும் பாவத்தை அழிப்பதற்கும் மாபெரும் ஊக்குவிப்பாக உள்ளது.

பேதுரு தமது நிருபத்தின் முடிவுப்பகுதியை நெருங்குகையில், இந்தக் கிறிஸ்தவர்கள் சேவிக்கும் தேவன் நன்மையும் இரக்கமும் உள்ளவர் என்று அவர்களுக்கு அவர் நினைவூட்டினார். பேதுரு தமது நிருபத்தின் தொடக்க வசனங்களில், தமது வாசகர்கள் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களாக இருந்தனர் என்று மறு உறுதிப்பாடு அளித்திருந்தார்; எனவே அவர்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள் தமது நித்திய மகிமைக்கு" அழைக்கப்பட்ட விசேஷித்த மக்களாக இருந்தனர் என்ற கருத்தை, இந்த நிருபத்தின் முடிவில், அவர்களின் சிந்தைகளுக்குக் கொண்டுவருதல் என்பது பொருத்தமானதாகவே இருந்தது. துன்புறுதல் என்பது அவர்களுக்குக் கொஞ்சக்காலம் மாத்திரமே இருந்தது (1:6), ஏனென்றால் விரைவிலேயே கர்த்தர் திரும்ப வருவார். அந்த வேளையில் பலவீனமும் உதவியற்ற தன்மையும் பெலத்தினால் விழுங்கப்படும். அவர்களைத் தேவன் மீளக்கட்டுவார், அவர்களை அவர் பலமும் உறுதியும் உள்ளவர்கள் ஆக்குவார்.

முடிவுக் குறிப்புகள் (5:12-14)

பேதுரு, வழக்கமான நடைமுறையைப் பின்பற்றி, தாம் இருந்த இடத்தின் சபையிலிருந்து வாழ்த்துக்களைத் தமது வாசகர்களுக்கு அனுப்பினார். இந்த நிருபத்தில் முடிவு வாழ்த்து என்பது, இந்த நிருபத்தின் மிகவும் விவாதத்திற்கு உரிய அம்சங்களில் ஒன்றாக உள்ளது. சொற்றொடரானது மறைவானதாக, புரிந்து கொள்ளக் கடினமானதாக உள்ளது, இது KJV வேதாகமத்தில்

இவ்வார்த்தைகள் சாய்வெழுத்துக்களில் இடப்படக் காரணமாயிற்று. நேரடியான அர்த்தத்தில் இது, "உங்களுடனேகூடத் தெரிந்துகொள்ளப் பட்டிருக்கிற பாபிலோனில் உள்ளவளும் [பொதுமைப் பிரதிப்பெயர்ச்சொல் அல்ல, ஆனால் பெண்மைக்குரிய சுட்டுச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது] ... உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்." "சபை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க மொழி வார்த்தை பெண்மைப் பெயர்ச்சொல்லாக உள்ளது. பேதுரு இவ்விடத்தில் பாபிலோனில் இருந்த சபையையே குறிப்பிட்டார் என்று மொழி பெயர்ப்புகள் பொதுவாகச் சுட்டிக்காண்பிக்கின்றன. பாபிலோன் என்பது அடையாளத்துவத்தில் ரோமாபுரியைக் குறித்தது என்ற கருத்தை நாம் ஏற்கனவே வழங்கியுள்ளோம். புதிய ஏற்பாட்டிற்குப் புறம்பே யூதத்துவ எழுத்துக்களிலும் வெளிப்படுத்தின விசேஷத்திலும் (எ.கா. 18:9, 10), பாபிலோன் என்பது "பூமியின் இராஜாக்கள்"மீது ஆளுகை செலுத்திய "மகாநகரமாக" இருந்தது.

பேதுருவின் முடிவு வாழ்த்தில் அவருடன் யோவான் மாற்கு இணைந்து கொள்கிறார். பழங்காலப் பாரம்பரியம், மாற்கு சுவிசேஷத்திற்குப் பின்னால் பேதுருவின் அதிகாரத்துவம் நிற்கிறது என்று கூறுகிறது. பேதுருவின் வாழ்வின் முடிவில் அவருடன் ரோமாபுரியில் மாற்குவைக் காணுதல் என்பது ஆர்வத் திற்கு உரியதாக உள்ளது. நடபடிகள் 15:39ல் நாம் மாற்குவைப் பற்றிய கடைசிக் குறிப்பைக் கொண்டுள்ளோம். இருப்பினும், தீமோத்தேயு ரோமா புரிக்கு வரும்போது தம்முடன் மாற்குவை அழைத்துவர வேண்டும் என்று பவுல் கேட்டுக்கொண்டார் (2 தீமோத்தேயு 4:11). இது 2 தீமோத்தேயு நிருபம் 1 பேதுரு நிருபத்திற்கு முன் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கான சுட்டிக்காட்டுதலாக இருக்கலாம்.

முடிவுரை

1 பேதுரு நிருபம் ஒரு சிறிய நிருபமாக இருந்தாலும், தகவல் மற்றும் போதனையின் மாபெரும் செல்வத்தைக் கொண்டுள்ளது. நாம், இரண்டு கேள்விகளை நமக்கு முன் வைத்திருக்க முயற்சி செய்துள்ளோம்: (1) பேதுரு தமது முதல் வாசகர்களுக்கு என்ன கூற நோக்கம் கொண்டிருந்தார்? மற்றும் (2) அவருடைய வார்த்தைகளில் நமது தற்கால சபைக்கு நாம் ஏற்படுத்த வேண்டிய நடைமுறைப் பயன்பாடு என்ன?

மூன்று சிந்தனைகள் இந்த நிருபத்தில் திரும்பத் திரும்ப வருகின்றன: (1) பேதுரு நிருபத்தின் முதல் வாசகர்கள் கிறிஸ்துவின் நாமத்தைச் சொந்தமாகக் கொண்டிருந்ததால் துன்புறுத்தப்பட்டனர். துன்புறுத்தப்படுதல் என்பது ஒருக்காலும் பின்புலத்தில் தொலைவில் இருந்ததில்லை, ஆனால் அது 1:6, 7; 3:13-17; 4:12-19 மற்றும் 5:9, 10 ஆகிய வசனங்களில் நேரடியாகக் குறிப்பிடப்பட்டது. (2) கர்த்தர் விரைவில் திரும்ப வருவார் என்பதால், துன்புறுத்தப்படுதல் என்பது கொஞ்சக்காலம் சகித்துக்கொள்ளப்படக் கூடும். கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வை எதிர்பார்ப்பில் வாழ்ந்தனர். (3) கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வைப் பரிசுத்தமாக வாழ வேண்டியிருந்தது. நவீன காலசபைக்கு, 1 பேதுரு நிருபத்தின் இந்தப் பாடங்களைக் கற்றுக்கொள்ளுதல் என்பது, இந்த உலகத்தில் தேவன் விரும்பிய வண்ணமாக, நாம் வலிவுநிறைந்த செல் வாக்குச் செலுத்துபவர்களாக இருப்பதற்குத் தேவையான பலத்தையும் உற்சாகமூட்டுதலையும் நாம் பெற்றுக்கொள்வதற்கானதாக உள்ளது.

11

ஒரு அறிமுகம் (2 பேதுரு)

1 மற்றும் 2 பேதுரு நிருபங்கள் எழுதப்படுவதற்கு இடையில் எவ்வளவு காலம் கடந்து சென்றிருந்தது என்பது நிச்சயமற்றதாக உள்ளது. மிகவும் குறிப்பிடத்தக்க தகவல்கள் குறைவாக உள்ள காரணத்தால், பேதுரு இன்னமும் ரோமாபுரியிலேயே இருந்தார் என்று நாம் யூகிக்கிறோம். இது தமது இரண்டாவது நிருபம் என்று பேதுரு தமது வாசகர்களுக்குக் கூறியதால் (3:1), அவர் தமது முதல் நிருபத்தை எந்தக் கிறிஸ்தவர்களுக்கு எழுதினாரோ, அதே கிறிஸ்தவர்களுக்கே இந்த இரண்டாம் நிருபத்தையும் எழுதினார் என்று நாம் யூகிக்கிறோம். ஆசியா மைனர் பகுதியில் இருந்த சபைக் குழுமங்களில் புதிய பிரச்சனைகள் எழுந்திருந்ததாலும் அவற்றைக் குறித்துப் பேதுருவுக்கு தகவல் அளிக்கப்பட்டிருந்ததாலும், இவ்விரு நிருபங்களுக்கு இடையில் போதிய அளவு கால இடைவெளி கடந்து இருந்தது எனலாம். இரண்டாம் நிருபத்தின் அக்கறைக்குரிய விஷயங்கள், முதல் நிருபத்தின் அக்கறைக்குரிய விஷயங்களில் இருந்து கணிசமாக வேறுபடுகின்றன. இந்த நிருபத்தின் அக்கறைக்குரிய விஷயங்களையும் அவற்றைப் பேதுரு எழுதியது ஏன் என்பதையும் காண்பதற்கு முன்னால், இதை எழுதியவரைப் பற்றி நாம் சற்றே கவனம் செலுத்துவோம்.

எழுதியவர்

புதிய ஏற்பாட்டில் ஒரு சில புத்தகங்களே, 2 பேதுரு நிருபம் கொண்டுள்ளது போன்று, அதன் அதிகாரத்துவம் பற்றி அதிகமான வலிமையைக் கொண்டு அறைகூவல் விடுப்பவைகளாக உள்ளன. "அதிகாரத்துவம்" என்பது உண்மையிலேயே ஒரு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபரே அந்தப் புத்தகத்தை எழுதினாரா இல்லையா என்பது பற்றிய பிரச்சனையாகும். இவ்விடத்தில் நாம், கேள்விகளைப் பரிசோதிக்காவிட்டாலும், டின்டேல் புதிய ஏற்பாட்டு விளக்கவுரைகளில் இருந்து ஆலோசனைகளைப் பெற நீங்கள் விரும்பலாம்.[1] இந்த நிருபம் இதன் எழுத்தாளரை "சீமோன் பேதுரு" என்று அடையாளப்படுத்தித் தொடங்குகிறது என்ற உண்மை (1:1) நம்மில் பலருக்குப் போதுமானதாக உள்ளது. இது பேதுருவினால் எழுதப்பட்டது என்று கூறுகிறதென்றால், இது பேதுருவினாலேயே எழுதப்பட்டதாக இருந்தது.

எழுதியதற்கான சந்தர்ப்பம்

பேதுருவின் இரண்டாம் நிருபத்தை, முதல் நிருபத்துடன் நாம் ஒப்பிடும்போது, கருத்து நோக்கில் ஒரு தெளிவான மாற்றத்தைக் கவனிக்கிறோம். முதல் நிருபம், புறம்பான உலகத்தில் இருந்து சபைக்குத் தரப்பட்ட அழுத்தங்களைக் குறிப்பிட்டது; இரண்டாவது நிருபம் சபைக்கு உள்ளாகவே இருக்கும் பிரச்சனைகள் மீது கவனம் குவித்தது. இரண்டாவது நிருபம்

பாடுகளைப் பற்றி அரிதாகவே குறிப்பிட்டது.

இரு நிருபங்களும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர் நோக்கியிருக்கையில், இவற்றின் அணுகுமுறை மாறுபட்டதாக இருந்தது. முதலாம் நிருபத்தில் பேதுருவும் அவரது வாசகர்களும், கர்த்தரின் உடனடி வருகையை எதிர்நோக்கினர். பேதுரு தமது இரண்டாம் நிருபத்தில், கிறிஸ்து ஏன் மறுபடி வந்திருக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளப் போராடிக்கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்கு உற்சாகம் அளித்தார். 1 மற்றும் 2 பேதுரு நிருபங்கள் எழுதப்பட்ட காலக்கட்டங்களுக்கு இடையில் நடந்த மேம்பாடுகளை நாம் ஆழ்ந்து சிந்தித்தால், இவ்விரு நிருபங்களுக்கு இடையில் உள்ள வேறுபாடுகள், புரிந்துகொள்ள சுலபமானவைகளாக இருக்கும்.

“அறிவு” என்பது 2 பேதுரு நிருபத்தின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது. கிறிஸ்தவர் ஒருவர், கர்த்தருக்கு விசுவாசமாக நிலைத்திருக்க வேண்டுமென்றால், அவர் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் பொய்யிலிருந்து சத்தியத்தைப் பிரித்துணரக்கூடியவராக இருக்க வேண்டும். “அறிய,” “அறிந்த,” “அறிகிற” மற்றும் “அறிவு” என்பவை KJV வேதாகமத்தில் இந்தச் சிறிய நிருபத்தில் பதினான்கு முறைகள் உள்ளன. 1ம் அதிகாரத்தில் மாத்திரம் எட்டு முறைகள் உள்ளன. ஆறு மாறுபட்ட கிரேக்க வார்த்தைகள் இவற்றிற்குப் பின்னால் உள்ளன. நேரெதிர் ஒப்பீட்டின் மூலம், “அறிதல்” மற்றும் “அறிவு” என்ற வார்த்தையில் வடிவங்கள் 1 பேதுரு நிருபத்தில் இருமுறை மாத்திரம் உள்ளன. பேதுரு தமது 2வது பேதுரு நிருபத்தை எழுதுகையில், தமது வாசகர்கள் அறிந்திருந்தது என்ன என்பதைப் பற்றியே மிகவும் அக்கறை கொண்டிருந்தார்.

சபைகளில் ஊடுருவி இருந்த கள்ளப்போதகர்கள், அறிவைக் குறித்த இடர்ப்பாட்டிற்குக் காரணமாக இருந்தனர். வாசகர்கள் தாங்கள் கேள்விப்பட்டிருந்த மூலச் செய்தியை நினைவூட்டுதல் என்பதே 2 பேதுரு நிருபத்தின் நோக்கமாக இருந்தது. பேதுரு தம்மைக் கள்ளப்போதகர்களுடன் நேரெதிராக ஒப்பிட்டு, அந்தப் போதகர்களை அவர்களின் தேவபக்தி இல்லாமைக்காகத் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று தமது வாசகர்களுக்கு உறுதி அளித்தார். நேரெதிர்க் கருத்திற்கான உறுதிப்பாடுகள் இருந்தபோதிலும், கிறிஸ்து திரும்பவும் வருவார் என்று தமது வாசகர்கள் அறிய வேண்டும் என்று பேதுரு விரும்பினார். அவர் [கிறிஸ்து] அவ்வாறு வரும்போது, பூமியும் அதின் கிரியைகள் யாவும் அழிக்கப்படும் மற்றும் எல்லா மக்களும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். இதுவே 2 பேதுரு நிருபத்தின் செய்தியாகவும் பேதுரு இதை எழுதுவதற்கான காரணமாகவும் இருந்தது.

(குறிப்பு: 2 பேதுரு நிருபத்தின் வரைகுறிப்பு இப்புத்தகத்தின் அடுத்த பக்கத்தில் உள்ளது.)

குறிப்பு

[1]Michael Green, *The Second Epistle General of Peter and the General Epistle of Jude.* The Tyndale New Testament Commentaries, ed. R. V. G. Tasker (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1968).

2 பேதுரு நிருபத்தின் வரைகுறிப்பு

வாழ்த்துதல்: *பேதுரு தாம் கொண்டுள்ளது போன்று விலையேறப் பெற்ற விசுவாசம் கொண்டவர்களுக்கு வாழ்த்துதல் தெரிவித்தல் (1:1, 2).*

I. *இதைச் செய்யுங்கள் அப்போது நீங்கள் ஒருக்காலும் இடறிவிழ மாட்டீர்கள் (1:3-21).*

A. *திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகுதல் (1:3-7).*

B. *உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் (1:8-15).*

C. *கர்த்தருடைய வல்லமை மற்றும் வருகை பற்றிய உங்கள் அறிவில் நம்பிக்கையாயிருங்கள் (1:16-21).*

II. *கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (2:1-22).*

A. *கள்ளப்போதகர்கள் சத்தியத்தின் வழியை தூஷிக்கின்றனர் (2:1-9).*

B. *கள்ளப்போதகர்கள் துணிகரமுள்ளவர்களாக சுய விருப்பம் கொண்டவர்களாக இருக்கின்றனர் (2:10-16).*

C. *கள்ளப் போதகர்கள் கேட்டிற்கு அடிமைகளாக இருக்கின்றனர் (2:17-22).*

III. *கர்த்தருடைய வருகை பற்றிய வாக்குத்தத்தத்தை நினைவில் வைத்திருங்கள் (3:1-18).*

A. *ஏளனம் செய்பவர்கள் வேண்டுமென்றே மறந்துவிடுகின்றனர் (3:1-7).*

B. *கர்த்தர் பொறுமையுள்ளவராயிருக்கிறார் (3:8-10).*

C. *நீங்கள் எவ்வகைப்பட்ட மக்களாக இருக்க வேண்டும்? (3:11-18).*

12

இதைச் செய்யுங்கள் அப்போது நீங்கள் ஒருக்காலும் இடறிவிழ மாட்டீர்கள் (2 பேதுரு 1:3-21)

இன்றைய நாட்களில் நாம் எங்கு நோக்கினாலும், நமக்கு மிக வெண்மை யான பற்கள் அல்லது பெரிய பெரிய கார்கள் தேவை என்றும், மிகநேர்த்தி யான உடைகள் மற்றும் நவநாகரீகமான கருவிகள் தேவை என்றும் நம்மை வற்புறுத்தி இணங்கச் செய்ய முயற்சிக்கும் செய்திகளால் நாம் மோதப்படுவதாக காணப்படுகிறது. விளம்பரதாரர்கள் தங்கள் வாடிக்கையாளர்களின் வாழ்வில் தேவைகளை உய்த்துணரச் செய்தல் மாத்திரமே, தங்கள் உற்பத்திப் பொருட்கள் விற்கக் காரணமாக முடியும் என்று அறிந்துள்ளனர்.

அவ்வாறே கள்ளப் போதகர்களும், கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய சில ஆசீர்வாதங்களில் குறைவு பட்டுள்ளனர் என்று முதலில் அவர்களை நம்பி இணங்கச் செய்வதன் மூலம், கிறிஸ்தவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றனர். பேதுரு தமது இரண்டாம் நிருபத்தை எழுதியபோது, புதிய வெளிப்பாடுகளைக் கொண்டிருந்ததாகப் பல போதகர்கள் உரிமைகோரிக் கொண்டிருந்தனர்.

திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகுதல் (1:3-7)

பேதுரு, தமது வாசகர்கள், தங்களுக்கு அவசியமான யாவற்றையும் "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே" பெற்றிருந்தனர் என்று அவர்களுக்கு உறுதிப்படுத்தினார் *(1:3)*. பேதுரு மற்றும் அவரைப் போன்றவர்களின் செய்தியினால், ஆசியா மைனர் பகுதியில் இருந்த கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் முழு ஆசீர்வாதங்களுக்கு சுதந்தரர்கள் ஆகியிருந்தனர்.

பேதுரு குறிப்பிட்ட கிறிஸ்தவர்கள், தங்கள் தோற்றகாலப் போதகர்களின் செய்தியைக் கேள்விப்பட்டு அதற்குக் கீழ்ப்படிந்ததன்மூலம், தேவனுடன் ஒன்றாயிருப்பதற்கு ஆவிக்குரிய வாழ்வில் மறுபடியும் பிறந்திருந்தனர். அவர்கள் பெற்றுக்கொண்டிருந்த வசனமானது, அவர்கள் பாவத்தை எதிர்த்து நிற்பதற்கும் மீட்கப்பட்ட பரிசுத்த மக்களாக வாழ்வதற்கும் தேவையான ஆதாரவளங்களை அவர்களுக்குக் கொடுத்திருந்தது. மற்ற போதகர்கள், தேவனைச் சென்று சேரக் கூடுதலான வழிகளை அளித்தார்களா அல்லது ஒழுக்கரீதியான சில புதிய தர அளவைகளைக் காண்பித்தார்களா? பேதுரு தமது வாசகர்களுக்கு, அவர்கள் தம்மிடத்தில் இருந்து பெற்றுக்கொண்ட செய்தி தேவனுடைய முழுமை யான வெளிப்பாடாக இருந்தது என்று உறுதியளித்தார். அவர்கள் எதிலும் குறைவுபடவில்லை.

பேதுருவின் வாசகர்கள் - "இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார்" என்ற பவுலின் வார்த்தைகளின்படி (நடபடிகள் 13:33) - வாக்குத்தத்தங்களைப் பெற்றிருந்தனர் மற்றும் வாக்குத்தத்தங்களுக்குச் சுதந்தரர்களாக இருந்தனர். தற்போதய போதகர்கள் வருவதற்கு முன்னர், பேதுருவின் உரையைக் கேட்டவர்கள், கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகப் பாவமன்னிப்பை அனுபவித்திருந்தனர். அவர்கள் கர்த்தரின் மகாப்பெரிய நாளில் தாங்கள் இரட்சிக்கப்படுவோம் என்ற விலையேறப்பெற்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றிருந்தனர். பேதுருவின் வாசகர்கள் ஏற்கனவே மகிழ்வுடன் அனுபவித்துள்ள வாக்குத்தத்தங்களின் மாபெரும் தன்மைக்கு, கள்ளபோதகர்களினால் ஏற்படுத்தப்பட்ட எந்த வாக்குத்தத்தங்களும் இணையாக முடியாது.

கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வகையில் தேவனுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர். பவுல், "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்" என்று கூறினார் (ரோமர் 6:4). திவ்விய சுபாவத்தில் பங்கேற்றலைத் தேவனுடைய கிருபை அனுமதிக்கிறது; கிறிஸ்தவரின் பாவத்தைக் கிறிஸ்து மன்னித்து இருப்பதால், கிறிஸ்தவர் தூய்மையும் பரிசுத்தமும் உள்ளவராகிறார். இவ்வாறாக அவர், இச்சையினால் உலகத்தில் உண்டாகும் கேட்டிற்குத் தப்புகிறார். கிறிஸ்தவர்கள் திவ்விய சுபாவத்தில் பங்கேற்றுள்ளதற்கு ஒப்பாக எதையாவது, தாமதமாகக் காட்சிக்குள் வந்தவர்கள் அளிக்க முடிந்ததா? ஒரு போதகர் புதிய சுவிசேஷச் செய்தியொன்றைக் கொண்டுள்ளதாகவோ, கர்த்தரின் இரண்டாம் வருகை பற்றிய புதிய வெளிப்படுத்துதல் ஒன்றைக் கொண்டுள்ளதாகவோ, அல்லது மனிதர்கள் இதற்குமுன் ஒருக்காலும் கேள்விப்பட்டிராத வேத வசனவிளக்கம் ஒன்றைக் கொண்டிருப்பதாகவோ, உரிமைகோருவதை கிறிஸ்தவர் ஒருவர் கேள்விப்படும்போதெல்லாம் அவர் பகுத்தறிதலைப் பயன்படுத்த வேண்டும். அவர் சற்றே நிதானித்து, "நான் ஆரம்பம் முதலாகக் கேள்விப்பட்டுள்ள சுவிசேஷ செய்தி, குறைவுடையதென்று நிரூபிக்கப்பட்டுள்ளதா? அது போதுமானவற்றை வாக்குத்தத்தம் பண்ணவில்லையா?" என்று கேட்டுக்கொள்ள வேண்டும். அடுத்த வசனங்களில் பேதுரு, கிறிஸ்தவர்கள் தேவபக்தியுள்ள பண்பைத் தங்களுக்கு வளமாக அளித்துக்கொள்ளும்போது, அவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் யாவற்றிற்கும் சுதந்தரர்கள் ஆகின்றனர் என்பதைத் தெளிவாக்கினார். 1:5-7ல், தேவபக்தியுள்ள பண்பிற்கான பாதை விவரிக்கப்பட்டுள்ளது, இது இந்த நிருபத்தில் மிகச்சிறப்பாக அறியப்பட்டுள்ள மற்றும் பெரும்பாலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வசனப்பகுதியாக உள்ளது.

விசுவாசம் என்பது கிறிஸ்தவப் பயணத்தின் தொடக்க முனையாக உள்ளது, ஆனால் யாக்கோபுவின் வார்த்தைகளில், "... கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது" என்று காணப்படுகிறது (யாக்கோபு 2:26). ஆகவே பேதுரு, "இப்படியிருக்க, ... உங்கள் விசுவாசத்தோடே ஒழுக்க மேன்மையை [நற்தன்மையை, NIV] ... கூட்டி வழங்குங்கள்" என்று கூறினார்

(1:5). கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்துடன், ஒழுக்க நேர்த்தன்மை மற்றும் சுய ஒழுங்கமைவு ஆகியவற்றை ஏற்படுத்தும் பண்புகளைக் கூட்ட வேண்டியவர்களாக உள்ளனர். ஒழுக்க மேன்மைக்கு நாம், "அறிவை" கூட்ட வேண்டியுள்ளது (1:5). இந்த சந்தர்ப்பப் பொருளில், அறிவு என்பது "தேவனுடைய ஞானமாக" உள்ளது, இதைப் பவுல் 1 கொரிந்தியர் 2:7ல் குறிப்பிட்டிருந்தார். இது தேவனுடைய சத்தியத்தைப் பற்றிய அறிவாகவும், தேவனுடைய மகிமைக்கு அந்த அறிவைப் பயன்படுத்துதலாகவும் உள்ளது. அறிவுடன் நாம், "இச்சையடக்கத்தை" கூட்ட வேண்டியுள்ளது (1:6), இது KJV வேதாகமத்தில் உள்ள "temperance" என்ற வார்த்தையைவிட சிறப்பானதாக உள்ளது. பவுல், ஆவியின் கனிகள் பற்றிய தமது பட்டியலில் இச்சையடக்கத்தை உள்ளடக்கினார் (கலாத்தியர் 5:23). சாலொமோனின் நீதிமொழிகளில் ஒன்று, "தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான்" (நீதிமொழிகள் 25:28) என்று கூறுகிறது.

இச்சையடக்கத்துடன் நாம் "பொறுமையை" ["perseverance"] கூட்ட வேண்டியதாக உள்ளது (1:6). KJV வேதாகமத்தில், எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளுதல் என்ற கருத்தை அடிக்கடி தெரிவிப்பதாக உள்ள "patience" என்ற வார்த்தை உள்ளது. கிரேக்க வார்த்தையின் கருத்தானது, தடைகளை எதிர்கொள்ளுகையில் உறுதியாகச் சகித்திருத்தல் என்பதாக உள்ளது. பொறுமையுடன் "தேவபக்தியை" நாம் கூட்ட வேண்டியுள்ளது (1:6). தேவபக்தி என்பது, நமது வாழ்வு தேவனுடன் இசைவிணக்கமாக இருக்கும்போது, நாம் செய்கிற யாவும் அவரைப் பிரியப்படுத்துவதாகவும் அவரைக் கனப்படுத்துவதாகவும் இருக்கும்போது, நாம் செயல்படும் வகையாக உள்ளது.

தேவபக்தியுடன் நாம் "சகோதர சிநேகத்தை" கூட்ட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது (1:7). இதே கிரேக்க வார்த்தை 1 பேதுரு 1:22ல் பயன்படுத்தப்பட்டு இருக்கையில், இதைப்போன்ற ஒரு வார்த்தை 1 பேதுரு 3:8ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொருள் சார் உலகத்தில் இது, மாம்சப்பிரகாரமாக சகோதரராக இருப்பவர் மீதான அன்பையே அடிக்கடி அர்த்தப்படுத்துகிறது. புதிய ஏற்பாட்டில் இது, கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள் மத்தியிலான அன்பை அர்த்தப்படுத்துகிறது.

சகோதர சிநேகத்துடன் நாம் "அன்பை" கூட்ட வேண்டும் என்று பேதுரு கூறினார் (1:7).பவுலைப் போன்று (1 கொரிந்தியர் 13:13), அவர் நெறிமுறைகளின் இளவரசனைக் கடைசி வரையிலும் கூறாமல் சேமித்து வைத்திருந்தார். இவ்வார்த்தையானது ஒரு வாக்கியத்தில் தொகுத்துரைக்கக் கூடாதபடிக்கு அவ்வளவு உயர்வான அளவீடுகள் உடையதாக உள்ளது.

உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் (1:8-15)

பேதுரு தமது வாசகர்கள் கள்ளப்போதகர்களைச் செயல்திறனுடன் கையாளக் கூடியவர்களாக இருக்கும்படிக்கு அறிவில் அவர்கள் வளர உதவுவதற்காகத் தமது நோக்கத்தில் இருந்து புறம்பே அலைந்து விடாதிருந்தார். அவர், "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால்,

உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது" என்று கூறினார் (1:8). ஒரு கிறிஸ்தவர், 1:5-7ல் பட்டியலிடப்பட்டுள்ள உயர்நெறிகளைத் தமது வாழ்விற்குத் தாராள மாக அளிக்கிறபோதும், அவற்றை அவர் நடைமுறைப் படுத்துகிறபோதும், கிறிஸ்துவைப் பற்றிய அறிவு என்பது இயல்பாகவே ஒரு உப உற்பத்திப் பொருளாகிறது. பேதுரு கோட்பாட்டளவில் அல்ல ஆனால் நடைமுறை அறிவைப் பற்றிப் பேசினார். இவை இரண்டும் ஒன்றல்ல. உதாரணமாக, உடற்பயிற்சியைப் பற்றி ஒருவர் வாசித்தல் என்பது ஒரு விஷயமாக இருக்கலாம், ஆனால் அவர் உடற்பயிற்சியைச் செயல்படுத்துவதற்கு, தமது வாழ்வில் அதிககாலத்தை முதலீடு செய்த பின்புதான் அவர் உடற்பயிற்சி என்றால் என்ன என்று *அறிகிறார்*.

ஆவிக்குரிய வட்டாரமும் இதைப்போன்றதாகவே உள்ளது. பொறுமை யைப் பற்றி ஒருவர் வாசிக்கலாம், ஆனால் அவர் பொறுமையாக இருக்கும்போது மாத்திரமே பொறுமையைப் பற்றியும் அதில் தமது திறன் பற்றியும் *அறிகிறார்*. அதைப்போன்றே, அவர் இச்சையடக்கத்தைச் செயல்படுத்தும் போது மாத்திரமே இச்சையடக்கத்தைப் பற்றி அறிகிறார். பொறுமை, இச்சையடக்கம் மற்றும் பிற கிறிஸ்தவ கிருபைகளை அறிதல் என்பது கிறிஸ்துவை அறிதலாக உள்ளது. செய்தல் என்பது அறிதலை பிறப்பிக்கிறது. இவைகள் நமக்கு உண்டாகிப் பெருகியிருந்தால், நாம் நமது கர்த்தரைப் பற்றிய அறிவில் செயல்விளைவும் உற்பத்தித் திறனும் உள்ளவர்களாக இருப்போம் என்று அப்போஸ்தலர் உறுதி அளித்தார். ஒருவர் கிறிஸ்துவை அறிக்கையிட்டும், கிறிஸ்தவ போதனையின் இந்த நடைமுறை வெளிப்பாடுகளை அறியத் தவறுகிறவர் பார்வையற்றவராகவும் தாம் தமது கடந்த காலப் பாவங்களில் இருந்து சுத்திகரிக்கப்பட்டதை மறந்தவராகவும் (அதாவது, அதை அறியாதவராகவும்) இருக்கிறார் (1:9).

தேவன் தமது நாமத்தைத் தரித்துக்கொள்ளவும் தமக்குச் சொந்த மானவர்களாக இருக்கவும், மக்களை அழைத்து, தேர்வுசெய்து, தெரிந்துகொண்டிருக்கிறார். இது பழைய ஏற்பாட்டின் போதனைக் கருவில் ஆழமாக விரிந்துள்ள ஒரு கருத்தாக உள்ளது. நியாயப்பிரமாணத்தை மோசே, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களுக்குக் கொடுத்தபின்பு, பிறப்பின் நிமித்தமாகவே ஒரு நபர், தேர்ந்துகொள்ளப்பட்டவர்களின் மத்தி யில் எண்ணப்பட்டார். கிறிஸ்து தமது புது உடன்படிக்கையை நிலைநாட்டி இருப்பதால், நாம் விசுவாசத்தினால், தேர்ந்துகொள்ளப்பட்டவர்களின் மத்தி யில் எண்ணப்படுகிறோம். பேதுருவின் வாசகர்களினுடைய அறிவுக்குறைவானது அவர்கள் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் மத்தியில் இருக்கத் தவறுதலை விளைவிக்கும் என்பது பேதுருவின் கவலையாக இருந்தது (1:10). "நீங்கள் ஒருதரம் இரட்சிக்கப்பட்டுவிட்டால், ஒருக்காலும் இழந்துபோகப்பட முடியாது" என்று கூறுகிற போதனையானது வேதவசனங்களில் காணப்படுவதில்லை. நாம் நமது அழைப்பை உறுதிப்படுத்தும்போது, நாம் விசுவாசம்நிறைவுடன் வாழ்வோம், நாம் தேவனுடைய நித்திய இராஜ்யத்திற்குள் வளமான வரவேற்பைக் கொண்டிருப்போம் என்று பேதுரு கூறினார் (1:10, 11). பேதுரு, தாம் புதிதான ஏதொன்றையும் போதிக்கவில்லை என்பதைத் தெளிவாக்கினார். அவர்கள் எதை உண்மையென்று ஏற்கனவே அறிந்திருந்தனரோ, அதை அவர்களுக்கு நினைவூட்டுதலே அவரது ஒரே நோக்கமாக இருந்தது (1:12).

நாம் புதிதாகச் சில போதனையைக் கற்றுக்கொள்வதைக் காட்டிலும், நாம் ஏற்கனவே அறிந்துள்ளவற்றைப் பற்றி நினைவூட்டப்படுதல் அதிக அவசிய மாக உள்ளது. நிலையற்ற மற்றும் பக்குவற்ற மக்கள் எப்போதுமே அதிகமாகச் சிலவற்றை, புதிதாகச் சிலவற்றை ஆராய்ந்து கொண்டுள்ளனர். வேதாகமம் நம்மைச் சத்தியத்தில் உறுதியாக நிலைநாட்டும் ஒவ்வொரு போதனையும் அதன் வெளிப்பாட்டுடன் ஜாக்கிரதையாக ஒப்பிடப்பட வேண்டும்.

1 பேதுரு நிருபத்தைப் போலின்றி, 2 பேதுரு நிருபம், சுவிசேஷத்தில் அடையாளம் காணப்படக் கூடியவையான, பேதுருவின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய மறைமுகமான குறிப்பிடுதல்கள் கொண்டதாக உள்ளது. 2 பேதுரு 1:14ல் அவர் தம்மிடத்தில் இயேசு பேசியிருந்த வார்த்தைகளைக் குறிப்பிட்டார்.

> "நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர் வயதுள்ளவனாகும் போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லு கிறேன் என்றார்." இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார் (யோவான் 21:18, 19).

கர்த்தருடைய தீர்க்கதரிசனம் நிறைவேறுதலுக்கான வேளை சமீபமாயிருந்தது என்று பேதுரு புரிந்துகொண்டிருந்தார் (1:14).

1:15ல் பேதுரு கடந்தகால நிகழ்வையல்ல ஆனால் எதிர்காலத்திற்கான தமது திட்டங்களைக் குறிப்பிட்டார். அவர், "மேலும், நான் சென்றுபோனபின்பு இவைகளை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ள ஏதுவுண்டாயிருக்கும்படி பிரயத்தனம்பண்ணுவேன்" என்று கூறினார். அவர், தமது மரணத்திற்குப் பின்பு, தமது வாசகர்கள், கிறிஸ்து தமக்கு அறியச் செய்த "விஷயங்களை" நினைவில் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பினார். 1:15ம் வசனம், கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய ஒரு பதிவை அவர் பேதுரு தமது வாசகர்களுக்கு விட்டுச் செல்ல வேண்டும் என்ற அவரது விருப்ப நோக்கத்தைக் குறிக்க வாய்ப்புள்ளது. பேதுரு எழுதிய சுவிசேஷம் என்று ஒரு புத்தகம் நம்மிடத்தில் இல்லை, ஆனால் மாற்கு சுவிசேஷத்தின் பின்னணியில் பேதுருவின் அதிகாரத்துவம் இருந்தது என்பது பழங்கால சபையின் சாட்சியமாக உள்ளது. மாற்கு சுவிசேஷத்தில் நாம், பேதுரு வாக்களித்த முயற்சிகளின் விளைவைக் கொண்டிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.

கர்த்தருடைய வல்லமை மற்றும் வருகை பற்றிய உங்கள் அறிவில் நம்பிக்கையாயிருங்கள் (1:16-21)

16ம் வசனம், "நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்" என்று கூறுகிறது. பேதுரு, தமது சொந்த போதனையின்

பின் இருந்த அதிகாரத்துவம் மற்றும் கள்ளப்போதகர்களின் அதிகாரத்துவம் இல்லாமை ஆகியவற்றிற்கு இடையில் இருந்த வேறுபாட்டைத் தெளிவாக்கினார். அவர்களின் போதனையானது, "தந்திரமான கட்டுக்கதைகளின்" விளைவாக இருந்தது. அந்தக் கதைகளுக்குப் பதிலாக, அப்போஸ்தலர்களின் செய்தியைத் தேர்ந்து கொள்ள வேண்டியதற்கான இரண்டு முக்கியமான காரணங்களைப் பேதுரு, 1:1-21ல் அவர்களுக்குக் கொடுத்தார்.

முதலாவது, பேதுரு கண்ணால் கண்ட சாட்சியாக இருந்தார். 1 பேதுரு 5:1 மற்றும் 2 பேதுரு 1:16 ஆகிய இரு வசனங்களிலும், இந்த அப்போஸ்தலர் தமது அதிகாரத்திற்கு அடிப்படையாகத் தாம் கிறிஸ்துவைக் கண்ணால் கண்டிருந்ததை வேண்டுகோளாக விடுத்தார். 1 பேதுரு நிருபத்தில் அவர் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைக் குறிப்பிடவில்லை, ஆனால் 2 பேதுரு நிருபத்தில் அவர் அதைச் செய்தார் (1:17, 18). அவர் தேர்ந்துகொண்ட நிகழ்ச்சியானது இந்தக் கிறிஸ்தவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் அவர் ஒத்திகை பார்த்தி ருந்ததாகும் என்பதில் சந்தேகம் இல்லை. பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர், மறுரூபமலையில் மோசேயும் எலியாவும் தோன்றி கர்த்தருடன் உரையாடுகையில், அவருடன் இருந்திருந்தனர். அதிக நாடகத்துவமான சில விஷயங்கள்கூட நடைபெற்றிருந்தன. உன்னதமான மகிமையில் இருந்து பேசியவர், இயேசுவுக்குச் சாட்சி பகர்ந்தார்: "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்." மத்தேயு 17:1-5, மாற்கு 9:2-7 மற்றும் லூக்கா 9:28-35 ஆகிய வசனப்பகுதிகள் இந்த நிகழ்ச்சியைப் பதிவு செய்துள்ளன. இந்த மூன்று வசனப்பகுதிகளிலும், "இவருக்குச் செவிகொடுங்கள்" என்பது தேவனிடத்தில் இருந்து வந்த கூடுதல் அறிக்கையாக இருந்தது.

இரண்டாவது, பேதுருவின் செய்தியானது, தீர்க்கதரிசிகளின் சாட்சியத்தைக் கொண்டிருந்தது. கள்ளப்போதகர்கள், கண்ணால் கண்ட சாட்சியம் பற்றிய விபரங்களோ அல்லது தேவனுடைய தீர்க்கதரிசிகளின் ஆதரவோ கொண்டிருக்கவில்லை. தீர்க்கதரிசிகள் கூறியுள்ளவைகளுக்குக் கவனம் செலுத்தும்படி பேதுரு தமது வாசகர்களுக்குப் புத்தி கூறினார். 1:20ல் KJV வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு சற்றே குழப்பமூட்டுவதாக உள்ளது. அது, "வேதத்தில் உள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் தனிப்பட்ட விளக்கம் கொண்டதாயிராது" என்று கூறுகிறது. நாம் வேதவசனங்களைத் தனிப்பட்ட வகையில் விளக்கம் அளிக்கக் கூடாது என்று பேதுரு கூறவில்லை. தேவனு டைய வசனத்தை யாராவது ஒருவர் நமக்கு விளக்கி உரைக்காத வரையில், அது அர்த்தப்படுத்துவது என்ன என்று நாம் எவ்வாறு அறிய முடியும்? தீர்க்கதரிசன மானது தனிநபர் தமது சொந்த வகையில் செயல்படுதலின், தனிப்பட்ட ஊக்க விருப்பத்தின் விஷயம் அல்ல என்றே அவர் கூறினார். இவ்விடத்தில் தமிழ் வேதாகமம் "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்ற மான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது" என்று ஓரளவு சரியான மொழிபெயர்ப்பைக் கொண்டுள்ளது. தேவனே தீர்க்கதரிசிகளை ஏவியிருந்தார். அதனால்தான் அவர்களது செய்திகள் அவ்வளவு கனமும் அதிகாரமும் கொண்டுள்ள. NIV வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு இந்தக் கருத்தை அதிகம் தெளிவாக விளக்குகிறது: "... வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் தீர்க்கதரிசியின் சொந்த விளக்கத்தினால் வரவில்லை." NASB வேதாகமம், "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் ஒருவரது சொந்த

விளக்கமாக இருப்பதில்லை” என்று கூறுகிறது.

முடிவுரை

1ம் அதிகாரத்தில் பேதுரு, அறிவை வலியுறுத்தினார். இனியும் அவரது வாசகர்கள் அநுபவித்த பாடுகள் அந்த அப்போஸ்தலரைக் கவலை கொள்ளச் செய்யவில்லை. சபைக்குழுமத்தில் நுழைந்து கிறிஸ்தவர்கள் சமீபத்தில்தான் ஆதாயப்படுத்திக் கொண்டிருந்த ஜீவனை அவர்களிடத்தில் இருந்து எடுத்துப்போடுவதாக அச்சுறுத்திய கள்ளப்போதகர்களைப் பற்றியே அவர் கவலை கொண்டிருந்தார். கிறிஸ்தவர்கள் சுதந்தரித்துக் கொண்டிருந்த மாபெரும் மற்றும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை அவர்களுக்கு அவர் நினைவூட்டினார். அவர்கள் கிறிஸ்துவைப் பற்றிய அறிவில் தங்களைக் கனிநிறைந்தவர்களாக்கும் கிறிஸ்தவ கிருபைகளை அணிந்துகொள்வதன் மூலம் அறிவில் வளரும்படி அவர்களை அவர் அழைத்தார்.

பேதுருவின் அதிகாரத்துவம் அவரது அப்போஸ்தலத்துவத்தின் நெறிமுறையினால் வந்தது என்று இந்தக் கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்வது முக்கியமாக இருந்தது. அவரது சாட்சியத்திற்கும் கள்ளப்போதகர்கள் காட்சிக்குத் தாமதமாகவே வந்தனர் என்ற உண்மைக்கும் இடையில் மறைமுக மான நேர்மாறு ஒன்று நிலவிற்று. மேலும் பேதுரு, தமது செய்திக்கு ஆதரவாகத் தீர்க்கதரிசிகளை முன் மொழிந்தார்.

பேதுருவின் வார்த்தைகளில் இருந்து நாமும் கற்றுக்கொள்ள முடியும். கள்ளப்போதகர்கள் முதல் நூற்றாண்டுக்கு மாத்திரமே உரியவர்கள் அல்ல. ஒவ்வொரு தலைமுறையும் வேதவசனங்களை ஆராய்ந்து ஒவ்வொரு உபதேசத்தையும் பரிசீலனை செய்ய வேண்டும். இன்றைய நாட்களில் சபையானது, “தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும்’’ நமக்குக் கொடுத்துள்ள கர்த்தரின் வசனத்தில் உள்ள நினைவூட்டுதல் அடிக்கடி தேவைப்படுகிறது (1:3).

13

கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (2 பேதுரு 2:1-22)

முட்டாளாக்கப்படுதல் என்பது நம்மில் பெரும்பான்மையானோர் நல்ல தயவுடன் தாங்கிக் கொள்ள மிகவும் கடினமான நிகழ்வுகளில் ஒன்றாக உள்ளது.

கர்த்தருடைய சபையின் சபைக் குழுமங்கள் மத்தியில் கருத்துவேற்றுமையைப் பரப்பிய கள்ளப்போதகர்களைப் பற்றிப் பேதுரு விவரித்தபோது, கிறிஸ்தவர்களுக்கு அவர், "அவர்களால் எடுத்தாளப்படும் அபாயத்தில் இருக்கிறீர்கள்" என்று கூறினார். வஞ்சிக்கும் உபதேசமானது ஒரு தலைமுறையில் இருந்து இன்னொரு தலைமுறைக்கு மாறலாம். வஞ்சித்தல் என்பது நிலையானதாக உள்ளது. போதகர்களின் கனிகளும் வாழ்வு நடையும் அதிகம் சுட்டிக்காட்டப் படுபவையாக உள்ளன. அவர்களின் உபதேசத்தைப் பேதுரு விவரித்திருந்தால் அது ஆர்வமுடையதாக இருந்திருக்கும், ஆனால் நாம், தேவனுக்கு எதிரான கூற்றுக்களைக் கையாளும் திறன் உடையவர்களாக இருக்கும்படி, அறிவுறுத்துதல்களைக் கொண்டிருத்தல் என்பது நமக்கு மிகவும் ஆதாயமுள்ளதாக இருக்கிறது.

கள்ளப்போதகர்கள் சத்தியத்தின் வழியைத் தூஷிக்கின்றனர் (2:1-9)

எதிர்த்து நிற்குதல்கள் மகிழ்வற்றவைகளாக உள்ளன. நம்மில் பெரும்பான்மையானவர்கள், சாத்தியப்படுகிறபோது அவற்றைத் தவிர்க்கிறோம், ஆனால் எதிர்த்து நிற்குதலைத் தவிர்த்தல் என்பது சிலவேளைகளில் கோழைத்தனம் போன்றதாகவே இருக்கலாம். விஷயங்களை நன்கு அறிந்துள்ள நல்ல ஆண்களும் பெண்களும் அமைதியாக அமர்ந்து, சுயவிருப்பமும் சுயத்தைச் சேவித்தலும் கொண்டவர்களைப் பொறுப்பேற்க அனுமதிக்கும் சிலவேளைகளில், பயங்கரமான விஷயங்கள் நடக்கின்றன. நாம், "துன்மார்க்கருக்கு முன்பாக நீதிமான் தள்ளாடுவது கலங்கின கிணற்றுக்கும் கெட்டுப்போன சுனைக்கும் ஒப்பாகும்" என்று வாசிக்கிறோம் (நீதிமொழிகள் 25:26). சபையானது தேவனைக் கனப்படுத்தவும் அதன் உபதேசங்கள் தூய்மையானதாகக் காத்துக்கொள்ளப்படவும் வேண்டுமென்றால், நல்ல மற்றும் அறிவுமிக்க மக்கள் பேசுவதற்குத் தைரியம் கொண்டிருக்க வேண்டும். பேதுரு யாருக்கு இந்த நிருபத்தை எழுதினாரோ, அவர்களில் சிலர் கள்ளப்போதகர்களால் இழுப்புண்டு இருந்தனர், ஆனால் மற்றவர்கள் செயலற்று மாத்திரம் இருந்தனர். பேதுரு, விசுவாசம் நிறைந்தவர்களைச் சத்தியத்திற்காக நிலைநிற்கும்படி இணைக்க விரும்பினார்.

அவர்கள் எதிர்பார்க்கப்பட வேண்டியவர்களாக உள்ளனர்

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் எச்சரிக்கைகள் இருந்தபோதிலும், சபையானது போர்க்களத்தைப் போல் இருப்பதைக் காட்டிலும் இறகுப்படுக்கையைப் போல் இருப்பதை மக்கள் அடிக்கடி எதிர்பார்க்கின்றனர். பழைய ஏற்பாட்டில் கள்ளத் தீர்க்கதரிசிகள் பலர் இருந்தனர் (2:1). எரேமியா, எருசலேம் நலமாயிருக்கும், தேவன் தமது ஆலயம் விழுவதை ஒருக்காலும் அனுமதிக்கமாட்டார், மற்றும் தாவீதின் குமாரர்களில் ஒருவர் தேவனுடைய மக்கள்மீது எப்போதும் ஆளுகை செலுத்துவார் என்று உறுதிப்படுத்திய கள்ளப்போதகர்கள் பலருக்கு எதிராக நின்றார். எரேமியா, பிரபலமாக இல்லாத ஒரு செய்தியைப் பேசும் சுமையைக் கொண்டிருந்தது மட்டுமின்றி, தாங்களும் தேவனிடத்தில் இருந்து ஒரு செய்தியைக் கொண்டிருந்ததாக உரிமை கோரியவர்களின் நிலையான ஏளனத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

கள்ளத் தீர்க்கதரிசிகள் இருந்தது போலவே, சபைக்குள் கள்ளப்போதகர்களும் எழும்புவார்கள் என்று பேதுரு தமது வாசகர்களுக்கு உறுதிப்படுத்தினார் (2:1). இதேபோன்ற ஒரு எச்சரிக்கையைப் பவுல், எபேசுவில் இருந்த சபையின் மூப்பர்களுக்குக் கொடுத்தார்: "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்" (நடபடிகள் 20:29. 30). எச்சரிக்கைகள் இருந்தும்கூடக் கிறிஸ்தவர்கள், சபையின் சமாதானத்தைக் கள்ளப் போதகர்கள் தொந்தரவு செய்யும்போது, அடிக்கடி முற்றிலுமாகத் திகைப்படைகின்றனர். எதிர்ப்புகளின் முன்னிலையில் சில கிறிஸ்தவர்கள் ஊக்கம்குறைந்துபோய் கிருபையிலிருந்து விழுந்துள்ளனர் (2:2).

பேதுருவை நாம் கவனித்துக் கேட்டால், கிறிஸ்தவர்கள் மதரீதியான தவறை எதிர்த்து நிற்கக் கூடியவர்களாயிருக்கக் கிறிஸ்துவின் போதனைகளில் போதிய அளவு அறிவுடையவர்களாக இருக்க வேண்டும் என்று நாம் முடிவுசெய்தாக வேண்டும். கள்ளப்போதகர்கள் அழிவுக்கேதுவான தேவவிரோதமான விஷயங்களைத் தந்திரமாகக் கொண்டுவருவார்கள். அவர்களும் அவர்களால் வஞ்சிக்கப்படுகிறவர்களும், சத்தியமார்க்கத்தை அவமானத்திற்குக் கொண்டுவருவார்கள்.

தேவன் அவர்களுக்கு நியாயதிபதியாக இருப்பார்

கிறிஸ்தவர்கள் கள்ளப் போதகர்களைப் பின்பற்றினாலும் இல்லையென்றாலும் அல்லது அவர்களை எதிர்த்து நின்று அவர்களின் தவறுகளை வெளிப்படுத்தினாலும் இல்லையென்றாலும், இறுதியில் தேவன் அவர்களுக்கு [கள்ளப்போதகர்களுக்கு] நியாயாதிபதியாக இருப்பார். தேவனுக்கு எதிராகக் கலகம் செய்பவர்களைத் தேவன் எப்போதுமே நியாயந்தீர்த்துள்ளார், மற்றும் பேதுரு இந்த நிருபத்தை எழுதிய இந்த வேளையில் கலகம் செய்தவர்களுக்கும் அவர் அதையே செய்வார் என்று பேதுரு வாதிட்டார். இது மறுத்துரைக்கக் கடினமானதாக இருக்கும்படி, அப்போஸ்தலர் இரட்சித்து இருக்க - அறிந்து இருக்கிறார் என்ற ஒரு சொற்றொடரைப் பயன்படுத்தினார் (வசனங்கள் 8, 9ல் காணவும்).

பாவம் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல் அவர்களை நரகத்தில்

விழத்தள்ளினார் என்று பேதுரு கூறினார் (2:4). கிறிஸ்தவர்கள் மத்தியில் விடாப்பிடியாக நிலைத்திருக்கும் பழங்கதை ஒன்று, சாத்தான் தேவனுக்கு எதிராகக் கலகம் செய்த தூதனாக இருந்தான் என்றும் அதனால் அவன் தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து வெளித்தள்ளப்பட்டு, மனித குலத்தை சோதிப்பவனாகவும் எதிராளியாகவும் பூமியில் எங்கும் உலாவிக்கொண்டு இருக்கிறான் என்று கூறுகிறது. 2:4ல் சாத்தானை கண்டறியக் கணிசமான கற்பனை தேவைப்படுகிறது. இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தூதர்களைப் பற்றி நாம் இவ்விடத்தில் உள்ளதைத் தவிர வேறெதுவும் அதிகமாக அறிவ தில்லை. சாத்தானுடைய தொடக்கம் பற்றி நாம் ஒன்றும் அறிவதில்லை மற்றும் அவனது வரலாற்றைச் சிறிதளவே அறிந்து இருக்கிறோம். அதிக மாக அறிய வேண்டும் என்று விரும்புதல் நமக்கு இயல்பானதாக இருக்கலாம், ஆனால் தேவன் வெளிப்படுத்தத் தேர்ந்து கொண்டுள்ளவற்றுடன் நாம் திருப்தி யடைந்தாக வேண்டும்.

சாத்தானைப் பற்றிப் பேசும் போது, வேதாகமத்தில் இருந்து குறிப்பிட்ட சில பக்கங்கள் கலந்துரையாடப் படுகின்றன. அவற்றில் ஏசாயா 14:12ம் ஒன்று ஆகும், இவ்வசனத்தில் KJV வேதாகமம், “விடிவெள்ளி” என்பதற்கான எபிரெய வார்த்தையை, அதே அர்த்தம் தரும் “லூசிபர்” என்ற இலத்தீன் வார்த்தையைக் கொண்டு மொழிபெயர்த்துள்ளது. சந்தர்ப்பப்பொருளில் தீர்க்கதரிசி, பாபிலோன் அரசரின் உயர்த்தப்பட்ட மகிமையை, “விடிவெள்ளி” என்று அடையாளத்துவமாக அழைத்து, அதை அவர் பெற்றுக்கொள்ள இருந்த முற்றிலுமான கைவிடப்பட்ட நிலையுடன் நேரெதிராக ஒப்பிட்டார். இவ்வசனப்பகுதியில் சாத்தானைப் பற்றிய குறிப்பெதுவும் ஏற்படுத்தப்பட வில்லை.

லூக்கா 10:18ல் இயேசு, சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைத் தாம் கண்டதாகக் கூறினார், இவ்வசனப் பகுதியில் சாத்தான் குறிப்பிடப்பட்டுள்ளான், ஆனுல் எழுபது (அல்லது எழுபத்தி இரண்டு) பேருக்கு இயேசு கொடுத்திருந்த அற்புத வல்லமையினால் அவன் அடையாளத்துவ மாகக் கீழே தள்ளப்பட்டான் என்பதை, சந்தர்ப்பப் பொருளின் ஆய்வு செயல்விளக்கப்படுத்தும். இவ்வசனப்பகுதியானது சாத்தான் வானத்திலிருந்து தள்ளப்பட்ட தூதனாக இருக்கிறான் என்பது பற்றி எதுவும் கூறுவதில்லை.

வெளிப்படுத்தின விசேஷம் 12ம் அதிகாரம், சாத்தானின் தொடக்கம் பற்றி அடிக்கடி குறிப்பிடப்படும் இன்னொரு வசனப்பகுதியாக உள்ளது. மிக உயர்வான உருவகநடைப் புத்தகத்தில், மிக உயர்வான உருவகநடைப் பகுதி யில், சாத்தான் தேவனுக்கு எதிராக யுத்தம் செய்ததாகவும் அவன் பூமிக்குத் தள்ளப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதே சந்தர்ப்பப்பொருளில், சூரியனை ஆடையாக அணிந்திருந்த ஒரு பெண், கிறிஸ்து என்று உறுதியாக நம்பப்படுகிற ஒரு ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். இவ்வசனப்பகுதியை நேரடி அர்த்தம் தருவதாக வலியுறுத்துபவர்கள், ஒரு பெண் சூரியனை எவ்வாறு உடுத்திக்கொள்ள முடியும் என்று அறிய ஆர்வம் கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. திரும்பக் கூறுவதென்றால், சாத்தானின் தொடக்கம்பற்றி வேதாகமம் நமக்கு எதுவும் கூறுவதில்லை; 2:4 இவற்றில் மிகவும் குறைவானதைக் கூறுகிறது.

தூதர்கள் நரகத்தில் தள்ளப்பட்டனர் என்று பேதுரு கூறியபோது, அவர் வேதாகமத்தில் இந்த இடத்தில் மாத்திரம் வரக்கூடிய ஒரு வார்த்தையைப்

பயன்படுத்தினார். இது காணப்படாத உலகத்தின் கீழே உள்ள ஒரு வட்டாரத்தைக் குறிப்பிடும் கிரேக்கப் புராணத்தில் உள்ள ஒரு வார்த்தையான, ''டார்ட்டாரஸ்'' என்பதன் வினைவடிவமாக உள்ளது. ''டார்ட்டாரஸ்'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதன் மூலம் பேதுரு, பாதாள வட்டாரத் தின் குறிப்பிட்ட சில பகுதியைக் குறித்தார் என்று கருத்துத் தெரிவிக்கச் சில மாணவர்கள் அரும்பாடுபட்டுள்ளனர். அது தள்ளப்பட இயலாததாக இருக்கையில், தற்செயலான ஒரு வார்த்தையை எடுத்துக்கொண்டு, அதிலிருந்து பாதாளத்திற்கு ஒரு வரைபடத்தை வரைதல் என்பது யூகத்துவமானதாக உள்ளது. யூகத்துவத்தின்மீது கிறிஸ்துவ போதனையைக் கட்டியெழுப்ப நாம் முயற்சி செய்கிறவரையில், அல்லது நாம் யூகிக்கையில் வேதாகமம் போதிப்பது என்ன என்பதன்மீது நமது கண்ணோக்கை இழந்துபோகாத வரையில் அது தீங்கற்றதாக உள்ளது. தேவன் தூதர்களைத் தப்பவிடவில்லை என்று பேதுரு கூறினார். பின்வரும் கருத்தை நாம் காணாது விடக்கூடாது: அவர் கள்ளப்போதகர்களையும் தப்பவிடமாட்டார்.

தேவன் தூதர்களை நியாயத்தீர்ப்பிற்கென்று ஒப்புக்கொடுத்தார் என்பது பற்றிய பேதுருவின் விவரித்தலானது, நமக்கு நன்கு அறியப்படாததாக இருந்தாலும், அவரது [பேதுருவின்] முதல் வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்டதாக இருக்கலாம். இருப்பினும் அவரது அடுத்த விவரித்தலானது, அவரது முதல் வாசகர்களுக்குப் போலவே இன்றைய நாட்களில் உள்ள நமக்கும் நன்கு பழக்கமானதாக உள்ளது. தேவன் நோவாவின் நாட்களில் இருந்த பூர்வ உலகத்தைத் தப்பவிடவில்லை என்று அப்போஸ்தலர் குறிப்பிட்டார் (2:5). KJV வேதாகமம் இவ்விடத்தில் சில விளக்கங்களைத் தரவேண்டியிருக்கிறது. தேவன், ''எட்டாவது நபரான நோவாவைக் காப்பாற்றினார்'' என்று அது கூறுகிறது. நோவா எந்தக் கருத்தில் எட்டாவது நபராக இருந்தார்? அது எட்டுத் தலைமுறைகளை அர்த்தப்படுத்த முடியாது, ஏனெனில் நோவா, ஆதாமில் இருந்து பத்தாம் தலைமுறையானவராக இருந்தார். 1 பேதுரு 3:20ம் வசனம் ஒரு குறிப்பை அளிக்கிறது; வெள்ளப்பெருக்கு வந்தபோது எட்டு நபர்கள் காப்பாற்றப்பட்டனர் என்று அது குறிப்பிடுகிறது. நோவாவும் மற்ற ஏழுபேர்களும், மொத்தத்தில் எட்டுப்பேர்கள் காப்பாற்றப்பட்டனர் என்பதே 2:5ன் அர்த்தமாக உள்ளது.

பேதுருவின் மூன்றாவது விவரிப்பு, ஆபிரகாமின் நாட்களில் இருந்து வருகிறது. தூதர்கள் மற்றும் வெள்ளப்பெருக்கிற்கு முற்பட்ட உலகத்தவர் ஆகியோர் மீது தேவன் நியாயத்தீர்ப்பிட்டது போலவே, அவர் சோதோம் மற்றும் கொமோரா என்ற பழங்கால நகர்கள் மீதும் நியாயத்தீர்ப்பிட்டார் (2:6-8). தேவன் நோவாவை விடுவித்தது போலவே அவர் லோத்தையும் விடுவித்தார். நீதியுள்ளவர்களை எவ்வாறு விடுவிப்பது என்றும் குற்றம் செய்தவர்களை எவ்வாறு நியாயந்தீர்ப்பது என்றும் கர்த்தர் அறிந்திருந்தார் (2:9). அவர் எப்போதும் அவ்வாறு செய்திருக்கிறார், மற்றும் அவர் ஆசியா மைனர் பகுதி யில் இருந்த சபைகளை இடர்ப்படுத்திக் கொண்டிருந்தவர்களுக்கும் அவ்வாறே திரும்பவும் செய்வார்.

கள்ளப்போதகர்கள் துணிகரமுள்ளவர்களாக சுய விருப்பம் கொண்டவர்களாக இருக்கின்றனர் (2:10-16)

சிலவேளைகளில் உண்மையான ஒரு கிறிஸ்தவர், வேதாகமத்தைப் பற்றியும் அதன் போதனை பற்றியும் கேள்விகளைக் கொண்டுள்ளார் மற்றும் தமது கேள்விகேட்கும் செயல்முறையில், அவர் வேதாகம போதனைக்கு நேரெதிரான கருத்துக்களை வெளிப்படுத்துகிறார். அப்படிப்பட்ட விஷயத்தில் அவருடன், பக்குவமடைந்த ஒரு கிறிஸ்தவர், வேதாகமம் அறிவின் தொடக்க முனையாக உள்ளது என்று கருத்தைப் பயன்படுத்தி, மென்மையாகவும் உறுதி யாவும் விவாதிக்க வேண்டும். இளைய, அனுபவம் இல்லாத அல்லது சத்தி யத்தை உண்மையாக நாடுகிற மக்கள், பேதுருவுக்கு பழக்கமான சபைகளில் தேவனுக்கு எதிரான அழிவுக்கேதுவான கருத்துக்களைப் பரப்பிக்கொண்டிருக்க வில்லை. அவர்கள் தீர்மானமான வகையில் கையாளப்பட வேண்டியவர்களாக இருந்தனர்.

அவர்கள் இறுமாப்பு உள்ளவர்களாக இருந்தனர்

பல மக்களுக்கு, உண்மையான, சிந்தனை நிறைந்த கேள்விகளைக் கேட்டல் என்பது வளர்ச்சிக்கான பாதையாக இருந்துள்ளது. நமது மனங்களில் எழுப்பப்பட்ட கேள்விகளை நாம் கேட்கும்போது அல்லது ஜாக்கிரதையான பகுத்தறிதல் அல்லது உறுதியான ஆதாரம் என்பவற்றின் மீது உள்ளதைக் காட்டிலும் நாம் நமது கண்ணோக்குக் கருத்துக்களைத் தற்காப்பதற்கு அதிகம் ஆர்வமாக இருக்கும்போது, பிரச்சனைகள் மேம்படுகின்றன. இவ்வகையான மனநிலைக்குள் நழுவி விழுதல் சுலபமாக உள்ளது. எனது எழுதுமேஜையின்மேல் "எல்லாவற்றையும் அறிந்துள்ளதாக நினைக்கும் மக்கள், நம்மில் எல்லாவற்றையும் அறிந்துள்ளவர்களுக்கு மிகவும் எரிச்சல் மூட்டுபவர்களாக உள்ளனர்" என்று எழுதப்பட்டுள்ள நகைச்சுவை அடையாளப் பலகை ஒன்றுள்ளது. துணிகரம் மற்றும் சுயவிருப்பம் ஆகியவற்றைக் கொண்டவர்களுக்கு தங்களை உய்த்துணருதல் என்பது பெரும்பாலும் கடினமாக உள்ளது.

கண்ணியக்குறைவான அகங்காரம் என்பது கள்ளப்போதகர்களின் ஒரு அடையாளக்குறிப்பாக உள்ளது என்று பேதுரு கூறினார்: "... இவர்கள் ... மகத்துவங்களை தூஷிக்க அஞ்சாதவர்கள்" (2:10). NIV *வேதாகமம், "அவர்கள் பரலோக ஜீவிகளைத் தூஷிக்க அஞ்சாதவர்கள்" என்று கூறும் வேளையில்,* KJV *வேதாகமம், "அவர்கள் மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவர்கள்" என்று கூறுகிறது. இவ்விடத்தில் குறிப்பானது தூதர்களை அல்லது மனிதரில் மேன்மையுள்ளவர்களை என்று யாரைப் பற்றியதாக இருந்தாலும், கள்ளப்போதகர்கள், தங்களுடையவற்றைக் காட்டிலும் பெரியதாக உள்ள அந்த அதிகாரம், வல்லமை அல்லது அறிவு என்பவற்றிற்கு மரியாதை எதையும் கொண்டிருப்பதில்லை (2:11). அவர்கள் தாங்கள் புரிந்துகொள்ளாதகாரியங்களில் தூஷித்தல் அல்லது பகைத்தல் என்பது சிறிதளவே வியப்புக்குரியதாக உள்ளது (2:12). கற்றறிந்தநிலை, அனுபவம் அல்லது பக்தி ஆகியவற்றில் அவர்கள், தங்களுக்குப் போதிக்கும் நிலையில் உள்ள எவரொருவர்மீதும் வெறுப்பைச் செயல்விளக்கப்படுத்துகின்றனர் என்பதே இவ்விடத்தில் மறைவான*

கருத்தாக உள்ளது. தூதர்கள்கூட அமைதலாய் இருக்கக்கூடிய சூழ்நிலையில் இவர்கள் துரிதமாகப் புகுந்து அபிப்பிராயங்களை வீசுகிறவர்களாகவும் குற்றஞ்சாட்டுகிறவர்களாகவும் இருக்கின்றனர்.

அவர்கள் சுய ஈடுபாட்டிற்கு ஒப்புக்கொடுத்தவர்களாக உள்ளனர்

பேதுரு, தமது வாசகர்கள் தங்களுக்குப் போதிக்க வருபவர்களின் தனிப்பட்ட வாழ்வைக் கண்ணோக்குமாறு வேண்டிக்கேட்டுக் கொண்டார். அவர் இவ்விடத்தில் விவரித்த போதகர்கள், முற்றிலும் உணர்வு உறைந்த மனிதர்களாக, உலகசிந்தை உள்ளவர்கள்கூட இரவின் மூடுகையில் செய்யலாம் என்று ஒதுக்கி வைத்துள்ள தவறான நடக்கையைப் பரந்த பகல்வெளிச்சத்தில் கொண்டுள்ளவர்களாக இருந்தனர் என்று இவர் விவரித்தார். அவர்கள் பரிசுத்தவான்களின் கூடுகைகளில் கறைகளும் இலச்சைகளுமாக இருந்தனர் என்று பேதுரு கூறினார் (2:12-14).

கள்ளப்போதகர்கள் "செம்மையான வழியைவிட்டுத் தப்பிநடந்து" என்ற பேதுருவின் கூற்றானது, அவர்கள் ஒருகாலத்தில் உண்மையுள்ளவர்களாக இருந்தனர் என்று மறைமுகமாய் உணர்த்துவதில்லை (2:15). அவர்களின் வாழ்வுகள் நேரான வழியை விட்டுவிலகுதலின் நிலையான மாதிரிகளாக இருந்தன. கள்ளப்போதகர்கள் பொதுவாக, தங்கள் தனிப்பட்ட ஆதாயத்திற் காகத் தவறாகப் பயன்படுத்தக்கூடிய நிலையற்ற ஆத்துமாக்களின் தோழமை யைக் கண்டறியக் கூடியவர்களாக இருந்தனர். இவ்விஷயத்தில் அவர்கள், தேவபக்தியைக் கூலிபொருத்திய தீர்க்கதரிசியான பாலாம் என்ற தங்கள் ஆவிக்குரிய முன்னோரைப் பின்பற்றுகின்றனர் (2:15, 16).

கள்ளப்போதகர்கள் கேட்டிற்கு அடிமைகளாக இருக்கின்றனர் (2:17-22)

2ம் அதிகாரத்தில் கள்ளப்போதகர்களைப் பற்றிய விவரிப்பு, யூதா எழுதிய நிருபத்தில் அவர்களைப் பற்றிய விவரிப்புக்கு இணையாக உள்ளது. உதாரண மாக, யூதா எழுதியதில் உள்ள தண்ணீரற்ற மேகங்கள் மற்றும் பேதுரு எழுதியதில் உள்ள தண்ணீரில்லாத கிணறுகள் ஆகியவற்றிற்கு இடையில் சிறிதளவே வேறுபாட்டை நாம் காணுகிறோம். அண்மைக்கிழக்கு நாடுகளில் பருவநிலையானது அடிக்கடி வெப்பமாகவும் உலர்ந்தும் உள்ளது. மத்திய தரைக்கடல் பகுதியின் மீது எழும்பும் ஒரு மேகம் அல்லது பாலைவனத்தில் உள்ள ஒரு பசுஞ்சோலை என்பது புத்துணர்வு பெற்றுக்கொள்ளுதலை வாக்களிக்கிறது. இம்மனிதர்களின் போதனை ஆத்துமாக்களுக்குப் புத்துணர்வைக் கொண்டுவரவில்லை (2:17). இந்த விவரிப்பை வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் முடிவு வார்த்தைகளுடன் நேரெதிராக ஒப்பிடுதல் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது: "தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (வெளிப்படுத்தின விசேஷம் 22:17).

பேதுரு எதிர்த்து நின்ற கள்ளப்போதகர்களில் மிகச்சிறப்பானவர்கள் சிலர் இருந்தனர் என்பது உறுதி (2:18). மேலும் அவரது வாசகர்களில், பக்குவ மற்ற மற்றும் கொஞ்சமே அறிவுறுத்தப்பட்டிருந்த, உலகத்தின் கேடுகளில்

இருந்து சமீபத்தில்தான் தப்பித்திருந்த மக்களும் உள்ளடங்கி இருந்தனர். கள்ளப்போதகர்கள், மாம்ச இச்சைகள் மற்றும் விடுதலை, சுயாதீனம் ஆகியவற்றிற்கான வாக்குறுதிகள் ஆகியவற்றைக் கொண்டு, தங்களைக் கணிச மான அளவு மக்கள் பின்பற்றச் செய்யக் கூடியவர்களாக இருந்தனர் (2:19). கிறிஸ்தவர்கள், தங்கள் ஆத்துமாக்களின் நிமித்தம், தங்களுக்குப் போதிக்கப் பட்டவற்றின் கருத்துப் பொருள் மற்றும் தங்களை உணர்வெழுச்சி கொள்ளவும் களிப்பூட்டவும் பயன்படுத்தப்பட்ட தந்திரங்கள், மூடல்கள் மற்றும் ஜாலங்கள் ஆகியவற்றை ஜாக்கிரதையாக வித்தியாசப்படுத்த வேண்டும்.

பேதுருவின் வாசகர்களைக் கிறிஸ்துவை விட்டுப்புறம்பே வழிநடத்திக் கொண்டிருந்த போதகர்களுக்கு, "சுயாதீனம்" என்பது சாதகமான ஒரு வார்த்தையாக இருந்தது. சுயாதீனம் என்ற பெயரில் மக்கள் தங்கள்மீது தாங்களே கொண்டுவரும் அடிமைத்தனம் மற்றும் பரிதாபநிலை என்பது வாழ்வின் மாபெரும் முரண்பாடுகளில் ஒன்றாக உள்ளது. வேறு எதைக் காட்டிலும், கர்த்தரால் உரைக்கப்பட்ட சத்தியம் இதுவாக உள்ளது: ஒரு நபர் அர்ப்பணித்தல் மூலமாக மாத்திரமே ஜீவனைக் கண்டறிவார். "கோதுமை மணி" வாழ்ந்திருப்பதற்கு முன்னர் சாக வேண்டும் (யோவான் 12:24). மத்தேயு 10:39; 16:25; மாற்கு 8:35; லூக்கா 9:24; 14:26; 17:33 மற்றும் யோவான் 12:25 ஆகிய வசனப்பகுதிகளில் வார்த்தையில் சிறு வேறுபாடுகள் உள்ளன, ஆனால் சிந்தனையின் கருத்துப்பொருள் ஒன்றாகவே உள்ளது.

சில சுயாதீனங்கள் தங்கள் இயல்பினாலேயே மற்ற சுயாதீனங்களை விலக்குகின்றன. மகிழ்ச்சி மிக்க குடும்பத்தைக் கொண்டிருத்தலுக்கான சுயாதீன மானது, திருமணத்திற்குப் புறம்பான உறவுகளைக் கொண்டிருத்தலுக்கான எந்த சுயாதீனத்தையும் விலக்கிவைக்கிறது. தெளிவான சிந்தையும் நல்ல ஆரோக்கியமும் கொண்டிருத்தலுக்கான சுயாதீனமானது மதுபானம் பண்ணுதலுக்கான சுயாதீனத்தை விலக்கி வைக்கிறது. நேர்மையான ஆண் அல்லது பெண், சுயமதிப்பைக் கொண்டிருத்தலுக்கான சுயாதீனமானது, பொய்யுரைத்தல், களவுசெய்தல் மற்றும் ஏமாற்றுதலுக்கான சுயாதீனத்தை விலக்கி வைக்கிறது. ஒவ்வொரு தனிநபரும் எந்த சுயாதீனம் தமக்கு முக்கிய மானது என்பதைத் தேர்ந்து கொண்டாக வேண்டும். ஆசியாமைனரின் சபைகளில் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் செய்த கள்ளப் போதகர்கள் தாங்களே அடிமை களாக இருந்தனர் என்று பேதுரு கூறினார். பின்பு அவர் "எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே" என்ற பலத்த கூற்றைக் கூடுதலாகக் கூறினார் (2:19). புதிய ஏற்பாட்டை எழுதிய ஏவுதல் பெற்ற மனிதர்கள், கிறிஸ்தவரின் சுயாதீனத்தை, சுய இச்சைக்கான அனுமதிச்சீட்டாகக் கண்ணோக்கவில்லை. யாக்கோபு, சுவிசேஷத்தை "சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணம்" என்று கூறினார் (யாக்கோபு 1:25; 2:12). பவுல், "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமா ணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" என்று எழுதினார் (ரோமர் 8:2).

கள்ளப் போதகர்கள் புதிதாக ஆதாயம் செய்யப்பட்ட மனமாறியவர்களை வஞ்சித்தபோது, அவர்களைத் தேவனுடைய இராஜ்யத்தில் இருந்து என்றென்றைக்குமாக வெளியேற்றி முத்திரை இட்டனர் என்பதே கள்ளப் போதகர்களைப் பற்றிய மாபெரும் துன்பமாக இருந்தது. பேதுரு, "அவர்கள்

நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்" என்று கூறினார் (2:21). கிறிஸ்துவுக்குள் சமீபத்தில் மனமாறியவர், கர்த்தருடைய நாமத்தை உரிமை கோரியவர்களுடன் சேர்ந்துகொண்டு அற்பமான விவாதங்களில் ஈடுபட இழுக்கப்படுதல் என்பது, ஒருவேளை அவருக்கு நடக்கக் கூடியதில் மிகவும் அழிவுக்குரிய விஷயமாக இருக்கலாம். மிகவும் வெறுப்புடன் உலகத்திற்குத் திரும்பிச் செல்லும் சமீபத்தில் மனமாறியவரின் நிலையை விவரிப்பதற்கு, பேதுரு சாலொமோனிடத்தில் இருந்து ஒரு நீதிமொழியையும் (நீதிமொழிகள் 26:11) தமது காலத்து உலகத்தில் இருந்து இன்னொரு பழமொழியையும் தரவழைத்தார். கிறிஸ்துவை அறிந்த பின்பு உலகத்திற்குத் திரும்புகிற எவரொருவரும், தான் கக்கினதைத் தின்னத் திரும்பிய நாயை போன்றவராக அல்லது சேற்றிலே புரளத் திரும்பிய பன்றியைப் போன்றவராக உள்ளார் (2:22).

முடிவுரை

புறம்பான சக்திகளிடமிருந்து ஏற்பட்ட உபத்திரவங்களினால் துன்புற்றுக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களைப் பெலப்படுத்திக் கட்டி எழுப்புதல் என்பது பேதுரு எழுதிய முதல் நிருபத்தின் நோக்கமாக இருந்தது. இது, 2 பேதுரு நிருபத்தில் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சனைகளுடன் ஒப்பிடப் படுகையில், ஓரளவு மகிழ்ச்சி நிறைந்த பணிப்பொறுப்பாக இருந்துள்ளது. வெளியில் இருந்து வந்த உபத்திரவங்களின் முன்னிலையில் சபையானது எப்போதுமே நன்கு வளர்ந்துள்ளது; உள்ளாக இருக்கும் அழிவு சக்திகளின் முன்னிலையில் அது அவ்வளவு நன்றாக வளர்ந்திருப்பதில்லை. கிறிஸ்துவின் சபையானது கர்த்தருக்காக உலகத்தின்மீது செல்வாக்குச் செலுத்த வேண்டுமென்றால், கிறிஸ்தவர்கள், உள்ளிருந்து எழும்பும் பிரச்சனைகளை எதிர்கொள்ளத் தைரியம் கொண்டிருக்க வேண்டும்.

14

கர்த்தருடைய வருகை பற்றிய வாக்குத்தத்தத்தை நினைவில் வைத்திருங்கள் (2 பேதுரு 3:1–18)

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவரை, அவரது சீஷர்கள் ஒலிவ மலையில் சந்தித்த போது, தாங்கள் எதிர்பார்க்க வேண்டியது என்ன என்பது பற்றி அவர்கள் சிறிதளவே கருத்துக் கொண்டிருந்தனர். சீஷர்கள் திகைப்புடன் கவனித்துக் கொண்டிருக்கையில், கர்த்தர் பரலோகத்தை நோக்கி எழத் தொடங்கினார். அவர்களுக்கு அருகில், வெண்ணாடை அணிந் திருந்த இரு மனிதர்கள் தோன்றினர் என்று லூக்கா பதிவுசெய்துள்ளார். அவர்கள், "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்று கூறினர் (நடபடிகள் 1:11). வெண்ணாடை அணிந்திருந்த மனிதர்கள் அந்த வாக்குறுதியை ஏற்படுத்தியதால், கர்த்தருடைய மறுவருகையின் காலம் மற்றும் அதன் வகை ஆகியவற்றைக் காட்டிலும் வேறுசில பாடக்கருத்துக்களே அதிக ஆர்வம் அல்லது கருத்து வேறுபாட்டைத் தூண்டியுள்ளன. புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்தபோதே, தெசலோனிக்கேயருக்குப் பவுலின் நிருபத்தில் போன்று, இது உண்மையாக இருந்தது. தெசலோனிக்கே நகரில் இருந்த சபையில், அவரது மறுவருகை பற்றிய யூகமானது, சிலரை வேலை செய்தலை நிறுத்தி அவர் தரிசன மாகும் வரையில் சோம்பேறிகளாகக் காலத்தைக் கடத்த வழிநடத்தி இருந்தன (1 தெசலோனிக்கேயர் 5:1-3; 2 தெசலோனிக்கேயர் 2:1, 2; 3:6-12).

அவரது இரண்டாம் வருகை பற்றிய யூகங்களும் கருத்து வேறுபாடுகளும் இன்று வரையில் தொடர்ந்துள்ளன. கடந்த நூற்றாண்டில் பல சபைகளில், ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கையின் பல்வேறு வடிவங்கள் போதிக்கப்பட்டுள்ளன. வல்லுநர்கள் சிக்கலான கால அட்டவணைகளைக் கையில் வைத்துக் கொண்டு, பரவசநிலை, அர்மெகதோன் யுத்தம், தேவாலயம் திரும்பவும் கட்டுப்படுதல் மற்றும் இவைபோன்ற தலைப்புகளைப் பற்றிக் கலந்துரையாடுகின்றனர். கடைசிக் காலங்கள் பற்றிக் கூறும் மிகச் சிறப்பாக விற்பனையாகும் புத்தகங்கள், திரைப்படங்கள் மற்றும் பேருரைகள், கர்த்தருடைய மறுவருகையில் நிலவுகிற வலிவார்ந்த ஆர்வம் - ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து இருந்துள்ள ஒரு ஆர்வம் - பற்றி சாட்சி அளிக்கின்றன.

2 பேதுரு நிருபத்தில் அப்போஸ்தலர் தமது வாசகர்களுக்கு, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிப் போதித்தார். அவர் திரும்பி வருவாரா என்று சிலர் சந்தேகப்பட்டனர். ஏளனம் செய்பவர்கள் எதிர்பாராத வேளையில், தேவபக்தி

யற்றவர்கள் மீது நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருவதற்காகக் கர்த்தர் திடீரென்று தோன்றுவார் என்ற உறுதிப்பாட்டுடன் பேதுரு தமது இரண்டாவது நிருபத்தை முடித்தார்.

ஏளனம் செய்பவர்கள் வேண்டுமென்றே மறந்துவிடுகின்றனர் (3:1-7)

பேதுரு தமது இரண்டாவது நிருபத்தில், தமது வாசகர்களை நினைவுபடுத்துமாறு தூண்டத் தாம் கொண்டிருந்த விருப்பத்தை இரண்டுமுறை முன்வைத்தார் (1:12, 13; 3:1). பொதுவான கருத்தில், இவ்விரு நிருபங்களுமே ஒவ்வொரு கிறிஸ்தவரின் "உண்மையான மனதை நினைப்பூட்ட"வே எழுதப்பட்டன (3:1), ஆனால் தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் பேசியிருந்த குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப் பற்றித் தமது வாசகர்களுக்கு நினைவூட்ட அவர் விரும்பினார் (3:2). ஏனென்றால் சிலர், கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்பி இருந்ததால், கர்த்தர் மறுபடி வருதல் பற்றிச் செய்யப்பட்டிருந்த வாக்குத்தத்தமானது கிறிஸ்தவ போதனையின் அடிப்படையாக இருந்தது என்ற நினைவூட்டுதல் அவர்களுக்குத் தேவைப்பட்டது. கிறிஸ்துவின் சீஷர்கள், கர்த்தர் விரைவில் தோன்றுவார் என்ற எதிர்பார்ப்புடன் வாழ வேண்டியிருந்தனர்; அவர்கள் அதை வற்புறுத்த அல்ல, ஆனால் அதை எதிர்பார்த்திருக்க வேண்டியவர்களாக உள்ளனர். அவர் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் தமது வருகையை தாமதிப்பார் என்றால், அவர்கள் ஊக்கம் இழந்துபோக வேண்டியதில்லை. அவர் இன்றே தரிசனமாவார் என்பது போல் அவர்கள் வாழ்ந்துள்ளனர்.

மத்தேயு 24ல் முடியும் உவமை மற்றும் 25ல் தொடங்கும் உவமை ஆகியவற்றிற்கு இடையில் நாம், மறைவான ஆனால் முக்கியமான சிந்தனை மாற்றத்தைக் காணுகிறோம். மத்தேயு 24:45-51ல் பொல்லாத வேலைக்காரன் தனது எஜமானர் அவரது திரும்புதலைத் தாமதப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்த்தான். அவன் தனது களியாட்டம் மற்றும் உயர்ந்த வாழ்வு ஆகியவற்றின் இடையில் இருக்கையில், அவனது எஜமானர் திரும்பி வந்து அவனுக்கு மாய்மாலக்காரர்களுடன் இருக்க ஒரு இடத்தை நியமித்தார், "அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" (மத்தேயு 24:51). பத்து கன்னியர் பற்றிய உவமை இதற்கு நேரெதிரானதாக உள்ளது. மதியீனமான ஐந்து கன்னியர்கள், மணமகன் விரைவில் வரவேண்டும் என்று எதிர்பார்த்தனர், ஆனால் எதிர்பார்க்கப்பட்ட வேளைக்கும் தாமதமாகவே அவர் வந்து சேர்ந்தார். 1 மற்றும் 2 பேதுரு நிருபங்களுக்கு இடையில், வலியுறுத்தத்தில் இதைப்போன்ற மாற்றம் உள்ளது. 1 பேதுரு நிருபத்தில் கர்த்தருடைய உடனடி வருகையில் எதிர்பார்த்தலானது துன்புற்ற கிறிஸ்தவர்களுக்கு ஆறுதலாக இருந்தது; 2 பேதுரு நிருபத்தில், உடனடி வருகையை எதிர்பார்த்த கிறிஸ்தவர்களின் எதிர்பார்ப்பு நிஜமாகத் தவறியிருந்ததால் சந்தேகம் வாதித்து இருந்தது.

அனேகமாக 2 பேதுரு 2ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள கள்ளப்போதகர்கள் "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?" என்று ஏளனம் செய்தவர்கள் மத்தியில் இருந்திருக்கலாம் (3:4). உலகத்தை இருக்கும்படி அழைத்த தேவன், அதை நியாயத்தீர்ப்புக்கு அழைக்கக்

கூடியவராகவும் இருந்தார் என்று அவர்களுக்குப் பேதுரு நினைவூட்டினார் (3:5). அவர் ஏற்கனவே அதை ஒரு முறை நியாயத்தீர்ப்புக்கு அழைத்திருந்தார். பெருவெள்ளமானது பழங்கால உலகத்தைச் சுத்தமாக அழித்திருந்தது. தேவனுடைய வார்த்தை நோவாவின் சந்ததியை எச்சரித்திருந்தது. அவர்கள் அதைக் கவனித்துக் கேட்க மறுத்துவிட்டனர், மற்றும் நியாயத்தீர்ப்பு வந் திருந்தது (3:6). பெருவெள்ளத்திற்கு முந்திய உலகத்தை நியாயந்தீர்த்திருந்த அதே தேவன் தற்கால உலகத்தையும் அக்கினிக்கு இரையாகும்படி வைத்திருந் தார் (3:7). அவரது வார்த்தையானது, இப்போது இருக்கிற வானங்களையும் பூமியையும், “தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும்” காத்துக்கொண்டுள்ளது (3:7).

கர்த்தர் பொறுமையுள்ளவராயிருக்கிறார் (3:8-10)

சில வேளைகளில் நான், கர்த்தருடைய சபையானது இந்த உலகத்தின் மீது கொண்டுள்ள செயல்தாக்கம் அல்லது செயல்தாக்கக் குறைவினால் ஊக்கம் இழந்துபோகிறேன். கிறிஸ்துவின் செய்திக்குச் சில மக்களே கவனம் செலுத்துகிறவர்களாகக் காணப்படுகின்றனர். பல ஆண்களுக்கும் பெண்களுக்கும், திருமண ஒழுக்கத்திற்கு ஒப்புக்கொடுத்தல் என்பது அர்த்த மற்றதாக உள்ளது. மக்களின் மனங்கள் மற்றும் ஆத்துமாக்களுக்கான யுத்தத்தில், சாத்தான் வெற்றிபெறுவதாகத் தோன்றுகிறது. பல இலட்சக்கணக்கான மக்கள் மதுபானம் மற்றும் போதை மருந்துகளின் நிழலான உலகத்தில் வாழ்கின்றனர். ஆபாச இலக்கியமும் கருக்கலைப்பும் தாண்டவமாடுகையில், குற்றமும் மோச டியும் ஆண்டுக்கு ஆண்டு வளருகின்றன. சபையினுள்ளும்கூடப் பாவமானது தனது நீண்ட கைகளை நீட்டிள்ளது.

வற்றிப்போன இந்த நிலமுகப்பின் முன்னிலையில், 3ம் அதிகாரத்தின் செய்தி முக்கியமானதாக உள்ளது. இந்த உலகத்தின்மீது சாத்தனின் பலமும் அதிகாரமும் மாயையாக மாத்திரம் உள்ளன. இந்த உலகம் தேவனுக்கு உரியதாக உள்ளது, மற்றும் நிறைவான வெற்றி அவருடையதாகவே உள்ளது. அவரது மறுவருகைக்காக ஏங்கி அதை எதிர்பார்ப்பவர்கள், நித்தியத்திற்கும் அவருடனேகூட ஆளுகை செய்வார்கள். உலகமும் அதில் உள்ள யாவும் நியாயந்தீர்க்கப்பட்டு அக்கினியால் பட்சிக்கப்படும் (2 தெசலோனிக்கேயர் 1:6-10). அந்த நிகழ்ச்சியுடன் ஒப்பிடுகையில், நிகழ்கால உலகக் காட்சியானது யுத்தத்திற்கு முந்திய சிறுபூசல் போன்றதாக உள்ளது. அவர் தமது வருகையைத் தாமதித்தால் என்னவாகும்? பேதுரு வாழ்ந்த காலத்திற்கு நீண்டகாலம் முன்னதாகவே மோசே, “உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக் கழிந்த நாள்போலவும், இராச்சாமம் போலவும் இருக்கிறது” என்று கூறியிருந்தார் (சங்கீதம் 90:4; இணைவசனம் 2 பேதுரு 3:8). மனிதர்கள் தேவனை ஒரு கால அட்டவணைக்குள் பிடித்துவைக்க இயலாது. கிறிஸ்து மறுபடியும் வந்து பூமியை நியாயந்தீர்ப்பார் என்று தேவன் கூறியுள்ளார் என்றால், அவர் அதைச் செய்வார் என்று நாம் நிச்சயமாயிருக்கலாம். நியாயத்தீர்ப்பின் நாள் தாமதமாகிறது என்றால், அது அவர் தமது உலகம் மனந்திரும்புவதற்கு நேரம் அளிக்கிறதான அவரது நீடிய பொறுமையின் காரணமாகவே அவ்வாறு உள்ளது (3:9).

பேதுரு, “கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்” என்று எழுதுகையில் (3:10), பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளை

நினைவுகூர்ந்தார். ஏசாயா, "நரரின் மேட்டிமையான கண்கள் தாழ்த்தப்படும், மனுஷரின் வீறாப்பும் தணியும்; கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார்" என்றும் (ஏசாயா 2:11). "பூமியைத் தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்பும்போது, அவருடைய பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப்பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் கெபிகளிலும், பூமியின் குகைகளிலும் புகுந்துகொள்வார்கள்" என்று (ஏசாயா 2:19) எழுதினார். ஏசாயா 13ம் அதிகாரம், கர்த்தருடைய நாளை பாபிலோனுக்கு எதிரான நியாயத்தீர்ப்பின் நாள் என்ற வகையில் பேசுகிறது; ஏசாயா 34:8 ஏதோமுக்கு எதிராகப் பேசுகிறது. எரேமியா 46:10ம் வசனம், எகிப்து நாடு கர்த்தருடைய நாளில் தேவனுடைய கோபத்தை எதிர் கொள்ளும் என்று கூறுகிறது. ஆமோஸ் 5:18 மற்றும் செப்பனியா 1:7 ஆகிய வசனங்கள், கர்த்தரின் நாளில் தேவன் இஸ்ரவேலுக்கு எதிராகப் பழிதீர்ப்பார் என்று கூறுகின்றன. தீர்க்கதரிசிகளுக்குக் கர்த்தருடைய நாள் என்பது தேவன் நியாயத்தீர்ப்பைச் செயல்படுத்துவதன் மூலம் தம்மைப் பலம்வாய்ந்த வகையில் வெளிக்காண்பிக்கும் எந்த நாளாகவும் இருந்தது. 1 தெசலோனிக்கேயர் 5:2 மற்றும் 2 பேதுரு 3:10 ஆகிய வசனங்களில், எல்லா மக்களும் கிறிஸ்துவின் நியாயாசனத் திற்கு முன்பாகத் தோன்றும் நாள்தான் தேவனுடைய முடிவான நியாயத்தீர்ப்பின் நாளாக உள்ளது (2 கொரிந்தியர் 5:10; ரோமர் 2:6-8).

இயேசுவும் பவுலும் கூட, கர்த்தருடைய நாள் திருடன் வருகிறவிதமாய் வரும் என்று கூறியிருந்தனர் (மத்தேயு 24:42-44; 1 தெசலோனிக்கேயர் 5:2). கர்த்தருடைய உடனடி திரும்புதலை எதிர்பார்த்தலுக்கும் (1 பேதுரு 4:7; யாக்கோபு 5:8) அவர் ஒரு திருடனைப்போல் வருவார் என்று எதிர் பார்த்தலுக்கும் இடையில் சிறிது வேறுபாடு உள்ளது. இவ்விரு விஷயத்திலும், கர்த்தருடைய மக்கள் ஆயத்தமாகவும் எதிர்பார்த்தலின்படி வாழ வேண்டியும் உள்ளது. அவர் திரும்ப வரும்போது, அவரது பலத்த நியாயந்தீர்ப்பு நிறைவானதாகவும் முற்றானதாகவும் இருக்கும். பூமி, மேகம், கடல்கள் மற்றும் இயற்கையின் எல்லா மூலகங்களும் அழிக்கப்படும்.

3:10ல் உள்ள இறுதி வார்த்தைகள் கடினமானவைகளாக உள்ளன. NASB *வேதாகமம், "அதன் கிரியைகள் எரிக்கப்படும்" என்று மொழிபெயர்க்கிறது, ஆனால்* NIV *வேதாகமம், "அதிலுள்ள ஒவ்வொரு பொருளும் வெறுமையாக விடப்படும்" என்று கூறுகிறது. இவ்விரு மொழிபெயர்ப்புக்களுக்கும் பின்னால் மாறுபட்ட இரு கிரேக்க வார்த்தைகள் உள்ளன. 2 பேதுரு நிருபத்தின் பழங்காலப் பிரதி கள் சிலவற்றில் "எரிந்துவிடும்" என்று அர்த்தப்படுகிற வார்த்தை இருக்கையில், மற்றவைகள் "கண்டறியப்படும்" என்று அர்த்தப்படுகிற வார்த்தையைக் கொண்டுள்ளன. உண்மையில் பேதுரு எந்த வார்த்தையை எழுதினார் என்று தீர்மானித்தல் கடினமாக உள்ளது, ஆனால் அவர் "கண்டறியப்படும்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தால்,* NIV *வேதாகமம் அதைச் சரியாகப் புரிந்துகொண்டு உள்ளது எனலாம். கடைசி நாட்களில் ஒவ்வொரு மனிதரின் கிரியையும் "வெளியரங்கமாகும்" மற்றும் "அக்கியினால் வெளிப்படுத்தப்படும்" என்று கூறுகிற 1 கொரிந்தியர் 3:13ன் கருத்தில் கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. "கண்டறியப்படும்" என்பது கண்டுபிடிக்கப்படுதல், வெளிப்படுத்தப்படுதல் அல்லது மூடாதுவிடப்படுதல் என்று அர்த்தப்பட முடியும். மற்ற மொழிபெயர்ப்புகள் இந்த நிறைவுச் சொற்றொடரை சொற்பொருள் வாதக் கேள்வியாகத் தரவழைத்துள்ளன: "பூமியும் அதில் உள்ள*

கிரியைகளும் - அவை கண்டறியப்படுமா?"

கடைசி நாளில் பூமியானது அழிக்கப்படாது ஆனால் புதுப்பிக்கப்படும் என்ற போதனையை ஆதரிப்பதற்கு சிலர் இவ்வசனப்பகுதியைப் பயன்படுத்த முயற்சி செய்துள்ளனர். சந்தர்ப்பப் பொருளானது அந்த விளக்கத்தைக் கொண்டிருக்காது. நாம் இப்போது அறிந்துள்ளவாறு இருக்கிற பூமியும் அண்டமும் கர்த்தர் வரும்போது இல்லாமற்போகும் என்று பேதுரு கூறினார். "வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" என்ற கூற்றைப் புரிந்துகொள்வதற்கு வேறு வழி எதுவும் இல்லை.

நீங்கள் எவ்வகைப்பட்ட மக்களாக இருக்க வேண்டும்? (3:11-18)

பேதுரு, காலத்தின் முடிவைப் பற்றிக் கிறிஸ்தவர்களுக்கு நினைவூட்டுதலினால் அவர்களின் இருதயங்களைப் பயங்கரமான எண்ணத்தைக் கொண்டு தாக்க வேண்டும் என்று நோக்கம் கொண்டிருக்கவில்லை. அவிசுவாசிகளும் தேவபக்தியற்றவர்களும் மாத்திரமே பயப்படக் காரணம் இருந்தது. பேதுருவுக்கும் அவரது வாசகர்களுக்கும், தற்கால உலக அமைவு முடிவடையும் என்று அறிதலானது, பரிசுத்தமாக மற்றும் தேவபக்தியுடன் வாழவேண்டும் என்ற அவர்களின் தீர்மானத்தைப் பலப்படுத்தவே செய்தது. "... நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்" என்று பேதுரு கூறினார் (3:11, 12). கிறிஸ்துவின் மறுவருகை பற்றிப் பவுல் எழுதியபோது, 1 தெசலோனிக்கேயர் 5:1-5ல் அவர் இதேபோன்ற புத்திமதி ஒன்றைக் கொண்டிருந்தார். கிறிஸ்தவர்கள் தேவபக்தியுள்ள வாழ்வை வாழுதல் மூலம், எதிர்பாராத வேளையில் கர்த்தர் வந்தால் அவருக்கென்று ஆயத்தமாக இருக்கின்றனர், மற்றும் அவர்கள் அவரது தரிசனத்தின் வேளையைத் துரிதப்படுத்துகின்றனர் (அதாவது, அவர்கள் அதை எதிர்பார்ப்புடன் கண்ணோக்குகின்றனர்).

சிலர், "வானங்களும் பூமியும் அழிக்கப்பட்டால், தேவனுடைய மக்கள் எங்கே வாழ்வார்கள்?" என்று கேட்கின்றனர். விபரமற்ற விளக்கம் ஒன்றைக் கொடுக்கப் பேதுரு முயற்சி செய்தார். தேவனுடைய சர்வஞானம் மற்றும் வல்லமையில் இதற்கான பதில் மறைந்துள்ளது. தேவன், தற்போது உள்ள வானங்கள் மற்றும் பூமி ஆகியவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்ட புதிய வானத்தையும் புதிய பூமியையும் கொடுப்பார் என்று அறிதல் போதுமானதாக உள்ளது. அந்த வானம் மற்றும் பூமியில், நீதி குடிகொண்டிருக்கும். பேதுருவின் கற்பனையானது, வெளிப்படுத்தின விசேஷம் 21:1-4ல் உள்ளது போன்று யோவான் கண்டு விளக்கியது போன்று சித்தரிப்பாகவும் நாடகத்துவமாகவும் இல்லாவிட்டாலும், அது தெளிவானதாக உள்ளது.

பேதுருவின் முடிவுக் குறிப்புகள், பரிசுத்த வாழ்வு பற்றிய அவரது புத்திமதிகளைத் திரும்பவும் எடுத்துரைக்கின்றன. எல்லாம் புதுப்பிக்கப்பட்டு மனித குமாரன் மகிமையுள்ள தமது அரியணையில் வீற்றிருக்கும்போது, அவருடனான வாழ்விற்குக் கிறிஸ்தவர்கள் தங்களைத் தயார் செய்துகொள்ளுதல்

அவசியமானதாக உள்ளது (மத்தேயு 19:28). கர்த்தர்தாமே, "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி"யாக இருக்கையில் (1 பேதுரு 1:19), கிறிஸ்தவர்கள் "கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்" இருக்க வேண்டும் என்று பேதுரு வேண்டிக் கேட்டுக் கொண்டார் (3:14). இவ்விடத்தின் வார்த்தைகள், "கறையும் பிழையும்" கொண்ட கள்ளப்போதகர்களுக்கு நேர்மாறானதாக நோக்கம் நிறைந்த வகையில் இருக்கலாம். விசுவாசம் நிறைந்தவர்கள், அவரது மறுவருகைக்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கையில், தாமதப்படுதல் என்பது மற்றவர்கள் சுவிசேஷத்தைக் கேள்விப்படவும், இரட்சிக்கப்படவும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் கூட்டத்தில் இணைந்து கொள்ளவும் அவர்களை அனுமதிக்கும் என்பதை நினைவுகூர வேண்டியவர்களாக இருந்தனர்.

புதிய ஏற்பாட்டின் பிற எழுத்துக்களுக்கான அதிகாரமுடைமை மற்றும் ஏவுதல் ஆகியவற்றிற்கு தனித்த ஒரு சாட்சியமானது 3:15ல் காணப்படுகிறது. நமக்குக் கிடைக்கப்பெற்ற பவுலின் முதல் நிருபமான 1 தெசலோனிக்கேயர் நிருபத்தை அவர், கி.பி. 51ம் ஆண்டுவாக்கில் எழுதினார், இது 2 பேதுரு நிருபம் எழுதப்படுவதற்கு பதினைந்து ஆண்டுகள் முன்னதாக எழுதப்பட்டிருக்கலாம். மேலும், பேதுரு இந்த நிருபத்தை எழுதியபோது, யூகிக்கப்பட்டபடி அவர் ரோமாபுரியில் இருந்திருந்தால், பவுல் அந்த நகரில் இருந்த சபைக்குத் தமது நிருபத்தைச் சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதி இருப்பார். பவுலின் நிருபங்கள் எப்போது, எவ்வாறு மற்றும் யாரால் ஒன்றாகக் கூட்டப்பட்டன என்று நாம் அறிவதில்லை, ஆனால் 2 பேதுரு நிருபம் எழுதப்பட்டதற்கு முன்னதாகவே, பேதுருவும் அவரது வாசகர்களும் பவுலின் நிருபங்களைப் பற்றி அறிந்திருக்கலாம்.

பவுல் எழுதியிருந்தவற்றை, கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் புரட்டுகின்றனர் என்ற பேதுருவின் கூற்றானது, பவுலின் நிருபங்களைத் தங்களின் கள்ளப்போதகத்திற்கு ஆதாரமாகப் பயன்படுத்த முயற்சி செய்ததாக 2ம் அதி காரத்தில் விவரிக்கப்பட்ட கள்ளப் போதகர்களைச் சுட்டிக் காண்பித்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. பேதுரு, தாமும் பவுலும் ஒரு பொதுவான காரணத்திற் காகச் சகோதரர்களாக இருந்ததைத் தெளிவாக்கினார். பவுல், "தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே" கர்த்தரின் நாளைப் பற்றியும் அதன்விளைவாகப் பரிசுத்தம் மற்றும் நீதி நிறைந்த வாழ்வை வாழுதலின் அவசியம் பற்றியும் எழுதி யிருந்தார் (3:15, 16).

3:15, 16ல் பேதுரு, பவுல் எழுதிய எந்த வசனப் பகுதியை அல்லது எந்த நிருபங்களை மறைமுகமாய்க் குறிப்பிட்டார் என்று கூறுவது கடினமாக உள்ளது. கொலோசெயர், எபேசியர் மற்றும் கலாத்தியர் நிருபங்கள் ஆசியா மைனர் பகுதி யில் இருந்த சபைகளுக்கு எழுதப்பட்டன. பிலிப்பியர், தெசலோனிக்கேயர் மற்றும் கொரிந்தியர் நிருபங்களை ஆசியாவில் இருந்த சபைகள் சுலபமாக அறிந்து இருக்க முடியும். மேலும், பவுல் தீமோத்தேயுவுக்கு நிருபத்தை எழுதிய போது, தீமோத்தேயு ஆசியாவில் இருந்த எபேசு நகரில் இருந்தார், மற்றும் தீத்துவுக்கு நிருபத்தை எழுதியபோது, தீத்து கிரேத்தா என்ற அருகாமைத் தீவில் இருந்தார். பேதுருவும் அவரது வாசகர்களும் குறைந்தபட்சம் பவுலின் சில நிருபங்களை அறிந்திருந்தனர் மற்றும் அவைகள் "மற்ற வேதவாக்கியங்களைப்" போலவே அதிகாரம் உடையவையாக இருந்தன என்று அறிந்திருந்தனர் என்பது

குறிப்பிடத்தக்க விஷயமாக உள்ளது. பவுலேகூட தமது வார்த்தைகள் தேவ ஆவியானவரால் தரப்பட்டிருந்ததால் அவை அதிகாரம் கொண்டு இருந்தன என்று உறுதிப்படுத்தினார் (1 கொரிந்தியர் 2:13; எபேசியர் 3:5).

துரதிர்ஷ்டவசமாக, ஒவ்வொரு காலகட்டத்திலும் உள்ள கிறிஸ்தவர்கள் "அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே இழுப்புண்டு" (3:17). போகாதபடிக்கு கவனமாக இருக்க வேண்டியதாக உள்ளது. கிறிஸ்தவர்களுக்கான அடிப்படை சத்தியங்களும், கட்டளைகளும். வாழ்வின் வழியும் அவற்றை வாசிக்க அக்கறையாக இருக்கும் எவருக்கும், புதிய ஏற்பாட்டில் உள்ளன, ஆனால் பவுல் மற்றும் புதிய ஏற்பாட்டின் பிற எழுத்தாளர்களால் எழுதப்பட்ட, "புரிந்துகொள்ளக் கடினமாக இருக்கும் விஷயங்களில்" (3:16) விசேஷித்த ஆய்வு செய்கின்றவர்களால், ஒன்றுக்கு மேற்பட்ட கிறிஸ்தவர் தமது பாதுகாப்பான நிலையில் இருந்து புறம்பே வழிநடத்தப்பட்டு இருக்கின்றனர். வேதவாக்கியங்களின் தெளிவான, பொதுவாகப் புரிந்துகொள்ளப்படக் கூடிய போதனைகளை, கடினமான மற்றும் கொஞ்சமே புரிந்துகொள்ளப்பட்டுள்ள வசனப்பகுதிகள் பற்றிய தங்கள் தனிப்பட்ட விளக்கங்களுக்கு ஆதாரமாக அமைக்கும் போதகர்களைப் பற்றிக் கிறிஸ்தவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாக உள்ளது. அநேக கிறிஸ்தவர்கள் தானியேலின் எழுபது வாரங்களின், சகரியாவின் இரவு தரிசனங்களின் மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்தின் உருவகமொழிநடையின் பாறைகள் மேல் விழுந்து நசுக்கப்பட்டிருக்கின்றனர்.

முடிவுரை

2 பேதுரு நிருபத்தின் கடைசி அதிகாரம், கர்த்தரின் இரண்டாம் வருகை பற்றிப் புதிய ஏற்பாட்டில் உள்ள மிக அதிகமான வரைவளவையான விவரிப்புகளில் ஒன்றாக உள்ளது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எவ்வளவு காலம் கழித்து நிகழ்ந்தாலும், அந்தத் தாமதத்தைக் கையாளக் கிறிஸ்தவர்களுக்கு உதவும் சந்தர்ப்பப் பொருளில் பேதுரு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் மீதான நம்பிக்கையை ஜீவனுள்ளதாகக் காத்தார். அவர்கள் அவரது உடனடி மறுவருகையின் மீதான தங்கள் நம்பிக்கையை விட்டுவிட வேண்டும் என்று அவர் ஆலோசனை தெரிவிக்கவில்லை. கர்த்தருடைய வருகை விரைவில் இருக்கும் என்று எதிர்பார்த்தலே அவரது மறுவருகையை எதிர்பார்க்கும் ஒரே வழியாக உள்ளது. அவர் விரைவில் வரவேண்டும் என்று எதிர்பார்த்தலானது, ஒரு மனித கால வரம்பிற்குள் கர்த்தரைப் பொருத்தும்படி வற்புறுத்துதல் போன்று இருப்பதில்லை. கர்த்தர் திரும்பவும் வருவார் என்பதே கிறிஸ்தவ விசுவாசமாக உள்ளது.

15

ஒரு அறிமுகம் [யூதா]

யூதா எழுதின நிருபமானது 2 பேதுரு நிருபத்துடன் தெளிவான ஒப்புமைகளைக் கொண்டுள்ளது. உண்மையில் யூதா எழுதின நிருபமும் 2 பேதுரு 2ம் அதிகாரமும், அவ்வப்போது ஒரேமாதிரியான வார்த்தைகளையும் விளக்கங்களையும் பயன்படுத்துகின்றன. ஆகவே யூதாவின் சிறிய நிருபத்தைப் பேதுருவின் இரண்டாம் நிருபத்துடன் சேர்த்துப் படித்தல் ஏற்புடையதாக உள்ளது. யூதா மற்றும் 2 பேதுரு நிருபங்களின் பாடக்கருத்து, 1 பேதுரு நிருபத்தின் பாடக் கருத்தில் இருந்து கணிசமான அளவு மாறுபடுகிறது, ஆனால் அவைகள் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய நலம் மற்றும் வலிவு ஆகியவற்றிற்குக் குறைவான வலிவூட்டுபவையாக இருப்பதில்லை.

எழுத்தாளர்

யூதா தம்மை, “இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனும், யாக்கோபினுடைய சகோதரனுமாயிருக்கிற யூதா” என்று குறிப்பிட்டார் (வசனம் 1). அவர் குறிப்பிட்ட அந்த யாக்கோபை நாம் அடையாளங் காணக்கூடுமென்றால், அந்த அளவுக்கு நாம் யூதாவை அடையாளம் கண்டு கொண்டிருப்போம். தொடக்ககால சபையில் இந்தப் பெயரில் பிரபலமாக இருந்த மனிதர், கர்த்தரின் சகோதரரான யாக்கோபு என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை (நடபடிகள் 15:13; 21:18; கலாத்தியர் 1:19). இவர்தாம் யாக்கோபு நிருபத்தை எழுதிய அதே மனிதராகவும் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு கர்த்தரின் தரிசனம் கிடைக்கப் பெற்றவருமாக இருந்தார் (1 கொரிந்தியர் 15:7). யாக்கோபு யார் என்பதற்கு யூதா வேறு எந்த விளக்கமும் அளிக்கவில்லை, ஏனென்றால் வேறு ஒன்றும்தேவையில்லாதிருந்தது. தொடக்க கால சபையில் பெயரைக் குறிப்பிடுதலே போதுமானது என்ற அளவுக்கு ஒரே ஒரு யாக்கோபு மாத்திரமே இருந்தார். சாத்தியமான இன்னொரு நபர் செபதேயுவின் குமாரனான யாக்கோபு மாத்திரமே, அவர் யூதா தமது நிருபத்தை எழுதுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே கொலை செய்யப்பட்டார் (நடபடிகள் 12:1, 2).

கர்த்தருக்கு யாக்கோபு, யோசேப்பு (அல்லது யோசே), சீமோன் மற்றும் யூதா (அல்லது யூதாஸ்) என்ற பெயர்களைக் கொண்ட சகோதரர்கள் இருந்தனர் என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது (மத்தேயு 13:55; மாற்கு 6:3). இயேவின் வாழ்நாள் காலத்தின்போது, அவர் கிறிஸ்து என்று அவரது சகோதரர்கள் விசுவாசிக்காமல் மற்றவர்களுடன் சேர்ந்து அவரை ஏளனம் செய்திருந்தனர் (யோவான் 7:1-5). யாக்கோபுவே முதலில் விசுவாசி ஆகியிருக்கச் சாத்தியம் உள்ளது, மற்றும் அவர் தமது பிறசகோதரர்களுக்குப் போதித்து இருக்கலாம். பவுல் 1 கொரிந்தியர் நிருபத்தை எழுதிய வேளையில், கர்த்தரின் சகோதரர்கள், நன்கு அறியப்பட்ட பிரசங்கியார்களாகவும் போதகர்களாகவும் இருந்தனர் (1 கொரிந்தியர் 9:5). யாக்கோபுவோ அல்லது யூதாவோ தாங்கள் எழுதிய நிருபங்களின் தொடக்க வசனங்களில், தங்களைக் கர்த்தரின் சகோதரர் என்று அடையாளப்படுத்த

வன்மையாக முயற்சிக்கவில்லை. அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்பதைக் காட்டிலும் உயர்ந்த கனத்தைக் கேட்கவில்லை.

எழுதிய வேளை

யூதா எழுதிய நிருபத்தில் உள்ள கள்ளப் போதகர்களைப் பற்றிய விவரிப்பு 2 பேதுரு 2ம் அதிகாரத்தில் உள்ளதைப் போன்றதாக இருக்கிறது. பேதுருவின் வார்த்தைகளில் பலவற்றை யூதா கடனாகப் பெற்றிருப்பார் என்பது உறுதி என்னுமளவிற்குச் சூழ்நிலைகள் ஒன்றுபோல் இருந்தன. பேதுரு, "... அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்" என்று எதிர் கால வினைச்சொல்லில் எச்சரிக்கை செய்திருக்கையில் (2 பேதுரு 2:1) கள்ளப்போதகர்கள் சபைகளில் பக்கவழியாய் நுழைந்திருந்தனர் என்று கடந்த கால வினைச்சொல்லில் யூதா சுட்டிக்காண்பித்திருந்தார். யூதா தமது நண்பர்களுக்கு, அவர்களின் பொதுவான இரட்சிப்பைக் குறித்து அதிகம் மேலே உயர்த்தும் ஒரு நிருபத்தை எழுத நம்பிக்கை கொண்டிருந்தார், ஆனால் கள்ளப்போதகர்கள் சபைக்கு முன்னிறுத்திய அச்சுறுத்துதல், அதைப்பற்றி எழுதும்படியும் அவர்கள் விசுவாசத்திற்காகப் போராடும்படி வேண்டிக் கேட்டுக்கொள்ளும்படியும் அவரை வற்புறுத்திற்று (யூதா 3).

யூதாவின் நிருபம், நம்மால் பதில் அளிக்க இயலாததும், நியாய மான யூகங்களை மாத்திரமே ஏற்படுத்தக் கூடியதுமான பல கேள்விகளை எழுப்புகிறது. யூதா மற்றும் பேதுரு ஆகியோரின் வார்த்தைகள் ஒன்றுக்கொன்று மறுவலிவூட்டுகின்றன என்று நாம் அறிந்திருக்கிறோம். சிறந்த தகவல் எதுவும் இல்லாத நிலையில், யூதா தமது நிருபத்தை, பேதுரு யாருக்கு எழுதினாரோ அதே பொதுவான பகுதிக்கே எழுதினார் என்று நாம் யூகிக்கிறோம். யூதா சில சபைக் குழுமங்களில் அதிகம் செல்வாக்கு உடையவராக இருந்திருக்க பேதுரு மற்ற சில சபைக்குழுமங்களில் அதிகம் செல்வாக்கு உடையவராக இருந்திருக்கலாம். தங்கள் கள்ளப்போதனைகளைக் கொண்டு சபைகளில் இடர்ப்பாடு ஏற்படுத்திக் கொண்டிருந்த போதகர்களுக்கு எதிராக, யூதா தாமும் பேதுரு அப்போஸ்தலரும், ஒன்றாக நின்றதைத் தெளிவுபடுத்துவதற்காகப் பேதுருவின் வார்த்தைகளைத் தெரிந்தே பயன்படுத்தி இருக்கலாம். அநேகமாக 2 பேதுரு நிருபம் எழுதி ஒருசில ஆண்டுகளுக்குப் பின்பு யூதா தமது நிருபத்தை எழுதி இருக்கலாம், அது இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்தை 60களின் பிற்பகுதி அல்லது 70களின் முற்பகுதி என்பதாகக் குறிப்பிடும். இந்த நிருபத்தை எழுதியபோது இதன் ஆசிரியர் எங்கிருந்தார் என்பதற்கோ அல்லது அவரது வாசகர்களுடன் அவர் கொண்டிருந்த உறவுபற்றிய வரலாற்றிற்கோ இந்த நிருபம் குறிப்பு எதையும் தருவதில்லை.

யூதா நிருபத்திற்கான ஒரு வரைகுறிப்பு

வாழ்த்துதல் (வசனங்கள் 1, 2).

I. தேவனை மறுப்பவர்கள் மீது அவரது நியாயத்தீர்ப்பு (வசனங்கள் 3-7).

II. தேவபக்தியற்றவர்களின் முரட்டுத்தனத்தின்மீது தேவனுடைய கடுங்கோபம் (வசனங்கள் 8-16).

III. தேவன் தம் மக்கள்மீது கொண்ட அன்பு (வசனங்கள் 17-23).

துதி (வசனங்கள் 24, 25).

16

விசுவாசத்திற்காகப் போராடுங்கள் (யூதா 3-25)

ஒவ்வொரு கிறிஸ்தவரும், சபைக்குள் எழக்கூடிய, பிரிவினைகள், தவறான புரிந்துகொள்ளுதல்கள் மற்றும் போராட்டங்கள் ஆகியவற்றைக் கையாளச் சில வழிகளை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். இது கிறிஸ்துவின் ஊழியத்திற்காக அதிகமான நேரத்தையும் சக்தியையும் அர்ப்பணிக்கும் பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கு விசேஷித்த வகையில் உண்மையானதாக உள்ளது. யூதாவின் வார்த்தைகள் நம்மை, சபைக்குள்ளாக இருக்கும் போராட்டங்களைச் சமான நிலையில் அணுகும்படி தூண்டுகின்றன.

தேவனை மறுதலிப்பவர்கள் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு (வசனங்கள் 3-7)

யூதா தமது வாசகர்களுடன், இரட்சிப்பு பற்றிய ஒரு செய்தியைப் பகிர்ந்துகொள்ள விரும்பியதாகக் கூறினார் (வசனம் 3). கிறிஸ்தவத்தின் மாபெரும் ஒன்றிணைக்கும் கருத்துக்களைப் பற்றிப் பேசுதலும் எழுதுதலும் மன எழுச்சியூட்டுவதாகவும் விசுவாசத்தைக் கட்டி எழுப்புவதாகவும் உள்ளது. அன்பு, மீட்பு மற்றும் இரட்சிப்பு என்ற மாபெரும் ஆய்வுக்கருத்துக்களைப் பற்றிச் சிந்தித்துப் பகிர்ந்து கொள்ளக்கூடும்போது, எவரொருவரும் கள்ளப்போதகர்கள் பற்றி விவாதிக்க விரும்புவது ஏன்? யூதாவைப் பொறுத்த மட்டில் இது தேவைப்பட்ட ஒரு விஷயமாக இருந்தது. இந்தக் கிறிஸ்தவர்கள், தாங்கள் மகிழ்வுடன் அனுபவித்த "பொதுவான இரட்சிப்பை" இழந்துபோகும் அளவுக்கு, கிறிஸ்துவின் செய்தியானது சமரசப்படுத்தப்பட்டிருந்தது என்பதை அவர் புரிந்து கொண்டிருந்தார்.

பேதுருவைப் போன்று யூதாவும், தமது வாசகர்கள் ஆரம்பம் முதல் கேள்விப்பட்டிருந்தது நிறைவானதாக இருந்தது என்று புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார். அப்போஸ்தலர்கள் மற்றும் ஏவுதல் பெற்றபிறர் ஆகியோரின் செய்தியில், அவர்கள் "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தைப்" பெற்றிருந்தனர் (வசனம் 3; இ.வ. 2 பேதுரு 1:3). அவர்களுக்குள் பக்கவழியாய் "நுழைந்துள்ள" போதகர்களிடத்தில் இருந்து அவர்களுக்கு ஒளியூட்டப்படுதல் தேவைப்படவில்லை (வசனம் 4; 2 பேதுரு 2:1ல் பேதுரு "தந்திரமாய் நுழையப்பண்ணி" என்ற இதேபோன்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்). கள்ளப்போதகர்கள், தாங்கள் இப்படிப்பட்டவர்களாக இருப்பதைத் தாங்களே அறிவித்துக் கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்த்தல் அரிதாக உள்ளது. அவர்கள் அன்பின் பொறுமை மற்றும் ஆவிக்குரிய தன்மை ஆகியவற்றின் தூதர்களாக முகமூடி அணிந்து கொள்கின்றனர்.

கிறிஸ்தவர்கள் "நடைமுறை விஷயங்களில்" இருந்து "போதனையை"

பிரித்து வைக்கச் சாய்கின்றனர். கள்ளத் தீர்க்கதரிசிகளை "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என்று இயேசு கூறினார் (மத்தேயு 7:16). யூதாவும் அதையே கூறினார்: கள்ள மனிதர்கள், கள்ள வாழ்வினால் தங்களை காண்பிக்கின்றனர். அவர் தமது வாசகர்களின் விசுவாசத்திற்கு அச்சுறுத்தல் விடுத் திருந்த போதகர்களைப் பற்றிப் பின்வரும் விஷயங்களை உற்றுநோக்கி இருந்தார்: (1) அவர்கள் தேவபக்தியற்ற வாழ்வை வாழ்ந்தனர் (2) அவர்கள் தேவனு டைய கிருபையைக் காமவிகாரத்திற்கு ஏதுவாகப் புரட்டி இருந்தனர்; மற்றும் (3) அவர்கள், இராஜரீகமுள்ள கர்த்தர் என்ற வகையிலான இயேசு கிறிஸ்துவை மறுதலித்தனர் (வசனம் 4). நான்கு விவாகரத்துகளினூடே கடந்து சென்ற அந்த திருமண ஆலோசகர் ஒருவரின் கூற்றைத் தீவிரமானதாக எடுத்துக் கொள்ளுதல் என்பது கடினமானதாக இருப்பது போலவே, தேவனைப் பற்றிப் பேசி, தேவபக்தி யற்ற வாழ்வை நடத்துபவர்களைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளுதல் என்பதும் கடினமானதாக உள்ளது. சீராக் ஆகமம் என்ற தள்ளுபடி ஆகமத்தின் ஒரு புத்தக மானது பின்வரும் ஆலோசனையை அளிக்கிறது: "ஒரு மனிதன் தனது சொந்த வாழ்வின் நடக்கையில் ஞானமாக இருந்தால், அவன் பேசும்போது அவனது நல்லு ணர்வு நம்பிக்கை வைக்கப்படக் கூடியதாக இருக்கும்."[1] கிறிஸ்தவ விசுவாசத்தின் மாபெரும் போதனைகள், வாழ்வுக்குத் தொடர்பற்ற கோட்பாடுக் கட்டு மானங்களாக மாத்திரமே உள்ளன என்று ஒருக்காலும் புரிந்துகொள்ளப்படக் கூடாது. பேதுருவைப் போன்று (2 பேதுரு 2:4-6), கடந்த காலத்தில் தேவபக்தி இல்லாதவர்கள் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பை மறுகண்ணோட்டம் இட்டதன் மூலம் யூதா, கள்ளப்போதகர்களைத் தேவன் நியாயந்தீர்ப்பார் என்பதற்கு ஆதாரத்தைக் கண்டறிந்தார். அவரது உதாரணங்களில் இரண்டு, பேதுருவின் உதாரணங்களாகவே இருந்தன. தூதர்களை நியாயத்தீர்ப்பின் சங்கிலிகளுக்குத் தேவன் கைவிடுதல் மற்றும் அவர் சோதோமையும் கொமோரா வையும் அழித்தல் (வசனங்கள் 6, 7). பெருவெள்ளத்திற்கு முந்திய உலகத்தைப் பற்றிய பேதுருவின் குறிப்பிடுதலுக்குப் பதிலாக, இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து வந்தபோது அவர்களைத் தேவன் நியாயந்தீர்த்ததைப் பற்றி யூதா குறிப்பிட்டார் (வசனம் 5). கருத்து ஒரேமாதிரியானதாகவே உள்ளது. "உன் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி, அவர் எரிச்சலுள்ள தேவன்" என்ற மோசேயின் வார்த்தைகளின்படி (உபாகமம் 4:24), தேவன் தம்மை எப்போதுமே நியாயத்தீர்ப்பின் தேவனாகக் காண்பித்துள்ளார்.

சோதோம் மற்றும் கொமோராவில் இருந்தவர்கள், அவர்களின் "முழுமை யான ஒழுக்கவீனம் ... அந்நிய மாம்சத்தில் விருப்பம்" ஆகியவற்றினால் தேவனு டைய நியாயத்தீர்ப்பின் உதாரணங்களாகப் பயன்படுகின்றனர். "அந்நிய மாம்சம்" அல்லது "நெறிபிறழ்வு" (NIV) என்பது, ஆதியாகமம் 19ம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஓரினச் சேர்க்கையின் குறிப்பாக உள்ளது. இன்றைய நாட்களின் உலகத்தினுடைய கட்டுப்பாடற்ற பாலுறவுப் பழக்கங்களைத் தற்காக்க அல்லது அவற்றில் ஈடுபடச் சாய்பவர்கள், சோதோம் மற்றும் கொமோ ராவில் இருந்தவர்கள் "நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்" (வசனம் 7) என்ற யூதாவின் எச்சரிப்பைப் பற்றிச் சிந்தித்தல் நல்லது. அந்த நகரங்களை நியாயந்தீர்த்த தேவன் நம் எல்லாரையும் நியாயந்தீர்ப்பார்.

தேவபக்தி அற்றவர்களின் அகங்காரத்தின் மீது தேவனுடைய கடும்சினம் (வசனம் 8-16)

இயேசுவின் நாட்களில் இருந்த பரிசேயர்கள் தங்கள் மூடலான சிந்தையின் அகங்காரத்தினால் அறியப்பட்டிருந்தனர். பரிசேயத்துவ அகங்காரம் வழக்கமாகப் புரிந்துணரப்பட முடியும், ஆனால் அகங்காரத்தின் அதிக உள்ளான வகையானது, திறந்த மனம்கொண்ட சகிப்புத் தன்மை என்ற பெயரில் தன்னையே முன்னேற்றுகிறது. யூதா எதிர்த்து நின்ற போதகர்கள் இவ்வகைப் பட்டவர்களாக இருந்தனர் என்பது உறுதி. அவர்கள் "நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டினர்" (வசனம் 4), "மாம்சத்தை அசுசிப்படுத்திக்கொண்டனர்" (வசனம் 8). மற்றும் "தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள்" (வசனம் 16). அவர்கள் மாம்ச இச்சைகளில் ஈடுபடுவதற்கான தங்கள் உரிமையைக் கண்டனம் பண்ணிய அல்லது கேள்வி கேட்ட வானத்தில் உள்ள அல்லது பூமியின் மீதுள்ள எந்த அதிகாரத்தையும் அகங்காரத்துடன் தங்களை விட்டு நீக்கினர். திறந்த சிந்தனை கொண்ட சகிப்புத்தன்மை என்ற பெயரில் அவர்கள், வாழ்வின் ஒழுக்கரீதியான மேன்மையான வழிக்கு உரிமை எதையும் கோரிய சபையை உரிந்துபோட்டனர்.

பிரதான தூதனாகிய மிகாவேல்கூட மோசேயின் சரீரத்தைக் குறித்துப் பிசாசுடன் தர்க்கித்துப் பேசியபோது பயன்படுத்தத் துணியாத தூஷணங்களைக் கள்ளப் போதகர்கள் எடுத்துக் கொண்டனர் என்று யூதா கூறினார் (வசனம் 9). வேதாகமத்தில் பல இடங்களில் தூதர்கள் காணப்பட்டாலும், மிகாவேல் மற்றும் காபிரியேல் ஆகிய இருவர் மாத்திரமே பெயர்களைக் கொண்டு அறியப்பட்டுள்ளனர். மிகாவேல், தானியேல் தீர்க்கதரிசியின் புத்தகத்தில் மூன்று முறைகளும் (10:13, 21; 12:1) வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் ஒருமுறையும் (12:7) குறிப்பிடப்பட்டுள்ளார்.

கள்ளப்போதகர்களைப் பற்றி யூதா என்ன கூறினார் என்பதைப் புரிந்து கொள்வதில் நமக்குச் சிரமம் எதுவும் இருப்பதில்லை, ஆனால் அவரது விவரிப்பானது மாறுபட்ட விஷயமாக உள்ளது. மோசேயின் சரீரத்தைக் குறித்துப் பிசாசுடன் மிகாவேல் தர்க்கித்தல் என்பது பற்றிய வேதாகமப் பதிவு எதுவும் இல்லை. இருப்பினும் பழங்கால எழுத்தாளர்கள் பலர், மோசேயின் பரத்துக்கேறுதல் என்று அழைக்கப்படும் புத்தகம் பற்றிய குறிப்பை ஏற்படுத்தினர், அது இந்நிகழ்ச்சியைப் பற்றி விவரித்தது. இந்தப் பழங்காலப் புத்தகத்தின் ஒரு சிறு துணுக்கு மாத்திரமே நவீன காலத்தில் உள்ளது, ஆனால் அது யூதாவின் தகவலுக்கு ஆதார மூலமாக இருந்தது என்பது உறுதி. பிற்பாடு 14 மற்றும் 15ம் வசனங்களில், ஏனோக்கின் புத்தகம் என்ற ஒரு புத்தகத்திலிருந்து யூதா மேற்கோள் காண்பித்தார், அது பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது. வேதாகமத்தில் இல்லாத ஒரு புத்தகத்தை யூதா குறிப்பிடுதல் என்பது கடினமான சில கேள்விகளை எழுப்புகிறது. அந்தப் புத்தகம் ஏவுதல் பெற்றதென்று அவர் கருதினாரா? மோசேயின் சரீரத்தைப் பற்றி மிகாவேலுக்கும் பிசாசுக்கும் இடையில் தர்க்கம் ஒன்று நடைபெற்றதா? ஆதியாகமம் 5:21-24ல் உள்ள ஏனோக்கு உண்மையிலேயே யூதா கூறும் இந்தக் கூற்றை ஏற்படுத்தினாரா? கிறிஸ்தவத்தின் தொடக்க நூற்றாண்டுகளில் இருந்தே வேதாகமக் கல்வியாளர்கள் இந்தக்

கேள்விகள் மீது திகைப்புக் கொண்டுள்ளனர்.

சில கல்வியாளர்கள், யூதாவும் பவுலும் ஆகிய இருவருமே (2 தீமோத்தேயு 3:8ஐக் காணவும்), புறதெய்வ வணக்கக்காரர்களான கவிஞர்களைப் பவுல் சுட்டிக்காண்பித்த அதே வழியில் (நடபடிகள் 17:28; தீத்து 1:12), யூத எழுத்தாளர்களால் எழுதப்பட்ட, வேதாகமம் அல்லாத மற்ற எழுத்துப் பணிகளைக் குறிப்பிட்டனர் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். பவுலோ அல்லது யூதாவோ, அவர்கள் மேற்கோள் காண்பித்த எழுத்துப் பணிகளுக்கு ஒப்புதல் ஆதரவு அளித்திருக்க வேண்டும் என்று அவசியமில்லை. இயேசு உவமைகளைப் பயன்படுத்தியது போல அல்லது ஒரு நவீனப் பிரசங்கியார் இந்தியக் கிராமியப் பாடலைப் பயன்படுத்துவது போல, யூதா தமது வாசகர்களுக்குத் தாம் போதிக்க விரும்பியவற்றை விளக்குவதற்கு, அவர்கள் அறிந்திருந்த பதிவேடுகளைப் பயன்படுத்தினார்.

பகுத்தாராய்வு செய்தலின் இவ்வரிசையை மற்றவர்கள் மறுக்கின்றனர். அவர்கள், ஏனோக்கின் புத்தகம் பற்றியும், மோசேயின் சரீரம் குறித்த தர்க்கம் பற்றியும் யூதா பதிவு செய்த வார்த்தைகளை, ஏவுதல் பெற்ற வேதவசனங்களில் இருந்து வார்த்தைகளையும் நிகழ்ச்சிகளையும் பதிவுசெய்த அதே வகையில் பதிவுசெய்தார் என்று சுட்டிக் காண்பிக்கின்றனர். யூதா எந்தப் பழங்கால எழுத்துக்களில் இருந்து தமது தகவல்களைத் தரவழைத்திருந்தாலும், யூகிக்கப்பட்ட எந்த நிகழ்வைப் பற்றியதுமான அவரது குறிப்பானது அவர் அதைப் பதிவு செய்துள்ளபடியே நடந்தது என்று விவாதிக்கின்றனர்.

ஏவப்படாத புத்தகங்களிலிருந்து குறிப்பிடும் யூதாவின் குறிப்புரை பற்றிய இந்தப் பிரச்சனையுடன் நாம் போராடுகையில், யூதா ஏற்படுத்திய மையக் கருத்தைப் பற்றிய நமது கண்ணோக்கத்தை நாம் இழந்துவிடக் கூடாது. கள்ளப்போதகர்கள் (அதிகாரத்தைப் புறக்கணித்த தங்கள் செயல்பாட்டில்) தூதர்களும் யூகிக்கத் துணியாத துணிகரமான செயலைச் செயல்விளக்கப்படுத்தினர். அவர்களின் முரட்டுத்தனமானது, அவர்களுக்கு ஏவுதல் பெற்ற மனிதர்கள் போதிப்பதைச் சாத்தியமற்றதாக்கியது. அவர்களை யூதா, பழைய ஏற்பாட்டில் தேவனுடைய அதிகாரத்திற்கு எதிராகக் கலகம் செய்தவர்களுடன் ஒப்பிட்டார். காயினைப் போன்று (ஆதியாகமம் 4:1-12), அவர்கள் மாபெரும் கலகத்துடன் தேவனுக்குப் பிரியமற்ற வகையில் செயல்பட்டனர்; பாலாமைப் போன்று (எண்ணாகமம் 22), அவர்கள் வர்த்தகத்திற்கான செய்திகளைக் கொண்டிருந்த போதகர்களாக இருந்தனர்; கோராவைப் போன்று (எண்ணாகமம் 16), அவர்களுக்கு ஆக்கினை நிச்சயமானதாக இருந்தது.

கள்ளப்போதகர்கள் பற்றிய வண்ணமிகு விவரிப்புக் கூற்றுகள் பின்தொடருகின்றன. கிறிஸ்தவர்களின் ‘‘அன்பின் விருந்துகளில்’’ கள்ளப்போதகர்கள் தைரியமாகவும் அகம்பாவமாகவும் அமர்ந்துகொண்டு, மனச்சாட்சியே இல்லாமல் தங்களைப் போஷித்துக் கொள்கின்றனர் (வசனம் 12). ஒருவேளை அவர்கள், கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களில் சிலரைப் போல், பொதுவான விருந்துகளை, அன்பின் விருந்துகளை, மதுபானம் பண்ணிக்கொண்டு தம்மைத்தாமே சீராட்டுதலுக்குத் திரும்பியிருக்கலாம். அவர்கள் நீதியின் கனிகளை உண்டாக்குவதாக வாக்குறுதி அளித்திருந்தும், அவற்றை ஒருபோதும் உண்டாக்கி இருக்கவில்லை. தண்ணீர் இல்லாத மேகங்கள்

போன்று, அவர்கள் காற்றினால் அலைக்கழிக்கப் படக்கூடிய உறுதியற்றவர்களாக இருந்தனர். இலையுதிர்க் காலத்தில் கனியற்று இருக்கும் மரங்களைப் போல, அவர்கள் ஜீவனற்றவர்களாக இருதரம் இறந்தவர்களாக இருந்தனர். அவர்கள் அமளியான கடல்களின் அலைகள் போல அல்லது நட்சத்திரங்கள் மத்தியில் கோள்கள் போல பழக்கப்படுத்தப் படாதவர்களாகவும் முன்னுரைக்கப்பட இயலாதவர்களாகவும் இருந்தனர். அவர்கள் என்றென்றைக்குமுள்ள காரிருளுக்கு மாத்திரமே தகுதியானவர்களாக இருந்தனர் (வசனங்கள் 12, 13).

ஏனோக்கின் புத்தகம் என்பது, கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர், சுமார் இருநூறு ஆண்டுகள் கால அளவில் பல மனிதர்களால் எழுதப்பட்ட ஒரு நீண்ட புத்தகமாக இருந்தது. அவற்றில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள முழுமையான பிரதிகள் எத்தியோப்பிய மொழியில் மாத்திரமே உள்ளன, ஆனால் யூதா 14 மற்றும் 15ம் வசனங்களில் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ள வசனம் உட்பட, மூன்றில் ஒரு பங்கு புத்தகம் கிரேக்க மொழியில் இதுவரையிலும் இருக்கிறது. ஏனோக்கின் புத்தகம் யூதாவுக்கு முக்கியமானதாக இருந்தது, ஏனென்றால் அதன் வார்த்தைகள், தேவபக்தி அற்றவர்கள் மீது கர்த்தரின் நியாயத்தீர்ப்பின் உறுதிப்பாட்டை அறிவித்தன. அவைகள், 5 முதல் 7வரையில் அவர் கூறியிருந்தவற்றை மறுவலியூட்டின. மனிதர்கள் வாழ்வதற்கென்று தேவன் கட்டளையிட்ட ஜீவ மார்க்கத்திற்கு எதிராகக் கலகம் செய்தவர்களை நியாயந்தீர்க்கத் தேவன் “ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட” வருவார்.

16ம் வசனத்தில், இந்த நிருபத்தை எழுதியவர், கள்ளப்போதகர்களை ஆர்வத்திற்குரிய மூன்று சொற்றொடர்களைக் கொண்டு விவரித்தார்: (1) அவர்கள் முறுமுறுக்கிறவர்களாகவும் முறையிடுகிறவர்களாகவும் இருந்தனர்; (2) அவர்கள் தங்கள் இச்சையின்படி நடக்கிறவர்களாக இருந்தனர்; (3) அவர்கள் தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்தனர். சபைகள் எவ்வாறு அழிக்கப்படலாம் என்பதற்கு யூதா ஒரு வரைபடத்தை வரைந்தி ருந்தார். பரலோகத்தின் இந்தப் பகுதியில் நாம் பூரணப்பட்ட சபை ஒன்றைக் காணுதல் இயலாது என்பதால், அதைப்பற்றி முறையிடுவதற்கு எப்போதுமே ஏதாவது ஒன்று இருக்கும். குற்றம்கண்டுபிடிக்கிறவர், நியாயத்தீர்ப்பில் ஒவ்வொரு தவறையும், கவனிக்கப்படாத ஒவ்வொரு விபரத்தையும் கவனிக்கிறார். அவர் சகோதரருக்கு எதிரானச் சண்டையில் சகோதரரான மற்றவர்களைப் பட்டியலிடுகிறார். யூதா முன்யூகம் செய்த கள்ளப்போதகர்கள் திறமை நிறைந்த குற்றம் கண்டுபிடிப்பவர்களாக இருந்தனர்.

அத்துடன் கூடுதலாக அவர்கள் தாங்கள் விரும்பியவற்றை மிகச்சரியாகச் செய்வதற்கு முழுமையாகத் தங்களை ஒப்புக்கொடுத்திருந்தனர். குற்றம் கண்டுபிடித்தல் மற்றும் முறையிடுதல் ஆகியவற்றினால் ஒருவர், தமது சொந்தக் குறைபாடுகளிலிருந்து கவனத்தைத் திசைதிருப்ப முடியும். கள்ளப்போதகர்கள் மாம்சத்தின் இச்சைகளைத் திருப்திப் படுத்தத் தங்களை ஒப்புக்கொடுத் திருந்தனர், ஆனால் அவர்கள் பல கிறிஸ்தவர்களை ஏமாற்றும் அளவுக்கு தங்கள் வாழ்வின் வழியை மறைத்து வைத்திருந்தார்கள் என்பது உறுதி. அவர்கள் தங்களை உயர்த்திக் கொண்டு மற்றவர்களை மட்டம் தட்டினர். அவர்களின் பின்பற்றாளர்களாகும்படி பலரை வெற்றிகரமாகக் கையாண்டனர். தமது வாசகர்கள் இந்த மனிதர்கள் எவ்வாறு இருந்தனர் என்று காணவேண்டும் என்று யூதா விரும்பினார்.

தேவன் தம் மக்கள்மீது கொண்ட அன்பு (வசனங்கள் 17-23)

பேதுருவைப் போன்று யூதாவும், தமது வாசகர்களுக்கு, அவர்கள் தொடக்கத்தில் இருந்து கேட்டிருந்தவற்றை நினைவுபடுத்த விரும்பினார் (வசனம் 17). போதித்தலில் மறுபடி கூறுதல் என்பது மதிப்புமிக்கதாக உள்ளது. சிலவற்றை அறிந்திருத்தல் என்பது, நாம் அதை நடைமுறைப்படுத்துவோம் என்று உத்தரவாதம் அளிப்பதில்லை. யூதா தம்மை எண்ணிக்கையில் உள்ளடக்காமலேயே, அப்போஸ்தலர்கள் முன்னுரைத்திருந்தவற்றை இந்தக் கிறிஸ்தவர்கள் நினைவுகூர வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். 18ம் வசனத்தின் வார்த்தைகள் 2 பேதுரு 3:3னுடைய எதிரொலி போன்று இருக்கின்றன. மறைவான, வலியுறுத்தமான மற்றும் முரட்டுத் தனமான வழிகள் மூலமாகக் கள்ளப்போதகர்கள் கிறிஸ்தவர்களிடையில் பிரிவினை ஏற்படுத்தி இருந்தனர். அவர்கள் கள்ளப்போதகர்களின் மிருகத்தனமான உள்ளுணர்வுகளைப் பின்பற்றினர் என்று அவர்களிடத்தில் யூதா உறுதிபடக் கூறினார், மற்றும் ஆவிக்குரியவர்கள் என்று அவர்களின் உரிமைகோருதல் இருப்பினும், அவர்கள் ஆவியில் வெறுமையானவர்களாகவே இருந்தனர் (வசனம் 19).

சபைகளினால் அனுபவிக்கப்பட்டுக்கொண்டிருப்பதாக யூதா குறிப்பிட்ட கலகத்திற்குப் பரிகாரம் என்னவாக இருந்தது? இந்தக் கேள்விக்கு யூதா, கட்டளைகளின் வரிசை ஒன்றைக் கொண்டு பதில் அளித்தார்: (1) விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் (வசனம் 20). ஒவ்வொரு கிறிஸ்தவரும் தமது சொந்த ஆவிக்குரிய நலனுக்குப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவன் ஆதாரவளங்களை அளிக்கிறார், ஆனால் ஒவ்வொருவரும் தமக்குத் தேவன் கொடுத்துள்ளவற்றை, ஆவிக்குரிய வகையில் வளரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். (2) தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள் (வசனம் 21). ஒரு கருத்தில், எவரொருவரும் தேவன் தமது மக்கள்மீது கொண்டுள்ள அனைத்தையும் சுற்றிச்சூழும் அன்பில் இருந்து தப்பிக்க இயலாது. கிறிஸ்தவர்கள், மீட்பருக்குள் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய அன்பின் ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு, விசுவாசம் நிறைந்தவர்களாக நிலைத்திருக்க வேண்டும் என்று யூதா வற்புறுத்தினார். (3) கர்த்தருடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள் (வசனம் 21). கர்த்தர் மறுபடியும் வந்து விசுவாசம் நிறைந்தவர்களை நித்திய ஜீவனுக்கு வழிநடத்துவார் என்று யூதா கூறினார். (4) சந்தேகம் கொண்டவர்களிடத்தில் இரக்கம் நிறைந்தவர்களாக இருங்கள் (வசனம் 22). சிலர் விசுவாசத்தில் பலவீனம் உள்ளவர்களாகவும் ஊக்கப்படுத்துதல் தேவைப்படுபவர்களாகவும் இருப்பார்கள். பலமானவர்கள், தேவதூஷணத்துடன் நெருங்கிய சிநேகம் கொண்டுள்ள பலவீனமான ஒவ்வொரு சகோதரரையும் தாக்குவார்கள் என்றால், சபையானது விரைவில் அழந்து போய்விடும். (5) உங்களால் இயன்ற வரையில் மக்களை அக்கினியில் இருந்து இழுத்து விடுங்கள் (வசனம் 22). கள்ளப்போதகர்கள் சிலரைப் புறம்பே வழிநடத்திச் செல்வார்கள். உங்களால் முடிந்த வரையில் அப்படிப்பட்டவர்களை மீட்டுக்கொண்டு வாருங்கள். (6) பயங்கலந்த இரக்கத்தைக் காண்பியுங்கள் (வசனம் 22). பலவீனமாகவும் வழிநடத்துதல் தேவைப்படும் நிலையிலும் உள்ள ஒருவருக்கு, நியாயத்தீர்ப்பு

பற்றிய கூற்றானது அவரை விரோதியின் கூடாரத்தில் இன்னும் அதிக உறுதி யாகத் தக்கவைத்துக் கொள்ளும். பாவியை வெறுக்காதீர்கள். அவரை இரட்சிக்க முயற்சி செய்யுங்கள்.

முடிவுரை

யூதா தமது நிருபத்தை, புதிய ஏற்பாட்டின் மிக அழகுடைய துதிகள் ஒன்றைக் கொண்டு முடித்தார். அவர், தமக்குப் பழக்கமான சபைகளில் இடர்ப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த கள்ளப்போதகர்களின் அபாயங்கள் மற்றும் மறைவான கெடுமதிகள் ஆகியவற்றைத் தமது வாசகர்களுக்கு முன்வைத்தார். இந்தச் சூழ்ச்சிக்கார மனிதர்கள் போலிநடிப்பின்கீழ் சபைக்குள் பிரவேசித் திருந்தனர் மற்றும் இவர்கள், கிறிஸ்தவர்களுக்குள் பிரிவினையும் துன்பமும் ஏற்படக் காரணமாக இருந்தனர். இந்தக் கிறிஸ்தவர்கள், அப்போஸ்தலர்களிடமிருந்து கேட்டறிந்திருந்த மூல செய்திக்குத் தங்களை மீண்டும் ஒப்புக்கொடுத்து பலமாக இருக்க வேண்டும் என்று யூதா வேண்டிக் கேட்டுக்கொண்டார். அவர் தமது நிருபத்தைப் பின்வரும் வார்த்தைகளுடன் முடித்தார்: "வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்" (வசனங்கள் 24, 25).

குறிப்பு

[1]The Wisdom of Sirach 37:22.